www.kalvikadal.in www.kalvikadal.in



SURYA®
POWER TO SCORE

# இளமைத்தமிழே

**2019 புதிய பாடத்திட்டத்தின்படி**

**12**

**1000**க்கும் மேற்பட்ட ஒரு மதிப்பெண் கூடுதல் வினாக்கள்

**40** மொழிப்பயிற்சி தலைப்புகள்

**இலவசம்**

**மொழிபயிற்சி கையேடு**


உரையாசிரியர்கள்:

முனைவர் **சி. பரந்தாமன்,** M.A., M.Ed., M.Phil, Ph.D.,
முதுகலைத்தமிழாசிரியர், கடலூர்.

**ஜே. தர்மராஜ் ஜேசுதாஸ்,** M.A., M.Ed.,
உதவித் தலைமையாசிரியர், திண்டுக்கல்.

**ம.ராபர்ட்,** M.A., B.Ed., M.Phil. Ph.D.,
முதுகலைத்தமிழாசிரியர், பாளையங்கோட்டை.

குருசடி **எம்.ஏ. ஜெலஸ்டின்,** M.A., B.Ed. M.Phil.,
முதுகலைத்தமிழாசிரியர், நாகர்கோவில்.

**சி. ஜாண் @ மாடசாமி,** M.A., B.Ed., M.Phil.
முதுகலைத்தமிழாசிரியர், பாளையங்கோட்டை.

**கே.ஆர். மஞ்சுளா**
முதுகலைத்தமிழாசிரியை, மதுரை.



## SURYA PUBLICATIONS®

(A unit of **Shyamala** Group)

**Corporate Office:**
No. 1, Sugar Mill Colony,
Salai Kumaran illam, Madurai Road,
**Tirunelveli - 627 001.**
Phone : 0462 - 2338899, 2338484
Mobile : 94431-58484, 95978-39822
E-mail : suryaguides@yahoo.com

**Registered Office:**
New No. 59, 4th Avenue,
Opp. to Govt. Boys Hr. Sec. School,
**Ashok Nagar, Chennai - 600 083.**
Ph : 044 - 24744484
Mobile: 94421-58484, 94425-58484
E-mail: srigangapublications5@gmail.com

**website : www.suryapublications.in**

**Price ₹ 290/-**


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in

*Published by*
***B.Arumugam***
Surya Publications
(A Unit of Shyamala group)

www.kalvikadal.in

## OUR BANK DETAILS

### TIRUNELVELI ACCOUNT

| | | |
|---|---|---|
| Account Name | : | **Surya Publications** |
| Account Number | : | 446971431 |
| Bank Name | : | Indian Bank |
| IFSC Code | : | IDIB000T034 |
| Branch Name | : | Tirunelveli Junction |

| | | |
|---|---|---|
| Account Name | : | **Surya Publications** |
| Account Number | : | 510909010051752 |
| Bank Name | : | City Union Bank |
| IFSC Code | : | CIUB0000230 |
| Branch Name | : | Palayamkottai |

### CHENNAI ACCOUNT

| | | |
|---|---|---|
| Account Name | : | **Sri Ganga Publication** |
| Account Number | : | 928507483 |
| Bank Name | : | Indian Bank |
| IFSC Code | : | IDIB000A031 |
| Branch Name | : | Ashok Nagar |

| | | |
|---|---|---|
| Account Name | : | **Sri Ganga Publication** |
| Account Number | : | 512020010022514 |
| Bank Name | : | City Union Bank |
| IFSC Code | : | CIUB0000230 |
| Branch Name | : | Palayamkottai |



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in

## இனிய வாழ்த்துகளுடன் பதிப்பகத்தார் . . .

*தொட்டனைத்(து) ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத்(து) ஊறும் அறிவு* - *குறள்*

***அறிவார்ந்த மாணவச் செல்வங்களே!***

வணக்கம்...

புதியதோர் உலகம் காண புறப்படும் மாணவர்களே! உங்கள் கைகளில் இந்தாண்டு முதல் அரசின் 12ம் புதிய பாடத்திட்டத்தின்படி புதிய புத்தகத்திற்கு புத்துணர்ச்சி தரும் வகையில் **சூர்யா இளமைத்தமிழே** உரைநூல் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் கற்றலை எளிதில் அடைவதற்கு எளிய நடையில் எண்ணற்ற வினா விடைகளோடு உருவாக்கப்பட்டுள்ளது.

**ஒவ்வொரு இயலின் முடிவில் அந்தந்த இயலுக்குண்டான வினாத்தாள்**

**அரசு பொதுத் தேர்வு வினாத்தாள்** அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.

- **திணை**
- **இலக்கணக் குறிப்பு**
- **நயம் பாராட்டல்**
- **துறை**
- **உறுப்பிலக்கணம்**
- **மரபுச்சொற்கள்**
- **அணி**
- **புணர்ச்சி விதி**
- **கலைச்சொற்கள்**

என **நாற்பது தலைப்புகளில் இலவச இணைப்பாக** உங்களுக்கு தருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

விதைகள் வீசப்பட்டுள்ளன!
விருட்சகமாக மாறுங்கள்'!!

*என வாழ்த்தும்,*
பதிப்பகத்தார்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in

# பொருளடக்கம்


| எண் | பொருண்மை | | பாடத்தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|---|---|
| ஒன்று | மொழி | **உயிரினும் ஓம்பப் படும்** | | |
| | | செய்யுள் | இளந்தமிழே! | 1 - 6 |
| | | உரைநடை | தமிழ்மொழியின் நடை அழகியல் | 7 - 16 |
| | | செய்யுள் | தண்டியலங்காரம்* | 17 - 22 |
| | | துணைப்பாடம் | பாரதியின் கடிதம் | 23 - 29 |
| | | இலக்கணம் | தமிழாய் எழுதுவோம் | 30 - 41 |
| | | | **மாதிரி வினாத்தாள் - 1** | 42 - 44 |
| இரண்டு | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல் | **பெய்யெனப் பெய்யும் மழை** | | |
| | | உரைநடை | பெருமழைக்காலம் | 45 - 53 |
| | | செய்யுள் | பிறகொரு நாள் கோடை | 54 - 58 |
| | | செய்யுள் | நெடுநல்வாடை* | 59 - 65 |
| | | துணைப்பாடம் | முதல்கல் | 66 - 71 |
| | | இலக்கணம் | நால்வகைப் பொருத்தங்கள் | 72 - 83 |
| | | | **மாதிரி வினாத்தாள் - 2** | 84 - 86 |
| மூன்று | பண்பாடு | **சுற்றத்தார் கண்ணே உள** | | |
| | | உரைநடை | தமிழர் குடும்ப முறை | 87 - 98 |
| | | செய்யுள் | விருந்தினர் இல்லம் | 99 - 102 |
| | | செய்யுள் | கம்பராமாயணம்* | 103 - 113 |
| | | துணைப்பாடம் | உரிமைத்தாகம் | 114 - 117 |
| | | இலக்கணம் | பொருள் மயக்கம் | 118 - 129 |
| | | வாழ்வியல் | திருக்குறள்* | 130 - 142 |
| | | | **மாதிரி வினாத்தாள் - 3** | 143 - 146 |
| நான்கு | கல்வி | **செல்வத்துள் எல்லாம் தலை** | | |
| | | உரைநடை | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் | 147 - 161 |
| | | செய்யுள் | இதில் வெற்றி பெற* | 162 - 169 |
| | | செய்யுள் | இடையீடு | 170 - 174 |
| | | செய்யுள் | புறநானூறு* | 175 - 183 |
| | | துணைப்பாடம் | பாதுகாப்பாய் ஒரு பயணம் | 184 - 188 |
| | | இலக்கணம் | பா இயற்றப் பழகலாம் | 189 - 197 |
| | | | **மாதிரி வினாத்தாள் - 4** | 198 - 200 |




Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

| எண் | பொருண்மை | | பாடத்தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|---|---|
| ஐந்து | நாகரிகம், தொழில், வணிகம் | **நாடென்ப நாட்டின் தலை** | | |
| | | உரைநடை | மதராசப்பட்டினம் | 201 - 210 |
| | | செய்யுள் | தெய்வமணிமாலை* | 211 - 215 |
| | | செய்யுள் | தேவாரம் | 215 - 219 |
| | | செய்யுள் | அகநானூறு | 220 - 225 |
| | | துணைப்பாடம் | தலைக்குளம் | 226 - 229 |
| | | இலக்கணம் | படிமம் | 229 - 239 |
| | | | **மாதிரி வினாத்தாள் - 5** | 240 - 242 |
| ஆறு | கலை, அழகியல், புதுமைகள் | **சிறுகை அளாவிய கூழ்** | | |
| | | உரைநடை | திரைமொழி | 243 - 251 |
| | | செய்யுள் | கவிதைகள் | 252 - 254 |
| | | செய்யுள் | சிலப்பதிகாரம்* | 255 - 263 |
| | | செய்யுள் | மெய்ப்பாட்டியல் | 264 - 269 |
| | | துணைப்பாடம் | நடிகர் திலகம் | 270 - 275 |
| | | இலக்கணம் | காப்பிய இலக்கணம் | 276 - 287 |
| | | வாழ்வியல் | திருக்குறள் | 288 - 296 |
| | | | **மாதிரி வினாத்தாள் - 6** | 297 - 300 |
| ஏழு | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் | **அருமை உடைய செயல்** | | |
| | | உரைநடை | இலக்கியத்தில் மேலாண்மை | 301 - 309 |
| | | செய்யுள் | அதிசயமலர் | 310 - 313 |
| | | செய்யுள் | தேயிலைத் தோட்டப் பாட்டு | 313 - 317 |
| | | செய்யுள் | புறநானூறு* | 318 - 322 |
| | | துணைப்பாடம் | சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும் | 323 - 326 |
| | | இலக்கணம் | தொன்மம் | 326 - 338 |
| | | | **மாதிரி வினாத்தாள் - 7** | 339 - 341 |
| எட்டு | மனிதம், ஆளுமை | **எல்லா உயிரும் தொழும்** | | |
| | | உரைநடை | நமது அடையாளங்களை மீட்டவர் | 342 - 350 |
| | | செய்யுள் | முகம் | 351 - 353 |
| | | செய்யுள் | இரட்சணிய யாத்திரிகம்* | 354 - 360 |
| | | செய்யுள் | சிறுபாணாற்றுப்படை* | 361 - 367 |
| | | துணைப்பாடம் | கோடை மழை | 368 - 371 |
| | | இலக்கணம் | குறியீடு | 372 - 381 |
| | | | **மாதிரி வினாத்தாள் - 8** | 382 - 384 |




Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in

மனப்பாடப் பகுதி

**தன்னேர் இலாத தமிழ்**

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!

– *தண்டி*

**நெடுநல்வாடை**

‘வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க

–*நக்கீரர்*

**கம்பராமாயணம்**

‘துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்.
குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்;
என்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

– *கம்பர்*



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## திருக்குறள்

| | |
|---|---|
| அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை<br>பண்பும் பயனும் அது. | அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை<br>வேண்டும் பிறன்கைப் பொருள். |
| வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்<br>தெய்வத்துள் வைக்கப் படும். | மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய<br>பிறத்தல் அதனான் வரும். |
| செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்<br>வானகமும் ஆற்றல் லரிது. | தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்<br>தன்னையே கொல்லும் சினம். |
| நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது<br>அன்றே மறப்பது நன்று. | சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்<br>ஏமப் புணையைச் சுடும். |
| எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை<br>செய்ந்நன்றி கொன்ற மகற்கு. | நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்<br>உண்மை அறிவே மிகும். – *திருவள்ளுவர்* |

## இதில் வெற்றிபெற

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு. – *சுரதா*

www.kalvikadal.in

## புறநானூறு

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே. –*ஔவையார்*

## தெய்வமணிமாலை

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும். –*இராமலிங்க அடிகள்*



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in

**சிலப்பதிகாரம்**

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை — *இளங்கோவடிகள்*

**திருக்குறள்**

அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின். — *திருவள்ளுவர்*

www.kalvikadal.in

**புறநானூறு**

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்; — *பிசிராந்தையார்*

**இரட்சணிய யாத்திரிகம்**

பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி. — *எச்.ஏ. கிருட்டிணனார்*

**சிறுபாணாற்றுப்படை**

எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள். — *நத்தத்தனார்*



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





# இயல் 1 உயிரினும் ஓம்பப் படும்

மொழி

| | | |
|---|---|---|
| செய்யுள் | இளந்தமிழே! | சிற்பி பாலசுப்பிரமணியம் |
| உரைநடை | தமிழ்மொழியின் நடை அழகியல் | தி.சு. நடராசன் |
| செய்யுள் | தன்னேர் இலாத தமிழ் (தண்டியலங்காரம்) | தண்டி |
| துணைப்பாடம் | தம்பி நெல்லையப்பருக்கு (பாரதியார்) | பாரதியார் |
| இலக்கணம் | தமிழாய் எழுதுவோம் | |

## இயல் 1 இளந்தமிழே!

செய்யுள்

- சிற்பி பாலசுப்பிரமணியம்

### பாடநூல் வினாக்கள்

#### பலவுள் தெரிக

1. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது உ) பொதிகையில் தோன்றியது

ங) வள்ளல்களைத் தந்தது

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி

இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி [விடை: ஈ]

#### குறுவினா

1. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார் ?

செந்நிறத்து வானம் போல் சிவந்த கைகள் உடைய உழைக்கும் தொழிலாளர்களின் திரண்ட தோள் மீது வீற்றிருக்கும் வியர்வை முத்துக்களைப் பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார் சிற்பி.

#### சிறுவினா

1. 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

- கதிரவன் தன் கதிர்களைச் சுருக்கிக் கொண்டு மேற்கு நோக்கி மறைவது இயற்கை.
- ஆனால் கவிஞர் செம்மைமிகு சூரியன் மாலையில் மலைமுகட்டில் தன் தலை சாய்க்கிறான் என்கிறார்.
- கதிரவனின் கதிரொளி பட்டு வானமெனும் காடெல்லாம் பூக்காடாய் மாறின என்று சிற்பி நயம்பட விளக்குகிறார்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

2. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே<br>- நன்னூல் | மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே ! கூவி வா, வா!<br>- சிற்பி பாலசுப்பிரமணியம் |

| நன்னூல் | சிற்பி பாலசுப்பிரமணியம் |
|---|---|
| பழையவற்றை ஒதுக்கி புதியவற்றைப் புகுத்த வேண்டும். | பழமை செயல்பாடுகளுக்குப் புதிய வடிவம் கொடுக்க வேண்டும். |
| தேவையற்ற சொல், பொருள், வழக்கம் எல்லாம் காலமாறுதலுக்கு ஏற்ப புதிய சொல், பொருள், வழக்கம் தேவை. | தமிழ்த்தாயின் பழமைமிகு செயல்பாடுகளுக்குப் புதிய வடிவம் கொடுத்து தமிழ்க்குயிலே மெய்சிலிர்க்குமாறு பாட வா. |

## நெடுவினா

1. **தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

இளமைப் பொருந்திய தமிழின் திறத்தைக் கவிஞர் சிற்பி பின்வருமாறு பாடுகிறார்.

- செம்மைமிகு சூரியன் மாலையில் மலைமுகட்டில் மறையும் போது வானம் எனும் காடு பூக்காடாய்க் காட்சி தருகிறது.
- உழைப்பாளர்களின் கைகள் சிவந்து திரண்ட தோள்களில் வியர்வைத் துளிகள் முத்துமுத்தாய்க் காணப்படுகிறது.
- இக்காட்சியெல்லாம் நான் வியந்து பாட அன்னைத் தமிழே உன் துணை வேண்டும்.
- பெருகி வரும் கவிதைகளுக்கு உணவாக இருக்கும் தமிழே!
- தமிழே நீ! பாண்டியனின் தமிழ்ச் சங்கத்தில் தவழ்ந்திருந்தாய்.
- பாரி முதலான வள்ளல்கள் எழுவரை இம்மண்ணுக்குத் தந்தாய்.
- உன் பழமையான நலன்களை எல்லாம் புதுப்பித்து, தமிழ்க்குயிலே நீ மெய்சிலிர்க்கப் பாடி வா.
- கூண்டினை உடைத்தெறிந்து வெளிவரும் சிங்கம் போல் வா.
- குளிர் பொதிகையில் தோன்றிய தென் தமிழே சீறி வா என்று சிற்பி தமிழின் சீரிளமையைத் திறம் வியந்து பாடுகிறார்.

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| **செம்பரிதி, செந்தமிழ், செந்நிறம்** | - | பண்புத்தொகைகள் |
| **முத்து முத்தாய்** | - | அடுக்குத்தொடர் |
| **சிவந்து** | - | வினையெச்சம் |
| **வியர்வை வெள்ளம்** | - | உருவகம் |

## உறுப்பிலக்கணம்

| **சாய்ப்பான் = சாய் + ப் + ப் + ஆன்** | **விம்முகின்ற = விம்மு + கின்று + அ** |
|---|---|
| சாய் - பகுதி | விம்மு - பகுதி |
| ப் - சந்தி | கின்று - நிகழ்கால இடைநிலை |
| ப் - எதிர்கால இடைநிலை | அ - பெயரெச்ச விகுதி |
| ஆன்- படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி | |


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



| | |
|---|---|
| **வியந்து = விய + த் (ந்) + த் + உ**<br>விய - பகுதி<br>த் (ந்) - சந்தி, ('ந்' ஆனது விகாரம்)<br>த் - இறந்தகால இடைநிலை<br>உ - வினையெச்ச விகுதி | **இருந்தாய் = இரு + த் (ந்) + த் + ஆய்**<br>இரு - பகுதி<br>த் (ந்) - சந்தி, ('ந்' ஆனது விகாரம்)<br>த் - இறந்தகால இடைநிலை<br>ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி |

### புணர்ச்சி விதி

1. **செம்பரிதி = செம்மை + பரிதி**
   ஈறுபோதல் என்ற விதிப்படி, மை கெட்டு செம் + பரிதி என்பது செம்பரிதி எனப் புணர்ந்தது.
2. **வானமெல்லாம் = வானம் + எல்லாம்**
   உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி, (ம் + எ = மெ) வானெமல்லாம் எனப் புணர்ந்தது.
3. **உன்னையல்லால் = உன்னை + அல்லால்**
   - இஈஐ வழி யவ்வும் என்ற விதிப்படி, உன்னை + ய் + அல்லால் என்றானது.
   - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி, (ய் + அ = ய) உன்னையல்லால் எனப் புணர்ந்தது.
4. **செந்தமிழே = செம்மை + தமிழே**
   - ஈறுபோதல் என்ற விதிப்படி, மை கெட்டு செம் + தமிழே என்றானது.
   - முன்னின்ற மெய் திரிதல் என்ற விதிப்படி, (ம் திரிந்து ந் தோன்றி), செந்தமிழே எனப் புணர்ந்தது.

www.kalvikadal.in

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **'பொதிகை' என்பது எந்த மலையைக் குறிக்கும்?**
   அ) குற்றால மலை ஆ) விந்திய மலை இ) இமய மலை ஈ) சாமிமலை **[விடை: அ]**
2. **சிற்பி பாலசுப்பிரமணியம் எந்நூலை மொழிபெயர்த்தமைக்காகச் சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றார்?**
   அ) அக்கினி ஆ) ஒளிப்பறவை இ) அக்கினிசாட்சி ஈ) சூரியநிழல் **[விடை: இ]**
3. **'சாய்ப்பான்' என்பதன் சரியான பகுபத பிரிப்பு முறை**
   அ) சாய்ப்பு + ஆன் ஆ) சாய் + ப் + ஆன்
   இ) சாய் + ப் + ப் + அன் ஈ) சாய் + ப் + ப் + ஆன் **[விடை: ஈ]**
4. **கவிஞர் சிற்பி எழுதிய எந்தப் படைப்பிலக்கியத்திற்கு சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது?**
   அ) ஒரு கிராமத்தின் கதை ஆ) ஒரு கிராமமே அழுதது
   இ) ஒரு கிராமத்தின் நதி ஈ) ஒரு புளியமரத்தின் கதை **[விடை: இ]**
5. **'செந்தமிழ்' - எந்தப் புணர்ச்சி விதிகளின் அடிப்படையில் சரியாகப் புணரும்?**
   அ) ஈறுபோதல், இனமிகல் ஆ) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல்
   இ) ஈறுபோதல், தன்னொற்றிரட்டல் ஈ) ஈறுபோதல் **[விடை: ஆ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



6. **'வியர்வை வெள்ளம்' - இலக்கணக் குறிப்புத் தருக.**

ஆ) உவமையாகுபெயர் ஆ) கருவியாகு பெயர்

இ) உருவகம் ஈ) உவமைத்தொகை **[விடை: இ]**

7. **இவற்றுள் எது கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய நூல்?**

ஆ) சூரிய காந்தி ஆ) சூரிய பார்வை இ) ஒளிப்பூ ஈ) சூரிய நிழல் **[விடை: ஈ]**

8. **கருத்து 1 : பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தவள் தமிழ்த்தாய்.**
**கருத்து 2 : விம்முகின்ற தோள்கள் செந்நிறத்துப் பூக்காடானது.**

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி

இ) இரண்டும் கருத்தும் தவறு ஈ) கருத்து 1 சரி, 2 தவறு **[விடை: ஈ]**

9. **'இளந்தமிழே' என்னும் பாடல் நூலின் ஆசிரியர்**

அ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஆ) பெருந்தேவனார்

இ) தமிழண்ணல் ஈ) மு. வரதராசனார் **[விடை: அ]**

10. **பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தவள்**

அ) கோப்பெருந்தேவி ஆ) வேண்மாள்

இ) தமிழன்னை ஈ) ஔவையார் **[விடை: இ]**

11. **............. முதலான வள்ளல்களை ஈன்று தந்தவள் தமிழன்னை.**

அ) சடையப்ப வள்ளல் ஆ) சீதக்காதி

இ) பாரி ஈ) நெடுங்கிள்ளி **[விடை: இ]**

www.kalvikadal.in

12. **எம்மருமைச் செந்தமிழே! உன்னையல்லால் ஏற்றதுணை வேறுண்டோ - என்று பாடியவர்**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்

இ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஈ) திரு. வி. க **[விடை: இ]**

13. **'இளந்தமிழே' என்னும் சிற்பி பாலசுப்பிரமணியத்தின் பாடலின் இடம்பெற்றுள்ள பாவகை**

அ) நேரிசை ஆசிரியப்பா ஆ) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இ) கலி விருத்தம் ஈ) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் **[விடை: ஈ]**

14. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| i) | செம்பரிதி | - | உருவகம் |
| ii) | முத்துமுத்தாய் | - | வினையெச்சம் |
| iii) | சிவந்து | - | அடுக்குத்தொடர் |
| iv) | வியர்வைவெள்ளம் | - | பண்புத்தொகை |

அ) 4321 ஆ) 3412 இ) 2143 ஈ) 3214 **[விடை: அ]**

15. **செம்பரிதி - இச்சொல்லுக்குரிய புணர்ச்சி விதியைக் கண்டறிக.**

அ) ஈறுபோதல் ஆ) இனமிகல்

இ) ஆதிநீடல் ஈ) முன்நின்ற மெய்திரிதல் **[விடை: அ]**

16. **உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - என்ற விதிக்குப் பொருத்தமான சொல்லைக் கண்டறிக.**

அ) உன்னையல்லால்ஆ) வானமெல்லாம் இ) செந்தமிழே ஈ) செம்பரிதி **[விடை: ஆ]**

17. **'இளந்தமிழே' என்னும் கவிதை சிற்பி பாலசுப்பிரமணியத்தின் எக்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது?**

அ) சூரிய நிழல் ஆ) ஒரு கிராமத்து நதி இ) ஒளிப்பறவை ஈ) நிலவுப்பூ **[விடை: ஈ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

18. **சிற்பியின் பன்முகங்களில் பொருந்தாததைக் கூறுக.**
அ) கவிஞர் ஆ) ஓவியர்
இ) பேராசிரியர் ஈ) மொழிபெயர்ப்பாளர் **[விடை: ஈ]**

19. **சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய பல்கலைக்கழகம்**
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) தமிழ் ஈ) காமராசர் **[விடை: அ]**

20. **சிற்பி பாலசுப்பிரமணியம் எத்தனை முறை சாகித்திய அகாதெமி விருது பெற்றுள்ளார்?**
அ) மூன்று ஆ) இரு இ) நான்கு ஈ) பல **[விடை: ஆ]**

21. **சிற்பி பாலசுப்பிரமணியன் சாகித்திய அகாதெமியின் .............. இருக்கிறார்.**
அ) தலைவராக ஆ) செயலாளராக இ) பொருளாளராக ஈ) உறுப்பினராக **[விடை: ஈ]**

## குறுவினா

1. **தொழிலாளர்களின் கைகள் எதனைப் போலச் சிவந்துள்ளதாகக் கவிஞர் சிற்பி கூறுகிறார் ?**
மாலையில் மறையும் கதிரவனின் கதிரொளி போல தொழிலாளரின் கைகள் சிவந்துள்ளதாகக் கூறுகிறார்.

2. **தமிழ்மொழியின் பழமைநலம் எவை ?**
- தமிழ்மொழி பாண்டியர்களின் அவையிலே தன்னிகரற்ற செம்மொழியாய் ஆட்சி செய்தது.
- பாரி போன்ற வள்ளல்கள் பலரை தமிழ் மண்ணிற்குத் தந்த பழமை நலம் கொண்ட மொழி.

3. **கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களின் ஆசை என்ன ?**
www.kalvikadal.in
'தமிழ் பல புதிய உள்ளடக்கங்களால் தன்னைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்; பழஞ்சிறப்பைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்', என்பதே கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களின் ஆசை ஆகும்.

4. **கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய கவிதை நூற்களில் சிலவற்றை எழுதுக.**
ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி.

5. **சிற்பி பாலசுப்பிரமணியத்தின் பன்முகங்களைக் குறிப்பிடுக.**
கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர்.

6. **சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய உரைநடை நூல்கள் யாவை?**
இலக்கியச் சிந்தனைகள், மலையாளக்கவிதை, அலையும் சுவடும்.

7. **சிற்பி பாலசுப்பிரமணியத்தின் கவிதைகள் எம்மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன?**
ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி.

8. **சிற்பி பாலசுப்பிரமணியம் எத்தனை முறை சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றுள்ளார்?**
- சாகித்திய அகாதெமி விருதைச் சிற்பி பாலசுப்பிரமணியன் இரு முறை பெற்றுள்ளார் .
- மொழிபெயர்ப்புக்காகவும், 'ஒரு கிராமத்து நதி' என்னும் கவிதை நூலிற்காகவும் சாகித்திய அகாதெமி விருதைச் சிற்பி பாலசுப்பிரமணியம் பெற்றுள்ளார்.

## சிறுவினா

1. **குளிர் பொதிகைத் தென்தமிழ் ஏன் சீறி வர வேண்டும் எனச் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுகிறார்?**
- உள்ளத்தில் பொங்கிவரும் உணர்வுகளை உணர்ச்சி மிகு கவிதையாக எழுத முத்தமிழே உதவி செய்கின்றது.

- பாண்டியமன்னர்கள் அமைத்த சங்கத்திலே, தன்னிகரற்ற செம்மொழியாய் இருந்து ஆட்சிச் செய்தது.
- பாரி போன்ற வள்ளல்கள் பலரை இத்தமிழ் மண்ணிற்குத் தந்தது.
- அன்றிருந்த தமிழர் நலமும் தமிழ்நாட்டுப் பொதுமை நலமும் மீண்டும் பிறப்பதற்கு நீ குயில் போலக் கூவி வர வேண்டும்.
- இன்று தமிழர்களைச் சூழ்ந்திருக்கும் அடிமைத்தனமும், அறியாமையும் அகன்றிட அவர்கள் சிறைப்பட்டிருக்கும் கூட்டினை உடைத்திட நீயும் சிங்கம் போலச் சீறி புறப்பட்டு வர வேண்டும்.

**2. கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் பற்றிக் குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | பாலசுப்பிரமணியம். |
| **சிறப்புப் பெயர்** | : | சிற்பி (எழுத்துகளைச் செதுக்குவதால் சிற்பி எனப்பட்டார்). |
| **பெற்றோர்** | : | சி. பொன்னுசாமி – கண்டியம்மாள். |
| **ஊர்** | : | ஆத்துப்பொள்ளாச்சி, கோவை. |
| **பணி** | : | பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவர் .<br>சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினர். |
| **விருது** | : | "ஒரு கிராமத்து நதி" எனும் கவிதை நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது. |
| **படைப்புகள்** | : | ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், பூஜ்யங்களின் சங்கிலி. |

## கற்பவை கற்றபின்

பக்கம்: 3

**தமிழ்மொழிப் பாடத்தில் மொழி வாழ்த்துப் பாடல் இடம் பெறுவதன் நோக்கம் குறித்த கருத்துகளைத் தொகுத்துக் கலந்துரையாடல் நிகழ்த்துக.**

| | | |
|---|---|---|
| வேதன் | : | எனக்கு மொழி வாழ்த்து வைப்பு முறையைப் பற்றிய ஒரு விளக்கம் தேவை. |
| மதன் | : | சொல்லுங்க! மொழி வாழ்த்து வைப்பு முறையில் என்ன விளக்கம் வேண்டும்? |
| வேதன் | : | இப்போதெல்லாம் இறைவாழ்த்து இருந்த இடத்தில் மொழி வாழ்த்து வைக்கப்படுகிறதே, அதுதான். |
| மதன் | : | அது இடமாற்றம் இல்லை. ஒதுக்கப்படுவதும் இல்லை. |
| வேதன் | : | நேற்று போல் இன்று இல்லை என்கிறீர்களா? |
| மதன் | : | அதாவது, ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன் விருப்ப தெய்வங்களை வணங்கிவிட்டுத் தொடங்குவதுதான் வழக்கம். |
| வேதன் | : | தற்போது புத்தகங்களில் அப்படி இல்லையே. |
| மதன் | : | வணங்குவது வேறு, இடம் பெறவில்லை என்பது வேறு. இது மொழிப்புத்தகம். எனவே, மொழியைத் தெய்வமாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. |
| வேதன் | : | மொழி தெய்வத்தை எவ்வாறு வணங்கலாம்? |
| மதன் | : | மொழி தெய்வத்தைப் பல புலவர்கள் பலவாறு போற்றியுள்ளனர். பாரதிதாசன் தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர் – என்பார். |
| வேதன் | : | அப்போ, மொழிப்பாடங்களில் மொழிக் கடவு(ளை)ள் வாழ்த்தை வைப்பது சரிதானா? |
| மதன் | : | நிச்சயமாக, மொழி வளம், மொழி சிறக்க, மொழி தெய்வத்தை வணங்க வேண்டும் என்பதால் மொழி வாழ்த்தினை இடம் பெறச் செய்வது சாலச்சிறந்தது. |
| வேதன் | : | நன்றி மதன். |
| மதன் | : | நன்றி வேதன், மீண்டும் சந்திப்போம். |

✸✸★★★✸✸


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

இயல் 1
உரைநடை உலகம்

# தமிழ்மொழியின் நடை அழகியல்

- தி.சு. நடராசன்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்**

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல் [விடை: இ]

2. **கருத்து 1 : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.**
**கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.**

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி 2 தவறு [விடை: இ]

3. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | தமிழ் அழகியல் | - | 1. பரலி சு. நெல்லையப்பர் |
| ஆ) | நிலவுப்பூ | - | 2. தி. சு. நடராசன் |
| இ) | கிடை | - | 3. சிற்பி பாலசுப்பிரமணியம் |
| ஈ) | உய்யும் வழி | - | 4. கி. ராஜநாராயணன் |

www.kalvikadal.in

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1 [விடை: ஈ]

### குறுவினா

1. **நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.**

- நடைபெற்றியலும் (கிளவியாக்கம், 26) என்றும் நடை நவின்றொழுகும் (செய் 135) என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது.
- கவிதையின் இயங்காற்றல்தான் நடை என்கிறது தொல்காப்பியம்.
- மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதே நடை எனப்படும்.

2. **"படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்**
**கடாஅ யானைக் கலிமான் பேக" - இச் சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.**

**ஓசை நயமிக்கச் சொற்கள் :**
படாஅம் ஈத்த, கெடாஅ நல்லிசை, கடாஅயானை, நல்லிசை.

**இலக்கணக் குறிப்புகள் :**

| | | |
|---|---|---|
| படாஅம், கெடாஅ, கடாஅ | - | செய்யுளிசையளபெடைகள் |
| ஈத்த | - | பெயரெச்சம் |
| நல்லிசை | - | பண்புத்தொகை |





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





3. **விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.**

பூத்துக் குலுங்கும் பூக்களின் மணத்திலும் பறவைகளின் ஒலிகளிலும் **விடியலின்** வெளிச்சமாக உதிக்கும் கதிரவனின் தோற்றம் இயற்கையின் **வனப்பை** எடுத்துரைக்கும்.

## சிறுவினா

1. **சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.**

- எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும், இசையிலிருந்தும் தான் தோன்றுகிறது.
- சங்கப்பாடல்களில் ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன.
- இதனையே அந்தப் பனுவல் பாடல்களின் ஒலிப்பின்னல் என்கிறோம். இந்த ஒலிக்கோலங்கள் உணர்ச்சிகளைக் காட்டும் விதமாக அமைக்கப்பட்டுள்ளன.

**கடந்தடு தானை மூவிருங் கூடி**
**உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே;**
**முந்நூறு ஊர்த்தே தண் பறம்பு நன்னாடு;**
**முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்;**

- உயிர் ஒலிகள் குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரல் தன்மை பெற்றிருப்பதும், இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாக விளங்கியதை உணர்த்தும்.

**சான்று :**

'படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசை கடாஅ யானைக்' - இவ்வரிகள் ஒலிக்கோலத்தின் பண்பை உணர்த்துகிறது.

www.kalvikadal.in

## நெடுவினா

1. **கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.**

**கவிதையின் நடையைக் கட்டமைப்பன:**

பாட்டு அல்லது நடைஅழகியியல் கூறுகளில் ஒலிக்கோலங்களும் சொற்களின் புலமும் தொடரியல் போக்குகளும் முக்கியமானவை.

**கவிதை - நடையியல்:**

மொழியின் தனிச்சிறப்பான கூறுகளும், அவற்றைக் கையாளுகின்ற வகைமைகளும் கவிதையின் உந்து சக்தியாக அமைகின்றன. மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. கவிதையின் இயங்காற்றல்தான் நடை. நடைபெற்றியலும் (கிளவியாக்கம் - 26) என்று தொல்காப்பியம் கூறுகிறது.

**ஒலிக்கோலங்கள்:**

தொன்மையான மொழிகள் யாவும் சமிக்ஞையிலிருந்தும், இசையிலிருந்தும்தான் தொடங்குகிறது. ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன. இதையே, அந்தப் பனுவலின் - பாடலின் ஒலிப்பின்னல் என்கிறோம்.

**சான்று:** "கடந்தடு தானை மூவிருங்கூடி உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே"

இப்பாடலில் க, த, ட, ற முதலிய வல்லின மெய்கள் பிற மெல்லின இடையின மெய்களைக் காட்டிலும் அதிகமாக வருகிறது. இதன் அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்த்து ஒலிக்கோலத்தின் வலிமையை அறியலாம்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

**படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசை**
**கடாஅ யானைக் கலிமான் பேக** (புறம் - 145)

இதில் பல உயிர் ஒலிகள் வருகையும் திரும்பவரல் தன்மையும் இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் இங்கே கவனத்திற்குரியன. ஒலிக்கோலம் சங்கப்பாடல்களின் ஒரு முக்கியப்பண்பு.

**சொற்புலம் :**

சொல்வளம் என்பது ஒருபொருள் குறித்த பல சொல், பல பொருள் குறித்த ஒரு சொல், பலதுறை, பலசூழல், பல புனைவுகளுக்கும் உரியதாய் வருதலும், உணர்வும், தெளிவும் கொண்டதாய் வருதலும், எனப் பலவாறு செழிப்பான தளத்தில் சொற்கள் விளைச்சல் கண்டிருப்பதைக் குறிக்கும். சான்றாக, முல்லைக்கலியில் காளைகளில் பல இனங்களைக் காட்டுகின்ற சொற்கள் உள்ளன. சொல்வளம் ஒரு பண்பாட்டின் அடையாளம். சொல்வளம் என்பது தனிச்சொற்களாய் நிறைந்து அமைவதையும் குறிக்கும்.

**தொகைநிலை :**

சங்க இலக்கிய மொழியின் அடையாளமாக உள்ள ஒரு பண்பு இது. இதனைத் தொகைநிலை என்று தொல்காப்பிய எச்சவியல் பேசுகிறது. தொகைமொழி என்பது செறிவாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பு.

அது வாக்கிய அமைப்பில் ஒரு சொல் போலவே நடைபெறும்.

**சான்று:** வைகுறுவிடியல், கவினுறு வனப்பு, தீநீர் என்பன.

**தொடரியல் போக்குகள் :**

ஒலிக்கோலமும், சொற்புலமும் சொற்றொடர் நிலையும் பாடலின் தளத்தை ஏர் நடத்திப் பண்படுத்திப் போகின்றன என்றால், பாத்தி கட்டி வரப்புயர்த்தும் பணிகளைத் தொடரியல் வடிவம் செய்கின்றது. பரிமாறப்படும் உணர்வுகளுக்கும் செய்திகளுக்கும் ஏற்பத் தொடர்கள் ஏறியும் இறங்கியும் திரும்பியும் சுழன்றும் இயங்குகின்றன.

www.kalvikadal.in

**கவிதை மறுதலைத்தொடர் :**

தொடரமைப்பு என்பது எழுவாய் + செயப்படுபொருள், அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை என்று வருவது மரபு. இது சங்கப்பாடல்களில் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

**சான்று:** பேரெயின் முறுவலாரின், நம்பி நெடுஞ்செழியனுடைய சாவுச்சடங்கு பாடல்:

**"இடுகவொன்றோ, சுடுகவொன்றோ**
**படுவழிப்படுக இப்புகழ் வெய்யோன் தலையே"** (புறம் - 239)

இதன் இறுதி அடி பிறழ்வோடு அமைந்துள்ளது. ஏனைய 20 அடிகளில் தொடர் வரிசையாகவும் நேர்படவும் செல்கின்றன. ஒவ்வோர் அடியும் வினைமுற்றுகளோடும், தன்னிறைவோடும் முடிகின்றன. இப்படி 18 பண்புகளை வரிசைப்படுத்திய பிறகு, தொகுத்துச் சொல்வதுபோல, (ஆங்குச் செய்பவையெல்லாம் செய்தனன் ஆதலின்) கூறிவிட்டுப் போடா போ - புதைத்தால் புதை; சுட்டால் சுடு என்று அலுத்துக் கொள்கிறது.

**இறுதியாக :**

நடையியல் என்பது வடிவமைப்பின் பகுதிகளையும் முழுமையினையும் சார்ந்தே இருக்கிறது. அத்தகைய நடை அழகியலைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியமே முதன்மை ஆதாரம். மேலும் சங்க இலக்கியம் அதனுடைய தனித்துவ மிக்க சமூக - பண்பாட்டுத்தளத்தில் குறிப்பிட்ட சில பண்புகளையும் போக்குகளையும் சொந்த மரபுகளாகக் கொண்டுவிட்டது. எனவே, கவிதையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகள் சங்க இலக்கியங்களில் பரவிக் காணப்படுகின்றன.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

1. **செய்யுளை ஓர் உள்ளமைப்பாகக் கூறும் நூல்**
   அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம்
   இ) யாப்பருங்கலக்காரிகை ஈ) தண்டியலங்காரம் **[விடை: ஆ]**

2. **காளைகளில் பல இனங்களைக் காட்டும் நூல்**
   அ) தொல்காப்பியம் ஆ) முல்லைக்கலி
   இ) புறநானூறு ஈ) பதிற்றுப்பத்து **[விடை: ஆ]**

3. **பாடலின் தளத்தைப் பாத்திகட்டி வரப்புயர்த்தும் பணியைச் செய்வது**
   அ) தொடரியல் வடிவம் ஆ) ஒலிக்கோலம்
   இ) சொற்றொடர் நிலை ஈ) சொற்புலம் **[விடை: அ]**

4. **கருத்து 1 : சொல்லில்தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன.**
   **கருத்து 2 : தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியமே முதன்மை ஆதாரம்.**
   அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
   இ) கருத்து 1 சரி, 2 தவறு ஈ) இரண்டு கருத்தும் சரி **[விடை: ஈ]**

5. **கருத்து 1 : முல்லைக்கலியில் எருதுகளின் பல இனங்களைக் காட்டும் சொற்கள் நிரம்பிக் கிடக்கின்றன.**
   **கருத்து 2 : சொல்வளம் ஒரு பண்பாட்டின் அடையாளமாகவும் இருக்கிறது.**
   அ) கருத்து 1 தவறு ஆ) கருத்து 1 சரி, 2 தவறு
   இ) கருத்து இரண்டும் சரி ஈ) கருத்து 1 தவறு, 2 சரி **[விடை: இ]**

6. **கருத்து : தொன்மையான மொழி சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும் தான் தொடங்குகிறது.**
   **விளக்கம் : மொழித்தோன்ற அடிப்படையாக இருப்பது ஒலியே. ஒலியை வெவ்வேறு வடிவங்களில் உச்சரிக்கும் போது மொழித் தோன்றுகிறது.**
   அ) கருத்து சரி விளக்கம் தவறு ஆ) கருத்தும் விளக்கமும் சரி
   இ) கருத்து தவறு விளக்கமும் தவறு ஈ) கருத்து தவறு விளக்கம் சரி **[விடை: ஆ]**

7. **பொருத்தமானதைக் கண்டறிக.**
   அ) பாவகை - ஐந்து
   ஆ) வஞ்சி - வெண்பா நடைத்தே
   இ) பனிநீர் - தொகை மொழி
   ஈ) காமர் வனப்பு - தொடரியல் போக்கு **[விடை: இ]**

8. **பொருத்தமானதைக் கண்டறிக.**
   அ) கடாஅ யானைக் கலிமான் பேக - முல்லைக்கலி
   ஆ) புணரின் புணராது பொருளே - தொல்காப்பியம்
   இ) இவன் தந்தை தந்தை - நற்றிணை
   ஈ) யாமும் பாரியும் உளமே - புறநானூறு **[விடை: ஈ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

9. **பொருந்தாததைத் தேர்க.**

அ) கன்னி விடியல் - தொகை மொழி
ஆ) பொய்படு சொல் - மறித்தாக்கம்
இ) சங்கப்பாடல்கள் - மறுதலைத் தொடர்
ஈ) கி.ராஜநாராயணன் - கிடை [விடை: ஆ]

10. **தமிழ்மொழியின் நடை அழகியல் என்னும் கட்டுரையின் ஆசிரியர்**

அ) தி.சு. நடராசன் ஆ) ஔவை நடராசன்
இ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஈ) தமிழண்ணல் [விடை: அ]

11. **................ இழுமெனும் மொழியால் விழுமியது பயக்கும் வகையின் இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன.**

அ) தமிழில் ஆ) ஆங்கிலத்தில்
இ) தெலுங்கில் ஈ) வடமொழியில் [விடை: அ]

12. **மலரும் மணமும் போல கவிதையுடன் இரண்டறக் கலந்திருப்பது**

அ) தமிழர்களின் அழகுணர்வு ஆ) தலைவன் தலைவியின் அன்புணர்வு
இ) வள்ளலின் வள்ளன்மையுணர்வு ஈ) பக்தர்களின் தெய்வ உணர்வு [விடை: அ]

13. **அறியப்பட்ட வரலாற்றுக் காலத்தின் தொடக்கமாகத் தோற்றம் தருவது**

அ) புராணம் ஆ) சங்க இலக்கியம் இ) கல்வெட்டு ஈ) நாணயம் [விடை: ஆ]

14. **அழகு என்பது ................ செய்தி.**

அ) மனிதரின் ஆ) பேரண்டத்தின் இ) காதலரின் ஈ) கடவுளரின் [விடை: ஆ]

www.kalvikadal.in

15. **அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருவது**

அ) தொல்காப்பியம் ஆ) சங்க இலக்கியம்
இ) புராணம் ஈ) மனிதநடத்தை [விடை: அ]

16. **இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கணம்**

அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல்
இ) தொன்னூல் விளக்கம் ஈ) தண்டியலங்காரம் [விடை: அ]

17. **இலக்கியத்தின் '................' பற்றித் தமிழ் இலக்கிய மரபில் அழுத்தமான கருத்து உண்டு.**

அ) நயம் ஆ) பயன் இ) நிலை ஈ) ஈடுபாடு [விடை: ஆ]

18. **இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறிவியல் சார்ந்த கருத்துநிலைகள் கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்று கூறும் நூல்**

அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல்
இ) இலக்கண விளக்கம் ஈ) தொன்னூல் விளக்கம் [விடை: அ]

19. **சங்க இலக்கியம் பாடற்பொருள்களாக வடிவமைத்துள்ளவை**

i) அகத்திணைச் சார்ந்த செய்திகள் ii) புறத்திணைச் சார்ந்த செய்திகள்

அ) i - சரி ஆ) ii - தவறு
இ) இரண்டும் சரி ஈ) i - சரி ; ii - தவறு [விடை: இ]

20. **அகன் ஐந்திணைகளைப் பேசுவது**

அ) நன்னூல் ஆ) தண்டியலங்காரம்
இ) தொல்காப்பியம் ஈ) புறப்பொருள் வெண்பாமாலை [விடை: இ]



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in



21. பா வகைகள் ஆசிரியம் முதற்கொண்டு
அ) மூன்று ஆ) நான்கு இ) ஒன்று ஈ) இரண்டு [விடை: ஆ]

22. அந்நில மருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய என்ப-என்று பாவகைகளோடு அறவியல் கருத்துகளை இணைத்துச்சொல்வது
அ) சங்க இலக்கியம் ஆ) பரிபாடல் இ) தொல்காப்பியம் ஈ) அகத்தியம் [விடை: இ]

23. பாட்டு அல்லது கவிதையின் நடையியல் கூறுகளில் முக்கியமானவை
i) ஒலிக்கோலங்கள் ii) சொற்களின் புலம் iii) தொடரியல் போக்குகள்
அ) i, ii - சரி ஆ) ii, iii - சரி
இ) மூன்றும் சரி ஈ) இரண்டு மட்டும் தவறு [விடை: இ]

24. கவிதையின் ................ நடை.
அ) இயங்காற்றல்தான் ஆ) அழகுதான்
இ) பார்வைதான் ஈ) இயல்புதான் [விடை: அ]

25. 'நடைபெற்றியலும்' என்பது தொல்காப்பியத்தின ................ வரும் சொற்றொடர்.
அ) கிளவியாக்கத்தில் ஆ) மொழியாக்கத்தில்
இ) எழுத்து அதிகாரத்தில் ஈ) இவற்றில் எதுவுமில்லை [விடை: அ]

26. ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை வெண்பா நடைத்தே கலி-என்று குறிப்பிடும் நூல்
அ) கலித்தொகை ஆ) தொல்காப்பியம் இ) பரிபாடல் ஈ) குறவஞ்சி [விடை: ஆ]

27. 'கடந்தடுதானை மூவிருங்கூடி'-என்று தொடங்கும் பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல்
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) கலித்தொகை ஈ) பரிபாடல் [விடை: ஆ]

www.kalvikadal.in

28. 'படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக் கடாஅ யானைக் கலிமான் பேக' என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) கலித்தொகை ஈ) பரிபாடல் [விடை: ஆ]

29. 'புணரின் புணராது பொருளே; பொருள்வயின் பிரியின் புணராது புணர்வே!' என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்
அ) புறநானூறு ஆ) நற்றிணை இ) அகநானூறு ஈ) கலித்தொகை[விடை: ஆ]

30. நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை-என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்
அ) புறநானூறு ஆ) நற்றினை இ) அகநானூறு ஈ) கலித்தொகை[விடை: அ]

31. ................ கலியில், காளைகளில் பல இனங்களைக் காட்டுகிற சொற்கள் நிரம்பிக் கிடக்கின்றன.
அ) குறிஞ்சிக் ஆ) முல்லைக் இ) மருதக் ஈ) பாலைக் [விடை: ஆ]

32. 'கிடை' என்னும் குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர்களைச் சொல்லி அழைப்பவர்
அ) இந்திரா பார்த்தசாரதி ஆ) கி. ராஜநாராயணன்
இ) ஜெயகாந்தன் ஈ) ஜெயமோகன் [விடை: ஆ]

33. தொகைநிலை, தொகைமொழி பற்றிப் பேசும் தொல்காப்பியத்தின் இயல்
அ) எச்சவியல் ஆ) இடையியல் இ) உவமையியல் ஈ) எழுத்தியல் [விடை: அ]

34. 'நீர்படு பசுங்கலம்' என்னும் அடிகளுக்குரிய நூல்
அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) நற்றிணை ஈ) பரிபாடல் [விடை: இ]



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

35. **நம்பி நெடுஞ்செழியனுடைய சாவுச் சடங்கு, சர்ச்சைக்கு உள்ளானது பற்றிப் பாடியவர்**
அ) பேரெயின் முறுவலார் ஆ) வெள்ளைக்குடி நாகனார்
இ) நரிவெரூஉத்தலையார் ஈ) கோவூர்கிழார் **[விடை: அ]**

36. **இடுக வொன்றோ, சுடுக வொன்றோ, படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே-என்ற புறநானூறு அடிகளில் குறிப்பிடப்படும் மன்னர்**
அ) அறிவுடைநம்பி ஆ) நம்பி நெடுஞ்செழியன்
இ) செங்குட்டுவன் ஈ) கிள்ளிவளவன் **[விடை: ஆ]**

37. **'தொடியுடைய தோள் மணந்தனன்' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலின் ஆசிரியர்**
அ) பேரெயின் முறுவலார் ஆ) பொன்முடியார்
இ) கோவூர்கிழார் ஈ) வெள்ளைக்குடி நாகனார் **[விடை: அ]**

38. **பேரெயின் முறுவலாரின் புறநானூற்றுப் பாடலில் இடம்பெற்றுள்ள பண்புகள்**
அ) 16 ஆ) 18 இ) 15 ஈ) 14 **[விடை: ஆ]**

39. **தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்குச் ................ முதன்மை ஆதாரம்.**
அ) சங்க இலக்கியமே ஆ) சங்கம் மருவிய இலக்கியமே
இ) நீதி இலக்கியமே ஈ) காப்பியமே **[விடை: அ]**

40. **தமிழ் அழகியல் என்னும் நூலின் ஆசிரியர்**
அ) தி.சு. நடராசன் ஆ) ஔவை நடராசன்
இ) தமிழண்ணல் ஈ) வல்லிக்கண்ணன் **[விடை: அ]**

www.kalvikadal.in

41. **................ கலையைத் தமிழக்கு அறிமுகப்படுத்தியவர்களில் தி. சு. நடராசன் குறிப்பிடத்தக்கவர்.**
அ) திரைச் ஆ) திறனாய்வுக் இ) மொழிபெயர்ப்புக் ஈ) பேச்சுக் **[விடை: ஆ]**

42. **தி.சு. நடராசன் ................ ஆகப் பணிபுரிந்தார்.**
அ) மாவட்ட ஆட்சியர் ஆ) பேராசிரியர் இ) வழக்குரைஞர் ஈ) மருத்துவர் **[விடை: ஆ]**

## குறுவினா

1. **இலக்கியம் எவற்றைத் தனக்குரிய அழகியல் சாதனமாக மாற்ற வேண்டியுள்ளது?**
மனித நாக்குகளின் ஈரம்பட்டுக் கிடக்கும் மொழியானது, பேசுபவன், கேட்பவன் ஆகியோருடைய தனிப்பட்ட சூழல்கள் பேசும் போதும், கேட்கும் போதும் தனிச்சூழல்களைத் தனக்குரிய அழகியல் சாதனமாக மாற்ற வேண்டும்.

2. **மொழியின் சிறப்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?**
உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி முதலியவை மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவையாகும்.

3. **தமிழ் இலக்கியத்தின் பயன்களாகக் கட்டுரையாசிரியர் கூறுவன யாவை?**
அறம், பொருள், இன்பம் அல்லது வேறு ஏதோ ஓர் உயர்ந்த குறிக்கோளை உணர்த்துவனவாக தமிழ் இலக்கியத்தின் பயன்கள் இருக்க வேண்டும்.

4. **'கலை முழுமை' பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுவது யாது?**
'கலை முழுமை', என்பது இலக்கியத்திற்கான நோக்கம் அல்லது அறிவியல் சார்ந்த கருத்துநிலைகள், கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





5. **தமிழ் அழகியலின் நெடும்பரப்புகளென ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகிறார்?**
சமூக பண்பாட்டு மரபிற்கேற்பவே, கலை படைப்பை, அழகியல் நெறியை, பண்பாட்டின் இலச்சினையாகச் சித்தரிப்பதற்குத் தமிழ்மரபு முன்வந்திருக்கிறது; முன் மொழிந்திருக்கிறது. இதுவே தமிழ் அழகியலின் நெடும்பரப்பு ஆகும்.

6. **பாடலின் தளத்தை ஏர் நடத்திப் பண்படுத்திப் போகின்றனவை எவை?**
ஒலிக்கோலம், சொற்புலம், சொற்றொடர் நிலை.

7. **பண்டைய கவிஞர்களுக்கு இயல்பாக இருந்த உணர்வு எது?**
கவிப்பொருளை அமைக்கின்ற விதத்தில் உணர்ச்சிகளைப் பாய்ச்சும் விதத்தில் தீங்கவிகளைச் செவியாரப் பருகச்செய்து கற்போர் இதயம் கனியும் வண்ணம் படைக்கும் அழவியல் உணர்வு, பண்டைக் கவிஞர்களுக்கு இயல்பாக இருந்தது.

8. **இலக்கியத்தனம் என்பது யாது?**
- இலக்கியம் என்ற மொழிசார்கலை, மொழியின் தனித்துவமான பண்புகளை இயன்ற மட்டும் தனக்குரியதாக்கிக் கொள்கிறது.
- இலக்கியத்திற்கு ஒரு சிறப்புத்தன்மையைத் தந்துவிடுகிறது. இத்தகைய தன்மைதான் கவித்தனம் அல்லது இலக்கியத்தனம் என்று பேசப்படுகிறது.

9. **மொழியின் வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?**
உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி.

10. **'லட்சியம்' பொருள்களோடு இரண்டற இணைத்துவிடுவது எது?**
அகன் ஐந்திணைகளைப் பேசுகிற தொல்காப்பியம் புணர்தல், பிரிதல் முதலான அகன் ஐந்திணைகளை இன்பம், பொருள், அறம் ஆகிய அறவியல் 'லட்சியப்' பொருள்களோடு இரண்டற இணைத்துவிடுகிறது.

www.kalvikadal.in

11. **எந்த தொன்மையான மொழியும் எவற்றிலிருந்து தொடங்குகிறது?**
எந்த தொன்மையான மொழியும் சமிக்கையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்குகிறது.

12. **ஒலிப்பின்னல் என்பது யாது?**
- மொழிசார்ந்த கவிதையும் இசையோடும் இசைக்கருவியோடும்தான் பிறக்கிறது.
- ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன.
- இதனையே அந்தப் பனுவலின் பாடலின் ஒலிப்பின்னல் என்கிறோம்.

13. **சொல்லில் புதைந்து கிடப்பன யாவை?**
- சொல்லில்தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன.
- கலையும் பண்பாடும் வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன.

14. **தமிழ் இலக்கியங்களில் காணப்படும் சொல்வளத்திற்கான சான்றுகளைத் தருக.**
- முல்லைக் கலியில், காளைகளில் பல இனங்களைக் காட்டுகிற சொற்கள் நிரம்பிக் கிடக்கின்றன.
- கி. ராஜநாராயணன் 'கிடை' என்னும் குறுநாவலில் ஆடுகளில் அடையாளங்களைப் பல பெயர்கள் சொல்லி அழைக்கிறார்.

15. **சொல்வளம் என்பது யாது?**
- சொல்வளம் என்பது தனிச்சொற்களாய் நிறைந்து அமைவதையும் குறிக்கும்.
- ஒன்றிற்கு மேற்பட்ட சொற்கள் கவவுக்கை நெகிழாமல் முயங்கிக் கிடப்பதையும் குறிக்கும்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**16. தொடரியில் வடிவம் செய்யும் பணிகள் யாவை?**

ஒலிக்கோலமும் சொற்புலமும் சொற்றொடர் நிலையும் பாடலின் தளத்தை ஏர் நடத்திப் பண்படுத்திப் போகின்றன என்றால், பாத்திகட்டி வரப்புயர்த்தும் பணிகளைத் தொடரியல் வடிவம் செய்கின்றது.

**17. தி. சு. நடராசன் தமிழ்ப் போராசிரியராகப் பணியாற்றிய பல்கலைக்கழகங்களைக் கூறுக.**

- மதுலை காமராசர் பல்கலைக்கழகம்.
- போலந்து நாட்டின் வார்ஸா பல்கலைக்கழகம்.
- திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்.

**18. தி.சு. நடராசன் இயற்றிய நூல்கள் யாவை?**

கவிதையெனும் மொழி, திறனாய்வுக்கலை, தமிழ் அழகியல், தமிழின் பண்பாட்டு வெளிகள்.

## சிறுவினா

**1. தி.சு. நடராசன் - குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | தி.சு. நடராசன் |
| சிறப்பு | : | திறனாய்வுக்கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர். |
| பதவி | : | மதுரை காமராசர் பல்கலைக்கழகம், போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகம், திருநேல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். |
| படைப்புகள் | : | கவிதையெனும் மொழி, தமிழ் அழகியல், தமிழ் பண்பாட்டு வெளிகள், திறனாய்வுக்கலை. |

www.kalvikadal.in

**2. சங்கப்பாடல்கள் பலவற்றுள் அமைந்துள்ள மறுதலைத் தொடரியல் போக்குக்குச் சான்று தந்து விளக்குக.**

தமிழ் மொழியில் உரைநடை வழக்கு, பேச்சு வழக்கு உள்ளிட்ட இயல்பு வழக்கில் தொடரமைப்பு என்பது எழுவாய் + செயப்படுபொருள் அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை என்று வருவதே மரபு. ஆனால் சங்கப்பாடல்கள் பலவற்றில் இந்நிலை மாறி வருகிறது. இதனைக் கவிதை மறுதலைத் தொடர் என்பர்.

சிறப்பாக முடியும் பாடல்களின் இறுதியில்தான் இந்தத் தொடரியல் பிறழ்வுநிலை பெரிதும் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாகப் பேரெயின் முறுவலார், நம்பி நெடுஞ்செழியனுடைய சாவுச் சடங்கில் முரண்பாடான கருத்து உருவாகியுள்ளதை

**இடுக வொன்றோ, சுடுகவொன்றோ;**
**படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே! (புறம் : 239)**

என்ற இப்பாடலில் இடம் பெற்றுள்ள இறுதி அடி ஓர் எளிமையான தொடரியல் பிறழ்வோடு அமைந்திருக்கிறது.

‘தொடியுடைய தோள் மணந்தனன்’ எனத் தொடங்கும் இப்பாடலில் தொடர்ந்து வரும் 20 அடிகளில் தொடர்கள் வரிசையாகவும் நேர்படவும் செல்வதைக் காணலாம். ஒவ்வோர் அடியிலும் தனித்தனியே வினைமுற்றுகளோடு தன்னிறைவோடு 18 பண்புகளை வரிசைப்படுத்தித் தொகுத்துக் கூறும் புலவர் இறுதியில் நெடுஞ்செழியனுடைய உடலைப் புதைத்தால் புதை ; சுட்டால் சுடு என்று அலுத்துக் கொள்கிறார். இது சங்கப் பாடலின் மறுதலைத் தொடரியல் போக்குக்குத் தகுந்த சான்றாகும்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

# கற்பவை கற்றபின்

பக்கம்: 7

1. **கவிஞர் பாரதிதாசனின் அழகின்சிரிப்பு - குன்றம் - ஒளியும் குன்றும் பாடலில் இடம்பெற்றுள்ள நடைச்சிறப்பினைத் தொகுத்து உரையாக வழங்குக.**

**ஒளியும் குன்றும்**
**அருவிகள் வைரத்தொங்கல்**
**அடர்கொடிப் பச்சைப்பட்டே**
**குருவிகள் தங்கக் கட்டி**
**குளிர்மலர் மணியின் குப்பை**
**எருதின்மேல் பாயும் வேங்கை**
**நிலவுமேல் எழுந்த மின்னல்**
**சருகெலாம் ஒளிசேர் தங்கத்**
**தகடுகள் பாரடா நீ** **- பாரதிதாசன்**

இயற்கை வருணனையைப் பாரதிதாசன் செம்மைப் படுத்துவதில் வல்லவர்.

இப்பாடலில், வானுயிர்ந்த மலையின் அழகை தனக்கே உரித்தான நடையில் உருவகப்படுத்துகிறார்.

- மலையினின்று விழும் வெண்மையான அருவிகள் மலையாகிய பெண்ணின் காதில் அணிந்திருக்கும் வைரத்தாலான தொங்கலாக உள்ளது.
- மலையில் அடர்த்தியாகப் படாந்திருக்கும் பசுமையான கொடிகள் அப்பெண் உடுத்தியிருக்கும் பச்சைப் பட்டாடையாகக் காணப்படுகிறது.
- மலையில் காணப்படும் குருவிகள் சூரிய ஒளியின் காரணமாகத் தங்கக் கட்டிகளாகக் காணப்படுன்றன.
- பூத்திருக்கும் பூக்கள் நவமணிகள் ஆகக் காட்சியளிக்கின்றன.
- எருதின் மேல் பாயும் வேங்கைக் காட்சிகள், முன்வைக்கப்படுகிறது.
- நிலவின்மேல் ஓடுகின்ற மின்னலின் வரிகள் விழுந்து கிடக்கும் சருகுகள் ஒளியின் பிரகாசத்தால் தங்கத்தகடுகளாகக் காட்சியளிக்கின்றன.

www.kalvikadal.in

2. **தமிழின் சொல்வளத்தை வெளிப்படுத்தும்படியாக யானை / மலர் குறித்த பல சொற்களை அகராதியில் கண்டு பட்டியலிடுக.**

| | |
|---|---|
| **யானை** | வேழம், களிறு, களபம், மாதங்கம், கைம்மா, உம்பர், கரி, தும்பி, ஆனை, களபம், கயமுனி, கைம்மலை, குஞ்சரம், வல்விலங்கு, துங்கல், வாரணம், கடகம், துடியடி, கடகம். |
| **மலர்** | அரும்பு, போது, நளை, முகிழ், புஷ்பம், நறுவி, மெகெகுள், செம்மலர், பொதும்பர், அலர், மகரந்தம், பொம்மல், வீதி. |

✸✸★★★✸✸





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

இயல் 1
செய்யுள்

# தன்னேர் இலா தமிழ்

(தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்)

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **"மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னேர் இலாத தமிழ்!" இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்**

அ) அடிமோனை, அடி எதுகை    ஆ) சீர் மோனை, சீர் எதுகை

இ) அடி எதுகை, சீர் மோனை    ஈ) சீர் எதுகை, அடியோனை    [விடை: இ]

### சிறுவினா

1. **'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் :**

இப்பாடலின் அடி தண்டியலங்காரம் என்னும் அணி இலக்கண நூலின் பொருளணியியலில் இடம் பெற்றுள்ள உரை மேற்கோள் பாடலாகும். இதன் ஆசிரியர் தண்டி ஆவார்.

**பொருள் :**

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே பொதிகையில் பிறந்து, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் இருளைப்போக்கும் தமிழே உனக்கு நிகர் இல்லை என்கிறார்.

கடலால் சூழப்பட்ட இந்நிலவுலகின் இருளைப் போக்கும் கதிரவனைப் போல அகஇருளைப் போக்கும் தமிழ்மொழிக்கு நிகர் எம்மொழியும் இல்லை என்பதாகும்.

### இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| **வெங்கதிர்** | - | பண்புத்தொகை |
| **உயர்ந்தோர்** | - | வினையாலணையும் பெயர் |
| **இலாத** | - | இடைக்குறை |

### உறுப்பிலக்கணம்

| | |
|---|---|
| **உயர்ந்தோர் = உயர் + த்(ந்) + த் + ஓர்**<br>உயர் - பகுதி<br>த் - சந்தி ('ந்' ஆனது விகாரம்)<br>த் - இறந்தகால இடைநிலை<br>ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி<br>ஆர் என்பதன் ஈற்றயலெழுத்தான 'ஆ' 'ஓ' ஆகத் திரியும் (நன் 353) | **விளங்கி = விளங்கு + இ**<br>விளங்கு - பகுதி<br>இ - வினையெச்ச விகுதி |



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

| | | |
|---|---|---|
| வந்து | = | வா(வ) + த்(ந்) + த் + உ |
| வா (வ) | - | பகுதி ('வ' எனக் குறுகியது விகாரம்) |
| த் | - | சந்தி, ('ந்' ஆனது விகாரம்) |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| உ | - | வினையெச்ச விகுதி |

## புணர்ச்சி விதி

1. **ஆங்கவற்றுள் = ஆங்கு + அவற்றுள்**
   - 'உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்' என்ற விதிப்படி, ஆங்க் + அவற்றுள் என்றானது.
   - 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி, (க் + அ = க) ஆங்கவற்றுள் என்று புணர்ந்தது.

2. **தனியாழி = தனி + ஆழி**
   - 'இ ஈ ஐ வழி யவ்வும்' என்ற விதிப்படி, தனி + ய் + ஆழி என்றானது,
   - "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி (ய் + ஆ = யா) 'தனியாழி' என்று புணர்ந்தது.

3. **வெங்கதிர் = வெம்மை + கதிர்**
   - 'ஈறுபோதல்' என்ற விதிப்படி 'மை' கெட்டு வெம் + கதிர் என்றானது.
   - 'முன்னின்ற மெய் திரிதல்' என்ற விதிப்படி ('ம்' 'ங்' - ஆகத் திரிந்து) 'வெங்கதிர்' என்று புணர்ந்தது.

# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

1. **அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல்**
   அ) முத்துவீரியம் ஆ) வீரசோழியம்
   இ) மாறனலங்காரம் ஈ) இலக்கண விளக்கம் **[விடை: இ]**

2. **கீழ்க்காண்பவற்றுள் 'வினையாலணையும் பெயர்' எது?**
   அ) உயர்ந்தோர் ஆ) வந்தான் இ) நடப்பான் ஈ) உயர்ந்து **[விடை: அ]**

3. **'ஈறுபோதல்', 'முன்னின்ற மெய்திரிதல்' எச்சொல்லுக்குரிய புணர்ச்சி விதி?**
   அ) கருங்குயில் ஆ) வெங்கதிர் இ) நெடுந்தேர் ஈ) முதுமரம் **[விடை: ஆ]**

4. **'விளங்கி' - இச்சொல்லின் சரியான பகுபதஉறுப்பிலக்கண பிரிப்பு**
   அ) விள + ங் + இ ஆ) விளங்கு + க் + இ
   இ) வி + ளங்கு + இ ஈ) விளங்கு + இ **[விடை: ஈ]**

5. **கருத்து 1 : மக்களின் அறியாமையை அகற்றுவது தமிழ்மொழியாகும்.**
   **கருத்து 2 : புற இருளைப் போக்க கதிரவன் உதவும்.**
   அ) இரண்டு கருத்தும் சரி ஆ) கருத்து 1 சரி 2 தவறு
   இ) கருத்து 1 தவறு 2 சரி ஈ) இரண்டு கருத்தும் தவறு **[விடை: அ]**

6. **கருத்து 1 : 'தொன்னூல் விளக்கம்' அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் நூல்.**
   **கருத்து 2 : 'குவலயானந்தம்' என்னும் நூல் முழுமையான இலக்கண நூல்.**


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

அ) இரண்டு கருத்தும் சரி ஆ) இரண்டு கருத்தும் தவறு
இ) கருத்து 1 தவறு, 2 சரி ஈ) இவற்றில் எதுவுமில்லை [விடை: ஆ]

7. **சரியானதைத் தேர்க.**
அ) வீரசோழியம் - நாவல்
ஆ) முத்து வீரியம் - சிறுகதை
இ) குவலயானந்தம் - அணியிலக்கணம்
ஈ) மாறனலங்காரம் - பொருளிலக்கணம் [விடை : இ]

8. **சரியானதைத் தேர்க.**
அ) வந்து - பெயரெச்சம்
ஆ) உயர்ந்தோர் - வினையாலணையும் பெயர்
இ) இலாத - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
ஈ) வெங்கதிர் - வினைத்தொகை [விடை: ஆ]

9. **பொருந்தாததைக் தேர்க.**
அ) தமிழ்மொழி - பொதிகை மலை
ஆ) தொல்காப்பியம் - இலக்கிய நூல்
இ) தண்டியலங்காரம் - தண்டி
ஈ) காவியதர்சம் - வடமொழி இலக்கணம் [விடை: ஆ]

10. **பொருத்துக.**
அ) வெங்கதிர் - 1. இடைக்குறை
ஆ) இலாத - 2. வினையெச்சம்
இ) வந்து - 3. வினையாலணையும் பெயர்
ஈ) உயர்ந்தோர் - 4. பண்புத்தொகை
அ) 4, 2, 3, 1 ஆ) 4, 1, 3, 2 இ) 4, 1, 2, 3 ஈ) 2, 3, 1, 4 [விடை: இ]

www.kalvikadal.in

11. **தமிழ் தோன்றிய மலை**
அ) குடகு ஆ) பொதிகை இ) இமயமலை ஈ) விந்தியமலை [விடை: ஆ]

12. **தன்னேர் இலாத தமிழ் பாடப்பகுதியல் இடம்பெற்றுள்ள பாடல்**
அ) தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்
ஆ) இறையனார்களவியல் உரை மேற்கோள் பாடல்
இ) நம்பியகப்பொருள் உரை மேற்கோள் பாடல்
ஈ) புறப்பொருள் வெண்பாமாலை உரை மேற்கோள் பாடல் [விடை: அ]

13. **இருளைப் போக்கும் இரண்டு**
அ) கதிரவன், நிலவு ஆ) கதிரவன், தமிழ்
இ) அறிவு, தமிழ் ஈ) அறிவு, ஞானம் [விடை: ஆ]

14. **மின்னலைப் போன்று ஒளிர்வது**
அ) கதிரவன் ஆ) தமிழ் இ) தமிழ் ஈ) வானம் [விடை: அ]

15. **அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூலைக் கண்டறிக.**
அ) வீரசோழியம் ஆ) இலக்கணவிளக்கம்
இ) முத்து வீரியம் ஈ) குவலயானந்தம் [விடை: ஈ]





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

16. **தண்டியலங்காரம் ................ இலக்கணத்தைக் கூறும் நூல்.**
அ) எழுத்து ஆ) சொல் இ) பொருள் ஈ) அணி **[விடை: ஈ]**

17. **'ஓங்கலிடை வந்து' என்று தொடங்கும் பாடல் தண்டியலங்காரத்தின் ................ பகுதியில் இடம்பெற்றுள்ளது.**
அ) பொருளணியியல் ஆ) பொதுவியல் இ) சொல்லணியியல் ஈ) ஒழிபியல் **[விடை: அ]**

18. **காவியதர்சம் என்பது**
அ) வடமொழி இலக்கண நூல் ஆ) புராண நூல்
இ) வரலாற்று நூல் ஈ) மலையாள இலக்கிய நூல் **[விடை: அ]**

19. **காவியதர்சம் என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்ட நூல்**
அ) தண்டியலங்காரம் ஆ) மாறனலங்காரம்
இ) வீரசோழியம் ஈ) முத்துவீரியம் **[விடை: அ]**

20. **தண்டியலங்காரத்தின் ஆசிரியர்**
அ) தண்டி ஆ) ஐயரினாதர் இ) சமணமுனிவர் ஈ) பவணந்தி **[விடை: அ]**

21. **தண்டி ................ ஆம் நூற்றாண்டைச் சார்நதவர்.**
அ) கி.பி. 11 ஆ) கி.பி. 12 இ) கி.பி. 13 ஈ) கி.பி. 14 **[விடை: ஆ]**

22. **தண்டியலங்காரம் ................ பெரும் பிரிவுகளை உடையது.**
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து **[விடை: ஆ]**

## குறுவினா

www.kalvikadal.in

1. **தண்டியலங்காரம் – நூல், நூலாசிரியர் சிறுகுறிப்பு தருக.**

அணி இலக்கணத்தைக் கூறும் சிறப்பான நூல்களில் ஒன்று தண்டியலங்காரமாகும். 'காவியதர்சம்' என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்ட நூலாகும். இந்நூலை எழுதியவர் தண்டி ஆவார். இவரது காலம் கி.பி.12ஆம் நூற்றாண்டு. தண்டியலங்காரம் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என மூன்று பெரும் பிரிவுகளை உடையது.

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | தண்டி |
| காலம் | : | 12ஆம் நூற்றாண்டு |
| தழுவல் நூல் | : | காவியதர்சம் என்னும் வடமொழி இலக்கண நூலை தழுவி எழுதப்பட்டது. |
| மூன்று பிரிவுகள் | : | பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல். |

2. **அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?**
தண்டியலங்காரம், மாறனலங்காரம், குவலயானந்தம்.

3. **அணியிலக்கணத்தோடு பிற இலக்கணத்தையும் கூறும் நூல்கள் யாவை?**
அணி இலக்கணத்தோடு பிற இலக்கணத்தையும் கூறும் நூல் தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம் ஆகும்.

4. **தண்டியலங்காரத்தின் மூன்று பெரும் பிரிவுகள் யாவை?**
பொதுவியல், மாறனலங்காரம், சொல்லணியியல்.

5. **ஒப்புவமை இல்லாததுமாக இருப்பது தமிழே – விளக்குக.**
பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புவமை இல்லாததுமாக இருப்பது தமிழே ஆகும்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

6. **புற இருளைப் போக்குவது எது?**
மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை போக்குவது கதிரவனாகும்.

## சிறுவினா

1. **தன்னேர் இலாத தமிழின் சிறப்புக் குறித்துத் தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல் உணர்த்தும் செய்தி யாது ?**
   - இந்நில உலகில் வாழும் மக்கள் அனைவராலும் போற்றப்பட்டு உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை போக்குவது கதிரவன்.
   - குளிர்ச்சிப் பொருந்திய பொதிய மலையில் தோன்றி, சான்றோர்களால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதும் எதனோடும் ஒப்பிட்டுக் கூற முடியாததுமானது தமிழ்மொழி.
   - புற இருளைப் போக்கும் கதிரவனைப்போல அக இருளைப் போக்கும் தமிழ்மொழிக்கு நிகர் எம்மொழியும் இல்லை என்று தண்டியலங்கார உணர மேற்கோள் பாடல் உணர்த்துகின்றது.

2. **பொருள் வேற்றுமையணியைச் சான்று தந்து விளக்குக.**

**அணி இலக்கணம் :**

செய்யுளில் கவிஞர் இருவேறு பொருள்களுக்கிடையே ஒற்றுமையை முதலில் கூறியப்பின் ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.

இது வேற்றுமை அணியின் ஒரு பிரிவாகும்.

www.kalvikadal.in

**சான்று :**

**ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது**
**தன்னேர் இலாத தமிழ்.**

**அணிப்பொருத்தம் :**

கதிரவனும், தமிழ்மொழியும் மலையில் தோன்றுகின்றன என ஒப்புமையைக்கூறி, அவற்றுள் தமிழ்மொழிக்கு நிகராக வேறெந்த மொழியும் இவ்வுலகில் இல்லை என்று வேறுபடுத்திக் காட்டியதால் இப்பாடல் பொருள் வேற்றுமையணி ஆகும்

**கதிரவன் புற இருளை அகற்றும்;**
**தமிழ்மொழி அக இருளை அகற்றும்.**

**விளக்கம் :**

**கதிரவன்**

எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றும் கதிரவன் உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றும்.

**தமிழ்:**

குளிர்ச்சிப் பொருந்திய பொதிய மலையில் தோன்றிய தமிழ்மொழி மக்களின் அறியாமை என்னும் அக இருளை அகற்றும் அத்தமிழ்மொழிக்கு நிகராக வேறெந்த மொழியும் இல்லை.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





## 12 கற்பவை கற்றபின்

பக்கம்: 9

1. **வேற்றுமை அணி பயின்று வரும் இரு பாடல்களை விளக்கத்துடன் எழுதி வருக.**

பாடல் : 1

**அங்கண் விசும்பின் அகனிலாப் பாறிக்கும்**
**திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் - திங்கள்**
**மறுவாற்றும் சான்றோர் அஃதாற்றார் தெருமருத்து**
**தெய்வர் ஒரு மாசுறின்.** - *நாலடியார்*

இப்பாடலில், திங்களுக்கும் சான்றோருக்கும் முதலில் ஒப்புமைக்கூறி பின்னர் வேறுபடுத்தப்பட்டுள்ளது.

**அணி இலக்கணம் :**

இருபொருட்களுக்கு இடையே ஒப்புமையைக் கூறி அவற்றுள் ஒன்றிலிருந்து ஒன்று உயர்ந்ததாகக் கூறுவது வேற்றுமை அணி ஆகும்.

**விளக்கம்:**

திங்கள் தேயும், சான்றோன் தேயார் (மனநிலை மாறார்) என்பதேயாகும்.

பாடல் : 2

**அணி இலக்கணம் :**

இருபொருட்களுக்கு இடையே ஒப்புமையைக் கூறி அவற்றுள் ஒன்றிலிருந்து ஒன்று உயர்ந்ததாகக் கூறுவது வேற்றுமை அணி ஆகும்.

www.kalvikadal.in

**சான்று :**

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு - குறட்பா

**பொருத்தம்:**

தீயினால் உண்டான புண் உள் ஆறிவிடும்.
நாவினால் உண்டான புண் உள்ளத்தில் ஆறாத வடுவாக இருக்கும்.

2. **'தன்னேர் இலாத தமிழ்' என்னும் தலைப்பில் சொற்போரில் பங்கேற்பதற்கான ஐந்து நிமிட உரை உருவாக்குக.**

அனைவருக்கும் வணக்கம்!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் பழமையும், பெருமையும் கொண்டது. இலக்கண, இலக்கியங்கள், சிறுகாப்பியம், பெருங்காப்பியம், தொகை, பாட்டு, ஆற்றுபடை என எண்ணிலடங்கா நூல்கள் உருவாகி தமிழின் சிறப்பை உலகே தொழும் வகையில் அமைந்துள்ளது.

முதல் இடை கடைச்சங்கம் கொண்டது. தன்னிகரில்லா தன்மொழியாக விளங்கியது. தனித்து இயங்கும் ஆற்றல் கொண்டது, பிறமொழி உதவி இல்லாமல், இடர்ப்பாடுகள் இல்லாமல் இயங்கும் ஆற்றல் கொண்டது.

திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் கொண்ட என் தமிழின் உதவியில்லாமல் தெலுங்கு, கன்னடம், மலையாளம் இயங்க முடியாது. இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டு தனக்கு நிகர் இல்லாத மொழியாய் விளங்குகிறது.

நன்றி! வணக்கம்!

*******





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





இயல் 1
துணைப்பாடம்

# தம்பி நெல்லையப்பருக்கு

- பாரதியார்

## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

1. **பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.**

**மொழிப்பற்று :**

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல இனிதான மொழி எதுவுமில்லை என்று கூறிய பாரதி, சு. நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்திலும் அதனை உறுதிப்படுத்துகின்றார். நெல்லையப்பரிடம் அவர் கூறும் போது, 'நீ பிறமொழிகளை அறிந்திருந்தாலும், தமிழை வளர்ப்பதை கடமையாகக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றார். புதிய புதிய செய்திகளும் புதிய புதிய உண் மைகளும், புதிய புதிய இன்பமும் தமிழ்மொழியில் ஏற்றம் பெற வேண்டும்.

தமிழ்நாட்டில் வீதிகள் தோறும் தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் பெருக வேண்டும். அந்தப் பள்ளிகளில் எல்லாம் புதிய புதிய கலைகள் பயிற்சி பெற்று வளர வேண்டும். தாய்மொழியிலே கற்பதால் தமிழ் உணர்வு அதிகமாகும், தாய்நாட்டின் மீது பற்று ஏற்படும். வடநாட்டு மொழிகள் எல்லாம் அடைந்துள்ள வளர்ச்சியைப் பார்த்த பின்பாவது நாம் நம் தாய்மொழியாம் தமிழ்மொழியின் மீது பற்றுக்கொள்ள முயல வேண்டும். புதிய புதிய சிந்தனைகள் தமிழ்மொழியில் தோன்றல் வேண் டும் என்கிறார்.

**சமூகப்பற்று :**

சமூகத்தின் அவலமாக இருக்கின்ற ஆண் பெண் வேறுபாடு முற்றிலுமாக அழிய வேண்டும். ஆண் உயர்ந்தவன் பெண் அடிமை என்ற நிலை சமூக அவலமாகும். அந்நிலை மாறவே ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள்; அவற்றில் ஒன்றிலொன்று தாழ்வில்லை என்கிறார். பெண்ணைத் தாழ்த்தினால் சமூகமே சாபக்கேட்டிற்குள்ளாகும் என்பதை உணர்த்த பெண்ணைத் தாழ்த்தினவன், தன் கண்ணைக் குத்தியவனுக்குச் சமம் என்று ஆவேசத்துடன் கூறுகின்றார். பெண்ணை வீட்டிற்குள் அடைத்தவன் தன் கண்ணை இழந்த குருடன் போலப் பரிதவிப்பான் என்றும் கூறி, ஆணும் பெண்ணும் சமம் என்ற சமூக நீதியை வலியுறுத்துகின்றார்.

சமூகம் வளர்ச்சி அடைய தொழில் பெருகவேண்டும், வியாபாரம் சிறக்க வேண்டும், தொழிற்சாலைகள் வளர வேண்டும் என்கிறார். சமூக மாற்றம் காண சங்கீதம், சிற்பம், இயந்திரம், பூமி, வானம், இயற்கை சார்ந்த நூல்கள் ஆயிரம் ஆயிரமாகத் தாய்மொழியில் உருவாகிட வேண்டும். அதனைக் கற்று நம் தமிழ்ச்சமூகம் மாற்றம் பெற அனைவரும் எண்ணிட வேண்டும். அதற்குரிய சக்தியை அனைவரும் பெற்றிடவும் வேண்டுமென்று பாரதியார் சு. நெல்லையப்பருக்கு எழுதிய கடிதம் மூலம் தன் உள்ளக் கருத்தை வெளிப்படுத்துகின்றார்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



2. **“சொல்லோவியங்கள்” (கவிதை) என்னும் நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை ஒன்றை எழுதுக.**

## சொல்லோவியங்கள்

**கவிதை நூல் வெளியீட்டு விழா**

**இடம்** : **அரசு மேனிலைப்பள்ளி, விழுப்புரம்.**

**நாள்** : **19.06.2019, புதன்கிழமை.**

**நேரம்** : **பிற்பகல் 3 மணி**

| | |
|---|---|
| தமிழ்த்தாய் வாழ்த்து | : மாணவர்கள் |
| வரவேற்புரை | : திரு. **ச. செந்தில்குமார்** (தலைமையாசிரியர், அரசு மேனிலைப்பள்ளி, விழுப்புரம்) |
| நூல் அறிமுக உரை | : **தி.ப. பிறைசூடன்** அவர்கள் (எழுத்தாளர்) |
| நூல் வெளியிட்டு வாழ்த்துரை | : திருமிகு. **வ. சரவணன்** அவர்கள், (மாவட்டக் கல்வி அலுவலர், விழுப்புரம்) |
| முதல் பிரதியைப் பெற்றுக்கொள்பவர் | : திருமிகு. **தா. அண்ணாமலை** அவர்கள் (தொழிலதிபர் மற்றும் சமூக ஆர்வலர்) |
| ஏற்புரை | : திரு. கவிஞர். **த. தமிழரசன்** அவர்கள் (முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேனிலைப்பள்ளி, விழுப்புரம்.) |
| நன்றியுரை | : திரு. **இரா. கேசவன்** (உதவித் தலைமையாசிரியர், அரசு மேனிலைப்பள்ளி, விழுப்புரம்) |

தேசிய கீதம்

### நன்றியுரை

**“நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல**
**தன்றே மறப்பது நன்று”**

என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கு ஏற்ப எனக்கு வாய்ப்பளித்த நல்ல உள்ளங்களுக்கு மாலை வணக்கம்.

எப்பொழுதெல்லாம் நம் பேனா தலை குனிகிறதோ அப்பொழுதெல்லாம் நீ வாழ்வில் தலை நிமிர்வாய் என்றபடி தன் பேனாவைத் தலைகுனிய வைத்து இந்த அவையில் தலை நிமிர்ந்து இருக்கும் தமிழாசிரியருக்கு நன்றி. இவர் சொல்லோவியங்கள் என்ற கவிதை நூலை அழகுபட செதுக்கியுள்ளார்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

இவர் செலுத்தியதை வர்ணம் தீட்டி குடமுழுக்கு விழா செய்து நம் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கும் நூலை வெளியிட்டு வாழ்த்துறை வழங்கிய மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களுக்கு நன்றி. இவ்வுலகில் பிறந்து இறந்து எந்தவித அறிமுகமும் இல்லாமல் செல்கின்றனர். அதற்கு மாறாக பிறையைத் தலையிலே சூடிய சிவனைப் போல் இவ்விழாவிற்கு வருகைத்தந்து நூல் அறிமுகவுரை தந்த ஐயா பிறைசூடனுக்கு நன்றி. எந்த ஒரு செயலும் இன்றே தொடங்க இறையருள் தேவை அதோடு செல்வமும் தேவை என்பதற்கு ஏற்ப செல்வத்தின் நாயகனாம் தொழிலதிபர் அண்ணாமலை அவர்களின் கரங்களால் முதல் பிரதியைப் பெற்று துவங்கி வைத்தமைக்கு நன்றி, இவ்விழா நடைபெற முழு காரணமாக விளங்கிய தலைமை ஆசிரியர், ஆசிரிய நண்பர்கள், மாணவர்கள், ஏனைய உறவுகளுக்கு விழாக்குழு மூலம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி ! வணக்கம் !

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **தமிழ்நாட்டில் வீதி தோறும் இருக்க வேண்டியது எது எனப் பாரதியார் விரும்புகிறார்**

அ) ஆலயம் ஆ) தொழிற்சாலை
இ) பள்ளிக்கூடம் ஈ) இவற்றில் எதுவுமில்லை [விடை: இ]

2. **பாரதியார் நெல்லையப்பருக்கு எழுதிய கடிதங்களைப் பதிப்பித்தவர்**

அ) இளசைமணி ஆ) ரா.அ. பத்மநாபன்
இ) கி. ராஜநாராயணன் ஈ) கவிகேசரி சாமி தீட்சிதர் [விடை: ஆ]

3. **கருத்து 1 : ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள் என்றார் பாரதி.**
**கருத்து 2 : பரலி. சு. நெல்லையப்பர் பாரதியின் பாப்பாப்பாட்டைப் பதிப்பித்தவர்.**

அ) இரண்டு கருத்தும் தவறு ஆ) இரண்டு கருத்தும் சரி
இ) கருத்து 1 தவறு, 2 சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு [விடை: அ]

4. **சரியானதைத் தேர்க.**

அ) முரசுப்பாட்டு - குந்திகேசவர்
ஆ) நெல்லைத் தென்றல் - வ.உ.சிதம்பரனார்
இ) பாரதி கடிதங்கள் - ரா.அ. பத்மநாபன்
ஈ) வம்சமணி தீபிகை - சு. நெல்லையப்பர் [விடை: இ]

5. **சரியானதைத் தேர்க.**

அ) கவிகேசரி சாமி தீட்சிதர் - பாரதி கடிதங்கள்
ஆ) இளசைமணி - சூரியோதயம்
இ) கண்ணன்பாட்டு - ரா.அ. பத்மநாபன்
ஈ) வ.உ. சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாறு - சு. நெல்லையப்பர் [விடை: ஈ]

6. **பொருந்தாததைத் தேர்க.**

அ) இளசை மணி - வம்சமணி தீபிகை நூலின் மறுமதிப்பு
ஆ) வம்சமணி தீபிகை - கவிகேசரி சாமி தீட்சிதர்
இ) பரலி சு. நெல்லையப்பர் - ஆசிரியர்
ஈ) பாரதி வாழ்த்து - பரலி சு. நெல்லையப்பர் [விடை: இ]





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

7. **பொருத்துக.**

அ) வம்சமணி தீபிகை - 1. சு. நெல்லையப்பர்
ஆ) பாரதி கடிதங்கள் - 2. ரா.சு. பத்மநாபன்
இ) நெல்லைத் தென்றல் - 3. கவிகேசரி சாமி தீட்சிதர்

அ) 1, 2, 3 ஆ) 3, 2, 1 இ) 2, 3, 1 ஈ) 1, 3, 2 **[விடை: ஆ]**

8. **பொருத்துக.**

அ) தமிழ் அழகியல் - 1. பரலி சு. நெல்லையப்பர்
ஆ) நிலவுப்பூ - 2. தி.சு. நடராசன்
இ) கிடை - 3. சிற்பி. பாலசுப்பிரமணியம்
ஈ) உய்யும் வழி - 4. கி. ராஜநாராயணன்

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1 **[விடை: ஈ]**

9. **பாரதி நெல்லையப்பருக்குக் கடிதம் எழுதிய இடம், நாள்**

அ) புதுச்சேரி, 19 ஜூலை 1915 ஆ) நெல்லை, 14 ஜீலை 1914
இ) கடலூர், 18 ஆகஸட் 1914 ஈ) காரைக்கால், 19 ஜீலை 1915 **[விடை: அ]**

10. **நெல்லையப்பரை யார் காத்திட வேண்டும் என்கிறார் பாரதி?**

அ) சிவன் ஆ) முருகன் இ) பராசக்தி ஈ) துர்க்கை **[விடை: இ]**

11. **நெல்லையப்பர் எதனைக் கடமையாகக் கொள்ள வேண்டும் என்று பாரதி கூறினார்?**

அ) பெற்றோரைக் காப்பதை ஆ) விடுதலைக்குப் போராடுவதை
இ) தமிழ் வளர்ப்பதை ஈ) சமூக இழிவை களைவதை **[விடை: இ]**

www.kalvikadal.in

12. **'தம்பி-உள்ளமே உலகம்' என்று யார் யாருக்குக் கூறியது?**

அ) அறிஞர் அண்ணா, கலைஞருக்கு ஆ) பாரதி, நெல்லையப்பருக்கு
இ) மு.வ., இளைஞர்களுக்கு ஈ) திரு.வி.க., தமிழர்களுக்கு **[விடை: ஆ]**

13. **உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ-என்பதில் 'உனக்கு' என்பது யாரை எதைக் குறிக்கிறது?**

அ) தமிழை ஆ) நெல்லையப்பரை
இ) குயிலை ஈ) இளைஞர்களை **[விடை: ஆ]**

14. **பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது-என்று கடிதம் எழுதியவர்**

அ) நெல்லையப்பர் ஆ) பாரதியார் இ) வாணிதாசன் ஈ) பாரதிதாசன் **[விடை: ஆ]**

15. **நெல்லையப்பரைப் பாரதி ................ என்று கூவு என்கிறார்.**

அ) வாழ்க வாழ்க ஆ) தொழில்கள் தொழில்கள்
இ) மனிதர்கள் மனிதர்கள் ஈ) வெல்க வெல்க **[விடை: ஆ]**

16. **ஒருயிரின் இரண்டு தலைகள் என்பன**

அ) ஆணும் பெண்ணும் ஆ) அறிவும் அழகும்
இ) வாழ்வும் தாழ்வும் ஈ) பிறப்பும் இறப்பும் **[விடை: அ]**

17. **தமிழ்ப் பள்ளிக் கூடங்களில் ................ எல்லாம் பயிற்சிப் பெற்று வளர வேண்டும் என்கிறார் பாரதி.**

அ) நவீன கலைகள் ஆ) விளையாட்டு
இ) பாரம்பரிய கலைகள் ஈ) அறிவியல் கல்வி **[விடை: அ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

18. வம்சமணி தீபிகை என்னும் நூலை எழுதியவர் ................ வெளியிட்ட ஆண்டு ................
அ) கவிகேசரி சாமி தீட்சிதர், 1879 ஆ) முத்து சாமி தீட்சிதர், 1879
இ) இளசைமணி, 2008 ஈ) சீனி விசுவநாதன், 2004 [விடை: அ]

19. வம்சமணி தீபிகை என்னும் நூல் யாரைப் பற்றியது?
அ) சோழ மன்னர்களின் பரம்பரை வரலாறு
ஆ) எட்டையபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு
இ) ஆங்கில ஆட்சியாளரின் அடக்குமுறைகளைக் கூறுவது
ஈ) பாரதியின் வாழ்ககை வரலாற்றைக் கூறுவது [விடை: ஆ]

20. வம்சமணி தீபிகை நூலின் பதிப்பைத் திருத்தி வெளியிட ஆசை கொண்டு .6.8.1919இல் ஆட்சி செய்த வெங்கடேசர எட்டப்பருக்குக் கடிதம் எழுதியவர் ................
அ) பாரதியார் ஆ) சீனி. விசுவநாதன்
இ) இளசைமணி ஈ) கவிகேசரி சாமி தீட்சிதர் [விடை: அ]

21. வம்சமணி தீபிகை நூலின் மூலவடிவம் மறுபதிப்பாக வெளியிட்டவர் ................ ஆண்டு ................
அ) கவிகேசரி சாமி தீட்சிதர், 1879 ஆ) பாரதியார், 1919
இ) இளசைமணி, 2008 ஈ) சீனி. விசுவநாதன், 1921 [விடை: இ]

22. பாரதி தனது பதினைந்து வயதில் எட்டயபுரம் அரசருக்கு எழுதிய கவிதைக் கடிதத்தில் வேண்டப்படும் செய்தி
அ) ஆங்கில அரசை அகற்ற வேண்டி ஆ) பாரதி கல்வி கற்க உதவி வேண்டி
இ) தன் நண்பன் கல்வி கற்க உதவி வேண்டி ஈ) எட்டயப்புரத்தில் கவியரங்கம் நடத்த வசதி வேண்டி
www.kalvikadal.in
[விடை: ஆ]

23. பாரதியின் கடைசிக் கடிதம் யாருக்கு எழுதப்பட்டது?
அ) எட்டயபுரம் அரசருக்கு ஆ) நெல்லையப்பருக்கு
இ) குத்திகேசவருக்கு ஈ) சீனி. விசுவநாதனுக்கு [விடை: இ]

24. சூரியோதயம், கர்மயோகி ஆகிய இதழ்களில் துணையாசிரயாக இருந்தவர்
அ) நெல்லையப்பர் ஆ) கண்ணதாசன்
இ) பாரதிதாசன் ஈ) சீனி. விசுவநாதன் [விடை: அ]

25. பாரதி நடத்திய இதழ்களில் துணையாசிரியாராக இருந்தவர்
அ) நெல்லையப்பர் ஆ) கண்ணதாசன்
இ) இளசை மணி ஈ) இளசை சுந்தரம் [விடை: அ]

26. பாரதியின் பல்வேறு பாட்டுகளை (கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு உள்ளிட்டவை) பதிப்பித்தவர்
அ) நெல்லையப்பர் ஆ) சீனி. விசுவநாதன்
இ) இளசை மணி ஈ) இளசை சுந்தரம் [விடை: அ]

27. நெல்லைத்தென்றல், பாரதி வாழ்த்து, உய்யும் வழி ஆகிய கவிதை நூல்களை எழுதியவர்
அ) சீனி. விசுவநாதன் ஆ) நெல்லையப்பர்
இ) இளசை மணி ஈ) இளசை சுந்தரம் [விடை: ஆ]

28. வ. உ. சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்
அ) சீனி. விசுவநாதன் ஆ) இளசை மணி
இ) இளசை சுந்தரம் ஈ) நெல்லையப்பர் [விடை: ஈ]



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

29. **லோகோபகாரி, தேசபக்தன் ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் பிறகு ஆசிரியராகவும் பணியாற்றியவர்**

அ) சீனி. விசுவநாதன் ஆ) இளசை மணி

இ) இளசை சுந்தரம் ஈ) நெல்லையப்பர் **[விடை: ஈ]**

## கற்பவை கற்றபின்

பக்கம்: 13

1. **பாரதியின் வாழ்வினைக் காலக்கோடாக உருவாக்குக.**




www.kalvikadal.in

2. **காலத்தை வென்ற மகாகவியான பாரதிக்குக் கற்பனைக்கடிதம் ஒன்றினை எழுதுக.**

தூத்துக்குடி,
18 ஜூலை 2019.

முறுக்கிய மீசையும், முறைத்த பார்வையும், முண்டாசுக் கட்டுக்கும் சொந்தகாரனே, செந்தமிழின் எழுச்சியே வணக்கம்.

உனது பொன் எழுத்துகளால் தமிழ் அன்னைக்கு வைரக்கிரீடம் சூட்டி மகிழ்ந்தாய்.

ஆனால், கடைசிவரை சாதாரண தலைப்பாகையினை நீ அணிந்திருந்தாய் என எத்தனைப் பேருக்குத் தெரியும்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in





பாதகம் செய்பவரைக் கண்டால் நீ பயங்கொள்ளலாகாது பாப்பா, மோதி மிதித்துவிடு பாப்பா, அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா என்று பாடினாயே பாரதி. இன்றைய பாலியல் வன்கொடுமையை முன்னரே சாடினாயே பாரதி.

பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கைப் பெற்றுவிட்டபோதிலும் அச்சமில்லை அச்சமில்லை என்று சுதந்திரத்தின் மேன்மையை மக்களின் மனதில் கொடியேற்றி வைத்தவன் நீ.

தமிழில் ஓர் எழுத்துதான் ஆய்த எழுத்து. ஆனால் மற்ற 246 எழுத்துகளையும் ஆயுதமாக்கி வெள்ளையனை விரட்ட விடுதலைக் கவிகளைப் பாடி வேங்கையென விரட்டியவன் நீ.

என் உள்ளமெனும் பெருங்கோவிலில் வீற்றிருக்கிறாய். என்றொரு நாளாவது உன்னோடு ஒரே மேடையில் கவிபாட நான் விரும்புகின்றேன்.

நீவிர் சம்மதித்தால் வருகின்ற தமிழ்ப்புத்தாண்டு அன்று நாம் இருவரும் "தமிழே! உனக்குத் தலைவணங்குகிறோம்" என்ற தலைப்பில் ஒரு கவிதையை பொதிகை தொலைக்காட்சியில் பாடுவோம். உன் பதிலை உடன் எதிர்பார்க்கும் அன்பு நண்பன்.

இப்படிக்கு,

பாரதிநேசன்.

✸✸★★★✸✸

www.kalvikadal.in







Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







# இயல் 1 தமிழாய் எழுதுவோம்

## இலக்கணம்

## இலக்கணத் தேர்ச்சி கொள்

பக்கம்: 17

1. **பிழையான தொடரைக் கண்டறிக.**
அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.
ஆ) மலை மீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.
ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின. [விடை: இ]

2. **பேச்சுத் தமிழில் அமைந்த தொடரை தேர்க!**
அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.
ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன. [விடை: அ]

3. **முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும் .**

**முடிந்தால் தரலாம் :**
முடிந்தால் - கொடுக்கும் எண்ணம் (இயன்றால்)
ஒரு பொருளைக் கொடுக்க முடிந்தால் கொடுக்கலாம் என்ற பொருளைத் தருகின்றது.
உன்னிடம் உள்ள பொருளைக் கொண்டு ஏழைகளுக்கு உதவ முடிந்தால் தரலாம்.

**முடித்தால் தரலாம் :**
முடித்தால் - செயல் முடிந்த பின்
தரப்பட்டுள்ள வேலையை முடித்து விட்டேன் என்றால் தரலாம் என்ற பொருளைத் தருகின்றது.
வீட்டின் திறவுகோலை வேலைகளை முடித்தால் தரலாம்.

4. **தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை ?**

- எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும். ந, ண, ன / ல, ள / ழ, ற, ர ஒலிப்பு வேறுபாடு தெரிந்து ஒலிக்க வேண்டும்.
- இவ்வெழுத்துக்கள் வரும் முறையையும் அவை ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தையும் அறிந்து கொள்வது இன்றியமையாத ஒன்றாகும். எழுதும் போது தொடக்கத்தில் சில காலம் வாய்விட்டோ அல்லது மனத்துக்குள் உச்சரித்தபடியோ எழுதப்பழகுவது நல்லது.
- வேகமாக எழுத முயல்வது பிழைக்கு வழிகோலும், எனவே நிதானமாக எழுதுவது நல்லது.
- கெ, கே, கொ, கோ போன்ற கொம்புடைய குறில் நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுத வேண்டும்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in





## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. வேற்றுமைப் புணர்ச்சியில் லகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் லகரம் எவ்வாறு திரியும்
அ) இயல்பாகப் புணரும் ஆ) லகரம் டகரமாகும்
இ) லகரம் னகரமாகும் ஈ) லகரம் றகரமாகும் [விடை: ஈ]

2. வேற்றுமைப் புணர்ச்சியில் ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் எவ்வாறு திரியும்
அ) ளகரம் லகரமாகும் ஆ) ளகரம் னகரமாகும்
இ) ளகரம் டகரமாகும் ஈ) இவற்றில் எதுவுமில்லை [விடை: ஈ]

3. எழுதும்போது வரும் பிழைகளை ................ வகையாகக் கொள்ளலாம்.
அ) 3 ஆ) 4 இ) 5 ஈ) 6 [விடை: ஆ]

4. உயிரெழுத்துகள்
அ) 10 ஆ) 12 இ) 30 ஈ) 18 [விடை: ஆ]

5. உயிரெழுத்துகளின் வகை
அ) 2 ஆ) 4 இ) 12 ஈ) 18 [விடை: அ]

6. மெய்எழுத்துகள்
அ) 3 ஆ) 18 இ) 12 ஈ) 30 [விடை: ஆ]

www.kalvikadal.in

7. மெய்எழுத்துகளின் வகை
அ) 3 ஆ) 12 இ) 18 ஈ) 30 [விடை: அ]

8. உயிர் மெய்யெழுதுக்கள்
அ) 18 ஆ) 126 இ) 216 ஈ) 247 [விடை: இ]

9. உயிர் மெய்க்குறில்
அ) 90 ஆ) 126 இ) 247 ஈ) 216 [விடை: அ]

10. உயிர் மெய் நெடில்
அ) 90 ஆ) 126 இ) 247 ஈ) 216 [விடை: ஆ]

11. தமிழ் எழுத்துகள் மொத்தம்
அ) 90 ஆ) 246 இ) 216 ஈ) 247 [விடை: ஈ]

12. ந, ண, ன, ற, ர, ல,ள,ழ - இவ்வெட்டு எழுத்துகளில் சொல்லின் தொடக்கமாக வரும் எழுத்து
அ) ர ஆ) ல இ) ந ஈ) ற [விடை: இ]

13. சொல்லின் இறுதியில் வராத எழுத்தைக் கண்டறிக.
அ) ர ஆ) ல இ) ந ஈ) ற [விடை: இ]

14. ................ சொல்லின் தொடக்கமாக மெய்யெழுத்துகள் வருவதில்லை.
அ) வடமொழியில் ஆ) தமிழில் இ) ஆங்கிலத்தில் ஈ) இந்தியில் [விடை: ஆ]

15. க்ரீடம், ப்ரியா - என்பவை ................ மொழிச் சொற்கள்.
அ) வட ஆ) அரபு இ) தமிழில் ஈ) தெலுங்கு [விடை: அ]





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

16. **தமிழ்ச் சொல் ................ மெய்யோடு முடியாது.**

அ) வல்லின ஆ) மெல்லின இ) இடையின ஈ) உயிர் [விடை: அ]

17. **ட், ற் என்னும் மெய்களுக்குப் பிறகு அவ்வெழுத்து வரிசைகளும் ................ என்னும் வரிசையே வரும்.**

அ) க, ச, ப ஆ) ன, ண, ந இ) ர, ற ஈ) ப. ம. ய [விடை: அ]

18. **சரியான கூற்றினைக் கண்டறிக.**

i) வல்லின மெய்கள் ஈறொற்றாய் வாரா
ii) ட், ற் என்னும் மெய்களை அடுத்து மெய்கள் வருவதில்லை
iii) க், ச், த்,ப, ஆகியவற்றின்பின் அவற்றின் அவ்வெழுத்து வரிசைகளே வரும்

அ) i, ii - சரி ஆ) ii, iii - சரி இ) i, iii - சரி ஈ) மூன்றும் சரி [விடை: ஈ]

19. **சொல்லின் முதலில் வராத எழுத்துகள்**

அ) ட, ற ஆ) த, ந இ) ப, ம ஈ) க, ச [விடை: அ]

20. **ஆய்த எழுத்து சொல்லின் ................ வரும்.**

அ) முதலில் ஆ) இடையில் இ) கடைசியில் ஈ) ஈற்றில் [விடை: இ]

21. **மெல்லின எழுத்துகளில் சொல்லின் தொடக்கமாக வராதவை**

அ) ங, ஞ ஆ) ங, ம இ) ண, ன ஈ) ந, ம [விடை: ஈ]

22. **................ என்னும் எழுத்துகளுக்குப் பின் வியங்கோள் வினைமுற்று/கள் விகுதி/வல்லினத்தில் தொடங்கும் சொற்கள் வரும்போது இயல்பாய் நிற்கும்.**

அ) ய், ர், ல், ழ், ள் ஆ) ற், ட் இ) ங. ஞ, ண, ர. ம ஈ) க், ச் ட், த், ப் [விடை: அ]

www.kalvikadal.in

23. **................ ஒற்றுகள் மட்டுமே ஈரொற்றாய் வரும்.**

i) ய ii) ர iii) ழ

அ) மூன்றும் சரி ஆ) மூன்றும் தவறு இ) i, iii - சரி ஈ) i, ii - சரி [விடை: அ]

24. **தனிக்குறிலை அடுத்து ................ ஒற்றுகள் வாரா.**

அ) க, ச ஆ) ர, ழ இ) த, ப ஈ) க, ப [விடை: ஆ]

25. **லகரத்தைத் தொடர்ந்து மெல்லினம்வரின் லகரம் ................ திரிவதுண்டு.**

அ) னகரமாய்த் ஆ) ணகரமாய்த் இ) டகரமாய்த் ஈ) மகரமாய்த் [விடை: அ]

26. **ளகரத்தைத் தொடர்ந்து வல்லினம்வரின் ளகரம் ................ திரிவதுண்டு.**

அ) னகரமாய்த் ஆ) ணகரமாய்த் இ) டகரமாய்த் ஈ) றகரமாய்த் [விடை: இ]

27. **ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம்வரின் ளகரம் ................ திரிவதுண்டு.**

அ) னகரமாய்த் ஆ) ணகரமாய்த் இ) டகரமாய்த் ஈ) றகரமாய்த் [விடை: ஆ]

28. **சரியானவற்றைக் கண்டறிக.**

i) இயக்குநர் ii) இயக்குனர் iii) உறுப்பினர் iv) வீட்டினர்

அ) i - சரி ஆ) ii, iii - சரி
இ) iv - சரி ஈ) ii - மட்டும் தவறு [விடை: ஈ]



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







## குறுவினா

1. **எழுதும்போது ஏற்படும் பிழைகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?**
   - எழுத்துப்பிழை.
   - சொற்பொருட்பிழை.
   - சொற்றொடர்ப் பிழை.
   - பொதுவான பிழைகள் சில என வகைப்படுத்தலாம்.

2. **எழுத்துப் பிழைக்கு முதன்மையான காரணம் யாது-**
   - ஏல்லா இடங்களிலும் பேச்சுத்தமிழை எழுத முடியாது.
   - பேசுவதைப் போலவே எழுத எண்ணுவதே எழுத்துப்பிழைக்கு முதன்மையான காரணம் எனலாம்.

3. **எந்நான்கை உள்ளடக்கியது ஒரு மொழியின் இலக்கணம் என்று தமிழ்நடைக் கையேடு குறிப்பிடுகிறது?**

   ஒரு மொழியில் அடிப்படை அறிவு என்பது அந்த மொழியில் உள்ள எழுத்துகளையும் சொற்களையும் அவற்றின் பொருளையும் வாக்கிய அமைப்புகளையும் சேர்ந்திருப்பதே. மேலே குறிப்பிட்ட நான்கையும் உள்ளடக்கியது ஒரு மொழியின் இலக்கணம் என்கிறது தமிழ் நடைக் கையேடு.

4. **சொல்லில் ஆய்த எழுத்தின் நிலை குறித்தெழுதுக.**
   - ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
   - தனிச்சொல்லாயின் மூவெழுத்தாகவும், தனிக்குறிலை அடுத்தும் வரும்.

   **சான்று:** அஃது, எஃகு, கஃசு.

www.kalvikadal.in

5. **தனிக்குறிலையடுத்து ரகரம் வரின் எவ்வாறு எழுத வேண்டும்?**

   தனிக்குறிலையடுத்து ரகரம் வரின் அதனைத் தமிழ் இயல்புக்கேற்பத் திருத்தி எழுத வேண்டும்.
   **சான்று:** நிர்வாகம் - நிருவாகம்; கர்மம் - கருமம்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 17

1. **மயங்கொலி எழுத்துகள் (ண, ந, ன, ல, ழ, ள, ர, ற) அமைந்த சொற்களைத் திரட்டி, பொருள் வேறுபாடு அறிந்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

*மாணவச் செல்வங்களே,*

இன்று உங்களுக்கு மயங்கொலி எழுத்துகள் அமைந்த சொற்களையும், அதன் பொருள் வேறுபாட்டினையும் கற்பிக்கப் போகிறேன்.

**ராமு** : ணகர னகர வேறுபாடுகளை விளக்குங்கள் ஐயா.

அண்ணம் - மேல்வாய்

அன்னம் - உணவு / சோறு

ட - பக்கத்தில் வரும் ண - இதை டண்ணகரம் என்று அழைப்பதுண்டு.

அன்னத்தில், ற - பக்கத்தில் வரும் ன - இதை றன்னகரம் என்று அழைப்பதுண்டு.

**சோமு** : ஐயா இதன் பயன்பாடுகள் பற்றிக் கூறுங்கள் ஐயா.

இதன் பயன்பாடுகள் : ட - ண வும், ற - பக்கத்தில் ன வும் வரும் எனப்புரிந்தால் எழுத்துப்பிழைகள் மிகக் குறையும்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

| | | |
|---|---|---|
| மன்றம் | - | அவை |
| மண்டபம் | - | மக்கள் கூடுமிடம் |
| குன்று | - | சிறிய மலை |
| குண்டு | - | உருண்டை (வடிவம்) |

இவை போன்று வேறுபாடு கண்டு பிழைகளைக் களையலாம்.

**ராமு** : இன்னுமொரு விளக்கம் தேவை. ல-ழ வேறுபாடுகள் பற்றியும் விளக்கம் தேவை ஐயா.

**ல-ழ வேறுபாடு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கலை | - | நுட்பம் / அறிவு | கழை | - | மூங்கில் |
| மலை | - | குன்று | மழை | - | வான்மழை |
| தலை | - | உடல் உறுப்பு | தழை | - | வளர் / இலை |
| விலை | - | மதிப்பு | விழை | - | விருப்பம் |

இவ்வாறான மயங்கொலிச் சொற்களை பேசுவது மற்றும் எழுதுவதன் மூலம் பிழை தவிர்க்கலாம்.

**ராமு** : மிக்க நன்றி ஐயா, தெளிவாகப் புரிந்து கொண்டேன் ஐயா.

ர-ள மயங்கொலிச் சொற்களுக்கு எ.கா. தாருங்கள் ஐயா.

**ர - ற வேறுபாடு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மரம் | - | தாவரம் | மறம் | - | வீரம் |
| அரம் | - | கருவி | அறம் | - | தருமம் |

www.kalvikadal.in

இவ்வாறான மயங்கொலிச் சொற்களைப் பேசுவது மற்றும் எழுதுவதன் மூலம் பிழை தவிர்க்கலாம்.

**சோமு** : ஐயா, கடைசியாக லகர னகர வேறுபாட்டையும் கூறுங்கள் ஐயா.

**ல ள வேறுபாடு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கலை | - | அறிவு/ நுட்பம் | | | |
| களை | - | பயிரின் நடுவே வளர்வது / ஆடை களைதல் | | | |
| கோல் | - | குச்சி | கோள் | - | செவ்வாய் (கோள்) |
| வலம் | - | வலப்புறம் | வளம் | - | செழிப்பு |

இவ்வாறான மயங்கொலிச் சொற்களைப் பேசுவது மற்றும் எழுதுவதன் மூலம் பிழை தவிர்க்கலாம் மாணவர்களே.

மாணவர்களே மற்றொரு வகுப்பில் சந்திக்கலாம்.

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 19

### சான்றோர் சித்திரம்



ஆறுமுக நாவலர்
1822 - 1879

வழக்கு ஒன்றில் சாட்சி அளிக்க நீதிமன்றத்திற்குத் தமது மாணவர்களுடன் வந்திருந்தார் தமிழறிஞர் ஒருவர். அக்கால ஆங்கிலேய நீதிபதிகளுக்கு மொழிபெயர்த்துச் சொல்ல அதிகாரிகள் இருப்பார்கள். தமிழறிஞர், சாட்சியத்தை ஆங்கிலத்திலேயே சொல்ல ஆரம்பிக்க, குறுகிய மனம் கொண்ட நீதிபதி அதை ஏற்றுக்கொள்ள மனம் ஒப்பாமல் தமிழில் கூறச் சொல்லி உத்தரவிட்டார். அவர்


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

உடனே 'அஞ்ஞான்று எல்லி எழ நானாழிப் போதின்வாய் ஆழிவரம் பனைத்தே காலேற்றுக் காலோட்டப் புக்குழி' என்று துவங்கினார். மொழிபெயர்ப்பாளர் திணறிப் போனார். கோபமுற்ற நீதிபதி ஆங்கிலத்தில் பேசக் கூறி உத்தரவிட அவர் மறுத்துத் தமிழிலேயே வறினார். அவரது மாணவர் மற்றவர்களுக்குப் புரியும்படி விளக்கினார். 'சூரியன் தோன்றுவதற்கு நான்கு நாழிகை முன்னர் கடற்கரை ஓரம் காற்று வாங்கச் சிறுநடைக்குப் புறப்பட்டபோது' என்பது அவர் கூறியதற்குப் பொருள். இத்தகைய மொழித்திறன் கைவரப்பெற்றவர்தான் ஆறுமுக நாவலர்.

'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் புகழப்படும் ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் எனும் மும்மொழிப் புலமை பெற்றவர். தமிழ்நூல் பதிப்பு, உரைநடை ஆக்கம், பாடசாலை நிறுவுதல், அச்சுக்கூடம் நிறுவுதல், கண்டன நூல்கள் படைத்தல், சைவ சமயச் சொற்பொழிவு எனப் பன்முக ஆளுமை பெற்றவர்.

திருக்குறள் பரிமேலழகர் உரை, சூடாமணி நிகண்டு, நன்னூல்-சங்கர நமச்சிவாயர் விருத்தியுரை என்று பல நூல்களைப் பதிப்பித்தார். இலக்கண நூல்கள், பூமி சாஸ்திரம் முதலான பாட நூல்கள் அவரால் ஆக்கப்பட்டன, புராண நூல்களை வசனமாகி எழுதி அதனை அனைவரும் படிக்கும் எளிய வடிவமாக மாற்றினார். தமது இல்லத்தில் அச்சுக்கூடம் நிறுவிப் பல நூல்களை அச்சிட்டார். திருவாவடுதுறை ஆதினம் இவருக்கு 'நாவலர்' பட்டம் வழங்கியது. பெர்சிவல் பாதிரியார் விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்க்கவும் இவர் உதவினார்.

**வினாக்கள்:**

1. **'எல்லி' என்பதன் பொருள் என்ன?**
2. **ஒரு நாழிகை என்பது எவ்வளவு நேரம்?**
3. **ஆழி, கால் பொருள் தருக.**
4. **ஆறுமுக நாவலர் எவ்வாறு புகழப்பட்டார்? அவர் அறிந்திருந்த மொழிகள் யாவை?**
5. **பெற்றவர் - இலக்கணக்குறிப்புத் தருக.**
6. **விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?**
7. **ஆறுமுக நாவலரின் இயற்பெயர் என்ன? 'நாவலர்' என்ற பட்டத்தை யார் வழங்கினார்?**
8. **'வந்திருந்தார்' இரு பொருள்படும்படி வாக்கியம் அமைக்க.**

www.kalvikadal.in

**விடைகள்:**

1. சூரியன்.
2. 24 நிமிடம்.
3. ஆழி - மோதிரம், கடல்.
   கால் - உடல்உறுப்பு, காற்று.
4. 'வசனநடை கைவந்த வள்ளலார்' எனப் புகழப்பட்டார். தமிழ், வடமொழி, ஆங்கிலம் என்னும் மும்மொழிப் புலமை பெற்றவர்.
5. பெற்றவர் - வினையாலணையும் பெயர்.
6. பெர்சிவல் பாதிரியார்.
7. இயற்பெயர் - ஆறுமுகம்.
   நாவலர் பட்டம் - திருவாவடுதுறை ஆதீனம் வழங்கியதாகும்.
8. வந்திருந்தார் : உடல் நலம் சரியில்லாத என் தந்தையைக் காண என் மாமா நீண்ட நாள் கழித்து வந்தார்.
   வந்து இருந்தார் : பொதுக்கூட்டம் காண பல மைல் தூரம் நடந்த குமரன் கால் வலியால் வந்து இருந்தார்.


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## தமிழாக்கம் தருக

1. Learning is a treasure that will follow its owner everywhere. (Chinese Proverb).
   கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
2. A new language is a new life. (Persian Proverb).
   புதிய மொழி புதிய வாழ்க்கை.
3. If you want people to understand you, speak their language. (African Proverb).
   பிறர் உன்னைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் அவர் மொழியில் பேசு.
4. Knowledge of languages is the doorway to wisdom. (Roger Bacon).
   மொழிகளின் அறிவு ஞானத்தின் வழித்தடம்.
5. The limits of my language are the limits of my world. (Willgenstin).
   என் மொழியின் எல்லை என் உலகத்தின் எல்லை.

## இலக்கிய நயம் பாராட்டுக

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி! - ***கண்ணதாசன்***

www.kalvikadal.in

**முன்னுரை :**

இப்பாடலைப் பாடியவர் கவியரசு கண்ணதாசன் ஆவார். புகழ்பெற்ற தமிழ்த்திரைப்படப் பாடலாசிரியரும் கவிஞரும் ஆவார். தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்தவர். நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள் எழுதியுள்ளார். சாகித்ய அகாதமி விருது பெற்றவர்.

**திரண்ட கருத்து :**

தமிழன்னையானவள், மூன்று சங்கங்கள் அமைய காரணமானவள். முச்சங்கங்களிலும் நல்ல அனுபவமும் நல்ல அறிவும் கொண்ட புவர்களை ஒன்றாகக் கூட்டியவள். அச்சங்கத்திற்குள் அளவிடமுடியாத பொருள்களைக் கூட்டி நீ உன்னுடைய சொற்களை அதிகரித்து அதே நேரத்தில் சுவை மிக்க கவிதைகளை எல்லாம் ஒரே இடத்தில் கூடிவருமாறு புதுமைகள் எல்லாம் அமைந்த பெருமகளே ! தமிழன்னையே !

**தொடை நயம் :**

**மோனை :**

**காட்டுக்கு யானை**
**பாட்டுக்கு மோனை**

முதலெழுத்து ஒன்றி வருவது மோனையாகும்.

**சான்று:**

| | | | |
|---|---|---|---|
| **மு**ச்சங்கங் | **அ**ச்சங்கத் | **சொ**ற்சங்க | **அ**ற்புதங்க |
| **மு**துபுலவர் | **அ**ளப்பரிய | **சு**வைமிகுந்த | **அ**மைத்த |



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**எதுகை :**

**மதுரைக்கு வைகை**

**செய்யுளுக்கு எதுகை**

முதலெழுத்து அளவொத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகையாகும்.

**சான்று:**

முச்சங்க சொற்சங்க

அச்சங்க அற்புதங்க

**இயைபு :**

கடைசி எழுத்தோ ஓசையோ ஒன்றி வருவது இயைபு ஆகும்.

**சான்று:**

பெருமாட்டி

கவிகூட்டி

பொருள்கூட்டி

தமைக்கூட்டி

**அணி நயம் :**

**அணியற்ற பாக்கள்**

**பிணியுள்ள வணிதை**

தமிழ் மொழியானது சங்கம் வைத்து வளர்க்கப்பட்ட மொழி என்று இயல்பான வார்த்தைகளால் இப்பாடல் அமைந்துள்ளதால் இயல்பு நவிற்சியணி இடம் பெற்றுள்ளது.

www.kalvikadal.in

**சந்த நயம் :**

**சந்தம் தமிழுக்குச் சொந்தம்**

ஏற்ற கருவியுடன் பாடினால் கேட்போருக்கும், பாடுவோருக்கும் இனிமையத் தரும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது இப்பாடல்.

**சுவை நயம் :**

**நா உணரும் சுவை ஆறு**

**மனம் உணரும் சுவை எட்டு**

என்ற வகையில் இப்பாடலில் சொற்சங்க மாகச் சுவைமிகுந்த கவிகூட்டி பெருமிதச் சுவை மிகுந்துள்ளது.

**முடிவுரை:**

கற்றாருக்கும், கல்லாருக்கும் ஏற்ற வகையில் எதுகை, மோனை, இயைபு இயைந்தோட, கற்பனை காட்சியளிக்க, சந்தம் தாளமிட, சுவை உண்டாகி, நா ஏக்கமுற, அணியோடு அழகுபெறும் வகையில் இக்கவிதை அமைந்துள்ளது.

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும் மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும்





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in







உள்ளனர் ; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே ; மொழியால் வளர்பவரும் மக்களே.

*- மொழி வரலாறு (மு. வரதராசனார்)*

**வினாக்கள் :**

1. மக்கள் படைத்துக் காத்துவரும் அரிய கலை எது? அது ஆற்றும் செயல் யாது?
2. தாயின் முதல் விருப்பம் என்ன?
3. மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது?
4. மொழியை வளர்ப்பவரும், மொழியால் வளர்பவரும் யார்?
5. மொழி வளர்ச்சி எதனைப் பொறுத்தது?

## உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

தாமரை இலை நீர் போல, கிணற்றுத் தவளை போல, எலியும் பூனையும் போல, அச்சாணி இல்லாத தேர் போல, உள்ளங்கை நெல்லிக்கனி போல.

1. **தாமரை இலை நீர் போல - பட்டும் படாமலும், ஈடுபாடும் இல்லாமலும் இருத்தல்.**
இவ்வுலக ஆசைகளின்மீது தாமரை இலை நீர் போல பற்று இல்லாமல் இருத்தல் வேண்டும்.

2. **கிணற்றுத் தவளை போல - வெளி உலகம் தெரியாத நிலை.**
இன்னும் சில கிராமங்களில் மக்கள் கிணற்றுத் தவளை போல வாழ்கின்றனர்.

3. **எலியும் பூனையும் போல - எதிரிகளாக.**
ரகுவும் ரவியும் எலியும் பூனையும் போலச் சண்டையிட்டுக் கொண்டனர்.

www.kalvikadal.in

4. **அச்சாணி இல்லாத தேர் போல - சரியான வழிகாட்டி.**
நாட்டை வழி நடத்த சரியான தலைவன் இல்லாததால் நாட்டு மக்கள் அச்சாணி இல்லாத தேர் போல சரிவர இயங்காமல் தவிக்கின்றனர்.

5. **உள்ளங்கை நெல்லிக்கனி போல - வெளிப்படையாக, தெளிவாக.**
தமிழாசிரியர் கற்பித்த புணர்ச்சி இலக்கணம் எங்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவாய் விளங்கியது.

## பயிற்சி

| | | |
|---|---|---|
| 1. பசுமரத்தாணி போல | - | எளிதாக |
| 2. மடைதிறந்த வெள்ளம் போல | - | வேகமாக |
| 3. அடியற்ற மரம் போல | - | வலுவிழந்து |
| 4. கல்மேல் எழுத்து போல | - | அழியாமல் |
| 5. நகமும் சதையும் போல | - | இணை பிரியாமை |
| 6. அடுத்தது காட்டும் பளிங்கு போல | - | வெளிப்படுத்த |
| 7. இலவு காத்த கிளி போல | - | ஏமாற்றம் |
| 8. அலை ஓய்ந்த கடல் போல | - | அமைதி |
| 9. இஞ்சி தின்ற குரங்கு போல | - | விழித்தல் |
| 10. கயிற்ற பட்டம் போல | - | தவித்தல், வேதனை |





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

**தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்.**

**எண்ணத்தை வெளியிடுவதற்கும், சிந்தனையாற்றல் பெருகுவதற்கும் தாய் மொழியே துணை நிற்கும் - இதனை வலியுறுத்தி பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**தாய்மொழிக் கல்வியின் தேவை - தாய்மொழிச் சிந்தனை - அறிஞர்களின் பார்வை - கற்கும் திறன் - பயன் - இன்றைய நிலை.**

### முன்னுரை :

**"தாய்மொழி கண் போன்றது**
**பிறமொழி கண்ணாடி போன்றது"**

நமது எண்ணங்களைப் பிறருக்கு வெளிப்படுத்த உதவுவது மொழியே. மொழி ஒரு கருவி. மனிதன் மொழியால்தான் வாழ்கின்றான். மொழியால்தான் கருத்துப் பரிமாற்றமும் செய்கின்றான். தனது எண்ணத்தை வெளியிடுவதற்கும் சிந்தனையாற்றலைப் பெருக்கவும் துணையாக இருக்கும் தாய்மொழி வழிக் கல்வியின் சிறப்புகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

### தாய்மொழிக் கல்வியின் தேவை :

மனிதனின் அடையாளம் அவனது தாய்மொழிதான். கல்வி என்பது தாய்மொழி வழியாக மட்டுமே கற்பிக்க பட வேண்டும். மனிதனின் சிந்தனையும் கற்பனையும் தாய்மொழியில்தான் உருவாகின்றன. எனவே, மனிதனின் சிந்தனை வளர்ச்சிக்குத் தாய்மொழிக் கல்வியே சிறந்தது. சிந்திக்கின்ற மொழியிலே பயிற்றுவிக்கப்படுகின்ற கல்வி சிந்தனையைக் கூட்டுகின்றது. நுணுக்கங்களையும் அறிவியல் படைப்புகளையும் உருவாக்க மனிதர்களைத் தயார்ப்படுத்துகின்றது.

### தாய்மொழிச் சிந்தனை :

தாய்மொழிதான் சிந்திக்கும் திறனின் திறவுகோலாக இருக்கின்றது. எத்தனை மொழிகள் கற்றாலும் எந்த மொழியைக் கற்றாலும் ஒருவனின் சிந்தனை உருவெடுப்பது தாய்மொழியில்தான். தாய்மொழியால் சிந்தனை பெருகும். மனிதர்களின் மனவெழுச்சி வாழ்விற்கு அடிப்படை. அத்தகைய மனவளர்ச்சியைத் தாய்மொழியால் மட்டுமே கொடுக்க இயலும். தாய்மொழியில் சிந்திப்பதால் உயர்ந்த கருத்துக்களைச் சிறந்த சொற்களைக் கொண்டு உணர்த்த முடியும்.

### அறிஞர்கள் பார்வை :

உலகில் வாழ்ந்த பல அறிஞர்கள் தாய்மொழிக் கல்வியின் அவசியத்தைக் கூறியிருக்கின்றார்கள். காந்தியடிகள் கூறும் போது ஜெகதீஷ் சந்திர போஸ், பி.சி. இராய் முதலியோரின் சாதனைகளைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஆனால், தாய்மொழி மூலம் நமக்குக் கல்வி அளிக்கப்பட்டிருந்தால் நம்மிடையே பல போஸ்களும், இராய்களும் தோன்றியிருப்பார்கள் என்கிறார். சாகித் ஹுசைன் (1938-ஆம் ஆண்டு) குழு தாய்மொழியில் கற்றுக்கொடுத்தலை வலியுறுத்துகிறது, டி.எஸ். கோத்தாரி குழுவும் (1964) தேசியக்கல்விக் கொள்கையில் தாய்மொழி கல்வியை வலியுறுத்தியது.

### கற்கும் திறன் :

தாய்மொழியைப் போற்றி வீழ்ந்த நாடும் இல்லை. தாய்மொழியைப் புறக்கணித்து வாழ்ந்த நாடும் இல்லை. தாய்மொழி மூலமாகவே ஒருவர் தான் கூற விரும்பும் கருத்தைத் தெளிவாகவும் முழுமையாகவும் ஆழமாகவும் தெரிவிக்க முடியும். கற்கும் திறன் அதிகரிப்பது தாய்மொழி வழியாகவே, தாய்மொழி வழியாகக் கற்கும் போது சிந்தனைத்திறன் அதிகமாகும்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

**தாய்மொழிக் கல்வியின் பயன் :**

"கருவில் உள்ள குழந்தை ஏழு மாதத்திலேயே மூளை முதிர்ச்சிப் பெற்று ஒலிகளைக் கேட்கிறது" என்கின்றனர். மருத்துவ அறிஞர்கள், குழந்தை வளரும் சூழல் மொழித்தாக்கத்திற்கு அடிப்படையாக அமைகிறது. அக்குழந்தைகள் தாய்மொழி வழியாகக் கற்கும் சூழல் ஏற்பட்டால் மிகச் சிறந்த அறிஞர்களாக, மேதைகளாக அக்குழந்தைகள் வளரும். குழந்தைகள் தாய்மொழி வழியாகக் கல்விக் கற்றால் தரமான கல்வியைப் பெறுவார்கள்.

**இன்றைய நிலை :**

இன்று தாய்மொழி வழியில் கல்விச் கற்பதைக் கௌரவக் குறைச்சலாகவும், கேவலமாகவும் நினைக்கின்றனர். தாய்மொழியில் கல்விக் கற்றவர்களைத் தரம் குறைந்தவர்களாகப் பார்ப்பது சமூகத்தில் நிலவி வரும் அவலங்களுள் ஒன்றாகும். தாய்மொழியில் கல்விக் கற்போருக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.

**முடிவுரை :**

மொழி என்பது ஒரு தகவல் தொடர்புச் சாதனம் மட்டுமன்று. ஒரு பண்பாட்டின், ஒரு இனத்தின் அடையாளம் என்பதை யாவரும் உணர்ந்தாலே தாய்மொழியை அழிவிலிருந்து காக்கலாம்.

## மொழியோடு விளையாடு

பக்கம்: 21

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



கண்ணால் கண்டவற்றைக் கையால்
கலைவடிவமாக்கி
காண்பவர் கண்களுக்குக்
காட்சி தரும் விருந்தாக்கி
காலங்கள் கடந்தாலும் கண்களை
விட்டு அகலா ஓவியமாக்கி
கல்லைச் சிலையாக்கும் சிற்பியே
காலங்காலமாய் நிற்பாய் என்றும்!

**அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக.**

குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்
தாயின் குரலில் உயிரின் ஒலி
**உயிரின் ஒலியே தாயின் அரவணைப்பு**
**அரவணைக்கும் அவளையே அகத்தில் எண்ணுவோமே!**

**குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்.**

**எ.கா. கவிஞர்; ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம் – கவிமணி.**

1. தமிழறிஞர் : முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம். **விடை :** மறைமலை அடிகள்
2. தாய்மொழி : ஈற்றிரு எழுத்துக்கள் வெளிச்சம் தரும். **விடை :** தமிழ் ஒளி
3. சிறுகதை ஆசிரியர் : முதல் பாதி நவீனம் **விடை :** புதுமைப்பித்தன்
4. முன்னெழுத்து அரசன் : பின்னெழுத்து தமிழ் மாதம் **விடை :** கோதை





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





(தமிழ் ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)

## நிற்க அதற்குத் தக

**கீழ்க்காணும் செயல்பாடுகளைச் சரி/தவறு எனப் பிரித்து, சரியெனில் காரணமும் தவறு எனில் மாற்றுவதற்குரிய செயலையும் குறிப்பிடுக.**

| செயல்பாடு | சரி – காரணம் | தவறு – மாற்றம் |
|---|---|---|
| **எ.கா. பொருட்களை எடுத்த இடத்தில் வைத்தல்** | **சரி, பொருட்களைத் தேடாது எடுக்க முடியும். நேரம் வீணாதல் தவிர்க்கப்படும்.** | |
| பொதுவிடத்தில் எச்சில் துப்புதல் | | தவறு, துப்புதற்கு உரிய இடத்தில் துப்பலாம். நோய்பரவுவதைத் தடுக்கலாம். |
| வகுப்பில் காகிதங்களைக் கிழித்துப் போடுதல் | | தவறு, குப்பைக்கூடையில் போடுதல். வகுப்பறை சுத்தமாக வைப்பது கடமை. |
| இருக்கை, மேசைகளில் கிறுக்குதல் | | தவறு, இருக்கை, மேசை தோற்றம் வீணாகிவிடும் பள்ளியின் சொத்தினைப் பாதுகாப்பது நமது கடமை. |

### படிப்போம் – பயன்படுத்துவோம் (நூலகம்)

Subscription - உறுப்பினர் கட்டணம்
Fiction - புனைவு
Biography - வாழ்க்கை வரலாறு
Archive - ஆவணம்
Manuscript - கையெழுத்துப்பிரதி
Bibliography - நூல் நிரல்

✸✸★★★✸✸



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



# இயல் 1 மாதிரி வினாத்தாள் - 1

வகுப்பு : 12
நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

**I. பலவுள் தெரிக.** **6 × 1 = 6**
**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1. **இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்**
   அ) யாப்பெருங்கலக் காரிகை ஆ) தண்டியலங்காரம்
   இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2. **"மீண்டுமந்தப் பழமை நலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்**
   க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது உ) பொதிகையில் தோன்றியது
   ங) வள்ளல்களைத் தந்தது
   அ) க - மட்டும் சரி ஆ) க உ - இரண்டும் சரி
   இ) ங - மட்டும் சரி ஈ) க ங - இரண்டும் சரி

3. **"மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது, தன்னேர் இலாத தமிழ்!" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்**
   அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர்மோனை, சீர் எதுகை
   இ) அடி எதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை

4. **கருத்து 1: இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.**
   **கருத்து 2: தொடரமைப்பு, சங்கப்பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.**
   அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
   இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, கருத்து 2 தவறு

5. **பொருத்துக:**
   அ) தமிழ் அழகியல் - 1. பரலி சு. நெல்லையப்பர்
   ஆ) நிலவுப்பூ - 2. தி.சு. நடராசன்
   இ) கிடை - 3. சிற்பி. பாலசுப்பிரமணியம்
   ஈ) உய்யும் வழி - 4. கி. ராஜநாராயணன்
   அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

6. **கவிஞர் சிற்பி எழுதிய எந்தப் படைப்பிலக்கியத்திற்கு சாகித்திய அகாதமி விருது கிடைத்தது?**
   அ) ஒரு கிராமத்தின் கதை ஆ) ஒரு கிராமமே அழுதது
   இ) ஒரு கிராமத்தின் நதி ஈ) ஒரு புளியமரத்தின் கதை

**II. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **8 × 1 = 8**

7. **ஈறுபோதல் முன்நின்ற மெய்திரிதல் என்ற விதிப்படி அமைந்த சொல்**
   அ) தனியாழி ஆ) வெங்கதிர் இ) விளங்கு ஈ) ஆங்கவற்றுள்

8. **க்ரீடம், ப்ரியா - என்பவை ................ மொழிச் சொற்கள்.**
   அ) வட ஆ) அரபு இ) தமிழில் ஈ) தெலுங்கு

9. **பொருத்தாததைக் கண்டறிக.**
   அ) இளந்தமிழே - சிற்பி
   ஆ) தமிழ்மொழியின் நடை அழகியல் - தி.சு.நடராசன்
   இ) தன்னேர் இல்லாத தமிழ் - தண்டி
   ஈ) தம்பி நெல்லையப்பர்க்கு - நெல்லையப்பர்

10. **'செம்பரிதி' - என்பதன் இலக்கணக் குறிப்பு தருக.**
    அ) பண்புத்தொகை ஆ) எண்ணும்மை இ) பெயரெச்சம் ஈ) உம்மைத் தொகை

11. **Fiction என்பதன் தமிழ்ச் சொல்லை தேர்ந்தெடுக்கவும்.**
    அ) புனைவு ஆ) சட்டம் இ) ஆவணம் ஈ) கோப்பு



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

12. **காட்டு வாத்து என்ற நூலின் ஆசிரியர்**
அ) நா. முத்துசாமி ஆ) அகிலன் இ) நா. பிச்சமூர்த்தி ஈ) தி.சு. நடராசன்

13. **எழுதும்போது வரும் பிழைகளை எத்தனை வகையாகக் கொள்ளலாம்?**
அ) 3 ஆ) 4 இ) 5 ஈ) 6

14. **பிழையான தொடரைக் கண்டறிக.**
அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர். ஆ) மலை மீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது. ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

**III. குறுவினா** **3 × 2 = 6**

**அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

15. “படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக” - இச்சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.
16. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
17. விடியல், வனப்பு - இருசொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.
18. கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய கவிதை நூல்கள் சிலவற்றை எழுதுக.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 2 = 4**

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
20. பாடலின் தளத்தை ஏர் நடத்தி பண்படுத்திப் போகின்றனவை எவை?
21. ‘கலை முழுமை’ பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுவது யாது?

**IV. எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 × 2 = 14**

22. **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
அ) வியந்து ஆ) இருந்தாய்

www.kalvikadal.in

23. **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**
அ) செம்பரிதி ஆ) வானமெல்லாம்

24. **மரபுப்பிழையை நீக்கி எழுதுக.**
அ) யானை கத்தும் ஆ) கிளி பாடும்

25. **வேற்றுமைப் புணர்ச்சியில் ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் எவ்வாறு திரியும்?**
அ) ளகரம் லகரமாகும் ஆ) ளகரம் ணகரமாகும்
இ) ளகரம் டகரமாகும் ஈ) இவற்றில் எதுவுமில்லை

26. **சரியான கூற்றினைக் கண்டறிக.**
i) வல்லின மெய்கள் ஈறொற்றாய் வாரா
ii) ட், ற் என்னும் மெய்களை அடுத்து மெய்கள் வருவதில்லை
iii) க், ச், த்,ப, ஆகியவற்றின்பின் அவற்றின் அவ்வெழுத்து வரிசைகளே வரும்
அ) i, ii - சரி ஆ) ii, iii - சரி இ) i, iii - சரி ஈ) மூன்றும் சரி

27. **உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**
தாமரை இலை நீர் போல, கிணற்றுத் தவளை போல

28. **தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக.**
வசனநடை கைவந்த வள்ளலாளர் என புகழப்படும் ஆறுமுக நாவலர் யாழ்பாணம் நல்லூரில் பிறந்தார்

29. **மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து சொற்றொடர் அமைக்கவும்.**
அ) அழை ஆ) அளை

30. **கலைச் சொல்லாக்கம் தருக:** Internet

**V. சிறுவினா**

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

31. செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்’- தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



32. 'ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்' - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
33. சங்கப்பாடல்கள் பலவற்றுள் அமைந்துள்ள மறுதலைத் தொடரியல் போக்குக்குச் சான்று தந்து விளக்குக.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

34. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.
35. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே<br>- நன்னூல் | மீண்டு மந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே ! கூவி வா, வா!<br>- சிற்பி பாலசுப்பிரமணியம் |

36. பொருள் வேற்றுமை அணியைச் சான்று தந்து விளக்குக.

**VI. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 x 4 = 12**

37. வேற்றுமை அணி (அல்லது)

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) - இப்பாடலில் பயின்று வரும் அணியை விளக்கு.

38. **கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும் மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர் ; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே ; மொழியால் வளர்பவரும் மக்களே. *- மொழி வரலாறு (மு. வரதராசனார்)*

39. **கீழ்க்காணும் பாடலை படித்து ஏற்புடைய நயங்களை சுட்டிக்காட்டுக.**

www.kalvikadal.in

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி! - கண்ணதாசன்

40. **தமிழாக்கம் தருக.**

1. Learning is a treasure that will follow its owner everywhere. (Chinese Proverb).
2. A new language is a new life. (Persian Proverb).
3. If you want people to understand you, speak their language. (African Proverb).
4. Knowledge of languages is the doorway to wisdom. (Roger Bacon).

**VII. பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக :** **3 x 6 = 18**

41. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.
42. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.
43. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க

**VIII. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4 + 2 = 6**

44. அ) 'ஓங்கலிடை' - எனத் தொடங்கும் தன்னேரில்லாத தமிழ் எனும் பாடல்.
ஆ) 'அது' என முடியும் குறள்.

✸✸★★★✸✸





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



# இயல் 2 பெய்யெனப் பெய்யும் மழை

## இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்

| | | |
|---|---|---|
| உரைநடை | பெருமழைக்காலம் | |
| செய்யுள் | பிறகொரு நாள் கோடை | அய்யப்ப மாதவன் |
| செய்யுள் | நெடுநல்வாடை★ | நக்கீரர் |
| துணைப்பாடம் | முதல்கல் | உத்தமசோழன் |
| இலக்கணம் | நால்வகைப் பொருத்தங்கள் | |

# இயல் 2 பெருமழைக்காலம்

## உரைநடை உலகம்

www.kalvikadal.in

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்**

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்

இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல் **விடை: ஆ**

2. **“உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும்” - இத்தொடர் உணர்த்துவது**

அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது

ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது

இ) காலநிலை மாறுபடுகிறது

ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது **விடை: அ**

### குறுவினா

1. **‘ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்’ என்னும் முழக்கத் தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?**

‘ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்’ என்ற முழக்கத் தொடர் வாயிலாக பின்வருவனவற்றை எடுத்துரைப்பேன்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

- மழைக்கு ஆதாரம் மரம்.
- உயிர்வளிக்கு உதவுவது மரம்.
- மண் அரிப்பைத் தடுக்கும் மரம்.
- மரம் தரும் நிழல் குளிர்ச்சி என்று கூறுவேன்.

**2. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான் – இரு தொடர்களாக்குக.**

- மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தினான்.
- மனிதன் இயற்கை வளங்களைச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான்.

## சிறுவினா

**1. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.**

- வெள்ளப்பெருக்கை எதிர்கொள்ளும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
- நீர்நிலைகளை முறையாகப் பராமரித்தல் வேண்டும்.
- வடிகால் வசதியை மேற்கொள்ள வேண்டும்.
- இயல்பாகவே பெருமழையைத் தாங்கக் கூடிய குளம், குட்டை, ஏரி, ஆறு, வடிகால் வாய்க்கால்கள், வெள்ளச் சமவெளிகளைச் சேதப்படுத்தாமல் தூர் வார்தல் வேண்டும்.
- சூறாவளி, புயல், வெள்ளம் குறித்த போதிய விழிப்புணர்வை அனைத்துப் பொதுமக்களும் பெறும் விதத்தில் பேரிடர் மேலாண்மை ஆணையம் முயற்சி மேற்கொள்ளுதல் வேண்டும்.

www.kalvikadal.in

**2. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக.**

- பேரிடர் மேலாண்மை ஆணையம் நடுவணரசால் 23.12.2005இல் தொடங்கப்பட்டது.
- புயல், வெள்ளம், சுனாமி, நிலநடுக்கம், தீ விபத்து. பனிப்புயல், வேறு விபத்துகள் முதலான பேரிடர்கள் நிகழும் போது இந்த அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்த இந்த ஆணையம் உதவுகிறது.
- இக்குழுக்கள் மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி அனைத்து நிலைகளிலும் பேரிடர்க் காலங்களில் இவ்வாணையம் செயல்பட வழிவகை செய்துள்ளது.
- அரசு தீயணைப்புத்துறை, காவல், தன்னார்வத் தொண்டு நிறுவனம் போன்ற பாதுகாப்பு அமைப்புகள் தயார் நிலையில் இருத்தல் வேண்டும்.

## நெடுவினா

**1. ‘நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து’ என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**பெருமழைக்காலம்**

**அயோத்திதாசர்** : வணக்கம் ஐயா! நான் உங்களைக் காண்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

**பசுமைதாசர்** : வணக்கம். மிக்க மகிழ்ச்சி.

**அயோத்திதாசர்** : நெகிழி என்றால் என்னங்க ஐயா!



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**பசுமைதாசர்** : நெகிழி என்பது திடப்பொருள். இச்சொல்லை பிளாஸ்டிக் என்றும் அழைப்பர். பிளாஸ்டிக்கோஸ் என்ற கிரேக்கச் சொல்லில் உருவானது.

**அயோத்திதாசர்** : நெகிழி தோன்றியதின் வரலாறு கூறமுடியுமா ஐயா.

**பசுமைதாசர்** : நெகிழி செல்லுலோஸ் என்ற பொருளால் ஆனது. 1862இல் இலண்டனைச் சேர்ந்த அலெக்சாண்டர் பாக்ஸ் என்பவரால் உருவாக்கப்பட்டது.

**அயோத்திதாசர்** : நெகிழியின் பயன்பாடுகள் பற்றிச் சில கூறுங்கள் ஐயா.

**பசுமைதாசர்** : பொதுவாக நெகிழி பயன்படுத்துவதற்கு எளிதாக இருந்தாலும் தீமைகளே அதிகம்.

இன்றும் நாம் கையாளும் பொருள்கள் அனைத்திலும் நெகிழி உதவி இல்லாமல் இல்லை. காலை கண் விழித்து பல்துலக்கப் பயன்படுத்தும் பொருள் முதல், இரவு படுக்கைக்கு செல்லும் போது படுக்கும் பாய் வரை ஒவ்வொன்றும் நெகிழியால் உருவாக்கப்பட்டது.

**அயோத்திதாசர்** : நல்லது ஐயா! அப்ப நெகிழி இல்லாமல் நாம் இல்லை.

**பசுமைதாசர்** : அப்படிச் சொல்லக்கூடாது. நம்முன்னோர்கள் வாழ்ந்த காலத்தில் நெகிழி இல்லையே!

**அயோத்திதாசர்** : சரிங்க ஐயா! நெகிழியால் ஏற்படும் தீமைகள் பற்றி எனக்கு விரிவாக விளக்குங்கள் ஐயா!

**பசுமைதாசர்** : நெகிழியைப் பயன்படுத்துவதால் மண் வளம் குன்றி தாவர இனம் அழிகிறது. தாவர இனம் அழிவதால் மழை வளம் குறைகிறது. மழை இல்லை என்றால் மனிதர் இல்லையே.

www.kalvikadal.in

**அயோத்திதாசர்** : மேலும் அறிந்து கொள்ள விழைகிறேன் ஐயா!

**பசுமைதாசர்** : உறுதியாகச் சொல்கிறேன்!
நீர் செல்லும் கால்வாய்களில் நெகிழி அடைக்கப்படுவதால் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. நெகிழியை எரிப்பதால் டையாசீன் என்ற நச்சு வெளிப்பட்டு பல்வேறு நோய்கள் உருவாகிறது. சூடான பொருள்கள் நெகிழிப் பைகளில் வாங்கி உண்பதால் புற்றுநோய் உருவாகிறது. அவற்றைச் சில விலங்குகள் உண்ணுவதால் அவைகளும் மடிகின்றன.

**அயோத்திதாசர்** : நன்றிங்க ஐயா!

**பசுமைதாசர்** : துணிப்பை எளிதானது
தூர எறிந்தால் எருவாகும்.....

நெகிழிப் பை அழகானது.
தூர எறிந்தால் விட(ஷ)மாகும்.....
என்பதற்கு ஏற்ப நாம் நெகிழியைப் பயன்படுத்துவதைச் சிறிது சிறிதாக குறைப்போம்.

மண் வளம் காப்போம்! மழை வளம் பெருக்குவோம்!
மரம் நடுவோம்! மனித குலம் தழைப்போம்!
வாழ்க வளமுடன்! நன்றி!

**அயோத்திதாசர்** : நன்றி!





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. இயற்கைச் சமநிலையை நாம் சீர்குலைத்தன் விளைவு எதற்குக் காரணமாயிற்று
அ) பருவநிலை மாற்றம் ஆ) உடல்நிலை மாற்றம்
இ) மண்ணின் மாற்றம் ஈ) இவற்றில் எதுவுமில்லை **விடை: அ**

2. உலகப்புவி நாள்
அ) ஏப்ரல் 21 ஆ) ஏப்ரல் 22 இ) ஜூன் 21 ஈ) ஜூலை 22 **விடை: ஆ**

3. 'மாமழை போற்றுதும்' - என்ற பாடல் வரியைக் கூறியவர்
அ) திருவள்ளுவர் ஆ) கம்பர்
இ) ஔவையார் ஈ) இளங்கோவடிகள் **விடை: ஈ**

4. 'நீரின்றி அமையாது உலகு' - என்னும் பாடல் வரியைப் பாடியவர்
அ) கம்பர் ஆ) திருவள்ளுவர் இ) நக்கீரர் ஈ) ஔவையார் **விடை: ஆ**

5. நம் நாட்டில் கடந்த பதினைந்து ஆண்டுகளில் எத்தனை முறை வறட்சி ஏற்பட்டுள்ளது?
அ) 4 ஆ) 6 இ) 3 ஈ) 5 **விடை: ஈ**

6. 2005-ஆம் ஆண்டு மும்பையில் ஒரே நாளில் பெய்த மழையளவு
அ) 994 செ.மீ ஆ) 994 மி.மீ இ) 995 மி.மீ ஈ) 995 செ.மீ. **விடை: ஆ**

7. ஜம்மு காஷ்மீர் மாநிலம் 'லே' பகுதியில் 30 நிமிடங்களில் 150 முதல் 250 மி.மீ வரை மழை பெய்த ஆண்டு
அ) 2010 ஆ) 2008 இ) 2005 ஈ) 2011 **விடை: அ**

8. 'ஒக்கி' என்பதன் தமிழ்ச்சொல்
அ) வாயு ஆ) காற்று இ) கண் ஈ) வாய் **விடை: இ**

9. புயலைக் குறித்த பெயர்களைப் பரிந்துரைச் செய்துள்ள 'சார்க்' அமைப்பில் உள்ள நாடுகளின் எண்ணிக்கை
அ) 8 ஆ) 4 இ) 64 ஈ) 7 **விடை: அ**

10. "புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே" - என்றவர்
அ) டேவிட் கிங் ஆ) ஜான் டேவிட் இ) ஜான் மார்ஷல் ஈ) ஹென்றி **விடை: அ**

11. ரியோ டி ஜெனிரோவில் காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவையை ஐக்கிய நாடுகள் உருவாக்கிய ஆண்டு
அ) 1972 ஆ) 1892 இ) 2002 ஈ) 1992 **விடை: ஈ**

12. கடந்த 110 ஆண்டுகளில் மிகவும் வெப்பமான ஆண்டாக இந்திய வானிலை ஆய்வுத்துறையினர் அறிவித்த ஆண்டு
அ) 2008 ஆ) 2009 இ) 2007 ஈ) 2018 **விடை: ஆ**

13. உலகில் எத்தனை விழுக்காடு மக்கள் தண்ணீர்ப் பற்றாக்குறையோடு வாழ்ந்து வருகின்றனர்?
அ) 40.5 ஆ) 40.9 இ) 40 ஈ) 40.8 **விடை: இ**

14. நிலத்தடி நீர்மட்டத்தைத் தக்கவைப்பதில் இதன் பங்கு இன்றியமையாதது
அ) கிணறு ஆ) ஊற்று இ) மணல் ஈ) பாறை **விடை: இ**


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

15. **நடுவண் அரசு தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்த ஆண்டு**
அ) 2005 டிசம்பர் 24 ஆ) 2005 டிசம்பர் 23
இ) 2005 நவம்பர் 23 ஈ) 2005 ஜூலை 23 **விடை: ஆ**

16. **ஆனந்த் வேளாண் பல்கலைக்கழகம் எங்குள்ளது ?**
அ) டெல்லி ஆ) குஜராத் இ) மும்பை ஈ) கொல்கத்தா **விடை: ஆ**

17. **உலகச் சுற்றுச்சூழல் நாள்**
அ) ஜூன் 5 ஆ) ஜூலை 5 இ) ஏப்ரல் 14 ஈ) மே 5 **விடை: அ**

18. **கூற்று 1 : இயற்கையானது சமநிலையோடு இருந்தால்தான், அந்தந்தப் பருவநிலைக்கேற்ற நிகழ்வுகள் நடக்கும்.**
**கூற்று 2 : உபரிநீர் கால்வாய்களும் வெள்ளச்சமவெளிகளும் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அற்றவை.**
அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று இரண்டும் சரி
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று இரண்டும் தவறு **விடை: அ**

19. **கூற்று 1 : வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்தும் அமைப்புகளை அழித்து குடியிருப்புகள், தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்களை மனிதன் அமைத்துள்ளான்.**
**கூற்று 2 : மணல் அள்ளியதன் விளைவாக வெள்ளச் சமவெளிகள் அழிகின்றன.**
அ) கூற்று 1 தவறு, 2 சரி ஆ) கூற்று இரண்டும் தவறு
இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று இரண்டும் சரி **விடை: ஈ**

www.kalvikadal.in

20. **கூற்று 1 : வெள்ளப்பெருக்குக் காலங்களில் மட்டுமே நம் நாட்டில் மாற்று ஏற்பாடுகளைச் செய்கிறோம்.**
**கூற்று 2 : வெள்ளம் வடிந்த பிறகு வெள்ளப் பெருக்கை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளைத் திட்டமிடவும் தவறுகின்றோம்.**
அ) கூற்று இரண்டும் சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று இரண்டும் தவறு **விடை: அ**

21. **சரியானதைத் தேர்க.**
அ) மாமழை போற்றதும் - திருவள்ளுவர்
ஆ) மாரியல்லது காரியமில்லை - முன்னோர் மொழி
இ) நீரின்றி அமையாது உலகு - பழமொழி
ஈ) மும்பை - வறட்சி **விடை: ஆ**

22. **சரியானதைத் தேர்க.**
அ) மும்பை - 994 செ.மீ. மழை
ஆ) 'லே' - 250 செ.மீ. மழை
இ) மீத்தேன் - பசுமைக்குடில் வாயு
ஈ) 2009ஆம் ஆண்டு - மிக வெப்ப ஆண்டு **விடை: இ**

23. **சரியானதைத் தேர்க.**
அ) நாற்பது விழுக்காடு - மணல் பற்றாக்குறை
ஆ) எண்பத்துஐந்து விழுக்காடு - வெள்ளப்பெருக்கால் பேரிடர்
இ) ஜூன் 5 - உலக வன உயிரின நாள்
ஈ) உலகப் புவி நாள் - ஏப்ரல் 22 **விடை: ஆ**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

**24. பொருத்துக.**

அ) ஹைட்ரஜன் ஆண்டு - 1. மிகவும் வெப்பமான ஆண்டு

ஆ) ரஷ்யா - 2. கார்பன் அற்ற ஆற்றல்

இ) 2009ஆம் ஆண்டு - 3. தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம்

ஈ) 2005 டிசம்பர் 23 - 4. பசுமைக்குடில் வாயு

அ) 2, 3, 4, 1 ஆ) 2, 4, 1, 3 இ) 3, 1, 2, 4 ஈ) 3, 2, 1, 4 **விடை: ஆ**

**25. உயிரினங்கள் வாழ்வதற்கு அடிப்படையான மழை, ................ இன்றியமையாதது.**

அ) நெசவுக்கும் ஆ) உழவுக்கும் இ) கடலுக்கும் ஈ) மலைக்கும் **[விடை: ஆ]**

**26. வங்கக் கடலிலும் அரபிக் கடலிலும் உருவாகும் புயலுக்குப் பெயர் வைக்கும் எட்டு நாடுகளில் பொருந்தாததைக் கண்டறிக.**

அ) இலங்கை ஆ) மாலத்தீவு இ) மியான்மர் ஈ) நேபாளம் **[விடை: ஈ]**

**27. வங்கக்கடலிலும் அரபிக் கடலிலும் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்க எட்டு நாடுகள் வழங்கியுள்ள பட்டியலில் உள்ள பெயர்களின் எண்ணிக்கை**

அ) 36 ஆ) 64 இ) 96 ஈ) 180 **[விடை: ஆ]**

**28. கதிரவனைச் சுற்றியுள்ள கோள்களில் ................ மட்டுமே உயிரினங்கள் வாழ்வதற்கு உகந்த சூழ்நிலை நிலவுகிறது.**

அ) சந்திரனில் ஆ) வியாழனில் இ) புதனில் ஈ) புவியில் **[விடை: ஈ]**

**29. புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கல் என்று கூறிய இங்கிலாந்தின் அறிவியல் கருத்தாளர்**

www.kalvikadal.in

அ) டேவிட் ஷெப்பர்டு ஆ) டேவிட் கிங்

இ) நைட் ஜான் ஈ) வில்லியம் ஹென்றி **[விடை: ஆ]**

**30. ஆர்டிக் பகுதி, கடந்த முப்பது ஆண்டுகளில் எத்தனை இலட்சம் சதுர மைல்கள் உருகியுள்ளது?**

அ) 2 ஆ) 4 இ) 20 ஈ) 40 **[விடை: ஆ]**

**31. பசுமைக்குடில் வாயுக்களில் பொருந்தாததைக் கண்டறிக.**

அ) கார்பன் டை ஆக்சைடு ஆ) மீத்தேன்

இ) நைட்ரஸ் ஆக்சைடு ஈ) ஹைட்ரஜன் **[விடை: ஈ]**

**32. மாற்று ஆற்றல்களாக விளங்கக்கூடியவற்றைக் கண்டறிக.**

i) சூரிய ஆற்றல் ii) காற்று ஆற்றல்

iii) ஹைட்ரஜன் ஆற்றல் iv) தாவர ஆற்றல்

அ) i), ii) சரி ஆ) iii), iv) சரி இ) iii) மட்டும் தவறு ஈ) நான்கும் சரி **[விடை: ஈ]**

**33. ஐக்கிய நாடுகள் அவை 1992ஆம் ஆண்டு காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவையை உருவாக்கிய இடம்**

அ) நியூயார்க் ஆ) ஹைத்தீ இ) ரியோடிஜெனிரோ ஈ) ஹாமில்டன் **[விடை: இ]**

**34. சரியான விடையைக் கண்டறிக.**

i) ஐ.நா. அவை 1992ஆம் ஆண்டு உருவாக்கிய காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவையை உருவாக்கியபோது தொடக்கத்தில் 50 நாடுகள் உறுப்பினர்களாக இருந்தன.

ii) பின்னர் இந்த எண்ணிக்கை 193 நாடுகளாக உயர்ந்தது.

அ) i) சரி ஆ) ii) சரி

இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு **[விடை: இ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





35. பசுமைக்குடில் வாயுக்களை வெளியேற்றும் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள நாடுகளைக் கண்டறிக.

i) சீனா ii) இரஷ்யா iii) அமெரிக்கா iv) ஜப்பான்

அ) i), ii) சரி ஆ) iii), iv) சரி இ) iii) மட்டும் தவறு ஈ) நான்கும் சரி [விடை: ஈ]

36. கடந்த 110 ஆண்டுகளில் மிகவும் வெப்பமான ஆண்டாக இந்திய வானிலை ஆய்வுத் துறையினர் அறிவித்த ஆண்டு

அ) 2006 ஆ) 2008 இ) 2009 ஈ) 2011 [விடை: இ]

37. ................ ஆம் ஆண்டிற்குப் பிறகு புவியின் வெப்பம் ஆண்டிற்கு ஆண்டு உயர்ந்துகொண்டே போகிறது.

அ) 2000 ஆ) 2001 இ) 2004 ஈ) 2006 [விடை: ஆ]

38. புவியின் வெப்பம் உயர்ந்து கொண்டே போனால் அடுத்த 50 ஆண்டுகளில் கடல்நீர் மட்டம் உயர்ந்து உலகத்தில் ................ கோடி மக்கள் வெள்ளத்தால் சூழப்படுவர்.

அ) 100 ஆ) 200 இ) 300 ஈ) 250 [விடை: ஆ]

39. உலகம் மூன்றில் இரண்டு பங்கு நீரால் சூழப்பட்டிருந்தாலும் ................ விழுக்காடு மக்கள் தண்ணீர்ப் பற்றாக்குறையோடு வாழ்ந்து வருகிறார்கள்.

அ) 30 ஆ) 40 இ) 45 ஈ) 50 [விடை: ஆ]

40. கடந்த நாற்பது ஆண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்ட பேரிடர்களில் 85% ................ ஏற்பட்டவையே.

அ) வெள்ளப்பெருக்கினால் ஆ) நிலநடுக்கத்தால்

இ) போரினால் ஈ) கவனக்குறைவால் [விடை: அ]

www.kalvikadal.in

41. சரியானக் கூற்றுகளைக் கண்டறிக.

i) தமிழக நிலப்பரப்பில், விடுதலைக்கு முன்பு, ஏறத்தாழ ஐம்பதாயிரம் நீர்நிலைகள் இருந்தன.

ii) தற்போது தமிழகத்தில் நீர்நிலைகள் இருபதாயிரமாகக் குறைந்துள்ளன.

iii) சென்னை, மதுரை ஆகிய மாநகரங்களைச் சுற்றி மட்டுமே ஏறத்தாழ ஐந்நூறு ஏரிகள், குளங்கள் காணாமல் போய்விட்டன.

அ) i), ii) சரி ஆ) ii), iii) சரி இ) iii) மட்டும் தவறு ஈ) மூன்றும் சரி [விடை: ஈ]

42. நிலத்தடி நீர்மட்டத்தைத் தக்கவைத்துக் கொள்வதில் ................ பங்கு இன்றியமையாதது.

அ) வண்டல் மண்ணின் ஆ) கரிசல் மண்ணின்

இ) செம்மண்ணின் ஈ) மணலின் [விடை: ஈ]

## குறுவினா

1. **இயற்கைச் சமநிலை என்றால் என்ன?**

மழைப்பொழிவு மூலமாக மண்பரப்பில் நீர் நிறைந்து தாவர உயிரினங்களும், விலங்கினங்களும் தோன்றின. இவ்வாறு சார்ந்து வாழும் இந்த உயிரினங்கள் அனைத்தும் ஒரு குழுவாக ஒன்றையொன்று சார்ந்து வாழ்கின்றன. இவற்றிற்கான உணவுச் சங்கிலியே இயற்கைச் சமநிலை எனப்படும்.

2. **சார்க் அமைப்பில் இருக்கும் நாடுகள் யாவை?**

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், மாலத்தீவு, மியான்மர், ஓமன், தாய்லாந்து.

3. **கார்பன் அற்ற ஆற்றல்கள் யாவை?**

சூரிய ஆற்றல், காற்று ஆற்றல், ஹைட்ரஜன் ஆற்றல், தாவர ஆற்றல் போன்றவை கார்பன் அற்ற ஆற்றல்கள் எனப்படும்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



4. **பெருமழையைத் தாங்க இயற்கை தந்த அமைப்புகள் யாவை?**

குளம், குட்டை, ஏரி, ஆறு, வடிகால், வாய்க்கால்கள், வெள்ளச் சமவெளிகள் போன்றவையே பெருமழையைத் தாங்க இயற்கை தந்த அமைப்புகளாகும்.

5. **தேசிய பேரிடர் ஆணையம் எந்தெந்த நிலைகளில் குழுக்களை அமைத்துள்ளன?**

மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் குழுக்களை அமைத்துள்ளன.

6. **குஜராத் விஞ்ஞானிகளின் மழையைக் கணிக்கும் அறிகுறிகளாகக் குறிப்பிடுபவை யாவை ?**

கார்மேகங்கள் சூரிய உதயத்திற்கு 15, 20 நிமிடங்களுக்கு முன்னதாகக் கிழக்கு வானத்தில் தோன்றுதல், செம்மை நிற மேகங்கள், திடீர்ப்புயல், காற்றின்திசை, இடி, மின்னல், பலமான காற்று, வானவில், முட்டைகளைச் சுமந்திருக்கும் எறும்புகள், பறக்கும் பருந்து, சூரியனைச் சுற்றி ஒளிவட்டம், வெப்பமும் ஈரப்பதமுமான வானிலை, தூசுப் பனிமூட்டம் முதலியவைகளே மழையைக் கணிக்கும் அறிகுறிகளாகக் குஜராத் விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

7. **எவற்றையெல்லாம் பசுமைக்குடில் வாயுக்கள் என்கின்றோம்?**

கார்பன் டை ஆக்ஸைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஓசோன், நீர்வாயு போன்றவைகளைப் பசுமைக்குடில் வாயுக்கள் என்கிறோம்.

8. **மழையின் சிறப்பினை எடுத்துரைக்கும் இலக்கியத் தொடர்கள் முதுமொழிகள் சிலவற்றைச் சான்றாகத் தருக.**

- மாமழை போற்றுதும்
- நீரின்றி அமையாது உலகு
- மாரியல்லது காரியமில்லை

www.kalvikadal.in

9. **ஆற்றில் மணல் அள்ளுவதால் இந்தியாவில் ஏற்பட்டுள்ள பேரிடர் யாது?**

கடந்த நாற்பது ஆண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்ட பேரிடர்களில் 85% வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்டவையே ஆகும். இதற்கு முதன்மையாகக் காரணமாக அமைவது ஆற்றல் மணல் அள்ளுவதே ஆகும்.

## சிறுவினா

1. **வெள்ளச் சமவெளி என்றால் என்ன? அதன் பயன் யாது?**

**வெள்ளச்சமவெளி :**

வெள்ளச்சமவெளி என்பது ஆற்றின் நீரோட்ட வழியில் இயற்கை உருவாக்கிய காப்பரணாகும்.

**வெள்ளச்சமவெளியின் பயன் :**

- ஆற்றின் ஓரங்களில் படியும் பொருள்களை ஆற்றங்கரைப் படிவு என்பர்.
- படிகின்ற பொருள்களால் ஆற்றுச் சமவெளியில் அடர்த்தியான மணலாலும் மற்றும் சேற்றினாலும் அடுக்குப் படிவம் உருவாகும்.
- அப்படிவம் வெள்ளப்பெருக்குக் காலங்களில் நீரை உறிஞ்சுவதால் வெள்ளப்பெருக்கு ஏற்படுவது குறையும்.
- நீர் மாசடைவதைத் தடுக்கும்; வறட்சிக் காலங்களில் நீர்மட்டம் குறைந்துவிட்டால் பாதுகாக்கும்.
- உபரிநீர்க் கால்வாய்களும் வெள்ளக்காலங்களில் பயன் அடையும்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**2. பேரிடர் வந்துவிட்டால் மேற்கொள்ள வேண்டியவை யாவை ?**

- பதற்றமடைதலை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும்.
- வானிலை ஆராய்ச்சி மையங்கள் வெளியிடும் புயல், மழை தொடர்பான காலங்களின் அடிப்படையில் பொதுமக்கள் செயல்பட வேண்டும்.
- வதந்திகளை நம்பவோ, பிறரிடம் பரப்பவோ கூடாது,
- தீயணைப்புத்துறை, காவல்துறை, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இவற்றின் உதவியுடன் மீட்புப் பணியை மேற்கொள்ளுதல் வேண்டும்.
- பாதுகாப்புப் பணிகளில் முழுவதுமாக ஈடுபட வேண்டும்.
- பாதுகாப்பு மையங்கள், மருத்துவக் குழுக்கள் ஆகியவற்றை மிக அருகிலே வைத்திருத்தல் வேண்டும்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 28

**1. வெள்ளப் பேரழிவு குறித்த நாளிதழ்ச் செய்திகளைத் தொகுக்க.**

கடலூர்.

2015இல் உலகையே உலுக்கிய வெள்ளம் கடலூரில். எங்குப் பார்த்தாலும் ஆடு, மாடுகள் இறந்துக்கிடக்கும் காட்சி கடலூர், தாழங்குடா, திருவந்திபுரம், நத்தம், ஞானமேடு போன்ற பகுதிகளில் குடிசை வீடுகள் தண்ணீரில் தத்தளித்தன. மரங்கள், மின்கம்பங்கள் விழுந்ததால் மின்சாரம் இல்லை, குடிநீர் இல்லை, நீர் தேங்கியதால் தொற்று நோய்கள். சிறுவர் முதியவர் இறப்பு எண்ணற்ற குடும்பங்களின் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்தனர்.

www.kalvikadal.in

2004ஆம் ஆண்டு இதே கடலூர், தேவனாம்பட்டினம், தாழங்குடா ஆகிய பகுதிகளில் சுனாமி ஊருக்குள் புகுந்தது. வீடுகள், மரங்கள், மீன் பிடித்தொழில் செய்வோரின் பொருள்கள், படகுகள் எல்லாம் கடலில் மூழ்கி நிலைகுலைந்தது. சுமார் 200க்கும் மேற்பட்டோர் உயிர்இழந்தனர். தாய் தந்தையைப் பிரிந்த குழந்தை, கணவனை இழந்த மனைவி என்று அரைகுறை வாழ்க்கையை ஏற்படுத்தியது.

**2. ஜூன் 5, உலகச் சுற்றுச்சூழல் நாள். இந்நாளில் பள்ளியின் கூட்டத்தில் ஏற்க வேண்டிய உறுதிமொழியை உருவாக்குக.**

- மரம் வளர்ப்போம்!<br>மழை பெறுவோம்!!
- நெகிழியைத் தவிர்ப்போம்!<br>மண் வளம் பாதுகாப்போம்!!
- வாகனப்புகை குறைப்போம்!<br>வளமான வாழ்வு வாழ்வோம்!!
- மழைநீர் தேங்காமல் பாதுகாப்பாகச் சேகரிப்போம்!<br>கொசுவை ஒழிப்போம்!!
- மக்கும், மக்காக் குப்பை எனப் பிரிப்போம்!<br>மானிட சமுதாயம் காப்போம்!!
- துணிப்பையைத் தூக்குவோம்!<br>துக்கமின்றி வாழ்வோம்!!

✸✸★★★✸✸





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

இயல் 2
செய்யுள்

# பிறகொரு நாள் கோடை

- அய்யப்ப மாதவன்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது**

அ) சூரிய ஒளிக்கதிர்  ஆ) மழை மேகங்கள்
இ) மழைத்துளிகள்  ஈ) நீர்நிலைகள்  **விடை: இ**

### குறுவினா

1. **'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.**

- மழை மேகத்தால் நகரம் இருள் சூழ்ந்தது. பெய்யென மழை பெய்தது.
- திடீரென சூரியன் தோன்ற மழைமேகத்தால் மறைந்திருந்த நகரம் பிரகாசமாய்க் காட்சியளிக்கிறது.
- சில மழைத்துளிகளின்மீது படுகின்ற சூரியக் கதிர்களின் பிரதிபலிப்பால் நகரமே வெள்ளை வைரமாகக் காட்சியளிக்கிறது.

www.kalvikadal.in

### சிறுவினா

1. **'நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்'' - இக்கவிதையின் அடி, 'தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே' என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக.**

**'தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோன்'**

- ஏற்றம் இறைப்பவர்கள் அலுப்புத் தெரியாமல் இருக்க பாடும் பாடல்களில் இதுவும் ஒன்று.
- விடியும் போது மூங்கில் இலை நுனியில் ஒரு சொட்டு பனிநீர் வைரம் வைத்தது போல இருக்கும். சூரியனின் ஒளிக்கதிர்கள் அந்த ஒருதுளி நீரையும் விட்டு வைக்காமல் தானே எடுத்துக் கொள்வான்.
- அதிகாலையில் மூங்கில் இலையில் இருக்கும் பனிநீரை மீண்டும் சூரியன் வாங்கிக் கொள்கிறான். இஃது ஓர் நீர்வட்டம்.

**''நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குறித்து உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்''**

- நீர் நிலைகளை வந்தடையும் மழை நீரைச் சூரியன் தன் ஒளிக்கதிர் என்ற உதடுகளால் உறிஞ்சுகிறான்.
- வானில் இருந்து விழும் மழை நீரை மீண்டும் வானுக்கே எடுத்துக் கொள்கின்றான் சூரியன். இது ஒரு நீர் வட்டம்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

நயம் :

- நாட்டுப்புறப்பாடலில் ஒரு துளி பனி நீரைக்கூட சூரியன் விடுவதில்லை; தன் ஒளிக்கதிர்களால் எடுத்துக் கொள்கிறான் எனக் குறிப்பிடப்படுகிறது.
- 'பிறகொரு நாள் கோடை' கவிதையில் கவிஞர் மழையாக வந்து நீர்நிலைகளை நிரப்பும் நீரைத் தன் கதிர்களால் இதழ் குவித்து உறிஞ்சுகிறது சூரியன் என்கிறார்.
- பனித்துளியை வாங்கிக் கொண்டான் கதிரவன் - நாட்டுப்புறப்பாடல்.
- நீர்நிலை மழைத்துளிகளை உறிஞ்சுக் கொண்டான் கதிரவன் - பிறகு ஒரு நாள் கோடை.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **பகலும் இரவும் சந்திப்பது**

அ) இரவு ஆ) அந்தி இ) வைகறை ஈ) யாமம் **விடை: ஆ**

2. **நீர்நிலையில் இருந்து ஒளிக்கதிர் நீரை எப்படி எடுத்துக்கொண்டது?**

அ) கரங்களால் பருகி ஆ) நீரில் மூழ்கி
இ) உதடுகள் குவித்து ஈ) குவளையில் பிடித்து **விடை: இ**

3. **அய்யப்ப மாதவன் இயங்கி வரும் துறைகள்**

அ) இதழியல் துறை, திரைத்துறை ஆ) கல்வித்துறை, இதழியல் துறை
இ) இசைத்துறை, இதழியல் துறை ஈ) ஒளித்துறை, திரைத்துறை **விடை: அ**

www.kalvikadal.in

4. **நம் பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ள தொகுப்பு**

அ) அய்யப்ப மாதவன் கவிதைகள் ஆ) நீர்வெளி
இ) பிறகொரு நாள் கோடை ஈ) மழைக்குப் பிறகும் மழை **விடை: அ**

5. **கூற்று சரியா? தவறா?**

**கூற்று 1 : நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது.**
**கூற்று 2 : செங்குத்தாய் இறங்கிய மழையைக் கரத்தினுள் வழிய விடுகிறேன்.**

அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று இரண்டும் தவறு
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று இரண்டும் தவறு **விடை: அ**

6. **கூற்று சரியா? தவறா?**

**கூற்று 1 : மீதமான சொட்டுகளை ஈரமான மரங்கள் தலையசைத்து உதறுகிறது.**
**கூற்று 2 : வெயில் கண்ட பறவைகள் வெயில் தாங்காமல் வீழ்கின்றன.**

அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று இரண்டும் சரி
இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி **விடை: இ**

7. **கூற்று சரியா? தவறா?**

**கூற்று 1 : கை ஏந்தி வாங்கிய துளிகள் நரம்புகளுக்குள் மத்தளம் அடிக்கின்றது.**
**கூற்று 2 : போன மழை மீண்டும் திரும்பாது என அலைகிறேன்.**

அ) கூற்று இரண்டும் சரி ஆ) கூற்று 1 தவறு 2 சரி
இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று இரண்டும் தவறு **விடை: ஈ**


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in









**8. சரியானதைத் தேர்க.**

அ) நகரம் - அமைதியாயிருந்தது
ஆ) நீர்ச்சுவடுகள் - சுவரெங்கும் இருந்தன
இ) மரங்கள் - வேர்விட்டன
ஈ) பறவைகள் - சங்கீதம் இசைக்கவில்லை **விடை: ஆ**

**9. பொருந்தாததைத் தேர்க.**

அ) மரங்கள் - தலையசைத்து உதறுகிறது
ஆ) பறவைகள் - சங்கீதம் இசைத்தன
இ) சுவர் - நீர்ச்சுவடுகள் அழித்தன
ஈ) நரம்புகள் - மத்தளம் இசைத்தன **விடை: ஈ**

**10. பொருத்துக.**

அ) இன்று - 1. அய்யப்ப மாதவன்
ஆ) நீர்வெளி - 2. கவிதைக்குறும்படம்
இ) சிவகங்கை - 3. கவிதை நூல்
ஈ) நரம்புகள் - 4. வீணை

அ) 2, 1, 4, 3 ஆ) 2, 3, 4, 1 இ) 2, 3, 1, 4 ஈ) 3, 1, 2, 4 **விடை: இ**

**11. பொருத்துக.**

அ) நகரம் - 1. நரம்புக்குள் மீட்டுதல்
ஆ) பறவைகள் - 2. உதடுகள்
இ) வீணை - 3. வைரம்
ஈ) ஒளிக்கதிர்கள் - 4. சங்கீதம்

www.kalvikadal.in

அ) 3, 1, 4, 2 ஆ) 3, 2, 1, 4 இ) 3, 2, 4, 1 ஈ) 3, 4, 1, 2 **விடை: ஈ**

**12. 'பிறகொருநாள் கோடை' என்னும் கவிதை எடுக்கப்பட்ட கவிதைத் தொகுப்பு**

அ) மழைக்குப் பிறகும் மழை ஆ) நானென்பது வேறொருவன்
இ) நீர்வெளி ஈ) அய்யப்பமாதவன் கவிதைகள் **[விடை: ஈ]**

**13. அய்யப்ப மாதவனின் 'இன்று' என்பது**

அ) கவிதைத் தொகுப்பு ஆ) கவிதைக் குறும்படம்
இ) ஆவணப்படம் ஈ) புதினம் **[விடை: ஆ]**

**14. அய்யப்பன் மாதவனின் மாவட்டம் ............... ஊர் ...............**

அ) தஞ்சாவூர், பருத்திக்கோட்டை ஆ) சிவகங்கை, நாட்டரசன் கோட்டை
இ) மதுரை, அவணியாபுரம் ஈ) திருநெல்வேலி, வள்ளியூர் **[விடை: ஆ]**

**15. அய்யப்ப மாதவனுக்குத் தொடர்பில்லாத கவிதைத் தொகுப்பினைக் கண்டறிக.**

அ) மழைக்குப் பிறகும் மழை ஆ) நானென்பது வேறெருவன்
இ) நீர்வெளி ஈ) நீர்விழிராகம் **[விடை: ஈ]**

**16. போன மழை திரும்பவும் வருமென்று மேகங்களை வெறித்துக் கொண்டு அழைகிறேன் என்று பாடியவர்**

அ) அய்யப்ப மாதவன் ஆ) இரா. மீனாட்சி
இ) வேணுகோபாலன் ஈ) ஆத்மாநாம் **[விடை: அ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



## குறுவினா

1. **அய்யப்ப மாதவன் வெளியிட்டுள்ள கவிதை நூல்கள் யாவை?**
   - மழைக்குப் பிறகும் மழை
   - நானென்பது வேறொருவன்
   - நீர்வெளி

2. **வெளில் கண்ட பறவைகளின் செயல் யாது?**

   வெளிலைக் கண்ட பறவைகள் உற்சாகம் பீறிட சங்கீதம் இசைக்கின்றன.

3. **சூரியனைக் கண்ட மரங்களின் செயல் யாது?**

   சூரியனைக் கண்ட ஈரமான மரங்கள் மீதமுள்ள சொட்டுக்களை தலையசைத்து உதறுகின்றன.

## சிறுவினா

1. **மழையிலிருந்து விடுபடும் ஊரின் தன்மையைக் கவிஞர் அய்யப்ப மாதவன் எக்குறியீடுகளின் மூலம் வெளிப்படுத்துகின்றார்?**
   - மழை நின்றதால் சுவர்கள் மீது வழிந்தோடிய மழைநீர் நின்றது.
   - கொஞ்சம் இருந்த நீர் சுவடுகளையும் சுவர் வேகமாகத் தன் வசம்படுத்திக் கொண்டது.
   - ஈரமான மரங்கள் தங்கள் கிளைகளை அசைத்து தன் மீது படர்ந்திருந்த மீதமான நீர்த்துளிகளையும் உதறியது.
   - வெயிலைக் கண்டதால், மழை நீருக்கு அஞ்சியிருந்த பறவை உற்சாகம் வெளிப்பட தன் குரலால் சங்கீதம் இசைத்தது.
   - இவையே அவ்வூர் மழையிலிருந்து விடுபடுவதைக் குறிப்பிடும் குறியீடுகளாக அய்யப்ப மாதவன் குறிப்பிடுகிறார்.

www.kalvikadal.in

2. **கவிஞர் அய்யப்ப மாதவன் பற்றிக் குறிப்பு எழுதுக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | அய்யப்ப மாதவன் |
| ஊர் | : | சிவகங்கை - நாட்டரசன் கோட்டை |
| பணி | : | திரைத்துறை, இதழியல் துறை |
| நூல்கள் | : | மழைக்கு பிறகும் மழை, நானென்பது வேறொருவன், நீர் வெளி. இன்று என்ற கவிதைக் குறும்படத்தையும் வெளியிட்டுள்ளார். |



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



12

## கற்பவை கற்றபின்

பக்கம்: 29

2 இயல்

'மழை' தொடர்பான கவிதைகளைத் தொகுத்து இதழ் ஒன்று உருவாக்குக.

| ஒரு மழைத் துளி | மழை |
|---|---|
| யாருமில்லா பெருவெளியில்<br>ஒற்றை மழைத் துளி!<br><br>ஒரே ஒரு பூவின்<br>இதழின் இடைவெளியில்<br>உட்புகுந்து<br>வெளியேறும் தருணத்தில்!<br><br>எங்கிருந்தோ வந்த<br>வண்டொன்று<br>துளியின் மிச்சத்தையும்<br>துடைத்தெரிந்தது. | வானம் மனம்<br>குளிர்ந்து<br>தன்<br>நேசமான உறவான<br>பூமிக்குப் பரிசாக<br>அளிக்கும் அதிசய<br>விந்தையே<br>"மழை" |
| **அழகு மழை** | **மழை பெய்கிறது** |
| மழை அழகு!<br><br>மழையில் நனைவது அழகு!<br><br>மழையின் ஊடே வெயில் அழகு!<br><br>மழையில் குழந்தையின் காகிதக் கப்பல்<br>அழகு!<br><br>மழைக்குப் பின் மண் வாசனை அழகு!<br><br>மழை இரவின் குளிர் அழகு!<br><br>அடுத்தநாள் பெய்யும் மழையும் அழகு! | எல்லோருக்கும்<br>பொதுவாக்கத்தான் பெய்கிறது<br>மழை.....<br><br>சிலர் நனைகிறார்கள்!<br>சிலர் குடை பிடிக்கிறார்கள்!<br>சிலர் ஓடி ஒளிகிறார்கள்!<br><br>ஆனால்.....<br><br>குழந்தைகள் மட்டுமே<br>அம்மாவின் பிடியிலிருந்து விலகி<br>மழையில்<br>நனைகிறார்கள். |

www.kalvikadal.in

✸✸★★★✸✸



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





இயல் 2
செய்யுள்

# நெடுநல்வாடை

– நக்கீரர்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **பொருத்தக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | குரங்குகள் | - | 1. கன்றுகளைத் தவிர்த்தன |
| ஆ) | பசுக்கள் | - | 2. மரங்களிலிருந்து வீழ்ந்தன |
| இ) | பறவைகள் | - | 3. குளிரால் நடுங்கின |
| ஈ) | விலங்குகள் | - | 4. மேய்ச்சலை மறந்தன |

அ) 1, 3, 4, 2 ஆ) 3, 1, 2, 4 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4 **விடை:** ஆ

2. **'பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென' – தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு**

அ) வினைத் தொகை ஆ) உரிச்சொல் தொடர்

இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் **விடை:** ஈ

www.kalvikadal.in

### குறுவினா

1. **இனநிரை – பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.**

இனநிரை – இனம் + நிரை

'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்' என்ற விதிப்படி, மவ்வீறு ஒற்றழிந்து 'இனநிரை' எனப் புணர்ந்தது.

### சிறுவினா

1. **வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?**

- வாடைக் காலத்தில் மேகம் மழையை வலப்பக்கமாகச் சூழ்ந்து பூமி குளிரும்படி மழைப் பெய்தது.
- தாழ்வான பகுதியில் வெள்ளம் பெருகிறது.
- கோவலர்கள் தாங்கள் மேயவிட்டிருந்த எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை மேடான நிலங்களுக்கு மாற்றினர்.
- பழகிய நிலத்தை விட்டுப் புது இடத்தை அடைந்ததால் வருந்தினர்.
- தண்ணீர் தாழ்வான பகுதியில் நிரம்பி விடும் என்பதால் பாதுகாப்பிற்காக மேடான பகுதிக்குச் சென்றனர். நீர்த்துளிகள் மேலே படுவதாலும், வாடைக்காற்றின் குளிர்ச்சி மிகுதியாலும் உடலுக்குச் சூடேற்ற பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றினர்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







## நெடுவினா

1. **நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.**

- ஐப்பசி மாதம் அடை மழைக்காலம் என்பார்கள். பழந்தமிழர் ஐப்பசி, கார்த்திகை மாதங்களை கூதிர்ப்பருவம் என்று அழைத்தனர். பருவ மாற்றங்களால் உயிரினங்களின் இயல்பு வாழ்க்கை மாற்றம் பெறுகிறது.
- முல்லை நில மக்கள், பறவைகள், விலங்குகள் இவற்றின் வாழ்வில் மழை குளிரால் ஏற்படும் தாக்கத்தினை நெடுநல்வாடை வருணனை செய்கிறது.
- மேகம் தான் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாக சூழ்ந்து எழுந்தது. உலகம் குளிரும்படியாக மழைப் பொழிந்தது. மழை வெள்ளம் தாழ்வானப் பகுதியை நோக்கிச் சென்றது. வெள்ளத்தை வெறுத்த மக்கள் / வளைந்த கோலையுடைய ஆயர்கள் தம் நிரைகளை மேடான பகுதியில் மேயவிட்டனர்.
- மக்கள் தாம் பழகிய நிலத்தைவிட்டு வேறு இடம் சென்றதால் வருத்தம் அடைந்தனர். கோவலர்கள் சூடியிருந்த காந்தள் மாலை கசங்கியது. குளிரால் மக்கள் கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றினர், பற்கள் நடுங்கியது.
- விலங்குகள் குளிர் மிகுதியால் மேய்ச்சலை மறந்தன; குரங்குகள் நடுங்கின; பறவைகள் நிலத்தில் விழுந்தன. பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன.
- மலையையே குளிரச் செய்வன போன்று இருந்தது என்று நக்கீரர் மழைக்கால வருணனையினை நெடுநல்வாடையில் பதிவு செய்கிறார்.

www.kalvikadal.in

### இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| **வளைஇ** | - | சொல்லிசை அளபெடை |
| **பொய்யா** | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| **புதுப்பெயல்** | - | பண்புத்தொகை |
| **கொடுங்கோல்** | - | பண்புத்தொகை |

### உறுப்பிலக்கணம்

**கலங்கி = கலங்கு + இ**

| | | |
|---|---|---|
| கலங்கு | - | பகுதி |
| இ | - | வினையெச்ச விகுதி |

### புணர்ச்சி விதி

**புதுப்பெயல் = புதுமை + பெயல்**

- 'ஈறுபோதல்' என்ற விதிப்படி 'மை' கெட்டு புது + பெயல் என்றானது.
- 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்ற விதிப்படி 'ப்' தோன்றி, 'புதுப்பெயல்' எனப் புணர்ந்தது.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. ‘ஆர்கலி’ என்ற சொல்லின் பொருள்
அ) சூரியன் ஆ) வெள்ளம் இ) கடல் ஈ) நிலா [விடை: ஆ]

2. ‘கலங்கி’ என்ற சொல்லின் சரியான பகுபத உறுப்பிலக்கண பிரிப்பு முறை
அ) கல+ங்+க்+இ ஆ) கலங்கி+இ இ) கலங்கு+க்+இ ஈ) கலங்கு+இ [விடை: ஈ]

3. வாடைக்காற்று எந்தத் திசையில் இருந்து வீசும்?
அ) வடமேற்கு ஆ) வடக்கு இ) தென்கிழக்கு ஈ) தெற்கு [விடை: ஆ]

4. போர்மேற்சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கும் படை வீடு
அ) கடவை ஆ) சிவிரம் இ) கூதிர்ப்பாசறை ஈ) வீடாரம் [விடை: இ]

5. ஆயர்கள் சூடியிருந்த மாலை
அ) குறிஞ்சி மாலை ஆ) மல்லிகை மாலை
இ) வாகை மாலை ஈ) காந்தள் மாலை [விடை: ஈ]

6. ‘உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ என்னும் விதிப்படி அமைந்த சொல்
அ) கொடுங்கோல் ஆ) புதுப்பெயல்
இ) வலனேற்பு ஈ) கண்ணுடைய [விடை: இ]

7. ‘மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்’ என்னும் விதிப்படி அமைந்த சொல்
அ) இனநிரை ஆ) ஏறுடை இ) புதுப்பெயல் ஈ) கொடுங்கோல் [விடை: அ]

www.kalvikadal.in

8. ‘வளைஇ’ - என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு
அ) மரூஉ ஆ) சொல்லிசை அளபெடை
இ) இசைநிறையளபெடை ஈ) இன்னிசையளபெடை [விடை: ஆ]

9. வெற்றி பெற்ற அரசனும் வீரரும் சூடும் பூ
அ) காஞ்சி ஆ) தும்பை இ) வாகை ஈ) வஞ்சி [விடை: இ]

10. கூற்று 1 : தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயரும் நிலையால் வருத்தம் அடைந்தனர்.
கூற்று 2 : கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றினர்.
அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று 1 தவறு 2 சரி
இ) கூற்று இரண்டும் சரி ஈ) கூற்று 1 சரி 2 தவறு [விடை: இ]

11. கூற்று : வளைந்த கோலையுடைய ஆயர் எருமை, பசு, ஆடு, ஆகிய நிரைகளை மேடான நிலங்களில் மேயவிட்டனர்.
விளக்கம் : உலகம் குளிருமாறு புதிய மழை பொழிந்ததால் தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தால் மேடான நிலம் சென்றனர்.
அ) கூற்று சரி விளக்கம் தவறு ஆ) கூற்று தவறு விளக்கம் தவறு
இ) கூற்றும் விளக்கமும் சரி ஈ) கூற்று தவறு விளக்கம் சரி [விடை: இ]



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







**12. சரியானதைத் தேர்க.**

அ) வாகை - துறை
ஆ) கூதிர்ப்பாசறை - திணை
இ) கொடுங்கோல் - வளைந்த கோல்
ஈ) கண்ணி - கன்னம் **விடை: இ**

**13. பொருந்தாததைத் தேர்க.**

அ) புதுப்பெயல் - புதிய வயல்
ஆ) புலம்பு - தனிமை
இ) மா - விலங்கு
ஈ) கவுள் - கன்னம் **விடை: அ**

**14. பொருந்தாததைக் தேர்க.**

அ) புதுப்பெயல் - ஈறுபோதல், இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.
ஆ) கொடுங்கோல் - ஈறுபோதல், இனமிகல்
இ) வலனேற்பு - உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்
ஈ) இனநிரை - மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் **விடை: இ**

**15. பொருத்துக.**

அ) ஆர்கலி - 1. பெண் குரங்கு
ஆ) கவுள் - 2. தலையில் சூடும் மாலை
இ) மந்தி - 3. கன்னம்
ஈ) கண்ணி - 4. வெள்ளம்

அ) 3, 4, 1, 2 ஆ) 2, 1, 4, 3 இ) 4, 3, 1, 2 ஈ) 4, 1, 3, 2 **விடை: இ**

www.kalvikadal.in

**16. நெடுநல்வாடையை இயற்றியவர்**

அ) கபிலர் ஆ) பரணர் இ) நக்கீரர் ஈ) மோசிகீரனார் **[விடை: இ]**

**17. நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவன்**

அ) சோழன் கரிகாலன் ஆ) சேரன் செங்குட்டுவன்
இ) பாண்டியன் நெடுஞ்செழியன் ஈ) பறம்புமலை பாரி **[விடை: இ]**

**18. நக்கீரரின் தந்தை**

அ) மதுரைக் கணக்காயனார் ஆ) மாங்குடி மருதனார்
இ) வெள்ளைக்குடி நாகனார் ஈ) இவர்களில் எவழருமிலர் **[விடை: அ]**

**19. நெடுநல்வாடை ................ நூல்களுள் ஒன்று.**

அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு
இ) பதினெண்கீழ்க்கணக்கு ஈ) நீதி **[விடை: ஆ]**

**20. நெடுநல்வாடை ................ அடிகளைக் கொண்டது.**

அ) 144 ஆ) 150 இ) 188 ஈ) 196 **[விடை: இ]**

**21. நெடுநல்வாடை அமைந்துள்ள பா**

அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) விருத்தப்பா **[விடை: ஆ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

22. **கலங்கி - இச்சொல்லைப் பிரிக்கும் முறை**

அ) கல + ங் + க் + இ ஆ) கலங்கு + இ

இ) கலங்கு + க் + இ ஈ) கல + க் + க் + இ [விடை: ஆ]

23. **புதுப்பெயர் - இச்சொல்லுக்குரிய புணர்ச்சி விதிகளைக் கண்டறிக.**

i) ஈறுபோதல்

ii) முன்நின்ற மெய் திரிதல்

iii) இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.

அ) i, ii சரி ஆ) ii, iii சரி இ) மூன்றும் சரி ஈ) i, iii சரி [விடை: ஈ]

24. **கூதிர்ப்பருவத்திற்குரிய மாதங்கள்**

அ) தை, மாசி ஆ) பங்குனி, சித்திரை

இ) ஐப்பசி, கார்த்திகை ஈ) மார்கழி, தை [விடை: இ]

25. **கண்ணி என்பது**

அ) கழுத்தில் அணியும் மாலை ஆ) தலையில் சூடும் மாலை

இ) கையில் அணியும் அணிகலன் ஈ) காலில் அணியும் தழல் [விடை: ஆ]

26. **கூதிர்ப் பாசறை என்பது**

அ) போர்மேற் சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கும் படைவீடு

ஆ) போர்மேற் சென்ற அரசன் தோற்றுப் பதுங்கும் படைவீடு

இ) தலைவனும் தலைவியும் குளிர்காலத்தில் தங்கும் வீடு

ஈ) போரில் காயம் அடைந்த மன்னன் சிகிச்சை பெறுமிடம் [விடை: அ]

www.kalvikadal.in

27. **ஆயர் ................ மாலையைத் தலையில் சூடியிருந்தனர்.**

அ) அத்தி ஆ) முல்லை இ) காந்தள் ஈ) குறிஞ்சி [விடை: இ]

28. **முல்லை நிலத்தில் குளிரால் நடுங்கியவை**

அ) பறவைகள் ஆ) குரங்குகள் இ) பசுக்கள் ஈ) எருதுகள் [விடை: ஆ]

29. **'மா' என்பதன் பொருள்**

அ) பறவை ஆ) விலங்கு இ) வானம் ஈ) பூமி [விடை: ஆ]

30. **கன்றுகோள் ஒழியக் கடிய வீசி**
**குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்**
**-இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள இலக்கிய நயம்**

அ) எதுகை ஆ) இயைபு இ) முரண் ஈ) அந்தாதி [விடை: அ]

## குறுவினா

1. **'நெடுநல்வாடை' - பொருள் விளக்கம் தருக.**

- தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்ப மிகுதியால் நெடுவாடை (நீண்ட வாடை)யாக இருந்தது.
- போர்ப்பாசறையில் இருந்த தலைவனுக்கு வெற்றி பெற ஏதுவான நல்வாடையாக இருந்தது.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in







2. **நக்கீரர் பற்றிய சிறுகுறிப்பு வரைக.**
   - மதுரைக் கணக்காயனார் மகன் நக்கீரர்.
   - அகநானூற்றில் 17 பாடல்கள், குறுந்தொகையில் 8 பாடல்கள், நற்றிணையில் 7 பாடல்கள், புறநானூற்றில் 3 பாடல்கள் பாடியுள்ளார்.
   - இறையனார் களவியலுக்குச் சிறந்த உரைதந்தவர்.
   - கபிலர், பரணர் காலத்தவர்.
   - 188 அடிகளை உடையை 'நெடுநல்வாடை' என்ற நூலை இயற்றியவர்.

3. **'வாகைத்திணை' விளக்குக.**
   - வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப்பூவைச் சூடுவதாகும்.
   - தாங்கள் பெற்ற வெற்றியைக் கொண்டது வாகைத்திணை.

4. **'கூதிர்ப்பாசறை' என்றால் என்ன?**

   கூதிர்ப்பாசறை என்பது போர்மேற்கொண்ட அரசன் குளிர்காலத்தில் தாங்கும் படைவீடாகும்.

5. **கூதிர்பருவம் என்பது யாது?**

   ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் கூதிர்ப்பருவமாகும்.

6. **குளிரினைப் போக்க கோவலர்கள் என்ன செய்தார்கள்?**

   கோவலர்கள் பலரும் கூடிக் கொள்ளி நெருப்பினில் கைகளைக் காட்டி சூடாக்கி குளிரினைப் போக்க முயற்சித்தார்கள்.

www.kalvikadal.in

## சிறுவினா

1. **கூதிர் காலத்தின் தன்மையான நெடுநல்வாடை குறிப்பிடுபவை யாவை?**
   - விலங்குகள் மேய்ச்சலை மறந்தன.
   - பெண் குரங்குகளின் உடல் குளிரால் கூனிப் போயின.
   - பறவைகள் குளிரால் நடுங்கி மரத்தின் மீதிருந்து கீழே விழுந்தன.
   - பால் குடிக்க வரும் கன்றுகளைப் பசுக்கள் உதைத்துத் தள்ளின.
   - குன்றே குளிர்ந்தது போல கூதிர்காலத்தின் தன்மை இருந்தது.

2. **வாகைத் திணை சான்றுடன் விளக்குக.**

   **திணை விளக்கம்:**

   வெற்றிபெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப் பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத் திணையாகும்.

   **சான்று:**

   **வையகம் பணிப்ப வலனேர்பு வளைஇப்**
   **பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென...**
   – என்ற நெடுநல்வாடைப் பாடல்.

   **பொருத்தம்:**

   வாடைக் காலத்தில் மேகம் மழையை வலப்பக்கமாகச் சூழ்ந்து பூமி குளிரும்படி மழைப் பெய்தது. வாடைக்காற்றின் குளிர்ச்சி மிகுதியாலும் உடலுக்குச் சூடேற்ற பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றினர். அவர்களோடு மன்னனும் பாசறையில் குளிர்காலத்தில் வெற்றியைக் கொண்டாடினான்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

3. **'கூதிர்ப்பாசறை' துறையைச் சான்றுடன் விளக்குக.**

**துறை விளக்கம்:**

கூதிர்ப்பாசறை என்பது போர்மேற்கொண்ட அரசன் குளிர்காலத்தில் தாங்கும் படைவீடாகும்.

**சான்று:**

**வையகம் பணிப்ப வலனேர்பு வளைஇப்**
**பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென...**
– என்ற நெடுநல்வாடைப் பாடல்.

**பொருத்தம்:**

வாடைக் காலத்தில் மேகம் மழையை வலப்பக்கமாகச் சூழ்ந்து பூமி குளிரும்படி மழைப் பெய்தது. வாடைக்காற்றின் குளிர்ச்சி மிகுதியாலும் உடலுக்குச் சூடேற்ற பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றினர். அவர்களோடு போர்மேற் சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கும் படைவீடு கூதிர்ப்பாசறை.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 31

**தற்கால வாழ்க்கைமுறையில் மழை, குளிர் காலங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவது குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

ஆசிரியர் : மாணவ – மாணவியருக்கு வணக்கம், இன்று, மழை மற்றும் குளிர்காலங்களில் ஏற்படும் பாதிப்புப் பற்றி உங்களோடு கலந்துரையாட வந்துள்ளேன்.

மாணவர்கள் : ஐயா! அறிந்துகொள்ள மிக ஆவலாக இருக்கிறோம்.

ஆசிரியர் : மிக்க மகிழ்ச்சி! சொல்கிறேன்.

மாணவர்கள் : உறுதியாக ஐயா! நாங்கள் உங்கள் அறிவுரைப்படியே நடந்து கொள்வோம் ஐயா!

ஆசிரியர் : நல்லது, அன்பு மாணவர்களே!

**முதலாவதாக மழைக்காலப் பாதிப்பு :**

- மழைக்காலங்களில் மழை – ஆடை அணிந்து கொள்ளவில்லை என்றால் சளி, சுரம் இவைகளின் வாயிலாக உடல் பாதிப்புக்கு உள்ளாகும்.
- வீட்டினைச் சுற்றி மேடான அமைப்பு இல்லை எனில் மழை நீர் தேங்கும். நீர்தேங்கினால் கொசுத்தொல்லை ஏற்படும் அபாயம் ஏற்படும்.
- மழைக்காலத்தில் மின்கம்பங்களுக்கு அருகில் நிற்றல், மரங்களுக்குக் கீழே நிற்றல் போன்ற செயல்களாலும் பாதிப்பு மற்றும் ஆபத்து ஏற்படும்.
- மொட்டை மாடியின் மேல் நீர்தேங்காமல் பாதுகாக்க வேண்டும், தேங்கினால் மேற்கூரை நீரினால் ஊறி வீடே இடிந்துவிழும் சூழல் ஏற்படும்.
- குளிர்காலங்களில், தலைக்கு கம்பளி ஆடை, காதுக்கு அடைப்பானும் அணிய வேண்டும், இல்லையெனில் குளிர்க்காற்று காதில் புகுந்து காய்ச்சில், சளி தொந்தரவினை உண்டாக்கும். அதிகமான குளிர் சிறு குழந்தைகளுக்குச் சிறுசிறு உடல் உபாதைகளை ஏற்படுத்தும்.
- எனவே, வருமுன்னர் காப்போம் என்னும் கூற்றுப்படி நம்மை நாமே காக்க முற்பட வேண்டும்.

✹✹★★★✹✹





www.kalvikadal.in
Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

இயல் 2
துணைப்பாடம்

# முதல்கல்

– உத்தமசோழன்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.**

**முன்னுரை :**

உலக உயிர்களை வாழவைப்பது மழை. அந்த மழையை நாம் முறையாகப் பாதுகாக்காமல் சில உயிர்களையும், பயிர்களையும் நாசமாக்குகிறோம். அதைக் கண்டு மனம் நொந்து தனி மனிதனாக இருந்து தம் ஊரைப் பொறுப்புணர்ச்சியால் மாற்றிய மருதனின் பண்பு நலன்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**மழையின் கோரம் :**

வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தால் மணிக்கு நூறு கிலோ மீட்டர் வேகத்தில் காற்றுடன் கூடிய மழை பெய்கிறது. நாற்றுப் பிடுங்கி, உரம் போட்டு நட்டு ஒரு வாரமே ஆன குழந்தை போல் காட்சியளித்த பயிர்கள் எல்லாம் மழையில் மூழ்கியது. உபரி நீர் வெளியேறவில்லை இப்படியே போனால் அழுகிவிடும் என்ன செய்வது என்று ஏங்கினான் மருதன்.

**உபரிநீர் வெளியேற்றம் :**

காற்றையும், மழையையும் பொருட்படுத்தாமல் கரை வழியே வந்தான். உபரித் தண்ணீர் வெளியேற வேண்டிய மதகை எட்டிப் பார்த்தான். மதகைச் சுற்றி மட்டுமல்லாமல் ஊரைச் சுற்றி எங்கு பார்த்தாலும் மண்டிக்கிடந்த நெய்வேலி காட்டாமணக்கு தண்ணீரைத் தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கும்.

**மருதனின் நல்யோசனை :**

மருதன், பயிர்கள் மூழ்காமலும் மொத்த கிராமங்களும் தப்பிக்க நல்ல வழியை யோசித்தான். தன் உயிரைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் தண்ணீரில் இறங்கி செடியைப் பிடுங்கி அரிந்தான்.

**மாரி வருதல் :**

மாரி இந்தச் சனியன்பிடிச்ச செடியாலதான் தண்ணி வடிய மாட்டேங்குது; நீ வாடா கொஞ்ச உதவி செய் என்றான் மருதன். அவன் மறுத்ததை எண்ணி மருதன் கோபம் அடைந்தான்.

**மருதனின் ஆக்கம் :**

இப்படியே போனால் ஊரே நாற்றம் எடுத்து விடும் என்று ஏக்கத்தோடு செடிகளைப் பிடிங்கிக் கொண்டிருந்தான். அப்போது அந்த வழியாக வந்த கிழவன் காளியப்பனிடம் கூறினான். அவர் பெரிய நிலக்கிழார் என்பதால் வீட்டு ஒருவர் வந்து செடிகளைப் பிடிங்கி பயிரையும், உயிரையும் காப்பாற்ற முடியும் என்று எண்ணி அவரிடமும் கூறினான். அவரும் பின் வாங்கினார். பிறகு பிரேம்குமாரைச் சந்தித்தான்; அவனும் பல காரணம் கூறிவிட்டு நகர்ந்தான்.


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in





**மருதனின் புலம்பல் :**

வீடு திரும்பிய மருதன் ஊருக்கு ஏற்படும் ஆபத்தை யாரிடமும் சொல்லி பலன் இல்லை. மன வலியால் துடித்தான் உண்ணவில்லை, உறங்கவில்லை. கவலை தோய்ந்த முகத்தோடு மீண்டும் இரவோடு இரவாக காட்டாமணக்கு செடி பிடுங்க கிளம்பினான்.

**அல்லி வருதல் :**

முடியை அள்ளிச் சொருகிக் கொண்டு வாய்க்காலை நோக்கி நடந்தாள் அல்லி. தன்னந்தனியே தண்ணீரில் மருதன் படும்பாட்டைக் கண்டு திகைத்தாள். அவளை அறியாமலேயே புடவையை வரிந்துக்கட்டி வாய்க்காலில் இறங்கினாள்.

மாமா நீ சொல்றது நிஜம்தான். ஊரு நல்லா இருந்தாதான் நாம நல்லா இருக்க முடியும். நீயும் நானும் சேர்ந்து செய்வோம் என்று செய்தாள்.

**ஊர் மக்கள் வரல் :**

நொடி நேரத்தில் ஊர் மிராசு காளியப்பன் வண்டியிலிருந்து குதித்து வேட்டியைக் கரையில் போட்டுவிட்டு வாய்க்காலில் இறங்கினார். வண்டிக்காரன் மூலம் செய்தி பரவியது. ஊரே கூடி வாய்க்காலை நோக்கி ஓடியது .

**முடிவுரை :**

**''அழிவதூஉம் ஆவதூஉம் ஆரி வழிபயக்கும்**
**ஊதியமும் சூழ்ந்து செயல்''**

என்பதற்கு ஏற்ப வாழும் ஊருக்கு எவ்விதத்திலாவது நன்மை செய்ய வேண்டும் என்று எண்ணி ஆராய்ந்து செயல்பட்டு ஊரையே செயல்பட வைத்த மருதனின் பண்புநலன் பாராட்டத்தக்கது.

**2. புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளர்களுக்குக் கடிதம் எழுதுக.**

அனுப்புநர்

ஊர்ப் பொது மக்கள்,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி.

பெறுநர்

உயர்திரு மின்வாரியப் பொறியாளர்,
மின்வாரிய அலுவலகம்,
திருநெல்வேலி.

ஐயா,

பொருள் : மின் இணைப்புகளைச் சரி செய்ய வேண்டுவது தொடர்பாக.

வணக்கம்.

கடந்த மாதம் நான்காம் நாள் பாளையங்கோட்டையில் வீசிய தானே புயலால் மரங்கள் மின் கம்பங்கள் முற்றிலும் சாய்ந்தன. மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு மக்கள் மிகவும் துன்பத்திற்கு உள்ளாகி வருகின்றனர். இரவில் வெளியே செல்வதற்கு அச்சமாக இருக்கிறது. ஆதலால் அருள்கூர்ந்து அறுந்து கிடக்கும் மின்கம்பிகளைச் சரிசெய்து மின் இணைப்புத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி,

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
ஊர்ப் பொது மக்கள்.
பாளையங்கோட்டை.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

உறைமேல் முகவரி:

உயர்திரு மின்வாரியப் பொறியாளர்,
மின்வாரிய அலுவலகம்,
திருநெல்வேலி.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **'உத்தம சோழன்' அவர்களின் இயற்பெயர்**

அ) செல்வன் ஆ) செயராஜ் இ) செல்வராஜ் ஈ) செல்லத்துரை **விடை: இ**

2. **'முதல்கல்' சிறுகதை இடம் பெற்ற தொகுப்பு**

அ) ஆரம்பம் இப்படித்தான் ஆ) சிந்து டீச்சர்
இ) தஞ்சை சிறுகதைகள் ஈ) குருவி மறந்த கூடு **விடை: இ**

3. **'முதல்கல்' சிறுகதையின் ஆசிரியர்**

அ) புதுமைப்பித்தன் ஆ) உத்தமசோழன் இ) ஜானகிராமன் ஈ) சுஜாதா **விடை: ஆ**

4. **காளியப்பன் தன் மகளைத் திருமணம் முடித்துக் கொடுத்ததாகக் கூறிய ஊர்**

அ) வானமாதேவி ஆ) உலகளந்தாள் தேவி இ) சூரப்பள்ளம் ஈ) கிழக்குக்கரை **விடை: அ**

5. **கூற்று 1 : வீட்டுக்கு ஒரு ஆள் அரிவாள், மண்வெட்டியுடன் வடிவாய்க்கால் கரைக்கு வர வேண்டும்.**
**கூற்று 2 : நீ சொல்வது நிஜம்தான் மாமா. ஊர் நன்றாக இருந்தால்தான் நாமும் நன்றாக இருக்கலாம்.**

அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று 1 தவறு 2 சரி
இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று இரண்டும் சரி **விடை: ஈ**

6. **கூற்று 1 : "இவ்வளவு நீளம் மண்டிக்கிடக்கும் செடிகளை அரிந்து எறிவது லேசான காரியமா ?"**
**கூற்று 2 : ஊர்க்காரர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்தால், ஒரே நாளில் வாய்க்காலும் தூய்மையாகிவிடும்.**

அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று இரண்டும் சரி
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று இரண்டும் தவறு **விடை: ஆ**

7. **சரியானதைத் தேர்க.**

அ) மருதன் - குமுதம்
ஆ) பிரேம்குமார் - நாகூர்பிச்சை
இ) காளியப்பன் - வேலையாள்
ஈ) மாரிமுத்து - விவசாயி **விடை: ஆ**

8. **சரியானதைத் தேர்க.**

அ) 60 வேலி - ஊரின் மொத்த நிலம்
ஆ) அல்லி - மருதனின் அம்மா
இ) முல்லையம்மா - காளிப்பனின் தாய்
ஈ) காளியப்பன் - வசதியற்றவர் **விடை: அ**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

9. **பொருந்தாததைத் தேர்க.**

அ) வடிவாய்க்கால் - காட்டாமணக்குச் செடி
ஆ) பூவரச தழை - மாட்டுக்கு உணவு
இ) காளியப்பன் - வில் வண்டி
ஈ) மருதன் - அல்லி **விடை: இ**

10. **பொருத்துக.**

அ) முல்லையம்மா - 1. வலைபோடுபவர்
ஆ) நாகூர் பிச்சை - 2. அல்லி
இ) மாரிமுத்து - 3. காளியப்பன்
ஈ) மருதன் - 4. பிரேம்குமார்

அ) 3, 1, 2, 4 ஆ) 3, 4, 2, 1 இ) 3, 4, 1, 2 ஈ) 4, 3, 2, 1 **விடை: இ**

11. **தஞ்சைச் சிறுகதைகள் என்னும் தொகுப்பினுக்கு உரியவர்**

அ) செல்வராஜ் ஆ) சோலை சுந்தரப் பெருமாள்
இ) மேலாண்மை பொன்னுசாமி ஈ) இவர்களில் எவருமிலர் **[விடை: ஆ]**

12. **உத்தம சோழனின் ஊர்**

அ) கும்பகோணம் அருகே சிவபுரம் ஆ) திருத்துறைப்பூண்டி அருகே நீவாம்மாள்புரம்
இ) கடலூர் அருகே மஞ்சக்குப்பம் ஈ) மயிலாடுதுறை அருகே தேரழுந்தூர் **[விடை: ஆ]**

13. **மனிதத்தீவுகள், குருவி மறந்த வீடு உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளின் ஆசிரியர்**

அ) சோலை சுந்தரப் பெருமாள் ஆ) உத்தமசோழன்
இ) மேலாண்மை பொன்னுச்சாமி ஈ) ஜெயகாந்தன் **[விடை: ஆ]**

www.kalvikadal.in

14. **உத்தமசோழன் எழுதாத சிறுகதையைக் கண்டறிக.**

அ) தொலைதூர வெளிச்சம் ஆ) கசக்கும் இனிமை
இ) கனல்பூக்கள் ஈ) காவல்கோட்டம் **[விடை: ஈ]**

15. **உத்தமசோழன் கடந்த 12 ஆண்டுகளாக நடத்தி வரும் திங்களிதழ்**

அ) கிழக்கு வாசல் உதயம் ஆ) மேற்கு வாசல் மறைவு
இ) வடக்கு வாசல் வாடை ஈ) தெற்குவாசல் தென்றல் **[விடை: அ]**

16. **'முதல் கல்' கதையில் இடம்பெறும் கிழவி ................., கிழவன் .................**

அ) முல்லையம்மாள், காளியப்பன் ஆ) காளியம்மாள், முல்லையப்பன்
இ) மாரியம்மாள், மருதன் ஈ) பார்வதி, சிவக்கொழுந்து **[விடை: அ]**

17. **'முதல் கல்' கதையில் கிராமத்தின் முதல் பட்டதாரியாகக் குறிப்பிடப்படுபவர்**

அ) மருதன் ஆ) மாரி இ) பிரேம்குமார் ஈ) அல்லி **[விடை: இ]**

18. **'முதல் கல்' கதையில் பிரேம்குமாருக்குப் பெற்றோர் இட்ட பெயர்**

அ) அமாவாசை ஆ) பிச்சைமுத்து இ) இருளாண்டி ஈ) நாகூர்பிச்சை **[விடை: ஈ]**

19. **'முதல் கல்' கதையில் மருதன் தொடங்கிய பணி**

அ) நெல் அறுவடை ஆ) வடிவாய்க்கால் தூய்மை
இ) கல் அறுத்தல் ஈ) குளம் வெட்டுதல் **[விடை: ஆ]**

20. **'முதல் கல்' கதையின் நாயகன் மருதனின் மனைவி**

அ) முல்லையம்மாள் ஆ) மாரியம்மாள் இ) அல்லி ஈ) வள்ளி **[விடை: இ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## நெடுவினா

1. **'ஊர்கூடித் தேர் இழுக்கும் போதும்' தேர் வடத்தைப் பிடிக்கும் முதல்கரமான இருந்த மருதனின் பண்பு நலத்தை விவரி.**

**முன்னுரை :**

செல்வராஜ் என்னும் இயற்பெயருடைய உத்தம சோழன் எழுதிய 'முதல்கல்' என்ற கதையில் வரும் மருதன் ஊர் மீது அதிக அக்கறை உடையவன். பெருமழை பொழிந்து வெள்ளமானது ஊரைச் சூழ்ந்து இருக்கும் நீரை வடிய வைத்து பயிர்களைக் காப்பாற்றும் முனைப்புடன் செயல்படும் மருதனின் பண்பு நலன்களை இக்கட்டுரை மூலம் அறிவோம்.

**பயிர்களின் நேசன் :**

பயிர் விளைச்சலுக்காக எந்த மழைக்காகக் காத்திருந்தார்களோ அந்த மழையே பயிர்களை மூழ்கடித்தால் எப்படி மனம் பொறுத்துக் கொள்ளும். பயிர்கள் வெள்ளத்தில் மூழ்குவதைக் கண் டதும் மருதன் வருத்தம் அடைகின்றான். ஊரில் உள்ள பல நபர்களிடம் உதவியும் கேட்கின்றான். எதுவுமே நடக்கவில்லை என்றதும் வேதனை அடைகின்றான். தண்ணீரில் தத்தளித்துக் கொண் டிருந்த நெற்பயிர்கள் அத்தனையும், "என்னைக் காப்பாத்து, என்னைக் காப்பாத்து" என்று அவனைப் பார்த்து வேண்டுவதாக உணர்கிறான். இரவு முழுவதும் தூக்கம் இல்லாமல் தவிக்கிறான்.

**ஊர் வளத்தைக் காப்பாற்றும் உயர்குணம் :**

வடிவாய்க்கால் முழுவதும் இருபுறமும் சுவர்போல வளர்ந்திருந்த காட்டமாணக்குச் செடிகளை அப்புறப்படுத்தி விட்டால், பயிர்களைக் காப்பாற்றுவதுடன், ஊரையும் காப்பாற்றிவிடலாம் என்ற எண்ணம் அவன் மனதில் தோன்றியதும் மருதன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை, வடிநீரை வடித்து ஊரைக் காப்பாற்றிவிடலாம் என்ற எண்ணம் வந்ததும், தான் தனியாகச் செய்து மதிப்பு அடையலாம் என்று எண்ணாமல் அனைவருடனும் இணைந்து செயல்பட வேண்டும் என்ற எண் ணம் மேலிட ஒவ்வொருவரிடமும் உதவியைக் கேட்கும் உத்தம உயர்குணம் கொண்டவனாக மருதன் விளங்குகிறான்.

**கடமையை உயிராகக் கருதியவன்**

மருதன் காட்டாமணக்குச் செடிகளை அப்புறப்படுத்த மாரியிடம் உதவி கேட்கும் போதும் ; பெரிய மிரசாக வலம் வரும் காளியப்பனிடம் இது பற்றிப் பேசும் போதும் ; கிராமத்தின் முதல் பட்டதாரியான பிரேம்குமாரிடம் பேசி விவரத்தை விளக்கி ஏமாற்றம் அடையும் போதும் ; தன் ஆற்றாமையை தன் மனைவி அல்லியிடம் கூறிப் புலம்பும் போதும் மனம் தளராமல் தன் கடமையை எப்படியாவது நிறைவேற்றிட வேண்டும் என்ற அவனது மன உறுதிப்பாடு கூறிப் புலனாகும். தனியாளாகச் செய்ய முடியாத இச்செயலுக்காக எல்லோரின் உதவியையும் மருதன் நாடுவது அவனது பொதுநலனை வெளிப்படுத்துகின்றது.

**மருதனின் பொதுநலன்**

அந்த ஊரில் இருந்த அறுபது வேலி நிலத்தில் ஒரு 'சக்கரைக்குழி' அளவு கூட நிலம் இல்லாத மருதன் பொதுநலனை மட்டுமே கருத்தில் கொண்டு, எப்படியாவது நீரை வடித்துவிட வேண் டும் என்ற எண்ணத்துடனே மருதன் இருக்கின்றான். மருதன் அவனுக்குப் புகழ் கிடைக்க வேண் டுமென்று செயல்படவில்லை. நீரில் மூழ்கும் அத்தனை பயிர்களையும் காப்பாற்ற வேண்டும்; ஊரினைச் சூழ்ந்திருக்கும் நீரினை வடிய விட வேண்டும் என்ற எண்ணமே அவனிடம் இருந்தது.

**ஊருக்கு வழிகாட்டிய தலைமைப்பண்புடையவன் :**

இரவு முழுவதும் தூக்கமில்லாமல் தவித்த மருதன் விடிவதற்குள் தனி ஒருவனாய் வடிவாய்க்காலில் இறங்கி இருபுறமும் சூழ்ந்திருந்த காட்டாமணக்குச் செடிகளை அரிந்து அப்புறப்படுத்தினான். இதனைக் கண்ட அவனது மனைவி அல்லியும் உதவிக்கு ஓடி வர,



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



வலைபோட்டுக் கொண்டிருந்த மாரிமுத்துவும் அவனுடன் இணைய, செலவு வந்திடுமே என்ற எண்ணத்தால் மகள் வீட்டிற்குச் செல்வதாகக் கூறி வில் வண்டியில் சென்று கொண்டிருந்த மிராசு காளியப்பனும் வடிவாய்க்காலில் இறங்க ஊரே ஒன்றாகக் கூடிவந்து காட்டாமணக்குச் செடியை ஆர்வமாக அப்புறப்படுத்த மருதன், வழிகாட்டியாக விளங்கினான்.

**முடிவுரை :**

சுயநலம் இல்லாமல், பொதுநலனைக் கருத்தில் கொண்டு நாமே செயலில் இறங்கினால் வெற்றி பெறலாம் என்ற உயர்ந்த குணம் உடையவான மருதன் இருப்பதைக் காணலாம். நமக்கு ஏன் வீண் வம்பு என்று ஒதுங்காமல் முதலில் நம்மால் முடிந்ததைச் செய்வோம் என்ற துணிவுடன் செயலில் இறங்கிய மருதன் தேர்வடத்தைப் பிடித்த முதல் கரமாக விளங்கினான்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 37

**உங்கள் இல்லத்தில் நடைபெறும் திருமணவிழாவுக்கு வருகை தரும் விருந்தினர்களுக்கு மரக்கன்று ஒன்று தருவதாக முடிவு செய்துள்ளீர்கள். மரக்கன்று வாங்கும் நோக்கங்களையும் அதனைப் பயிரிடுவதால் ஏற்படும் பொது நன்மைகளையும் கொண்ட இருபக்கச் சிற்றேட்டை உருவாக்குக.**

**மரக்கன்று வழங்குதன் நோக்கம் :**

- மரங்கள் அழிக்கப்பட்டு வரும் சூழல்களில் மரக்கன்றுகள் நடுவதற்கான ஏற்ற சூழலை உருவாக்குதல்.
- பழம், பட்சணம், வெற்றிலை போன்றவற்றைப் பையிலே போட்டுக் கொடுப்பதைவிட மரக்கன்றுகள் கொடுப்பது சாலச்சிறந்தது.
- சுற்றுச்சூழலை நல்லமுறையில் அமைக்கவே மரக்கன்றுகள் வழங்குதல்.

**பொது நலன்கள் :**

- மரக்கன்றுகள் வளர்ப்பதால் நல்ல தூய காற்று கிடைக்கும்.
- கோடையில் நிழல் உருவாகும்.
- மரங்கள் மாசுக்களைக் கட்டுப்படுத்தும்
- மரங்கள் குளிர்ச்சி தரும்
- குளிர்ச்சியால் மழை உண்டாகும்.
- மழை பொழிந்தால் மண் மகள் சிலிர்ப்பாள்.
- மழையால் பயிர்வளம் பெருகும்.
- பயிர்வளத்தால் விவசாயம் பெருகும்.
- விவசாயம் பெருகினால் வீடு நலம் பெறும்.
- வீடு நலம் பெற்றால் நாடு தானே வளம் பெறும்.

* * * * * * *





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



# இயல் 2 நால்வகைப் பொருத்தங்கள்

## இலக்கணம்

## இலக்கணத் தேர்ச்சி கொள்

பக்கம்: 41

1. **தமிழில் திணைப்பாகுபாடு ................. அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.**
   அ) பொருட்குறிப்பு  ஆ) சொற்குறிப்பு
   இ) தொடர்க்குறிப்பு  ஈ) எழுத்துக்குறிப்பு  **விடை: அ**

2. **"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே**
   **அஃறிணை என்மனார் அவரல பிறவே" - இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்**
   அ) நன்னூல்  ஆ) அகத்தியம்
   இ) தொல்காப்பியம்  ஈ) இலக்கண விளக்கம்  **விடை: இ**

3. **யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே**
   அ) அஃறிணை, உயர்திணை  ஆ) உயர்திணை, அஃறிணை
   இ) விரவுத்திணை, அஃறிணை  ஈ) விரவுத்திணை, உயர்திணை  **விடை: ஆ**

4. **பொருத்துக.**

www.kalvikadal.in

| | | | |
|---|---|---|---|
| அ) | அவன் அவள் அவர் | - | 1. உளப்படுத்தாதத் தன்மைப்பன்மை |
| ஆ) | நாங்கள் முயற்சி செய்வோம் | - | 2. உளப்பாட்டுத் தன்மைப்பன்மை |
| இ) | நாம் முயற்சி செய்வோம் | - | 3. தன்மைப் பன்மைப் பெயர்கள் |
| ஈ) | நாங்கள், நாம் | - | 4. பதிலிடு பெயர்கள் |

   அ) 4, 1, 2, 3  ஆ) 2, 3, 4, 1  இ) 3, 4, 1, 2  ஈ) 4, 3, 1, 2  **விடை: அ**

5. **மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை ?**
   திணை, பால், எண், இடம்.

6. **உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விடுதி பெற்றுவருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.**
   - நீங்கள் எங்கள் வீட்டிற்கு வாருங்கள்.
   - அவர்கள் ஆலயம் வந்தார்கள்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **தமிழில் பொருட்குறிப்பை அடிப்படையாகக் கொண்டு ................. பாகுபாடு அமைந்துள்ளது.**
   அ) இருதிணைப்  ஆ) பால்  இ) இடப்  ஈ) எண்  **[விடை: ஆ]**

2. **பெரும்பாலான தொடர்களில் எழுவாயை வைத்துக் கொண்டே வினைமுற்றின் ................. ஆகியவற்றைச் சொல்லிவிடலாம்.**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

அ) திணை, பால் ஆ) திணை, எண்
இ) திணை, பால், எண் ஈ) திணை, விகுதி **விடை: இ**

3. **'அவர்கள்' என்னும் சொல் பன்மைப் பொருளை உணர்த்தும்**
அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல்
இ) பதிலிடு பெயர்ச்சொல் ஈ) பதிலிடு வினைச்சொல் **விடை: இ**

4. **தமிழில் படர்க்கைப் பலர்பால் சொல்லாகிய தாங்கள் என்பது தற்போது ................ இடத்திலும் வரும்.**
அ) படர்க்கை ஆ) தன்மை
இ) இவற்றில் எதுவுமில்லை ஈ) முன்னிலை **விடை: ஈ**

5. **சரியானதைத் தேர்க.**
அ) பத்துமரம் வீழ்ந்தது - ஒருமை பன்மை வேறுபாடு எழுவாயில் வெளிப்படவில்லை
ஆ) நாம் முயற்சி செய்வோம் - உளப்படுத்தாதத் தன்மைப்பன்மை
இ) நாங்கள் முயற்சி செய்வோம் - ஒருமை பன்மை வேறுபாடு எழுவாயில் வெளிப்படுகிறது
ஈ) அவர்கள் - பதிலிடு பெயர்ச்சொல் **விடை: ஈ**

6. **சரியானதைத் தேர்க.**
அ) யார்? எது? - பால் வேறுபாடு
ஆ) ஆசிரியர் வந்தார் - பலர்பால் விகுதி உயர்வு விகுதி வரும்
இ) அவர் வந்தார் - பன்மைப் பொருளை உணர்த்துகிறது
ஈ) தங்கமணி பாடினான் - பெண்பால் விகுதி பெற்றுள்ளது **விடை: ஆ**

7. **சரியானதைத் தேர்க.**
www.kalvikadal.in
அ) ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளது.
ஆ) ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளன.
இ) ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் உள்ளது.
ஈ) ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் உள்ளன. **விடை: இ**

8. **சரியானதைத் தேர்க.**
அ) பத்துத் தேங்காய்கள் ஆ) இரண்டு மனிதர்
இ) ஒரு மரம் வீழ்ந்தன ஈ) அவர்கள் வந்தார்கள் **விடை: ஈ**

9. **பொருத்துக.**
அ) பேசுபவன், கேட்பவன், பேசப்படும் பொருள் - 1. ஆண்பால் பெண்பால் பொதுப்பெயர்
ஆ) பத்துத் தேங்காய் - 2. பலர்பால் சொல்
இ) தங்கமணி - 3. அஃறிணை பன்மை விகுதி கட்டாயமில்லை
ஈ) மாணவர் வந்தனர் - 4. தன்மை, முன்னிலை, படர்க்கை
அ) 4, 2, 3, 1 ஆ) 4, 3, 1, 2 இ) 4, 1, 3, 2 ஈ) 1, 2, 3, 4 **விடை: ஆ**

10. **மொழியின் அடிப்படைப் பண்புகள்**
i) திணை ii) பால் iii) எண் iv) இடம்
அ) i), ii) சரி ஆ) iii), iv) சரி
இ) iii), iv) சரி மட்டும் தவறு ஈ) நான்கும் சரி **[விடை: ஈ]**

11. **உலக மொழிகள் அனைத்திலும் ................ மிகுதி என்பர்.**
அ) பெயர்ச்சொற்களே ஆ) வினைச்சொற்களே
இ) இடைச்சொற்களே ஈ) உரிச்சொற்களே **[விடை: அ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in



12. **பெயர்ச்சொற்களைத் திணை அடிப்படையில் ................ வகையாகப் பிரிப்பர்.**

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து **[விடை: அ]**

13. **தமிழில் ................ பகுப்பு இலக்கண அடிப்படையிலேயே அமைந்துள்ளது.**

அ) எண் ஆ) செய்யுள் இ) இலக்கிய ஈ) பால் **[விடை: ஈ]**

14. **................ அடிப்படையிலேயே ஒன்றன்பால் பலவின்பால் என்பன அறியப்படுகின்றன.**

அ) பால் ஆ) இட

இ) தன்மை, முன்னிலை ஈ) ஒருமை, பன்மை **[விடை: ஈ]**

15. **இடம் ................ வகைப்படும்.**

அ) இரு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து **[விடை: ஆ]**

16. **தன்மைப் பன்மையில் உள்ள வகை ................**

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து **[விடை: அ]**

17. **பேசுபவர் முன்னிலையாரையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு பேசுவது**

அ) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை ஆ) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

இ) உளப்படுத்தாத முன்னிலைப் பன்மை ஈ) உளப்பாட்டு முன்னிலைப் பன்மை **[விடை: ஆ]**

18. **பேசுபவர் முன்னிலையாளரைத் தவிர்த்துத் தன்மைப் பன்மையில் பேசுவது**

அ) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை ஆ) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

இ) உளப்படுத்தாத முன்னிலைப் பன்மை ஈ) உளப்பாட்டு முன்னிலைப் பன்மை **[விடை: அ]**

19. **நாம் முயற்சி செய்வோம் என்பது**

www.kalvikadal.in

அ) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை ஆ) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

இ) உளப்படுத்தா முன்னிலைப் பன்மை ஈ) உளப்பாட்டு முன்னிலைப் பன்மை **[விடை: ஆ]**

20. **நாங்கள் முயற்சி செய்வோம் என்பது**

அ) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை ஆ) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

இ) உளப்படுத்தா முன்னிலைப் பன்மை ஈ) உளப்பாட்டு முன்னிலைப் பன்மை **[விடை: அ]**

## குறுவினா

1. **மொழியின் பண்புகள் யாவை?**

திணை, பால், எண், இடம்.

2. **பயனிலை விகுதிகளில் எவை பால் பகுப்பைக் காட்டுகின்றன?**

ஆன், ஆள், ஆர், அது, அன்.

3. **தற்காலத்தில் அஃறிணை எழுவாய் மாற்றம் அடைந்துள்ளதை உணர்த்தும் இரு தொடர்களை எழுதுக.**

- காளைமாடு வயலில் உழுதது.
- ஆண்குரங்கு மரத்தில் குதித்தது.

4. **பெயர்ச்சொற்களைத் திணை அடிப்படையில் எத்தனை வகையாகப் பிரிப்பர்? அவை யாவை?**

பெயர்ச்சொற்களைத் திணை அடிப்படையில் இருவகையாகப் பிரிப்பர். அவை: உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

5. **இடம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
இடம் மூவகைப்படும். அவை: தன்மை, முன்னிலை, படர்க்கை.

6. **பதிலிடு பெயர்கள் யாவை?**
அவன், அவள், அவர், அது, அவை.

7. **தன்மை, முன்னிலை, படர்க்கை என அழைக்கப்படுவன யாவை?**
- பேசுபவன்
- முன்னிருந்து கேட்பவன்
- பேசப்படுபவன் (அல்லது) பேசப்படும் பொருள்

ஆகிய மூன்றும் முறையே தன்மை, முன்னிலை, படர்க்கை என அழைக்கப்படும்.

8. **உளப்பாட்டுத்தன்மைப் பன்மை என்பது யாது?**
பேசுபவர் (தன்மை) முன்னிலையாரையும் தன்னுடைய சேர்த்துக் கொண்டு பேசுவது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை ஆகும்.
**சான்று :** நாம் முயற்சி செய்வோம்.

9. **உளப்படுத்தாதத் தன்மைப் பன்மை என்பது யாது?**
பேசுபவர் முன்னிலையாரையும் தவிர்த்துத் தன்மைப் பன்மையில் பேசுவது உளப்படுத்தாத தன்மைப் பன்மை ஆகும்.
**சான்று :** நாங்கள் முயற்சி செய்வோம்.

10. **தன்மைப் பன்மையின் வகைகள் யாவை?**
தன்மைப்பன்மை இரண்டு வகைப்படும். அவை: உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, உளப்படுத்தாத் தன்மைப் பன்மை.

www.kalvikadal.in

11. **மொழியின் இலக்கணம் குறித்துத் தமிழ் நடைக் கையேட்டின் கூற்று யாது?**
ஒரு மொழியில் அடிப்படை அறிவு என்பது அந்த மொழியில் உள்ள எழுத்துகளையும் சொற்களையும் அவற்றின் பொருளையும் வாக்கிய அமைப்புகளையும் தெரிந்திருப்பதே. மேலே குறிப்பிட்ட நான்கையும் உள்ளடக்கியது ஒரு மொழியின் இலக்கணம் என்பது தமிழ் நடைக் கையேட்டின் கூற்றாகும்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 41

**இடப்பாகுபாடு தொடர் அமைப்பிற்கு இன்றியமையாதது என்பதைப் பாடப்பகுதியிலிருந்து சான்று காட்டுக.**

தமிழில் தன்மையிலோ முன்னிலையிலோ ஒருமை பன்மை பாகுபாடு உண்டே தவிர ஆண்பால், பெண்பால் பாகுபாடு இல்லை.

**சான்று:** நான் புத்தகம் படித்தேன்.

**தன்மைப் பன்மை**

உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, உளப்படுத்தாத் தன்மைப் பன்மை என இரு வகைப்படும்.

**உளப்பாட்டுத் தன்மைப் பன்மை**

பேசுபவர் முன்னிலையாரையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டுப் பேசுவது.

**சான்று:** நாம் முயற்சி செய்வோம்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

**உளப்படுத்தாதத் தன்மைப் பன்மை**

பேசுபவர் முன்னிலையாரைத் தவிர்த்து தன்மைப் பன்மையில் பேசுவது.

**சான்று:** நாங்கள் முயற்சி செய்வோம்.

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 43

### சான்றோர் சித்திரம்



மாயூரம் வேதநாயகம்
*(1826 – 1889*

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக் தாது வருடப் பஞ்சம் (Great Famine 1876-1878) என்று, இன்றும் நினைவு கூர்வர். ஒரு கோடி மக்கள் பஞ்சத்தின் பிடியில் சிக்கி இறந்திருக்கலாம் எனப் பதிவுகள் கூறுகின்றன. இதைக் கண்டு மனம் பொறுக்காத தமிழர் ஒருவர் மனமுவந்து தமது சொத்துக்கள் அனைத்தையும் கொடையளித்தார். இதனைப் போற்றும் விதமாகக் கோபாலகிருஷ்ண பாரதியார், 'நீயே புருஷ மேரு....' என்ற பாடலை இயற்றி அவரைப் பெருமைப்படுத்தினார். அவர்தான், நீதிபதி மாயூரம் வேதநாயகம். அவர், மொழிபெயர்ப்பாளராகவும் நாவலாசிரியராகவும் பெயர் பெற்றவர்; தமிழின் முதல் நாவலான பிரதபா முதலியார் சரித்திரத்தை இயற்றியவர். மாயவரத்தின் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றிய அவர், தமது சமகாலத் தமிழறிஞர்களான மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார், இராமலிங்க வள்ளலார், சுப்பிரமணிய தேசிகர் போன்றோரிடம் நட்புப் பாராட்டி நெருங்கியிருந்தார்; கி.பி. 1805 முதல் கி.பி. 1861 ஆம் ஆண்டுவரை ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்றத் தீர்ப்புகளை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்து 'சித்தாந்த சங்கிரகம்' என்ற நூலாக வெளியிட்டார் ; மேலும் பெண்மதி மாலை, திருவருள் அந்தாதி, சர்வ சமய சமரசக் கீர்த்தனை, சுகுண சுந்தரி முதலிய நூல்களையும் பல தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார். இசையிலும் வீணை வாசிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்த இவர், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியிருக்கிறார்; வடமொழி, பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளைக் கற்றறிந்திருந்தார். அவர், பெண்கல்விக்குக் குரல் கொடுத்த மிக முக்கிய ஆளுமையாக அறியப்படுகிறார். அவருடைய மொழியாட்சிக்குச் சான்றாக, பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து ஒரு பத்தி :

"கல்வி விஷயத்தைப் பற்றி உன் பாலன் சொல்வதைக் கேள்'' என்று என் பிதா ஆக்ஞாபித்தார். உடனே என் தாயார் என் முகத்தைப் பார்த்தாள். நான் முன் சொன்னபடி என் பாட்டியாரிடத்திலே கற்றுக்கொண்ட பாடத்தை என் தாயாருக்குச் சொன்னேன். அதைக் கேட்டவுடனே என் தாயாருக்கு முகம் மாறிவிட்டது. பிறகு சற்று நேரம் பொறுத்து, என் தாயார் என்னை நோக்கி, "என் கண்மணியே, நீ சொல்வது எள்ளளவுஞ் சரியல்ல. கல்விடி என்கிற பிரசக்தியே இல்லாதவர்களான சாமானிய பாமர ஜனங்களைப் பார். அவர்களுடைய செய்கைகளுக்கும் மிருகங்களுடைய செய்கைகளுக்கும் என்ன பேதமிருக்கிறது ? நமக்கு முகக் கண்ணிருந்தும் சூரியப் பிரகாசம் இல்லாவிட்டால் என்ன பிரயோஜனம்?'' என்றார்.

**வினாக்கள்:**

1. **தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக்கொடிய பஞ்சத்தின் பெயர் என்ன?**
2. **தமிழின் முதல் நாவல் எது? அதனை எழுதியவர் யார்?**
3. **மாயூரம் வேதநாயகம் காலத்தில் வாழ்ந்த தமிழறிஞர்கள் யாவர்?**
4. **தமிழின் முதல் நாவலான பிரதாப் முதலியார் சரித்திரத்தை இயற்றியவர் யார்?**
5. **பார்த்தாள் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
6. **மாயூரம் வேதநாயகம் எழுதிய நூல்கள் யாவை ?**
7. **'சொன்னேன்' - இச்சொல்லின் வேர்ச்சொல் எது?**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

**விடைகள்:**

1. தாது வருடப் பஞ்சம்.
2. தமிழின் முதல் நாவல் பிரதாப முதலியார் சரித்திரம். அதனை எழுதியவர் மாயூரம் வேதநாயகம்.
3. மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார், இராமலிங்க வள்ளலார், சுப்பிரமணியதேசிகர்.
4. மாயூரம் வேதநாயகம்.
5. **பார்த்தாள் - பார் + த் + த் + ஆள்**

| | | |
|---|---|---|
| பார் | - | பகுதி |
| த் | - | சந்தி |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| ஆள் | - | பெண்பால் வினைமுற்று விகுதி |

6. ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்றத் தீர்ப்புகளைத் தமிழில் மொழி பெயர்த்து 'சித்தாந்த சங்கிரகம்' என்ற பெயரில் வெளியிட்டார்; மேலும் பெண்மதி மாலை, திருவருள் அந்தாதி, சர்வ சமய சமரசக் கீர்த்தனை, சுகுண சுந்தரி முதலிய நூல்களையும் பல தனிப்பாடல்களையும், ஆயிரத்திற்கு மேற்பட்ட கீர்த்தனைகளையும் இயற்றியுள்ளார்.
7. வேர்ச்சொல் - 'சொல்'.

## மொழிப் பெயர்ப்புப் பகுதியைப் படித்து, இருபது ஆங்கிலச் சொற்களையும் அதன் தமிழாக்கத்தையும் எடுத்து எழுதுக

| | |
|---|---|
| In 1977, shocked at the environmental devastation caused by deforestation in her beloved Kenya, Wangari Mathai founded the Green Belt Movement. For thirty years, the movement has enabled many women to plant trees in their regions providing them with food, fuel and halting soil erosion and desertification. She used the movement to enlighten the people on the fruits of representative democracy. This led Kenya to Kenya's first fully democratic elections in a generation. In the election, Mathai was elected to the Parliament and made a Minister of environment. She was conferred a Nobel Prize in 2004 because of her outstanding success in guiding Kenyan women to plant more than thirty million trees. She has transformed the lives of tens of thousands of women through sustainable social forestry schemes. | 1977-ஆம் ஆண்டில் தனது உயிரினும் இனிய கென்யாநாட்டில்காடுகள்அழிக்கப்பட்டதால்ஏற்பட்ட பேரழிவு கண்டு மனம் வெதும்பி வங்காரி மத்தாய் பசுமை வளாக இயக்கத்தைத் தோற்றுவித்தார். அதைத் தொடர்ந்து முப்பது ஆண்டுகள், இந்த இயக்கத்தால் பல ஆப்பிரிக்கப் பெண்கள் தமது பகுதிகளில் மரங்களை நட்டு, அதன் வழியாகத் தங்களுக்குத் தேவையான உணவையும் எரிபொருளையும் தாமே ஈட்டியதோடு நில்லாமல் ஆப்பிரிக்காவில் நிலவிய மண் அரிப்பால் நிலம் பாலைவனமாவதையும் தடுத்து நிறுத்தினர். அவர் இந்த இயக்கத்தின் வழியாக மக்களாட்சியின் பயன்களை அறியச் செய்தார். இது அத்தலைமுறையினர் அனைவருக்கும் முதல்முறையாகத் தேர்தலில் பங்கேற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. இத்தேர்தலில் வங்காரி மத்தாய் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டுப் பிறகு சுற்றுச்சூழல் அமைச்சரானார். கென்யப் பெண்களுக்கு வழிகாட்டி மூன்று கோடி மரங்களை நட்டு வளர்த்ததால் அவரது தன்னலமற்ற பணியைப் பாராட்டி, 2004ஆம் ஆண்டு வங்காரி மத்தாய்க்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. நிலையான வளர்ச்சியை உறுதிசெய்யும் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் மூலம் பல்லாயிரக்கணக்கான பெண் களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். |





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

**எ.கா: Green Belt Movement – பசுமை வளாக இயக்கம்**

1. devastation - பேரழிவு
2. deforestation - காடழிப்பு
3. thirty years - முப்பது ஆண்டுகள்
4. founded - நிறுவப்பட்டது
5. regions - மண்டலங்கள்
6. providing - விநியோகம்
7. halting - ஓய்விடங்கள்
8. soil erosion - மண்ணரிப்பு
9. desertification - பாலைவனமாக்கல்
10. enlighten - அறிவூட்டல்
11. representative - பிரதிநிதி
12. generation - தலைமுறை
13. democracy - குடியாட்சி
14. parliament - நாடாளுமன்றம்
15. election - தேர்தல்
16. success - வெற்றி
17. tens of thousands - பல்லாயிரக்கணக்கான
18. thirty million - மூன்றுகோடி
19. social forestry schemes - சமூக காடுகள் வளர்ப்புத் திட்டம்
20. Minister of environment - சுற்றுச்சூழல் அமைச்சர்

## மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

1. தலை, தளை, தழை
2. கலை, களை, கழை
3. அலை, அளை, அழை

**எ.கா : விலை, விளை, விழை**

கார்ப் பருவத்தில் நன்றாக **விளை**ந்ததால் தானியங்களின் **விலை** குறையாமல் இருக்க ஏற்றுமதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள **விழை**வதாக அரசு அறிவித்தது.

www.kalvikadal.in

**1. தலை, தளை, தழை**

ஆட்டிற்குத் **தழை** திருடப்போன இடத்தில் மரத்தில் **தலை** தட்டி விழுந்தவனைத் தோட்டக்காரன் **தளை**யிட்டு ஊர்த்தலைவரிடம் அழைத்துச் சென்றான்.

**2. கலை, களை, கழை**

**கழை** காட்டில் தீப்பிடித்ததால் **களை**களுடன் **கலை**மான்களும் செத்து மடிந்தன.

**3. அலை, அளை, அழை**

கட**லலை**யில் விளையாடச் சென்ற முருகன் **அளை**யில் இருந்த அரவம் தீண்ட எத்தனை முறை **அழை**த்தும் பேச்சு மூச்சின்றி மயங்கிக் கிடந்தான்.

## இலக்கிய நயம் பாராட்டுக

வெட்டியடிக்குது மின்னல் – கடல்
    வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது ;
தொட்டியிடிக்குது மேகம் – கூ
    கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று
    தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய – மழை
    எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா! – *பாரதியார்*



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**முன்னுரை :**

இப்பாடலைப் பாடியவர் மகாகவி பாரதியார் ஆவார். எட்டையபுரத்தில் பிறந்த இவர் இளைமையிலே கவிப்பாடும் ஆற்றல் பெற்றவராகத் திகழ்ந்தார். நாட்டு விடுதலைக்காக அநேக பாடல்களைப் பாடியதால் தேசியக் கவி என்றும் அழைக்கப்பட்டார். இவரது கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் என்னும் முப்பெரும் நூல்கள் மிகவும் சிறப்புப் பெற்றவையாகும்.

**திரண்ட கருத்து :**

பூமியை நோக்கி அடிக்கும் மின்னலானது பளிச்சென்ற வெளிச்சத்துடன் இருக்கின்றது. சூறாவளி காற்று அடிப்பதால் விண்ணைத் தொடும் அளவிற்கு கடலலையானது பொங்குகின்றது. மேகங்கள் ஒன்றோடு ஒன்று மோதி உண்டாக்கும் ஓசையானது காதால் கேட்க முடியாத அளவிற்குக் கொட்டி இடிக்கின்றது. 'கூகூ' என்ற ஓசையுடன் காற்றானது வேகமாக வீசி விண்ணைக் குடைகின்றது. மழைத்துளி மண்ணில் விழும் போது உண்டாகும் ஒலியோ மத்தளங்கள் இசைத்துத் தாளம் போடுவது போல ஒலிக்கின்றன. இடைவிடாமல் மழையைப் பொழிந்து பொழிந்து வானம் கனைக்கின்றது. எட்டுத்திசையும் இடியின் ஓசை கேட்க மழை எப்படிப் பூமியை வந்தடைந்தது.

**மோனை நயம் :**

**குயவனுக்குப் பானை**
**செய்யுளுக்கு மோனை**

முதலெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனையாகும்.

**சான்று:**

| | |
|---|---|
| **வெட்டியடிக்குது** | எட்டுத்திசையும் |
| **வீரத்** | எங்ஙனம் |

**எதுகை நயம் :**

www.kalvikadal.in

**மதுரைக்கு வைகை**
**செய்யுளுக்கு எதுகை**

முதலெழுத்து அளவு ஒத்துநிற்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகையாகும்.

**சான்று:**

வெட்டியடிக்குது
தொட்டி
சட்டச்சட
எட்டுத்திசையும்

**அணி நயம் :**

**அணியற்ற கவிதை**
**பிணியுள்ள வணிதை**

மழையின் சிறப்பை உணர்த்த மழை பெய்வதற்கு முன்னால் நிகழும் நிகழ்ச்சிகளான இடி இடித்தல், மின்னல், காற்று வீசுதல் ஆகிய நிகழ்வுகளை எல்லாம் உயர்வுபடுத்திக் கூறியுள்ளதால் இப்பாடலில் உயர்வு நவிற்சி அணி இடம் பெற்றுள்ளது.

**சொல் நயம் :**

**சொல் போனால்**
**பல் போகும்**

பாரதியார் இப்பாடலில் பயன்படுத்தியிருக்கும் சொற்களின் ஒலிக்குறிப்புகளும் பொருளும் ஒரு பெரும் புயலை நம் கண்முன் காட்டுகின்றன. புதிய ஒலியின்பத்தையும் புதிய பொருளுணர்ச்சியையும் பாரதியார் இப்பாடலில் பயன்படுத்தியுள்ளார்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**சந்த நயம் :**

**சந்தம் தமிழுக்குச் சொந்தம்**

ஏற்ற இசைக்கருவியுடன் இசைத்துப் பாடினால் பாடுவோருக்கும் கேட்போருக்கும் மிகுந்த இன்பம் தரும் விதத்தில் தாள நயத்துடன் பாரதியார் இப்பாடலைப் பாடியுள்ளார். இப்பாடல் சிந்துப் பா வகையைச் சார்ந்ததாகும்.

**முடிவுரை :**

கற்றாருக்கும், கல்லாருக்கும் ஏற்ற வகையில் எதுகை, மோனை, இயைபு இயைந்தோட, கற்பனை காட்சியளிக்க, சந்தம் தாளமிட, சுவை உண்டாகி, நா ஏக்கமுற, அணியோடு அழகுபெறும் வகையில் இக்கவிதை அமைந்துள்ளது.

## கீழ்க்காணும் அழைப்பிதழைப் பத்தியாக மாற்றுக.

பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம்

நாள் : அக்டோபர் 2 நேரம் : காலை 10 மணி

இடம் : கலைவாணர் அரங்கம், சென்னை.

**நிகழ்ச்சி நிரல்**

***தமிழ்த்தாய் வாழ்த்து***

*வரவேற்புரை* : திருமதி. அரசி, செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர்

*முன்னிலை* : திரு. அமுதன், இயற்கை வேளாண் உழவர்

*தலைமையுரை* : திரு. இமயவரம்பன், பேரிடர் மேலாண்மை இயக்குநர்

**கருத்தரங்கத் தலைப்புகள்**

- இயற்கைச் சீற்றங்களும் - பருவகால மாற்றங்களும் - முனைவர் செங்குட்டுவன்
- பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும் – திரு. முகிலன்
- நீர்வழிப்பாதைகளைப் பாதுகாத்தல் – திருமதி. பாத்திமா
- பேரிடர்க் காலங்களில் செய்யக்கூடியதும் செய்யக் கூடாததும் – திரு. வின்சென்ட்

*நன்றியுரை* : பர்வீன், பசுமைப்படை மாணவர் தலைவர்.

*நாட்டுப்பண்*

**பத்தி:**

அக்டோபர் மாதம் 2–ஆம் நாள் காலை 10 மணிக்கு, சென்னை கலைவாணர் அரங்கில் பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. இக்கருத்தரங்கிற்கு இயற்கை வேளாண் உழவர் திரு, அமுதன் முன்னிலை வகிக்கிறார். இக்கருத்தரங்கில் முனைவர் செங்குட்டுவன் அவர்கள் இயற்கைச் சீற்றங்களும் பருவகால மாற்றங்களும் என்ற தலைப்பிலும், திரு. முகிலன் அவர்கள் பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும் என்ற தலைப்பிலும், திருமதி. பாத்திமா அவர்கள் நீர்வழிப் பாதைகளைப் பாதுகாத்தல் என்ற தலைப்பிலும், திரு. வின்சென்ட் அவர்கள் பேரிடர்க் காலங்களில் செய்யக்கூடியதும் செய்யக் கூடாததும் என்ற தலைப்பிலும் கருத்துகளைத் தர உள்ளனர்.

கருத்தரங்கின் நிறைவாக, பேரிடர் மேலாண்மை இயக்குநர், திரு. இமயவரம்பன் அவர்கள் தலைமையுரை ஆற்றுவார்கள். நிகழ்ச்சிக்கு வருகின்றவர்களைச் செஞ்சிலுவைச் சங்க



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in





ஒருங்கிணைப்பாளர் திருமதி. அரசி அவர்கள் வரவேற்க உள்ளார். பசுமைப்படை மாணவர் தலைவர் ஜமீலா அவர்கள் நன்றியுரை ஆற்றிட உள்ளார். தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துடனும், கருத்தரங்க நிறைவில் நாட்டுப்பண்ணுடனும் நிகழ்ச்சி நிறைவடையும். அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## மொழியோடு விளையாடு

பக்கம்: 45

### புதிர்க்கேற்ற விடையை அறிக.

| | |
|---|---|
| அ) அடைமழை பெய்த அடுத்த நாள்<br>படைபடையாய் வந்ததாம்<br>பரங்கி நாட்டு விமானம்<br>எதிரி சுடாமலேயே<br>இறகொடிந்து இறந்ததாம் - என்ன ?<br>**விடை : ஈசல்** | ஆ) தண்ணீரும் மழையும் இல்லாமல்<br>பயிர் பச்சையாய் இருக்கிறது<br>பாக்கு வெற்றிலை போடாமல்<br>வாய் சிவப்பாய் இருக்கிறது - என்ன ?<br>**விடை : கிளி** |

### இன்னும் புதிர் அறிவோம்

| | |
|---|---|
| 1. கறுத்த ரோஜா மொட்டு<br>கனத்த மேகம் கண்டு<br>கணத்தில் இதழ் விரித்திடும்<br>காத்திடும் பின் சாய்ந்திடும்<br>அது என்ன?<br>**விடை : குடை** | 2. மூன்று பெண்களுக்கும் ஒரே முகம்<br>மூத்த பெண் ஆற்றிலே ;<br>நடுப்பெண் காட்டிலே ;<br>கடைசிப் பெண் வீட்டிலே ;<br>அவைகள் யாவை?<br>**விடை : முதலை, உடும்பு, பல்லி** |
| 3. நான் ஏறும் குதிரை<br>நாலுகால் குதிரை<br>அந்தக் குதிரைக்கு<br>ஆயிரம் கண்கள் அது என்ன?<br>**விடை : கட்டில்** | |

www.kalvikadal.in

### எண்ணங்களை எழுத்தாக்குக



வளமாக எல்லோரும் வாழ வசதியான இயற்கையைத் தந்த பூமியாகிய நான் இன்று வெப்பமிகுதியால் உருகிக் கொண்டிருக்கின்றேன். பச்சை பட்டாடை உடுத்தி பசுமையைத் தந்த என்னை வெம்மை என்னும் காட்டிலே தள்ளி விடும் மனித இனமே நான் இல்லை என்றால் நீ எப்படிப் பூமியில் வாழ்வாய் ...!

எல்லா காலங்களிலும் பருவங்கள் தவறாது மழையைத் தந்தேன். நீங்கள் எல்லோரும் வளமாய் வாழ நல்ல நிலத்தைத் தந்தேன். உங்களுடைய சுயநலத்திற்காக என் அன்பு மகளாம் வளமான காட்டை அழித்து என்னை வறுமையாக்கி, வறட்சியை உண்டுபண்ணியது ஏன்?

இன்றைய வெப்ப மிகுதியால் என் உடல் சூடேறுகிறது. என்னைக் குளிர்விக்க வேண்டிய நீங்களே மீண்டும் மீண்டும் மரங்களை வெட்டுக்கின்றீர்கள் என்று எனக்காக அல்ல உங்களுக்காகக்





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

கேட்கிறேன்: எப்போது ஒரு மரத்தை நடப்போகின்றீர்கள் அனலாகக் கொதிக்கும் என் உடலைக் கொஞ்சமாவது குளிர்விப்பாயா ?

நஞ்சாகி வரும் நெகிழியை முற்றிலுமாகத் தவிர்த்து விடு. என் மேனியடையும் சூட்டைக் குறைத்து விடு ; எல்லா வளத்தையும் இலவசமாகத் தரும் என்னைக் காக்க மறந்திடாதீர்கள்! வரும் தலைமுறையினரும் வாழ்ந்திட நீங்கள் தடையாக இருக்காதீர்கள்.

**மழை பெய்யும் போது, மின்கம்பங்கள், மரங்கள், குளம், குட்டை, ஏரி, ஆறு ஆகியனவற்றிற்கு அருகில் செல்லாதிருத்தல், வெளியில் செல்லும் போது காலணி அணிதல், கொதிக்க வைத்த நீரையே பருகுதல், வானிலை அறிக்கைகளைப் பின்பற்றுதல், அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற மழைக்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிக்காக உங்கள் பள்ளி தலைமையாசிரியருக்குக் கடிதம் எழுது.**

அனுப்புநர்

அஅஅஅ,
நிலை 12 ‘அ’ பிரிவு,
அரசு மேனிலைப்பள்ளி,
திருச்சி - 4.

பெறுநர்

உயர்திரு. தலைமையாசிரியர் அவர்கள்,
அரசு மேனிலைப்பள்ளி,
திருச்சி - 4.

www.kalvikadal.in

ஐயா,

பொருள் : மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டுவது தொடர்பாக.

வணக்கம்.

நான் தங்கள் பள்ளியில் 12-ஆம் வகுப்பு ‘அ’ பிரிவில் பயின்று வருகின்றேன். தற்போது மழைக்காலமாக இருப்பதால் நம் பள்ளியில் பயிலும் மாணவர்கள் அனைவரும் மழைக்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வைப் பெற வேண் டியது அவசியமாகும்.

எனவே, மழை பெய்யும் போது, மின்கம்பங்கள், மரங்கள், குளம், குட்டை, ஏரி, ஆறு ஆகியனவற்றிற்கு அருகில் செல்லாதிருத்தல், வெளியில் செல்லும் போது காலணி அணிதல், கொதிக்க வைத்த நீரையே பருகுதல், வானிலை அறிக்கைகளைப் பின்பற்றுதல், அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற மழைக்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த போதிய விழிப்புணர்வை உரிய நபர்கள் மூலம் வழங்கினீர்கள் என்றால் எங்களுக்கு மிகுந்த நன்மையாக இருக்கும்.

ஆகவே, தாங்கள் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து அனைத்து மாணவர்களும் போதிய விழிப்புணர்வைப் பெற உதவிடுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி,
09.07.2019.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
அஅஅஅ.


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## செய்து கற்போம்

உங்கள் பகுதியில் புழங்கும் இருபது சொற்களைக் கொண்டு வட்டார வழக்குச் சொல் தொகுப்பு ஒன்றை உருவாக்குக.

| | | |
|---|---|---|
| 1. | நான் சொல்லுதேன் | நான் சொல்கிறேன் |
| 2. | அவன் நிக்கான் | அவன் நிற்கிறான் |
| 3. | நீங்க வருதியளா? | நீங்கள் வருகிறீர்களா? |
| 4. | ஏளா ! நீ எப்ப வருத? | ஏ பிள்ளை ! நீ எப்பொழுது வருகிறாய்? |
| 5. | முடுக்குது | நெருங்குகிறது |
| 6. | சொல்லுதான் | சொல்கிறான் |
| 7. | செய்தான் | செய்கிறான் |
| 8. | ஆச்சி | வயதான பெண்மணி / பாட்டி |
| 9. | ஏல(லே) | நண்பனை அழைப்பது |
| 10. | மக்கா | நண்பா |
| 11. | பைதா | சக்கரம் |
| 12. | கொண்டி | தாழ்ப்பாள் |
| 13. | பைய | மெதுவாக |
| 14. | சாரம் | லுங்கி |
| 15. | கோட்டி | மனநிலை சரியில்லாதவர் |
| 16. | வளவு | முடுக்கு, சந்து |
| 17. | சிரை | தொந்தரவு |
| 18. | மச்சி | மாடி |
| 19. | ஆக்கங்கெட்டது | கெட்டநேரம் |
| 20. | செத்த நேரம் | கொஞ்ச நேரம் |

www.kalvikadal.in

## படிப்போம் பயன்படுத்துவோம் (தொடர் வண்டி நிலையம்)

*Platform* - நடைமேடை

*Ticket Inspector* - பயணச்சீட்டு ஆய்வர்

*Train Track* - இருப்புப்பாதை

*Level Crossing* - இருப்புப்பாதையைக் கடக்குமிடம்

*Railway Signal* - தொடர்வண்டி வழிக்குறி

*Metro Train* - மாநகரத் தொடர்வண்டி

✸✸★★★✸✸



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





# இயல் 2 மாதிரி வினாத்தாள் - 2

வகுப்பு : 12
நேரம் : 2.30 மணி — மதிப்பெண் : 90

**I. பலவுள் தெரிக.** — 6 × 1 = 6

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ) குரங்குகள் | - | 1. கன்றுகளைத் தவிர்த்தன |
| ஆ) பசுக்கள் | - | 2. மரங்களிலிருந்து வீழ்ந்தன |
| இ) பறவைகள் | - | 3. குளிரால் நடுங்கின |
| ஈ) விலங்குகள் | - | 4. மேய்ச்சலை மறந்தன |

அ) 1, 3, 4, 2 ஆ) 3, 1, 4, 2 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

2. **நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது**
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத் துளிகள் ஈ) நீர் நிலைகள்

3. **வெள்ளச் சமவெளிகள் அழியக்காரணம்**
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

4. **பொய்யா வானம்** புதுப்பெயல் பொழிந்தென - தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு
அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்
இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்

5. **உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது**
அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது.
ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது.
இ) காலநிலை மாறு படுகிறது.
ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது.

6. **தமிழில் திணைப்பாகுபாடு ................ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.**
அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு
இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

**II. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** — 8 × 1 = 8

7. **"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே**
**அஃறிணை என்மனார் அவரல பிறவே" - இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்**
அ) நன்னூல் ஆ) அகத்தியம்
இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

8. **யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே**
அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை
இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

9. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ) அவன் அவள் அவர் | - | 1. உளப்படுத்தாதத் தன்மைப்பன்மை |
| ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் | - | 2. உளப்பாட்டுத் தன்மைப்பன்மை |
| இ) நாம் முயற்சி செய்வோம் | - | 3. தன்மைப் பன்மைப் பெயர்கள் |
| ஈ) நாங்கள், நாம் | - | 4. பதிலிடு பெயர்கள் |

அ) 4, 1, 2, 3 ஆ) 2, 3, 4, 1 இ) 3, 4, 1, 2 ஈ) 4, 3, 1, 2

10. **'வளைஇ' - என்பதன் இலக்கணக் குறிப்பு தருக.**
அ) பண்புத்தொகை ஆ) எண்ணும்மை
இ) சொல்லிசை அளபெடை ஈ) உம்மைத் தொகை



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

11. **Platform - என்பதன் தமிழ்ச்சொல்லை தேர்ந்தெடுக்கவும்.**
அ) இருப்பு பாதை ஆ) நடைமேடை இ) தொடர்வண்டி ஈ) வழிக்குறி

12. **உலகச் சுற்றுச்சூழல் நாள்**
அ) ஜூன் 5 ஆ) ஜூலை 5 இ) ஏப்ரல் 14 ஈ) மே 5

13. **கலங்கி - இச்சொல்லைப் பிரிக்கும் முறை**
அ) கல + ங் + க் + இ ஆ) கலங்கு + இ இ) கலங்கு + க் + இ ஈ) கல + க் + க் + இ

14. **கூதிர்ப் பாசறை என்பது**
அ) போர்மேற் சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கும் படைவீடு
ஆ) போர்மேற் சென்ற அரசன் தோற்றுப் பதுங்கும் படைவீடு
இ) தலைவனும் தலைவியும் குளிர்காலத்தில் தங்கும் வீடு
ஈ) போரில் காயம் அடைந்த மன்னன் சிகிச்சை பெறுமிடம்

## III. குறுவினா. 3 × 2 = 6

**அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

15. "இனநிரை" - பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.
16. "நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது" விளக்கம் தருக.
17. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயனபடுத்துவதற்கும் உதவுவன எவை?
18. உயர்திணை பன்மை பெயர்கள், பன்மை விகுதி பெற்று வருமாறு இரண்டு தொடர்புகளை எழுதுக.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக :** 2 × 2 = 4

19. ஆளுக்கொரு மரம் வளர்ப்போம் என்னும் முழக்கத் தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?
20. மனிதன் தன் பேராசைக் காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்து கொண்டிருக்கிறான் - இரு தொடர்களாக ஆக்குக.
21. கார்பன் அற்ற ஆற்றல்கள் யாவை?

## IV. எவையேனும் ஏழனுக்கு விடை தருக : 7 x 2 = 14

www.kalvikadal.in

22. **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
அ) கலங்கி ஆ) வந்து

23. **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**
அ) புதுப்பெயல் ஆ) வெங்கதிர்

24. **மரபுப்பிழையை நீக்கி எழுதுக.**
அ) சேவல் கொக்கரிக்க
ஆ) கோழி கூவும்

25. **வானம் வசப்படும் நூலின் ஆசிரியர்**
அ) பிரபஞ்சன் ஆ) பரலி
இ) நா. காமராசன் ஈ) இராச மாணிக்கனார்

26. **சரியான கூற்றினைக் கண்டறிக.**
i) தமிழக நிலப்பரப்பில், விடுதலைக்கு முன்பு, ஏறத்தாழ ஐம்பதாயிரம் நீர்நிலைகள் இருந்தன.
ii) தற்போது தமிழகத்தில் நீர்நிலைகள் இருபதாயிரமாகக் குறைந்துள்ளன.
iii) சென்னை, மதுரை ஆகிய மாநகரங்களைச் சுற்றி மட்டுமே ஏறத்தாழ ஐந்நூறு ஏரிகள், குளங்கள் காணாமல் போய்விட்டன.
அ) i, ii - சரி ஆ) ii, iii - சரி இ) iii மட்டும் தவறு ஈ) மூன்றும் சரி

27. **வினா வாக்கியமாக மாற்றுக.**
அ) சிற்பி ஒரு கிராமத்தின் நதி நூலை எழுதினார்.
ஆ) ஒரு கிராமத்து நதி நூலுக்கு சாகித்திய அகாதெமி பரிசு பெற்றார்.

28. **தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக.**
முல்லைகலியில், காளைகளில் பல இனங்களை காட்டுகிற சொற்கள் நிரம்பி கிடக்கின்றன.

29. **மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து சொற்றொடர் அமைக்கவும்.**
அ) தலை ஆ) தளை இ) தழை

30. **கலைச் சொல்லாக்கம் தருக.** Passport





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

V. சிறுவினா

அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

31. 'நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து
உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்' - இக்கவிதையின் அடி,
'தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே' என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக.

32. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினார்?

33. கூதிர் காலத்தின் தன்மையை நெடுநல்வாடை குறிப்பிடுவன யாவை?

ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

34. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

36. இடர்பாகுபாடு தொடர் அமைப்பிற்கு இன்றியமையாதது என்பதைப் பாடப்பகுதியிலிருந்து சான்று காட்டுக.

VI. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக : 3 x 4 = 12

37. வாகைத்திணை **(அல்லது)**

'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம்' - இப்பாடலில் பயின்று வரும் துறையை விளக்குக.

**38. கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதனை தமிழாக்கம் செய்க.**

In 1977, shocked at the environmental devastation caused by deforestation in her beloved Kenya, Wangari Mathai founded the Green Belt Movement. For thirty years, the movement has enabled many women to plant trees in their regions providing them with food, fuel and halting soil erosion and desertification. She used the movement to enlighten the people on the fruits of representative democracy. This led Kenya to Kenya's first fully democratic elections in a generation. In the election, Mathai was elected to the Parliament and made a Minister of environment. She was conferred a Nobel Prize in 2004 because of her outstanding success in guiding Kenyan women to plant more than thirty million trees. She has transformed the lives of tens of thousands of women through sustainable social forestry schemes.

**39. கீழ்க்காணும் பாடலை படித்து ஏற்புடைய நயங்களை சுட்டிக்காட்டுக.**

வெட்டியடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது ;
தொட்டியிடிக்குது மேகம்
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா! - *பாரதியார்*

40. புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளருக்குக் கடிதம் எழுதுக.

VII. பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக : 3 x 6 = 18

41. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

42. 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச் சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

43. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

VIII. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4 + 2 = 6

44. அ) 'வையகம் பனிப்ப' - எனத் தொடங்கும் நெடுநல்வாடை பாடல்.
ஆ) 'படும்' என முடியும் குறள்.

✱✱★★★✱✱



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





# இயல் 3 சுற்றத்தார் கண்ணே உள

பண்பாடு

| | | |
|---|---|---|
| உரைநடை | தமிழர் குடும்ப முறை | பக்தவத்சல பாரதி |
| செய்யுள் | விருந்தினர் இல்லம் | ஜலாலுத்தீன் ரூமி |
| செய்யுள் | கம்பராமாயணம் | கம்பர் |
| துணைப்பாடம் | உரிமைத்தாகம் | பூமணி |
| இலக்கணம் | பொருள் மயக்கம் | |
| வாழ்வியல் | திருக்குறள் | திருவள்ளுவர் |

# இயல் 3 தமிழர் குடும்ப முறை

உரைநடை உலகம்

– பக்தவத்சல பாரதி

www.kalvikadal.in

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை**

அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்

இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும் **[விடை: ஆ]**

2. **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

அ) உரிமைத்தாகம் - 1. பாரசீகக் கவிஞர்

ஆ) அஞ்ஞாடி - 2. பூமணி

இ) ஜலாலுத்தீன் ரூமி - 3. பக்தவச்சல பாரதி

ஈ) தமிழர் குடும்ப முறை - 4. சாகித்திய அகாதெமி

அ) 2, 4, 3, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1 **[விடை: ஈ]**

3. **"எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது**

அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை

இ) தாய்வழிச் சமூக முறை ஈ) தந்தைவழிச் சமூகமுறை **[விடை: ஈ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## குறுவினா

**1. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு எழுதுக.**

**புக்கில் :**

- 'புக்கில்' என்பது தற்காலிகமாகத் தங்கும் இடத்தைக் குறிப்பதாகும்.
- "துகள் அறுகேள்வி உயர்ந்தோர் புக்கில்'' என்ற புறநானூறு பாடல் (222 : 6) சான்றாகும்.

**தன்மனை :**

திருமணத்திற்குப் பின் கணவனும், மனைவியும் பெற்றோர்களிடமிருந்து பிரிந்து தனியாக வாழும் இடம் 'தன்மனை' என அழைக்கப்பட்டது.

## சிறுவினா

**1. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் - விளக்கம் எழுதுக.**

**தந்தையும் உடன் வாழ்ந்தனர்**

- சங்க காலத்தில் முதல் நிலை உறவை மட்டும் காணமுடிகிறது.
- நற்றாய் ஒருபுறம் செவிலியும், மகளின் தோழியும் குடும்பத்தில் முதன்மைப் பெற்றனர். இம்முறை பண்டை இனக்குழு மரபின் மாறுபட்ட தொடர்ச்சி பண்டைய காலத்தில் காண முடிகிறது.
- இல்லற வாழ்வின் இறுதிக் காலத்தில் மக்களோடு நிறைந்து. அறம் செய்து, சுற்றத்தாரோடு சேர்ந்து வாழ்தலே தலைவன் தலைவின் இல்லறப் பயன் ஆகும்.
- சங்கச் சமூகம் குடும்பம் என்ற அமைப்பை அடிப்படை அலகாகக் கொண்டு அதன் தொடர்ச்சியாக இன்றைய சமூகமும் கூட்டுக் குடும்பம், தனிக்குடும்பம் கொண்டதாக, தந்தைவழிக் குடும்ப அமைப்பைக் கொண்டதாகவும் அமைகிறது.

**2. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்திற்குச் செய்யும் உதவிகள் யாவை ?**

- காலையில் 4 மணிக்குப் படிக்க வேண்டிய தேவைகள் அனைத்தையும் செய்து முடித்துவிடுவேன்.
- அவர்களுக்கு நானே தேநீர் தயார் செய்து கொடுப்பேன். தாயுடன் சேர்ந்து உணவு தயாரிக்கும் பணியில் ஈடுபடுவேன்.
- தாய், தந்தை பணிக்கு ஆயத்தம் ஆவதற்குள் மூன்று பேருக்கும் உணவு எடுத்து வைப்பேன்.
- பள்ளிக்கு என் பெற்றோர் உதவியில்லாமல் நானே மிதிவண்டியில் செல்வேன். வீட்டிற்குத் திரும்பியவுடன் வீட்டைச் சுத்தம் செய்து, பெற்றோருக்குத் தேநீர் தயார் செய்து வைப்பேன்.
- பெற்றோர் வந்தவுடன் மறுநாளுக்குத் தேவையான பொருள்களை கடைக்குச் சென்று வாங்கி வருவேன்.
- பிறகு சிறிது நேரம் படித்து விட்டு இரவு உணவை உண்ட பிறகு 10.00 மணி வரை படிப்பேன்.

## நெடுவினா

**1. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.**

**குடும்பம் என்ற அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணமே.**

குடும்பம், திருமணம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்து உள்ளது. நாணயத்தின் இருபக்கங்கள் போல குடும்பமும் திருமணமும் உள்ளது. திருமணம், குடும்பம் தொல்காப்பியத்திலோ சங்க இலக்கியத்திலோ இடம் பெறவில்லை; குடும்பம் என்ற சொல் திருக்குறளில் பயின்று வருகிறது.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







**கட்டமைப்பு:**

- 'குடும்பு' எனும் சொல் கூடிவாழ்தல் என்று பொருள்படுகிறது. பண்டைத்தமிழர்கள் குடும்பம் என்ற அமைப்புடன் வாழ்ந்த இடங்கள் பல. அவற்றுள் சில: புக்கில், தன்மனை.
- புக்கில் என்பது தற்காலிகத் தங்குமிடம் ஆகும். தன்மனை என்பது திருமணம் ஆன கணவன், மனைவி பெற்றோரை விட்டு வாழும் இடம் ஆகும்.
- மணந்தகம் என்பது மணம் புரிந்த கணவன் மனைவியும் சேர்ந்து வாழத் தொடங்கி முதல் குழந்தை பிறக்கும் வரை உள்ள காலக்கட்டத்தைக் குறிப்பது ஆகும்.
- சங்க காலத்தில் பெரும்பான்மையான சமூகத்தில் தாயே தலைமை ஏற்றிருப்பாள். பெண் திருமணம் செய்த பின்னும் தன் வீட்டிலே வாழ்க்கை நடத்தும் முறை இருந்தது. பெண் குழந்தைகள் பேறு முதன்மைப்படுத்தப்பட்டது

**தந்தை வழிக் குடும்பம்:**

- சங்க காலத்தில் தாய் வழிக் குடும்பம் போலவே தந்தை வழிக் குடும்பமும் வேரூன்றியது.
- பெண் திருமணம் ஆன பிறகு கணவனின் தந்தை வீட்டில் வாழ வேண்டும் என்பதை 'மனையுறை மகளிர்க்கு ஆடவர்' என்கிறது குறுந்தொகை.

**தனிக்குடும்பம்:**

- தனிக்குடும்பம் என்பது படிமலர்ச்சியில் இறுதியில் ஏற்பட்டது. இது இன்று தொழிற் சமூகத்தில் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது.
- தனிக்குடும்பம், ஆதிக்குடிகளிடமும் இருந்தது என்று இனவரைவியல் ஆய்வுச் சுட்டுகிறது.

**விரிந்த சமூகம்:**

www.kalvikadal.in

- சங்க காலத்தில் தனிக்குடும்ப அமைப்பு விரிவு பெற்று இவர்களோடு பெற்றோர் ஒருவரின் தந்தையும் உடன் வாழும் விரிந்த குடும்பமாகக் காணமுடிகிறது.
- கணவன், மனைவி, குழந்தைகள் சேர்ந்து பெற்றோர்கள் சேர்ந்து வாழும் நேர்வழி விரிந்த குடும்ப முறை காணமுடிகிறது.
- இன்றைய மனித சமூக கட்டமைப்பில் தாய்வழிக் குடும்பம், தந்தைவழிக் குடும்பம் என்ற நிலையைக் கடந்து தனிக்குடும்பம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது.

சங்கச் சமூகம் குடும்பம் என்ற அமைப்பிலிருந்தே மனித சமூகம் கட்டமைக்கப்படுகிறது. அவற்றின் தொடர்ச்சியாகவே இன்றைய கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என்ற அலகைக் கொண்டதாக அமைகிறது. அதுவும் தந்தைவழிக் குடும்ப அமைப்பைக் கொண்டதாக இருக்கிறது. தொன்மைமிக்க இக்குடும்ப அமைப்பு முறை தமிழ்ச் சமூகத்தின் அடையாளமும் பெருமிதமும் ஆகும்.

**குடும்பமே சமூகத்தைக் கட்டமைக்கும் களம் :**

- குடும்பம் தனி மனிதருக்காகவும் சமுதாயத்திற்காகவும் பெரும் பங்காற்றுகிறது. மனித சமூகத்தின் அடிப்படைகளான அன்பு செலுத்துதல், பொருளாதாரப் பகிர்வு, பொழுதுபோக்கு, பாதுகாப்பு, சமயச்செயல்கள், கல்விபெறுதல் ஆகியவை குடும்பத்திலே கற்பிக்கப்படுகின்றன.
- பண்பாட்டைக் குழந்தைப் பருவத்தில் குடும்பம் கற்றுக் கொடுக்கிறது. சமுதாயத்தின் நெறிமுறைகள் அன்றாட வாழ்வில் பின்பற்றப்பட வேண்டிய பழக்கவழக்கங்கள் பொருளாதாரச் செயல்களாகச் செய்யும் முறைகள், சமுதாய சமய வாழ்வில் ஆற்ற வேண்டிய கடமைகள் போன்ற எண்ணற்ற வகைகளில் குடும்பம் குழந்தைகளுக்குப் பயிற்சியளிப்பதால் மனித சமூகம் சிறப்பாகக் கட்டமைக்கப்படும்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

- பண்பாட்டு வயமாக்கல் நிகழ்ச்சியில் குடும்ப உறுப்பினர்கள் ஒரு மாதிரி குழுவாகச் செயல்படுகின்றனர்.
- குடும்பம் என்பது தனது உறுப்பினர்கள் என்ற நிலையில் குடும்ப உறுப்பினர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி அமைதியும் ஒழுங்கும் கொண்ட ஒரு சிறந்த சமுதாயம் அமைய அடிப்படையாக விளங்குவதால், குடும்பம் என்னும் சிறிய அமைப்பில் இருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்புக் கட்டமைக்கப்படுகிறது.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. ‘குடும்பம்’ என்னும் சொல் முதன்முதலில் இடம் பெற்ற நூல்
அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல் இ) சிலப்பதிகாரம் ஈ) திருக்குறள் [விடை: ஈ]

2. தொல்காப்பியம் குறிப்பிடும் வாழிடங்கள்
அ) இல், மனை ஆ) மனை, குடில்
இ) இல், குரம்பை ஈ) இவற்றில் எதுவுமில்லை [விடை: அ]

3. அகநானூறு 346ஆவது பாடலில் வரும் ‘நும்மனை’ என்பது
அ) கணவனின் இல்லம் ஆ) மனைவியின் இல்லம்
இ) நற்றாய் இல்லம் ஈ) செவிலியின் இல்லம் [விடை: அ]

4. தனிக்குடும்ப உருவாக்கத்தின் தொடக்கம்
அ) குடும்பம் ஆ) தாய்வழிக் குடும்பம்
இ) மணந்தகம் ஈ) விரிந்த குடும்பம் [விடை: இ]

5. தாய்வழிக் குடும்பங்களில் குலத்தொடர்ச்சிக்கு உரியவர்
அ) பெண்கள் ஆ) ஆண்கள்
இ) பெண்கள், ஆண்கள் ஈ) குழந்தைகள் [விடை: அ]

6. மணமக்களின் வாழ்விடம் என்பது
அ) கணவன் அகம் ஆ) செவிலியகம்
இ) தனியார் விடுதி ஈ) இவற்றில் எதுவுமில்லை [விடை: அ]

7. தாய், தந்தை, குழந்தை மூவருமுள்ள தனிக்குடும்பம்
அ) புரிதலில்லாத குடும்பம் ஆ) நெருக்கமில்லாத குடும்பம்
இ) நெருக்கமான குடும்பம் ஈ) முடிவுநிலை குடும்பம் [விடை: இ)

8. இன்றைய தொழிற்சமூகத்தில் பெரும்பான்மையாகக் காணப்படும் குடும்பம்
அ) தனிக்குடும்ப வகை ஆ) சமூக குடும்ப வகை
இ) கூட்டுக்குடும்ப வகை ஈ) விரிந்த குடும்ப வகை விடை: அ

9. ஆதிக்குடிகளிடம் இருந்த முக்கியமான குடும்பமுறை
அ) தந்தைவழிக் குடும்ப முறை ஆ) விரிந்தவழிக் குடும்ப முறை
இ) தனிக்குடும்ப முறை ஈ) பிரிந்த வழிக் குடும்ப முறை விடை: இ

10. தலைவனும் தலைவியும் ............... காத்தலே இல்வாழ்வின் பயன்.
அ) குழந்தை நலம் ஆ) மனைநலம் இ) தன்னறம் ஈ) மனையறம் விடை: ஈ

www.kalvikadal.in



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

11. கூற்று 1 : மனிதனைச் சமூகவயப்படுத்தும் பணியைக் குடும்பம் தொடர்ந்து செய்து வருகின்றது.
கூற்று 2 : ஐங்குறுநூற்றில் சேரநாட்டு மருமக்கள் தாயமுறை பற்றிக் கூறப்பட்டுள்ளது.
அ) கூற்று 1 தவறு 2 சரி ஆ) கூற்று இரண்டும் தவறு
இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று இரண்டும் சரி **விடை: இ**

12. கூற்று 1 : தனியாக வாழுமிடம் 'தன்மனை' என்று அழைக்கப்பட்டது.
கூற்று 2 : 'குடும்பு' என்னும் சொல் தனியாக வாழ்தல் என்ற பொருளை உணர்த்துகிறது.
அ) கூற்று இரண்டும் தவறு ஆ)கூற்று 1 சரி 2 தவறு
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று இரண்டும் சரி **விடை: ஆ**

13. கூற்று 1 : 'மணந்தகம்' என்பது முதல் குழந்தை பிறக்கும் வரை உள்ள காலகட்டம் ஆகும்.
கூற்று 2 : தாய், தந்தை, குழந்தை மூவருமுள்ள தனிக்குடும்பம் தொடக்கநிலை குடும்பம் எனப்படும்.
அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று 1 தவறு 2 சரி
இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று இரண்டும் சரி **விடை: ஈ**

14. கூற்று 1 : சங்ககாலத்தில் ஒவ்வொரு ஆயத்துக்கும் செவிலித்தாயே பொறுப்பேற்றிருந்தாள்.
கூற்று 2 : கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழ்ந்தது 'எதிர்வழி விரிந்த குடும்ப முறை' ஆகும்.
அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று இரண்டும் சரி
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று இரண்டும் தவறு **விடை: அ**

15. சரியானதைத் தேர்க.
அ) குடும்பு - தன்மனை
ஆ) பதிற்றுப்பத்து - சேரநாட்டு மருமக்கள் தாய முறை
இ) இல், மனை - நன்னூல்
ஈ) புக்கில் - நிரந்தரமாகத் தங்குமிடம் **விடை: ஆ**

www.kalvikadal.in

16. சரியானதைத் தேர்க.
அ) சிறுவர்தாயே பேரிற் பெண்டே - புறம் 276
ஆ) வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன் - புறம் 270
இ) முளரிமருங்கின் முதியோர் சிறுவன் - புறம் 278
ஈ) செம்முது பெண்டின் காதலஞ்சிறா அன் - கலி, பாலை 8 **விடை: இ**

17. சரியானதைத் தேர்க.
அ) குரம்பை - நகரம்
ஆ) புலப்பில் - கூட்டு இல்லம்
இ) குடில் - உச்சிப்பகுதி
ஈ) வரைப்பு - வாழிடம் **விடை: ஈ**

18. பொருந்தாததைத் தேர்க.
அ) நும்மனை - கணவனின் இல்லம்
ஆ) மணந்தகம் - விரிந்த குடும்பம்
இ) தாய்வழிக் குடும்பம் - மருமக்கள் தாய முறை
ஈ) தந்தைவழிக் குடும்பம் - சிலம்பு கழி **விடை: ஆ**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

19. **பொருத்தித் தேர்க.**

| | | | |
|---|---|---|---|
| அ) | சிலம்பு கழி | - | 1. திருக்குறள் |
| ஆ) | குடும்பு | - | 2. ஐங்குறுநூறு |
| இ) | குடும்பம் | - | 3. குறுந்தொகை |
| ஈ) | புலப்பில் | - | 4. கூடி வாழ்தல் |

அ) 2, 1, 3, 4 ஆ) 1, 2, 3, 4 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 1, 4, 3 **விடை: இ**

20. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | மருமக்கள் தாய முறை | - | 1. ஆமய் |
| ஆ) | அறிவுரை | - | 2. நோன்பு |
| இ) | செவிலித்தாய் | - | 3. பதிற்றுப்பத்து |
| ஈ) | சிலம்புகழி | - | 4. செவிலித்தாய் |

அ) 3, 4, 1, 2 ஆ) 3, 1, 4, 2 இ) 3, 4, 2, 1 ஈ) 3, 2, 4, 1 **விடை: அ**

21. **எந்தச் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் எனும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது?**

அ) குடும்பம் ஆ) கிராமம் இ) நகரம் ஈ) குழு **[விடை: அ]**

22. **குடும்பம் என்னும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை**

அ) பெற்றோர் ஆ) திருமணம்
இ) அரசு ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: ஆ]**

23. **சரியானக் கூற்றுகளைக் கண்டறிக.**

i) இன்று நாம் வழங்கும் 'திருமணம்', 'குடும்பம்' ஆகிய இரண்டு சொற்களும் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் எங்கும் இடம்பெறவில்லை.
ii) குடும்பம் எனும் சொல் முதன் முதலில் திருக்குறளில்தான் (1029) வருகிறது.
iii) சங்க இலக்கியத்தில் 'குடம்பை', 'குடும்பு', 'கடும்பு' ஆகிய சொற்கள் குடும்ப அமைப்போடு தொடர்புடையன.

அ) i, ii சரி ஆ) ii, iii சரி இ) iii மட்டும் தவறு ஈ) மூன்றும் சரி **[விடை: ஈ]**

24. **'இரவுக் குறியே இல்லகத் துள்ளும்**
**மனைவியோர் கிளவு கேட்கும் வழியதுவே**
**மனையகம் புகாஅக் காலை யான'**
**- என்னும் தொல்காப்பிய நூற்பாவில் குறிப்பிடப்படுபவை**

அ) அகம், புறம் குறித்தான வேறுபாடுகள் ஆ) 'இல்', 'மனை' ஆகிய இரண்டு வாழிடங்கள்
இ) தலைவனின் வரைவுக் கடாதல் ஈ) தோழி, தலைவி உரையாடல்கள் **[விடை: ஆ]**

25. **மருதத்திணைப் பாடல் ஒன்றில் மகளிர் 'தம்மனை', 'நும்மனை' என மனைவியின் இல்லத்தையும் கணவனின் இல்லத்தையும் பிரித்துப் பேசும் நூல்**

அ) குறுந்தொகை ஆ) அகநானூறு
இ) ஐங்குறுநூறு ஈ) கலித்தொகை **[விடை: ஆ]**

26. **தற்காலிகத் தங்குமிடத்தைப் 'புக்கில்' என்று கூறும் நூல்**

அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) கலித்தொகை ஈ) குறுந்தொகை **[விடை: ஆ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







**27. தன்மனை எனப்படுவது**

அ) தற்காலிகத் தங்குமிடம்

ஆ) மனைவியின் இல்லம்

இ) திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழுமிடம்

ஈ) திருமணத்திற்கு முன்பே கணவன் மனைவியாக வாழுமிடம் **[விடை: இ]**

**28. மணந்தகம் என்பது**

அ) மணம் புரியும் முன்பு தலைவன் தலைவியைச் சந்திக்கும் இடம்

ஆ) மணம் புரிந்த கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டம்

இ) கணவன் மனைவியின் மணமுறிவு வாழ்க்கை

ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: ஆ]**

**29. இளந்தம்பதியினருக்கு ஏற்ற அறிவுரை கூறி நெறிப்படுத்தும் பணி .................. என்று தொல்காப்பியம் கூறுகிறது.**

அ) நற்றாய்க்குரியது ஆ) செவிலிக்குரியது

இ) தோழிக்குரியது ஈ) முதியவருக்குரியது **[விடை: ஆ]**

**30. சங்ககாலத்தில் கண சமூகத்துக்குத் தலைமை ஏற்றிருந்தவர்**

அ) தந்தை ஆ) அரசன் இ) தாய் ஈ) அரசி **[விடை: இ]**

**31. சேரநாட்டு மருமக்கள் தாயமுறை பற்றிக் கூறும் நூல்**

அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து

www.kalvikadal.in

இ) பரிபாடல் ஈ) பட்டினப்பாலை **[விடை: ஆ]**

**32. ‘சிறுவர்தாயே பேரிற் பெண்டே’ என்று குறிப்பிடும் நூல்**

அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து

இ) பரிபாடல் ஈ) பட்டினப்பாலை **[விடை: அ]**

**33. ‘செம்முது பெண்டின் காதலஞ்சிறா அன்’ என்று குறிப்பிடும் நூல்**

அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து

இ) பரிபாடல் ஈ) பட்டினப்பாலை **[விடை: அ]**

**34. ‘வானவரைக் கூந்தல் முதியோன் சிறுவன்’ எனக் குறிப்பிடும் நூல்**

அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து

இ) பரிபாடல் ஈ) பட்டினப்பாலை **[விடை: அ]**

**35. ‘முளரிமருங்கின் முதியோள் சிறுவன்’ எனக் கூறும் நூல்**

அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து இ) பரிபாடல் ஈ) அகநானூறு **[விடை: அ]**

**36. ‘என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்’ என்று குறிப்பிடும் நூல் .................. திணை ..................**

அ) ஐங்குறுநூறு, பாலை ஆ) கலித்தொகை, பாலை

இ) அகநானூறு, முல்லை ஈ) குறுந்தொகை, மருதம் **[விடை: ஆ]**

**37. திருமணத்திற்குப் பின் மனைவியின் இல்லத்துக்குச் சென்று கணவன் வாழ்வதே நடைமுறையாக இருந்துள்ளது என்பதைக் குறிப்பிடும் நூல்**

அ) ஐங்குறுநூறு ஆ) புறநானூறு

இ) அகநானூறு ஈ) பதிற்றுப்பத்து **[விடை: இ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

38. தாய்வழிச் சொத்துகள் பெண்டிருக்கே போய்ச் சேர்ந்தன என்பதைக் குறுந்தொகையின் .................. திணைப்பாடல் கூறுகிறது.

அ) குறிஞ்சித் ஆ) முல்லைத் இ) மருதத் ஈ) பாலைத் [விடை: இ]

39. தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் .................. சென்று சேர்ந்தன.

அ) ஆண்களுக்குச் ஆ) பெண்களுக்குச்
இ) அரசனுக்குச் ஈ) ஏழைகளுக்குச் [விடை: ஆ]

40. ஆண் மையச் சமூகத்தில் பெண் திருமணத்திற்குப் பின் .................. வாழ வேண்டும்.

அ) தன் தந்தையகத்தில் ஆ) தன் கணவனுடைய தந்தையகத்தில்
இ) தன் கணவனுடைய தாயகத்தில் ஈ) தன் தாயகத்தில் [விடை: ஆ]

41. மணமானபின் தலைவன் தலைவியை அவனுடைய இல்லத்திற்கு அழைத்து வந்தபோது அவனுடைய தாய் அவளுக்குச் செய்தது

அ) பாராய்க்கடன் உரைத்தல் நோன்பு ஆ) சிலம்புகழி நோன்பு
இ) சுற்றத்தாருடன் விருந்து வைத்தல் ஈ) இவற்றில் எதுவுமில்லை [விடை: ஆ]

42. 'நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
எம்மனை வதுவை நல்மணம் ஒழிக' - என்று குறிப்பிடும் நூல்

அ) குறுந்தொகை ஆ) அகநானூறு இ) ஐங்குறுநூறு ஈ) கலித்தொகை [விடை: இ]

43. 'மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே' என்று கூறும் நூல்

அ) குறுந்தொகை ஆ) அகநானூறு இ) ஐங்குறுநூறு ஈ) கலித்தொகை [விடை: அ]

www.kalvikadal.in

44. இளமகவுநிலைக் குடும்பங்களின் காட்சிகளைத் தெளிவுபடுத்தும் நூல்

அ) குறுந்தொகை ஆ) அகநானூறு இ) ஐங்குறுநூறு ஈ) கலித்தொகை [விடை: இ]

45. 'மறியிடைப் படுத்த மான்பிணை போல்' மகனை நடுவணாகக் கொண்டு தலைவனும் தலைவியும் வாழ்வதைக் கூறும் நூல்

அ) அகநானூறு ஆ) குறுந்தொகை இ) ஐங்குறுநூறு ஈ) கலித்தொகை [விடை: இ]

46. இன்றைய தொழிற்சமூகத்தில் பெரும்பாண்மையாகக் காணப்படுவது

அ) கூட்டுக்குடும்பம் ஆ) தனிக்குடும்பம்
இ) விரிந்த குடும்பம் ஈ) இவற்றில் எதுவுமில்லை [விடை: ஆ]

47. கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்ப முறையை .................. புறநானூற்றுப்பாடல் கூறுகிறது.

அ) வெள்ளைக்குடி நாகனாரின் ஆ) ஒக்கூர் மாசாத்தியாரின்
இ) பரணரின் ஈ) கபிலரின் [விடை: ஆ]

48. சங்ககாலத்தில் ஒவ்வொரு ஆயத்துக்கும் பொறுப்பேற்று இருந்தவள்

அ) நற்றாய் ஆ) செவிலித்தாய் இ) தோழி ஈ) ததலைவி [விடை: ஆ]

49. தமிழர் குடும்பமுறை என்னும் பாடப்பகுதி .................. காலாண்டிதழில் வெளிவந்த கட்டுரையின் சுருக்கம்.

அ) பனுவல் (தொகுதி II, 2010) ஆ) பனுவல் (தொகுதி I, 2010)
இ) பனுவல் (தொகுதி II, 2011) ஈ) பனுவல் (தொகுதி I, 2011) [விடை: அ]





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



50. **தமிழர் குடும்பமுறை என்னும் கட்டுரையின் ஆசிரியர்**

அ) சுப்ரமணிய பாரதி ஆ) சோமசுந்தர பாரதி

இ) பக்தவத்சல பாரதி ஈ) பழனிபாரதி **[விடை: இ]**

51. **பக்தவத்சல பாரதி முன்னெடுத்து வரும் ஆய்வுகள்**

அ) தமிழ்ச்சமூகம், பண்பாடு சார்ந்த மானிடவியல் தொடர்பானவை

ஆ) விலங்குகள், பறவைகள் சார்ந்தவை

இ) இந்திய வரலாறு, தொன்மம் தொடர்பானவை

ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

## குறுவினா

1. **மனித சமூகத்தின் அடிப்படை அலகாகக் குடும்பம் உள்ளது. ஏன் ?**

- குடும்பம் எனும் சிறிய அமைப்பில் இருந்து ‘மனித சமூகம்’ எனும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது.
- குடும்பம் தொடங்கிக் குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் என்ற அமைப்பு வரை இது விரிவடைகிறது. எனவே, குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படை அலகாகும்.

2. **சங்க இலக்கியத்தில் குடும்ப அமைப்புடன் தொடர்புடைய சொற்களாகக் குறிப்பிடப்படுவன யாவை?**

குடம்பை, குடும்பு, கடும்பு.

3. **தொல்காப்பியம் குறிப்பிடும் வாழிடங்கள் யாவை ?**

www.kalvikadal.in

இல், மனை.

4. **வாழிடங்களுக்கு வேறு பெயர்களாக சங்க இலக்கியங்கள் காட்டுவன யாவை?**

இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம்.

5. **‘மனை’ என்பது வாழிடத்தைக் குறிக்கும் முதன்மைச் சொல்லாக உள்ளதை எதன் மூலம் அறியலாம்?**

- நம்மனை, தம்மனை, எம்மனை, இம்மனை, உம்மனை, நின்மனை, நுந்தைமனை, நன்மனை, வறுமனை, வளமனை, கடிமனை, தாய்மனை இச்சொற்கள் வாழிடத்தைக் குறிக்கின்றன.
- பல்வேறு சொற்கள் வந்தாலும் ‘மனை’ என்ற சொல்லுடன் இணைந்து வருவதால் ‘மனை’ என்பது வாழிடத்தைக் குறிக்கும் முதன்மைச் சொல் என்பதை அறியலாம்.

6. **‘மணந்தகம்’ என்றால் என்ன ?**

மணம் புரிந்த கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்க நிலையே ‘மணந்தகம்’ எனப்படும்.

7. **சங்ககால கண சமூகத்திற்கும் தாயே தலைமை ஏற்றிருந்தாள் என்பதற்கு இரு சான்று தருக.**

- ‘செம்முது பெண்டின் காதலஞ்சிறா அன்’ (புறம் 276)
- ‘முளரிமருங்கின் முதியோள் சிறுவன்’ (புறம் 277)

8. **பெண்குழந்தைகளின் பேறு முதன்மையாக விரும்பப்படக் காரணம் என்ன ?**

- தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும், வளங்களும் பெண்களுக்கே போய்ச் சேர்ந்தன.
- தாய்வழிக் குடும்பங்களில் பெண்களே குலத் தொடர்ச்சிக்கு உரியவர்களாக இருந்தனர்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



**9. தொடக்கநிலை நெருக்கமான குடும்பம் என்பது யாது ?**

- தாய், தந்தை, குழந்தை மூவருமுள்ள தனிக்குடும்பம் மிகவும் நெருக்கமானது.
- இதுவே, தொடக்கநிலை நெருக்கமான குடும்பம் எனப்பட்டது.

**10. 'விரிந்த குடும்ப முறை' என்பது யாது ?**

தனிக்குடும்ப அமைப்பில் பெற்றோர் ஒருவரின் தந்தையும் உடன்வாழ்வது 'விரிந்த குடும்ப முறை' எனப்படும்.

**11. சங்க கால மக்கள் இல்வாழ்வின் பயனாகக் கருதியவை யாவை?**

- இல்லற வாழ்வின் இறுதிக் காலத்தில் பெருமை மிகுந்த மக்களுடன் வாழ்வது.
- அறத்தினை விரும்பிய சுற்றத்தாரோடு வாழ்வது.
- தலைவனும், தலைவியும் மனையறம் காத்து வாழ்வது.

**12. சங்க இலக்கியத்தில் கூறப்படும் குடும்ப அமைப்போடு தொடர்புடைய சொற்கள் யாவை?**

- சங்க இலக்கியத்தில் 'குடம்பை' 'குடும்பு' 'கடும்பு' ஆகிய சொற்கள் குடும்ப அமைப்போடு தொடர்புடையவை.
- 'குடும்பு' என்ற சொல், கூடி வாழுதல் என்று பொருள்படுகின்றது.

**13. சங்க காலத்திலிருந்த தாய்வழிக்குடும்பம் குறித்தெழுதுக.**

- சங்க காலத்தில் பெண் திருமணம் செய்த பின்னரும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாய்வழிக்குடும்பம் இருந்துள்ளது.
- திருமணத்திற்குப் பின் மனைவியின் இல்லத்துக்குச் சென்று கணவன் வாழ்வதே நடைமுறையாக இருந்துள்ளது.

www.kalvikadal.in

**14. தாய்வழிக்குடும்ப முறையில் குடும்பத்தின் சொத்துகள் யாருக்குச் சென்று சேர்ந்தன?**

- தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன.
- தாய்வழிச் சொத்துகள் பெண்டிருக்கே போய்ச் சேர்ந்தன என்பதை ஒரு மருதத்திணைப் பாடல் (குறுந். 295) தெளிவாகவும் விளக்கமாகவும் கூறுகிறது.

**15. பக்தவத்சல பாரதி இயற்றியுள்ள நூல்கள் யாவை?**

- இலக்கிய மானிடவியல்
- பண்பாட்டு மானிடவியல்
- தமிழர் மானிடவியல்
- தமிழகப் பழங்குடிகள்
- பாணர் இனவரைவியல்
- தமிழர் உணவு

**16. இளமகவுநிலைக் குடும்பங்கள் குறித்து ஐங்குறுநூறு கூறுவது யாது?**

- இளமகவுநிலைக் குடும்பங்களின் காட்சிகளை ஐங்குறுநூறு தெளிவுபடுத்துகிறது. (408)
- "மறியிடைப் படுத்த மான்பிணை போல" மகனை நடுவணாகக் கொண்டு தலைவனும் தலைவியும் வாழ்ந்திருக்கின்றனர். (ஐங்குறுநூறு 401)

## சிறுவினா

**1. சங்ககாலத்திலேயே ஆண் மையச் சமூக முறை வலுவாக இருந்ததற்குச் சான்று தந்து விளக்குக.**

- சங்ககாலத்தில் ஆண் மையச் சமூக முறை வலுவாக வேர்ஊன்றி இருந்தது.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





- பெண் திருமணத்திற்குப் பின் தன் கணவனுடைய தந்தையின் வீட்டிலே வாழ வேண்டும் என்பதே ஆண் மையச் சமூகத்தின் அமைப்பு முறையாகும். மணமான பின்பு தலைவியைத் தலைவன் அவனுடைய இல்லத்திற்கு அழைத்துச் செல்வான்.

  **"நும்மனைச் சிலம்பு கழீக அயரினும்**
  **எம்மனை வதுவை நல்மணம் கழிக"**
  என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் (399 : 1-2) இதற்குச் சான்றாகும்.

- மணமகளின் வாழிடம் கணவன் அகம் என்பதை இச்சான்று உறுதிப்படுத்தும்.
- தந்தை வழி குடும்ப முறை பரவலாக இருந்துள்ளது.
- பொருள் வயிற்பிரிவு, போர், வாழ்வியல் சடங்குகள், குடும்பம், திருமணம் போன்ற பல்வேறு சமூக களங்கள் மூலம் ஆண் மையச் சமூக முறை வலுவாக இருந்ததை அறியலாம்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 51

**1. கூட்டுக்குடும்பம் - தனிக்குடும்பம் குறித்து உங்களது கருத்துகளைத் தொகுத்து உரை நிகழ்த்துக.**

இனிய வணக்கம்.

- **கூட்டுக்குடும்பத்தில்** அன்பும் அரவணைப்பும் கிடைப்பதற்கு நிறைய வாய்ப்புண்டு.
- கூட்டுக்குடும்பத்தில் ஒருவருக்கொருவர் உடன்பட்டுப் பேசுதல், ஒரு வேலையில் பலரும் ஈடுபடுதல் மகத்தான வெற்றி தரும். விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு வளரும்.
- தலைமை ஒருவரின் அறிவுரை எல்லாருக்கும் பொருந்துமாறு அமைந்து விருப்பு வெறுப்புகள் களையப்பட வாய்ப்புண்டு. தனிமை நம்மைவிட்டு அகலும்.
- **தனிக்குடும்பத்தில்** செலவுகள் குறையும்.
- மனச்சுமையை இறக்கி வைக்க, தன் கருத்தை வெளியிட நேரம் இருக்காது.
- பிள்ளைகள் பராமரிப்பிற்கு அதிகக் கவனம் செலுத்த நேரிடும். தனிமை ஏற்பட்டுவிடும்.
- அவசர நேரங்களில் உதவி செய்ய ஆள் இருக்கமாட்டார்கள்.

எனவே, கூட்டுக்குடும்பம் ஒரு குதூகலம். தனிக்குடும்பம் ஒரு மௌனம்.
நன்றி! வணக்கம்!





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



2. குடும்ப உறுப்பினர்களின் உறவுமுறைப் பெயர்களை அட்டவணைப்படுத்தி எழுதுக.




✸✸★★★✸✸





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

இயல் 3
செய்யுள்

# விருந்தினர் இல்லம்

- ஜலாலுத்தீன் ரூமி

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது யாது ?**

அ) வக்கிரம் ஆ) அவமானம்
இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும் **விடை: ஈ**

### குறுவினா

1. **எதிர்பாரத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார் ?**

- வாழ்க்கையில் நடக்கும் எதிர்பாராத நிகழ்வுகள் அனைத்தையும் ஆனந்தம், மனச்சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு என்று உருவகப்படுத்துகிறார். இவைகளை நமது இல்லத்திற்கு வரும் எதிர்பாராத விருந்தாளிகளாக எண்ண வேண்டும்.
- எதிர்பாராத நிகழ்வுகளை எதிர்பாராத விருந்தாளிகளாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

www.kalvikadal.in

### சிறுவினா

1. **"வருபவர் எவராயினும்
நன்றி செலுத்து" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் :**

இக்கவிதை வரிகள் ஜலாலுத்தீன் ரூமி அவர்கள் எழுதிய கவிதையின் ஆங்கில மொழியாக்கத்தைத் தமிழில் 'தாகங்கொண்ட மீனொன்று' என்ற தலைப்பில் கவிதைத் தொகுப்பாக வெளியிட்டுள்ளார் என். சத்தியமூர்த்தி. அத்தொகுப்பில் உள்ள 'விருந்தினர் இல்லம்' என்னும் கவிதையில் இடம்பெற்றுள்ளது.

**பொருள் :**

வாழ்கின்ற இந்த வாழ்க்கையில் நம்மைத் தேடி வரும் நன்மையோ, தீமையோ எது வந்தாலும் அதற்காக நன்றி சொல்ல வேண்டும்.

**விளக்கம் :**

வாழ்க்கை என்பது எல்லாம் கலந்த கலவை. நம் வாழ்க்கை விருந்தினர் இல்லம் போன்றது. நமது வீட்டிற்கு வரும் விருந்தினர்களில் மகிழ்ச்சியுடனும் வருபவர்களும் இருப்பர். துக்கங்களைக் கொண்டு வருபவர்களும் இருப்பர். அதுபோன்றுதான் நம் வாழ்க்கையும். ஆனந்தம், மனச்சோர்வு, அற்பத்தனம், சிறிது விழிப்புணர்வு என பல வாழ்வியல் வடிவங்கள் நம்மைத் தினம் தினம் விருந்தினர்களைப் போலச் சந்திக்கலாம் அவற்றை எல்லாம் நாம் வரவேற்க வேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு நிகழ்வும் நமக்குப் புதுப்புது அனுபவங்களைத் தரும். மகிழ்ச்சியால் மகிழ்ந்தாலும், துக்கத்தால் வெறுமையடைந்தாலும் துவண்டுவிடக் கூடாது. ஏனெனில் எல்லாமே நமக்கு அனுபவங்களைக் கற்றுத் தரும். எனவே, எது வந்தாலும் விருந்தினரை எதிர்கொண்டு வரவேற்பது





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





போல வரவேற்று அனுபவங்களைக் கற்றுத்தரும் வாழ்வியல் வடிவங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலவற்றை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தவர்**

அ) கோல்மன் ரூபன் ஆ) கோல்மன் ஹிப்ஸ்
இ) கோல்மன் பார்க்ஸ் ஈ) கோல்மன் ஹிக்ஸ் **விடை: இ**

**2. 'தாகங்கொண்ட மீனொன்று' என்ற தலைப்பில் தமிழில் மொழிப்பெயர்த்தவர்**

அ) என்.சத்தியமூர்த்தி ஆ) என்.ஆர்.சத்தியமூர்த்தி
இ) எஸ்.சத்தியமூர்த்தி ஈ) எம்.சத்தியமூர்த்தி **விடை: அ**

**3. ஜலாலுத்தீன் ரூமி இன்றைய நிலவரப்படி எந்த நாட்டில் பிறந்தவர்**

அ) வங்களாதேசம் ஆ) பாகிஸ்தான்
இ) கஸகிஸ்தான் ஈ) ஆப்கானிஸ்தான் **விடை: ஈ**

**4. வருபவர் எவராயினும் செலுத்த வேண்டியதாக 'விருந்தினர் இல்லம்' கூறுவது**

அ) காணிக்கை ஆ) நன்கொடை இ) நன்றி ஈ) அன்பளிப்பு **விடை: இ**

**5. விருந்தினர் இல்லத்தில் ஒவ்வொரு காலையும் ஒரு**

அ) சங்கீத மேடை ஆ) புதுவரவு இ) புதுமை ஈ) ஆனந்தம் **விடை: ஆ**

**6. ஒவ்வொரு விருந்தினரையும் நடத்தும் முறையாக 'விருந்தினர் இல்லம்' குறிப்பிடுவது**

அ) அன்பாக ஆ) பாசமாக இ) உறவாக ஈ) கௌரவமாக **விடை: ஈ**

**7. எல்லாவற்றிலிருந்தும் ................ கற்றுக்கொள்ளும் பண்பாடு வளர வேண்டும்.**

அ) அன்பானவற்றைக் ஆ) ஒழுக்கமானவற்றைக்
இ) நல்லவற்றைக் ஈ) தூய்மையானவற்றைக் **விடை: இ**

**8. சரியானதைத் தேர்க.**

அ) ஆனந்தம் எதிர்பார்க்கும் விருந்தாளி.
ஆ) ஒவ்வொரு விருந்தினரையும் விலக்கி வை.
இ) அவமானத்தை இன்முகத்துடன் வரவேற்பாயாக.
ஈ) வருபவர் எவராயினும் ஏற்றுக் கொள்ளாதே. **விடை: இ**

**9. பொருந்தாததைத் தேர்க.**

அ) சற்று மனச்சோர்வு எதிர்பாராத விருந்தாளி.
ஆ) ஒவ்வொரு விருந்தினரையும் கௌரவமாக நடத்து.
இ) வக்கிரத்தை வாயிலுக்குச் சென்று விரட்டி விடு.
ஈ) வருபவர் எவராயினும் நன்றி செலுத்து. **விடை: இ**

**10. ஜலாலுத்தீன் ரூமியின் கவிதையைக் கோல்மன் மார்க்ஸின் ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து தமிழில் மொழிபெயர்த்தவர்**

அ) என். சத்தியமூர்த்தி ஆ) பி. கலியமூர்த்தி
இ) ஆர். கிருஷ்ணமூர்த்தி ஈ) எம்.புண்ணியமூர்த்தி **[விடை: அ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







11. ஜலாலுத்தீன் ரூமியின் கவிதையைத் தமிழாக்கம் செய்த என் சத்தியமூர்த்தி இட்ட தலைப்பு

அ) தாகங்கொண்ட மீனொன்று ஆ) தாகங்கொண்ட காகமொன்று

இ) மேகமீதில் விண்மீனொன்று ஈ) மழைத்துளியும் மண்ணும் **[விடை: அ]**

12. ஜலாலுத்தீன் ரூமி .................. மிகச் சிறந்த கவிஞர்களில் ஒருவர்.

அ) பாரதத்தின் ஆ) கிரேக்கத்தின்

இ) பாரசீகத்தின் ஈ) ஆப்ரிக்காவின் **[விடை: இ]**

13. ஜலாலுத்தீன் ரூமியின் சூஃபி தத்துவப் படைப்பான 'மஸ்னவி' .................. பாடல்களைக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது.

அ) 23,500 ஆ) 24,600 இ) 25,600 ஈ) 24,000 **[விடை: இ]**

14. மஸ்னவி என்பது

அ) ஆழமான ஆன்மீகக் கருத்துகள் நிரம்பிய இசைக்கருவிகளின் தொகுப்பு

ஆ) காதல்பாடல்களின் இசைத்தொகுப்பு

இ) தேச உணர்வுமிக்க இசைப்பாடல்களின் தொகுப்பு

ஈ) கனவுத்தேசத்தின் எல்லைகளை வரையறுப்பது **[விடை: அ]**

15. 'திவான்-ஈஷம்ஸ்-ஈ-தப்ரீஸி' என்றும் நூலின் ஆசிரியர்

அ) இபின் பதூதா ஆ) அமிர்குஸ்ரு

இ) நாகூர் ரூமி ஈ) ஜலாலுத்தீன் ரூமி **[விடை: ஈ]**

16. வக்கிரம் அவமானம் வஞ்சனை ஆகியவற்றை என்ன செய்ய வேண்டும் என்கிறார் ஜலாலுத்தீன் ரூமி?

www.kalvikadal.in

அ) அவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்க வேண்டும்.

ஆ) அவற்றை வாயிலுக்கே சென்று சினத்துடன் சிதைக்க வேண்டும்.

இ) அவற்றை அமைதியாக அனுபவிக்க வேண்டும்.

ஈ) அவற்றைப் புதைகுழியில் இட்டுப் புதைக்க வேண்டும். **[விடை: அ]**

## குறுவினா

1. எவற்றையெல்லாம் வாசலுக்குச் சென்று வரவேற்க வேண்டுமென ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுகிறார்?

வக்கிரம், அவமானம், வஞ்சனை.

2. எவையெல்லாம் எதிர்பாராத விருந்தாளிகளாக வாழ்வில் வந்து செல்லும்?

ஓர் ஆனந்தம், சற்று மனச்சோர்வு, சிறிது அற்பத்தனம், நொடிப்பொழுதேயான விழிப்புணர்வு.

3. மஸ்னவி என்பது யாது?

மஸ்னவி என்பது ஆழமான ஆன்மீகக் கருத்துகள் நிரம்பிய இசைக்கவிதைகளின் தொகுப்பு ஆகும்.

4. வரும் விருந்தினர்களை எல்லாம் கௌரவமாக நடத்த வேண்டும். ஏன்?

- வாழ்வில் சந்திக்கும் அனைத்தையும் இன்முகத்துடன் வரவேற்க வேண்டும்.
- இன்பமோ, துன்பமோ அவை புது அனுபவங்களைத் தரும்.
- துக்கங்கள் உன்னை முழுவதுமாகத் துடைத்தாலும் இனிமையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- புதிய மகிழ்ச்சிக்காக அந்த துக்க நிகழ்வுகள் உன்னைத் தயாரிக்கும்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## சிறுவினா

1. **‘வாழ்க்கை ஓர் அனுபவப் பள்ளிக்கூடம்’ – என்னும் கருத்தை ‘விருந்தினர் இல்லம்’ கவிதை உறுதிப்படுத்துவதை நிறுவுக.**

- மனித வாழ்வு எதையும் ஏற்கும் உள்ளம் கொண்டதாக இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு நாளும் மனித வாழ்வில் ஆனந்தம், சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு என்பவை எதிர்பாராத விருந்தாளிகளாக வந்து போகும். வீட்டிற்கு வரும் விருந்தினர்கள் சொல்லிக் கொண்டு வருவதில்லை.
- இன்பச்செய்தி, துக்கச்செய்தி, துயரச் செய்தி, வீணாகப் பொழுதைக் கழிக்க, தன்னுடைய கௌரவத்தைக் காட்ட எனப் பல வடிவங்களில் விருந்தினர்கள் நம் இல்லங்களுக்கு வருவதுண்டு.
- இதைப் போன்று நம்மை வந்தடையும் அத்தனை அனுபவங்களையும் வக்கிரம் அவமானம், வஞ்சனை இவைகளையும் விருந்தினர்களை எதிர் கொண்டு வரவேற்பது போல வரவேற்க வேண்டும்.
- ஒவ்வொரு விருந்தினர்களும் நமக்குப் புதுப்புது அனுபவங்களைத் தருவர். ஒவ்வொரு வாழ்வியல் வடிவங்களும் நமக்குப் புதுப்புது அனுபவங்களைத் தரும்.
- இன்பம் துன்பம், வேண்டியது வேண்டாதது, என எல்லாமே விரும்பியும் விரும்பாமலும் நம்மை வந்தடையும் இவைகள் மூலம் நாம் நம்மை மெருகூட்ட, நம்மைப் புதுப்பிக்க உதவும்.
- எனவே, வாழ்க்கை ஓர் அனுபவப் பள்ளிக்கூடம் என்பதை உணர்ந்து நம்மைத் தேடி வரும் அனைத்திற்காகவும் நன்றி செலுத்துவோம்.

## கற்பவை கற்றபின்

www.kalvikadal.in

**பக்கம்: 52**

**தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட கவிதைகளில் உங்கள் மனம் கவர்ந்த சிலவற்றை வகுப்பறையில் படித்துக்காட்டுக.**

**லாங்ஸ்டன் ஹியூஸ் கவிதைகள்**

| மௌனம் | கனவுகள் |
|---|---|
| உன் மௌனத்தின் அடுக்குகளிலிருந்த<br>வார்த்தைகளைப்<br>பிடித்துக் கொள்கிறேன்<br>சொற்களின் ஒலிகள்<br>செவிகளை வந்தடைத்<br>தேவையில்லை<br>எல்லா மௌனங்களும்<br>உன் வார்த்தைகளையே<br>பேசிக் கொண்டிருக்கின்றன. | கனவுகளைச் சட்டெனப் பற்றிக் கொள்<br>கனவுகள் இறந்துவிடலாம்<br>வாழ்வென்பது பறக்கவியலாத<br>இறக்கை உடைந்த ஒரு பறவையைப் போன்றது<br>கனவுகளைச் சட்டெனப் பற்றிக் கொள்<br>கனவுகள் தொலைந்து போகலாம்<br>வாழ்வென்பது வறண்டுபோன வயல் அதில்<br>பனி கெட்டியாக உறைந்து கிடக்கிறது. |

**எனது மக்கள்**

இரவு அழகானது
எனது மக்களின் முகங்களைப் போலவே.....
விண்மீன்கள் அழகானவை
எனது மக்களின் கண்களைப் போலவே.....
சூரியனும் அழகானதுதான்
எனது மக்களின் ஒளிரும் ஆன்மாவைப் போலவே.....



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





இயல் 3

செய்யுள்

# கம்பராமாயணம்

- கம்பர்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **'உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்' - யார் யார் ?**

அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன்

இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

**விடை: இ**

### குறுவினா

1. **நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?**

- நிலையாமை என்பது உலக வாழ்வு நிலை இல்லாதது என்பதைக் குறிக்கும்.
- "என் பொய்யான உலகப்பற்று அழிந்தது; என் பிறவி ஒழிந்தது'' என்று சவரி நிலையாமை குறித்துக் கூறுகிறாள்.

www.kalvikadal.in

2. **"துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது'' என்ற இராமனின் கூற்று பின்வரும் இரு பழமொழிகளில் எதற்குப் பொருந்தும்?**

**அ) நிழலின் அருமை வெயிலில் தெரியும்.**

**ஆ) சிறு துரும்பும் பல்குத்த உதவும்.**

நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்ற பழமொழிக்கு இப்பாடலடிகள் பொருந்தும்.

**விளக்கம்:**

குகனின் வருத்தத்தை உணர்ந்த இராமன் கூறியது. துன்பம் என்று ஒன்று இருந்தால் இன்பம் என்பது புலப்படும் - என்பதே பொருத்தம்.

### சிறுவினா

1. **குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.**

**குகன் :**

இராமன் காட்டிற்குச் சென்று துன்புறுவான் என்று குகன் வருந்துவான் என்பதை உணர்ந்த இராமன், "குகனே! துன்பம் இருந்தால் தான் இன்பம் வரும். நம்மிடையே பிரிவு இப்போது ஏற்படுகிறது. இதுவரை நாங்கள் நால்வர். இப்போது உன்னையும் சேர்த்து ஐவர்'' என்று குறிப்பிடுகிறார். (அன்புள இனி நாம் ஓர் ஐவர் ஆனோம்)

**சுக்ரீவன் :**

- சுக்ரீவன் இராமன் மீது கொண்ட அளவற்ற அன்பினால் சீதையைத் தேடி இலங்கை சென்றான்.
- இராவணனைக் கொன்று வருவதாகக் கூறி சென்றவன் அவன் மணிமுடியை மட்டும் கொண்டு வந்தான்.







Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







- இராமன் மீது அவன் கொண்டிருந்த அளவற்ற அன்பைக் கண்ட இராமன் நீ, என் இனிய உயிர் நண்பன் என்று கூறி, நான்கு பேராக இருந்த நாங்கள் குகனுடன் சேர்த்து ஐந்து பேராகும்.
- உன்னையும் இணைத்து ஆறுபேர் ஆனோம் என்றான்.

**வீடணன் :**

- சீதையைக் கவர்ந்து வந்த செயல் தவறு என்று கூறியதற்காக இராவணனை வீடணன் கடிந்தான்.
- இலங்கை விட்டு வந்த வீடணன் இராமனிடம் அடைக்கலம் வேண்டினான்.
- இராமன் அவனை உடன்பிறந்தவனாக ஏற்று இலங்கை அரசனை அவனுக்கு உரிமையாக்கினான்.
- குகனுடன் ஐவர், சூரியனின் மகன் சுக்கிரீவன் உடன் ஆறுபேர் உன்னையும் சேர்த்து எழுவர் ஆனோம்.

2. **சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.**

**இராமன் ஆற்றிய கடமைகள் :**

- இராவணன் சீதையைச் சிறையெடுத்த போது தடுத்துச் சண்டையிட்டுக் காயப்பட்டவன் சடாயு.
- அவன் இராவணனோடு சண்டையிட்டுத் தன் உயிரை இழந்ததை அறிந்த இராமன் தன் தந்தையாகவே சடாயுவைக் கருதினான்.
- ஒரு தந்தைக்கு மகன் எவ்வாறு இறுதிச் சடங்குகளைச் செய்வானோ அதைப் போன்று இராமன் இறுதிச் சடங்குகளை மேற்கொண்டான்.
- பார்ப்பவர்கள் வியக்கும்படியான கரிய அகில் கட்டைகளையும் சந்தனக் கட்டைகளையம் இராமன் கொண்டு வந்தான்.
- தேவையான தருப்பைப் புறகளை ஒழுங்குபட அடுக்கினான். பூக்களையும் தூவினான். மணலினால் திருத்தமான மேடை அமைத்து, நன்னீரும் கொண்டு வந்தான்.
- இறுதிச்சடங்கு செய்யப்படக்கூடிய மேடைக்குத் தன் தந்தையாகக் கருதிய சடாயுவைத் தன் பெரிய கைகளினால் தூக்கிக் கொண்டு வந்தான்.

www.kalvikadal.in

## நெடுவினா

1. **பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.**

**குகனுடன் கொண்ட உறவுநிலை :**

- தன்மீது அளவற்ற அன்பு கொண்ட குகன் தன்னைப் பிரிய விருப்பமின்மை என்பதை உணர்ந்து ‘என் உயிர் அணையாய்’ என்றான். ‘நீ என் உயிர் போன்றவன்’ என்று கூறியது மட்டுமல்லாது, நீ சொல்லும் வேலைகளைச் செய்யும் பணியாளனாய் இருக்கின்றேன்.
- குகனின் அன்பால் தன்னை அவனுடைய ‘பணியாளாய்’ கருதும் உரிமையை இராமன் குகனுக்குக் கொடுத்திருந்தான். சகோதரனாக ஏற்றுக் கொள்கிறான் இராமன்.

**சடாயுடன் கொண்ட உறவு நிலை :**

- தனது மனைவி சீதையை இராவணன் சிறையெடுத்தபோது தடுத்து, சண்டையிட்டுக் காயப்பட்டு இறந்தான் சடாயு என்பதை அறிந்து அவனது உயிர்த்தியாகத்தின் உத்தமத்தை உணர்கிறான்.
- தனக்காக உயிரைவிட்ட சடாயுவின் உடலை இறுதிச் சடங்கிற்குத் தயார்படுத்தும்போது, தந்தைக்கு மகன் ஆற்றும் கடமையாகக் கருதுகிறான். சடாயுவின் தியாகத்தால் ‘மகனாய்’ கருதும் உரிமையை இராமன் சடாயுவுக்குக் கொடுத்தான்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**சவரியுடன் கொண்ட உறவு நிலை :**

- தன்னைக் கண்ட பிறகுதான் பிறவி ஒழிப்பேன் என்று தவம் இருந்த சவரியிடம் பரிவு காட்டி பேசினான் இராமன்.
- இராமனைக் கண்டதால்தான் பிறந்ததின் பயனை அடைந்ததாக உணர்ந்த சவரி, இராமன், இலக்குவனுக்கு விருந்து அளித்து மகிழ்ந்தாள். தனது அன்புக்குரியவராக விளங்கிய சவரியிடம் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டினான் இராமன்.

**சுக்ரீவனிடம் கொண்ட உறவு நிலை :**

- தனக்காக இலங்கை சென்று கடும்போர் புரிந்து இராவணனின் மணிமகுடத்தை எடுத்து வந்த சுக்ரீவனை நினைத்துப் பெருமைப்பட்டான் இராமன்.
- நீ வேறு நான் வேறு அல்ல ; உன் பகைவர் என் பகைவர், உன் உறவினர், என் உறவினர் ; என் உறவினர் உன் உறவினர், 'நீ என் இனிய உயிர் நண்பன்' என்று கூறினான் இராமன்.
- சுக்ரீவனைத் தன் உயிர்நண்பனாகக் கருதும் உரிமையைக் கொடுத்தான் இராமன், மேலும் அவனைச் சகோதரனாக ஏற்றுக் கொள்கிறான் இராமன்.

**வீடணனிடம் கொண்ட உறவு நிலை :**

- தன் மனைவியைக் கவர்ந்து சென்ற இராவணனின் செயலைக் கண்டிக்கும் இராவணின் தம்பியாகிய வீடணின் இராமன் மிகுந்த அன்பு கொள்கிறான்.
- தன்னிடம் அடைக்கலம் அடையும் வீடணனை உடன்பிறந்தவனாக ஏற்றுக் கொள்கின்றான்.
- தன்னை நம்பி வந்த வீடணனுக்கு இலங்கையைக் கொடுக்கின்றான்.
- இலங்கையை வழங்குவதால் தன்னை நம்பும் யாவரும் நலம் பெறவேண்டும் என்று நினைக்கும் உரிமையைக் கொடுக்கின்றான் இராமன்.

www.kalvikadal.in

இவ்வாறாக, இராமபிரான் பணியாளனாய், சகோதரனாய், தந்தைக்கு உற்ற மகனாய், தாய்க்கு உற்ற மகனாய், நண்பனாய், உரிமையை வழங்கும் சகோதரனாய்ப் பிற உயிர்களுடன் பல உறவு நிலைகளைக் கொண்டு இராமன் பண்பின் படிமமாக விளங்குகிறார்.

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| **உளது** | - | இடைக்குறை |
| **மாதவம்** | - | உரிச்சொற்றொடர் |
| **தாழ்கடல்** | - | வினைத்தொகை |
| **செற்றவர்** | - | வினையாலணையும் பெயர் |
| **நுந்தை** | - | நும் தந்தை என்பதன் மரூஉ |

## உறுப்பிலக்கணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **தந்தனன்** | - | **தா(த) + த்(ந்) + த் + அன் + அன்** | **பொலிந்தான்** | - | **பொலி + த்(ந்) + த் + ஆன்** |
| தா | - | பகுதி (த) எனக் குறுகியது விகாரம்) | பொலி | - | பகுதி |
| த் | - | சந்தி ('ந்' ஆனது விகாரம்) | த் | - | சந்தி ('ந்' ஆனது விகாரம்) |
| த் | - | இறந்தகால இடைநிலை | த் | - | இறந்தகால இடைநிலை |
| அன் | - | சாரியை | ஆன் | - | ஆண்பால் வினைமுற்று விகுதி |
| அன் | - | படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி | | | |





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in







**புணர்ச்சி விதி**

**அருங்கானம் – அருமை + கானம்**

- ஈறுபோதல் என்ற விதிப்படி, 'மை' கெட்டு, அரு + கானம் என்றானது.
- இனமிகல் என்ற விதிப்படி, 'ங்' தோன்றி அருங்கானம் எனப் புணர்ந்தது.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **"அன்னவன் உரை கேளா**
**அமலனும் உரை நேர்வான்" – அன்னவன் யார்?**
அ) குகன் ஆ) இராமன் இ) சுக்ரீவன் ஈ) வீடணன் **விடை: ஆ**

2. **'இளவல் உன் இளையான்' – இளவல் யார்?**
அ) இலக்குவன் ஆ) குகன் இ) சுக்ரீவன் ஈ) வீடணன் **விடை: அ**

3. **சடாயு யாருடைய நண்பன்**
அ) குகன் ஆ) இராமன் இ) தயரதன் ஈ) அருணன் **விடை: இ**

4. **'இந்தனம் எனைய என்ன கார்' – இந்தனம் என்பதன் பொருள்**
அ) இந்த நேரம் ஆ) மாலை இ) மணல் ஈ) விறகு **விடை: ஈ**

www.kalvikadal.in

5. **சுக்ரீவனுடன் இராமன் நட்புக் கொள்ளும் படலம் எந்தக் காண்டத்தில் உள்ளது?**
அ) ஆரண்ய காண்டம் ஆ) கிட்கிந்தா காண்டம்
இ) சுந்தர காண்டம் ஈ) அயோத்தியா காண்டம் **விடை: ஆ**

6. **"உவா உற வந்து கூடும்**
**உடுபதி, இரவி ஒத்தார்" – 'உவா' என்பதன் பொருள்**
அ) சந்திரன் ஆ) சூரியன் இ) பௌர்ணமி ஈ) அமாவாசை **விடை: ஈ**

7. **வீடணன் அடைக்கலமாகும் படலம் எந்தக் காண்டத்தில் உள்ளது?**
அ) ஆரண்ய காண்டம் ஆ) கிட்கிந்தா காண்டம்
இ) சுந்தர காண்டம் ஈ) யுத்த காண்டம் **விடை: ஈ**

8. **"ஆழியான் அவனை நோக்கி,**
**அருள்சுரந்து, உவகை கூற" – 'ஆழியான்' எனப்படுபவன்**
அ) குகன் ஆ) இராமன் இ) வீடணன் ஈ) சடாயு **விடை: ஆ**

9. **'குகனோடும் ஐவர் ஆனோம்**
**முன்பு, பின்குன்று சூழ்வான்' – 'குன்று' பொருள்**
அ) மலை ஆ) பாறை இ) கதிரவன் ஈ) இராமன் **விடை: இ**

10. **"தந்தனன் தாதை தன்னைத் தடக்**
**கையான் எடுத்துச் சார்வான்" – 'தடக்கையான்' இலக்கணக் குறிப்பு**
அ) உரிச்சொற்றொடர் ஆ) வினைத்தொகை இ) உம்மைத்தொகை ஈ) மரூஉ **விடை: அ**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





11. 'குவித்து' என்ற சொல்லின் சரியான பகுபத உறுப்பிலக்கண பிரிப்பு முறை
அ) குவித்த + உ ஆ) குவி + (த்)(ந்) + த் + உ
இ) குவி + த் + த் + உ ஈ) குவித்து + உ விடை : இ

12. 'தந்தனன்' என்ற சொல்லின் சரியான பகுபத உறுப்பிலக்கண பிரிப்பு முறை
அ) த + த்(ந்) + த் + அன் + அன் ஆ) தந்து + அன் + அன்
இ) தா + த் + த் + அன் + அன் ஈ) தா(த) + த்(ந்) + த் + அன் + அன் விடை: ஈ

13. 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்ற விதிப்படி அமைந்த சொல்
அ) தலைப்பட்டு ஆ) நமக்கிடையே இ) உமக்கிடையே ஈ) அருங்கானம் விடை: அ

14. 'செற்றவர் என்னைச் செற்றார்' - 'செற்றவர்' இலக்கணக் குறிப்பு
அ) பலர்பால் வினைமுற்று ஆ) வியங்கோள் வினைமுற்று
இ) வினையாலணையும் பெயர் ஈ) எதிர்கால வினைமுற்று விடை: இ

15. 'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' என்னும் விதிப்படி அமைந்த சொல்
அ) மண்ணில் ஆ) திரைப்படம் இ) இல்லை ஈ) பின்னாளில் விடை: அ

16. 'தருப்பையும் திருத்தி, பூவும்' - 'திருத்தி' - இலக்கணக் குறிப்பு
அ) பெயரெச்சம் ஆ) பண்புப்பெயர்
இ) வினையெச்சம் ஈ) வினைத்தொகை விடை: இ

17. 'துன்பு உளது எனின் அன்றோ' - 'உளது' - இலக்கணக் குறிப்பு
அ) வினையெச்சம் ஆ) பெயரெச்சம் இ) மரூஉ ஈ) இடைக்குறை விடை: ஈ

www.kalvikadal.in

18. ஓர் மூலம் இல்லான் யார் ?
அ) இலக்குவன் ஆ) இராமன் இ) சடாயு ஈ) சுக்ரீவன் விடை: ஆ

19. 'யாவரும் கேளிர்' என்பது தமிழர் நற்பண்பின் .................. ஆகும்.
அ) மலர்ச்சி ஆ) தொடர்ச்சி இ) உயர்ச்சி ஈ) வளர்ச்சி விடை: ஈ

20. 'சிறியோரை இகழ்தல் இலமே' என்பது தமிழர் நற்பண்பின் .................. ஆகும்.
அ) வளர்ச்சி ஆ) தொடர்ச்சி இ) மலர்ச்சி ஈ) உயர்ச்சி விடை: இ

21. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பது தமிழர் நற்பண்பின் .................. ஆகும்.
அ) முதிர்ச்சி ஆ) வளர்ச்சி இ) உயர்ச்சி ஈ) தொடர்ச்சி விடை: அ

22. 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்பது தமிழர் நற்பண்பின் .................. ஆகும்.
அ) முதிர்ச்சி ஆ) தொடர்ச்சி இ) உயர்ச்சி ஈ) வளர்ச்சி விடை: ஆ

23. தமிழர் நற்பண்பின் உயர்ச்சியாக இருப்பது .................. ஆகும்.
அ) புறநானூறு ஆ) திருக்குறள்
இ) கம்பராமாயணம் ஈ) தொல்காப்பியம் விடை: இ

24. கூற்று 1 : குளிர்கடலும் இந்நிலமும் எல்லாம் உளதேயாகும். நான் உன்னுடைய ஏவலுக்கேற்பப் பணிபுரிபவன்
கூற்று 2 : அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் பலிக்கவில்லை.
அ) கூற்று இரண்டும் சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு
இ) கூற்று இரண்டும் தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி விடை: ஆ





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



25. **கூற்று 1 : ''அன்பு மிகுந்த என் சுற்றத்தினர் உன் சுற்றத்தினர் - நீ என் உயிர்நண்பன்''**

**கூற்று 2 : ''பதினான்கு உலகங்களும் எனது பெயரும் இங்கு எவ்வளவு காலம் இருக்குமோ அவ்வளவு காலம் உனக்கே உரிமை எனக் கொடுத்தேன்''**

அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று 1 தவறு 2 சரி

இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று இரண்டும் சரி **விடை: ஈ**

26. **கூற்று 1 : ''மேருமலையைச் சுற்றி வரும் கதிரவனின் மகனான சுக்ரீவனுடன் ஐவர் ஆனோம்''**

**கூற்று 2 : இறுதிச்சடங்கு செய்யக்கூடிய மேடைக்குத் தன் மகனாகிய சடாயுவைத் தூக்கி வந்தான் இராமன்.**

அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று 1 சரி 2 தவறு

இ) கூற்று இரண்டும் சரி ஈ) கூற்று 1 தவறு 2 சரி **விடை: அ**

27. **சரியானதைத் தேர்க.**

அ) சடாயு - கழுகின் மகன்

ஆ) வீடணன் - இராவணனின் தம்பி

இ) சுக்ரீவன் - வாலியின் அண்ணன்

ஈ) குகன் - வேடற்குலத்தலைவன் **விடை: இ**

28. **சரியானதைத் தேர்க.**

அ) ஆரண்ய காண்டம் - சவரி பிறப்பு நீங்கு படலம்

ஆ) கிட்கிந்தா காண்டம் - நட்பு கோட்படலம்

இ) யுத்த காண்டம் - வீடணன் அடைக்கலப்படலம்

ஈ) அயோத்தியா காண்டம் - சடாயு உயிர்நீத்த படலம் **விடை: ஈ**

www.kalvikadal.in

29. **சரியானதைத் தேர்க.**

அ) செற்றவர் - வினையாலணையும் பெயர்

ஆ) திருத்தி - வினையெச்சம்

இ) உளது - உள்ளது என்பதன் மரூஉ

ஈ) நுந்தை - நும் தந்தை என்பதன் மரூஉ **விடை: இ**

30. **பொருத்துக.**

அ) சடாயு - 1. உயிர் நண்பன்

ஆ) சுக்ரீவன் - 2. அடைக்கலமானவன்

இ) குகன் - 3. தந்தை உறவு

ஈ) வீடணன் - 4. வேடற்குலத் தலைவன்

அ) 3, 1, 2, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 3, 1, 4, 2 ஈ) 1, 2, 4, 3 **விடை: இ**

31. **'எனக்கும் மூத்தோன்' என்று யார் யாரை ஏற்றுக் கொண்டார்?**

அ) இராமன் குகனை ஆ) குகன் இராமனை

இ) குகன் பரதனை ஈ) பரதன் குகனை **[விடை: ஈ]**

32. **.................. தலைவன் குகன்.**

அ) ஆயர் ஆ) வேடுவர் இ) பரதவர் ஈ) குறவர் **[விடை: ஆ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



33. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | அமலன் | - | 1. குளிர்ந்த |
| ஆ) | இளவல் | - | 2. இராமன் |
| இ) | துன்பு | - | 3. தம்பி |
| ஈ) | நளிர் | - | 4. துன்பம் |

அ) 2, 3, 4, 1 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 1, 2, 3, 4 **[விடை: அ]**

34. **'இனி, நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்' என்று யார் யாரிடம் கூறியது?**

அ) இலக்குவன் குகனிடம் ஆ) இராமன் குகனிடம்
இ) குகன் பரதனிடம் ஈ) பரதன் குகனிடம் **[விடை: ஆ]**

35. **இராமன் காட்டிற்குச் சென்று துன்புறுவான் என்று வருந்தியவன்**

அ) அனுமன் ஆ) குகன் இ) இராவணன் ஈ) வாலி **[விடை: ஆ]**

36. **குகப்படலம் இடம்பெற்றுள்ள காண்டம்**

அ) அயோத்தியா காண்டம் ஆ) ஆரண்ய காண்டம்
இ) கிட்கிந்தா காண்டம் ஈ) சுந்தர காண்டம் **[விடை: அ]**

37. **சடாயு உயிர்நீத்த படலம் இடம்பெற்றுள்ள காண்டம்**

அ) அயோத்தியா காண்டம் ஆ) ஆரண்ய காண்டம்
இ) கிட்கிந்தா காண்டம் ஈ) சுந்தர காண்டம் **[விடை: ஆ]**

38. **.................. வேந்தன் சடாயு.**

அ) வானர ஆ) கழுகு இ) மான் ஈ) வன **[விடை: ஆ]**

www.kalvikadal.in

39. **இராவணன் சீதையைச் சிறையெடுத்தபோது, தடுத்துச் சண்டையிட்டுக் காயப்பட்டவன்**

அ) அனுமன் ஆ) வாலி இ) சடாயு ஈ) குகன் **[விடை: இ]**

40. **சடாயுவைத் தன் தந்தையாகவே கருதி, மகன் நிலையில் அவனுக்குரிய இறுதிச் சடங்குகளைச் செய்தவன்**

அ) இராமன் ஆ) குகன் இ) அனுமன் ஈ) பரதன் **[விடை: அ]**

41. **'சவரி பிறப்பு நீங்கு படலம்' இடம்பெற்றுள்ள காண்டம் ..................**

அ) அயோத்தியா காண்டம் ஆ) ஆரண்ய காண்டம்
இ) யுத்த காண்டம் ஈ) சுந்தர காண்டம் **[விடை: ஆ]**

42. **சீதையைத் தேடிவரும் இராமனை, சுக்ரீவனுடன் நட்புக்கொள்ளுமாறு செய்தவள்**

அ) கைகேயி ஆ) கோசலை இ) மந்தரை ஈ) சவரி **[விடை: ஈ]**

43. **அன்பளாகிய சவரியிடம் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டியவன்**

அ) இராமன் ஆ) அனுமன் இ) சுக்ரீவன் ஈ) சடாயு **[விடை: அ]**

44. **'மாண்டது என் மாயப் பாசம்' என்று யார் யாரிடம் கூறியது?**

அ) கைகேயி, இராமனிடம் ஆ) குகன் இராமனிடம்
இ) சவரி இராமனிடம் ஈ) இராமன் அனுமனிடம் **[விடை: இ]**

45. **'நட்புகோட்படலம்' இடம்பெற்றுள்ள காண்டம்**

அ) அயோத்தியா காண்டம் ஆ) ஆரண்ய காண்டம்
இ) கிட்கிந்தா காண்டம் ஈ) யுத்த காண்ம் **[விடை: இ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

46. **சீதையைத் தேடிவரும் இராம இலக்குவரைக் கண்ட அனுமன் யாரை அழைத்து வந்தான்?**
அ) சடாயுவை ஆ) சுக்ரீவனை இ) சவரியை ஈ) வாலியை **[விடை: ஆ]**

47. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | அனகன் | - | 1. உறவினர் |
| ஆ) | கூவா | - | 2. பகைவர் |
| இ) | உடுபதி | - | 3. அமாவசை |
| ஈ) | செற்றார் | - | 4. சந்திரன் |
| உ) | கிளை | - | 5. இராமன் |

அ) 5, 3, 4, 2, 1 ஆ) 5, 4, 3, 2, 1 இ) 4, 5, 3, 1, 2 ஈ) 2, 3, 1, 5, 4 **[விடை: அ]**

48. **வானரத் தலைவன்**
அ) சடாயு ஆ) குகன் இ) பரதன் ஈ) சுக்ரீவன் **[விடை: ஈ]**

49. **அமாவாசைக் காலத்தில் ஒன்றாக இணைந்திருக்கிற சந்திரனையும் சூரியனையும் ஒத்து இருந்தவர்கள்**
அ) இராமனும் குகனும் ஆ) இராமனும் இலக்குவனும்
இ) இராமனும் சுக்ரீவனும் ஈ) சுக்ரீவனும் இராவனனும் **[விடை: இ]**

50. **'என் காதல் சுற்றம் உன் சுற்றம்' - என்று யார் யாரிடம் கூறியது?**
அ) இராமன் குகனிடம் ஆ) இராமன் சுக்ரீவனிடம்
இ) சுக்ரீவன் இராமனிடம் ஈ) வீடணன் இராவணனிடம் **[விடை: ஆ]**

51. **சீதையைக் கவர்ந்து வந்தது தவறென இராவனிடம் கூறியவர்**
அ) அனுமன் ஆ) சவரி இ) சுக்ரீவன் ஈ) வீடணன் **[விடை: ஈ]**

www.kalvikadal.in

52. **இராமன் யாருக்கு இலங்கை அரசை உரிமையாக்கினான்?**
அ) சுக்ரீவனுக்கு ஆ) வீடணனுக்கு
இ) அனுமனுக்கு ஈ) இராவணனுக்கு **[விடை: ஆ]**

53. **மேருமலையைச் சுற்றி வரும் கதிரவனின் மகன்**
அ) சுக்ரீவன் ஆ) குகன் இ) வீடணன் ஈ) அனுமன் **[விடை: அ]**

54. **யாருடன் சேர்த்து அறுவர் ஆனோம் என்கிறார் இராமன்?**
அ) குகனுடன் ஆ) சுக்ரீவனுடன்
இ) வீடணனுடன் ஈ) இவர்களில் எவருமிலர் **[விடை: ஆ]**

55. **'நின்னொடும் எழுவர் ஆனோம்' என்று யார் யாரிடம் கூறியது?**
அ) இராமன் சுக்ரீவனிடம் ஆ) இராமன் குகனிடம்
இ) இராமன் வீடணனிடம் ஈ) இலக்குவன் குகனிடம் **[விடை: இ]**

56. **கம்பராமாயணத்தில் பாடப்பகுதியாக அமைந்துள்ள பகுதி**
அ) இராவணன் சீதையைச் சிறை எடுத்தல்
ஆ) இராமன் இராவணனை வெல்லுதல்
இ) இராமன் அனைத்து உயிர்களையும் கீழ்மேல் எனக் கருதாது சமமாக அன்பு காட்டுவது
ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: இ]**

57. **கம்பராமாயணத்தை இயற்றியவர்**
அ) கம்பர் ஆ) சேக்கிழார் இ) ஒட்டக்கூத்தர் ஈ) அம்பிகாவதி **[விடை: அ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

58. **கம்பராமாயணத்திற்குக் கம்பர் இட்ட பெயர்**
அ) இராமபுராணம் ஆ) இராமாவதாரம் இ) சீதாகல்யாணம் ஈ) இராமநவமி **[விடை: ஆ]**

59. **கம்பரது காலம் .................. ஆம் நூற்றாண்டு.**
அ) 1 ஆ) 11 இ) 12 ஈ) 13 **[விடை: இ]**

60. **கவிச்சக்கரவர்த்தி என்ற சிறப்புக்குரியவர்**
அ) கம்பர் ஆ) புகழேந்தி இ) ஒட்டக்கூத்தர் ஈ) ஔவையார் **[விடை: அ]**

## குறுவினா

1. **குகனிடம் இராமன் கூறியது என்ன?**
- நீ என் தம்பி ; இலக்குவன் உன் தம்பி.
- சீதை உன் அண்ணி.
- இந்நிலவுலகம் முழுவதும் உனக்குரியது.
- நான் உன் ஏவலுக்குப் பணிபுரியும் பணியாள்.

2. **குகன் இராமனுக்குச் செய்த உதவி என்ன?**
இராமன் கங்கையைக் கடந்து காட்டிற்குச் செல்ல நாவாய் கொடுத்து உதவியவன்.

3. **சடாயு யார்? அவன் மேற்கொண்ட செயல் யாது?**
- கருடனின் அண்ணன் அருணனின் மகன் சடாயு.
- இராவணன் சீதையைச் சிறையெடுத்தபோது தடுத்து சண்டையிட்டுத் தன் உயிரைத் துறந்தவன்.

4. **இராமாயணத்தில் சவரி செய்த செயல்கள் யாவை?**
- சீதையைத் தேடி வரும் இராமனை, சுக்ரீவனுடன் நட்புக் கொள்ளுமாறு செய்தவள்.
- காப்பியத்தின் போக்கில் திருப்பத்தை உருவாக்கியவள்.
- இராமன், இலக்குவன் இருவருக்கும் விருந்தளித்து உபசரித்தவள்.

5. **சவரியிடம் இராமன் வினாவியது என்ன?**
தன்னையே நினைத்துத் தவமிருந்த சவரியிடம், "இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாய் அல்லவா?" என்று பரிவுடன் வினவினான்.

6. **வீடணன் ஏன் இராமனிடம் அடைக்கலமானான்?**
- சீதையைக் கவர்ந்தது தவறு என்று இராவணனிடம் கூறினான் வீடணன்.
- கோபம் கொண்ட இராவணன் வீடணனைக் கடிந்தான்.
- எனவே, இலங்கையை விட்டு வீடணன் இராமனிடம் அடைக்கலமானான்.

7. **இராமன் வீடணனுக்குக் கொடுத்த உரிமை பற்றிக் கூறியது யாது ?**
"ஒளி பொருந்திய பற்களை உடைய அரக்கர் வாழ்வதும் ஆழமான கடல் நடுவே உள்ளதுமான இலங்கை அரசாட்சியை பதினான்கு உலகங்களும், எனது பெயரும் எவ்வளவு காலம் இருக்குமோ அவ்வளவு காலம் உனக்கே உரிமையாக" கொடுத்தேன் என்று இராமன் வீடணனிடம் கூறினான்.

8. **இராமன் குறிப்பிடும் எழுவரின் பெயர்களை எழுதுக.**
இராமன், இலக்குவன், பரதன், சத்ருக்னன், குகன், சுக்ரீவன், வீடணன்.


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

9. **பாடப்பகுதியில் கம்பராமாயணத்தின் இடம் பெற்றுள்ள காண்டங்கள் யாவை?**
- அயோத்தியா காண்டம்
- ஆரணிய காண்டம்
- கிட்கிந்தா காண்டம்
- யுத்த காண்டம்

10. **பாடப்பகுதியில் இடம்பெறும் கம்பராமாயண பாத்திரங்களைக் குறிப்பிடுக.**
குகன், சடாயு, சவரி, சுக்கீவன், வீடணன்.

11. **சவரி – குறிப்பு வரைக.**
- இராமனிடம் மிகுதியான அன்பையும் பக்தியையும் கொண்டவள் சவரி.
- சீதையைத் தேடி வரும் இராமனை, சுக்ரீவனுடன் நட்புக்கொள்ளுமாறு செய்தவள் இவள்.
- இராமன் அன்பளாகிய சவரிடம் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டினான்.

## சிறுவினா

1. **'இனி, நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்' என்று இராமன் கூறக் காரணம் என்ன?**
- கங்கையைக் கடந்து காட்டிற்கு இராமன் செல்ல இருக்கின்றனர்.
- அந்தப் பிரிவைத் தாங்காத குகன், இராமன் காட்டிற்குச் சென்று துன்பம் அடைவான் எனக் கருதி வருந்தினான்.
- குகனின் வருத்தம் அறிந்த இராமன், குகனிடம் துன்பம் இருந்தாலே இன்பம் வரும்.
- துன்பத்திற்குப் பின் இன்பம் உறுதியாக வரும்.
- இப்போது பிரிகிறோம் என்று எண்ணி வருந்தாதே.
- இதுவரை நாங்கள் நான்குபேர்தான் உடன்பிறந்தவர்களாக இருந்தோம்.
- உன்னையும் சேர்த்து ஐவர் ஆகின்றோம் ; நம் உறவு நீடிக்கும்.

www.kalvikadal.in

2. **இராமனும் சுக்ரீவனும் இருந்த காட்சியைக் கம்பர் எங்ஙனம் வருணிக்கின்றார்?**
- பகைவர்களை அழித்து அறங்களைக் காக்கும் நபர்கள் போல இருவரும் ஒன்றாகயிருந்தார்கள்.
- குறையான வலிமையும் இருள் போன்ற குணமும் உடைய பகைவர்களை அழித்து அறத்தினைக் காக்க ஒன்றாக இருந்தனர்.
- ஆசையை அறவே அழித்த இராமனும் ; வானரத் தலைவனான சுக்ரீவனும் அமாவாசைக் காலத்தில் ஒன்றாக இணைந்திருக்கும் சந்திரனையும் சூரியனையும் போன்று இருந்தார்கள்.

3. **இராமன் சுக்ரீவனிடம் கொண்ட உறவின் உறுதியை கம்பர் எவ்வாறு எடுத்துரைக்கின்றார்?**
- இராமன் சுக்ரீவனிடம் மிக ஆழமான பாசம் கொண்டிருந்தான்.
- சுக்ரீவனைப் பார்த்து, "இனி நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை" என்றான்.
- விண்ணிலும் மண்ணிலும் உள்ள உன் பகைவர் எனக்கும் பகைவர் ஆவர்.
- தீயவராக இருந்தாலும் உன் நண்பர்கள் என் நண்பர்கள் ஆவர்.
- உன் உறவினர் எல்லோரும் என் உறவினர்.
- அன்பு மிகுந்த என் சுற்றத்தினர் எல்லாரும் இனி உன் சுற்றத்தினர் ஆவர்.
- 'நீ, என் இனிய உயிர் நண்பன்' என்று இராமன் சுக்ரீவனிடம் கூறியதாகக் கம்பர் எடுத்துரைக்கின்றார்.

4. **"குன்று சூழ்வான் மகனொடும் அறுவர் ஆனோம்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் :**

இப்பாடல் வரி கம்பர் எழுதிய கம்பராமாயணத்தின் யுத்த காண்டத்தில் வீடணன் அடைக்கலப் படலத்தில் உள்ளது.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**பொருள் :**

நாங்கள் உடன்பிறந்தோர் நால்வராக இருந்தோம், எங்களுடன் குகன் சேர்ந்து ஐந்து பேராக இருந்தோம். அதன்பிறகு கதிரவனின் மகனான சுக்ரீவன் இணைந்து தற்போது ஆறுபேராக இருக்கின்றோம்.

**விளக்கம் :**

சீதையைக் கவர்ந்து வந்தது தவறென வீடணன் இராவணிடம் கூறினான். வீடணனின் பேச்சைக் கேட்காத இராவணன் வீடணனைக் கடிந்தான். எனவே, வீடணன் இலங்கையை விட்டு வெளியேறி இராமனிடம் வந்து அடைக்கலம் வந்து தன்னையும் ஏற்றுக்கொள்ளுமாறு இராமனிடம் வேண்டினான். அப்பொழுது இராமன், "கதிரவனின் மகனான சுக்ரீவனுடன் நாங்கள் இப்போது அறுவராக இருக்கின்றோம், உன்னையும் சேர்த்து எழுவரானோம்" என்று கூறுமிடத்தில் இப்பாடல் வரி இடம் பெற்றுள்ளது.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 56

**உங்கள் மனம் கவர்ந்த கம்பராமாயணப் பாத்திரம் எது? ஏன்? வகுப்பறையில் உரையாடுக.**

என் மனங்கவர்ந்த கம்பராமாயணப் பாத்திரம் அனுமன்.

- அனுமன் அஞ்சனனையின் மைந்தன், காற்றின் மைந்தன், சொல்லின் செல்வன், இராமனின் தூதன் என்றெல்லாம் புகழப்படுபவன்.
- பஞ்சவடியில் இராமனும் சீதையும் பிரிகின்றனர். பல இடங்களிலும் சீதையைத் தேடி இராம இலக்குவர் அலைகின்றனர். இடையே அனுமன், சடாயு, சுக்ரீவன், சவரி போன்ற உறவுகள் கிடைக்கின்றன.
- எனினும், கடல்தாண்டி இலங்கைசென்று, சீதாபிராட்டியை அடையாளம்கண்டு, சூளாமணியோடு அனுமன் இராமனிடம் திரும்புகிறான். வந்தவுடன் அனுமன் இராமனை வணங்கவில்லை. சீதை இருக்கும் தென்திசை நோக்கி வணங்கினான். இராமனும் சீதை நலமுடன் இருக்கிறான் என்பதை அனுமனின் செயலால் உணர்ந்தான். அனுமனின் நற்சொல்லுக்காகக் காத்திருக்கும் இராமனிடம்,

  **'கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்**
  **தெண்டிரை அலைகடல் இலங்கைத் தென்னகர்'**

  என்று கூறிச் சாந்தப்படுத்துகிறான்.

மேலும்,

**'விறபெருந் கடந்தோள்வீர! வீங்கு இலங்கை வெற்பில்**
**நற்பெரும் தவத்தாளாய நங்கையைக் கண்டேன் அல்லேன்**
**இற்பிறப்பதென்பதொன்றும் இரும்பொறையென்ப தொன்றும்**
**கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக்கண்டேன்.'**

என்ற அனுமனின் இந்த பதில்களே இராம அவதாரத்தில் இராமனுக்கு மகிழ்வும் அமைதியும் தந்ததாகக் கொள்ளப்படுகிறது.

எனவேதான் இராமனுக்குப் பிடித்த அனுமனை எவர்க்கும் பிடிக்கும்.

✹✹★★★✹✹





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





# இயல் 3

துணைப்பாடம்

# உரிமைத்தாகம்

- பூமணி

## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

1. **'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் ............ கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.**

| |
|---|
| **கதைமாந்தர்கள்:** |
| **முத்தையா, வெள்ளைச்சாமி, பங்காருசாமி, முத்தையா மனைவி மூக்கம்மாள்.** |

**முன்னுரை :**

ஆசிரியர் பூமணி எழுதிய உரிமைத்தாகம் என்னும் சிறுகதையில் அண்ணன், தம்பியின் மன விரிசலால், தம்பி படும் துன்பத்தை எழுத்தோவியமாக்கித் தந்திருக்கிறார். அண்ணன் முத்தையன், தம்பி வெள்ளைச்சாமி.

www.kalvikadal.in

**தம்பி வெள்ளைச்சாமி கடன் வாங்குதல் :**

வெள்ளைச்சாமி தன் திருமணத்திற்குப் பிறகு அண்ணனைவிட்டுப் பிரிந்து விடுகிறான். இந்நிலையில் ரூ.200 நிலத்தின் மீது பங்காருசாமியிடம் கடனாக வாங்குகிறான். இது முத்தையனுக்குத் தெரியாது. ஆனால், முத்தையனின் மனைவி இதைத் தெரிந்து கொண்டு முத்தையனிடம் கூறுகிறாள். வெள்ளைச்சாமியால் கடனை அடைக்க முடியவில்லை. இதற்கிடையே முத்தையனின் மனைவி தன் நகைகளை அடகு வைத்துக் கடனை அடைக்கச் சொல்கிறாள்.

**முத்தையன் பங்காரு வீட்டிற்குச் செல்லுதல் :**

முத்தையன் ரூ.200-யை எடுத்துக் கொண்டு பங்காருசாமி வீட்டுக்குச் செல்கிறான். அண்ணன் தம்பிக்காக வந்திருப்பதை அறிந்த பங்காரு ரூ.400 தந்தால் எழுதிக் கொடுத்த பத்திரத்தைத் தருவதாகக் கூறுகிறார். வீடு திரும்பிய முத்தையன் தம்பியோடு சென்று நிலத்தை உழுகிறான். செய்தியறிந்த பங்காரு முத்தையன் மற்றும் வெள்ளைச்சாமியுடன் சண்டை புரிகிறார். கடைசியில் நீதிமன்றத்திற்குப் போவேன் என்று மிரட்டுகிறார் பங்காரு. அதை ஏற்காத அண்ணன் தம்பிகள் பங்காருவை விரட்டுகிறார்கள். அவரும் பயந்து ஓடிவிடுகிறார். இது கதையின் முடிவு.

**அண்ணன் தம்பி இணையாதிருந்தால்....**

பங்காருசாமி நீதிமன்றத்திற்குச் சென்றார். வழக்கறிஞர் ஒருவரைப் பார்த்து வெள்ளைச்சாமி மீது வழக்குத் தொடுத்தார். இந்தச் செய்தியை வெள்ளைச்சாமி யாரிடமும் சொல்லவில்லை. நீதிமன்றத்திற்கு இரண்டுமுறை சென்று வந்தான். ஒரு நாள் பங்காருசாமியைப் பார்த்து என் நிலத்தைத் திருப்பிக் கொடுங்கள். விவசாயம் செய்து கடனை அடைக்கிறேன் என்கிறான். பங்காருசாமி அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. மனம் உடைந்த வெள்ளைச்சாமி வீட்டின் வாயில் படியிலேயே விஷம் சாப்பிட்டு மயக்க மடைகிறான்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**மருத்துவமனையில் வெள்ளைச்சாமி :**

வெள்ளைச்சாமியை பங்காருசாமியே மருத்துவமனையில் சேர்க்கிறார். சிகிச்சை பெறுகிறான் வெள்ளைச்சாமி, செய்தியறிந்த முத்தையன் மருத்துவமனை சென்று விபரம் அறிகிறான். முத்தையன் தன் தம்பிக்காக, பணம் கேட்டு பங்காரு மிரட்டியதால்தான் விஷம் குடித்தான் என்று காவல் துறையில் புகார் கொடுக்கச் சென்றான் பங்காருசாமி முத்தையனை வழிமறித்து அடமானப் பத்திரத்தைத் திருப்பிக் கொடுப்பதாகவும் வாங்கிய 200 ரூபாயைக் கொடுத்தாலே போதும் என்று வேண்டுகிறார். ஒப்புக்கொண்ட முத்தையன் புகார் கொடுப்பதைத் தவிர்த்து தம்பி வெள்ளைச்சாமியோடு வீடு திரும்பினான்.

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!**

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **'அஞ்ஞாடி' என்னும் புதினத்திற்காகச் சாகித்திய அகாதமி விருது பெற்றவர்**
அ) ரா.கி. ரங்கராஜன் ஆ) புதுமைப்பித்தன்
இ) பூமணி ஈ) உத்தமசோழன் **விடை: இ**

2. **பூமணி எழுதிய சிறுகதைத் தொகுப்பு**
அ) அறுப்பு, வரப்புகள் ஆ) அறுப்பு, வயிறுகள்
இ) நொறுங்கல்கள், வாய்க்கால் ஈ) அறுப்பு, வாய்க்கால் **விடை: ஆ**

www.kalvikadal.in

3. **பூமணி எழுதிய புதினங்கள்**
(அ) வரப்புகள், வயிறுகள் (ஆ) அஞ்ஞாடி, அறுப்பு
(இ) வரப்புகள், அஞ்ஞாடி (ஈ) பிறகு, வயிறுகள் **விடை : இ**

4. **முத்தையனின் மனைவி பெயர்**
அ) செல்வி ஆ) மூக்கம்மா இ) அல்லி ஈ) கண்ணம்மா **விடை: ஆ**

5. **வெள்ளைச்சாமியின் அண்ணன் பெயர்**
அ) முத்தையன் ஆ) பங்காருசாமி இ) செவத்தையன் ஈ) கருப்பசாமி **விடை: அ**

6. **'கிரயம்' என்ற சொல்லின் பொருள்**
அ) ஒப்பந்தம் ஆ) வாக்குறுதி இ) விலை ஈ) வாடகை **விடை: இ**

7. **உரிமைத்தாகம் என்ற சிறுகதையின் ஆசிரியர்**
அ) புதுமைப்பித்தன் ஆ) பூமணி இ) உத்தமசோழன் ஈ) சுஜாதா **விடை: ஆ**

8. **சரியானதைத் தேர்க.**
அ) கி.ரா - கி.ராமராஜன்
ஆ) அறுப்பு - நாடகம்
இ) கொம்மை - புதினம்
ஈ) முத்தையன் - அல்லி **விடை: இ**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





9. **பொருந்தாததைத் தேர்க.**

அ) உரிமைத்தாகம் - பூமணி
ஆ) வாய்க்கால் - புதினம்
இ) வயிறுகள் - சிறுகதைத் தொகுப்பு
ஈ) மூக்கம்மா - வெள்ளைச்சாமியின் மனைவி **விடை: ஈ**

10. **பொருத்துக.**

அ) பங்காரு சாமி - 1. மூக்கம்மா
ஆ) முத்தையன் - 2. மேலூர்
இ) வெள்ளைச்சாமி - 3. திரைப்படம்
ஈ) கருவேலம்பூக்கள் - 4. நம்பிக்கைக்கௌரவம்

அ) 2, 1, 4, 3 ஆ) 2, 1, 3, 4 இ) 2, 4, 1, 3 ஈ) 3, 4, 1, 2 **விடை: ஆ**

11. **'உரிமைத் தாகம்' என்னும் சிறுகதை ................ என்னும் தொகுப்பில் உள்ளது.**

அ) அறுப்பு ஆ) வயிறுகள்
இ) நொறுங்கல்கள் ஈ) பூமணி சிறுகதைகள் **[விடை: ஈ]**

12. **பூமணி எப்புதினத்திற்காக 2014இல் சாகித்ய அகாதெமி விருது பெற்றார்?**

அ) வெக்கை ஆ) கொம்மை இ) அஞ்ஞாடி ஈ) வாய்க்கால் **[விடை: இ]**

13. **பூமணி ................ எழுத்தாளர்களில் ஒருவர்.**

அ) நெய்தல் ஆ) கரிசல் இ) தஞ்சை ஈ) கொங்கு **[விடை: ஆ]**

14. **'பூமணி' என்பாரின் இயற்பெயர்**

www.kalvikadal.in

அ) பூ. மணிரத்னம் ஆ) பூ. மாணிக்கவாசகர்
இ) பூவரசு மணிகண்டன் ஈ) பூ. மணிகண்டன் **[விடை: ஆ]**

15. **கி.ரா. என்னும் முன்னத்தி ஏரைப் பின்தொடர்கின்ற பின்னத்தி ஏர்**

அ) ந. பிச்சமூர்த்தி ஆ) அகிலன் இ) வேணுகோபாலன் ஈ) பூமணி **[விடை: ஈ]**

16. **பூமணி ஆற்றிய பணி**

அ) தமிழ்நாடு அரசின் கூட்டுறவுத் துறையில் துணைப்பதிவாளர்
ஆ) காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் பதிவாளர்
இ) சென்னை மாநிலக் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர்
ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

17. **பூமணி எடுத்துள்ள திரைப்படம்**

அ) கருத்தம்மா ஆ) கருவேலம்பூக்கள்
இ) தண்ணீர் தண்ணீர் ஈ) பொற்காலம் **[விடை: ஆ]**

18. **பூமணியின் சிறுகதைத் தொகுப்புகளில் பொருந்தாததைக் கண்டறிக.**

அ) அறுப்பு ஆ) வயிறுகள்
இ) நொறுங்கல்கள் ஈ) சித்தன்போக்கு **[விடை: ஈ]**

19. **வெக்கை, நைவேத்தியம், வரப்புகள், வாய்க்கால், பிறகு, அஞ்ஞாடி, கொம்மை ஆகிய புதினங்களை இயற்றியவர்**

அ) மேலாண்மை பொன்னுசாமி ஆ) பூமணி
இ) நாகூர் ரூமி ஈ) தி. ஜானகிராமன் **[விடை: ஆ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







**20. பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | திருகை | - | 1. கிராம நிர்வாக அலுவலர் |
| ஆ) | குறுக்கம் | - | 2. ஓலைப்பட்டி |
| இ) | கடகம் | - | 3. சிறிய நிலப்பரப்பு |
| ஈ) | கொராமுனுசு | - | 4. மாவு அரைக்கும் கல் |

அ) 4, 3, 2, 1 ஆ) 2, 1, 3, 4 இ) 3, 2, 1, 4 ஈ) 4, 2, 1, 3 **[விடை: அ]**

**21. 'உரிமைத்தாகம்' என்னும் சிறுகதை எடுத்துரைப்பது**

அ) நிலத்துடனான உறவு குடும்ப உறவை வலுப்படுத்துவதை

ஆ) வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட இழப்புகள்

இ) முதலாளித்துவம் தொழிலாளிகளை நசுக்குவதை

ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

## கற்பவை கற்றபின்

பக்கம்: 62

**1. 'நமது நிலமே நமது அடையாளம்' - இக்கூற்றை விவாதிக்க.**

நம்மை யார் என்று கேட்பவருக்குப் பெயரைச் சொன்னவுடன் உன் ஊர் எது என்று கேட்பார்கள்: காரணம் என்னவென்றால், எந்த ஊர் என்றால் எந்தவிதமான (மண்ணில்) நிலத்தில் வாழ்ந்தவன், அவனது பண்புகள் என்னவாக இருக்கும் என்று கூறிவிடலாம். இது அனுபவத்தால் மட்டுமே முடியும்.

www.kalvikadal.in

ஒவ்வொரு நிலத்தில் வாழும் மண்ணிற்குத் தகுந்தாற்போல்தான் வாழ்பவரின் குணம் ஒத்திருக்கும். சங்க காலத்திலேயும் திணைக்குத் தகுந்தாற்போல பண்புகள் பெற்றிருப்பதை அறிய முடிகிறது. மண்ணின் அடிப்படையில்தான் மனங்கள் இருப்பதுண்டு.

நமது நிலமே, நமது அடையாளம் - என்பது நமது பரம்பரையின் அடையாளமாகவே கொள்ளலாம்.

**2. வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உறவினர்களின் பங்கு முக்கியமானது என்பதைக் குறித்துப் பேசுக.**

அனைவருக்கும் வணக்கம்!

உலகில் மக்கள் பெருக்கம் அதிகமாகிவிட்டது. ஆனால், உறவுகள் சுருங்கிவிட்டது. வேலைப் பளுவின் காரணமாக நாள்தோறும் உழைப்பில் மட்டுமே கவனம் செலுத்தப்படுகிறது. உண்ணும் உணவில்கூட சிரத்தை எடுத்துக் கொள்வது கிடையாது.

பிள்ளைகளின் படிப்பில் அக்கறை எடுத்துக் கொள்ள நேரமில்லை. உடலைப்பற்றிய சிந்தனை இல்லாமல் இருக்கிறோம். எல்லாம் அவசரக் கோலங்கள். இந்நிலையில் எங்கள் வீட்டில் என் பெண்ணின் காதணி விழா. முதன் முதலில் எங்கள் வீட்டில் ஒரு விழா.

அவ்விழாவிற்கு எனக்கு ஒன்றுவிட்ட மாமா மகள் வந்திருந்தாள். ஏழ்மையான தோற்றம். ஏண்டா வந்தாள் என்று நினைத்தேன். ஆனால் காதணி விழாவின் அடுத்த அடுத்த நிகழ்வுகள், பந்தி பரிமாறுதல், உறவினர்களை நலம் விசாரித்தல் போன்ற எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுச் செய்தாள். என் உடன்பிறப்புகள் எல்லாம் வேடிக்கைப் பார்க்க, தனி ஒருவராக என் வீட்டு விழாவை நன்முறையில் நடத்திக் கொடுத்த உறவின் முக்கியத்தை என்றும் மறவேன். உறவுகள் அது நமது சிறகுகள்.

✸✸★★★✸✸





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



12

இயல் 3
இலக்கணம்

# பொருள் மயக்கம்

## இலக்கணத் தேர்ச்சி கொள்

பக்கம்: 67

1. **பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.**
அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்
ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்
இ) நிறுத்தற்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்
ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல் **விடை: இ**

2. **வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | பாலை பாடினான் | - | 1. தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான் |
| ஆ) | பாலைப் பாடினான் | - | 2. தேரினைப் பார்த்தான் |
| இ) | தேரை பார்த்தான் | - | 3. பாலினைப் பாடினான் |
| ஈ) | தேரைப் பார்த்தான் | - | 4. பாலைத் திணை பாடினான் |

அ) 4, 1, 3, 2 ஆ) 2, 3, 1, 4 இ) 4, 3, 1, 2 ஈ) 2, 4, 1, 3 **விடை: இ**

www.kalvikadal.in

3. **வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடரமைக்க.**
**மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.**
அறிவியல் மாணவர்கள் வரிசையில் நின்று கண்காட்சியைக் கண்டனர்.

4. **கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.**
(எ.கா)

| | |
|---|---|
| **முன்** | அவன் முன்வந்து கூறினான். |
| | அவன்முன் வந்து கூறினான். |

| | |
|---|---|
| **தானே** | அவன்தானே செய்தான். |
| | அவன் தானே செய்தான். |

| | |
|---|---|
| **கொண்டு** | கத்திக் கொண்டு வந்தான். |
| | கத்திக்கொண்டு வந்தான். |

| | |
|---|---|
| **விட்டான்** | அண்ணன் அடித்து விட்டான். |
| | அண்ணன் அடித்துவிட்டான். |

5. **காற்புள்ளி இடாமல் எழுதுவதானல் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.**
எழுதும்போது காற்புள்ளியிடாமல் எழுதினாலோ இடம்மாற்றிக் காற்புள்ளி இட்டாலோ, தொடரில் உள்ள சொற்கள், அத்தொடருக்குரிய முழுமையான பொருளைத் தராமல் வேறு பொருளைத் தரும்.
**சான்று :** அவன், அக்கா வீட்டிற்குச் சென்றான், அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றான்.







Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in





6. **சல சல, வந்து வந்து, கல கல, விம்மி விம்மி, இவற்றில் இரட்டைக்கிளவித் தொடர்களை எழுதி, அவற்றை எழுதும் முறையைக் கூறுக.**

இரட்டைக்கிளவித் தொடர்கள் - சலசல, கலகல.

இரட்டைக்கிளவிச் சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்.

- நீர் சல சலவென ஓடியது (தவறு)
- நீர் சலசலவென ஓடியது (சரி)
- கல கலவென சிர்த்தாள். (தவறு)
- கலகலவெனச் சிரித்தாள். (சரி)

7. **திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?**

- 'திருவளர் செல்வன்' என்பதே சரியான தொடராகும்.
- திருவளர் செல்வன் என்பது வினைத்தொகை.
- வினைத் தொகைக்கு சொல்லுக்கிடையில் வல்லினம் மிகக்கூடாது என்ற இலக்கண விதியின் படி திருவளர்செல்வன் என்பதே சரியான தொடராகும்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **சரியானதைத் தேர்க.**

அ) உடம்படுமெய் - பேசியபடி
ஆ) பண்புத்தொகை - கத்துகடல்
இ) சொற்புணர்ச்சி - சுடர் ஆழி
ஈ) மேடுபள்ளம் - எதிரிணைச் சொல்

**விடை: ஈ**

www.kalvikadal.in

2. **சரியானதைத் தேர்க.**

அ) துணைவினையுடன் கூடிய சொற்களைப் பிரித்து எழுத வேண்டும்.
ஆ) இடைச் சொற்களைப் பிரித்து எழுத வேண்டும்.
இ) பெயர்ச்சொல்லில் இடைச் சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்.
ஈ) வினைத்தொகையாக வரும் சொற்கள் ஒரு சொல் அல்ல.

**விடை: இ**

3. **சரியானதைத் தேர்க.**

அ) காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் புறப்பட்டான்.
ஆ) இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்.
இ) பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.
ஈ) இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.

**விடை: ஈ**

4. **தமிழில் படர்க்கைப் பலர்பால் சொல்லாகிய தாங்கள் என்பது தற்போது .............. இடத்திலும் வரும்.**

அ) படர்க்கை
ஆ) தன்மை
இ) இவற்றில் எதுவுமில்லை
ஈ) முன்னிலை

**விடை: ஈ**

5. **பொருந்தாததைத் தேர்க.**

அ) பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றிற்கு இடையில் நின்று பொருளைத் தெளிவாக உணர்த்தி நிற்கும் இடைச்சொற்களைச் சேர்த்து எழுதக்கூடாது.

ஆ) எதிரிணைச் சொற்களைச் சேர்த்தே எழுத வேண்டும்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







இ) விடைச்சொல்லுடன் கூடிய சொற்களைச் சேர்த்தே எழுத வேண்டும்.

ஈ) பண்புத்தொகையாக வரும் சொற்கள் ஒரு சொல் என்னும் தன்மை கொண்டவை. எனவே அவற்றைப் பிரித்து எழுதக் கூடாது. **விடை: அ**

6. **பொருந்தாததைத் தேர்க.**

அ) குதிரையும் யானையும் வேகமாக ஓடின.

ஆ) அவன் வெண்மதியிடம் பேசினான்.

இ) பறவைகள் நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றது.

ஈ) கோவலன் மதுரைக்குச் சென்றான். **விடை: இ**

7. **பொருத்துக.**

அ) அவன் - 1. அன்று

ஆ) அவர் - 2. அல்ல

இ) நாய் - 3. அல்லர்

ஈ) குதிரைகள் - 4. அல்லன்

அ) 4, 3, 1, 2 ஆ) 4, 1, 3, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 4, 2, 1, 3 **விடை: அ**

8. **பொருத்துக.**

அ) உற்றாருறவினர் - 1. நேரிணைச் சொற்கள்

ஆ) சீரும்சிறப்பும் - 2. உம்மைத் தொகை

இ) மேடுபள்ளம் - 3. வினைத் தொகை

ஈ) கத்துகடல் - 4. எதிரிணைச் சொற்கள்

அ) 2, 1, 3, 4 ஆ) 2, 1, 4, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 3, 4, 1, 2 **விடை: ஆ**

www.kalvikadal.in

9. **சரியான தொடரைக் கண்டுபிடி.**

அ) ஆண்டுதோறும் மறைந்த தி. ஜானகிராமன் நினைவாகக் கூட்டம் நடைபெறும்.

ஆ) மறைந்த தி. ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்.

இ) தி. ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் மறைந்த கூட்டம் நடைபெறும்.

ஈ) மறைந்த நினைவாக தி. ஜானகிராமன் ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும் **[விடை: ஆ]**

10. **சரியான கருத்துகளைக் கண்டறிக.**

i) பண்புத்தொகை, வினைத்தொகையாக வரும் சொற்கள் ஒருசொல் என்னும் தன்மை கொண்டவை.

ii) எனவே அவற்றைப் பிரித்து எழுதக் கூடாது.

iii) செங்கடல் என்று பிரிக்காமல் எழுதுவதே சரியானது.

அ) i, ii சரி ஆ) ii, iii சரி இ) iii) மட்டும் தவறு ஈ) மூன்றும் சரி **[விடை: ஈ]**

11. **பெயர்ச்சொல் வினைச்சொல் ஆகியவற்றிற்கு இடையில் நின்று பொருளைத் தெளிவாக உணர்த்தி நிற்கும் இடைச்சொற்களை .................. எழுத வேண்டும்.**

அ) சேர்த்து ஆ) பிரித்து

இ) இடைவெளியுடன் ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

12. **சரியான கூற்றுகளைக் கண்டறிக.**

i) இடைச்சொல்லுடன் கூடிய சொற்களைச் சேர்த்தே எழுத வேண்டும்.

ii) உடம்படுமெய்கள் அமைந்த சொற்களில் உடம்படுமெய்களைச் சேர்த்துத்தான் எழுதல் வேண்டும்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

iii) பன்மையை உணர்த்தும் 'கள்' விகுதி சேர்ந்த சொற்களைப் பிரிக்காமல் எழுத வேண்டும்.

iv) இரட்டைக் கிளவிச் சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்.

அ) i, ii சரி ஆ) ii, iii சரி

இ) iii மட்டும் தவறு ஈ) நான்கும் சரி **[விடை: ஈ]**

13. **அது என்னும் வேற்றுமை உருபு ................ உரியது.**

அ) அஃறிணைக்கு ஆ) உயர்திணைக்கு

இ) ஐந்திணைக்கு ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

## குறுவினா

1. **படிப்போர்க்கும் கேட்போருக்கும் எப்போது பொருள் குழப்பம் ஏற்படும்?**

எழுதும்போதோ, பேசும் போதோ தேவையான இடங்களில் இடைவெளி விடாததும், தேவையற்ற இடங்களில் இடைவெளி விடுவதும், நிறுத்தற்குறிகளை உரிய இடங்களில் இடாமல் எழுதுவதும், இடக்கூடாத இடங்களில் இடுவதும், வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுவதும் தேவையற்ற இடங்களில் இட்டும் எழுதினால் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் பொருள் குழப்பம் ஏற்படும்.

2. **இடைவெளி விட்டு எழுதும் போது பொருள் வேறுபடுவதற்கு இரண்டு சான்று தருக.**

**சான்று :**

- ஐந்து மாடி வீடு - ஐந்து மாடிவீடு
- அப் பாவின் நலங்காண்க. - அப்பாவின் நலங்காண்க.

www.kalvikadal.in

3. **வல்லின மெய்களால் ஏற்படும் பொருள் வேறுபாட்டிற்கு இரண்டு சான்று தருக.**

**சான்று :**

பிட்டுத் தின்றான் - பிட்டைத் தின்றான்

பிட்டு தின்றான் - பங்கு வைத்து தின்றான்

ஈட்டிக் கொண்டு வந்தான் - மேற்செய்யும் ஈட்டியைக் கொண்டு வந்தான்

ஈட்டி கொண்டு வந்தான் - பொருளை ஈட்டி கொண்டு வந்தான்

4. **இடைச்சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதினால் ஏற்படும் தவறினை இரண்டு சான்றுகள் மூலம் நிரூபி.**

இடைச்சொற்கள் : பால், படி

**பால் :** அவன்பால் கொண்டுசென்றான். (அவனிடம் கொண்டு சென்றான்)

அவன் பால்கொண்டு சென்றான். (அவன் பால் (குடிக்கும் பால்) கொண்டு சென்றான்)

**படி :** அளக்கும்படி வேண்டினான். (பொருளை அளக்கும்படி வேண்டினான்)

அளக்கும் படி வேண்டினான். (பொருளை அளக்க படி வேண்டினான்)

5. **தொடரமைப்பு மாறினால் பொருளும் மாறிவிடும் என்பதற்குச் சான்று தருக. தொடரமைப்பு மாறினால் பொருள் மாறிவிடும்.**

**சான்று :** ஆண்டு தோறும் மறைந்த தி.ஜானகி ராமன் நினைவாகக் கூட்டம் நடைபெறும்.

இத்தொடர் தி.ஜானகி ராமன் ஆண்டுதோறும் மறைந்தார் என்னும் தவறான பொருளைத் தருகின்றது.

**சரியான தொடரமைப்பு :**

“மறைந்த தி.ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்” என்பதேயாகும்.







Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



6. **உரிச்சொற்களை எப்படிப் பயன்படுத்த வேண்டும்?**

உரிச்சொற்களைப் பெயருடனும் வினையுடனும் பயன்படுத்தும் போது சேர்த்தே எழுத வேண்டும்.

**சான்று :** கடிமணம் (சரி)

கடி மணம் (தவறு)

## சிறுவினா

1. **பிழை தவிர்க்கச் சில குறிப்புகளைத் தருக.**

- ஒருவர் சொல்லச் சொல்லக் கேட்டு எழுதிப் பழகுதலும் உதவும்.
- சொல்லுக்கான பொருளை நினைவில் கொள்ளுதல் சிறந்த பயிற்சியாகும்.
- மரபுச் சொற்களைச் கற்றல் இன்றியமையாத ஒன்றாகும்.
- இலக்கண விதிகளை மனத்துள் பதித்து வைப்பதும் நமது கடமை.
- எழுதியதை மீளப் படித்துப் பார்த்தல் பிழையில்லாத் திருத்தலும் கடமையாகும்.

2. **தாய்வழிக் குடும்பத்தைப் பற்றித் தமிழ் இலக்கியங்களில் கூறப்படுபவன யாவை?**

- சங்க காலத்தில் கண சமூகத்துக்குத் தாயே தலைமை ஏற்றிருந்தான்.
- தாய் வழியாகவே குலத்தொடர்ச்சி குறிக்கப்பட்டது.
- பதிற்றுப் பத்து கூறும் சேர நாட்டு மருமக்கள் தாய் முறை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- சிறுவர்தாயே பேரிற் பெண்டே (புறம். 290)
- செம்முது பெண்டின் காதலஞ்சிறா அன் (புறம். 276)
- வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன் (புறம். 277)
- முளரிமருங்கின் முதியோள் சிறுவன் (புறம். 278)
- என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும் (கலி. பாலை. 8)

முதலான தொடர்களில் ‘இவளது மகன்’ எனறே கூறப்பட்டது. இவனது மகன் எனக் கூறப்படவில்லை என்பது நோக்கத்தக்கது.

www.kalvikadal.in

3. **சங்ககாலத்தில் தந்தைவழிக் குடும்ப முறை குறித்தெழுதுக.**

- மனித குலத்தில் ஆதியில் தோன்றி வளர்ந்த தாய்வழி முறையானது தமிழர்களிடம் இருந்ததைச் சங்க இலக்கியங்களின் வழி அறிய முடிந்தாலும், சங்க காலத்திலேயே ஆண் மையச் சமூக முறை வலுவாக வேர் ஊன்றிய பரவலாகிவிட்டதையும் காண முடிகிறது.
- ஆண் மையச் சமூகத்தில் பெண் திருமணத்திற்குப் பின் தன் கணவனுடைய தந்தையகத்தில் வாழ வேண்டும்.

**“நும்மனைச் சிலம்பு கழிஇ அயரினும்**
**என்மனை வதுவை நல்மணம் கழிக”**

- என்னும் ஐங்குறுநூற்று பாடல் வரிகள் மணமான பின் தலைவன் தலைவியை அவனுடைய இல்லத்திற்கு அழைத்து வந்த போது அவனுடைய தாய் அவளுக்குச் சிலம்புகழி நோன்பு செய்திருக்கிறாள் என்பதை அறிவதுடன் மணமக்களின் வாழ்விடம் கணவன் அகம் என்பதை உறுதிப்படுத்தலாம்.
- **“மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே”** என்னும் குறுந்தொகை பாடல் மூலம் பெண் தன் கணவனையே முழுவதும் சார்ந்திருந்த நிலையை அறிய முடிகிறது.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in



## கற்பவை கற்றபின்

பக்கம்: 66

**தொடர்களைப் பொருள் மயக்கமின்றி எழுத வழிகாட்டும் உரைநடை நெறிகளைப் பின்பற்றி ஐந்து தொடர்களை எழுதுக.**

- பணி முடிந்து நேற்று மாலை வீடு திரும்பினேன்.
- நேற்று நான் வைகையில் குளித்தேன்.
- மாநில அளவில் தமிழ்நாடு கல்வியில் மூன்றாம் இடத்தில் உள்ளது.
- ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது மாணவர்கள் பேசுவதைத் தவிர்த்தல் வேண்டும்.
- என் அம்மாவின் சமையல் என்றுமே சுவையாய் இருக்கும்.

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 69

### சான்றோர் சித்திரம்



*பரிதிமாற் கலைஞர்*
*1875 – 1903*

வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார் பேராசிரியர். பாடத்தில் மனம் ஒட்டாது கவனமின்றி இருந்த மாணவர் ஒருவரிடம், "நமது சொற்பொழிவைப் பொருட்படுத்த விரும்பாத நீ இங்கிருந்து எழுவாய், நீ இங்கிருப்பதால் உனக்கோ பிறர்க்கோ பயனிலை, இங்கிருந்து உன்னால் செயல்படுபொருள் இல்லை, ஆனால் வகுப்பில் இருந்து வெளியேறுக" என நயம்பட உரைத்து வெளியேற்றினார். அவர்தான் 'திராவிட சாஸ்திரி' என்று சி. வை. தாமோதரனாரால் போற்றப்பட்ட பரிதிமாற் கலைஞர். அவர் தந்தையாரிடம் வடமொழியையும் மகாவித்துவான் சபாபதியாரிடம் தமிழும் பயின்றார்; எப். ஏ (F. A – First Examination in Arts) தேர்வில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று பாஸ்கர சேதுபதி மன்னரிடம் உதவித்தொகை பெற்றார். சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் பி.ஏ பயின்று, தமிழிலும் வேதாந்த தத்துவ சாத்திரத்திலும் பல்கலைக்கழக அளவில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றுத் தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்றார். 1893 ஆம் அண்டு சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் உதவுத் தமிழாசிரியராகப் பணியாற்றத் தொடங்கி, பின்பு தலைமைத் தமிழாசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.

ரூபாவதி, கலாவதி ஆகிய நாடக நூல்களையும் களவழி நாற்பது நூலைத் தழுவி மான விஜயம் என்னும் நூலையும் இயற்றியுள்ளார். ஆங்கில நாடக இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு நாடகவியல் என்னும் நாடக இலக்கண நூலையும் இயற்றினார். இவரது தனிப்பாசுரத் தொகை என்னும் நூல் ஜி.யு. போப் அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. மு.சி. பூர்ணலிங்கனாருடன் இணைந்து இவர் நடத்திய ஞானபோதினி அக்காலத்தில் குறிப்பிடத்தகுந்த அறிவியல் இதழாகத் திகழ்ந்தது. தமிழை உயர்தனிச் செம்மொழி என்று தன் பேச்சின் மூலம் முதன் முதலில் மெய்ப்பித்தவர் இவரே. பின்னாளில் 2004 ஆம் ஆண்டு நடுவண் அரசு தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழியாக அறிவித்தது. பெற்றோர் தனக்கு இட்ட பெயரான சூரியநாராயணர் என்ற வடமொழிப் பெயரைத் தமிழில் பரிதிமாற் கலைஞர் என்று பெயர் மாற்றம் செய்து கொண்டார். தமிழ், தமிழர் முன்னேற்றம் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றுவதைத் தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டிருந்த இவர் தம் 33 ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

தமிழைச் செம்மொழியென்று நிறுவி, அவர் எழுதிய கட்டுரையின் கீழ்வரும் சில வரிகள் அவருடைய உரைநடை ஆற்றலைத் தெரிவிக்கும்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

உயர்தனிச் செம்மொழி என்னும் கட்டுரையிலிருந்து, "பலமொழிகட்குத் தலைமையும், மிக்க மேதமையும் உடைய மொழி, உயர்மொழி, தனித்து இயங்க வல்ல ஆற்றல் சார்ந்தது தனிமொழி. திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி செம்மொழி, ஆயின் தமிழ் உயர்தனிச் செம்மொழியாம்.

**வினாக்கள்:**

1. **சி.வை. தாமோதரனார் பரிதிமாற்கலைஞரை எவ்வாறு போற்றினார்?**
2. **பரிதிமாற்கலைஞர் எழுதிய நாடக நூல்கள் யாவை?**
3. **கீழ்வரும் சொல்லின் இலக்கணத்தையும், புணர்ச்சி விதியினையும் எழுதுக.**
4. **பரிதிமாற்கலைஞர் தமிழுக்குத் தந்திட்ட பெருமைமிகு வரிகளுள் ஒன்றினை எழுதுக.**
5. **சூரிய நாராயணர் - இதன் தமிழாக்கம் என்ன?**

**விடைகள்:**

1. திராவிட சாஸ்திரி.
2. ரூபாவதி, கலாவதி.
3. செம்மொழி - பண்புத்தொகை
   செம்மொழி - செம்மை + மொழி
   ஈறுபோதல் - செம் + மொழி = செம்மொழி
4. திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும், பொருந்திய தூய்மொழி செம்மொழி.
5. பரிதிமாற்கலைஞர்.

## தமிழாக்கம் தருக.

www.kalvikadal.in

In terms of human development objectives, education is an end in itself, not just a means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life-and that is the main theme of this chapter-let it be clearly stated that educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.

கல்வி என்பது மனித வளர்ச்சி அடிப்படையில் ஒன்று. அதுவே இறுதியானது. ஆயினும் அது முடிவானது அன்று. கல்வி என்பது மனிதனுடைய அடிப்படை உரிமை. இது மக்களின் பொருளாதாரம் சமூகம் மற்றும் அரசியல் சார்ந்த துறைகளினுடைய கதவுகளைத் திறக்க உதவும் திறவுகோல். இது வேலைவாய்ப்புகளையும், வருமானத்தையும் உயர்த்துகிறது. மனிதனுடைய வாழ்கையில் நல்ல வாய்ப்புகளைப் பற்றி பொருளாதார வல்லுநர்கள் விரிவாக ஆய்ந்துள்ளனர். மக்களுக்கு கல்வியறிவு வழங்குவது சிறந்த குறிக்கோளாகும். அது எந்த விதமான பொருள் மதிப்பையும் திருப்பி அளிக்காது.

## இலக்கிய நயம் பாராட்டல்

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி
பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க
ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன் இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம். — *நாமக்கல் கவிஞர்*



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**திரண்ட கருத்து:**

தாய்மொழியாகிய தமிழைப் பின்னுக்குத் தள்ளி பிறமொழிக்கு நாம் செய்யும் சிறப்பை நீக்குவோம். தமிழக்கு நிகர் உலகில் எம்மொழியும் இல்லை. அம்மொழியைக் கற்று இனிமைக் காண்போம் என்று கம்பன், வள்ளுவன் போன்றோர் சுட்டி காட்டிய சிறப்பினை உடையதாக தமிழ்மொழி விளங்குகிறது.

**தொடை நயம்:**

**தொடையற்ற பாக்கள்**
**நடையற்று போகும்**

என்பதற்கேற்ப இப்பாடலில் தொடை நயங்கள் மோனை, எதுகை, இயைபு, அளபெடை, முரண் அமைந்துள்ளது.

**மோனை :**

**குயவனுக்குப் பானை**
**செய்யுளுக்கு மோனை**

முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை.

**சான்று:**

| | | |
|---|---|---|
| **பெ**ற்றெடுத்த | **க**ற்றுணர்ந்த | **தெ**ற்றென |
| **பி**றமொழி | **க**ம்பனோடு | **தெ**ய்வக்கவி |

**எதுகை :**

**மதுரைக்கு வைகை**
**செய்யுளுக்கு எதுகை**

முதல் எழுத்து அளவொத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.

**சான்று:**

| | |
|---|---|
| பெ**ற்**றெடுத்த | க**ற்**றுணர் |
| உ**ற்**றெடுத்த | தெ**ற்**றென் |

**இயைபு :**

இறுதி எழுத்தோ ஓசையோ ஒன்றி வரத் தொடுப்பது இயைபு.

**சான்று:**

உண்**டோ**
விட்**ட**

**அணி நயம்:**

**குளத்துக்குத் தாமரை அழகு**
**கண்ணுக்கு மை அழகு**
**கவிதைக்கு பொய் அழகு**
**செய்யுளுக்கு அணி அழகு**

என்பதற்கு இப்பாடலில் கம்பன், பாரதி, வள்ளுவன் புகழும், தமிழின் புகழும் பாடுவதால் உயர்வு நவிற்சி அணி ஆகும்.

**முடிவுரை :**

கற்றாருக்கும், கல்லாருக்கும் ஏற்ற வகையில் எதுகை, மோனை, இயைபு இயைந்தோட, கற்பனை காட்சியளிக்க, சந்தம் தாளமிட, சுவை உண்டாகி, நா ஏக்கமுற, அணியோடு அழகுபெறும் வகையில் இக்கவிதை அமைந்துள்ளது.

www.kalvikadal.in



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## கவிதையைப் படித்தபின், அக்கவிதை கிளர்த்தும் உணர்வுகள் குறித்து விழிப்புணர்வு உரை ஒன்றை எழுதுக.

எங்களுக்கும் ஓர் ஆறுண்டு
வெறுமணல் பரப்பாய் விரிந்துகிடக்க
ஓணான்கள் முட்டையிட
கள்ளிகள் பிழைத்திருக்க
பிள்ளைகள் விளையாட
பன்றிகள் மேய்ந்திருக்க
வானத்தில் மேகமுண்டு
சூரியனில் மழையுண்டு
காகமோ குருவியோ
நிழல் ஒதுங்க
ஆறெங்கும் முள்மரமுண்டு
எங்களுக்கும் ஓர் ஆறுண்டு
ஆற்றுக்கோர் ஊருண்டு
ஊருக்கோர் சனமுண்டு
வாழ்வைப்போல் ஒன்றுண்டு

- *இளங்கோ கிருஷ்ணன்*

**விழிப்புணர்வு உரை:**

- இயற்கையின் கொடையாம் மழைநீரை நாம் சேகரிக்காமல் விடுகிறோம். மழை நீர் சேகரிப்புப் பகுதிகளில் பள்ளி, கல்லூரி, தொழிற்சாலைகள் என எத்தனையோ கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. விண்ணிலிருந்து புறப்பட்டு மண்ணில் தங்கலாம் என வந்த மழை வீணாகக் கடலில் கலக்கிறது.
- ஆற்று நீரைச் சேகரிக்க மறந்தோம். ஆனால் ஆற்று மணலைக் கொள்ளையடிக்க துணிந்தோம். மரம் வளர்க்க மறந்தோம். மரம் வெட்டத் துணிந்தோம். காக்கை குருவி எங்கள் ஜாதி என்றான் பாரதி. ஆனால் இன்று மழையும் மரமும் இல்லாததால் ஏதிலியாய் காக்கை குருவிகள் எங்கோ போயின?

## வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

1. என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.
   என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதிய**த்** தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா**ப்** பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை**ப்** போல எதிர்கொண்டு**த்** தீர்ப்பார்கள்.
2. எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.
   எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி**ச்** செல்வதனை**க்** கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி**த்** துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை**க்** கொள்.
3. நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.
   நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை**ப்** பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்த**க்** கவனம் அறிவை**ப்** பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை**த்** தேவையாகும்.
4. மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.
   மாணவர்கள் பெற்றோர்களை**த்** தமது நண்பர்களாக**ப்** பாவித்து நட்பு**க்** கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை**ப்** பெற்றோர்களுடன் பகிர்ந்து**க்** கொள்ள வேண்டும்.
5. ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.
   ஆசிரியருக்கு**க்** கீழ்ப்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை**த்** தெரிந்து**க்** கொண்டு, அறியாமையினை அகற்றி**ப்** பல நல்லனவற்றை**க்** கற்று கொடுக்கும்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**கீழ்க்காணும் பகுதியைப் படித்து அறிவிப்புப் பலகைக்கான செய்தியை உருவாக்குக.**

**வேர்களை விழுதுகள் சந்திக்கும் விழா, மே - 5, 2019**

**திருச்சிராப்பள்ளி.**

வேலை காரணமாக வெளிநாடுகளில் பிரிந்து வாழும் உறவினர்கள் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு சந்திக்கும் நிகழ்வு நடைபெற உள்ளது.

திருச்சி உறையூர் அன்பு நகரில் வசிக்கும் தங்கவேல் - பொன்னம்மாள் இணையரின் மூன்று தலைமுறை வழித் தோன்றல்கள் சந்திக்கும் நிகழ்வு மே - 5 ஆம் தேதி இனிதே நடைபெற உள்ளது.

உறவினர் கூட்டத்தில் தங்கவேல் - பொன்னம்மாள் அவர்களின் மகன்கள், மகள்கள், பேரன்கள், பேத்திகள், கொள்ளுப் பேரன்கள், கொள்ளுப் பேத்திகள் சந்தித்துப் பெரியோர்களிடம் வாழ்த்துப் பெறுகிறார்கள். இந்நிகழ்ச்சியைத் தங்கவேல் அவர்களின் கொள்ளுப் பேத்தி செல்வி கண்மணி அவர்கள் ஒருங்கிணைக்கிறார்.

**வேர்களை விழுதுகள் சந்திக்கும் விழா**

"இணைந்த உறவும்" "கசிந்த கண்ணீரும்"

| | | |
|---|---|---|
| **நாள்** | : | 05.05.2019 |
| **இடம்** | : | திருச்சி - உறையூர் தங்கவேல் பொன்னம்மாள் இல்லம். |
| **நிகழ்வு** | : | மூன்று தலைமுறை வழித் தோன்றல்கள் சந்திக்கும் நிகழ்வு. |
| **பங்கேற்பு** | : | தங்கவேல் - பொன்னம்மாள், மகன்கள், மகள்கள், பேரன்கள், பேத்திகள், கொள்ளுப் பேத்திகள் கொள்ளுப் பேரன்கள். |
| **நிகழ்வின் அவசியம்** | : | தங்கவேல் - பொன்னம்மாள் இணையரிடம் வாழ்த்துப் பெறுதல் |
| **நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்** | : | கொள்ளுப்பேத்தி கண்மணி |
| **விழைவு** | : | உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருக. |

"உருகுது நெஞ்சம் பெருகுது கண்ணீர்"

## மொழியோடு விளையாடு

பக்கம்: 71

### பட்டிமன்றம்

**தலைப்பு : தனி மனித வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுபவர்கள் உறவினர்களா? நண்பர்களா?**

**பெரிதும் உதவுபவர்கள் உறவினர்களா? (மறுத்துக்கூறல்)**

- மகாபாரத காலத்திலிருந்தே பங்காளிச் சண்டை இன்றும் நடந்தேறி வருவது தெரிந்ததே.
- பசியைப் பகைவனிடம் சொல், பங்காளியிடம் சொல்லாதே என்பது பழமொழி
- தான் வாழ பிறரைக் கெடுப்பவன் தான் உறவினர்
- பாச வார்த்தை முன்னால் பேசி பழித்துத் தூற்றுவான் பின்னால் அவன் உறவினன்.
- எனவே, உறவு என்பது உதவுதற்கு அல்ல, நம்மை உதறித் தள்ளுவதற்கே.

**பெரிதும் உதவுபவர்கள் நண்பர்களா? (உடன்பட்டுக் கூறுதல்)**

- உறவும் இல்லை ஒட்டும் இல்லை, ஒரே பலகையில் உட்கார்ந்து கற்றோம் பாடத்தை, உறவாக்கினோம் உள்ளத்தை.
- துன்பத்தில் துவளும் போது தோள் கொடுத்துத் துவளாமல் பாதுகாத்து நட்பு.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



- செய்வதறியாமல் தவித்த போது அமைச்சனாய் எனக்கு அறிவுரை தந்தது நட்பு
- தோல்வி கண்ட போது, துயரம் போக்கி, உற்சாக மூட்டி ஊக்கமளித்தது நட்பு
- தன் உதிரத்தையும் கொடுத்து உயிர் கொடுத்து தியாகத்தின் உச்சமாய் நிற்பது நட்பு.

**மூழ்காத ஷிப் ப்ரெண்ட்ஷிப்**

**சுழி குளம்**

நவமதி மேவிடவே

வசிகுற ளுடனட

மகுடன ருளடவி

திறனறி
வருளுமே!




பொதுமதி பலமேவு

துணிதரம் தரமே

மததவிர முதல

திரவிய நிரம்ப




**விளக்கம் :**

புதியஒளிமிக்கஅறிவினைப்பெற வேண்டுமென்றால், அறிவுச்சுரங்கமாக விளங்கும் திருக்குறளைக் கற்று அதன் வழி வாழ்க்கையை மேற்கொள்வாய்! மேலும், சிறந்த தலைவர்களின் வாழ்த்துகளையும் பெற்றுத் திறன் மிக்க பல்துறை அறிவினையும் பெறலாம்.

நவ மதி - புதுமையான ஒளிமயமான அறிவு

வசி - உயர்ந்த

மகுடன் - தலைவன்

அடவி - பெருதல்

**விளக்கம் :**

பல துறைகளிலும் பொது அறிவை வளர்த்துக் கொள். அது நல்லதொரு துணிச்சலைத் தரும். முனைப்பு தவிர்ந்தால் முதன்மைப் படுத்தப்படுவாய். செல்வமும் நிரம்பும்.

மத(ம்) தவிர - முனைப்பு நீங்க

திரவியம் - செல்வம்

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



இருப்பதோ ஒரே அறை

செய்வதோ நேறு மாறு

தொழிலோ வேறு வேறு

தொந்தரவோ பல நூறு

ஆகுமோ நல்ல ஆறு

தகுமோ தேர்ந்து பாரு.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





## பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.

**எ.கா. குமரன் வீடு பார்த்தேன் - குமரனை வீட்டில் பார்த்தேன்**

1. **மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்.**
   மாறனின் பேச்சுத்திறனை யார் வெல்ல முடியும்.
2. **போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன.**
   போட்டியில் வெற்றி பெற்றதற்காக கலைச் செல்விக்குப் பாராட்டுகள் குவிந்தன.
3. **காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.**
   காலையில் எழுந்து படித்தால் நமக்கு நன்மை ஏற்படும்.
4. **அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்.**
   அனைவரையும் அன்புடன் அழைத்தவனுக்குத் துன்பம் தர யாருக்கு மனம் வரும்?
5. **சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.**
   சான்றோருக்கு மதிப்புக் கொடுத்து வாழ்ந்தால் உயரலாம்.

## செய்து கற்போம்

உங்கள் குடும்ப உறவு வழிமுறைகளைக் கொண்டு குடும்ப மரம் (Famil tree) வரைக.

## நிற்க அதற்குத் தக

| சூழல் | தவிர்க்க வேண்டிய ஆடம்பரச் செலவுகள் என நீவிர் கருதுவனவற்றைப் பட்டியலிடுக. | பொறுப்புள்ள மகனாக/மகளாக உங்கள் பெற்றோர்க்கு என்னென்ன உதவிகள் செய்வீர்கள்? |
|---|---|---|
| உங்கள் பெற்றோர், வேலைக்குச் செல்பவர்கள். அவர்களின் மாத ஊதியம் குடும்பச் செலவிற்கும் படிப்புச் செலவிற்கும் தாத்தா பாட்டியைக் கவனித்துக் கொள்வதற்கும் மட்டும் போதுமானதாக உள்ளது. இச்சூழலில் பொறுப்புள்ள ஒரு மகனாக/மகளாகப் பெற்றோர்க்கு நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள்? | 1. திறன் பேசியில் இணைய சேவையை அதிகமாக பயன் படுத்துவது.<br>2. தொலை தூரம் செல்வதற்கு மகிழுந்தி பயன்படுத்துவது.<br>3. நண்பர்களுடன் உணவகத்தில் உணவு அருந்தும் செலவுகள்<br>4. அதிகமாக திரைப்படம் பார்க்கும் செலவுகள் | 1. நானும் வேலைக்குச் செல்ல முற்படுவேன்.<br>2. நானே தாத்தா பாட்டியை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்வேன்.<br>3. வீட்டில் சமையல், துணி துவைத்தல், காய்கறி வாங்கி வருதல், வீட்டின் உட்புறம் சுத்தம் செய்தல் போன்ற வேலைகளில் பங்கெடுப்பேன். |

## படிப்போம் பயன்படுத்துவோம் (உணவகம்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *Lobby* | – | ஓய்வறை | *Tips* | – | சிற்றீகை |
| *Checkout* | – | வெளியேறுதல் | *Mini meals* | – | சிற்றுணவு |

✱✱★★★✱✱





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

# இயல் 3 வாழ்வியல்

# திருக்குறள்

- திருவள்ளுவர்

## கற்பவை கற்றபின்

பக்கம்: 77

1. **படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.**



அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

இ) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும். **[விடை: இ]**

2. **கடலின் பெரியது**

அ) உற்ற காலத்தில் செய்த உதவி
ஆ) பயன் ஆராயாமல் ஒருவன் செய்த உதவி
இ) திணையளவு செய்த உதவி **[விடை: ஆ]**

www.kalvikadal.in

3. **பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

**நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக்**
**கல்லார்க் கொன்றாகிய காரணம் - தொல்லை**
**வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்**
**நினைப்ப வருவதொன் றில்**

அ) இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.

ஆ) நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு

இ) ஊழில் பெருவலி யாஉள மற்று ஒன்று
சூழினும் தான்முந்து உறும். **[விடை: ஆ]**

4. **கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.**

உயர் அலுவலரின் வருகை
அலுவலகமே அல்லாடும்
அவருடைய சினம் அனைவரும் அறிந்ததே
கோப்புகளை விரைந்து முடிக்க
ஒழுங்கு செய்ய
நேரத்தில் இருக்க வேண்டும்
விரைகிறது மனம்



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







பரபரப்பும் மனவழுத்தமுமாய்
வண்டியை எடுக்கிறேன்
காலைக் கட்டிக் கொள்கிறது குழந்தை
'போ அந்தப் பக்கம்'
உதறிச் செல்கிறேன் குழந்தையை.

விடை:

**செல்இடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்இடத்துக்**
**காக்கின்என் காவாக்கால் என்?**

5. **இலக்கணக் குறிப்புத் தருக.**

| | | |
|---|---|---|
| **அன்பும் அறமும்** | - | எண்ணும்மை |
| **நன்கலம்** | - | பண்புத் தொகை |
| **மறத்தல்** | - | தொழிற் பெயர் |
| **உலகு** | - | இடவாகு பெயர் |

6. **பொருள் கூறுக.**

| | | |
|---|---|---|
| **வெகுளி** | - | கோபம் |
| **புணை** | - | தெப்பம் |
| **ஏமம்** | - | பாதுகாப்பு |
| **திரு** | - | செல்வம் |

7. **வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?**

அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன் தூக்கார் செய்த உதவி
இ) தினைத்துணை நன்றி ஈ) செய்ந்நன்றி **[விடை: அ]**

www.kalvikadal.in

8. **பகையும் உளவோ பிற? - பொருள் கூறுக.**

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்லுகின்ற சினத்தை விட வேறுபகை இல்லை.

9. **செல்லிடத்து - புணர்ச்சி விதி கூறுக.**

செல்லிடத்து = செல் + இடத்து

- 'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' என்ற விதிப்படி, செல் + ல் + இடத்து என்றாகியது.
- உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவதே இயல்பு என்ற விதிப்படி, ல் + இ = லி = செல்லிடத்து என்று புணர்ந்தது.

10. **பொருத்திக் காட்டுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் | - | 1. | சேர்ந்தாரைக் கொல்லி |
| ஆ) | பயன்தூக்கார் செய்த உதவி | - | 2. | ஞாலத்தின் மாணப் பெரிது |
| இ) | சினம் | - | 3. | தெய்வத்துள் வைக்கப்படும் |
| ஈ) | காலத்தினாற் செய்த நன்றி | - | 4. | நன்மை கடலின் பெரிது |

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 1, 2, 3, 4 ஈ) 2, 3, 4, 1 **[விடை: ஆ]**

## குறுவினா

1. **முயல்வாருள் எல்லாம் தலை என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?**

அறத்தின் வழியாக இல்லற வாழ்க்கை வாழ்பவர் முயல்வருள் எல்லாம் தலையானவர்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



2. **ஞாலத்தின் பெரியது எது?**

ஒருவர் நமக்கு உரிய காலத்தில் செய்த உதவியானது அளவில் சிறியதாக இருந்தாலும், அஃது உலகைவிடப் பெரியதாகும்.

3. **மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?**

- ஒருவர் நமக்குச் செய்த நன்மையை ஒருநாளும் மறக்கக்கூடாது.
- ஒருவர் நமக்குச் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விட வேண்டும்.
- மறக்கக்கூடாதது - நன்மை ; மறக்கக்கூடியது - தீமை.

4. **செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?**

ஒருவரிடம் இருக்கும் செல்வம் குறையாமலிருக்க வேண்டுமென்றால், அவர் பிறருடைய கைப்பொருளை விரும்பாமல் இருத்தல் வேண்டும்.

5. **சினத்தை ஏன் காக்க வேண்டும் ?**

சினமானது தன்னைக் கொண்டவனையே அழித்து விடும். எனவே தன்னைக் காத்துக் கொள்ள விரும்புகிறவன் சினத்தைக் காக்க வேண்டும்.

## சிறுவினா

1. **‘அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது’ - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

இக்குறட்பாவில் பயின்று வரும் அணி நிரல்நிறை அணியாகும்.

**அணி இலக்கணம் :**

ஒரு செய்யுளின் முதலில் சொல்லையும் பொருளையும் வரிசையாக (நிரலாக) நிறுத்தி, அவ்வரிசைப்படியே பொருள்கொள்ளும் முறையாகும். அதாவது சில சொற்களை முதலில் ஒரு வரிசையில் வைத்து, அச்சொற்களோடு தொடர்புடைய சொற்களை அடுத்த வரிசையில் முறைமாறாமல் சொல்வது நிரல் நிறை அணியாகும்.

**பொருள் :**

இல்வாழ்க்கையில் நாம் அன்பும் அறனும் கொண்டு ஒழுகினால், அதுவே நமக்கு வாழ்க்கையின் பண்பினையும் பயனையும் முழுமையாகத் தரும்.

**அணிப்பொருத்தம் :**

இக்குறட்பாவில் அன்பு, அறன் என்ற சொற்களை முதலில் ஒரு வரிசையில் நிறுத்திய திருவள்ளுவர் அவற்றோடு தொடர்புடைய பண்பு, பயன் என்பவற்றை முறையே அடுத்த வரிசையில் இணைத்து பொருள் கொள்ளுமாறு அமைத்துள்ளார். எனவே, இத்திருக்குறள் ‘நிரல் நிறை அணிக்குப்’ பொருத்தமாயிற்று.

அன்பு - பண்பு ; அறன் - பயன் என்று நிரல்பட உள்ளது.

2. **இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழிநின்று விளக்குக.**

- ஒருவன் எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டியும், அறச்செயல்கள் செய்தும் வாழும் இல்லற வாழ்வைப் பெறுவான் என்றால், அவன் இல்வாழ்க்கை அன்பினால் உருவான நல்ல பண்பையும், அறச் செயலினால் உருவாகின்ற நல்ல புகழாகிய பயனையும் அடைவான்.
- அறத்தின் இயல்போடு இல்லற வாழ்க்கையை வாழ்பவன் முயற்சி செய்து புகழடைய விரும்பும் எல்லாரை விடவும் தலைசிறந்தவன் ஆவான்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

- உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ வேண்டும். அவ்வாறு வாழ்ந்தால் வானுலகத்தில் உள்ள தெய்வத்திற்கு இணையாக மதிக்கப்படுவார்.

**3. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? குறள் வழி விளக்குக.**

- இந்நில உலகம், வானகம், கடல், பனை இவைகளை விடவும் நன்றி உயர்ந்தது.
- நாம் பிறருக்கு எந்த ஒரு உதவியும் செய்யாமலிருக்கும் நிலையில் பிறர் நமக்குச் செய்த உதவியை நினைத்துப் பார்த்தால் விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் கொடுத்தாலும் ஈடாகாது.
- ஒருவர் நமக்கு உரிய காலத்தில் செய்த உதவியானது அளவில் சிறியதாக இருந்தாலும், அது உலகை விடப் பெரியதாகும்.
- மறுபலனை எதிர்பார்க்காமல் ஒருவர் நமக்குச் செய்த உதவியின் அளவை ஆராய்ந்து பார்த்தால், அதன் நன்மை கடலை விடப் பெரியதாகும்.
- ஒருவர் தினையளவு உதவியைச் செய்தாலும் அதன் பயனை அனுபவித்து அறிந்தவர்கள் அவ்வுதவியை பனையளவாகக் கொள்வர்.

**4. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.**

- நமக்கு ஏற்படும் தீமையான விளைவுகள் அனைத்தும் நாம் கொள்ளும் சினத்தால் வரும். அதனால், நாம் யாரிடமும் சினம் கொள்ளாமல் அதை மறந்து விட வேண்டும்.
- சினம் என்னும் பகை, முகத்தில் அழகு கூட்டுகின்ற சிரிப்பையும், உள்ளத்தில் அருளைக் கூட்டுகின்ற மகிழ்ச்சியையும் கொள்ளும்.
- சினமானது தன்னைக் கொண்டவனையே அழித்து விடும். எனவே தன்னைக் காத்துக் கொள்ள விரும்புகிறவன் சினத்தைக் காக்க வேண்டும்.
- சினமானது, தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பாகும். அஃது ஒருவருடைய சுற்றம் என்கின்ற பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழித்து விடும்.

www.kalvikadal.in

**5. கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக.**

**சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்**
**ஏமப் புணையைச் சுடும்.**

இக்குறட்பாவில் ஏகதேச உருவக அணி பயின்று வருகின்றது.

**அணி இலக்கணம் :**

கவிஞர் செய்யுளில் இரு பொருள்களைக் கூறி அதில் ஒன்றை மட்டும் உருவகப்படுத்தி, அதற்கேற்ப இணையானதொரு பொருளை உருவகம் செய்யாது விட்டுவிடுவது ஏகதேச உருவக அணியாகும்.

**விளக்கம் :**

சினம் தன்னைக் கொண்டவனை மட்டுமல்லாமல் அவனைச் சேர்ந்த சுற்றத்தாரையும் சேர்த்து அழிந்துவிடும்.தன்னைச் சேர்ந்தவரையும் அழித்துவிடும் கொல்லியாகிய சினம், நம்மை மட்டுமில்லாமல் நமக்குப் பாதுகாப்பாக இருக்கக்கூடிய இனமென்னும் தெப்பத்தை அழித்துவிடும்.

**அணிப்பொருத்தம் :**

இக்குறட்பாவில் இனம் என்பதைத் தெப்பமாக உருவகப்படுத்தியுள்ள வள்ளுவர் சினத்தை உருவகப்படுத்தாமல் விட்டுள்ளார். எனவே, இக்குறட்பாவில் ஏகதேச உருவக அணி பயின்று வந்துள்ளது.


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







## நெடுவினா

1. **செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைக்கொண்டு நிறுவுக.**

**விண் மண் :**

**"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்ற லரிது"**

நாம் பிறருக்கு எந்த ஒரு உதவியும் செய்யாமலிருக்கும் நிலையில் பிறர் நமக்குச் செய்த உதவியை நினைத்துப் பார்த்தால் விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் கொடுத்தாலும் ஈடாகாது.

**உலகம் :**

**"காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது"**

ஒருவர் நமக்கு உரிய காலத்தில் செய்த உதவியானது அளவில் சிறியதாக இருந்தாலும் அது உலகத்தின் அளவை விடப் பெரியதாகும்.

**கடல் :**

**"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலிற் பெரிது"**

எந்தப் பயனையும் எதிர்பார்க்காமல் ஒருவர் நமக்குச் செய்த உதவியின் அளவை ஆராய்ந்து பார்த்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும்.

**பனை :**

www.kalvikadal.in

**"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பயன்தெரி வார்"**

ஒருவர் தினையளவு உதவியைச் செய்தாலும் அதன் பயனை அனுபவித்து அறிந்தவர்கள் அவ்வுதவியைப் பனையளவாகக் கொள்வர்.

**வாழ வழி :**

**"நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று"**

ஒருவர் நமக்குச் செய்த நன்மையை ஒருநாளும் மறக்கக்கூடாது. ஒருவர் நமக்குச் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிட வேண்டும். தப்பிக்க முடியாது.

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**

எந்த அறத்தை அழித்தாலும் தப்பிப் பிழைக்கலாம். ஆனால், ஒருவர் செய்த உதவியை மறந்தவர்க்குத் தப்பிப் பிழைக்கும் வழியே கிடையாது.

எனவே, செய்ந்நன்றியறிதலே சிறந்த அறம் என்பதனை வள்ளும் உணர்த்துகின்றது.

2. **சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும். இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.**

சினமானது அருள் உள்ளத்தை அழித்து மெய்யுணர்வை அடையாது செய்துவிடும். சினத்தைக் காத்தால் வாழ்வு மேன்மையடையும் சினத்தைக் காப்பான்.

**சினம் செல்லுமிடம் :**

**"செல்இடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்இடத்துக்**
**காக்கின்என் காவாக்கால் என்?"**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

தன் சினம் செல்லுபடியாகும் தன்னை விடவும் மெலியாரிடத்தில் சினம் கொள்ளாமல் சினத்தைக் காத்துக் கொள்பவனே உண்மையில் சினத்தைக் காப்பவனாவான்.

**மறத்தல் நன்று :**

**''மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய**
**பிறத்தல் அதனான் வரும்''**

ஒருவனுக்குத் தீமையான விளைவுகள் சினத்தாலேயே ஏற்படும் என்பதால் யாரிடத்திலும் சினம் கொள்ளாமல் அதனை மறந்துவிடுவது நன்மையாகும்.

**சினம் எனும் பகை :**

**''நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்**
**பகையும் உளவோப் பிற?''**

சினம் எனும் பகை, முகத்தில் அழகு கூட்டுகின்ற சிரிப்பையும், உள்ளத்தின் அருளுக்கு அழகு கூட்டுகின்ற மகிழ்ச்சியையும் கொல்லும்.

**தன்னைக்காக்க சினம் தவிர் :**

**''தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்**
**தன்னையே கொல்லுஞ் சினம்''**

சினமானது தன்னைக் கொண்டவனையே அழித்துவிடும். எனவே, தன்னைக் காத்துக் கொள்ள விரும்புகிறவன் சினத்தைக் காக்க வேண்டும்.

**சுற்றம் பேண சினத்தைத் தவிர் :**

**''சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்**
**ஏமப் புணையச் சுடும்''**

www.kalvikadal.in

சினமானது, தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பாகும். அஃது ஒருவனுடைய சுற்றம் என்கின்ற பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழித்து விடும். எனவே, சினத்தைக் காத்தோமென்றால், எளியவரோடு பகை மேற்கொள்ளமாட்டோம்; யாரிடத்தும் சினம் கொள்ள மாட்டோம்; முகமலர்ச்சியும், அகமகிழ்ச்சியும் அதிகமாகும்; தன்னையே காத்துக் கொள்வோம்; சுற்றத்தையும் காப்பாற்றுவோம். இதனால் வாழ்வு மேன்மைப்படுத்தப்படும் என்று முப்பால் கூறுகின்றது.

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| **பண்பும் பயனும்** | - | எண்ணும்மை |
| **வாழ்பவன்** | - | வினையாலணையும் பெயர் |
| **அரிது, பெரிது** | - | ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று |
| **தூக்கின்** | - | எதிர்கால வினையெச்சம் |
| **தூக்காச்** | - | முற்றெச்சம் |
| **கொள்வர், தெரிவர்** | - | வினையாலணையும் பெயர் |
| **கொன்ற** | - | பெயரெச்சம் |
| **பிறத்தல்** | - | தொழிற்பெயர் |

## புணர்ச்சி விதி

1. **தினைத்துணை = தினை + துணை**

'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதபமிகும்' என்ற விதிப்படி, தினைத்துணை என்று புணர்ந்தது.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

2. **நன்றல்லது + நன்று + அல்லது**

- ‘உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்’ என்ற விதிப்படி. நன்ற் + அல்லது என்றானது
- ‘உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ என்ற விதிப்படி, (ற் + அ = ற) ‘நன்றல்லது’ என்று புணர்ந்தது.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **திருக்குறள் என்பது**
அ) ஆகுபெயர் ஆ) கருவியாகுபெயர்
இ) அடையடுத்த ஆகுபெயர் ஈ) அடையடுத்த கருவியாகுபெயர் **விடை: ஈ**

2. **திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தவர்**
அ) வீரமாமுனிவர் ஆ) ஜி.யு.போப்
இ) கால்டுவெல் ஈ) சார்லஸ் வில்கினிஸ் **விடை: அ**

3. **ஏட்டுச்சுவடியிலிருந்து திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு**
அ) 1912 ஆ) 1712 இ) 1612 ஈ) 1812 **விடை: ஈ**

4. **அறத்துப்பாலில் உள்ள குறட்பாக்களின் எண்ணிக்கை**
அ) 380 ஆ) 700 இ) 250 ஈ) 133 **விடை: அ**

www.kalvikadal.in

5. **இன்பத்துப்பாலில் உள்ள இயல்கள்**
அ) 4 ஆ) 3 இ) 2 ஈ) 9 **விடை: இ**

6. **திருக்குறளில் உள்ள மொத்த இயல்கள்**
அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 9 **விடை: ஈ**

7. **அரசு இயல், அமைச்சு இயல், ஒழிபு இயல் அமைந்துள்ள பிரிவு**
அ) இன்பத்துப்பால் ஆ) பொருள்பால் இ) அறத்துப்பால் ஈ) காமத்துப்பால் **விடை: ஆ**

8. **இல்லறவியலில் அமைந்துள்ள குறட்பாக்களின் எண்ணிக்கை**
அ) 130 ஆ) 200 இ) 133 ஈ) 250 **விடை: ஆ**

9. **கற்பியல், களவியல் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை**
அ) 18, 07 ஆ) 07, 18 இ) 09, 16 ஈ) 16, 09 **விடை: ஆ**

10. **ஊழியலில் அமைந்துள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை**
அ) 08 ஆ) 13 இ) 01 ஈ) 04 **விடை: இ**

11. **‘அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை’ – ‘அன்பும் அறனும்’ இலக்கணக் குறிப்பு**
அ) உம்மைத்தொகை ஆ) எண்ணும்மை
இ) உவமைத்தொகை ஈ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை **விடை: ஆ**

12. **‘செய்த’ என்ற சொல்லின் சரியான பகுபத உறுப்பிலக்கண பிரிப்பு முறை**
அ) செய்து + அ ஆ) செய்+த்(ந்)+த்+அ இ) செய் + து ஈ) செய் + த் + அ **விடை: ஈ**

13. **‘நன்றல்லது’ இச்சொல்லிற்கு உரிய சரியான புணர்ச்சி விதிகள்**
அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
ஈ) ஈறுபோதல், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே **விடை: அ**

14. **‘மறத்தல் வெகுளியை யார்மாட்டும்’ – ‘மறத்தல்’ என்பதன் இலக்கணக் குறிப்பு**
அ) உவமையாகு பெயர் ஆ) வினைமுற்று
இ) தொழிற்பெயர் ஈ) பண்புப்பெயர் **விடை: இ**

15. **‘கொன்ற’ என்ற சொல்லின் சரியான பகுபத உறுப்பிலக்கண பிரிப்பு முறை**
அ) கொன் + ற் + அ ஆ) கொன்று + அ
இ) கொன் + ற் + உ ஈ) கொல்(ன்) + ற் + அ **விடை: ஈ**

16. **‘இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதபமிகும்’ என்ற விதிப்படி அமைந்த சொல்**
அ) உலகத்தார் ஆ) பனைத்துணை இ) கொல்லாது ஈ) காப்பால் **விடை: ஆ**

17. **‘நன்றி மறப்பது நன்றன்று ; நன்றல்லது’ – ‘நன்றி மறப்பது’ – இலக்கணக் குறிப்பு**
அ) வினையெச்சம்
ஆ) இரண்டாம் வேற்றுமைத் தொகை
இ) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை
ஈ) பெயரெச்சம் **விடை: ஆ**

18. **கூற்று 1 : ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லது.**
**கூற்று 2 : ஒருவர் செய்த உதவியை மறந்தவர்க்கு உய்வு இல்லை.**
அ) கூற்று இரண்டும் சரி www.kalvikadal.in ஆ) கூற்று 1 சரி 2 தவறு
இ) கூற்று இரண்டும் தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி **விடை: ஈ**

19. **கூற்று : சினத்தை விட நமக்கு வேறு பகை இல்லை.**
**காரணம் : அது நம் முகமலர்ச்சியையும் அகமலர்ச்சியையும் கொன்றுவிடும்.**
அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி காரணம் சரி
இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி **விடை: ஆ**

20. **கூற்று 1 : மெலியவரிடத்தில் சினம் கொள்ளாமல் காப்பவரே சினம் காப்பவர்.**
**கூற்று 2 : புலால் உண்ணவில்லை என்றால் வருவாயின் பொருட்டு ஊன் விற்பவர் யாரும் இருக்கமாட்டார்.**
அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று 1 சரி 2 தவறு
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று இரண்டும் சரி **விடை: ஈ**

21. **கூற்று 1 : ஒருவர் செய்த தீமையை அப்பொழுது மறந்துவிடுவது நல்லதன்று.**
**கூற்று 2 : உரிய காலத்தில் செய்யும் சிறிய உதவி உலகத்தைவிடப் பெரியது.**
அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 தவறு 2 சரி
இ) கூற்று இரண்டும் சரி ஈ) கூற்று இரண்டும் தவறு **விடை: ஆ**

22. **கூற்று : ஒருவன் தன்னைக் காக்க சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டாம்.**
**காரணம் : சினம் காக்கவிட்டால் தன்னையே அழித்துவிடும்.**
அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி.
இ) கூற்று சரி, காரணம் சரி. ஈ) கூற்று வறு, காரணம் தவறு. **விடை: ஆ**


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

**23. சரியானதைத் தேர்க.**

அ) ஒருவர் செய்த தீமையை மறக்கக் கூடாது.
ஆ) உரிய காலத்தில் செய்த உதவி பனையளவு பெரியது.
இ) நன்மையான விளைவுகள் சினத்தால் ஏற்படாது.
ஈ) இயல்பான அறிவு எப்போதும் வெளிப்படாது. **விடை: இ**

**24. சரியாகப் பொருந்தியுள்ளதைத் தேர்க.**

அ) இல்வாழ்க்கை - 26-ஆம் அதிகாரம்
ஆ) புலால் மறுத்தல் - 38-ஆம் அதிகாரம்
இ) ஊழ் - 05-ஆம் அதிகாரம்
ஈ) வெஃகாமை - 18-ஆம் அதிகாரம் **விடை: ஈ**

**25. சரியானதைத் தேர்க.**

அ) பாயிரவியல் - 20 அதிகாரம்
ஆ) இல்லறவியல் - 01 அதிகாரம்
இ) துறவறவியல் - 13 அதிகாரம்
ஈ) ஊழியல் - 04 அதிகாரம் **விடை: இ**

**26. பொருந்தாததைத் தேர்க.**

அ) ஒருவர் செய்த உதவியை மறந்தவர்க்கு உய்வே இல்லை.
ஆ) ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறந்துவிடுவது நல்லது அன்று.
இ) செல்வம் குறையாமலிருக்க பிறர் கைப்பொருளை விரும்ப வேண்டும்.
ஈ) அறத்தின் இயல்புடன் வாழ்பவர் முயற்சி உடையவரை விட மேம்பட்டவர். **விடை: இ**

www.kalvikadal.in

**27. பொருத்துக.**

அ) அரசவியல் - 1) 13 அதிகாரம்
ஆ) இல்லறவியல் - 2) 25 அதிகாரம்
இ) ஒழிபியல் - 3) 20 அதிகாரம்
ஈ) கற்பியல் - 4) 18 அதிகாரம்

அ) 2, 4, 3, 1 ஆ) 2, 1, 3, 4 இ) 2, 3, 1, 4 ஈ) 2, 4, 3, 1 **விடை: இ**

**28. பொருத்துக.**

அ) 11-ஆம் அதிகாரம் - 1. வெகுளாமை
ஆ) 31-ஆம் அதிகாரம் - 2. வெஃகாமை
இ) 18-ஆம் அதிகாரம் - 3. புலால் மறுத்தல்
ஈ) 26-ஆம் அதிகாரம் - 4. செய்ந்நன்றி அறிதல்

அ) 4, 1, 3, 2 ஆ) 4, 2, 1, 3 இ) 2, 4, 3, 1 ஈ) 4, 1, 2, 3 **விடை: ஈ)**

**29. பொருத்திக் காட்டுக.**

அ) அறத்துப்பால் - 1) 70
ஆ) பொருட்பால் - 2) 38
இ) இன்பத்துப்பால் - 3) 25

அ) 2, 1, 3 ஆ) 3, 2, 1 இ) 1, 2, 3 ஈ) 2, 3, 1 **[விடை: அ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



30. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | அறத்துப்பால் | - | 1) 3 இயல்கள் |
| ஆ) | பொருட்பால் | - | 2) 4 இயல்கள் |
| இ) | இன்பத்துப்பால் | - | 3) 2 இயல்கள் |

அ) 2, 1, 3 ஆ) 3, 1, 2 இ) 2, 3, 1 ஈ) 1, 3, 2 **[விடை: அ]**

31. **அறத்துப்பாலில் இடம்பெறாத இயலைக் கண்டறிக.**

அ) பாயிரவியல் ஆ) இல்லறவியல் இ) துறவறவியல் ஈ) ஒழிபியல் **[விடை: ஈ]**

32. **பொருட்பாலில் இடம்பெறாத இயலைக் கண்டறிக.**

அ) அரசு இயல் ஆ) அமைச்சு இயல் இ) ஒழிபியல் ஈ) ஊழியல் **[விடை: ஈ]**

33. **இன்பத்துப்பாலில் இடம்பெறும் இயல்களைக் கண்டறிக**

அ) களவியல், கற்பியல் ஆ) அரசியல், அமைச்சியல்
இ) ஊழியல், ஒழிபியல் ஈ) பாயிரவியல், இல்லறவியல் **[விடை: அ]**

34. **பொருத்திக் காட்டுக (இயல்களும் அதிகாரங்களின் எண்ணிக்கையும்).**

| | | | |
|---|---|---|---|
| அ) | பாயிரவியல் | - | 1) 1 அதிகாரம் |
| ஆ) | இல்லறவியல் | - | 2) 13 அதிகாரங்கள் |
| இ) | துறவறவியல் | - | 3) 20 அதிகாரங்கள் |
| ஈ) | ஊழியல் | - | 4) 4 அதிகாரங்கள் |

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 4, 2, 1, 3 ஈ) 2, 1, 3, 4 **[விடை: அ]**

35. **பொருத்திக் காட்டுக.**

www.kalvikadal.in

| | | | |
|---|---|---|---|
| அ) | அரசியல் | - | 1) 18 அதிகாரங்கள் |
| ஆ) | அமைச்சியல் | - | 2) 13 அதிகாரங்கள் |
| இ) | ஒழிபியல் | - | 3) 32 அதிகாரங்கள் |
| ஈ) | கற்பியல் | - | 4) 25 அதிகாரங்கள் |

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 2, 4, 1 இ) 4, 1, 3, 2 ஈ) 2, 3, 1, 4 **[விடை: அ]**

36. **திருக்குறளின் களவியலில் உள்ள அதிகாரங்கள்**

அ) 07 ஆ) 18 இ) 13 ஈ) 04 **[விடை: அ]**

37. **திருக்குறள் .................. ஆன நூல்.**

அ) குறள் வெண்பாக்களால் ஆ) சிந்தியல் வெண்பாக்களால்
இ) ஆசிரியப்பாவால் ஈ) கலிப்பாவால் **[விடை: அ]**

38. **திருக்குறள் .................. நூல்களுள் ஒன்று.**

அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு
இ) பதினெண்கீழ்க்கணக்கு ஈ) பதினெண்மேற்கணக்கு **[விடை: இ]**

39. **திருக்குறள் என்பது .................. ஆகும்.**

அ) இடவாகுபெயர் ஆ) காலவாகுபெயர்
இ) அடையடுத்த ஆகுபெயர் ஈ) எண்ணலளவையாகுபெயர் **[விடை: இ]**

40. **திருக்குறள் என்பது**

அ) இரண்டடி வெண்பா ஆ) நான்கடி வெண்பா
இ) மூவடி வெண்பா ஈ) ஓரடி வெண்பா **[விடை: அ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



41. உலகப் பொதுமறை, அறவிலக்கியம், தமிழர் திருமறை உள்ளிட்ட சிறப்புப் பெயர்களுக்குரிய நூல்
அ) திருக்குறள் ஆ) நாலடியார்
இ) நான்மணிக்கடிகை ஈ) இன்னாநாற்பது **[விடை: அ]**

42. மனித நாகரிகம் பிற நாடுகளில் தோன்றும் முன்னரே மனித வாழ்வின் மேன்மைகளையும் வாழ்வியல் நெறிகளையும் வகுத்துக்காட்டிய நூல்
அ) இலியட்ஸ் ஆ) மெயின்காம்ப் இ) திருக்குறள் ஈ) சாகுந்தலம் **[விடை: இ]**

43. நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி - இவற்றால் 'நாலும்' என்பது .................. 'இரண்டு' என்பது .................. குறிக்கும்.
அ) நாலடியார், திருக்குறள் ஆ) நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது
இ) நானிலம், இருதிணை ஈ) நாற்படை, இருசுடர் **[விடை: அ]**

44. திருக்குறளுக்கு உரை எழுதியவர்களாகப் பழம்பாடலால் குறிப்பிடப்படுபவர்கள்
அ) இருவர் ஆ) நால்வர் இ) அறுவர் ஈ) பதின்மர் **[விடை: ஈ]**

45. திருக்குறளுக்கு உரை எழுதாதவரைக் கண்டறிக.
அ) தருமர் ஆ) மணக்குடவர்
இ) பரிமேலழகர் ஈ) அடியார்க்கு நல்லார் **[விடை: ஈ]**

46. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - எனப் பாடியவர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) வெ. ராமலிங்கனார் ஈ) இராமலிங்க அடிகள் **[விடை: அ]**

www.kalvikadal.in

47. வள்ளுவனைப் பெற்றதால்
பெற்றதே புகழ் வையகமே - எனப் பாடியவர்
அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
இ) இராமலிங்க அடிகள் ஈ) வெ. இராமலிகனார் **[விடை: அ]**

48. தமிழ்நாடு அரசு 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலையினை நிறுவியுள்ள இடம்
அ) சென்னை ஆ) நாகர்கோவில் இ) கன்னியாகுமரி ஈ) சேலம் **[விடை: இ]**

49. திருவள்ளுவர் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம்
அ) வேலூர் ஆ) சென்னை இ) மேலூர் ஈ) திருத்தணி **[விடை: அ]**

50. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது - என்னும் குறட்பாவில் இடம்பெறும் அணி
அ) நிரல்நிறை அணி ஆ) தற்குறிப்பேற்ற அணி
இ) பிறிதுமொழிதல் அணி ஈ) வேற்றுமை அணி **[விடை: அ]**

51. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லிஇனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும் - என்னும் குறட்பாவில் இடம்பெறும் அணி
அ) நிரல்நிறை அணி ஆ) ஏகதேச உருவக அணி
இ) பிறிதுமொழிதல் அணி ஈ) வேற்றுமை அணி **[விடை: ஆ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## குறுவினா

1. **வானுலகத் தெய்வத்திற்கு இணையாக மதிக்கப்படுபவர் யார் ?**

உலகத்தில் வாழவேண்டிய அறநெறியின்படி வாழ்கின்றவர்கள் வானுலகத் தெய்வத்திற்கு இணையானவர்கள்.

2. **வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?**

நாம் பிறருக்கு எந்த ஒரு உதவியும் செய்யாமலிருக்கும் நிலையில் பிறர் நமக்குச் செய்த உதவியை நினைத்துப் பார்த்தால் விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் கொடுத்தாலும் ஈடாகாது.

3. **கடலின் பெரிது எது என்று வள்ளுவர் கூறுகிறார்?**

எந்தப் பயனையும் எதிர்பார்க்காமல் ஒருவர் நமக்குச் செய்த உதவியின் அளவை ஆராய்ந்து பார்த்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும்.

4. **யார் தப்பிப்பிழைக்கும் வாய்ப்பில்லாதவர் என்று குறள் கூறுகின்றார்?**

எந்த அறத்தை அழித்தாலும் தப்பிப் பிழைக்கலாம். ஆனால், ஒருவர் செய்த உதவியை மறந்தவருக்குத் தப்பிப் பிழைக்க வழியே கிடையாது.

5. **பிறர் பொருளைக் கவரும் பழியான செயலைச் செய்யாதவர் யார்?**

நீதி இல்லாதவற்றைக் கண்டு வெட்கம் அடைந்து ஒதுங்கும் பண்பாளர்கள் பெரும் பயன் கிடைப்பினும் பிறர் பொருள்மேல் ஆசைப்படும் பழியான செயலைச் செய்யமாட்டார்கள்.

6. **உண்மையிலே சினத்தைக் காப்பவர் யாரென்று குறள் கூறுகிறது?**

www.kalvikadal.in

தன் சினம் செல்லுபடியாகும், தன்னை விடவும் மெலியாரிடத்தில் சினம் கொள்ளாமல் சினத்தைக் காத்துக் கொள்பவனே உண்மையில் சினத்தைக் காப்பவனாகும்.

7. **திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்களில் ஏதேனும் நான்கினை எழுதுக.**

உலகப்பொதுமறை, தமிழர் திருமறை, வாயுறைவாழ்த்து, முப்பால்.

8. **திருக்குறளின் பெருமையை விளக்கும் பழமொழிகள் யாவை?**

- ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.
- பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்.

9. **பழம்பாடல்பாடித் திருக்குறளுக்கு உரை செய்தவர்களை கூறுக.**

தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையார், மல்லர், பரிப்பெருமாள் காளிங்கர்.

10. **பாரதியார் வள்ளுவரை எவ்வாறு புகழ்கின்றார்?**

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" - எனப் புகழ்கின்றார்.

11. **வள்ளுவரைப் பாரதிதாசன் புகழ்ந்து கூறும் கூற்று யாது ?**

"வள்ளுவனைப் பெற்றதால்
பெற்றதே புகழ் வையகமே" எனப் புகழ்ந்து கூறுகின்றார்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







**12. திருவள்ளுவரைப் புகழும் விதமாகத் தமிழக அரசு செய்துள்ளவை யாவை ?**

- கன்னியாகுமரியில் கி.பி.2000-இல் 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலையினை நிறுவியுள்ளது.
- வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை அமைத்துள்ளது.

**13. 'திருக்குறள்' - பெயர்க்காரணம் தருக.**

- திரு + குறள் = திருக்குறள்.
- சிறந்த குறள் வெண்பாக்களால் ஆகிய நூல். ஆதலால் திருக்குறள் எனப் பெயர் பெற்றது.
- குறள் என்பது இரண்டடி வெண்பா, 'திரு' என்பது சிறப்பு அடைமொழி.
- திருக்குறள் என்பது அடையெடுத்த கருவி ஆகுபெயர் ஆகும்.
- இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகும்.

**14. பொருட்பாலில் உள்ள இயல்கள் எத்தனை? அவையாவை ?**

பொருட்பாலில் உள்ள இயல்கள் மூன்று ஆகும். அவை, அரசியல், அமைச்சியல், ஒழிபியல் என்பதாகும்.

**15. சினம் என்னும் பகை நம்மிடமிருந்து எவற்றையெல்லாம் கொல்லும் என்று திருவள்ளுவர் கூறுகிறார்?**

சினம் என்னும் பகை, முகத்தில் அழகு கூட்டுகின்ற மகிழ்ச்சியையும் கொல்லும்.

**16. உலக இயல்பின் இருவேறு ஊழ் நிலையாகக் குறள் கூறுவது யாது?**

- உலக இயல்பு இருவேறு வகைப்படும்.
- செல்வம் உடையார் அறிவுடையராக இருப்பதில்லை.
- தெளிந்த அறிவுடையோர் செல்வமுடையவராக இருப்பதில்லை.

www.kalvikadal.in

## சிறுவினா

**1. புலால் மறுத்தல் சாத்தியமாகும் என்பதைக் குறள் வழி நிறுவுக.**

- புலால் உணவை உண்ணுகிறவர்கள் இன்று உலகில் வாழ்கின்றனர்.
- புலால் உணவைத் தின்னும் பொருட்டாக உயிர்களை உலகத்தவர்கள் கொல்லாதிருத்தல் வேண்டும்.
- புலால் உண்பவர்கள் தங்கள் உணவிற்காகப் பிற உயிர்களைக் கொல்வதால் தான், அதனை விலைக்கு விற்பனை செய்யும் பொருட்டு ஊன் விற்பவர்கள் பிற உயிர்களைக் கொல்கின்றனர்.
- புலால் மறுத்தலை உலகில் வாழும் நபர்கள் கடைபிடித்தால் எந்த ஒரு உயிரினமும் உணவிற்காகவும், வருவாய்க்காவும் கொல்லப்படாமல் உயிர்வாழும்.
- இதனையே வள்ளுவர் பிற உயிர்களை உணவிற்காகக் கொல்லாதாதிருந்தாலே 'புலால்' உணவை நிறுத்திவிடலாம் என்கிறார்.

✸✸★★★✸✸





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



# இயல் 3 மாதிரி வினாத்தாள் - 3

வகுப்பு : 12
நேரம் : 2.30 மணி
மதிப்பெண் : 90

**I. பலவுள் தெரிக.** $6 \times 1 = 6$

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1. **சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்க காலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை**
   அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
   இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

2. **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**
   அ) உரிமைத்தாகம் - 1. பாரசீகக் கவிஞர்
   ஆ) அஞ்ஞாடி - 2. பூமணி
   இ) ஜலாலுத்தீன் ரூமி - 3. பகதவச்சல பாரதி
   ஈ) தமிழர் குடும்ப முறை - 4. சாகித்திய அகாதெமி
   அ) 2, 4, 3, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

3. **இவற்றை வாயிலுக்கே என்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது யாது?**
   அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

4. **'உவா உற வந்து கூடும்**
   **உடுபதி, இரவி ஒத்தார்' - யார் யார் ?**
   அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

www.kalvikadal.in

5. **"எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு**
   **சக்தி பிறக்கு மூச்சினிலே" - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது**
   அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை
   இ) தாய்வழிச் சமூக முறை ஈ) தந்தைவழிச் சமூகமுறை

6. **பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.**
   அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்
   ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்
   இ) நிறுத்தற்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்
   ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

**II. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** $8 \times 1 = 8$

7. **வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.**
   அ) பாலை பாடினான் - 1. தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்
   ஆ) பாலைப் பாடினான் - 2. தேரினைப் பார்த்தான்
   இ) தேரை பார்த்தான் - 3. பாலினைப் பாடினான்
   ஈ) தேரைப் பார்த்தான் - 4. பாலைத் திணை பாடினான்
   அ) 4, 1, 3, 2 ஆ) 2, 3, 1, 4 இ) 4, 3, 1, 2 ஈ) 2, 4, 1, 3

8. **வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடரமைக்க.**
   மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.

9. **குடும்பம் என்னும் சொல் முதன்முதலில் இடம் பெற்ற நூல்**
   அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல் இ) சிலப்பதிகாரம் ஈ) திருக்குறள்



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

10. **படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.**



அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

இ) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

11. **கடலின் பெரியது**
அ) உற்ற காலத்தில் செய்த உதவி
ஆ) பயன் ஆராயாமல் ஒருவன் செய்த உதவி
இ) திணையளவு செய்த உதவி

12. **பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**
நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக்
கல்லார்க் கொன்றாகிய காரணம் - தொல்லை
வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில்

அ) இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.

ஆ) நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு

இ) ஊழில் பெருவலி யாஉள மற்று ஒன்று
சூழினும் தான்முந்து உறும்.

13. **வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?**
அ) செய்யாமல் செய்த உதவி　　ஆ) பயன் தூக்கார் செய்த உதவி
இ) தினைத்துணை நன்றி　　ஈ) செய்ந்நன்றி

14. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் | - | 1. | சேர்ந்தாரைக் கொல்லி |
| ஆ) பயன்தூக்கார் செய்த உதவி | - | 2. | ஞாலத்தின் மாணப் பெரிது |
| இ) சினம் | - | 3. | தெய்வத்துள் வைக்கப்படும் |
| ஈ) காலத்தினாற் செய்த நன்றி | - | 4. | நன்மை கடலின் பெரிது |

அ) 4, 3, 2, 1　　ஆ) 3, 4, 1, 2　　இ) 1, 2, 3, 4　　ஈ) 2, 3, 4, 1

## III. குறுவினா. 3 × 2 = 6

**அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**
15. சினத்தை ஏன் காக்க வேண்டும்.
16. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது-
17. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்.
18. ஞானத்தில் பெரியது எது?

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக :** 2 × 2 = 4
19. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு வரைக.
20. மனந்தகம் என்றால் என்ன?.
21. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.

## IV. எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 × 2 = 14

22. **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
அ) தந்தனன்　　ஆ) பொழிந்தான்



www.kalvikadal.in
Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





23. **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**
அ) அருங்கானம் ஆ) நன்றல்லது

24. **மரபுப்பிழையை நீக்கி எழுதுக.**
அ) ஆட்டுக்கூட்டம் ஆ) யானை மந்தை

25. **'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை' - 'அன்பும் அறனும்' இலக்கணக் குறிப்பு தருக.**
அ) உம்மைத்தொகை ஆ) எண்ணும்மை
இ) உவமைத்தொகை ஈ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

26. **சரியானதைத் தேர்க.**
அ) ஒருவர் செய்த தீமையை மறக்கக் கூடாது.
ஆ) உரிய காலத்தில் செய்த உதவி பனையளவு பெரியது.
இ) நன்மையான விளைவுகள் சினத்தால் ஏற்படாது.
ஈ) இயல்பான அறிவு எப்போதும் வெளிப்படாது.

27. **பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.**
குமரன் வீடு பார்த்தேன்.

28. **தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக.**
என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

29. **மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து சொற்றொடர் அமைக்கவும்.**
அ) கலை ஆ) களை இ) கழை

30. **கலைச் சொல்லாக்கம் தருக.** Lobby

## V. சிறுவினா

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 4 = 8

www.kalvikadal.in

31. 'எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது குறள் வழி விளக்குக.
32. குகனோடு ஐவராகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுக.
33. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 4 = 8

34. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்கம் எழுதுக.
35. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?
36. உங்கள் குடும்பத்தின் உறவுமுறைப் பெயர்களை அட்டவணைப்படுத்தி எழுதுக.

## VI. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 × 4 = 12

37. ஏகதேச உருவக அணி **(அல்லது)**

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

38. **கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதனை தமிழாக்கம் செய்க.**
In terms of human development objectives, education is an end in itself, not just a means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life-and that is the main theme of this chapter-let it be clearly stated that educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.

39. **கீழ்க்காணும் பாடலை படித்து ஏற்புடைய நயங்களை சுட்டிக்காட்டுக.**
பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி
பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க
ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

கற்றுணர்ந்தே அதன் இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம். - நாமக்கல் கவிஞர்

40. **கீழ்க்காணும் பத்தியைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி.**

வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார் பேராசிரியர். பாடத்தில் மனம் ஒட்டாது கவனமின்றி இருந்த மாணவர் ஒருவரிடம், "நமது சொற்பொழிவைப் பொருட்படுத்த விரும்பாத நீ இங்கிருந்து எழுவாய், நீ இங்கிருப்பதால் உனக்கோ பிறர்க்கோ பயனிலை, இங்கிருந்து உன்னால் செயல்படுபொருள் இல்லை, ஆனால் வகுப்பில் இருந்து வெளியேறுக" என நயம்பட உரைத்து வெளியேற்றினார். அவர்தான் 'திராவிட சாஸ்திரி' என்று சி. வை. தாமோதரனாரால் போற்றப்பட்டட பரிதிமாற் கலைஞர். அவர் தந்தையாரிடம் வடமொழியையும் மகாவித்துவான் சபாபதியாரிடம் தமிழும் பயின்றார்; எப். ஏ (F. A – First Examination in Arts) தேர்வில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று பாஸ்கர சேதுபதி மன்னரிடம் உதவித்தொகை பெற்றார். சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் பி.ஏ பயின்று, தமிழிலும் வேதாந்த தத்துவ சாத்திரத்திலும் பல்கலைக்கழக அளவில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றுத் தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்றார். 1893 ஆம் அண்டு சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் உதவுத் தமிழாசிரியராகப் பணியாற்றத் தொடங்கி, பின்பு தலைமைத் தமிழாசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.

ரூபாவதி, கலாவதி ஆகிய நாடக நூல்களையும் களவழி நாற்பது நூலைத் தழுவி மான விஜயம் என்னும் நூலையும் இயற்றியுள்ளார். ஆங்கில நாடக இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு நாடகவியல் என்னும் நாடக இலக்கண நூலையும் இயற்றினார். இவரது தனிப்பாசுரத் தொகை என்னும் நூல் ஜி.யு. போப் அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. மு.சி. பூர்ணலிங்கனாருடன் இணைந்து இவர் நடத்திய ஞானபோதினி அக்காலத்தில் குறிப்பிடத்தகுந்த அறிவியல் இதழாகத் திகழ்ந்தது. தமிழை உயர்தனிச் செம்மொழி என்று தன் பேச்சின் மூலம் முதன் முதலில் மெய்ப்பித்தவர் இவரே. பின்னாளில் 2004 ஆம் ஆண்டு நடுவண் அரசு தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழியாக அறிவித்தது. பெற்றோர் தனக்கு இட்ட பெயரான சூரியநாராயணர் என்ற வடமொழிப் பெயரைத் தமிழில் பரிதிமாற் கலைஞர் என்று பெயர் மாற்றம் செய்து கொண்டார். தமிழ், தமிழர் முன்னேற்றம் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றுவதைத் தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டிருந்த இவர் தம் 33 ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார். தமிழைச் செம்மொழியென்று நிறுவி, அவர் எழுதிய கட்டுரையின் கீழ்வரும் சில வரிகள் அவருடைய உரைநடை ஆற்றலைத் தெரிவிக்கும். உயர்தனிச் செம்மொழி என்னும் கட்டுரையிலிருந்து, "பலமொழிகட்குத் தலைமையும், மிக்க மேதமையும் உடைய மொழி, உயர்மொழி, தனித்து இயங்க வல்ல ஆற்றல் சார்ந்தது தனிமொழி. திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி செம்மொழி, ஆயின் தமிழ் உயர்தனிச் செம்மொழியாம்.

**வினாக்கள்:**

1. சி.வை. தாமோதரனார் பரிதிமாற்கலைஞரை எவ்வாறு போற்றினார்?
2. பரிதிமாற்கலைஞர் எழுதிய நாடக நூல்கள் யாவை?
3. கீழ்வரும் சொல்லின் இலக்கணத்தையும், புணர்ச்சி விதியினையும் எழுதுக.
4. பரிதிமாற்கலைஞர் தமிழுக்குத் தந்திட்ட பெருமைமிகு வரிகளுள் ஒன்றினை எழுதுக.

**VII. பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக : 3 x 6 = 18**

41. பண்பின் படிமமாக படைக்கப்பட்ட இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக. (அல்லது)
செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக,

42. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு விளக்குக.

43. 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

**VIII. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4 + 2 = 6**

44. அ) 'துன்பு உளது எனின்' - எனத் தொடங்கும் கம்பராமாயண பாடல்.
ஆ) 'வரும்' என முடியும் குறள்.


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



# இயல் 4 செல்வத்துள் எல்லாம் தலை

கல்வி

| | | |
|---|---|---|
| உரைநடை | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் | உ.வே.சாமிநாதர் |
| செய்யுள் | இதில் வெற்றி பெற | சுரதா |
| செய்யுள் | இடையீடு | சி.மணி |
| செய்யுள் | புறநானூறு | ஔவையார் |
| துணைப்பாடம் | பாதுகாப்பாய் ஒரு பயணம் | |
| இலக்கணம் | பா. இயற்றப் பழகலாம் | |

# இயல் 4 பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள்

உரைநடை உலகம்

- உ.வே.சாமிநாதர்

www.kalvikadal.in

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு

இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி **விடை: இ**

2. ‘குழிமாற்று’ எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்

அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை **விடை: ஆ**

### குறுவினா

1. அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை ?

- **தமிழில் :** நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதிநூல்கள்.
- **கணிதத்தில் :** கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று முதலிய பலவகை வாய்பாடுகள்.
- ‘தலைகீழ்ப்பாடம்’ என்ற முறையும் உண்டு.
- ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் போன்ற அகராதி வடிவில் அமைந்த நூல்கள் நினைவாற்றலை வளர்க்க உதவின.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





## சிறுவினா

1. **நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்?**

- மாணாக்கர்களின் அறிவு, திறன்கள், மனப்பாங்கு, செயற்பாடுகள், பண்புகள், பாடரீதியான அடைவுகள் எல்லா மாணவர்களுக்கு ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்ற எனது மனநிலையை மாற்றுவேன்.
- கற்றலில் பின்னடைவு அடைந்திருக்கும் மாணாக்கரை எக்காரணம் கொண்டும் கற்றலில் முழு அடைவு அடையும் மாணாக்கரோடு ஒப்பிட்டுக் கூறமாட்டேன் ; மாறாக, கற்றலில் அம்மாணவன் பின்னடைவு அடைந்ததற்கான காரணத்தைக் கண்டு அவனைத் தேற்றுவேன்.
- கற்றலில் பின்தங்கிய மாணாக்கர் கற்றலில் இடர்ப்படுவதற்கான காரணத்தை இனங்கண்டு அவன் முழுமையான அடைவு எய்த நல்ல வழிகாட்டியாகச் செயல்படுவேன்.
- எலலா மாணாக்கரையும் அன்புடன் அணுகும் மனத்தைப் பெறுவேன்.
- தகாத வார்த்தைகள், பொருத்தமற்ற வார்த்தைகளை ஒருபோதும் வகுப்பறையில் உச்சரிக்க மாட்டேன்.
- மாணக்கர்களின் குடும்பச்சூழல்களை உணர்ந்து அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைக் கூறுவேன்.
- மாணாக்கரோடு முரண்படுதல், எதிர்த்து நின்று செயற்படுதல் ; துன்புறுத்தல், மனம்நோக நடத்தல் என்பன போன்ற மனவேதனைப்படுத்தும் செயல்பாடுகளை முற்றிலும் தவிர்ப்பேன்.
- நல்ல ஆசானாய் இருக்கும் என்னாலும் நல்ல அன்பானவனாய் இருக்க முடியும் என்பதை நிலைநிறுத்துவேன்.

www.kalvikadal.in

2. **மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.**

- முதலில் ஆசிரியர் தரையில் எழுத அதன் மேல் பிள்ளைகள் எழுதினர். மணலில் எழுதிப் பழகுவர்.
- எழுத்துகள் வரிசையாகவும் நன்றாகவும் அமைந்திருந்தன.
- பழங்காலத்தில் கல், களிமண்பலகை, உலோகத்தகடு, துணி, இலை, பனைஓலை, பூர்ஜ மரப்பட்டை, மரப்பலகை, தோல், மூங்கில் பத்தை போன்றவையும் எழுதுபடுபொருட்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- இலை, மரப்பட்டை, களிமண் பலகை போன்றவை விரைவில் அழியக்கூடியவை.
- மரப்பலகை, மூங்கில் பத்தை இவைகளின் பெரிய நூல்களை எழுதிக் கையாள்வது கடினமாக இருந்தன. தோல், துணி, உலோகத்தகடு போன்றவை மிகுந்த பொருட்செலவினை உண் டாக்கின.
- கருங்கல்லில் எழுதினால் பிற இடங்களுக்குக் கொண்டு செல்வது கடினமாகும். ஓலைச்சுவடிகளில் எழுத்தாணிகளைக் கொண்டு எழுதினர். கல்வெட்டுகளில் கல்தச்சர்களால் சிற்றுளி கொண்டு எழுத்துகள் பொறிக்கப்பட்டன. களிமண் பலகைக் கணிதம் எழுத்தாணி கொண்டே எழுதினர்.
- எழுத்துகளின் உருவம் பல காலமாக மாறாமல் இருந்தது. காலம் செல்லச் செல்ல எழுதுகோலைப் பயன்படுத்திக் காகிதத்தில் எழுதும் முறையைக் கற்றுக்கொண்டனர்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



## நெடுவினா

1. **பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.**

- பண்டைக்காலத்தில் ஆசிரியர்களிடையே மிகுந்த உறவுமுறை இருந்தது. ஆசிரியரை உபாத்தியார் என்றனர். உபாத்தியாரைக் கணக்காயர் என்பர். உபாத்தியாயருடைய வீடே குருகுலமாக இருந்தது.
- ஊர்தோறும் பொதுவாக இடத்தில் மேடை அமைக்கப்பட்டிருக்கும். அம்மேடையை மன்றம் என்றும் அம்பலம் என்றும் கூறுவர். மன்றம் என்பது மரத்தடியில் உள்ள திண்ணை. அதுதான் பிறகு திண்ணைப் பள்ளிக்கூடமாக மாறியது. மரத்தடிப் பள்ளிகள் நாளடைவில் குடிசைப் பள்ளியாக மாறியது.
- பெற்றோர்கள் ஐந்து வயதில் பிள்ளைகளை ஆசிரியரிடம் ஒப்படைத்தனர். ஒரு நல்ல நாளில் ஏட்டின்மீது மஞ்சள் பூசி பையனிடம் கொடுப்பர். உபாத்தியார் நெடுங்கணக்கைச் சொல்ல மாணவன் அதைப் பின்பற்றிச் சொல்வான். இப்படி மாணாக்கர்கள் பலர் சேர்ந்து சொல்வதை 'முறை வைப்பது' என்பர்.
- சுவடியில் எழுத்துகள் தெளிவாகத் தெரிய மஞ்சள், மணத்தக்காளிச் சாறு, மாவிலைக் கரி, தர்ப்பைக் கரி தடவுவர். உபாத்தியாயர் மாணவர்களை முதலில் மணலில் எழுதிப் பழக்குவர். உபாத்தியாயர் எழுதியதின்மேல் மாணவர்கள் எழுதி எழுதிப் பயிற்சி பெறுவர்.
- எழுத்துகள் ஒன்றோடு ஒன்று ஒட்டாமல், வரிகோணாமல் பழைய காலத்தில் எழுதும் முறையைக் கற்றுக் கொடுத்தனர். புள்ளி, கால், கொம்பு, விலங்கு முதலியவை வரியெழுத்தின் உறுப்புகளாகும். இதனை முறையாகக் கற்றுக் கொடுத்தனர்.
- மனனம் செய்யும் முறையைச் சொல்லிக் கொடுத்தனர். மாணாக்கர்கள் அதிக முயற்சி எடுத்து மனனம் செய்தனர்.
- தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள் முதலியவற்றையும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய அகராதி வரிசையில் அமைந்த நூற்களை மனப்பாடம் செய்ய வைப்பதன் மூலமாகக் கற்றுக் கொடுத்தனர்.
- கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று முதலிய பலவகை வாய்பாடுகள் மூலம் கற்பித்தல் நடைபெற்றது. எல்லோரும் ஒன்றாகக் கூடி கேள்விகள் கேட்டும் விடைகூறியும் கற்று வரும் முறையும் இருந்தது. சுவடியில் எழுத்துகளை எழுதும் முறையும், கற்றுக்கொடுத்தனர்.
- ஆசிரியர்கள் மாணக்கர்களை அன்பினால் வழி நடத்தி வந்தார்கள். கற்றல் கற்பித்தல் முக்கியமாக விளங்கிய வாதம் செய்யும் கற்றல் முறையும் இருந்தது. அரசவையில் கூட வாதுபுரியும் அளவிற்குக் கற்றல் முறைகள் இருந்தன. பள்ளிக்கூடத்தில் மாணாக்கர்கள் நூல் பயிலும் இயல்பை நன்னூல் நூற்பா இவ்வாறு கூறும்.

**"வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை**
**கடனாக் கொளினே மடநனி இகக்கும்"** – *நன்னூல் 41*

- ஞாபகசக்தியை வளர்க்க தினமும் பூ, மிருகம், பட்சி, ஊர் இவற்றின் பெயர்களில் வகைக்கு ஒவ்வொன்றை ஆசிரியர் சொல்லி அனுப்ப மாணாக்கர் அந்தப் பெயர்களை மறுநாள் மறவாமல் வந்து சொன்னார்கள்.
- இவ்வாறு, மாணவர்களின் எல்லாத் திறமைகளையும் வளர்க்கும் விதமாக கற்பித்தல் இருந்தது. மாணவர்களும் தங்களின் அறிவினை வளர்க்கும் விதமாகக் கற்றனர்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

12

4 இயல்

# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

1. **திண்ணைப் பள்ளிக்கூடங்கள் எந்த நூற்றாண்டில் அதிகம் இருந்தன?**
அ) 12-ஆம் நூற்றாண்டு ஆ) 18-ஆம் நூற்றாண்டு
இ) 19-ஆம் நூற்றாண்டு ஈ) 17-ஆம் நூற்றாண்டு **விடை: இ**

2. **குருகுலம் என்பது**
அ) ஆசிரியரின் அறை ஆ) குருக்கள் தங்கும் இடம்
இ) துறவியரின் குழல் ஈ) ஆசிரியரின் வீடு **விடை: ஈ**

3. **மன்றத்திற்கு வழங்கும் இன்னொரு பெயர்**
அ) சபை ஆ) சங்கம் இ) கோட்டை ஈ) அம்பலம் **விடை: ஈ**

4. **ஜைன மடங்களுக்கான பெயர்**
அ) அம்பலம் ஆ) மன்றம் இ) திண்ணை ஈ) பள்ளி **விடை: ஈ**

5. **பள்ளியென்னும் பெயர் எவ்வறிற்கெல்லாம் பொதுவாக வழங்கப்படும்**
அ) பாடசாலை, ஆலயம் ஆ) பாடசாலை, விருந்தினர் கூடும் இடம்
இ) பாடசாலை, மடங்கள் ஈ) பாசறை, மடங்கள் **விடை: இ**

6. **‘நெடுங்கணக்கு’ என்பது**
www.kalvikadal.in
அ) நீண்ட கணக்கு ஆ) பெருக்கல் கணக்கு இ) ஓலைச் சுவடி ஈ) அரிச்சுவடி **விடை: ஈ**

7. **‘சட்டாம்பிள்ளை’ என்பவர் யார்?**
அ) ஊரில் பெரியவர் ஆ) சண்டித்தனம் செய்பவர்
இ) தலைமை வகிக்கும் மாணவர் ஈ) பிடிவாதம் பிடிக்கும் மாணவர் **விடை: இ**

8. **‘அக்ஷராப்பியாசம்’ என்றால்**
அ) பாடம்படித்தல் ஆ) எழுத்தறிவித்தல் இ) மனனம் செய்தல் ஈ) ஏடு எழுதுதல் **விடை: ஆ**

9. **‘ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்’ என உரைக்கும் நூல்**
அ) சிலப்பதிகாரம் ஆ) வளையாபதி இ) குண்டலகேசி ஈ) சிந்தாமணி **விடை: ஈ**

10. **செய்யுளை நினைவுப்படுத்தும் முறைகள்**
அ) எழுதுதல், படித்தல் ஆ) வாசித்தல், எதுகை மோனை
இ) எதுகை மோனை, அந்தாதி ஈ) கற்பித்தல், எழுதுதல் **விடை: இ**

11. **எழுத்தாணிக்கு வழங்கும் வேறு பெயர்**
அ) மடக்கெழுத்தாணிஆ) குண்டெழுத்தாணி இ) ஊசி ஈ) எழுதுகோல் **விடை: இ**

12. **கதைப்பாடல் குறிப்பிடும் மனனம் செய்வதற்கான சுவடி**
அ) அம்கொவதி சுவடி ஆ) இந்திரச்சுவடி
இ) பிரபாவதி சுவடி ஈ) சரஸ்வதி சுவடி **விடை: இ**

13. **“மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்**
**மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய்” - எனக் குறிப்பிடும் நூல்**

செல்வத்துள் எல்லாம் தலை



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

அ) சிந்தாமணி ஆ) தமிழ்விடு தூது
இ) தமிழ்க்கோவை ஈ) இரட்டைஅர்த்தங்கள் மாண்டு போகவில்லை

விடை: ஆ

**14. ஓதற் பிரிவுக்கென தொல்காப்பியம் குறிப்பிடும் கால எல்லை**

அ) மூன்று ஆண்டுகள் ஆ) நான்கு ஆண்டுகள்
இ) இரண்டு ஆண்டுகள் ஈ) ஏழு ஆண்டுகள் விடை: அ

**15. பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் என்னும் உ.வே.சாவின் இக்கட்டுரை எந்தத் தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது?**

அ) உயிர்நீட்சி ஆ) உயிர்மீட்சி இ) உயிர்க்காட்சி ஈ) மையாடல் விடை: ஆ

**16. கூற்று 1 : ஆசிரியர் நெடுங்கணக்கைச் சொல்லிக் கொடுக்க மாணக்கன் அதனைப் பின்பற்றிச் செல்வான்.**

**கூற்று 2 : பிள்ளைகள் முதலில் தரையில் எழுத ஆசிரியர்கள் அதன் மேல் எழுதுவார்கள்.**

அ) கூற்று இரண்டும் சரி ஆ) கூற்று 1 தவறு 2 சரி
இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று இரண்டும் தவறு விடை: இ

**17. கூற்று : சுவடிகளிலுள்ள எழுத்துகளில் மையைத் தடவி வாசிக்கத் தருவார்கள்.**

**காரணம் : கண்ணுக்குக் குளிர்ச்சியைத் தரும், எழுத்துகளை விளக்கமாகக் காட்டும்.**

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி, காரணம் சரி
இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி விடை: ஆ

www.kalvikadal.in

**18. கூற்று 1 : உபாத்தியாயருடைய வீடே பள்ளிக்கூடமாக இருந்தது.**

**கூற்று 2 : கணக்காயரென்பது அமைச்சரின் பெயர்.**

அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று 1 சரி 2 தவறு
இ) கூற்று இரண்டும் சரி ஈ) கூற்று 1 தவறு 2 சரி விடை: ஆ

**19. கூற்று : பூ, மிருகம், பட்சி, ஊர் இவற்றின் பெயர்களை ஆசிரியர் கூறி அனுப்புவதில்லை.**

**காரணம் : பெயர்களை நினைவில் வைத்து மறுநாள் சொல்வதன் மூலம் நினைவாற்றல் அதிகமாகும்.**

அ) கூற்று தவறு காரணம் சரி ஆ) கூற்று சரி காரணம் தவறு
இ) கூற்று சரி காரணம் சரி ஈ) கூற்று தவறு காரணம் தவறு விடை: அ

**20. கூற்று : தமிழ்நாட்டிற்கும் நவத்வீபம் முதலிய இடங்களிலிருந்து வந்து படித்துச் சென்றவர்கள் பலர் உண்டு.**

**காரணம் : திருவாவடுதுறை மடம், தருமபுரம் மடம் முதலியன பல வருஷமாகக் கல்வியைப் போதிக்கவில்லை.**

அ) கூற்று சரி, காரணம் சரி ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்று சரி காரணம் தவறு ஈ) கூற்று தவறு காரணம் தவறு விடை: இ

**21. கூற்று 1 : பள்ளிக்கு முதலில் வருபவனை வேத்தான் என்று அழைப்பர்.**

**கூற்று 2 : வேத்தான் சில நேரங்களில் சட்டாம்பிள்ளைக்குரிய கடமை செய்வான்.**

அ) கூற்று இரண்டும் சரி ஆ) கூற்று இரண்டும் தவறு
இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி விடை: இ



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





22. **சரியானதைத் தேர்க.**

அ) உபாத்தியாயர் - கணக்காயர்
ஆ) கீழ்வாயிலாக்கம் - பின்ன எண்ணின் மேல் தொகை
இ) நவத்வீபம் - கல்விப் பயிற்சிக் கூடம்
ஈ) வித்தியாரம்பம் - எழுத்துப் பயிற்சி **விடை: அ**

23. **சரியானதைத் தேர்க.**

அ) மனப்பாடம் செய்ய சகல வல்லவாதி சுவடி என்ற புத்தகம் இருந்தது.
ஆ) 'மையாடல் விழா' என்பது திருமண விழா.
இ) நெடுங்கணக்கை மாணாக்கர் தானே கற்றனர்.
ஈ) நிகண்டுகளை மனப்பாடம் செய்யும் மாணவனுக்கு மதிப்பிருந்தது. **விடை: ஈ**

24. **சரியானதைத் தேர்க.**

அ) சாஸனம் - இருக்கை
ஆ) மணல் - சிலேட்
இ) பனையேடு - கரும்பலகை
ஈ) எழுத்தாணி - பென்சில் **விடை: ஆ**

25. **பொருந்தாததைத் தேர்க.**

அ) ஓதற்பிரிவு - 3 வருடம்
ஆ) வேத்தான் - முதலில் வரும் மாணக்கன்
இ) மையாடல் விழா - அக்ஷராப்பியாசம்
ஈ) விலங்கு - வரியெழுத்தின் இனம் **விடை: ஈ**

www.kalvikadal.in

26. **பொருந்தாததைத் தேர்க.**

அ) சுவடிகளை வைக்கவும் எடுத்துச்செல்லவும் பயன்படும் கருவி அசை எனப்படும்.
ஆ) 'கிளிமூக்கு' என்பது ஓலைச் சுவடியுடன் தொடர்புடையது.
இ) மாணவர்கள் சேர்ந்து சொல்வது மனன முறை என்பர்.
ஈ) புள்ளி, கால், கொம்பு, விலங்கு முதலியன வரியெழுத்தின் உறுப்புகள். **விடை: இ**

27. **பொருந்தாததைத் தேர்க.**

அ) கோணாமல் - கொம்பு சுழி
ஆ) சாயாமல் - கொண்ட பந்தி
இ) அசையாமல் - தராசுபோல் கால்கள்
ஈ) கொம்பு - வரியெழுத்தின் உறுப்பு **விடை: இ**

28. **பொருத்துக.**

அ) உபாத்தியாயர் - 1. தாழைமடல்
ஆ) குழிமாற்று - 2. ஆசிரியர்
இ) சீதாளபத்திரம் - 3. எழுத்துப்பயிற்சி
ஈ) அக்ஷராப்பியாசம் - 4. பெருக்கல் வாய்பாடு

அ) 2, 4, 1, 3 ஆ) 3, 4, 1, 2 இ) 2, 1, 4, 3 ஈ) 3, 1, 4, 2 **விடை: அ**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

29. **பொருத்துக.**

அ) எட்டயபுரம் திண்ணைப் பள்ளி - 1. பின்னத்தூர் நாராயணசாமி
ஆ) முத்துராம பாரதி திண்ணைப் பள்ளி - 2. நாவலர் சோமசுந்தர பாரதியார்
இ) கணபதியார் திண்ணைப் பள்ளி - 3. வெள்ளைக்கால் ப. சுப்பிரமணியனார்
ஈ) மௌனகுரு - 4. மாண. இராசமாணிக்கனார்

அ) 2, 1, 3, 4 ஆ) 2, 1, 4, 3 இ) 2, 3, 1, 4 ஈ) 2, 4, 3, 1 **விடை: அ**

30. **பொருத்துக.**

அ) நெடுங்கணக்கு - 1. அரசாணை
ஆ) சட்டாம் பிள்ளை - 2. ஓலைச்சுவடி
இ) தூக்கு - 3. அரிச்சுவடி
ஈ) சாஸனம் - 4. வகுப்புத்தலைவன்

அ) 3, 4, 1, 2 ஆ) 3, 2, 4, 1 இ) 4, 1, 3, 2 ஈ) 4, 3, 1, 2 **விடை: ஈ**

31. **சென்னை புரசைவாக்கம் சர்,எம்.சி.டி. முத்தையா உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் சங்கத்தின் முதல் சொற்பொழிவாக 20.03.1936இல் நிகழ்த்தப்பட்டு 16.08.1936இல் கட்டுரையாக வெளியான வார இதழ்**

அ) இந்தியா ஆ) விஜயா
இ) நவசக்தி ஈ) சுதேசமித்திரன் **[விடை: ஈ]**

32. **மில்டனின் சுவர்க்க நீக்கத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர்**

அ) வெள்ளைக்கால் ப. சுப்பிரமணியனார் ஆ) எட்டையபுரம் சி.சுப்பிரமணிய பாரதி
இ) சுப்ரமணிய சிவா ஈ) உ.வே.சாமிநாதர் **[விடை: அ]**

www.kalvikadal.in

33. **வெள்ளைக்கால் சுப்பிரமணியனார் என்பார் .................. ஆவார்.**

அ) வழக்கறிஞர் ஆ) பொறியாளர்
இ) உயிரின மருத்துவர் ஈ) நீதியரசர் **[விடை: இ]**

34. **ப. சுப்பிரமணியார், திருநெல்வேலி தெற்குத்தெரு கணபதியார் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்த வருடங்கள்**

அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து ஈ) ஆறு **[விடை: ஆ]**

35. **வரலாற்றாய்வாளரும் தமிழறிஞருமான டாக்டர் மா. இராசமாணிக்கனார் ............... படித்திருக்கிறார்.**

அ) ஞான குருவிடம் ஆ) மௌன குருவிடம்
இ) கணபதியாரிடம் ஈ) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனாரிடம்
**[விடை: ஆ]**

36. **நற்றிணை நூலின் உரையாசிரியர்**

அ) டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆ) பின்னத்தூர் நாராயணசாமி
இ) ப. சுப்பிரமணியனா ஈ) வ.சுப. மாணிக்கம் **[விடை: ஆ]**

37. **நாராயணசாமி, பின்னத்தூர் அருகே உள்ள கிருஷ்ணாபுரம் ................. திண்ணைப் பள்ளிக்கூடத்தில் இலவசமாகப் படித்தார்.**

அ) சோமசுந்தர பாரதி ஆ) சுப்பிரமணிய பாரதி
இ) முத்துராம பாரதி ஈ) கவிபாரதி **[விடை: இ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

38. **நாவலர் சோமசுந்தர பாரதிக்குப் பொருந்தாததைக் கண்டறிக.**
அ) பாரதியின் நண்பர் ஆ) வழக்கறிஞர்
இ) தமிழறிஞர் ஈ) வரலாற்றாய்வாளர் **[விடை: ஈ]**

39. **பின்வரும் தமிழறிஞர்களில் சிலப்பதிகார உரையாசிரியரைக் கண்டறிக.**
அ) ப. சுப்பிரமணியனார். ஆ) மா.இராசமாணிக்கனார்
இ) வ.சுப. மாணிக்கம் ஈ) வேங்கடசாமி **[விடை: ஈ]**

40. **டாக்டர் வ.சுப. மாணிக்கம் .................. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்தார்.**
அ) சென்னை ஆ) மதுரை இ) மைசூர் ஈ) டெல்லி **[விடை: ஆ]**

41. **'இரட்டை அர்த்தங்கள் மாண்டுபோகவில்லை' என்னும் நூலின் ஆசிரியர்**
அ) அ.கா. பெருமாள் ஆ) வ.சுப. மாணிக்கம்
இ) வ.வே.சு. ஐயர் ஈ) மு.வரதராசனார் **[விடை: அ]**

42. **பொருத்திக் காட்டுக.**
அ) கீழ்வாயிலக்கம் - 1. பெருக்கல் வாய்ப்பாடு
ஆ) மேல்வாயிலக்கம் - 2. தாழை மடல்
இ) குழிமாற்று - 3. பின்ன எண்ணின் கீழ்த்தொகை
ஈ) சீதாளபத்திரம் - 4. பின்ன எண்ணின் மேல்தொகை
அ) 3, 4, 1, 2 ஆ) 3, 1, 2, 4 இ) 4, 3, 2, 1 ஈ) 2, 3, 1, 4 **[விடை: அ]**

43. **நவத்வீபம் என்பது**
அ) நேபாளத்தில் உள்ள பள்ளிக்கூடத்தின் பெயர்
ஆ) வங்காளத்தில் உள்ள ஓர் ஊர்
இ) தெய்வத்திற்குப் படைக்கப்படும் ஒருவித பொருள்
ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: ஆ]**

www.kalvikadal.in

44. **முதன் முதலில் வித்தியாப்பியாசம் செய்யும்பொழுது தாய்தந்தையர் பிள்ளைகளை ஆசிரியர்களிடம் அடைக்கலமாகக் கொடுத்த வயது**
அ) ஐந்து ஆ) ஏழு இ) பத்து ஈ) பதின்மூன்று **[விடை: அ]**

45. **உபாத்தியாயர் .................. சொல்லிக்கொடுக்க, மாணாக்கன் அதனைப் பின்பற்றிச் சொல்வான்.**
அ) குறுங்கணக்கை ஆ) நெடுங்கணக்கை இ) புராணத்தை ஈ) இதிகாசத்தை **[விடை: ஆ]**

46. **உபாத்தியாயர் ஒன்றைச் சொல்ல அதை மாணவர்கள் பலரும் சேர்ந்து சொல்வதை .................... என்று கூறுவார்கள்.**
அ) முறை வைப்பது ஆ) திருமறை படிப்பது
இ) பாடம் படிப்பது ஈ) நூல் வாசிப்பது **[விடை: அ]**

47. **உபாத்தியாயருக்குப் பிரதியாகச் சில சமயங்களிற் முறை வைப்பவர்**
அ) சட்டாம்பிள்ளை ஆ) கணக்குப்பிள்ளை
இ) உபாத்தியாயரின் மனைவி ஈ) இவர்களில் எவருமிலர் **[விடை: அ]**

48. **மை தடவிப் புத்தகத்தை வாசிக்கத் தொடங்குவதனால் அக்ஷராப்பியாசத்தை .................... என்று சொல்வார்கள்.**
அ) மஞ்சள் நீராட்டுவிழா ஆ) மையாடல் விழா
இ) மையிழைக்கும் விழா ஈ) புதுவாசிப்பு நாள் விழா **[விடை: ஆ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





49. வரியெழுத்தின் உறுப்புகள்

i) புள்ளி ii) கால் iii) கொம்பு iv) விலங்கு

அ) i), ii) சரி ஆ) ii), iii) சரி இ) iii) மட்டும் தவறு ஈ) நான்கும் சரி **[விடை: ஈ]**

50. சிறுவர்களைப் படிக்கவைக்கும் வகையில் அகராதி வரிசையில் அமைந்த நூல்கள்

அ) ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் ஆ) திருக்குறள், நாலடியார்

இ) இன்னா நாற்பது, இனியவை நாற்பது ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

51. கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று, நெல் இலக்கம் முதலிய வாய்பாடுகளைக் கட்டாயம் மனப்பாடம் செய்வதற்காக இருந்த சுவடிப் புத்தகம்

அ) லீலாவதி ஆ) கலாவதி இ) பிரபாவதி ஈ) அமராவதி **[விடை: இ]**

52. இரட்டைத் துணையுள்ள ஏடுகளில் ஒரு துளையில் செப்புக்கம்பி அல்லது மூங்கிற் குச்சியைச் செருகிக் கட்டுவதை .................. என்று கூறுவர்.

அ) மூங்கிலாசனம் ஆ) நாராசம் இ) ஏடாசம் ஈ) கிளிமூக்கு **[விடை: ஆ]**

53. சுவடிகளை வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கும் உபயோகப்படும் கருவிக்கு .................. என்று பெயர்.

அ) மையாடல் ஆ) நாராசுரம் இ) கிளிமூக்கு ஈ) தூக்கு **[விடை: ஈ]**

54. தூக்கு என்னும் சுவடி சார்ந்த பொருளுக்கு .................. என்றும் பெயர்.

அ) அசை ஆ) இசை

இ) தூக்கிசை ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

55. அரசவையில் வாதுபுரிந்து தம் கல்வித்திறமையை நிலைநாட்டும் நூற்பயிற்சியுடையவர்கள் கொடிகட்டியிருப்பரென்று குறிப்பிடும் நூல்

www.kalvikadal.in

அ) பரிபாடல் ஆ) பட்டினப்பாலை

இ) மதுரைக்காஞ்சி ஈ) முல்லைப்பாட்டு **[விடை: இ]**

56. "வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை

கடனாக் கொளினே மடநனி இக்கும்" - என்று குறிப்பிடும் நூல்

அ) அகத்தியம் ஆ) தொல்காப்பியம்

இ) நன்னூல் ஈ) தொன்னூல் விளக்கம் **[விடை: இ]**

57. 'என் ஒருவன் சாந்துணையும் கல்லாத வாறு' என்று குறிப்பிடும் நூல்

அ) திருக்குறள் ஆ) நாலடியார் இ) நான்மணிக்கடிகை ஈ) திரிகடுகம் **[விடை: அ]**

58. கல்வியின் பொருட்டு பிரியுங்காலத்தைத் தொல்காப்பியம் .................. பிரிவு என்று குறிப்பிடுகிறது.

அ) ஓதற்பிரிவு ஆ) பொருள்வயின் பிரிவு

இ) தலைமகற்பிரிவு ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

59. தஞ்சாவூரில் இருந்த ஆகம சாஸ்திர பண்டிதராகிய சர்வசிவ பண்டிதரென்பவரிடத்தில் பல அன்னிய தேசத்து மாணாக்கர்கள் வந்து கற்றுச் சென்றார்களென்னும் செய்தி .................. சாஸனம் ஒன்றால் தெரிகின்றது.

அ) முதல் இராஜராஜ சோழன் காலத்தில், தஞ்சையில் பொறிக்கப்பட்ட

ஆ) முதல் இராசேந்திர சோழன் காலத்தில், உறையூரில் பொறிக்கப்பட்ட

இ) இரண்டாம் இராஜஇராஜசோழன் காலத்தில், தாராசுரத்தில் பொறிக்கப்பட்ட

ஈ) முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில், காஞ்சிபுரத்தில் பொறிக்கப்பட்ட **[விடை: அ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

60. **பல வருடகாலம் தமிழ்க்கல்லூரியாகவும், வடமொழிக் கல்லூரியாகவும் விளங்கி வந்த மடங்கள்**
அ) திருவாவடுதுறை, தருமபுரம் ஆ) மதுரை, திருப்பாதிரிப் புலியூர்
இ) காஞ்சிபுரம், திருநெல்வேலி ஈ) இவற்றில் ஏதுமில்லை **[விடை: அ]**

61. **சரியானக் கூற்றைக் கண்டறிக.**
i) பள்ளிக்கூடத்திற்குக் காலையில் ஐந்து மணிக்கே வந்துவிட வேண்டுமாகையால் பிள்ளைகள் பெரியவர்களை அழைத்து வருவதே வழக்கம்.
ii) முதலில் வருபவனை வேத்தான் என்று சொல்வார்கள்.
iii) வேத்தன் என்பதற்கு மற்றவர்களை விட வேறான தனிப்பெருமை உடையவன் என்பது பொருள்.
அ) i), ii), iii) தவறு ஆ) i), ii) சரி இ) iii) மட்டும் தவறு ஈ) மூன்றும் சரி **[விடை: ஈ]**

62. **'தமிழ்த்தாத்தா' என்னும் சிறப்புக்குரியவர்**
அ) உ.வே.சா. ஆ) ம.பொ.சி. இ) தெ.பொ.மீ ஈ) மு.வ. **[விடை: அ]**

63. **உ.வே.சா. பெறாத பட்டத்தைக் கண்டறிக.**
அ) மகாமகோபாத்தியாய ஆ) திராவிட வித்தியா பூஷணம்
இ) தாக்ஷிணாத்தி கலாநிதி ஈ) தாஹுணாத்திய கருணாநிதி **[விடை: ஈ]**

64. **பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடித்தேடி அச்சில் பதிப்பிக்க அரும்பாடுபட்டவர்**
அ) உ.வே.சா. ஆ) ம.பொ.சி. இ) தெ.பொ.மீ ஈ) மு.வ. **[விடை: அ]**

65. **உ.வே.சா. சென்னைப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்ற ஆண்டு**
அ) 1932 ஆ) 1930 இ) 1928 ஈ) 1926 **[விடை: அ]**

66. **உ.வே.சா.வின் திருவுருவச்சிலை சென்னை மாநிலக் கல்லூரியில் .................... வண்ணம் நிறுவப்பட்டுள்ளது.**
www.kalvikadal.in
அ) வங்கக்கடலை நோக்கி நிற்கும் ஆ) வள்ளுவர் கோட்டத்தைப் பார்க்கும்
இ) அனைவரும் வியக்கும் ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

67. **உ.வே.சா. நூலகம் அமைந்துள்ள இடம்**
அ) சென்னை, திருவான்மியூர் ஆ) சென்னை, வடபழனி
இ) தஞ்சை, கிழக்குவாசல் ஈ) மதுரை, மேற்குவாசல் **[விடை: அ]**

## குறுவினா

1. **நற்றிணை நூலின் உரையாசிரியர் யார்? அவர் எங்கு யாரிடம் திண்ணைக் கல்விக் கற்றார்?**
- நற்றிணை நூலின் உரையாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி.
- பின்னத்தூர் அருகே உள்ள கிருஷ்ணாபுரம் முத்துராம பாரதி திண்ணைப் பள்ளிக்கூடத்தில் இலவசமாகக் கற்றார்.

2. **இன்றைய பள்ளிக்கூடங்களில் வளர்க்கப்படும் செடிகொடிகளுக்கு ஆசிரியர் கூறும் உவமை என்ன?**
நாடகத்தில் வனங்களைத் திரையில் எழுதித் தொங்கவிடுவது போலப் பள்ளிக்கூடங்களில் சட்டியிலும் வாயில்களிலும் செடி கொடிகளை வளர்ப்பதாக ஆசிரியர் கூறுகிறார்.

3. **மன்றம் என்பது எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கும்? அதன் வேறு பெயர்கள் என்ன?**
- பெரிய மரத்தடியில் மேடையொன்று அமைக்கப்பட்டிருக்கும்.
- 'அம்பலம்' என்றும் 'மன்றம்' என்றும் அழைப்பர்.


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**4. 'முறை வைப்பு' என்றால் என்ன ?**

உபாத்தியாயர் (ஆசிரியர்) ஒன்றைச் சொல்ல அதை மாணாக்கர்கள் பலரும் சேர்ந்து சொல்வது 'முறை வைப்பது' என்று அழைக்கப்படும்.

**5. கையெழுத்து எவ்வாறு இருக்க வேண்டுமென்று பழைய வெண்பா பாடல் குறிப்பிடுகிறது?**

- எழுத்துகளில் கொம்பு, சுழி போன்றவை கோணக் கூடாது.
- வரிசையாக எழுதும் எழுத்துகள் சாயக் கூடாது.
- துணைக்கால் எழுத்துகள் சாயாமல் அம்புபோல் அசையாமல் எழுத வேண்டும்.

**6. வரியெழுத்தின் உறுப்புகள் யாவை?**

புள்ளி, கால், கொம்பு, விலங்கு முதலியவை வரியெழுத்தின் உறுப்புகள்.

**7. 'கிளிமூக்கு' என்பது என்ன?**

- சுவடியைக் கோர்க்கும் கயிற்றின் ஒரு தலைப்பில் தடையாக, பனையோலையை ஈர்க்கோடு கிளிமூக்குப் போலக் கத்தரித்தது அமைப்பது பார்ப்பதற்குக் கிளிமூக்கு போன்று இருக்கும்.
- சுவடியைக் கோர்க்கும் கயிற்றின் அமைப்பு 'கிளிமூக்கு' என்றழைக்கப்படும்.

**8. எழுத்தாணியின் வகைகள் எத்தனை? அவை யாவை?**

- எழுத்தாணியின் வகைகள் மூன்று.
- மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி.

**9. சட்டம் தூக்கு இவை எவற்றை உணர்த்துகின்றன?**

**சட்டம் :**

www.kalvikadal.in

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எழுதும் பழக்கம் நன்றாக வர தினமும் அவர்களைத் தனித்தனியே ஏடுகளில் தாங்கள் மேலே எழுதி அதைப் போன்று எழுதி வரச் சொல்வர். இதற்குச் 'சட்டம்' என்று பெயர்.

**தூக்கு :**

சுவடிகளை வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கும் பயன்படும் கருவிக்குத் 'தூக்கு' என்று பெயர். இதற்கு 'அசை' என்ற வேறுபெயரும் உண்டு.

**10. தஞ்சையில் பொறிக்கப்பட்டுள்ள அரசாணையால் அறியப்படும் செய்தி யாது?**

தஞ்சாவூரில் வாழ்ந்த ஆகம சாஸ்திர பண்டிதராகிய சர்வசிவ பண்டிதரிடத்தில் பல நாட்டைச் சார்ந்த மாணாக்கர்கள் கல்விக் கற்க வந்திருந்தார்கள் என்ற செய்தி, முதல் இராஜராஜ சோழன் காலத்தில் தஞ்சையில் பொறிக்கப்பட்டுள்ளது.

**11. 'வேத்தான்' - இச்சொல்லால் அழைக்கப்பட்டவர் யார்? இதன் பொருள் என்ன?**

- பள்ளிக்கூடத்திற்குக் காலை 5 மணிக்கே வரவேண்டும்.
- பள்ளிக்கூடத்திற்கு முதலிலே வரும் மாணாக்கரே 'வேத்தான்' என்று அழைக்கப்பட்டார்.
- மற்றவர்களை விட வேறான தனிப்பெருமை உடையவன் என்பதே 'வேத்தான்' என்பதன் பொருள்.

**12. 'தமிழ்த்தாத்தா' பெற்ற சிறப்புப் பட்டங்கள் யாவை?**

- மகாமகோபாத்தியாய
- திராவிட வித்தியா பூஷணம்
- தாக்ஷிணாத்திய கலாநிதி
- 1932-இல் சென்னைப் பல்கலைக்கழகம் வழங்கிய டாக்டர் பட்டம்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

13. **உ.வே.சா. அவர்களின் பண்முகங்கள் யாவை?**
- இணையற்ற ஆசிரியர்
- புலமைப்பெருங்கடல்
- சிறந்த எழுத்தாளர்
- பதிப்பாசிரியர்
- பழந்தமிழ் இலக்கியங்களைப் பதிப்பிக்க அரும்பாடுபட்டவர்
- கும்பகோணம் அரசுக்கலைக்கல்லூரி, சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர்.

14. **சுவடியில் உள்ள எழுத்துகள் தெளிவாகத் தெரிய முன்னோர்கள் செய்தது யாது?**
சுவடியில் வம்பு, மஞ்சள், மணத்தக்காளியிலைச்சாறு அல்லது ஊமைத்தயிலைச்சாறு, மாவிலைக்கரி, தர்ப்பைக்கரி முதலியவற்றைக் கலந்து செய்த மையைத் தடவினால் எழுத்துகள் தெளிவாகத் தெரியும்.

15. **வித்தியாரம்பம் என்பது யாது?**
முதன் முதலில் ஐந்து வயதில் கல்வி கற்பதற்காகக் குழந்தைகளை ஆசிரியர்களிடம் அடைக்கலமாகக் கொடுப்பதே வித்தியாரம்பம் என்பர்.

16. **நாராசம் என்றால் என்ன?**
இரட்டைத் துளையுள்ள ஏடுகளில் ஒரு துளையில் செப்புக் கம்பி அல்லது மூங்கிற் குச்சியைச் செருகிக் கட்டுவார்கள் அதற்கு 'நாராசம்' என்று பெயர்.

17. **உ.வே.சா. விற்குத் தமிழகத்தில் செய்யப்பட்டுள்ள சிறப்புகள் யாவை?**
உ.வே.சா. வின் திருவுருவச்சிலை, சென்னை மாநிலக் கல்லூரியில் வங்கக்கடலை நோக்கி நிற்கும் வண்ணம் நிறுவப்பட்டுள்ளது.

www.kalvikadal.in

18. **அக்கால பிள்ளைகளின் சிலேட்டு, புத்தகம், பேனாவாக எவை இருந்ததாக உ.வே.சா கூறுகிறார்?**
- மணல்தான் சிலேட்டு
- பனையேடுதான் புத்தகம்
- எழுத்தாணியே பேனா

## சிறுவினா

1. **பேராசிரியர் அ.கா.பெருமாள் அவர்கள் யாரெல்லாம் திண்ணை பள்ளியில் கல்விக்கற்றவர்கள் என்று பட்டியலிடுகின்றார்?**
- மில்டனின் சுவர்க்க நீக்கத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவரும், உயிரின மருத்துவருமான வெள்ளக்கால் ப.சுப்பிரமணியனார் திருநெல்வேலி தெற்குத்தெரு கணபதியார் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் 4 வருடங்கள் கல்வி கற்றார்.
- வரலாற்று ஆய்வாளரும், தமிழறிஞருமான டாக்டர் மா.இராசமாணிக்கனார் மௌனகுருவிடம் கல்வி கற்றார்.
- நற்றிணை நூலின் உரையாசிரியரான பின்னத்தூர் நாராயணசாமி பின்னத்தூர் அருகே உள்ள கிருஷ்ணாபுரம் முத்துராம பாரதி திண்ணைப் பள்ளிக்கூடத்தில் இலவசமாகப் படித்தார்.
- சுப்பிரமணிய பாரதியின் நண்பரும் வழக்குரைஞருமான தமிழறிஞர் நாவலர் சோமசுந்தர பாரதியார் எட்டயபுரம் திண்ணைப் பள்ளியில் கல்வி கற்றார்.
- சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய வேங்கடசாமி அவர்கள் வல்லம் குருசாமி வாத்தியார் திண்ணைப் பள்ளியில் கல்வி கற்றார்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





- மதுரைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர்.வ.சுப.மாணிக்கம் மகிபாலன்பட்டி நடேசனார் திண்ணைப் பள்ளியில் கல்வி கற்றார்.

**2. வித்தியாரம்பம் (கல்வித்தொடக்கம்) குறித்து உ.வே.சாமிநாதர் கூறுவது என்ன?**

- ஐந்து வயதில் வித்தியாப்பியாசம் (கல்விப்பயிற்சி) பெறுவதற்காகப் பெற்றோர்கள் பிள்ளைகளை ஆசிரியர்களிடம் ஒப்படைப்பர்.
- பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் காலம் மிகப் பெரிய விழாவாகக் கொண்டாடப்படும்.
- ஏட்டின் மீது மக்கள் பூசிப் பூசித்துப் பள்ளியில் சேரும் மாணாக்கரிடம் கொடுத்து வாசிக்கக் கூறுவர்.
- ஆசிரியர் நெடுங்கணக்கைக் (அரிச்சுவடி / எழுத்துவரிசை) சொல்ல மாணாக்கன் அதனைப் பின்பற்றிச் சொல்ல வேண்டும்.
- ஆசிரியர் சொல்ல மாணக்கர்கள் பலரும் சேர்ந்து சொல்வதை ‘முறை வைப்பு’ என்பர்.
- சில நேரங்களில் ஆசிரியருக்குப் பதிலாகச் சட்டாம் பிள்ளை (வகுப்புத்தலைவன்) முறை வைப்பதும் உண்டு.

**3. அக்ஷராப்பியாசத்தை (எழுத்து அறிவித்தல்) மையாடல் விழா என அழைக்கக் காரணம் என்ன? மாணக்கர் எவ்வாறு எழுத்துகளைக் கற்க தொடங்கினர்?**

**மையாடல் விழா :**

- சுவடியில் வசம்பு, மஞ்சள், மணத்தக்காளியிலைச்சாறு அல்லது ஊமைத்தயிலைச்சாறு, மாவிலைக்கரி, தர்ப்பைக்கரி முதலியவற்றைக் கலந்து செய்த மையைத் தடவினால் எழுத்துகள் தெளிவாகத் தெரியும்.
- இவ்வாறு தடவும் மையானது சுவடியில் இருக்கும் எழுத்துகளை விளக்கமாகக் காட்டும்.
- கண்ணுக்குக் குளிர்ச்சியாகவும் இருக்கும்.
- இதனாலேயே அக்ஷராப்பியாசத்தை (எழுத்து அறிவித்தலை) மையாடல் விழா என்றனர்.

www.kalvikadal.in

**எழுத்து அறிவித்தல் :**

- மாணக்கர்கள் முதலில் மணலில் எழுதிப் பழகுவர்.
- ஆசிரியர் முதலில் தரையில் எழுத அதன் மேல் மாணாக்கர்கள் எழுதுவர். பிறகு தாமே எழுதுவர்.
- இதனால் மாணக்கர்களுடைய எழுத்துகள் வரிசையாகவும் நன்றாகவும் அமைந்திருந்தன.

**4. பண்டையக் கல்வி முறையில் ‘மனனம்’ என்பது எளிதான ஒன்றாக இருக்கக் காரணம் என்ன என்பதை விளக்குக.**

- பண்டைய மாணாக்கருக்கு அடிப்படை நூல்களெல்லாம் மனனமாக இருக்கும்.
- தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதிநூல்கள் முதலியன பாடமாகும்.
- கணிதத்தில், கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று போன்ற பலவகை வாய்பாடுகள் இருக்கும்.
- ‘தலைகீழ்ப்பாடம்’ என்ற முறையும் உண்டு.
- அகராதி வரிசையில் படிப்பதால் அவை மாணாக்கரின் நினைவை விட்டு அகல்வதில்லை. சான்று : ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன்.
- அந்தாதி முறை, எதுகை மோனை முறையும் ‘மனனம்’ செய்ய எளிய முறை.
- பாடங்களைச் சிந்தித்து வருதல், ஒன்றாகச் சேர்ந்து கேள்விகள் கேட்டு விடை கூறுதல் இவையும் ‘மனனம்’ செய்ய எளிய வழிமுறைகளாகும்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

5. **சுவடியை உருவாக்கும் முறையை விவரி.**

- ஓலையை வாரி ஒழுங்காக நறுக்கித் துளையிட்டுக் கயிறு கோத்து ஒரு துளை அல்லது இரண்டு துளையிடுவர்.
- மேல் சட்டமாகப் பனைமட்டையின் காம்பை நறுக்கிக் கோர்ப்பர். மரத்தால் சட்டம் செய்வதும் உண்டு. செப்புத்தகட்டாலும் சட்டம் செய்வர்.
- சட்டங்களின் மேல் வர்ணமையினாற் பல வகையான சித்திரங்களை வரைந்து வைப்பர்.
- இரட்டைத் துளையுள்ள ஏடுகளில், ஒரு துளையினைச் செப்புக் கம்பி அல்லது மூங்கில் குச்சியைச் செருகிக் கட்டுவர். இதனை 'நாராசம்' என்று அழைப்பர்.
- சுவடியைக் கோர்க்கும் கயிற்றின் ஒரு தலைப்பில் தடையாக, பனையோலையை ஈர்க்கோடு கிளிமூக்குப் போலக் கத்தரித்து அமைப்பது பார்ப்பதற்கு கிளிமூக்கு போன்று இருக்கும். சுவடியைக் கோர்க்கும் கயிற்றின் அமைப்பு 'கிளிமூக்கு' என்றழைக்கப்படும்.

6. **பண்டைய மாணவர்களுக்குக் கற்பித்த பாடங்களாகக் கதைப்பாடல் உணர்த்துபவை எனப் பேராசிரியர் அ.கா.பெருமாள் குறிப்பிடுபவை யாவை?**

**கதைப்பாடல் உணர்த்தும் நூற்கள் :**

- ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி கற்பிக்கப்பட்டது.
- நிகண்டுகளை மனப்பாடம் செய்பவனுக்கு மதிப்பு அதிகமாக இருந்தது.
- வியாபாரம் செய்வதற்கும் கோவிலில் பணி செய்வதற்கும் ஏற்ற முறையில் அமைந்த கணித முறை பாடங்கள் கற்பிக்கப்பட்டன.
- கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று, நெல் இலக்கம் முதலிய வாய்பாடுகள் கட்டாயம் மனனம் செய்யும்படிக் கற்பிக்கப்பட்டது.
- 'பிரபவாதி சுவடி' என்ற புத்தகம் மனனம் செய்வதற்கென இருந்துள்ளது.

www.kalvikadal.in

## கற்பவை கற்றபின்

பக்கம்: 85

1. **பண்டைக்காலப் பள்ளிக்கூடங்களில் பின்பற்றப்பட்ட குறிப்பிடத்தக்க நடைமுறைகளில், தற்காலத்தில் மேற்கொள்ளத்தக்கவை குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

மாணவன் : வணக்கம் ஐயா! அக்காலத்தில் கையெழுத்து எப்படி இருந்தது ஐயா?

ஆசிரியர் : வணக்கம். எழுத்துகள் ஒன்றோடொன்று வரி கோணல் இல்லாமல் பழைய காலத்தில் எழுதி வந்தார்கள். நாமும் அவ்வாறே எழுத வேண்டும். புள்ளி, கால், கொம்பு முதலிய வரி எழுத்தின் உறுப்புகளை அன்றைய பெரியோர்கள் பழக்கினார்கள். நாம் இன்றைய பெரியோர்களிடமிருந்து அவற்றைப் பழக்கிக் கொள்ள வேண்டும். தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை முதலானவற்றை மனனம் செய்தார்கள். கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று, நெல் இலக்கம் முதலிய வாய்பாடுகளை கட்டாயம் மனப்பாடம் செய்தார்கள்.

மாணவன் : அப்படியா ஐயா! வேறு ஏதேனும் செய்தார்களா ஐயா?

ஆசிரியர் : ஆசிரியர் ஒவ்வொரு நாளும் மாணவர்களைத் தான் எழுதிய ஏடுகளின் எழுத்துகளின் மேலேயே எழுதி வரச் செய்தார்கள். இதுபோன்ற செயல்பாடுகளை நீயும் மேற்கொண்டால் சிறப்பாக இருக்கும்.

மாணவன் : நன்றி ஐயா! உறுதியாகச் செய்கிறேன் ஐயா!



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**2. 'மனனம் செய்தல்' - இன்றைய கல்வி நிலையிலும் குறிப்பிடத்தக்க ஒரு கூறு. இது பற்றிய பத்துக் கருத்துகளை முன் வைக்க.**

- திருக்குறள், சான்றோர் சிந்தனைகள், அறநூல் தொடர்கள் போன்றவற்றை மனனம் செய்தால் தான் அறிவை வெளிக்கொணர முடியும்.
- அன்று கவனச் சிதறல்கள் இல்லை. இன்று கவனச்சிதறல்களின் ஊடேதான் கல்வி. எனவே, மனனம் செய்வதே நல்லது.
- தேர்வு நேரங்களில் மனனப் பாடல்கள், சில கொள்கைகள் மனனம் செய்தாலொழிய நினைவுக்கு வராது.
- மனனம் என்பது மனதை ஒருமைப்படுத்தும் ஒரு தியானம். மனம் என்பது நீண்டநாள் மனதில் இருத்தி வைத்துக் கொள்ளும் ஒரு ஞாபக சக்தி. சான்றோர் அறிவுரை, முந்தைய நிகழ்வுகள் எல்லாம் மனனம் என்னும் வகையில்தான் அடங்கும்.
- ஒரு ஆராய்ச்சியின் தொடர்ச்சி என்பது நேற்று என்ன செய்தோம் நாளை என்ன செய்யப் போகிறோம் என்பதும் மனன சக்தியே.
- புரியாத ஒரு பகுதியை மனனம் செய்தோம் என்றால் விளங்கும் காலத்தில்தானே விளங்கும். மனனம் இல்லை என்றால் மூளையின் செயல்பாடு குறையும் என்பது ஆராய்ச்சி கருத்து.

எனவே, மனனத்தின்மீது கவனம் செலுத்துவது சிந்தனையாற்றலைச் சிறக்க வித்திடும்.

✹✹★★★✹✹

www.kalvikadal.in





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





இயல் 4

செய்யுள்

# இதில் வெற்றி பெற

– சுரதா

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **சுரதா நடத்திய கவிதை இதழ்**

அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன் **விடை: ஆ**

2. **"விண்வேறு ; விண்வெளியில் இயங்கு கின்ற வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு" – தொடர் தரும் முழுமையான பொருள்**

அ) விண்ணும் வெண்மதியும் வேறு வேறு
ஆ) விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு
இ) வெண்மதியும் முகிலும் வேறு வேறு
ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு

**விடை: ஈ**

### குறுவினா

www.kalvikadal.in

1. **வசனம், கவிதை வேறுபாடு தருக.**

**வசனம் :**

எதுகை, மோனை சேர்க்காமல், அடி என்ற அளவு இல்லாமல் எழுதுகின்ற வடிவம் வசனமாகும்.

**கவிதை :**

எதுகை, மோனை சேர்க்க வேண்டும். அடிக்கென்று எல்லை வைத்து எழுதப்படுவதே கவிதையாகும்.

### நெடுவினா

1. **கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.**

**கவிதை :**

- சொல்லைச் சிறந்த முறையில் தேர்வு செய்து எதுகை மோனை அமைத்து எழுத வேண்டும்.
- அடியளவு தெரிந்து கவிதை எழுத வேண்டும்.
- சொற்களை அதற்குரிய இடங்களில் பொருத்தி வைத்து கவிதையினை உருவாக்குதல் வேண்டும்.

**கவிதைக்குரிய உறுப்புகள் :**

- எழுத்துகளைக் கொண்டு சிறந்த அசைகளை உருவாக்குதல் வேண்டும்.
- அசைகளைக் கொண்டு சீர்களை உருவாக்குதல் வேண்டும்.
- சீர்களை முறையாக உருவாக்கினோம் என்றால் இரண்டு சீர்களுக்கு இடையே தளைகள் உருவாகும். தளைகளை அந்தந்தந்த பாவுக்குரிய முறைப்படி அமைத்தால் கவிதையில் பிழைகள் தோன்றாது. தளைகள் ஒன்றாகச் சேர்ந்தால் அடிகள் உருவாகும்.







Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





- அடிகளை ஒன்றன் கீழ் ஒன்றாக அடுக்கி வைத்தோம் என்றால் தொடைகள் தோன்றும்.
- அதிக அளவில் சிறந்த தொடைகள் அமைந்து கவிதை வரிகள் இருந்தால் அது சிறந்த கவிதையாக இருக்கும்.

**சிறந்த கவிதை :**

- கவிதைக்குரிய உறுப்புகளை வைத்துக் கவிதை எழுதும் போது, கவிதையின் உறுப்பாகிய சீர்களில் மாச்சீர், விளச்சீர் வரும்படி எழுதினால் பாடல்களிலும் தேமா, புளிமா காய்க்கும்.
- தவறாக சீர்கள் அமைந்தால் பாடல் தவறாக மாறிவரும்.
- செடியில் பூத்தப் பூவில் உள்ள தேனைக் குடிக்க வண்டுகள் தேடி வருவது போல, சிறப்புடன் எழுதிய புலவரின் பாடல் வரிகளில் எப்போதும் புகழ் தங்கும்.
- இவைகளை அறிந்து கொண்டு கவிதை எழுத வேண்டுமென்று கவிஞர் சுரதா கூறுகிறார்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **மக்கள் பேசும் எளிய சொற்கள் தொடர்களாக அமைவது**
   அ) கவிதை  ஆ) கொச்சைச் சொற்கள்  இ) பாட்டு  ஈ) உரைநடை  **விடை: ஈ**
2. **சிறந்த படைப்புகள் உருவாக பெரும் துணையாக இருப்பது**
   அ) கவிதை  ஆ) கட்டுரை  இ) கல்வி  ஈ) பள்ளிக்கூடம்  **விடை: இ**

www.kalvikadal.in

3. **அடியின் கீழே அடியிருந்தால் வருவது**
   அ) சீர்  ஆ) அசை  இ) தளை  ஈ) தொடை  **விடை: ஈ**
4. **இரண்டுசீரின் இடைவெளியில் வருவது**
   அ) தளை  ஆ) அசை  இ) எதுகை  ஈ) மோனை  **விடை: அ**
5. **எதுகை, மோனை இல்லாமல் அடியளவு அறிந்திடாமல் வருவது**
   அ) உரைநடை  ஆ) செய்யுள்  இ) தளை  ஈ) தொடை  **விடை: அ**
6. **வெள்ளைப்பாட்டின் இறுதிச்சீர் தருவது**
   அ) நாள்  ஆ) காசு  இ) மோனை  ஈ) இயைபு  **விடை: ஆ**
7. **முன்னோர் போல் கற்று வந்தால் உள்ளத்தில் விளைவது**
   அ) அருள், அறம்  ஆ) அறம், மறம்
   இ) அறம், பொருள்  ஈ) பொருள், இன்பம்  **விடை: இ**
8. **சுரதாவின் இயற்பெயர்**
   அ) கோபால்  ஆ) இராசகோபால்
   இ) துரைகோபாலன்  ஈ) இராசகோபாலன்  **விடை: ஈ**
9. **கூற்று 1 : பழுத்திருந்தால் சாறு வரும் ; வயலில் தண்ணீர் பாய்ந்திருந்தால் ஏர் வரும்.**
   **கூற்று 2 : அடியின் கீழ் அடியிருந்தால் தொடை வரும்.**
   அ) கூற்று இரண்டும் தவறு  ஆ) கூற்று இரண்டும் சரி
   இ) கூற்று 1 சரி 2 தவறு  ஈ) கூற்று 1 தவறு 2 சரி  **விடை: ஆ**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

10. **கூற்று : எதுகை மோனை சேர்க்காமல், அடியளவை அறிந்திடாமல் வார்க்கின்ற வடிவந்தான் வசனம்.**
**காரணம் : எளிய மக்கள் பேசும் எளிய சொற்கள் தொடர்களாக அமைவதே உரைநடை.**
அ) கூற்று சரி காரணம் தவறு ஆ) கூற்று தவறு காரணம் சரி
இ) கூற்று சரி காரணம் சரி ஈ) கூற்று தவறு காரணம் தவறு **விடை: இ**

11. **கூற்று 1 : எழுத்தெண்ணி முன்னோர் போல் கற்றுவந்தால் அறம் பொருள் உள்ளத்தில் விளையும்.**
**கூற்று 2 : தேமாவும், புளிமாவும் மரத்தில் காய்க்கும் ; சீர்களிலும் அக்காய்கள் நன்கு காய்க்கும்.**
அ) கூற்று இரண்டும் சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று இரண்டும் தவறு **விடை: அ**

12. **சரியானதைத் தேர்க.**
அ) பூக்கும் வரை பூ என்போம்.
ஆ) ஆக்கிய பின் அரிசி என்றும்.
இ) யாப்பில் வந்தடங்கும் வார்த்தைகளே செய்யுள்.
ஈ) கவிநடையும் உரைநடையும் வேறுவேறு அல்ல. **விடை: இ**

13. **சரியானதைத் தேர்க.**
அ) சிறந்த கேள்வி எழுப்புவதால் படிப்பு வரும்
ஆ) நுணுக்கத்தோடே முன்னோர் போலக் கற்க வேண்டாம்.
இ) மொழியை அறியாமல் எழுதுவோரே புகழ் அடைவார்.
ஈ) வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு. **விடை: ஈ**

14. **பொருந்தாததைத் தேர்க.**
www.kalvikadal.in
அ) கண்வேறு ; கல்விக் கண் வேறு.
ஆ) புகழ் வேறு ; செல்வாக்கு வேறு.
இ) வெண்மதியும், செங்கதிரும் முகிலும் வேறுவேறல்ல.
ஈ) மண்வேறு மண்ணோடு கலந்திருக்கும் மணல் வேறு. **விடை: இ**

15. **பொருந்தாததைத் தேர்க.**

| | | | |
|---|---|---|---|
| அ) | பழம் | - | சாறு |
| ஆ) | தண்ணீர் | - | ஏர் |
| இ) | அடி | - | இரண்டுசீர் இடை |
| ஈ) | பா | - | தொடை நன்கு அமை |

**விடை : இ**

16. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | தொடைகள் | - | 1. அசைகள் |
| ஆ) | தளைகள் | - | 2. தொடைகள் |
| இ) | எழுத்துகள் | - | 3. பாக்கள் |
| ஈ) | அடியின் கீழ் அடிகள் | - | 4. சீரின் இடைவெளியில் |

அ) 3, 4, 1, 2 ஆ) 3, 1, 2, 4 இ) 3, 1, 4, 2 ஈ) 4, 3, 2, 1 **விடை: அ**

17. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | எரு | - | 1. ஆராய்ச்சி |
| ஆ) | கேள்வி | - | 2. குளிர் |
| இ) | அத்தி இரவு | - | 3. பயிர் |
| ஈ) | கற்றால் விளையும் | - | 4. அறம் பொருள் |

அ) 3, 2, 1, 4 ஆ) 3, 1, 2, 4 இ) 2, 4, 3, 1 ஈ) 4, 2, 1, 3 **விடை: ஆ**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

18. **இதில் வெற்றிபெற என்னும் சுரதாவின் பாடலில் இடம்பெற்றுள்ள பாவகை**
அ) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஆ) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
இ) கலிவிருத்தம் ஈ) நேரிசை ஆசிரியப்பா **[விடை: ஆ]**

19. **இதில் வெற்றிபெற என்னும் சுரதாவின் கவிதை இடம்பெற்றுள்ள காதைத் தொகுப்பு**
அ) தேன்மழை ஆ) துறைமுகம்
இ) அமுதும் தேனும் ஈ) மங்கையர்க்கரசி **[விடை: ஆ]**

20. **உவமைக்கவிஞர் என்று சிறப்பிக்கப்படுபவர்**
அ) சுரதா ஆ) வெ.ராமலிங்கனார் இ) அப்துல் ரகுமான் ஈ) மு.மேத்தா **[விடை: அ]**

21. **சுரதா நடத்திய இதழ்**
அ) காவியம் ஆ) தென்றல் இ) குயில் ஈ) எழுத்து **[விடை: அ]**

22. **சுரதா என்பதன் விரிவாக்கம்**
அ) சுப்புரத்தினதாசன் ஆ) சுதாரகுநாததாசன்
இ) சுப்பிரமணியரத்தினதாசன் ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

23. **இலக்கியம், விண்மீன், ஊர்வலம் போன்ற இலககிய ஏடுகளை நடத்தியவர்**
அ) சுரதா ஆ) அப்துல் ரகுமான் இ) கண்ணதாசன் ஈ) பாரதிதாசன் **[விடை: அ]**

24. **சுரதா பெற்றுள்ள விருதுகள்**
i) தமிழக அரசின் கலைமாமணி விருது
ii) பாரதிதாசன் விருது
iii) தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இராசராசன் விருது
அ) i), ii) சரி ஆ) ii), iii) சரி இ) iii) மட்டும் தவறு ஈ) மூன்றும் சரி **[விடை: ஈ]**

www.kalvikadal.in

25. **தேமாவும் புளிமாவும் மரத்தில் காய்க்கும்;**
**சீர்களிலும் அக்காய்கள் நன்கு காய்க்கும்; – என்று எழுதியவர்**
அ) சுரதா ஆ) அப்துல் ரகுமான் இ) கண்ணதாசன் ஈ) பாரதிதாசன் **[விடை: அ]**

26. **விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற**
**வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு – என்னும் அடிகளில் இடம்பெற்றுள்ள இலக்கிய நயம்**
அ) எதுகை ஆ) இயைபு
இ) அந்தாதி ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

27. **சுரதாவின் ‘காவியம்’ என்னும் இதழ்**
அ) முழுக்க முழுக்கக் கவிதைகளைக் கொண்டது.
ஆ) முழுக்க முழுக்க சிறுகதைகளைக் கொண்டது.
இ) குறும்புதினங்களின் தொகுப்பினைக் கொண்டது.
ஈ) இவற்றில் எதுவும் கொண்டதில்லை. **[விடை: அ]**

28. **தேன்மழை, துறைமுகம், மங்கையர்க்கரசி, அமுதும் தேனும் உள்ளிட்ட நூல்களைப் படைத்தவர்**
அ) சுரதா ஆ) அப்துல் ரகுமான் இ) வாணிதாசன் ஈ) மு.மேத்தா **[விடை: அ]**


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in







## குறுவினா

1. **புண் வேறு ; வீரர்களின் விழுப்புண் வேறு ;**
**புகழ் வேறு ; செல்வாக்கு வேறு ; காணும் - இப்பாடல் வரிகளில் அமைந்துள்ள நயங்களை எடுத்து எழுது.**

சீர் மோனை - புண்வேறு - புகழ்வேறு

இயைபு - 'வேறு' என்ற சொல் ஓசை நயத்துடன் சீர்களில் இடம் பெற்றுள்ளது.

2. **'இதில் வெற்றி பெற' என்ற சுரதாவின் கவிதையில் இடம் பெற்றுள்ள உவமை எடுத்து எழுதுக.**

'செடியில் பூத்த பூமீது வண்டுவந்து தங்கும்'.

3. **புண் வேறு, விழுப்புண் வேறு - விளக்குக.**

**புண் :**

உடலில் காயத்தால் ஏற்படுவது. இது இயல்பாகவோ, விபத்து மூலமாகவோ நோய் மூலமாகவோ ஏற்படலாம்.

**விழுப்புண் :**

விழுப்புண்ணும் உடலில் ஏற்படுவதுதான். ஆனால் இது வீரத்தினை வெளிப்படுத்தும் எதிரியுடன் போரிட்டு பெற்ற புண்ணைக் குறிக்கும்.

4. **கவிஞர் சுரதா நடத்திய இதழ்கள் யாவை?**

இலக்கியம், விண்மீன், ஊர்வலம், காவியம்.

5. **கவிஞர் சுரதா அவர்கள் பெற்றுள்ள விருதுகள் யாவை?**

- தமிழக அரசின் கலைமாமணி விருது.
- பாரதிதாசன் விருது.
- தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இராசராசன் விருது.

www.kalvikadal.in

6. **உரைநடை, கவிதை - வேறுபடுத்துக.**

- உரைநடை என்பது மக்கள் பேசும் எளிய சொற்கள் தொடர்களாக அமைவது.
- கவிதை என்பது அச்சொற்கள் எதுகை, மோனை, இயைபு, முரண், சந்தம் முதலிய யாப்பிலக்கண நெறிகளுக்கு உட்பட்டு அடைவது.

7. **அறம்பொருள்கள் உள்ளத்தில் விளைய என்ன செய்ய வேண்டும் என்கிறார் சுரதா?**

நுட்பமான எழுத்தை எண்ணி முன்னோர்கள் போன்று கற்று வரும் பட்சத்தில், அறம் பொருள்கள் உள்ளத்தில் விளையும் என்று சுரதா கூறுகிறார்.

8. **விண்வெளியில் இயங்குவனாகச் சுரதா கூறுவன யாவை?**

- வெண்மதி (வெண்ணிலவு)
- செங்கதிரோன் (சூரியன்)
- முகில் (மேகம்)

## சிறுவினா

1. **'வேறு' என்ற சொல்லைப் பயன்படுத்தி கவிஞர் கவிதை புனைத்துள்ள கவித்திறமையை விளக்குக.**

- வானம் வேறு, ஆனால் வானத்தில் இயக்கும் நிலவும், கதிரவனும் மேகமும் வேறு.
- மண் பலவகைப்படும். செம்மண், வண்டல்மண், கரிசல் மண் எனலாம். ஆனால், மண்ணில் சாய்ந்திருக்கும் மணல் என்பது வேறு.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

- பனித்துளியும் நீர்தான் உள்ளது. மழைத்துளியிலும் நீர்தான் ஆனால் இரண்டும் வெவ்வேறு.
- புண் என்றால் உடம்பில் ஏற்படும் காயம் தான், ஆனால் சாதாரணமாக வருவது புண் ; போரில் பெறுவது விழுப்புண்.
- புகழ் என்பதும் செல்வாக்கு என்பதும் எல்லோருக்கும் நம்மைத் தெரியும் என்றே கூறப்பட்டாலும், புகழ் என்பது கல்வி, நற்செயலால் வருவது, ஆனால் செல்வாக்கு என்பது பொருளால் வருவது.
- காணும் கண் ; கல்விக்கண் வேறு - பார்க்கும் கண்ணால் உலகைப் பார்த்துக் கொள்ளலாம். கல்விக் கண்ணால் அறியாமை அகன்று நாம் அகஒளியைப் பெறுகின்றோம்.
- இவ்வாறுதான் கவிதையும் உரைநடையும் எழுதப்படுவனவாக இருந்தாலும் இரண்டின் நடையழகும் வேறு வேறாகும்.

**2. பூக்கும் வரை அரும்பென்றும் பூத்த பின்பே**
**பூவென்றும் சொல்லுகின்றோம் அதுபோல் சொல்லைச்**
**சேர்க்கின்ற நேரத்தில், எதுகை மோனை**
**சேர்க்காமல் அடியளவை அறிந்திடாமல் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் :**

இப்பாடல் வரியானது கவிஞர் சுரதாவின் துறைமுகம் என்ற கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள “இதில் வெற்றிபெற” என்னும் பகுதியில் உள்ளது.

**பொருள் :**

பூக்கும் வரை அரும்பு பூத்தப்பின் பூ
தனியாக இருந்தால் சொல் முறையாகச் சேர்த்தால் கவிதை

www.kalvikadal.in

**விளக்கம் :**

மரத்தில் இருக்கும் பூவானது விரியாமல் இருக்கும் வரை மொட்டு என்றுதான் அழைக்கப்படும். அதுவே பூத்துவிட்டால் அதனைப் பூ என்று அழைப்போம் அதுபோன்றுதான் பரவலாக இருக்கும் எல்லா வார்த்தைகளையும் சரியான முறையில் எதுகை, மோனையுடன், அடியளவையும் அறுதியிட்டுச் சேர்த்தால் அதனைக் கவிதை என்போம். அதுவே எதுகை, மோனை இல்லாமல், அடிவரையரையின்றி வந்தால் அதனை உரைநடை என்போம் என்று கவிஞர் கூற வரும் இடத்தில் இப்பாடல் அடியினை எழுதியுள்ளார்.

**3. ‘வரும்’ என்ற வார்த்தையைப் பயன்படுத்திக் கவிஞர் சுரதா எழுதியுள்ளவை யாவை?**

- பழம் பழுத்திருந்தால் அதிலிருந்து சாறு வரும்; வயலில் தண்ணீர் பாய்ந்தால் உழவுத் தொழிலை மேற்கொள்ள ஏர்கள் வரும்.
- எழுத்துகள் ஒன்றோடு ஒன்றாக இணைந்து அசைகள் வரும்; செய்யுளில் இரண்டு சீர்களின் இடையிலே சரியான தளைகள் வரும்.
- தளைகள் முறையாக அமைந்து அடிகள் வரும்; அடிகளை வரிசையாக அடிக்கியிருந்தால் தொடைகள் வரும்.
- தொடைகள் சரியாக அமைந்து இருந்தால் முறையான கவிதை உருவாகும்.

**4. ‘தேமாவும் புளிமாவும் மரத்தில் காய்க்கும் ;**
**சீர்களிலும் அக்காய்கள் நன்கு காய்க்கும்’’ - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் :**

இப்பாடல் வரியானது கவிஞர் சுரதாவின் ‘துறைமுகம்’ என்று கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள “இதில் வெற்றிபெற’’ என்னும் பகுதியில் உள்ளது.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



**பொருள் :**

மாங்காயும், புளியங்காயையும் மரத்தில் காய்ப்பதாகும். அதைப் போன்று செய்யுளிள் முறையாக சீர்கள் அமைக்கப்பட்டால் அச்சீர்களிலும் இவை தோன்றும்.

**விளக்கம் :**

மாமரத்திலும், புளியமரத்திலும் முறையான பருவநிலைகள் நிலவி எவ்விதமான நோய்த்தாக்குதலும் இல்லாமல் இருந்தால் மிகுதியாக மாங்காயும், புளியங்காயும் மரத்திலே காய்த்துக் கிடக்கும். அதுபோலவே, எழுத்துகளைக் கொண்டு சீர்கள் அமைக்கும் போது முறையான எழுத்துகள் எல்லாம் ஒன்று சேர்ந்து சிறப்பான சீர்கள் அமைந்தால் அந்தச் சீர்களுக்கு இடையே இந்தத் தேமா, புளிமா என்ற அசை வாய்ப்பாடு நன்றாகக் காய்க்கும்.

**5. கவிஞர் சுரதா ஒரு சிறந்த சொல்லேர் உழவர் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக ‘இதில் வெற்றிபெற’ என்ற கவிதையில் ‘விளையும்’ என்ற வார்த்தையைப் பயன்படுத்திக் கவிபுனைந்த திறமையை விளக்குக.**

- எருவைப் பயன்படுத்தினால் பயிர் நன்றாக விளையும் ;
- சிறந்த கேள்விகள் எழுப்புவதால் ஆராய்ச்சிகள் புதிது புதிதாக விளையும் ;
- மாலை நேரத்திலும், இரவிலும் நன்றாக குளிர்விளையும் ;
- மிகவும் நுட்பமாக எழுத்துகளை எண்ணி, சிறந்த பொருள்களைப் புரிந்து நம் முன்னோர்கள் கற்று வந்தது போல கற்று வந்தோம் என்றால், நம் உள்ளத்தில் அறம், பொருள் விளையும் ;
- மதிக்கத்தகுந்த அறிவினால் ஒருவனுக்கு புகழ் விளையும்.

**6. கவிஞர் சுரதா பற்றிக் குறிப்பு வரைக.**

www.kalvikadal.in

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | இராசகோபாலன். |
| சிறப்புப் பெயர் | : | பாரதிதாசன் மீது கொண்ட பற்றுதலால் சுப்புரத்தினதாசன் என மாற்றிக் கொண்டார். பிறகு சுரதா என்று மாற்றிக் கொண்டார். |
| இலக்கியப் பணி | : | இலக்கியம், விண்மீன், ஊர்வலம், போன்ற இலக்கிய ஏடுகளையும் நடத்தியவர். தேன்மழை, துறைமுகம், மங்கையர்க்கரசி, அமுதும் தேனும் உள்ளிட்ட பல நூல்களைப் படைத்துள்ளார். |
| விருதுகள் | : | தமிழக அரசின் கலைமாமணி விருது, பாரதிதாசன் விருது, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இராசராசன் விருது. |

**7. கவிஞர் சுரதா சிறந்த உவமைக் கவிஞர் என்பதற்கு உன் பாடப்பகுதியைக் கொண்டு விளக்குக.**

- மரத்திலே ஆங்காங்கே பூக்கள் மொட்டுகளாக இருக்கும். அவைப் பூத்துவிட்டால் பூ என்று பெயர் பெற்று எல்லோரும் அறியும் விதத்திலும் பயன்தரும் விதத்திலும் அமையும்.
- அதுபோல தமிழ்மொழியின் பல்லாயிரக்கணக்கான சொற்கள் நிரம்பி இருந்தாலும் அவை முறையாக வைக்கப்பட்டால், எதுகை, மோனையோடு அடிவரையரையுடன் இருந்தால் கவிதையாகும். அவ்வாறு இல்லையெனில் உரைநடையாகும் என்னும் வரிகளில் உவமையைப் பயன்படுத்தியுள்ளார்.
- செடியில் பூத்த பூ மீது வண்டு வந்து தங்கும் என்பதனையும் உவமைப்படுத்தியுள்ளார். பூ பூத்து மணம் பரப்பி தன்னுடைய இருப்பை உலகிற்குச் சொல்லி வண்டுகளை அழைத்து தன் இருப்பை அடுத்தவர்களுக்கு அறியச் செய்கிறது.
- புலவர்கள் சிறப்பாகப் பாடல்களை எழுதினார்கள் என்றால் அவர்களின் பாடல் மேல் புகழ்வந்து தங்கும் என்று கூறியுள்ளார்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





## கற்பவை கற்றபின்

பக்கம்: 87

1. **பேச்சு வழக்கில் பயன்படுத்துகின்ற உவமைச் சொற்களைத் தொகுக்க. இவை கருத்தை வெளிப்படுத்துவதற்கு எவ்வாறு பயன்படுகின்றன என்பது குறித்துக் குழுவாக உரையாடுக.**

**பாலு** : ஓடறவனுக்கு ஒம்பதாம் இடத்தில் சுக்கிரன்னு சொல்கிறார்களே அதன் அர்த்தம் என்ன?

**வேலு** : ஓடறவன்னா, ஓய்வில்லாமல் உழைக்கிறவன். ஒன்பதாம் இடத்தில் சுக்கிரன்னா – சுக்கிரதிசை என்பது மக்களுக்குச் செல்வத்தை அள்ளிக் கொடுப்பான் என்று சொல்வார்கள்.

**பாலு** : நல்ல விளக்கம் இது. இன்னும் ஒரு சந்தேகம்?

**வேலு** : என்ன?

**பாலு** : காக்கா உக்கார பனம்பழம் விழுந்த கதை. இதன் பொருளென்ன?

**வேலு** : பனைமரத்தில் பனம்பழம் பழுத்தவுடன் தானே விழும். ஆனால் காக்கா போய் பனை மரத்தில் உட்காரவும் அதனால் பனம்பழம் விழுந்ததாம் என்பது கருத்து. இதன் விளக்கம் குழந்தை ஒன்று மழையே மழையே வா என்று பாடியதும் மழை வந்துவிட்டதாம். மழை தானேதான் பொழியும் யாரும் வரவைக்க முடியாது.

**பாலு** : கடைசியாக, ஒரு விளக்கம் தேவைப்படுகிறது. சாண் ஏற முழம் சறுக்கும் என்பதன் விளக்கம் கூறு.

**வேலு** : வரவு இரண்டணா என்றால் செலவு ஒரு அணாவாக இருக்க வேண்டும். அது இயல்பான வாழ்க்கை. வரவு இரண்டணா என்றால் செலவு நாலணாவாக இருந்தால், அச்செய்கைதான் சாண் ஏறினால் முழம் சறுக்கும் என்பதாகும்.

www.kalvikadal.in

✹✹★★★✹✹





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

12

இயல் 4

செய்யுள்

# இடையீடு

– சி. மணி

4 இயல்

## பாடநூல் வினாக்கள்

### குறுவினா

1. **'இடையீடு' – எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?**

இடையீடு என்ற கவிதை, கவிஞரின் கவிதை சார்ந்த எண்ணம், அதனை வெளிப்படுத்தும் வண்ணம், எழுதப்பட்ட கவிதையை உள்வாங்கும் வாசகனின் மனநிலை போன்றவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது.

### சிறுவினா

1. **'மூன்றான காலம் போல் ஒன்று'' எவை? ஏன்? விளக்குக.**

மூன்றான காலம் போல் ஒன்று என்பது எண்ணம், வெளியீடு, கேட்டல்.

**எண்ணம் :**

நம் மனதில் உள்ளவையே எண்ணம்.

www.kalvikadal.in

**வெளியீடு :**

நம் மனதில் எண்ணியதை வெளியிடுவது வெளியீடு.

**கேட்டல் :**

- நாம் வெளியிட்டதை கருத்துவேறுபாடின்றி கேட்பது கேட்டல்.
- எண்ணம் மொழியாக உருவாக்கப்பட்டு வெளிப்படுத்தி கேட்கிறவர்கள் சொல்லுகின்ற கருத்துகளைப் புரிதல். இவற்றில் மாற்றமடையலாம்.
- எப்படி மூன்றுகாலமும் ஒரே நேரத்தில் கூற முடியாதோ அப்படியே இந்த மூன்றும் ஒன்றாக வருவதில்லை.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **கவிஞர் சி. மணியின் கவிதைகள் 1959-ஆம் ஆண்டு முதல் எந்த இதழில் வெளிவந்தது?**

அ) விளக்கு ஆ) எழுத்து
இ) நடை ஈ) ஒளிச்சேர்க்கை **விடை: ஆ**

2. **கவிஞர் சி. மணி நடத்தி வந்த சிற்றிதழ்**

அ) நடை ஆ) விளக்கு
இ) யாப்பும் கவிதையும் ஈ) ஒளிச்சேர்க்கை **விடை: அ**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





3. கவிஞர் சி. மணி வெளியிட்ட கவிதைத் தொகுப்பில் குறிப்பிடத்தக்கவை

அ) ஒளிச்சேர்க்கை ஆ) இதுவரை இ) நடை ஈ) எழுத்து **விடை: அ**

4. கவிஞர் சி. மணி மொழிப்பெயர்த்த சீன மெய்யியல் நூல்

அ) தாவோ ஜி ஜிங் ஆ) தாவோ லி ஜிங்

இ) தாவோதே ஜிங் ஈ) தாவோ ஸி ஜிங் **விடை: இ**

5. கவிஞர் சி. மணி புதுக்கவிதையில் எந்தச் சுவையை மிகுதியாகப் பயன்படுத்துவார்?

அ) உவகை ஆ) மருட்கை இ) இளிவரல் ஈ) அங்கதம் **விடை: ஈ**

6. கவிஞர் சி. மணி இருத்தலின் வெறுமையை எப்படிச் சொன்னவர்?

அ) அழுகையும் அங்கலாய்ப்பும் ஆ) நகையும் உவமையும்

இ) சிரிப்பும் கசப்பும் ஈ) பயமும் துக்கமும் **விடை: இ**

7. கூற்று 1 : குதிரை வரையக் குதிரை வராது ; கழுதையும் வரலாம் இரண்டும் கலக்கலாம்.

கூற்று 2 : கனியின் இனிமை கனியில் மட்டுமில்லை ; சுவைப்போன் பசியை, சுவை முடிச்சைச் சார்ந்தது.

அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று 1 தவறு 2 சரி

இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று இரண்டும் சரி **விடை: ஈ**

8. கூற்று 1 : சொல்ல விரும்பியதெல்லாம் எழுத்தில் வருவதில்லை.

கூற்று 2 : எலிக்குப் பொறிவைத்தால் விரலும் விழுவதுண்டு.

அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 தவறு 2 சரி

இ) கூற்று இரண்டும் தவறு ஈ) கூற்று இரண்டும் சரி **விடை: ஆ**

www.kalvikadal.in

9. கூற்று : கனியின் இனிமை கனியில் மட்டுமில்லை.

காரணம் : கனியை உண்போனின் பசியைப் பொறுத்ததே கனியின் சுவை.

அ) கூற்று சரி காரணம் சரி ஆ) கூற்று தவறு காரணம் சரி

இ) கூற்று சரி காரணம் தவறு ஈ) கூற்று தவறு காரணம் தவறு **விடை: அ**

10. சரியானதைத் தேர்க.

அ) குதிரை வரைய யானையும் வரலாம் இரண்டும் கலக்கலாம்.

ஆ) கனியின் இனிமை அதன் மறத்தால் அறியப்படும்.

இ) சொல்ல வந்தது சொல்லில் வந்தாலும் கேட்பதில் சிக்கல்.

ஈ) நீர்த்தேடி அலையும் போது நீர் கிடைக்கும். **விடை: இ**

11. சரியானதைத் தேர்க.

அ) கவிஞர் சி. மணி அவர்கள் புதுக்கவிதையின் அங்கதத்தை பயன்படுத்தவில்லை.

ஆ) இருத்தலின் வெறுமையைக் கவிஞர் சி மணி சிரிப்பும் கசப்புமாகச் சொன்னார்.

இ) கவிஞர் சி. மணியின் ஒளிச்சேர்க்கை கவிதைத் தொகுப்புக் குறிப்பிடத்தக்க ஒன்று.

ஈ) கற்பித்தல், கற்றல் இரண்டிற்குமிடையே இடையீடுகள் நகர்வதில்லை. **விடை: இ**

12. பொருத்தாதைத் தேர்க.

அ) கனியின் இனிமை சுவைப்போன் பசியை சுவை முடிச்சைச் சார்ந்தது.

ஆ) சொல்ல வந்தது சொல்லில் வந்தாலும், கேட்பதில் சிக்கல் உண்டு.

இ) நீர்தேடி அலையும் போது இளநீரும் கிடைக்கும்.

ஈ) எத்தனையோ ஏமாற்றங்கள் குறிதவறிய மாற்றங்கள் மனம் புழுங்கப் பலவுண்டு. **விடை: ஈ**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







13. **பொருந்தாததைத் தேர்க.**

அ) கவிஞர். சி.மணி, வே.மாலி, செல்வம் என்னும் புனைப்பெயர்களில் எழுதியுள்ளார்.

ஆ) கவிஞர். சி.மணி, ஆசான் கவிதை விருது பெற்றவர்.

இ) கவிஞர். சி.மணி, 'வரும்போகும்' என்னும் சிற்றிதழை நடத்திவந்தார்.

ஈ) கவிஞர். சி.மணி எழுத்து இதழில் எழுதியவர். **[விடை: இ]**

14. **பொருத்துக.**

| கவிஞர் சி. மணி படைப்புகள் | | கவிஞர் சி. மணியின் படைப்பு வகைகள் |
|---|---|---|
| அ) எழுத்து | - | 1. சிற்றிதழ் |
| ஆ) நடை | - | 2. இடையீடு |
| இ) வரும் போகும் | - | 3. கவிதைத் தொகுப்பு |
| ஈ) இதுவரை | - | 4. இதழ் |

அ) 4, 2, 1, 3 ஆ) 4, 3, 2, 1 இ) 4, 2, 3, 1 ஈ) 4, 1, 3, 2 **[விடை: ஈ]**

15. **சி. மணியின் (சி பழனிச்சாமி) இடையீடு என்னும் கவிதை ................ தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.**

அ) யாப்பும் கவிதையும் ஆ) வரும் போகும்

இ) ஒளிச்சேர்க்கை ஈ) இதுவரை **[விடை: ஈ]**

16. **சி. மணியின் கவிதைகள் எழுத்து என்னும் இதழில் வெளிவரத் தொடங்கிய ஆண்டு**

அ) 1953 ஆ) 1956 இ) 1959 ஈ) 1962 **[விடை: ஈ]**

17. **சி. மணி படைத்த இலக்கணம் பற்றிய நூல்**

அ) யாப்பும் கவிதையும் ஆ) அணியும் கவிதையும்

இ) எழுத்தும் கவிதையும் ஈ) சொல்லும் கவிதையும் **[விடை: அ]**

www.kalvikadal.in

18. **'வரும் போகும்', 'ஒளிச்சேர்க்கை' என்னும் கவிதைத் தொகுப்புகளின் ஆசிரியர்**

அ) வேணுகோபாலன் ஆ) இரா.மீனாட்சி

இ) சி.மணி ஈ) ஆத்மாநாம் **[விடை: இ]**

19. **சி. மணி, பேராசிரியராகப் பணியாற்றிய துறை**

அ) தமிழ் ஆ) ஆங்கிலம் இ) கணிதம் ஈ) இயற்பியல் **[விடை: ஆ]**

20. **'தாவோ தே ஜிங்' என்னும் சீன மெய்யியல் நூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர்**

அ) கவிமணி ஆ) சி. மணி இ) நாகூர் ரூமி ஈ) ஆத்மாநாம் **[விடை: ஆ]**

21. **வே. மாலி, செல்வம் என்ற புனைப்பெயர்களிலும் எழுதியவர்**

அ) சி. மணி ஆ) ஆத்மாநாம்

இ) நாகூர் ரூமி ஈ) ந. பிச்சமூர்த்தி **[விடை: அ]**

22. **எம்மூன்றும் எப்போதும் ஒன்றல்ல என்கிறார் சி. மணி?**

அ) எண்ணம், வெளியீடு, கேட்டல் ஆ) பார்த்தல், கேட்டல், இரசித்தல்

இ) கேட்டல், பார்த்தல், கவனித்தல் ஈ) உணர்தல், நினைத்தல், செய்தல் **[விடை: அ]**

23. **சொல்ல விரும்பியதெல்லாம்**
**சொல்லில் வருவதில்லை - என்று எழுதியவர்**

அ) ஆத்மாநாம் ஆ) நாகூர் ரூமி இ) சி. மணி ஈ) கவிமணி **[விடை: இ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





## குறுவினா

1. **கல்வி எவற்றையெல்லாம் நமக்கு வழங்குகிறது?**
   - சாதிக்கும் திறனையும் சறுக்கல்களில் நம்பிக்கையையும் தருகிறது.
   - நமக்குத் துணை நின்று காக்கும் அறிவையும் வழங்குகிறது கல்வி.

2. **கற்பித்தல், கற்றல் இரண்டிற்கும் இடையே நிகழும் விளைவுகள் என்ன?**
   - கற்பித்தல், கற்றல் இரண்டிற்குமிடையே இடையீடுகள் நேர்வதும் உண்டு.
   - எதிர்பாராத நல்ல விளைவுகளும் கிடைப்பதுண்டு.

3. **கனியின் சுவை எதைப் பொறுத்தது?**
   - கனியின் சுவை என்பது கனியைப் பொறுத்தது அல்ல.
   - மாறாக அதைச் சுவைப்பவரின் பசியையும், சுவையின் முடிச்சையும் சார்ந்ததாகும்.

4. **கவிஞர் சி. மணி பெற்றுள்ள விருதுகளைக் கூறுக.**
   - விளக்கு இலக்கிய விருது.
   - தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக விருது.
   - ஆசான் கவிதை விருது.
   - கவிஞர் சிற்பி விருது.

5. **'மனம்புழுங்கம் பலவுண்டு' என்று கவிஞர் சி. மணி எதனைக் குறிப்பிடுகிறார்?**
   கணக்கிலடங்கா மாற்றங்களும் இலக்கைத் தவறிய ஏமாற்றங்களும் மனம் வருந்த செய்வதற்கென்று பற்பலவும் இருப்பதாகச் சி. மணி குறிப்பிடுகிறார்.

www.kalvikadal.in

## சிறுவினா

1. **குதிரை வரையக் குதிரையே**
   **வராது ; கழுதையும் வரலாம்**
   **இரண்டும் கலக்கலாம் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

   **இடம் :**

   இப்பாடல் வரியானது சி.மணி அவர்களின் 'இதுவரை' என்ற கவிதைத் தொகுப்பில் உள்ள 'இடையீடு' என்ற கவிதையில் இடம்பெற்றுள்ளது.

   **பொருள் :**

   நாம் சொல்ல விரும்பிய எல்லாமே சொல்லில் வருவதில்லை. நாம் எண்ணும் எண்ணம் எல்லாவற்றையுமே சொல்லில் கொண்டு வர முடிவதில்லை.

   **விளக்கம் :**

   நாம் ஒன்றை நினைத்துப் பேச அது புரிந்து கொள்ளும் விதத்தில் வேறொன்றாகிவிடும் நிகழ்வுகள் பல நேரங்களில் நடைபெற்றிருக்கும். எவ்வாறெனில் ஓவியன் குதிரையை வரைய நினைத்து வரையும் போது அது பார்ப்பதற்குக் குதிரை போல இல்லாமல் கழுதைபோலக் காட்சியளிக்கலாம். பல நேரங்களில் இரண்டும் கலந்து கூட தோற்றமளிக்கலாம். அதுபோன்றுதான் நாம் எண்ணுகின்ற எண்ணம் வெளிவரும் போது புரிந்து கொள்ளும் விதத்தில் நம் எண்ணம் அப்படியே புரிந்து கொள்ளப்படலாம் அல்லது மாறுக்கருத்தையும் பெறலாம்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in



2. **"எலிக்குப் பொறிவைத்தால்**
**விரலும் விழுவதுண்டு**
**நீர்தேடி அலையும்போது**
**இளநீரும் கிடைக்கும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் :**

இப்பாடல் வரியானது சி.மணி அவர்களின் 'இதுவரை' என்ற கவிதைத் தொகுப்பில் உள்ள 'இடையீடு' என்ற கவிதையில் இடம்பெற்றுள்ளது.

**பொருள் :**

எலியைப் பிடிக்க பொறிவைத்தால் விரலும் மாட்டிக்கொள்ளும். தண்ணீர் தேடிய அலையும்பொழுது இளநீரும் கிடைக்கும்.

**விளக்கம் :**

ஒரு செயலைச் செய்கின்றபொழுது அச்செயலுக்கு மாற்றாக வேறு செயல் நடந்து நம்மைத் துன்புறுத்தலாம். நாம் சிறிய குறிக்கோளுடன் செல்லும்பொழுது எதிர்பாராத விதமாக பெரிய குறிக்கோளும் நடக்கலாம், மகிழ்ச்சியிலும் ஆழ்த்தலாம். ஆகவே, இடையீடுகள் எப்பொழுதும் நம்மிடம் வந்துபோகும்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 88

**இதழ்களில் வெளிவந்துள்ள கவிதைகளில் இரண்டினைத் திரட்டி, வகுப்பறையில் படித்துக் காட்டி, அவை கவிஞனின் மனநிலையை எவ்விதம் வெளிப்படுத்துகின்றன என்பதை விளக்கவும்.**

| | |
|---|---|
| **கர்ப்பிணித்தாய்**<br>**வேலைக்குச் சென்றாள்**<br>**கருவும் சுமந்தது சுமையை**<br>**கூலி இல்லாமல்.** | தலைவிதியால் தலைவி வயிற்றைக் கழுவ வேலைக்குச் செல்கிறாள். இது விதியின் செயல். பிறக்கும் முன்னே பேதை என்ன பாவம் செய்தது சுமை தாங்க?<br>வறுமையின் பிடியில் வாடும் உயிர்களைப் படம் பிடித்தது போல, சொல்லால் ஓவியம் தீட்டி மனதை மெழுகாய் உருக வைக்கிறது இக்கவிதை. |
| **ஏழையின் வீட்டினுள்**<br>**காய்கிறது நிலவு**<br>**கூரையும் இல்லை**<br>**குளிர்ச்சியுமில்லை.** | ஏழை பாவம் என்ன செய்வான். எண்சாண் உடம்பில் ஒருசாண் வயிற்றுக்கே பாடுபடுகிறான். ஒட்டிய வயிறும் கட்டிய மனைவியும் எட்டாத செல்வமும் இவனது உடைமைகள். எதிர்காலம் இவனுக்கு இருட்டு, நிகழ்காலம் என்னவோ வெறுமைதான். பகலில் பாடுபடும் இவனுக்கு ஓய்வெடுக்கும் இரவில் கூரைகூட இல்லை இவன் வீட்டில். |

✹✹★★★✹✹





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

இயல் 4
செய்யுள்

# புறநானூறு

- ஔவையார்



## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **"காவினெம் கலனே ; சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்**

அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி

இ) இசைக்கருவி ஈ) வேளாண்கருவி **விடை: இ**

### குறுவினா

1. **'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' - யார்க்கு?**
- கலைத்தொழில் செய்வோர்க்கு சோறு தட்டாது கிட்டும்.
- கலைத்தொழிலில் இருக்கும் வல்லவர்களுக்கு இவ்வுலகில் எத்திசையில் சென்றாலும் உணவு தவறாமல் கிடைக்கும்.

www.kalvikadal.in

### சிறுவினா

1. **வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.**

**திணை விளக்கம்:**

பாடாண் திணை என்பது பாடப்படும் ஆண் மகனின் புகழ், வலிமை, கொடை, அருள், கல்வி, ஒழுக்கம் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவதாகும்.

**சான்று விளக்கம்:**

- வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடலில், 'பரிசிலர்க்கு அடையா வாயிலோயே!' என்ற வரி இடம் பெற்றுள்ளது.
- அதாவது தன்னை நாடி வரும் பரிசிலர்க்கு வாயிலை அடைக்காத அரண்மனை அதியமான் நெடுமான் அஞ்சியின் அரண்மனை.
- தன்னை நாடிவரும் புலவர்கள் முதற்கொண்டு அனைவருக்கும் வாரிவழங்கும் நல்ல உள்ளம் கொண்டவன் அதியமான்நெடுமான் அஞ்சி.
- பரிசிலர் வரும்போது வாயிலை அடைக்காத குணம் உடையவன் என்றதால் அதியமான்நெடுமான் அஞ்சியின் கொடைத்தன்மை புலனாகிறது.

**பொருத்தம்:**

தன்னை நாடி வருவோர்க்கு இல்லை என்று சொல்லாது தனது அரண்மனை வாயிலை வாயிற்காவலனைக் கொண்டு அடைக்காமல் பரிசிலர்க்கு உரிய பரிசினைப் பெற எப்போதும் திறந்திடும் வாயிலை உடையது அதியமான் நெடுமான் அஞ்சியின் அரண்மனை என்று





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

கூறியதிலிருந்து அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத்தன்மை வெளிப்படுவதால் இப்பாடல் பாடாண்திணைக்கு உரியது என்பதை அறியலாம்.

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| வயங்குமொழி | - | வினைத்தொகை |
| அடையா | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| அறிவும் புகழும் | - | எண்ணும்மை |
| சிறாஅர் | - | இசைநிறை அளபெடை. |

## புணர்ச்சி விதி

1. **எத்திசை = எ + திசை**
   இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் என்ற விதிப்படி எத்திசை என்று புணர்ந்தது.

# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

1. **கற்றோரது 'செம்மாப்பு' என்பதில் 'செம்மாப்பு' – பொருள்**
   அ) பெருமை ஆ) புகழ் இ) இறுமாப்பு ஈ) வெற்றி **விடை: இ**
2. **புறநானூற்றுக்கு வழங்கும் வேறு பெயர்**
   அ) புறம், புறப்பாட்டு ஆ) புறம், புறப்பொருள்
   இ) நானூறு, புறப்பாட்டு ஈ) இவற்றில் எதுவுமில்லை **விடை: அ**
3. **'வயங்குமொழி வித்தித்தாம்' – 'வித்தி' என்பதன் பொருள்**
   அ) விதி ஆ) விதை இ) புத்தி ஈ) விதைத்து **விடை: ஈ**
4. **தாழும் நிலை வரினும் கலங்காதவர்**
   அ) கல்வி கற்றோர் ஆ) செல்வம் உடையவர்
   இ) ஞானம் பெற்றவர் ஈ) செல்வாக்கு உடையவர் **விடை: அ**
5. **ஔவையார் அகநானூற்றில் பாடியுள்ள பாடல்கள்**
   அ) 5 ஆ) 15 இ) 4 ஈ) 7 **விடை: இ**
6. **கூற்று 1 : இவ்வுலகில் அறிவும் புகழும் உடையோர் இன்னும் மாய்ந்துவிடவில்லை.**
   **கூற்று 2 : கலைத்தொழில் வல்லவர்களுக்கு எத்திசை சென்றாலும் உணவு தவறாமல் கிடைக்கும்.**
   அ) கூற்று இரண்டும் சரி ஆ) கூற்று இரண்டும் தவறு
   இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி **விடை: அ**
7. **கூற்று 1 : அதியமானிடம் நட்பு பாராட்டிய ஔவை அவருக்காகப் போர்க்களம் சென்றார்.**
   **கூற்று 2 : அதியமானின் அரசவைப் புலவராக இருந்தவர் ஔவையார்.**
   அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று இரண்டும் சரி
   இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி **விடை: ஈ**



www.kalvikadal.in
Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

**8. சரியானதைத் தேர்க.**

அ) எம் யாழினை எடுக்கவில்லை ; கருவிப்பையையும் எடுக்கவில்லை.

ஆ) கலைத்தொழில் வல்ல எங்களுக்கு எத்திசை சென்றாலும் ஒன்றும் கிடைப்பதில்லை.

இ) தச்சனின் பிள்ளைகள் காட்டுக்குச் சென்றால் வெட்ட மரம் கிடைக்காது.

ஈ) விரைந்து ஓடும் குதிரையைக் கொண்டவன் நெடுமான் அஞ்சி. **விடை: ஈ**

**9. சரியானதைத் தேர்க.**

அ) புறநானூற்றிற்குப் புறம், புறப்பாட்டு என்னும் பெயர்கள் உண்டு.

ஆ) புறநானூற்று பத்துப் பாட்டு நூல்களில் ஒன்று.

இ) அதியமானிடம் நட்பு பாராட்டும் குணம் இல்லாதவர் ஔவையார்.

ஈ) ஔவையார் பாடியதாக நற்றிணையில் 8 பாடல்கள் உள்ளன. **விடை: அ**

**10. பொருந்தியதைத் தேர்க.**

அ) அறிவும் புகழும் - வினைத்தொகை

ஆ) சிறாஅர் - இசைநிறையளபெடை

இ) வயங்குமொழி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

ஈ) அடையா - எண்ணும்மை **விடை: ஆ**

**11. பொருந்தாததைத் தேர்க.**

அ) தமிழரின் அகவாழ்வைப் பற்றி எடுத்துக் கூறுவது புறநானூறு.

ஆ) அதியமானிடம் நட்பு பாராட்டிய ஔவை அவருக்காகத் தூது சென்றவர்.

இ) ஔவையார் பாடியதாக புறநானூற்றில் 33 பாடல்கள் உள்ளன.

ஈ) புறநானூறு பாடிய ஔவையார் அதியமானிடம் இருந்து நெல்லிகனியைப் பெற்றவர். **விடை: அ**

www.kalvikadal.in

**12. புறநானூற்றில் பயின்று வரும் பா**

அ) நேரிசை ஆசிரியப்பா ஆ) குறள் வெண்பா

இ) சிந்தியல் வெண்பா ஈ) கலிவிருத்தம் **[விடை: அ]**

**13. பரிசில் துறை என்பது**

அ) பரிசு வேண்டி வாயிலில் நிற்பது

ஆ) மன்னன் பரிசளித்துப் புலவரைப் பாராட்டுவது

இ) பரிசு பெற்ற புலவன் மகிழ்ச்சியாக இல்லறம் திரும்புவது

ஈ) இவற்றில் எதுவுமில்லை. **[விடை: அ]**

**14. பொருத்திக் காட்டுக.**

அ) உரன் - 1. கோடரி

ஆ) கலன் - 2. கருவிகளை வைக்கும் பை

இ) கலப்பை - 3. யாழ்

ஈ) மழு - 4. வலிமை

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 4, 1, 2, 3 ஈ) 2, 1, 3, 4 **[விடை: அ]**

**15. பொருத்திக் காட்டுக.**

அ) பரிசிலர் - 1. காடு

ஆ) கல்வி - 2. மரங்கள்

இ) திசை - 3. சிறுவர்

ஈ) உணவு - 4. கோடரி

அ) 3, 4, 1, 2 ஆ) 3, 4, 2, 1 இ) 4, 3, 2, 1 ஈ) 4, 1, 2, 3 **[விடை: அ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



16. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | வயங்குமொழி | - | 1. எண்ணும்மை |
| ஆ) | அடையா | - | 2. இசைநிறை அளபெடை |
| இ) | அறிவும் புகழும் | - | 3. வினைத்தொகை |
| ஈ) | சிறாஅர் | - | 4. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |

அ) 3, 4, 1, 2 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 2, 4, 1 ஈ) 2, 1, 4, 3 **[விடை: அ]**

17. **'வாயிலோயே! வாயிலோயே!' என்னும் புறநானூற்றுப் பாடல் பாடப்பட்டதன் காரணம்**

அ) சிற்றரசனான அதியமான் நெடுமான் அஞ்சி பரிசில் தராமல் காலம் நீட்டித்தமையால் பாடியது.

ஆ) பேகன் இரவலர்க்கு இரங்காமையால் பாடியது.

இ) பாரி முல்லைத் தேர் கொடுத்தமையால் பாடியது.

ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

18. **'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்னும் சொல்லுக்குரிய புணர்ச்சி விதிக்கு பொருத்தமானச் சொல்**

அ) எத்திசை ஆ) உரனுடை இ) வலுந்தலை ஈ) மாய்ந்தென **[விடை: அ]**

19. **புறநானூறு .................... நூல்களுள் ஒன்று.**

அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு

இ) பதினெண்கீழ்க்கணக்கு ஈ) நீதி **[விடை: அ]**

20. **அதியமானிடம் நட்புப் பாராட்டியவர்**

அ) ஒதலாந்தையார் ஆ) ஔவையார் இ) கபிலர் ஈ) பரணர் **[விடை: ஆ]**

www.kalvikadal.in

21. **ஔவை யாருக்காகத் தூது சென்றார்?**

அ) அதியமானுக்காக ஆ) பேகனுக்காக

இ) பாரிக்காக ஈ) தொண்டைமானுக்காக **[விடை: அ]**

22. **ஔவையார் பாடிய பாடல்களில் நமக்குக் கிடைத்துள்ளவை**

அ) 22 ஆ) 36 இ) 59 ஈ) 65 **[விடை: இ]**

23. **ஔவையார் பாடிய பாடல்களின் எண்ணிக்கையும் நூல்களும் (பொருத்திக் காட்டுக).**

| | | | |
|---|---|---|---|
| அ) | அகநானூறு | - | 1) 7 |
| ஆ) | புறநானூறு | - | 2) 15 |
| இ) | குறுந்தொகை | - | 3) 04 |
| ஈ) | நற்றிணை | - | 4) 33 |

அ) 3, 4, 2, 1 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 1, 3, 4 ஈ) 4, 2, 1, 3 **[விடை: அ]**

24. **அதியமானின் அரசவைப் புலவர்**

அ) கபிலர் ஆ) பாணர்

இ) ஔவையார் ஈ) ஒக்கூர் மாசாத்தியார் **[விடை: இ]**

## குறுவினா

1. **புறநானூற்றுப் பாடல்களால் அறியப்படுபவை யாவை?**

தமிழரின் போர், வீரம், நாகரிகம், பண்பாடு, நெறிப்பட்ட வாழ்க்கை.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





2. **ஔவையார் பாடியதாக நமக்குக் கிடைத்துள்ள சங்க இலக்கிய பாடல்கள் எத்தனை?**
   - அகநானூற்றில் 4 பாடல்கள்.
   - குறுந்தொகையில் 15 பாடல்கள்.
   - நற்றிணையில் 7 பாடல்கள்.
   - புறநானூற்றில் 33 பாடல்கள் என மொத்தம் 59 பாடல்கள்.

3. **பாடாண் திணை என்றால் என்ன?**
   - பாடு + ஆண் + திணை - பாடாண் திணை
   - பாடப்படும் ஆண் மகனின் புகழ், வலிமை, கொடை, அருள். கல்வி, ஒழுக்கம் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவதாகும்.
   - ஆண் மகனது ஒழுகலாற்றைக் கூறுவது பாடாண்திணையின் நோக்கமாகும்.

4. **கல்வி கற்றோரின் சிறப்பு என்ன?**
   - கல்வி கற்றோர் எந்நிலையிலும் சிறந்தே இருப்பர்.
   - தாமும் எந்நிலை வந்தாலும் கலங்க மாட்டார்கள்.
   - அறிவால் உலகையே சொந்தமாக்கிக் கொள்வர்.
   - எங்கு சென்றாலும் மற்றவர் மதிப்பைப் பெறுவர்.

5. **கற்றவர்க்கு எங்கு சென்றாலும் உணவு கிடைக்கும் என்பதற்கு ஔவையார் கூறும் உவமை யாது?**
   - மரம் வெட்டும் தச்சர் பெற்ற சிறுவர்கள் தங்கள் மழுவோடு (கோடாரி) காட்டுக்குச் சென்றால் அவர்கள் வெட்டுவதற்கு மரம் கிடைக்காமல் போகுமா? என்பதே உவமை.
   - பரிசிலருக்குச் சிறுவரும், கல்விக்குக் கோடரியும், போகும் திசைக்குக் காடும், உணவிற்குக் காட்டில் உள்ள மரங்களும் உவமைகளாகும்.

www.kalvikadal.in

## சிறுவினா

1. **புறநானூறு - குறிப்பு வரைக.**
   - புறம் + நான்கு + நூறு
   - 400 பாடல்களைக் கொண்டது.
   - எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
   - இது புறப்பொருள் பற்றியது.
   - புறம், புறப்பாட்டு எனவும் அழைக்கப்படுகிறது.
   - தமிழரின் போர், வீரம், நாகரிகம், பண்பாடு, நெறிப்பட்ட வாழ்க்கை முதலியவற்றை விளக்கமாக எடுத்துரைக்கிறது.
   - சங்ககால மக்களின் வாழ்க்கையை அறிவதற்கு கருவூலமாகத் திகழ்கிறது.

2. **'அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,**
   **வறுத்தலை உலகமும் அன்றே ; அதனால்**
   **காவினெம் கலனே ; சுருக்கினெம் கலப்பை' - இடஞ்சுட்டி பொருள் விளக்கம் தருக.**

   **இடம் :**

   இப்பாடல் அடிகளானது அதியமான் நெடுமான்அஞ்சி பரிசில் தராமல் நீட்டித்தபோது ஔவையார் பாடியதாகும். இது புறநானூற்றின் 206 ஆம் பாடலில் இடம் பெற்றுள்ளது.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



**பொருள் :**

இவ்வுலகில் அறிவும் புகழும் உடையவர்கள் இன்னும் மாய்ந்துவிடவில்லை. இந்த உலகமும் வெற்றிடமாகவில்லை.அதனால் எம் இசைக்கருவிகளைத் தோளில் சுமந்தோம். யாழ் முதலிய இசைக்கருவிகளையும் பைகளில் இட்டுக் கட்டிக் கொண்டோம்.

**விளக்கம் :**

அறிவு சார்ந்த கருத்துகளை எடுத்துக்கூறி அதியமான் நெடுமான் அஞ்சியிடம் பரிசு பெற சென்றார் ஔவையார். அதியமான் நெடுமான் அஞ்சி பரிசு தர காலம் தாழ்த்தியதால் கோபமடைந்த ஔவையார் அதியமான் நெடுமான்அஞ்சி மட்டும்தான் இந்த உலகில் இருக்கிறானா, இவ்வுலகில் அறிவும் புகழும் உடையவர்கள் இன்னும் மாய்ந்துவிடவில்லை. இந்த உலகமும் வெற்றிடமாகவில்லை உன் மன்னன் பரிசு தரவில்லை என்றால் என்ன ? கலைத்தொழிலில் வல்ல எங்களுக்கு எங்குச் சென்றாலும் உணவு கிடைக்கும். எனவே எங்கள் இசைக்கருவிகளைத் தோளில் எடுத்துவிட்டோம் இசைக்கருவிகளையும் பைகளில் இட்டுக்கட்டி விட்டோம் என்று கூறுமிடத்தில் இடம் பெற்றுள்ளது.

3. **'எத்திசை செல்லினும் அத்திசைச் சோறே' என்ற ஔவையாரின் செம்மாப்பு கருத்தின் உண்மையை ஆராய்க.**

- கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பாகும்.
- கற்றோரின் சொல்லைக் கேட்டு அவர்களுக்கு வாரி வாரி வழங்கினர் பண்டைய தமிழ் மன்னர்கள்.
- நல்ல கருத்துகளைக் கூறி அரசின் நிர்வாகத்தையும், அரசாட்சியின் நடைமுறையையும் சீர்ப்படுத்தும் பணியைக் கற்றறிந்த புலவர்கள் மேற்கொண்டனர்.
- அத்தகைய கற்றறிந்தோரை அரசர்கள் மிகவும் கௌரவித்துப் பரிசுகள் பலவும் வழங்கினர்.
- பரிசு தர காலதாமதம் ஆனதால் ஔவையார் வாயில் காவலனிடம் உன் அரசன் ஒருவனை மட்டுமே நம்பி இந்த உலகம் உள்ளது என்று அவன் நினைத்துள்ளானோ ?
- மரம் வெட்டும் தச்சனின் மகன் கோடரியுடன் காட்டிற்குச் சென்றால் அவர்கள் வெட்ட காட்டில் ஏதாவது ஒரு மரம் கிடைக்காமல் போய்விடுமா ?
- 'அதுபோலவே, கற்றவர்கள் எத்திசை செல்லினும் அத்திசையில் உணவு கிடைக்கும்.'
- கற்றவர்களுக்கு அவர்கள் செல்லும் இடங்களில் எல்லாம் புகழ் உண்டாகும்.
- கல்விக்கு அத்தகைய சிறப்புண்டு என்பதை அறிந்ததால் ஔவையார் செம்பாப்புடன் வாயிற்காவலனிடம் 'எத்திசை செல்லினும் அத்திசைச் சோறே என்று வாயிற்காவலனிடம் கூறினார்.

www.kalvikadal.in

4. **பாடாண் திணை சான்றுடன் விளக்குக.**

**திணை விளக்கம்:**

பாடு + ஆண் + திணை - பாடாண் திணை. பாடப்படும் ஆண் மகனின் புகழ், வலிமை, கொடை, அருள். கல்வி, ஒழுக்கம் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவதாகும். ஆண் மகனது ஒழுகலாற்றைக் கூறுவது பாடாண்திணையின் நோக்கமாகும்.

**சான்று:**

**வாயி லோயே! வாயி லோயே!**

**வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வத்தித் தாம் .....**

என்ற புறநானூற்றுப் பாடல் அடிகள்.

**பொருத்தம்:**

தன்னை நாடி வருவோர்க்கு இல்லை என்று சொல்லாது தனது அரண்மனை வாயிலை வாயிற்காவலனைக் கொண்டு அடைக்காமல் பரிசிலர்க்கு உரிய பரிசினைப் பெற எப்போதும்





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



திறந்திடும் வாயிலை உடையது அதியமான் நெடுமான் அஞ்சியின் அரண்மனை என்று கூறியதிலிருந்து அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத்தன்மை வெளிப்படுவதால் இப்பாடல் பாடாண்திணைக்கு உரியது என்பதை அறியலாம்.

5. **பரிசில் துறை சான்றுடன் விளக்குக.**

**துறை விளக்கம்:**

பரிசு வேண்டி வாயிலில் நிற்பது பரிசில் துறையாகும்.

**சான்று:**

**வாயி லோயே! வாயி லோயே!**

**வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வத்தித் தாம .....**

என்ற புறநானூற்றுப் பாடல் அடிகள்.

**பொருத்தம்:**

தன்னை நாடி வருவோர்க்கு இல்லை என்று சொல்லாது தனது அரண்மனை வாயிலை வாயிற்காவலனைக் கொண்டு அடைக்காமல் பரிசிலர்க்கு உரிய பரிசினைப் பெற எப்போதும் திறந்திடும் வாயிலை உடையது அதியமான் நெடுமான் அஞ்சியின் அரண்மனை என்று கூறியதிலிருந்து அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத்தன்மையை நோக்கி பரிசிலர் அரண்மனையின் வாயிலில் நிற்பது பரிசில் துறையாகும்.

6. **"பரிசிலிர்க்கு அடையா வாயிலோயே" என்று வாயிற்காவலனிடம் தன் வருத்தத்தைப் பதியவும் புலவரின் மனக்குமுறல்களை எடுத்தியம்புக.**

பரிசிலர்க்கு வாயிலை அடைக்காத காவலனே!

- விரைந்து ஓடும் குதிரையைக் கொண்ட நெடுமான் அஞ்சி, தன்னுடைய தகுதியை அறியானோ?
- இவ்வுலகில், அறிவும் புகழும் உடையோர் இன்னும் மாய்ந்துவிடவில்லை, இந்த உலகமும் வெற்றிடமாகிவிடவில்லை.
- ஆகவே, எம் யாழினை எடுத்துக் கொண்டோம்; கருவிப்பையையும் சுருக்கிட்டுக் கட்டிக் கொண்டோம்.
- மரம் வெட்டும் தச்சனின் தொழில் வல்ல பிள்ளைகள், கோடரியுடன் காட்டுக்குச் சென்றால் அவர்கள் வெட்டுவதற்கு ஏதாவது ஒரு மரம் கிடைக்காமலா போகும்?
- அதுபோல, கலைத்தொழில் வல்ல எங்களுக்கும் இவ்வுலகில் எத்திசையில் சென்றாலும் அத்திசையில் உணவு, தவறாமல் கிட்டும்.
- என்று தன் மனக்குமுறலை வாயிற்காப்பானிடம் புலவர் எடுத்துரைக்கிறார்.

**"அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென**
**வறுந்தலை உலகமும் அன்றே"**

## நெடுவினா

1. **அதியமான் நெடுமான் அஞ்சியின் பரிசு நீட்டித்தல் குணம் தவறு என்பதை ஔவையாரின் புறநானூற்றுப் பரிசில் துறை பாடல் எங்ஙனம் உணர்த்துகிறது ?**

- வாயில் காவலனே ! வாயில் காவலனே ! புலவர்களாகிய எங்களைப் போன்றவர்களின் வாழ்நிலையானது வள்ளல்களை அணுகி அவர்தம் செவிகளிலே உரைப்பதாகும்.
- அவர்களிடம் அறிவார்ந்த சொற்களைத் துணிச்சலுடன் விதைத்துத் தாம் எண்ணியதை முடிக்கும் வலிமையுடையது.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in



- வள்ளல்கள் பற்றித் தாங்கள் எழுதிய கவிதையின் சிறப்பை அறிந்து பரிசளிக்க வேண்டும் என நினைத்து வருந்துவர்.
- விரைந்து ஓடும் குதிரையைக் கொண்ட நெடுமான் அஞ்சி தன்னுடைய தகுதியை அறியாமல் இருக்கின்றான்.
- அவனை நம்பித்தான் இவ்வுலகில் வறுமை நிலையில் உள்ளோர் வாழ்கின்றனர் என்று நினைக்கின்றானோ ? காலம் நீட்டிப்பது சரியான முறையல்ல.
- பரிசிலர் அரண்மனை வருவதை விரும்பும் அதியாமன் நெடுமான் அஞ்சி பரிசு தர நீட்டிப்பது முறையாகாது.
- இவ்வுலகில் அறிவும் புகழும் உடையோர் இன்னும் அழிந்து போகவில்லை. இந்த உலகமும் வெற்றிடமாகி விடவில்லை.
- பரிசு தரக் காலம் நீட்டித்தான் என்றால், எங்களை அறிந்து பரிசு தருவதற்குப் பல பேர் உள்ளனர்.
- மரம் வெட்டும் தச்சனின் தொழில் வல்ல பிள்ளைகள் கோடரியுடன் காட்டுக்குச் சென்றால் அவர்கள் வெட்ட ஒரு மரம் கிடைக்கும்.
- அதியமான் நெடுமான்அஞ்சி பரிசு தர காலம் நீட்டித்தான் என்றால், நான் என் இசைக்கருவியைத் தோளில் சுமந்துக் கொண்டும், என் இசைக்கருவிகளைக் கருவிப்பைக்குள் சுருக்கிட்டுக் கொண் டும் புறப்படப் போகின்றேன்.
- கலைத்தொழில் புரியும் எங்களைப் போன்றோரைக் காத்து வைக்க நினைக்கும் எண்ணம் சரியானது அன்று. ஏனெனில் இவ்வுலகின் எத்திசைச் சென்றாலும் அத்திசையில் உணவு தவறாமல் கிடைக்கும் என்று உணர்த்துகிறார்.

www.kalvikadal.in

## கற்பவை கற்றபின்

பக்கம்: 90

**1. கல்வியின் சிறப்பை உணர்த்தும் திருக்குறள், நாலடியார் பாடல்களைத் திரட்டி வகுப்பறையில் உரையாடுக.**

i) **யாதானும் நாடாமால் ஊராமல் என்னொருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு.**

- யாதானும் நாடாமால் ................... கற்றவனுக்கு எல்லா நாடும் சொந்த நாடு, எல்லா ஊரும் சொந்த ஊர், அவ்வாறு இருக்க ஒருவன் சாகும்வரை ஏன் கல்வி கற்கக் கூடாது என்கிறார் வள்ளுவர்.
- சாகும் வரை கல்வியைத் தொடர்ந்து கற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்பது வள்ளுவனின் வற்புறுத்தல்.

ii) **ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து.**

- ஒரு பிறவியில் ஒருவன் கற்கின்ற கல்வியானது எழுகின்ற ஏழு பிறவியிலும் அவனுக்குப் பாதுகாப்பினைத் தரவல்லது.
- ஏழு பிறவியிலும் தொடர்ந்து வரவல்லது கல்வி ஒன்றேயாகும்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in



iii) **நாய்க்கால் சிறு விரல் போல் நன்கணியராயினும்**
**ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்**
**சேய்த்தானும் சென்று கொளல் வேண்டும் - செய் விளைக்கும்**
**வாய்க்கால் அனையர் தொடர்பு** - *நாலடியார்*

- நாலடியார் பாடலில், நாயின் கால் விரல்கள் நெருங்கி இருக்கும். அதுபோல நம்மை நெருங்கி இருப்பவர்கள் ஈயின் கால் அளவுகூட உதவமாட்டார்கள்.
- வாய்க்காலின் தூரத்திலிருந்து வரும் தண்ணீர் பயிர் விளைச்சலுக்கு உதவும். அதுபோல தூரத்திலிருந்து உதவி செய்யும் நல்லவர்களை நாம் நெருங்கிச் சென்று நட்பு கொள்ள வேண்டும் என்கிறது.

✹✹★★★✹✹



www.kalvikadal.in



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



இயல் 4 துணைப்பாடம்

# பாதுகாப்பாய் ஒரு பயணம்

## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

1. **‘சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு’ – இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை ?**

இந்தியாவிலேயே மிகுந்த சாலை விபத்துகள் நடக்கும் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. எனவே, சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு உருவாக்க நாம் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

**இருசக்கர வாகன விபத்தினைத் தவிர்க்க வேண்டும் :**

- பதினெட்டு வயது நிறைந்தவர்கள் மட்டுமே முறையான பயிற்சிப் பெற்று, ஓட்டுநர் உரிமம் பெற்று இரு சக்கர ஊர்தியை இயக்க வேண்டும்.
- தலைக்கவசம் அணிந்தே செல்ல வேண்டும்.
- இரண்டு பேருக்கு மேல் இரு சக்கர வாகனத்தில் செல்லக் கூடாது.
- கைபேசியை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும்.
- சாலையில் ஊர்தியைக் குறுக்கும் நெடுக்குமாக இயக்காமல் இருந்தல் வேண்டும்.
- காதணி கேட்பிகள் பயன்படுத்தி இரண்டுச் சக்கர வாகனங்களை இயக்கக் கூடாது.

www.kalvikadal.in

**வாகன ஓட்டிகளின் அலட்சியம் :**

அவசரம் என்ற ஆளுகைக்கு உட்பட்ட நாம் விபத்தில்லாத் தமிழ்நாடு உருவாக சில விழிப்புணர்வுகளைக் கட்டாயமாகக் கொடுத்தல் வேண்டும்.

**விபத்துகள் மிகுதியாக நடைபெறுவதற்கான காரணங்கள் :**

- வாகன ஓட்டுநர்கள் கவனக்குறைவு.
- பயிற்சியில்லாமல் வாகனம் ஓட்டுவது தவறு.
- தவறான தட்பவெப்பநிலையும், தட்ப வெப்பநிலைக்கு ஏற்ப வாகனம் ஓட்டும் பயிற்சி பெறுவது.
- இயந்திரக் கோளாறு, மிகுதியான ஆட்களை சரக்குகளை ஏற்றிச் செல்வது.
- தொடர் வண்டி இருப்புப்பாதைகளைக் கவனிக்காமல் கடப்பது.
- மது அருந்திவிட்டு ஊர்தி ஓட்டுவதால் நிறையவே விபத்துகள் நடக்கின்றன.

விபத்துகள் மிகுதியாக நடைபெறுவதற்கான காரணங்களை அறிந்து விபத்துகளைத் தவிர்க்க வேண்டும்.

**விபத்துகளைத் தவிர்க்க :**

- பள்ளி மாணவர்களிடம் சாலை விதிகள் மற்றும் விபத்துகளைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வுகளைக் கொடுத்தல் வேண்டும்.
- சாலையில் எவ்வாறு செல்ல வேண்டும் என்ற சாலை விதிமுறைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





- வேகமாகச் செல்லும் வண்டியின் பின்புறத்தைப் பிடித்துக் கொண்டு ஓடுவது, மிதிவண்டியில் ஓடுவது, தவறானது, முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.
- பேருந்தில் பயணம் செய்யும் போது எப்படிப் பயணிப்பது என்பதை அறிந்து அதன்படி நடப்பது.
- பாதுகாப்பாகப் பயணிக்க உதவுகின்ற உத்தரவுக் குறியீடுகள், எச்சரிக்கைக் குறியீடுகள், தகவல் குறியீடுகள் ஆகியவற்றை அறிந்து அதனைப் பின்பற்றிப் பயணித்தல் வேண்டும்.
- இவ்வாறு வாகனம் ஓட்டும் போது அலட்சியத்தைத் தவிர்த்து விபத்துகள் நடைபெறுவதற்கான காரணங்களை அறிந்து, இருசக்கர வாகனங்களை முறையாக உபயோகித்து சாலை விதிகளைப் பின்பற்றி, விபத்துகளைத் தவிர்த்து வந்தோம் என்றால், 'சாலை விபத்தில்லாத தமிழ்நாடு' உருவாகும்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **எத்தனை வயதிற்கு உட்பட்டவர்கள் வண்டி ஓட்ட அனுமதியில்லை?**
அ) 17 ஆ) 21 இ) 18 ஈ) 25 **விடை: இ**

2. **சராசரியாக நாளொன்றுக்கு எத்தனை விபத்துகள் நடப்பதாகக் குறிப்பிடப்படுகிறது?**
அ) 1312 ஆ) 1317 இ) 1315 ஈ) 1318 **விடை: ஆ**

3. **சராசரியாக நாளொன்றுக்கு நடக்கும் விபத்தில் உயிரிழப்போரின் எண்ணிக்கை**
அ) 413 ஆ) 613 இ) 418 ஈ) 618 **விடை: அ**

www.kalvikadal.in

4. **தமிழ்நாட்டில் நடைபெறும் விபத்துகளில் இருசக்கர ஊர்தியால் ஏற்படும் விபத்தின் விழுக்காடு**
அ) 38 ஆ) 33 இ) 37 ஈ) 35 **விடை: ஈ**

5. **சாலைப் போக்குவரத்து உதவிக்கு உரிய தொலைபேசி எண்**
அ) 108 ஆ) 101 இ) 103 ஈ) 109 **விடை: இ**

6. **உரிய வயது நிறைவடையாத குழந்தைகள் ஊர்திய இயக்கினாலோ விபத்தினை ஏற்படுத்தினாலோ அக்குழந்தைகளின் பெற்றோர்களுக்கு எத்தனை ஆண்டுகள் சிறை தண்டனை**
அ) 3 ஆ) 5 இ) 2 ஈ) 1 **விடை: அ**

7. **ஊர்திகளுக்கு உரிய காப்பீடு இல்லாமல் ஊர்தியை இயக்கினால் வசூலிக்கப்படும் தண்டத்தொகை**
அ) ₹ 2,000 ஆ) ₹ 3,000 இ) ₹ 450 ஈ) ₹ 800 **விடை: அ**

8. **மது குடித்துவிட்டு ஊர்தியை இயக்கினால் விதிக்கப்படும் தண்டத்தொகை**
அ) ₹ 1,000 ஆ) ₹ 10,000 இ) ₹ 5,000 ஈ) ₹ 2,000 **விடை: ஆ**

9. **கூற்று 1 : சாலைச் சந்திப்புகளில் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை.**
**கூற்று 2 : இதர சாலைப் பயனாளிகளை நண்பராக எண்ண வேண்டும்.**
அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று 1 சரி 2 தவறு
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று இரண்டும் சரி **விடை: ஈ**

10. **கூற்று 1 : சாலைப் போக்குவரத்து உதவிக்குத் தொலைபேசி எண் 109-ஐ தொடர்பு கொள்ளலாம்.**
**கூற்று 2 : எதிரில் வரும், கடந்து செல்ல முற்படும் ஊர்திகளுக்கு வழிவிட வேண்டும்.**
அ) கூற்று இரண்டும் சரி ஆ) கூற்று இரண்டும் தவறு
இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி **விடை: ஈ**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





11. **கூற்று : 18 வயது நிறைவடையாத குழந்தைகள் ஊர்தி இயக்குவது சட்டப்படித் தவறு.**
**காரணம் : இச்சட்டத்தை மீறி ஊர்தி இயக்கும் குழந்தைகளின் பெற்றோர்களுக்குத் தண்டனை வழங்குவதில்லை.**
அ) கூற்று சரி காரணம் சரி ஆ) கூற்று தவறு காரணம் சரி
இ) கூற்று சரி காரணம் தவறு ஈ) கூற்று தவறு காரணம் தவறு **விடை: இ**

12. **கூற்று 1 : சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன.**
**கூற்று 2 : சாலையின் வகைகள் மைல் கற்களின் விவரங்கள் பற்றித் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.**
அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று இரண்டும் சரி
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று 1 சரி 2 தவறு **விடை: ஆ**

13. **சரியானதைத் தேர்க.**
அ) சாலையில் உத்தரவு குறியீடுகள் இடம் பெறாது.
ஆ) சாலைச் சந்திப்புகளில் பாதுகாப்பற்ற அணுகுமுறை தேவை.
இ) சாலைப்போக்குவரத்து உதவிக்குத் தொலைபேசி எண் 103-ஐ தொடர்பு கொள்ளவும்.
ஈ) 18 வயது நிறைவடையாத குழந்தைகள் ஊர்தி இயக்கலாம். **விடை: இ**

14. **சரியானதைத் தேர்க.**
அ) காப்பீடு இல்லாமல் இயக்கினால் - ₹ 3,000 தண்டத்தொகை
ஆ) தலைகவசம் அணியாமல் பயணித்தால் - ₹ 2,000 தண்டத்தொகை
இ) மதுகுடித்துவிட்டு ஊர்தியை இயக்கினால் - ₹ 1,000 தண்டத்தொகை
ஈ) அபாயகரமான முறையில் வாகனம் இயக்கினால் - ₹ 5,000 தண்டத்தொகை **விடை: ஈ**

www.kalvikadal.in

15. **பொருந்தாததைத் தேர்க.**
அ) மது குடித்துவிட்டு ஊர்தியை இயக்கினால் ₹ 10,000 தண்டத்தொகை.
ஆ) காப்பீடு இல்லாமல் ஊர்தியை இயக்கினால் ₹ 2000 தண்டத்தொகை.
இ) ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஊர்தியை இயக்கினால் ₹ 500 தண்டத்தொகையோ அல்லது 6 மாதச் சிறைத் தண்டனையோ அல்லது இரண்டுமோ கிடைக்கும்.
ஈ) அபாயகரமான முறையில் ஊர்தியை ஓட்டினால் ₹ 5,000 தண்டத்தொகை. **விடை: இ**

16. **பொருந்தாததைத் தேர்க.**
அ) பாரிஸ் நகரில் 1909-ஆம் ஆண்டு ‘பன்னாட்டுச் சாலை அமைப்பு’ உருவாக்கப்பட்டது.
ஆ) இதர சாலைப் பயனணிகளை நண்பராக எண்ண வேண்டும்.
இ) சாலைச் சந்திப்புகளில் எவ்வித எச்சரிக்க அணுகுமுறையும் தேவையில்லை.
ஈ) மொழிவேறுபாடற்ற குறியீடுகள் எளிதில் மக்களுக்குப் புரியும். **விடை: இ**

17. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | மது குடித்துவிட்டு | - 1. | ₹ 1,000 |
| ஆ) | இருசக்கர வாகனத்தில் இரண்டு பேருக்கு மேல் பயணித்தால் | - 2. | ₹ 2,000 |
| இ) | ஓட்டுநர் உரிமம் இல்லாமல் | - 3. | ₹ 5,000 |
| ஈ) | தலைகவசம் அணியாமல் | - 4. | ₹ 10,000 |

அ) 4, 2, 3, 1 ஆ) 4, 3, 2, 1 இ) 4, 1, 2, 3 ஈ) 4, 1, 3, 2 **விடை: ஆ**

18. **உலகிலேயே அதிக சாலைப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது பெரிய நாடு**
அ) இந்தியா ஆ) சீனா இ) பாகிஸ்தான் ஈ) அமெரிக்கா **[விடை: அ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

19. **ஏறக்குறைய ............... இலட்சம் கி.மீ சாலைகள் நம் நாட்டில் உள்ளன.**
அ) 25 ஆ) 35 இ) 45 ஈ) 55 **[விடை: ஈ]**

20. **நம் நாட்டில் ............... கோடிக்கும் மேற்பட்ட ஊர்திகள் உள்ளன.**
அ) 11 ஆ) 21 இ) 31 ஈ) 51 **[விடை: ஆ]**

21. **நம் நாட்டில் ஓர் ஆண்டிற்கு ஏறக்குறைய ............... இலட்சம் விபத்துகள் நடக்கின்றன.**
அ) 1 ஆ) 10 இ) 5 ஈ) 20 **[விடை: இ]**

22. **நாளொன்றுக்கு நேரும் விபத்துகளில் உயிரிழப்போர்**
அ) மூன்றில் ஒரு பங்கினர் ஆ) நான்கில் ஒரு பங்கினர்
இ) ஐந்தில் ஒரு பங்கினர் ஈ) ஆறில் ஒரு பங்கினர் **[விடை: அ]**

23. **இந்தியாவில் அதிக சாலை விபத்துகள் நடக்கும் மாநிலம்**
அ) கேரளா ஆ) தமிழ்நாடு
இ) கர்நாடகா ஈ) மத்திய பிரதேசம் **[விடை: ஆ]**

24. **தமிழ்நாட்டில் நடைபெறும் மொத்த விபத்துக்களில் இருசக்கர ஊர்திகளால் ஏற்படும் விபத்துகள் ............... விழுக்காடு.**
அ) 15 ஆ) 25 இ) 35 ஈ) 55 **[விடை: இ]**

25. **பள்ளி மாணவர்கள் இருசக்கர வாகனம் ஓட்டுவது**
அ) சட்டப்படி சரியாகும் ஆ) சட்டப்படி குற்றமாகும்
இ) சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: ஆ]**

26. **முதல் பன்னாட்டுச் சாலை அமைப்பு மாநாடு நடைபெற்ற இடம், ஆண்டு**
அ) பாரிஸ், 1909 ஆ) ரியோடி ஜெனிரோ, 1908
இ) ஹாமில்டன், 1907 ஈ) டர்பன், 1915 **[விடை: அ]**

www.kalvikadal.in

27. **18 வயது நிறைவடையாத குழந்தைகள் ஊர்திகள் இயக்கினாலோ, விபத்தினை ஏற்படுத்தினாலோ அக்குழந்தைகளின் பெற்றோருக்கு 3 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கும் சட்டம்**
அ) மோட்டார் வாகனச் சட்டம், 1988 ஆ) மோட்டார் வாகனச் சட்டம் 1965
இ) மோட்டார் வாகனச் சட்டம், 2017 ஈ) மோட்டார் வாகனச் சட்டம், 2016 **[விடை: இ]**

28. **பொருத்திக் காட்டுக.**

| | | |
|---|---|---|
| அ) | அபாயகரமான முறையில் ஊர்தியை ஓட்டினால் தண்டனைத் தொகை | - 1. ₹ 10,000 |
| ஆ) | மது குடித்துவிட்டு ஊர்தியை இயக்கினால் தண்டனைத்தொகை | - 2. ₹ 5,000 |
| இ) | தலைக்கவசம் அணியாமல் இருசக்கர ஊர்தியை இயக்கினால் தண்டனைத் தொகை | - 3. ₹ 2, 000 |
| ஈ) | ஊர்திகளுக்குக் காப்பீடு இல்லாமல் இயக்கினால் தண்டனைத் தொகை | - 4. ₹ 1,000 |

அ) 2, 1, 4, 3 ஆ) 3, 4, 2, 1 இ) 4, 3, 2, 1 ஈ) 1, 2, 3, 4 **[விடை: அ]**

29. **சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள்**
i) உத்தரவுக் குறியீடுகள் ii) எச்சரிக்கைக் குறியீடுகள்
iii) பன்மையை உணர்த்தும் 'கள்' விகுதி சேர்ந்த சொற்களைப் பிரிக்காமல் எழுத வேண்டும்.
iv) தகவல் குறியீடுகள்
அ) i, ii சரி ஆ) ii, iii சரி இ) iii மட்டும் தவறு ஈ) மூன்றும் சரி **[விடை: ஈ]**

30. **ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஊர்தியை இயக்கினால் கிடைக்கும் தண்டனைகள்**
i) ரூ. 5, 000 ii) மூன்று மாதச் சிறைத்தண்டனை iii) அல்லது இரண்டும்
அ) i சரி ஆ) ii சரி இ) iii) மட்டும் தவறு ஈ) மூன்றும் சரி **[விடை: ஈ]**


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



12 4 இயல்

# கற்பவை கற்றபின்

பக்கம்: 95

1. சாலைப் பாதுகாப்பினை வலியுறுத்தும் முழக்கத் தொடர்கள் அடங்கிய பதாகைகள் சிலவற்றை உருவாக்கிப் பள்ளியில் காட்சிப்படுத்துக.

சாலை பாதுகாப்பில் கவனம்!
தள்ளிப் போவதோ மரணம்!!

தலைக்குக் கவசம் அணி
தலைமுறைக்கு அதையே பணி

இருபது மீட்டர் இடைவெளி!
இருந்தால் நீதான் அறிவாளி!!

ஓட்டும்போது வேண்டும் நிதானம்
வீட்டுக்கு வேண்டும் உன் வருமானம்!!

உன்னை நம்பி நாற்பது!
ஓட்ட வேண்டும் நாற்பதில்!!

2. எதிர்பாராத சூழலில் ஏற்படும் சாலை விபத்தையும், அவற்றைத் தடுக்கும் முறைகளையும் உள்ளடக்கிய நாடகம் ஒன்றை நடத்திக் காட்டுக.

**பங்குபெறுவோர் : ராமு, சோமு, பீமு.**

**ராமு** : எங்க அப்பாவிடம் கேட்டுத் தொந்தரவு பண்ணி வாங்கின இருசக்கர வாகனம் இதுடா!

**சோமு** : நல்லா இருக்குடா, பல்சரா?

**ராமு** : பல்சர்னா எனக்கு ரொம்ப பிடிக்கும்டா. சரி இன்றைக்கு மகாபலிபுரம் வரைக்கும் வண்டியில போய் வருவோமா?

**சோமு** : நான் தயார். ஆனா பீமு நீ வர்றியா?

**பீமு** : நானும் வர்றேன். ஆனால் ஒரு வேண்டுகோள்.

**ராமு** : என்னன்னு சொல்லு.

**பீமு** : மூவரும் வண்டியில் போகனும்னா, தலைக்கவசம் அணிந்து செல்ல வேண்டும்.

**ராமு** : மூன்று இருக்குடா. போகலாம் வா.

(மூவரும் செல்கின்றனர். எதிரே லாரி ஒன்று தடம் மாறி வேகமாக வருகிறது. எவ்வளவோ இருசக்கர வாகனத்தை வளைத்தும் முடியாமல் வண்டி கீழே விழுந்துவிட்டது. மூவருக்கும் காயம். மருத்துவமனை சென்று வீடு திரும்புதல்)

**பீமு** : தலைக்கவசம் அணிய சொன்னேன். அதனால்தான் தலையில் அடி படல.

**ராமு** : பீமு, நீ நல்லா சொன்னடா, நான் முதல்ல தலைக்கவசம் வேணான்னு நெனச்சேன். மூன்று பேரு உயிரையும் நீ காப்பித்திட்ட.

**சோமு** : ஆமாண்டா, பீமு நீ வற்புறுத்தலன்னா, தலைக்கவசம் அணிந்திருக்க மாட்டோம். வெறும் தலையோட போயிருப்போம். அதிகமாக அடி பட்டிருக்கும்.

**பீமு** : நான் காப்பத்தலடா, தலைக்கவசம் நம்மள காப்பாத்துச்சு.

**மூவரும்** : தலைக்குக் கவசம்! நம் உயிர் காக்கும் சுவாசம்!

செல்வத்துள் எல்லாம் தலை



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in





# இயல் 4 இலக்கணம்

# பா இயற்றப் பழகலாம்

## இலக்கணத் தேர்ச்சி கொள்

பக்கம்: 100

1. **வெண்பாவிற்கு ஏற்ப அடுத்த சீர் என்னவாக அமைக்கலாம்? பொருத்தமான சீரினைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.**

அ) அன்பே **தகளியாய்** (ஆர்வமாய் / தகளியாய்)

ஆ) வான்மழை **தூறலில்** (தூறலில் / பொழிந்திடின்)

இ) கண்ணிரண்டும் **இல்லார்** (இலாதார் / இல்லார்)

ஈ) வெண்ணிலவு **காய்கிறது** (காய்கிறது / ஒளிர்கிறது)

உ) வெய்யோன் **காய்ந்திட** (காய்ந்திட / ஒளிர்ந்திட)

2. **மூன்றாவது சீர் அமைத்து எழுதுக.**

அ) கல்வி கரையில **கற்பவர்**

ஆ) கல்லாரே ஆயினும் **கேட்க (கற்க)**

இ) நல்லவை செய்யின் **நலமே**

ஈ) அவமதிப்பும் ஆன்ற **பொருள்**

உ) உண்ணாது நோற்பார் **சான்றோர்**

www.kalvikadal.in

3. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ) | மாச்சீர் | - 1. கருவிளம், கூவிளம் |
| ஆ) | காய்ச்சீர் | - 2. நாள், மலர் |
| இ) | விளச்சீர் | - 3. தேமாங்காய், புளிமாங்காய் |
| ஈ) | ஓரசைச்சீர் | - 4. தேமா, புளிமா |

அ) 1, 2, 4, 3 ஆ) 4, 3, 1, 2 இ) 2, 3, 1, 4 ஈ) 3, 4, 2, 1 **விடை: ஆ**

4. **கீழுள்ள சொற்களை ஈற்றுச் சீராகக் கொண்டு குறள் வெண்பா / நேரிசை வெண்பா / இன்னிசை வெண்பா எழுத முயற்சி செய்யவும்.**

**கடல், வாள், மழை, தேன், மரம்.**

**கடல்** : அலையென எழுந்து ஒலி யெழுப்பி
ஆர்ப்பரிக்கும் பெருங் கடல்.

**வாள்** : ஒளிவீசிக் கூர்மையொரு எதிரியை வீழ்த்த
பளிச்சிடும் வேந்தன் வாள்.

**மழை** : வானின்று பொழிந்து மண்ணை வளமாக்கும்
தேன்சுவை அன்ன தமிழ்

**தேன்** : மணம்தரும் பூவில் சுவைதரும் இனிய
அமுத மெனும் தேன்.

**மரம்** : இயற்கைத் தாய் உவந்து அளித்த
மறக்க வெண்ணா மரம்.







Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

5. **வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?**
இயற்சீர் வெண்டளையும், வெண் சீர் வெண்டளையும் வெண்பாவிற்குரிய தளைகள் ஆகும்.

6. **ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?**
- வெண்பாவில் நான்கடிகளும் ஒரெதுகையும் பெற்று வருவது ஒரு விகற்பம் ஆகும்.
- வெண்பாவில் முதல் இரண்டடி ஒரெதுகையும், அடுத்த இரண்டடி ஒரெதுகையும் பெற்று வருவது பல விகற்பம் ஆகும்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **வெண்பா யாப்பு செல்வாக்குப் பெற்ற காலம்**
அ) சங்ககாலம் ஆ) சங்கம் மருவிய காலம்
இ) காப்பிய காலம் ஈ) ஐரோப்பியர் காலம் **[விடை: ஆ]**

2. **சங்கம் மருவிய காலத்தில் வலியுறுத்தப்பட்டது**
அ) அறம் ஆ) அரம் இ) மரம் ஈ) மறம் **[விடை: அ]**

3. **சொல்லுதலை அடிப்படையாகக் கொண்டு தோன்றியது**
அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) விருத்தப்பா **[விடை: அ]**

4. **வெண்பாவின் ஓசை**
அ) அகவலோசை ஆ) செப்பலோசை
இ) துள்ளலோசை ஈ) தூங்கலோசை **[விடை: ஆ]**

www.kalvikadal.in

5. **வெண்பா ................ அமைய வேண்டும் என்பது இன்றியமையாத விதி.**
அ) வெண்டளையால் ஆ) கலித்தளையால்
இ) ஒன்றிய வஞ்சித்தளையால் ஈ) ஒன்றா வஞ்சித்தளையால் **[விடை: அ]**

6. **வெண்டளை ................. வகைப்படும்.**
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து **[விடை: அ]**

7. **தளைத்தல் என்பதற்குப் பொருந்தாத பொருளைக் கண்டறி.**
அ) கட்டுதல் ஆ) பிணித்தல்
இ) பிரித்தல் ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: இ]**

8. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | நேர் நேர் | - | 1. புளிமா |
| ஆ) | நிரை நேர் | - | 2. தேமா |
| இ) | நிலை நிரை | - | 3. கூவிளம் |
| ஈ) | நேர் நிரை | - | 4. கருவிளம் |

அ) 2, 1, 4, 3 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 1, 3, 4 ஈ) 3, 1, 2, 4 **[விடை: அ]**

9. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | இரண்டடி வெண்பா | - | 1. கலிவெண்பா |
| ஆ) | மூன்றடி வெண்பா | - | 2. பஃறொடை வெண்பா |
| இ) | நான்கடி வெண்பா | - | 3. நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா |





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

ஈ) நான்கடி முதல் பன்னிரண்டடி வரை - 4. நேரிசை, இன்னிசை சிந்தியல் வெண்பா

உ) பதின்மூன்றடி முதல் அதற்கும் மேற்பட்ட அடிகள் வரை - 5. குறள் வெண்பா

அ) 5, 4, 3, 2, 1 ஆ) 4, 5, 2, 3, 1 இ) 3, 2, 1, 4, 5 ஈ) 2, 1, 3, 4, 5 **[விடை: அ]**

10. **வெண்பா ................ வகைப்படும்.**

அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு **[விடை: ஈ]**

11. **நேரிசை வெண்பாவில் ................ அடியில் தனிச்சீர் வரும்**

அ) முதலாம் ஆ) இரண்டாம் இ) மூன்றாம் ஈ) நான்காம் **[விடை: ஆ]**

12. **தனிச்சீரில்லாமல் .................. சீரோடு அமைக்கப்படுபவை இன்னிசை வெண்பா.**

அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து ஈ) ஆறு **[விடை: ஆ]**

## குறுவினா

1. **தளைத்தல் என்பதன் பொருள் யாது?**

தளைத்தல் என்பதற்குக் கட்டுதல், பிணித்தல் என்று பொருள்.

2. **ஈரசைச் சீர்களைக் குறிப்பிடுக.**

- மாச்சீர் – தேமா, புளிமா
- விளச்சீர் – கூவிளம், கருவிளம்.

3. **மூவசைச்சீர்களைக் குறிப்பிடுக.**

காய்ச்சீர் – தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய்.

www.kalvikadal.in

4. **வெண்பாவின் ஈற்றுச்சீர் எவ்வெவ் வாய்பாடுகளுள் ஒன்றைக் கொண்டு முடியும்?**

நாள், மலர், காசு, பிறப்பு.

5. **வெண்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- வெண்பா ஏழு வகைப்படும். அவை:
- 1. குறள் வெண்பா 2. நேரிசை வெண்பா 3. இன்னிசை வெண்பா 4. நேரிசைச் சிந்தியல் வெண்பா 5. இன்னிசைச் சிந்தியல் வெண்பா 6. பஃறொடை வெண்பா 7. கலிவெண்பா

6. **பஃறொடை வெண்பா, கலிவெண்பா – குறிப்பு வரைக.**

- நான்கடிச் சிற்றெல்லையாகவும் பன்னிரண்டடிப் பேரெல்லையாகவும் கொண்டது பஃறொடை வெண்பா ஆகும்.
- பதின்மூன்றடி முதல் அதற்கும் மேற்பட்ட அடிகள் வரை கொண்டது ‘கலிவெண்பா’ ஆகும்.

7. **வெண்பாவிற்கான இலக்கணத்தைக் கூறுக.**

- இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை பிறழாது வரும்.
- ஈற்றடி மூச்சீராகவும் ஏனைய அடி நாற்சீராகவும் வரும்.
- ஈரசைச்சீர்கள் மாச்சீரும் விளச்சீரும் மூவசைச்சீரில் காய்ச்சீரும் வரும்.
- செப்பலோசை பெற்று வரும்.
- இரண்டடி முதல் பன்னிரெண்டு அடி வரை வரும்.
- ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு ஆகிய வாய்பாடுகளுள் ஒன்றைக் கொண்டு முடியும்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

8. **இன்னிசை வெண்பா எவ்வாறு அமைக்கப்படும்?**
தனிச்சீரில்லாமல் நான்கு சீரோடு அமைக்கப்படுபவை இன்னிசை வெண்பா.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 100

1. **கீழ்க்காணும் ஈற்றடிகளைக் கொண்டு நேரிசை (அ) இன்னிசை வெண்பா எழுதுக.**

| அ) என்றும் விரும்பியே கல். | ஆ) ஒழுக்கம் உயர்வு தரும். |
|---|---|
| உலகில் உத்தமனாய் வாழ கல்வி<br>எத்திக்கும் உன் புகழை நாட்ட<br>ஏற்றமிகு கல்வியை கசடற கற்று<br>என்றும் விரும்பியே கல் | உயிரை விட மேலானது ஒழுக்கம்<br>தயிரை விட மென்மையானது ஒழுக்கம்<br>பழகும் முறை அறிந்து வாழ்ந்தால்<br>ஒழுக்கமே உயர்வு தரும். |
| **இ) இன்னல் விலகி விடும்.** | **ஈ) உழவின்றி உய்யா உலகு.** |
| அன்பினால் அறம் பல செய்து<br>பண்பினால் பல புகழ் எய்து<br>உண்மை யினால் உழைத்துநீ வாழ்ந்தால்<br>இன்னல் விலகி விடும். | கோலும் குடையும் மன்னனுக்கு அவசியம்<br>எழுதும் கோலுக்கு கூர்முனை அவசியம்<br>உழும் விவசாயிக்கு ஏர்முனை அவசியம்<br>உழவின்றி உய்யா உலகு |
| **உ) மொழியின் வழிய தறிவு.** | |
| வள்ளுவனின் வாய்மொழியை குற்றமறக் கற்று<br>கம்பனின் காவியத்தை கசடறக் கற்று<br>இளங்கோவின் சிலம்பை சீர்தூக்கிப் பார்த்து<br>மொழியின் வழிய தறிவு | |

www.kalvikadal.in

2. **'இயற்கை' என்னும் பொருண்மையில் வெண்பா எழுதுக.**
தென்றல் வீச பூமணம் பரவும்
குன்றம் குளிர குளிரில் வாடும்
மயிலும் ஆட மழைமேகம் சொரியும்
மண்ணு லகைக் காண்.

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 102

### சான்றோர் சித்திரம்

சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியர் பணிக்கு நேர்காணலுக்குச் சென்றார் ஒருவர். அந்தக் கல்லூரியின் பேராசிரியர் பரிதிமாற்கலைஞர். "குற்றியலுகரத்திற்கு எடுத்துக்காட்டுச் சொல்லுங்கள்" என்று கேட்டார். அவர் "அஃது எனக்குத் தெரியாது" என்று பதிலளித்தார். 'நீங்கள் தேர்வு செய்யப்பட்டுவிட்டீர்கள்' என்றார் பரிதிமாற்கலைஞர். 'தெரியாது' என்று சொன்னவரை, "எப்படித் தேர்வு செய்யலாம்?" என்று பிறர் கேட்ட போது, 'அஃது' என்பது ஆய்தத் தொடர் குற்றியலுகரம், 'எனக்கு' என்பது வன்தொடர்க் குற்றியலுகரம், 'தெரியாது' என்பது உயிர்த்தொடர் குற்றியலுகரம் என்று விளக்கினார் பரிதிமாற்கலைஞர். இந்நிகழ்வில் பரிதிமாற்கலைஞரையே வியக்க வைத்தவர் மறைமலையடிகள்.


*மறைமலையடிகள்*
*1876–1950*



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







பரிதிமாற்கலைஞருடனான அவருடனான நட்பு ‘தனித்தமிழ்’ மீதான அடிகளாரின் பற்றை மிகுதியாக்கியது. பிறமொழிக் கலப்பு இன்றி இனிய, எளிய தமிழ்ச் சொற்களைக் கொண்டே பேசவும் எழுதவும் இயலும் என்று நடை முறைப்படுத்தினார். ‘சுவாமி வேதாசலம்’ எனும் தன்பெயரை ‘மறைமலையடிகள்’ என மாற்றிக் கொண்டதோடு தம் மக்களின் பெயரையும் தூய தமிழ்ப் பெயர்களாக மாற்றினார். இளம் வயதில் பல்வேறு இதழ்களில் கட்டுரைகள் எழுதி வந்த அடிகளார் ஞானசாகரம் (1902), Oriental Mystic Myna (1908), Ocean Of Wisdom (1935) முலான இதழ்களை நடத்திச் சிறந்த இதழாளராகத் திகழ்ந்தார். முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, சாகுந்தல நாடகம், மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் முதலான பல நூல்களை எழுதியுள்ளார். முறையான பள்ளிக் கல்வியை முடித்திராத மறைமலையடிகள் ஆக்கிய நூல்களும் ஆற்றிய சொற்பொழிவுகளும் அவர் ஓர் அறிவுக்கடல் என்பதை நமக்கு உணர்த்தும்.

**வினாக்கள்:**

1. **ஒரு நேர்காணலில் குற்றியலுகரத்திற்கு எடுத்துக்காட்டுத் தருக என்று கேட்டதற்குப் பதிலாக மறைமலை அடிகள் கூறியது என்ன?**
2. **சுவாமி வேதாசலம் என்பதன் தமிழாக்கம் என்ன?**
3. **மறைமலை அடிகள் நடத்திய இதழ் எது?**
4. **இப்பாடப் பகுதியில் இடம் பெற்றுள்ள எண்ணும்மையினை எடுத்து எழுதுக.**
5. **இப்பாடப்பகுதியின் இடம்பெற்றுள்ள உருவகத்தினை எடுத்து எழுதுக.**

**விடைகள்:**

1. அஃது எனக்குத் தெரியாது
2. மறைமலை அடிகள்
3. ஞானசாகரம்
4. வரலாறும் காலமும்
5. அறிவுக்கடல்

www.kalvikadal.in

## தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

**எ.கா. நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.**
நம் மாநிலம் இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டது.

1. **எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.**
எங்கள் ஊரில் நூலகம் கட்டடம் கட்ட அரசு நிதி ஒதுக்கியது.

2. **ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.**
ரங்கன் வெண்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

3. **மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.**
வானம் பார்த்த பூமியில் பயறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

4. **ஐப்பசி அடைமழையில் ஊருனி நிறைந்தது.**
ஐப்பசி அடை மழையில் ஊருணி நிறைந்தது.

5. **இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்.**
இன்றைக்கு சாயுங்காலம் கபடி போட்டி நடைபெறும்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



## தமிழாக்கம் தருக.

The Serious dearth of library facilities in this country is scarcely keeping with India's status in the international community of nations or with her educational and social needs. In this matter. India compares unfavourably not only with other independent Dominions of the commonwealth but even with certain British colonies. She possesses only one public library on any considerable size, and even this institution is inadequate to serve the need of the capital city. Only a few towns can boast of possessing any library at all. The rural papulation is completely neglected; There are no travelling libraries to reach them of kind that are to be found even in some backward countries.

The growth of libraries has lagged. Far behind the increase in the number of schools and the rise in the rate of literacy. The great mass of the people in India do not have the means to buy books or even magazines and newspapers; in the absence of sufficient public libraries and reading room, most of them cannot attain regular reading habits.

இந்திய நாட்டில் நூலக வசதிகளின் பற்றாக்குறையால் கல்வி மற்றும் சமூக தேவைகளில் இந்தியாவின் நிலைப்பாடு சர்வதேச அரங்கில் மற்ற நாடுகளைக் காட்டிலும் குறைந்தே உள்ளது. இந்த விஷயத்தில் இந்தியா, சில பொதுவுடைமை நாடுகள் மற்றும் ஆங்கிலக் குடியேற்ற நாடுகளோடு எதிர்மறையாக ஒப்பிடப்படுகிறது. பெரிய அளவில் ஒரே ஒரு பொது நூலகத்ததை மட்டுமே இந்தியா வைத்திருக்கிறது. மேலும், அது தலைநகரத்தின் தேவையை நிறைவு செய்ய போதுமானதாக இல்லை. இங்கு ஒரு சில நகரங்கள் மட்டுமே நூலகத்தால் பெருமை அடைய இயலும். கிராமப்புற மக்கள் முற்றிலுமாக புறக்கணிக்கப்படுகிறார்கள். அவர்களை பயனடையச் செய்வதற்கு சில பின் தங்கிய நாடுகளில் உள்ளதைவிட நூலகங்கள் ஏதும் இங்கு இல்லை.

இந்தியாவில் நூலகங்களின் வளர்ச்சி தாமதமாகவே உள்ளது. பின்னாளில் பள்ளிகளின் எண்ணிக்கையில் ஏற்றம் இருந்தாலும், எழுத்தறிவில் பின்தங்கியே இருக்க நேரிடும். இந்தியாவில் பெருமளவு மக்களுக்குப் புத்தகங்கள், வார இதழ்கள், பத்திரிக்கைகள் வாங்குவதற்கு வழி இல்லை மற்றும் போதுமான பொது நூலகங்கள், வாசிப்பு அறை, இல்லாமையால் பெரும்பாலானவர்களுக்கு வாசிக்கும் பழக்கமே இல்லாமல் போகிறது.

## பின்வரும் பழமொழிகளை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.

1. **யானைக்கும் அடிசறுக்கும்**

தன்னம்பிக்கையோடு வாழ்ந்த என் தந்தை தனியார் சீட்டுக் குழுமத்தின் பகட்டு விளம்பரத்தால் பணம் கட்டி, ஏமாந்தது "யானைக்கும் அடிசறுக்கும்" போல ஆயிற்று.

2. **தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்**

வாழ்க்கையில் நாம் பிறருக்கு நன்மை செய்து வந்தோம் என்றால் நமக்கும் நன்மையே நடக்கும். வாழ்க்கையில் நாம் பிறருக்குத் தீமை செய்து வந்தோம் என்றால் நமக்குத் தீமையே நடக்கும் இதையேதான் தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பார்கள்.

3. **குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை**

நட்பு எனக்கொண்ட பிறகு குற்றம் இருப்பின் அதைப் பொறுக்கும் குணம் வேண்டும். அதை விடுத்து குற்றத்தைக் கடிந்துரைத்தால் (சுற்றம்) நட்பு தொடராது.

4. **எறும்பு ஊரக் கல்லும் தேயும்**

வாழ்க்கையில் சின்னச் சின்ன தவறுகளை இழைத்துக் கொண்டே வருவதால் தன் புகழுக்குக் களங்கம் வராது என்று நினைக்கிறோம். மாறாக, எறும்பு ஊரக் கல்லும் தேயும் என்பது போல நம் புகழ் அழிவதற்கு நாம் செய்த சிறு தவறுகளே காரணமாகிவிடும்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

5. **ஊழி பெயரினும் தாம் பெயரார்**

நற்பண்புகளைக் கைவரப் பெற்றவர்கள் வாழ்வில் உயர்வு தாழ்வு வந்தபோதும் தன்னிலையில் மாறமாட்டார்கள்.

**கீழ்க்காணும் பத்திகளைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்குக.**

இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஓய்வின்மை, காலம் தவறிய உணவு, உணவுப் பழக்கவழக்க மாற்றம் உள்ளிட்டவையே பல்வேறு உடல் நலப் பாதிப்புகளுக்கு மூல காரணமாகின்றன. மருத்துவம் சார்ந்த தேவைகளுக்கென்று குறிப்பிட்ட தொகையை ஒதுக்கும் அளவிற்கு உடல்நிலையைக் கவனத்தில் கொள்ளாமல், ஓர் இயந்திர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

'உணவே மருந்து மருந்தே உணவு' என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே அளவறிந்து உண்ண வேண்டியது அவசியமாகும்.

ருசிக்காக, சாப்பிடக்கூடாத பொருள்களைச் சாப்பிடுவதும், பசிக்காக அளவுக்கு மீறிச் சாப்பிடுவதும் தான் பிணிகளுக்குக் காரணம். சாதாரணமாக உண்ட உணவு செரிமானமாவதற்கு 4 மணி நேரம் ஆகிறது. பொதுவாகவே உணவை நன்றாக மென்று விழுங்க வேண்டும். இதனால் மாவுப்பொருள் செரிமானமாவதற்கு உமிழ்நீர் சுரந்து உணவுடன் உட்செல்லும்.

உணவுப் பொருட்களில் அடங்கியுள்ள சத்துகள், அவற்றின் பயன்கள் ஆகியவற்றைப் பற்றிய தெளிந்த அறிவு, ஆரோக்கிய உணவினைத் தேர்வு செய்ய மிகவும் உதவியாய் இருக்கும்.

நமது எடை மற்றும் உயரத்தினை அவ்வப்போது சோதித்து நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இது மிகவும் முக்கியமானது. பிறகு தங்களது எடை மற்றும் உயரத்தினைப் பொறுத்து ஆரோக்கியமான உணவு முறையைத் தேர்ந்தெடுக்கவும் உடற்பயிற்சி செய்யவும் முடிவெடுக்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதருக்கும் அவரது வயது, பாலினம், உடல் உழைப்பு, உடல்நிலை, வாழும் இடம், பருவ நிலை ஆகியவற்றின் அடிப்படையில் ஊட்டச்சத்துக்களின் தேவை மாறுபடும்.

தேவையான தானியங்களுடன் பருப்பு மற்றும் பயறு வகைகளைச் சேர்த்து, அதிக காய்கறிகளுடனும் பழங்களுடனும் கூடிய உணவு முறையே நம் ஆரோக்கியத்திற்கான சரியான தீர்வு.

**மூன்றில் ஒரு பங்காகச் சுருக்குக.**

மலர்ந்தவை - 162

தொடுத்தவை - $\frac{162}{3} = 54$

**பத்தியின் சுருக்கம்:**

இன்றைய சூழலில், ஓய்வின்மை, காலம் தவறிய உணவு, உணவில் மாற்றம் முதலானவை உடல் நலப் பாதிப்புக்குக் காரணம். மருத்துவத்திற்கென தொகை ஒதுக்கும் அளவுக்கு இயந்தரமாகிவிட்டோம். உணவே மருந்தாக உண்டு மகிழ்ந்தனர் முன்னோர். ஒவ்வொருவரும் சமச்சீர் உணவு உட்கொள்வது கட்டாயமாகிவிட்டது. உணவுப் பொருளில் அடங்கியுள்ள சத்து பற்றி அறிவது நமது கடமை. ருசிக்காக அன்றி பசிக்காக மிகுதியாகச் சாப்பிடுவது பிணிக்குக் காரணமாயிற்று. நமது எடை மற்றும் உயரத்தைப் பொறுத்தே உணவு முறையும் உடற் பயிற்சியும் அமைதல் வேண்டும். வயது, பாலினம் மற்றும் உடலுழைப்பின் அடிப்படையில் ஊட்டச்சத்து தேவைப்படும். காய்கறி, தானியம், பயிறு இவற்றுடன் கூடிய உணவு முறையே சரியான தீர்ப்பு.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in



12

## மொழியோடு விளையாடு

பக்கம்: 103

**மறைந்திருக்கும் சொற்களைக் கண்டுபிடி.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| போ | ஏ | யா | ழ் | சு | வி | ந | க | ரு | ஞ |
| க் | டு | பா | டு | தே | ல் | டை | வி | ர | ளி |
| கு | தி | ரை | பா | ச | க | மே | தை | ம் | ச் |
| வ | அ | வெ | வ | மி | பா | டை | வே | க | சே |
| ர | ன் | ற் | டி | த் | டா | ஔ | ங் | மு | ர் |
| த் | பு | றி | வ | தி | ண் | வை | கை | றை | க் |
| து | ரு | வ | ம் | ர | தி | ஓ | லை | து | கை |
| ம | ன | ன | ம் | ன் | ணை | ப | ய | ணி | த |
| கா | வ | ல | ர் | ஓ | த | ற் | பி | ரி | வு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | போக்கு வரத்து | 2. | ஏடு | 3. | அன்பு |
| 4. | வெற்றி | 5. | பா – வடிவம் | 6. | சுதேச மித்திரன் |
| 7. | பாடாண் திணை | 8. | நடைமேடை | 9. | ஔவை |
| 10. | கவி | 11. | கவிதை | 12. | வேங்கை |
| 13. | துறைமுகம் | 14. | முகம் | 15. | துறை |
| 16. | துணி | 17. | சேர்க்கை | 18. | யாழ் |
| 19. | பாடு | 20. | குதிரை | 21. | மேதை |
| 22. | பாடை | 22. | பாடை | 23. | வைகை |
| 24. | வைகறை | 25. | துருவம் | 26. | ரதி |
| 27. | ஓலை | 28. | மனனம் | 29. | பயணி |
| 30. | காவலர் | 31. | ஓதற் பிரிவு | 32. | ரவி |
| 33. | தேடு | 34. | பாடு | 35. | கைது |
| 36. | விதை | 37. | முறை | 38. | தணி |
| 39. | கரு | 40. | பணை | 41. | ஓர் |

www.kalvikadal.in

### எண்ணங்களை எழுத்தாக்குக



கல்வி ஒருவரை அறிவினால் மேதையாக்கும்
கல்வி கற்றால் நீதியரசர ஆகலாம்.
கல்வியின் காரணமாக காவல்துறை அதிகாரி ஆகலாம்
கல்வி கற்பதால் மருத்துவர் ஆகலாம்
கல்வி ஒருவரை நல்லாசிரியனாக்கும்.
கல்வியே ஒருவர்க்குப் பெருமை சேர்க்கும்
கல்வி கற்றவரையே உலகம் போற்றும்.







Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



## சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

**எ.கா. பலகை**

பலகையால் ஆன மேசையில் உணவு உண்டனர்.
பல கைகள் ஒன்றிணைந்து வெற்றியைத் தமதாக்கின.

1. **தாமரை**
   தடாகத்தில் தாமரை மலர்ந்திருந்தன.
   தாவுகின்ற மானை(மரை)ப் பிடிக்க முடியாது.

2. **கோவில்**
   கோவிலில் குடமுழுக்கு நடந்தேறியது.
   அரசன் உறைவிடம் கோ இல் எனப்படும்.

3. **வெங்காயம்**
   வெங்காயம் மருத்துவ குணம் நிறைந்தது.
   வெம்மையால் உண்டான காயம்.

4. **தலைமை**
   பள்ளி ஆண்டு விழாவிற்குத் தலைமை ஆசிரியர் தலைமை தாங்கினார்.
   தலையில் மை அடிப்பது பழக்கமாகிவிட்டது.

## செய்து கற்போம்.

**அருகிலுள்ள கல்லூரிக்குச் சென்று அங்குள்ள பாடப்பிரிவுகளை அட்டவணைப்படுத்துக.**

www.kalvikadal.in

| | | | |
|---|---|---|---|
| **இளங்கலை** | தமிழ் | ஆங்கிலம் | வரலாறு |
| | பொருளாதாரம் | கணிதம் | இயற்பியல் |
| | தாவரவியல் | வேதியியல் | கணினிவியல் |
| | வணிகவியல் | பொருளியல் | |

## நிற்க அதற்குத் தக

**கீழ்க்கண்ட இடங்களில் உங்கள் செயல்பாடு எவ்வாறு இருக்கும்?**

| | |
|---|---|
| கூட்டம் நிரம்பிய பேருந்தில், நீங்கள் அமர்ந்திருக்க. உங்கள் அருகில் பெரியவர் ஒருவர் நிற்கிறார். | **இருக்கையை அவருக்குக் கொடுப்பேன்.** |
| பள்ளியில் உங்களுடைய தோழர் பசியுடன் அமர்ந்திருக்கிறார். | **இருப்பதை பகிர்ந்து உண்பேன்.** |
| கடற்கரையில் பெற்றோரிடமிருந்து பிரிந்து வழிதவறிய சிறுமி கண்ணீர்விட்டுக் கலங்குகிறார். | **சிறுமியை பெற்றோரிடம் ஒப்படைப்பேன்.** |

## படிப்போம் பயன்படுத்துவோம் (உணவகம்)

| | | |
|---|---|---|
| Arrival | – | வருகை |
| Departure | – | புறப்பாடு |
| Coaveyor Belt | – | ஊர்திப்பட்டை |
| Take off | – | வானூர்தி கிளம்புதல் |
| Passport | – | கடவுச்சீட்டு |
| Visa | – | நுழைவு இசைவு |
| Domestic Flight | – | உள்நாட்டு வானூர்தி |

✱✱★★★✱✱



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



# இயல் 4 மாதிரி வினாத்தாள் - 4

வகுப்பு : 12

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

**I. பலவுள் தெரிக.** 6 × 1 = 6

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1. **"காவினெம் கலனே ; சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்**
   அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண்கருவி

2. **சுரதா நடத்திய கவிதை இதழ்**
   அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

3. **"விண்வேறு ; விண்வெளியில் இயங்கு கின்ற வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு" - தொடர் தரும் முழுமையான பொருள்.**
   அ) விண்ணும் வெண்மதியும் வேறு வேறு
   ஆ) விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு
   இ) வெண்மதியும் முகிலும் வேறு வேறு
   ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு

4. **சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.**
   அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு
   இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

5. **'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்**
   அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

6. **வெண்பாவிற்கு ஏற்ப அடுத்த சீர் என்னவாக அமைக்கலாம்? பொருத்தமான சீரினைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.**
   அ) அன்பே .......................... (ஆர்வமாய் / தகளியாய்)
   ஆ) வான்மழை .......................... (தூறலில் / பொழிந்திடின்)

**II. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக** 8 × 1 = 8

7. **மூன்றாவது சீர் அமைத்து எழுதுக.**
   அ) கல்வி கரையில ..........................
   ஆ) கல்லாரே ஆயினும் ..........................

8. **பொருத்துக.**
   அ) மாச்சீர் - 1. கருவிளம், கூவிளம்
   ஆ) காய்ச்சீர் - 2. நாள், மலர்
   இ) விளச்சீர் - 3. தேமாங்காய், புளிமாங்காய்
   ஈ) ஓரசைச்சீர் - 4. தேமா, புளிமா
   அ) 1, 2, 4, 3 ஆ) 4, 3, 1, 2 இ) 2, 3, 1, 4 ஈ) 3, 4, 2, 1

9. **குருகுலம் என்பது**
   அ) ஆசிரியர் அறை ஆ) குருக்கள் தங்குமிடம்
   இ) துறவியரின் குடிசை ஈ) ஆசிரியரின் வீடு

10. **பொருத்துக.**
    அ) தொடைகள் - 1. அசைகள்
    ஆ) தளைகள் - 2. தொடைகள்
    இ) எழுத்துகள் - 3. பாக்கள்
    ஈ) அடியின் கீழ் அடிகள் - 4. சீரின் இடைவெளிகள்
    அ) 3, 4, 1, 2 ஆ) 3, 1, 2, 4 இ) 3, 1, 4, 2 ஈ) 4, 3, 2, 1



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







11. **தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**
ஐப்பசி அடைமழையில் ஊருணி நிறைந்தது.

12. **சுரதா நடத்திய இதழ்**
அ) காவியம் ஆ) தென்றல் இ) குயில் ஈ) எழுத்து

13. **சரியானதைத் தேர்க.**
அ) பூக்கும் வரை பூ என்போம். ஆ) ஆக்கிய பின் அரிசி என்றும்
இ) யாப்பில் வந்தடங்கும் வார்த்தைகளே செய்யுள் ஈ) கவிநடையும் உரைநடையும் வேறு வேறு

14. **கூற்று 1 : பள்ளிக்கு முதலில் வருபவனை வேத்தான் என்று அழைப்பர்**
**கூற்று 2 : வேத்தான் சில நேரங்களில் சட்டாம்பிள்ளைக்குரிய கடமை செய்வான்.**
அ) கூற்று இரண்டும் சரி ஆ) கூற்று இரண்டும் தவறு
இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி

## III. குறுவினா 3 x 2 = 6

**அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

15. இடையீடு - எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது.
16. வசனம், கவிதை வேறுபாடு தருக.
17. 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' - யார்க்கு?
18. புண் வேறு - விழுப்புண் வேறு விளக்குக.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக :** 2 × 2 = 4

19. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?
20. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.
21. கிளிமூக்கு என்பது என்ன?

## IV. எவையேனும் ஏழனுக்கு விடை தருக : 7 × 2 = 14

www.kalvikadal.in

22. **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
அ) தந்தனன் ஆ) பொழிந்தான்

23. **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**
அ) செல்லிடத்து ஆ) எத்திசை

24. **மரபுப்பிழையை நீக்கி எழுதுக.**
ஆ) பூனை பாயும் ஆ) புலி கத்தும்

25. **புறநானூற்றுக்கு வழங்கும் வேறு பெயர்**
அ) புறம், புறப்பாட்டு ஆ) புறம், புறப்பொருள்
இ) நானூறு, புறப்பாட்டு ஈ) இவற்றில் எதுவுமில்லை

26. **சரியானதைத் தேர்க.**
அ) புறநானூற்றிற்குப் புறம், புறப்பாட்டு என்னும் பெயர்கள் உண்டு.
ஆ) புறநானுற்று பத்துப் பாட்டு நூல்களில் ஒன்று.
இ) அதியமானிடம் நட்பு பாராட்டும் குணம் இல்லாதவர் ஔவையார்.
ஈ) ஔவையார் பாடியதாக நற்றினையில் 8 பாடல்கள் உள்ளன.

27. **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. (ஒன்று மட்டும்)**
அ) தாமரை ஆ) பலகை

28. **தேவையான இடங்களில் வல்லின மெய்களை நீக்கி எழுதுக.**
பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் வைக்கும் காலம் பெரிய விசேட நாளாகக் கொண்டாடப் பெறும்.

29. **மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து சொற்றொடர் அமைக்கவும்.**
அ) அலை ஆ) அளை இ) அழை

30. **கலைச் சொல்லாக்கம் தருக.** Visa

## V. சிறுவினா

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 4 = 8

31. "மூன்றாம் காலம் போல் ஒன்று" - எவை? ஏன்? விளக்குக.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





32. வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப்பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.
33. எலிக்கு பொறி வைத்தால் விரலும் விழுவதுண்டு
நீர் தேடி அலையும்போது இளநீரும் கிடைக்கும் - இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

34. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?
35. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள் மாற்றங்களைத் தொகுத்துரைக்க.
36. சுவடியை உருவாக்கும் முறையை விவரி.

**VI. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 x 4 = 12**

37. பாடாண் திணையை சான்றுடன் விளக்குக. **(அல்லது)** பரிசல் துறையை விளக்குக.

38. **கீழ்க்காணும் பத்தியைப் படித்து தமிழாக்கம் செய்க.**

The Serious dearth of library facilities in this country is scarcely keeping with India's status in the international community of nations or with her educational and social needs. In this matter. India compares unfavourably not only with other independent Dominions of the commonwealth but even with certain British colonies. She possesses only one public library on any considerable size, and even this institution is inadequate to serve the need of the capital city. Only a few towns can boast of possessing any library at all. The rural papulation is completely neglected; There are no travelling libraries to reach them of kind that are to be found even in some backward countries.

The growth of libraries has lagged. Far behind the increase in the number of schools and the rise in the rate of literacy. The great mass of the people in India do not have the means to buy books or even magazines and newspapers; in the absence of sufficient public libraries and reading room, most of them cannot attain regular reading habits..

www.kalvikadal.in

39. **பின்வரும் பழமொழிகளில் ஏதேனும் ஒன்றினை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.**
அ) யானைக்கும் அடி சறுக்கும்
ஆ) குற்றம் பார்ப்பின் சுற்றம் இல்லை

40. **கீழ்க்காணும் பத்திகளைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்குக.**

இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஓய்வின்மை, காலம் தவறிய உணவு, உணவுப் பழக்கவழக்க மாற்றம் உள்ளிட்டவையே பல்வேறு உடல் நலப் பாதிப்புகளுக்கு மூல காரணமாகின்றன. மருத்துவம் சார்ந்த தேவைகளுக்கென்று குறிப்பிட்ட தொகையை ஒதுக்கும் அளவிற்கு உடல்நிலையைக் கவனத்தில் கொள்ளாமல், ஓர் இயந்திர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

'உணவே மருந்து மருந்தே உணவு' என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே அளவறிந்து உண்ண வேண்டியது அவசியமாகும்.

ருசிக்காக, சாப்பிடக்கூடாத பொருள்களைச் சாப்பிடுவதும், பசிக்காக அளவுக்கு மீறிச் சாப்பிடுவதும் தான் பிணிகளுக்குக் காரணம். சாதாரணமாக உண்ட உணவு செரிமானமாவதற்கு 4 மணி நேரம் ஆகிறது.

**VII. பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக :** **3 x 6 = 18**

41. கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க
42. பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.
42. 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?.

**VIII. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4 + 2 = 6**

44. அ) 'விண்வேறு: விண்வெளியில் இயங்குகின்ற' - எனத் தொடங்கும் 'இதில் வெற்றி பெற' என்ற பாடல்
ஆ) 'சினம்' என முடியும் குறள்.





*******

Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

# இயல் 5 நாடென்ப நாட்டின் தலை

நாகரிகம், தொழில், வணிகம்

| | | |
|---|---|---|
| உரைநடை | மதராசப்பட்டினம் | |
| செய்யுள் | தெய்வமணிமாலை | இராமலிங்க அடிகளார் |
| செய்யுள் | தேவாரம் | திருஞானசம்பந்தர் |
| செய்யுள் | அகநானூறு | அம்மூவனார் |
| துணைப்பாடம் | தலைக்குளம் | தோப்பில் முகமது மீரான் |
| இலக்கணம் | படிமம் | |

# இயல் 5 மதராசப்பட்டினம்

உரைநடை உலகம்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல. அது நம்பிக்கை மையம். காரணம் -**
   அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
   ஆ) மென்பொருள், வன்பொருள் வாகன உற்பத்தியில் பங்கு
   இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை
   ஈ) அ, ஆ, இ அனைத்தும் **[விடை: ஈ]**

2. **கூற்று: இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர். காரணம்: கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவோ இருந்தது.**
   அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி
   இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று சரி காரணம் சரி **[விடை: ஈ]**

3. **பொருத்துக.**
   அ) திருவல்லிக்கேணி ஆறு - 1. மாவலிபுரச் செலவு
   ஆ) பக்கிங்காம் கால்வாய் - 2. கல்கோட்டீ
   இ) பல்லாவரம் - 3. அருங்காட்சியகம்
   ஈ) எழும்பூர் - 4. கூவம்
   அ) 1, 2, 4, 3 ஆ) 4, 2, 1, 3 இ) 4, 1, 2, 3 ஈ) 2, 4, 3, 1 **[விடை: இ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







## குறுவினா

1. **கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.**
   - காலின் மெக்கன்சியின் தொகுப்புகளைக் கொண்டு 1869இல் உருவாக்கப்பட்ட நூலகம்.
   - ஓலைச்சுவடிகள், தாள்சுவடிகள், புத்தகங்கள் எனப் பெரும் தொகுப்புகள் காணப்படுகிறது.

## சிறுவினா

1. **சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.**
   - சென்னை நகரின் ஒவ்வொரு பகுதிக்கும் வரலாறு உண்டு.
   - அந்தப் பண்பாட்டு அடையாளங்களை எண்ணிக்கையில் அடக்குதல் மிகக் கடினம்.
   - இந்திய சாரசனிக் கட்டடக்கலை பாணியில் கட்டப்பட்ட கட்டடங்கள் இன்று சென்னையின் பழமையைப் பறைசாற்றுகின்றன.
   - ஆவணங்களை முறையாகக் கையாளும் ஆவணக் காப்பகம் (மெட்ராஸ் ரெக்காட் ஆபிஸ்) சாரசனிக் கட்டட முறையில் அமைந்தது.
   - தென்னிந்திய வரலாற்றை, பண்பாட்டை அறிவதற்கு எழும்பூர் அருங்காட்சியகம், கோட்டை அருங்காட்சியகம் துணை நிற்கின்றன.
   - இந்தியாவின் பொதுநூலகம் கன்னிமாரா நூலகம் நவீனமாக வளர்ந்து வரும் பெரிய நூலகம்.

www.kalvikadal.in

## நெடுவினா

1. **'ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும்' நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.**

**முன்னுரை :**

ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு என்பதில் நான் பார்த்து வளர்ந்த சென்னை நகரத்தைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**சென்னை :**

தென்னிந்தியாவின் நுழைவுவாயில் என்றழைக்கப்படும் சென்னை இன்று தமிழகதெங்கும் பரவி வாழும் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம். சென்னை இந்தியாவின் முதன்மை நகரங்களுள் ஒன்று மற்றும் தமிழகத்தின் தலைநகரம். சென்னை என்று அழைக்கப்படும் பகுதியும் அதன் சுற்றுப்பகுதிகளும் வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே வாழ்ந்ததற்கான தடயங்களைக் கொண்டுள்ளன.

**மானுட எச்சம் :**

பல்லாவரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்கோடரி இந்திய அகழ்வாய்வுத்துறை வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்தியது. கூடுவாஞ்சேரி, பல்லாவரம், புழல் போன்ற பகுதிகளில் இன்று கிடைக்கும் மானுட எச்சங்கள் நமது பழமையை உணர்த்துகின்றன. இன்று சென்னையின் ஒரு பகுதியாக விளங்கும் மயிலாப்பூர் 2ஆம் நூற்றாண்டில் தாலமி என்பவரால் 'மல்லியர்பா' எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

**பாடல் பெற்ற தலம் :**

திருவொற்றியூர், திருவான்மியூர், மயிலாப்பூர் ஆகியவற்றில் உள்ள கோயில்கள் பாடல் பெற்ற, ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தலமாக உள்ளன.

**நீர்நிலை – வடிகால் :**

வடசென்னைக்குக் கொற்றலையாறு, மத்திய சென்னைக்குக் கூவம், தென் சென்னைக்கு அடையாறு கீழே பாலாறு இவை நான்கும் இணைக்கும் பக்கிங்காம் கால்வாய், காட்டன் கால்வாய் இருந்தன. 18 பெரிய ஓடைகள், 540க்கும் மேற்பட்ட சிறிய ஓடைகள் என இயற்கையாய் வடிகால் பெற்றிருந்தது. ஆனால் அவை எங்கு போயின என்று தெரியவில்லை.

**நகரம் – உருவாக்கம் :**

செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே உள்ள வீடுகள் இருந்த பகுதி 'வெள்ளை நகரம்' என்றும் வெளியே இருந்த குடியிருப்பு 'கருப்பர் நகரம்' என்றும் அழைக்கப்பட்டது. கிழக்கிந்திய நிறுவனம் பெரும்பாலும் வணிகத்தையே செய்தது. இதனால் நெசவாளர்கள் சென்னையை நோக்கி வந்தனர். அவர்கள் வாழ்ந்த பகுதிதான் வண்ணத்துக்காரன் பேட்டை என்பது வண்ணாரப்பேட்டை என்றும் சின்னதறிப்பேட்டை சிந்தாதரிப் பேட்டை என்றும் தோன்றியது. வடசென்னையை மதராசப்பட்டினம் என்றும் தென்சென்னையை சென்னைப்பட்டினம் என்றனர். ஆங்கிலேயர் இரண்டையும் இணைத்து மதராஸ் என்று அழைத்தனர். அது இன்று சென்னையாக உள்ளது. ஆங்கிலேயரின் அதிகார மையமான இந்நகரம் ஆங்கிலேயரை எதிர்க்க முதல் தளமாக அமைந்த நகரமாக விளங்கியது.

**கல்லூரிகள் – பள்ளிகள் :**

- 1715இல் உருவான 'புனித மேரி தேவாலய தர்மப் பள்ளி'.
- 1812இல் உருவான சென்னைக் கோட்டைக் கல்லூரி.
- 1837இல் உருவான கிறிஸ்துவக் கல்லூரி.
- 1840இல் பிரசிடென்சி பள்ளி (மாநிலக் கல்லூரி).
- 1857இல் சென்னைப் பல்கலைக்கழகம்.
- 1914இல் உருவான இராணிமேரிக் கல்லூரி.

www.kalvikadal.in

போன்ற கல்லூரி பழமை வாய்ந்து அறிவின் நகரமாக விளங்குகிறது.

**பண்பாட்டு அடையாளங்கள் :**

சென்னையின் ஒவ்வொரு பகுதிக்கும் வரலாறு உண்டு. பண்பாட்டு அடையாளங்களை எண்ணிக்கையில் அடக்குவது கடினம். இந்திய சாரசனிக் கட்டடக்கலை இன்றும் சென்னையின் பழமையைப் பறைசாற்றுகின்றது. அந்த வகையில் உருவாக்கப்பட்ட கட்டடங்களாகத் தமிழ்நாடு ஆவணக் காப்பகம், எழும்பூர் அருங்காட்சியகம், கோட்டை அருங்காட்சியகம், கன்னிமாரா நூலகம் போன்றவை விளங்குகின்றன.

**நம் சென்னை (இன்றைய சென்னை):**

இன்று சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல. அது நம்பிக்கை மையம். சென்னையை மையமிட்டு தொழிற்சாலைகளும், நிறுவனங்களும் ஏற்படுத்தி நேரடி, மறைமுக வாய்ப்புகள் உருவாகின்றன. கணினி மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் இன்று சென்னை முதலிடம் வகிக்கிறது. இந்திய அளவில் மென்பொருள் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கிறது. மின்னணுப் பொருள்கள் உருவாக்கும் மையமாகவும் திகழ்கிறது.

**முடிவுரை:**

இத்தகு பெருமைகொண்ட சென்னை நகரம் நான் பார்த்து வாழ்ந்த காலகட்டத்தில் பெருமைகொண்ட பழமையைப் பறைசாற்றும் நகரமாக விளங்குகிறது.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு அடித்தளமாகவும் அதிகார மையமாகவும் விளங்கிய கடற்கரை நகரம்**
   அ) மதராசப்பட்டினம் ஆ) காவிரிபூம்பட்டினம்
   இ) புதுச்சேரி ஈ) கொற்கை [விடை: அ]

2. **தென்னிந்தியாவின் நுழைவுவாயில் என்றழைக்கப்படுவது**
   அ) திருப்பதி ஆ) சென்னை
   இ) திருவனந்தபுரம் ஈ) கன்னியாகுமரி [விடை: ஆ]

3. **தமிழகத்தின் தலைநகரம்**
   அ) மதுரை ஆ) கோயம்புத்தூர் இ) திருச்சி ஈ) சென்னை [விடை: ஈ]

4. **சென்னைக்கு அருகேயுள்ள குடியம், அத்திரம்பாக்கம் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுப் பணி நிறுவுவது**
   அ) அப்பகுதியின் மனித நாகரிகத்தின் பழமையை ஒரு இலட்சம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது என்பதை
   ஆ) அப்பகுதியின் மனித நாகரிகத்தின் பழமையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது என்பதை
   இ) அப்பகுதிகளில் மனித வாழ்வு நடைபெறவில்லை என்பதை
   ஈ) இவற்றில் எதுவுமில்லை [விடை: ஆ]

5. **சென்னையில் ஓடக்கூடிய .................. படுகை மனித நாகரிகத்தின் முதன்மையான களங்களில் ஒன்று எனலாம்.**
   அ) அடையாற்றுப் ஆ) பாலாற்றுப்
   இ) கூவமாற்றுப் ஈ) கொற்றலையாற்றுப் [விடை: ஈ]

6. **இந்திய அகழாய்வுத்துறை வரலாற்றில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்திய கல்கோடரி கண்டுபிடிக்கப்பட்ட இடம்**
   அ) கூடுவாஞ்சேரி ஆ) பல்லாவரம் இ) புழல் ஈ) மயிலாப்பூர் [விடை: ஆ]

7. **கி.பி. 2ஆம் நூற்றாண்டில் தாலமி என்பவரால் 'மல்லியர்பா' என்னும் துறைமுகமாகச் சுட்டப்படும் சென்னையின் இன்றைய ஒரு பகுதி**
   அ) திருவல்லிக்கேணி ஆ) மீனம்பாக்கம் இ) மயிலாப்பூர் ஈ) வடபழனி [விடை: இ]

8. **பல்லாவரத்தில் உள்ள பல்லவர் குடைவரை .................. காலத்தில் அமைக்கப்பட்டது.**
   அ) முதலாம் மகேந்திரவர்மன் ஆ) முதலாம் நரசிம்மவர்மன்
   இ) முதலாம் நந்திவர்மன் ஈ) மூன்றாம் நந்திர்வமன் [விடை: அ]

9. **சென்னையில் கிடைத்தவற்றுள் மிகப் பழமையான கல்வெட்டு**
   அ) பல்லாவரம் கல்வெட்டு ஆ) திருவல்லிக்கேணி கல்வெட்டு
   இ) மயிலாப்பூர் கல்வெட்டு ஈ) மாதவரம் கல்வெட்டு [விடை: அ]

10. **சென்னையில் நந்திவர்மன் கல்வெட்டு கிடைக்கப்பெற்றுள்ள இடம்**
    அ) பல்லாவரம் ஆ) மாதவரம் இ) திருவல்லிக்கேணி ஈ) வடபழனி [விடை: இ]

www.kalvikadal.in



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





11. வள்ளல் பச்சையப்பர் .................. நதிக்கரையில் குளித்துவிட்டு அருகில் உள்ள கோவிலில் வழிபட்டதாக ஒரு குறிப்பு, அவரது நாட்குறிப்பில் உள்ளது.

அ) கூவம் ஆ) அடையாறு
இ) கொற்றலையாற்று ஈ) பாலாற்று **[விடை: அ]**

12. பக்கிங்காம் கால்வாயில் மயிலை சீனி. வேங்கடசாமி, ப. ஜீவானந்தம் உள்ளிட்ட நண்பர்களுடன் படகுப் பயணம் செய்தவர்

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கண்ணதாசன் ஈ) காமராசர் **[விடை: ஆ]**

13. சென்னையிலே ஒருவாய்க்கால் புதுச்
சேரி நகர் வரை நீளும் – என்று 'மாவலிபுரச் செலவு' எனும் தலைப்பில் கவிதையாக்கியவர்

அ) மயிலை சீனி. வேங்கடசாமி ஆ) ப. ஜீவானந்தம்
இ) கண்ணதாசன் ஈ) பாரதிதாசன் **[விடை: ஈ]**

14. கி.பி. 1647இல் எழுதப்பட்ட பத்திரம் ஒன்றில் ''தொண்டமண்டலத்துப் புழல் கோட்டத்து ஞாயிறு நாட்டுச் சென்னப்பட்டினம்' என்று காணப்படும் குறிப்பால் அறியப்படும் செய்தி

அ) குப்பம் நகரமாக மாற்றம் பெற்ற வரலாறு ஆ) வளமிகு சென்னையின் வணிக மேம்பாடு
இ) சென்னை மக்களின் செல்வ வாழ்க்கை ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

15. மயிலாப்பூருக்கு வடக்கே சில குப்பங்கள் மட்டுமே இருந்த மணல்வெளியை ஆங்கிலேயர் குடியேற்றத்துக்கான இடமாகத் தேர்ந்தெடுத்தவர்

அ) பிரான்சிஸ் டே ஆ) கால்பர்ட் இ) இராபர்ட் கிளைவ் ஈ) தாமஸ் பிட் **[விடை: அ]**

16. கூவம் ஆற்றை .................. என்றும் அழைத்தனர்.

www.kalvikadal.in

அ) வடபழனி ஆறு ஆ) திருவல்லிக்கேணி ஆறு
இ) மாதவரம் ஆறு ஈ) பல்லாவரம் ஆறு **[விடை: ஆ]**

17. பொருத்திக் காட்டுக.

| | | | |
|---|---|---|---|
| அ) | வடசென்னை | - | 1. பாலாறு |
| ஆ) | தென்சென்னை | - | 2. கூவம் |
| இ) | மத்தியசென்னை | - | 3. அடையாறு |
| ஈ) | தென்சென்னைக்கும்கீழ் | - | 4. கொற்றலையாறு |

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 2, 1, 4 இ) 1, 4, 3, 2 ஈ) 4, 1, 2, 3 **[விடை: அ]**

18. பிரான்சிஸ் டே மயிலாப்பூருக்கு வடக்கே சில குப்பங்கள் மட்டுமே இருந்த மணல்வெளியைச் சென்னப்பரின் இருமகன்களிடமிருந்து வாங்கிய நாள்

அ) 22.08.1639 ஆ) 23.09.1739 இ) 23.08.1640 ஈ) 24.10.1642 **[விடை: அ]**

19. செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே இருந்த பகுதி .................. என்று அழைக்கப்பட்டது.

அ) வெள்ளையர் நகரம் ஆ) கோட்டைநகரம்
இ) தமிழர் நகரம் ஈ) கருப்பர் நகரம் **[விடை: அ]**

20. செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குள் இருப்பவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பணியாளர்கள், வணிகர்கள் போன்றோருக்காக வெளியே அமைத்த குடியிருப்புகள் .................. என அழைக்கப்பட்டது.

அ) வெள்ளையர் நகரம் ஆ) கருப்பர் நகரம்
இ) கோட்டை நகரம் ஈ) தமிழர் நகரம் **[விடை: அ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



21. **பொருத்திக் காட்டுக.**

அ) வடசென்னைப் பகுதிகள் - 1. மதராஸ்
ஆ) தென்சென்னைப் பகுதிகள் - 2. மதராசப்பட்டினம்
இ) ஆங்கிலேயர்கள் - 3. சென்னைப்பட்டினம்

அ) 2, 3, 1 ஆ) 2, 1, 3 இ) 1, 2, 3 ஈ) 3, 2, 1 **[விடை: அ]**

22. **1646ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி சென்னைநகரின் மக்கள் தொகை**

அ) 18,000 ஆ) 25,000 இ) 19,000 ஈ) 29,000 **[விடை: இ]**

23. **சென்னை நகராட்சி உருவாக்கபப்ட்ட ஆண்டு**

அ) 1639 ஆ) 1646 இ) 1688 ஈ) 1768 **[விடை: இ]**

24. **ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் முதல் தலைவர்**

அ) பிரான்சிஸ் டே ஆ) எலி யேல் இ) தாமஸ் பிட் ஈ) தானியேல் **[விடை: ஆ]**

25. **எலியேலைத் தொடர்ந்து சென்னை மாகாணத்தின் தலைவரானவர்**

அ) பிரான்சிஸ் டே ஆ) தாமஸ் பிட்
இ) இராபர்ட் கிளைவ் ஈ) தாமஸ் மன்ரோ **[விடை: ஆ]**

26. **.................. ஆட்சிக்காலத்தைச் சென்னையின் பொற்காலம் என்பர்.**

அ) பிரான்சிஸ் டே ஆ) எலி யேல்
இ) தாமஸ் பிட் ஈ) இராபர்ட் கிளைவ் **[விடை: இ]**

27. **சென்னையில் ஐரோப்பிய முறைக் கல்வி கற்பிக்கும் நிறுவனங்கள் தோன்றிய நூற்றாண்டு**

அ) கி.பி. 17 ஆ) கி.பி. 16 இ) கி.பி. 18 ஈ) கி.பி. 19 **[விடை: இ]**

www.kalvikadal.in

28. **ஆசியாவில் உருவான முதல் ஐரோப்பியக் கல்வி முறையிலான புனித மேரி தேவாலய தர்மப் பள்ளி ஏற்படுத்தப்பட்ட ஆண்டு**

அ) 1615 ஆ) 1635 இ) 1675 ஈ) 1715 **[விடை: ஈ]**

29. **பொருத்திக் காட்டுக.**

அ) சென்னைக் கோட்டைக் கல்லூரி - 1) 1914
ஆ) கிறித்தவக் கல்லூரி - 2) 1857
இ) பிரசிடென்சி கல்லூரி - 3) 1840
ஈ) சென்னைப் பல்கலைக்கழகம் - 4) 1837
உ) இராணிமேரி கல்லூரி - 5) 1912

அ) 5, 4, 3, 2, 1 ஆ) 4, 5, 2, 3, 1 இ) 2, 3, 1, 5, 4 ஈ) 2, 3, 4, 1, 5 **[விடை: அ]**

30. **ஆங்கிலேயரின் நிதி உதவியின்றி இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட கல்வி நிறுவனம்**

அ) இராணிமேரிக் கல்லூரி ஆ) பச்சையப்பன் கல்லூரி
இ) சென்னைக் கோட்டைக் கல்லூரி ஈ) கிறித்துவக்கல்லூரி **[விடை: ஆ]**

31. **இந்தோ-சாரசனிக் கட்டடப் பாணியில் 1768இல் கட்டி முடிக்கப்பட்ட முதல் கட்டடம்**

அ) சேப்பாக்கம் அரண்மனை ஆ) சென்னைப்பல்கலைக்கழகம்
இ) ரிப்பன் கட்டடம் ஈ) விக்டோரியா அரங்கு **[விடை: அ]**

32. **இந்தியாவின் முதல் பொதுநூலகம்**

அ) சரசுவதிமகால் நூலகம் ஆ) கொல்கத்தா நூலகம்
இ) கன்னிமாரா நூலகம் ஈ) திருவனந்தபுரம் நூலகம் **[விடை: இ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



33. அண்ணாசாலைக்கு (மவுண்ட் ரோடு) அடுத்ததாக மதராசப்பட்டினத்தின் மற்றொரு முக்கியமான சாலை .................. நெடுஞ்சாலையாகும்.

அ) பூவிருந்தவல்லி ஆ) திருவொற்றியூர்
இ) சிந்தாதிரிப்பேட்டை ஈ) மவுலிவாக்கம் **[விடை: அ]**

34. 1856இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் அமைக்கப்பட்ட இடம்

அ) எழும்பூர் ஆ) கிண்டி
இ) இராயபுரம் ஈ) திருவான்மியூர் **[விடை: இ]**

35. ஆங்கிலேயருக்கும் சென்னை மாநகருக்கும் ஏறத்தாழ 300 ஆண்டுகாலமாக இருந்த உறவு முடிவுக்கு வந்த நாள்

அ) 1942 அக்டோபர் 2 ஆ) 1945 ஜூன் 15
இ) 1947 ஆகஸ்ட் 15 ஈ) 1950 ஜனவரி 26 **[விடை: இ]**

36. பொருத்திக் காட்டுக.

| | | | |
|---|---|---|---|
| அ) | சென்னை இலக்கியச் சங்கம் | - | 1) 1869 |
| ஆ) | கன்னிமாரா நூலகம் | - | 2) 1812 |
| இ) | கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் | - | 3) 1860 |
| ஈ) | அண்ணா நூற்றாண்டு நூலகம் | - | 4) 2010 |

அ) 2, 3, 1, 4 ஆ) 2, 1, 4, 3 இ) 1, 2, 3, 4 ஈ) 3, 1, 4, 2 **[விடை: அ]**

37. காலின் மெக்கன்சியின் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நூலகம்

அ) கன்னிமாரா நூலகம் ஆ) சரசுவதி மகால் நூலகம்
இ) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் ஈ) சென்னை இலக்கியச் சங்கம் **[விடை: இ]**

www.kalvikadal.in

38. ஆசியாவின் இரண்டாவது மிகப்பெரிய நூலகம்

அ) கன்னிமாரா நூலகம் ஆ) திருவனந்தபுரம் நூலகம்
இ) சரசுவதிமகால் நூலகம் ஈ) அண்ணாநூற்றாண்டு நூலகம் **[விடை: ஈ]**

## குறுவினா

1. **சென்னை நகராட்சி, மாகாணம் உருவான அமைப்பை விளக்குக.**

**நகராட்சி :**

1646ஆம் ஆண்டின் நகரின் மக்கள் தொகை 19000. இதை அறிந்து 1688இல் நகராட்சி உருவாக்கப்பட்டது.

**மாகாணம் :**

- ஆங்கிலேயர் ஆட்சி செய்வதற்கு வசதியாக தென்னிந்தியாவில் பல பகுதிகளை உள்ளடக்கிச் சென்னை மாகாணத்தை உருவாக்கினர்.
- தலைவர் - எலி யேல் அவரைத் தொடர்ந்து தாமஸ் பிட். இவரது ஆட்சிக்காலம் சென்னையின் பொற்காலம் என்பர்.

2. **மல்லியர்பா - விளக்குக.**

தொல் பழங்கால மானுட எச்சங்களை உணர்த்தும் பழமையான சென்னையின் ஒரு பகுதியாக விளங்கும் மயிலாப்பூர் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் தாலமி என்பவரால் 'மல்லியர்பா' எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





3. **சென்னை - ஓர் காட்டுமரம் விளக்குக.**

- இந்தியாவில் மூன்று நூற்றாண்டுகளாக ஆங்கிலேயரின் ஆட்சிக்கு அடித்தளமாகவும், அதிகார மையமாகவும் விளங்கிய கடற்கரை நகரம் மதராசப்பட்டினம்.
- அது இன்று பரப்பரப்பான சென்னை மாநகரமாக வளர்ந்திருக்கிறது. திட்டமிட்டு உருவாக்கப்படாத இந்நகரம் காட்டுமரம் போல் தன் மனம் போன போக்கில் வளர்கிறது.
- அதனால் சென்னை ஓர் காட்டுமரம் என்பது சாலப் பொருந்தும்.

4. **சென்னை நகரின் பழமையான கோயில்களை குறிப்பிடுக.**

திருவொற்றியூர், திருமுல்லைவாயில், திருவான்மியூர், மயிலாப்பூர் இவை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பாடல் பெற்ற தளங்கள் ஆகும்.

5. **சென்னை என்ற பெயர் வளர்ச்சி பெற்றதனை விளக்குக.**

- வடசென்னைப் பகுதியை மதராசப்பட்டினம் என்றும், தென்சென்னைப் பகுதியை சென்னைப்பட்டினம் என்றும் அமைத்தனர்.
- ஆங்கிலேயர் இரண்டையும் இணைத்து மதராஸ் என்று பெயர் சூட்டினர்.
- மதராஸ் பின்பு மெட்ராஸ் ஆகியது.
- இன்று சென்னை என்று பெருமையோடு விளங்குகிறது.

6. **மெட்ராஸ் ரெக்காட் ஆபீஸ் - குறிப்பு வரைக.**

ஆவணங்களை முறையாகக் கையாளும் பழக்கம் கொண்ட ஆங்கிலேயர்களால் உருவாக்கப் பட்டது. சாரசனிக் கட்டட முறையில் அமைந்தது. இன்று தமிழ்நாடு ஆவணக் காப்பகம் என்று அழைக்கப்படுகிறது.

www.kalvikadal.in

7. **சென்னைக்கு இயற்கை கொடுத்த வடிகால்கள் சிலவற்றைக் கூறுக.**

- வடசென்னை - கொற்றலையாறு, தென்சென்னை, அடையாறு.
- மத்திய சென்னை - கூவம், பாலாறு.

இவை நான்கையும் இணைப்பது, பக்கிங்காம் கால்வாய்.

8. **சென்னை நகரில் காணப்படும் சில கால்வாய்களைக் கூறுக.**

காட்டன் கால்வாய், பக்கிங்காம் கால்வாய், விருகம்பாக் கால்வாய்.

9. **சென்னையில் அக்காலத்தில் வடிகால்களாக எத்தனை பெரிய ஓடைகள், சிறிய ஓடைகள் காணப்பட்டன?**

- 18 பெரிய ஓடைகள், 540 சிறிய ஓடைகள்.
- மழைநீர் சிறிய ஓடைகள் வழியாக பெரிய ஓடைகளை அடைந்து பிறகு ஆறுடன் சேர்ந்து கடலில் கலக்கிறது.

10. **பாரதிதாசன் பக்கிங்காம்கால்வாயில் படகுப் பயணம் செய்தவர்கள் என்று யாரைக் குறிப்பிடுகிறார்?**

மயிலை சீனி. வேங்கடாசாமி, ப. ஜீவானந்தம்

11. **கூவம் நதியில் குளித்துவிட்டு கோயிலில் வழிபட்டவர் யார்?**

வள்ளல் பச்சையப்பர் கூவம் நதியில் குளித்துவிட்டு அருகில் உள்ள கோயிலில் வழிபட்டவர் ஆவார்.

12. **சென்னையில் கிழக்கிந்திய நிறுவனம் கால்பதிப்பதற்கு 400 ஆண்டுகளுக்கு முன்னர் புகழ்பெற்றிருந்த கிராமங்கள் யாவை?**

சேத்துப்பட்டு (சேற்றுப்பட்டு), நுங்கம்பாக்கம், வியாசர்பாடி, மாதவரம், கோயம்பேடு, தாம்பரம்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





13. **செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி, வெளியே குடியிருப்புகள் உள்ள பகுதி எவ்வாறு அழைக்கப்பட்டது?**
- வெள்ளையர் நகரம் = உள்ளே வீடுகள் இருந்த பகுதி.
- கருப்பர் நகரம் = வெளியே குடியிருப்புகள் இருந்த பகுதி.

14. **மதராசப்பட்டினம் என்று அழைக்கப்படும் பகுதி எது?**
உள்ளே வீடுகள் இருந்த பகுதி வெள்ளையர் நகரமும், வெளியே உள்ள குடியிருப்பு பகுதி கருப்பர் நகரமும் இணைந்த பகுதி. மதராசப்பட்டினம் என்று அழைப்பர்.

15. **கிழக்கிந்திய கம்பெனி முதன்முதலாக சென்னையில் செய்த வணிகம் யாது?**
கிழக்கிந்திய கம்பெனி முதன்முதலாக சென்னையில் செய்த வணிகம் துணி வணிகம் ஆகும்.

## சிறுவினா

1. **சென்னை தொன்மைய வாய்ந்த நகரம் என்பதுற்குச் சான்று தருக.**
- சென்னைக்கு அருகேயுள்ள குடியம், அத்திரம்பாக்கம் போன்ற பகுதியில் மேற்கொண்ட அகழாய்வு. கொற்றலையாற்றுப் படுகை. பல்லாவரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்கோடரி.
- கூடுவாஞ்சேரி, பல்லாவரம், புழல் போன்ற பகுதிகளில் இன்னும் கிடைக்கும் மானுட எச்சம்.
- மயிலாப்பூர் 2ஆம் நூற்றாண்டில் தாலமி என்பவரால் மல்லியர்பா எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டது. திருநெல்வேலிக்கேணியில் கிடைத்த நந்திவர்மன் கல்வெட்டு

போன்றவை சென்னையின் தொன்மையை விளக்கும் சான்றாக அமைகிறது.

2. **சென்னை அறிவின் நகரம் என்பதற்குச் சான்று தருக.**
- 18ஆம் நூற்றாண்டிலேயே ஐரோப்பிய முறைக் கல்வி கற்பிக்கும் நிறுவனம் தோன்றின.
- 1715இல் புனித மேரி தேவாலய தர்மப்பள்ளி
- 1812 சென்னைக் கோட்டைக் கல்லூரி
- 1840 மாநிலக் கல்லூரி (பிரசிடென்சி கல்லூரி)
- 1857 சென்னைப் பல்கலைக்கழகம்
- 1914 இராணிமேரி கல்லூரி

இவை மட்டுமல்லாமல் ஆங்கிலேயரின் உதவியின்றி இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட கல்லூரியாக பச்சையப்பன் கல்லூரி விளங்குகிறது. மருத்துவக் கல்லூரி, கவின்கலைக் கல்லூரி போன்ற பல்துறை சார்ந்த கல்லூரிகள் இங்குள்ளன.

3. **இந்தோ-சாரசனிக் கட்டடக்கலை - விளக்குக.**
முகலாயக் கட்டடக்கலை, பிரித்தானியக் கட்டடக்கலை, இந்தியப் பாரம்பரிய பாணி.
இவை மூன்றையும் கலந்து உருவாக்கப்பட்ட கட்டடக்கலை.

**சான்று:**
- 1768இல் உருவான சேப்பாக்கம் அரண்மனை
- எழும்பூர் தொடர்வண்டி நிலையம்
- ரிப்பன் கட்டடம்
- மத்தியத் தொடர்வண்டி நிலையம்
- உயர்நீதிமன்றம்
- விக்டோரியா அரங்கு

4. **மதராசப்பட்டினத்தின் போக்குவரத்துப் பற்றி சில சான்றுகள் தருக.**
- நடந்து சென்றபாதை, மாட்டுவண்டிகள் சென்ற பாதை ஆங்கிலேயர் வருகைக்குப் பிறகு சாலைகளாக மாறின.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in







- சென்னை அண்ணாசாலை (மவுண்ட் ரோடு) அடுத்ததாக பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை.
- 1856 உருவான இராயபுரத்தில் உருவான தொடர் வண்டி நிலையம்.
- சென்னை மத்தியத் தொடர்வண்டி நிலையம்.
- எழும்பூர் தொடர் வண்டி நிலையம்.

**5. சென்னையின் பழமை, அறிவுப் புரட்சி போன்றவற்றை சான்றுடன் நிறுவுக.**

- சென்னை இலக்கிய சங்கம் 1812ல் உருவான நூலகம்.
- 1860இல் கன்னிமாரா நூலகம் அருகங்காட்சியகமாக தொடங்கப்பட்டு இந்தியாவின் முதல் பொது நூலகம் என்ற பெருமை பெறுகிறது.
- 1869இல் உருவான கீழ்த்திசைச் சுவடி நூலகம்.2010இல் உருவான ஆசியாவின் இரண்டாவது பெரிய நூலகமான அண்ணா நூற்றாண்டு நூலகம்.
- தமிழாய்வு நூலகம்.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகம்.
- ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்.
- மறைமலையடிகள் நூலகம்.
- செம்மொழித் தமிழாய்வு நூலகம்.
- உ.வே.சா நூலகம் போன்றவை.

சென்னையின் பழமையையும் அறிவுப் புரட்சியையும் விளக்குவதாக அமைகிறது.

## கற்பவை கற்றபின்

kalvikadal.in

பக்கம்: 110

**1. ஒரு திட்டமிட்ட பெருநகரம் உருவாவதற்கு நீவிர் தரும் பரிந்துரைகளை, 'கனவு நகரம்' என்னும் தலைப்பில் ஒப்படைவாக உருவாக்குக.**

**கனவு நகரம்**

- தமிழகத்தின் திருச்சியை இரண்டாவது தலைநகரமாக மாற்றுவது. இதற்காக நாவல்பட்டு கிராமம் ஒன்றையும் உருவாக்கினர். ஆனால் அந்தக் கனவு திட்டம் இன்று காலாவதியாகிவிட்டது. அத்திட்டத்தைப் பரிந்துரை செய்து நிறைவேற்றுவதே என் கனவு.
- திருச்சியை இரண்டாவது தலைநகராக மாற்றி நாவல்பட்டு கிராமத்தில் 1000 ஏக்கரில் அண்ணா நகர் பகுதியைத் துணை நகரம் என்ற பெயரில் உருவாக்கினோம். பத்தாயிரம் குடும்பங்கள் வாழ்வதற்கு வசதி செய்யப்பட்டு அகலமான சாலைகள், ஆரம்ப சுகாதார திட்டம் உள்ளிட்ட பசுமை தொழிற்சாலைகள், தரமான கல்வி நிலையங்களின் பாதாள சாக்கடைகள் அமைக்க வேண்டும்.
- பாதாள சாக்கடை நீரைச் சுத்தம் செய்ய தனி இயந்திரம், இயற்கை வேளாண் அங்காடி, குளிரூட்டப்பட்ட நூலகம் சிறாருக்கான தனி நூலகம் எனத் தனி தனியாக நூலகங்கள் அமைக்க வேண்டும்.
- நெகிழி இல்லாத நகரமாகவும் திறந்த வெளி கழிப்பிடம் இல்லாத நகரமாகவும் உருவாக்க வேண்டும்.
- வீட்டுக்கு ஒரு மரம் கண்டிப்பாக வளர்க்க வேண்டும் என்று சட்டத்தை அமல்படுத்த வேண்டும்.
- தடையற்ற மினசாரம், தூய்மையான குடிநீர்; பாதுகாப்பு வசதி போன்ற வசதிகள் செய்ய வேண்டும் என்று பரிந்துரை செய்வேன்.

**★★★**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

இயல் 5
செய்யுள்

# தெய்வமணி மாலை

- இராமலிங்க அடிகள்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **‘உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்’ - இத்தொடர் உணர்த்தும் பண்பு**

அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு
இ) முரண்பண்பு ஈ) இவை அனைத்தும் [விடை: ஆ]

### குறுவினா

1. **‘தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள் வளர் தலமோங்கு கந்தவேளே’ தொடருக்குப் பதவுரை எழுதுக.**

அறம் செய்வார் நிறைந்திருக்கும் சென்னையின் கந்தக்கோட்டத்துக் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கந்தவேளே!

www.kalvikadal.in

### சிறுவினா

1. **இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?**

- சென்னை கந்தகோட்டத்துத் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கந்தவேளே! குளிர்ந்த முகத்தையுடைய தூய்மையான மாணிக்க மணியே! அருள் நிறைந்த சைவமணியே!
- எனக்கு ஒரு நெறிப்பட்ட மனதுடன் உன் மலர் போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும். உள்ளத்தில் ஒன்றும், புறத்தில் ஒன்றும் பேசும் வஞ்சகர் உறவு என்னைப் பற்றாதவாறு காக்க வேண்டும்.
- சிறந்த வாழ்வியல் நெறிகளைப் பின்பற்ற எனக்கு அருள்புரிய வேண்டும். மதமான பேய் என்னை அணுகாதிருக்க வேண்டும். பெண்ணாசையை என் மனம் துறக்க வேண்டும். என்றும் உன்னை மறவாதிருக்க வேண்டும்.
- நின் கருணையாகிய நிதி, நோயற்ற வாழ்வு உடையவனாக இருக்க வேண்டும் என்று கந்தகோட்டத்துக் கந்தவேளிடம் இராமலிங்கர் வேண்டுகிறார்.

### நெடுவினா

1. **சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்தக்கோட்டப்பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப் படுகின்றன?**

**மயிலாப்பூர்:**

- இளம்பெண்கள் ஆரவாரத்தோடு கொண்டாடும் திருவிழாக்கள் நிறைந்த வீதிகளையுடைய பெரிய ஊர் திருமயிலை.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





- அங்கு எழுச்சிமிக்க விழாக்கள் நிகழும் மயிலை கபாலீச்சரம் என்னும் கோவிலில் வீற்றிருக்கும் இறைவனுக்குப் பூசையிடும் பங்குனி உத்திர ஆரவார விழா அன்று முதல் இன்று வரை சிறப்பாக நடைபெறுகிறது.அவ்விழாவினைக் கண்குளிரக் காண வேண்டும்.

**கந்தகோட்டம்:**

- அறம் செய்வோர்கள் நிறைந்திருக்கும் சென்னையின் கந்தக்கோட்டத்துத் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கந்தவேளே! குளிர்ந்த முகத்தோற்றத்தையுடைய தூய மாணிக்க மணியே! மணிகளுள் அருள் நிறைந்த சைவமணியே!
- எனக்கு ஒரு நெறிப்பட்ட மனதுடன் உன்னுடைய மலர் போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்களின் உறவு வேண்டும். உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றும் பேசும் வஞ்சகரின் உறவு என்னைப் பற்றாதவாறு காக்க வேண்டும்.
- உனது புகழைப் பேச வேண்டும்; பொய் பேசாமல் இருக்க வேண்டும். சிறந்த வாழ்வியல் நெறியைப் பின்பற்ற எனக்கு அருள வேண்டும். மதப்பேய் என்னை அணுகாதிருக்க வேண்டும். பெண்ணாசையை என் மனம் மறக்க வேண்டும்.
- நல்ல அறிவும், கருணையாகிய நிதியும் நோயற்ற வாழ்வும் உடையவனாக நான் இருக்க வேண்டும். ஆறுமுகங்கள் உடைய தெய்வமாகிய மணியே இத்தகைய சிறப்புகளை எனக்கு அருள்வாயாக என்று கந்தகோட்டத்தில் பெருமானிடம் வேண்டுகிறார்.

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| **மலரடி** | - | உவமைத்தொகை |
| **மறவா** | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| **வளர்தலம்** | - | வினைத்தொகை |

www.kalvikadal.in

## உறுப்பிலக்கணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **நினைக்கின்ற = நினை + க் + கின்று + அ** | | | **வைத்து = வை + த் + த் + உ** | | |
| நினை | - | பகுதி | வை | - | பகுதி |
| க் | - | சந்தி | த் | - | சந்தி |
| கின்று | - | நிகழ்கால இடைநிலை | த் | - | இறந்தகால இடைநிலை |
| அ | - | பெயரெச்ச விகுதி | உ | - | வினையெச்ச விகுதி |
| **பேசுவார் = பேசு + வ் + ஆர்** | | | | | |
| பேசு | - | பகுதி | | | |
| வ் | - | எதிர்கால இடைநிலை | | | |
| ஆர் | - | பலர்பால் வினைமுற்று விகுதி | | | |

## புணர்ச்சி விதி

1. **உள்ளொன்று = உள் + ஒன்று**
   - ‘தனிக்குறில் முன் உயிர்வரின் ஒற்று இரட்டும்’ என்ற விதிப்படி, உள்ள் + ஒன்று என்றானது.
   - ‘உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ என்ற விதிப்படி (ள் + ஒ = ளொ) உள்ளொன்று எனப் புணர்ந்தது.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

2. **ஒருமையுடன் = ஒருமை + உடன்**
   - ‘இஈஐ வழி யவ்வும்’ என்ற விதிப்படி, ஒருமை + ய் + உடன் என்றானது.
   - ‘உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ (ய் + உ = யு) ஒருமையுடன் என்று புணர்ந்தது.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **சென்னையில் வாழ்ந்து வடலூர் சென்று ஆன்மிக மையத்தை ஏற்படுத்தியவர்**
   அ) வள்ளலார் ஆ) ஞானியாரடிகள்
   இ) கிருபானந்த அடிகள் ஈ) இவர்களில் எவருமிலர் **[விடை: அ]**

2. **வள்ளலாரது சிந்தனைகளின் ஊற்றுக்களமாக இருந்தது**
   அ) வள்ளுவர் கோட்டம் ஆ) கந்த கோட்டம்
   இ) தில்லை கோட்டம் ஈ) கணபதி கோட்டம் **[விடை: ஆ]**

3. **ஆன்மநேய ஒருமைப்பாட்டையும் சமய ஒருமைப்பாட்டையும் ஒளி வழிபாட்டையும் முன்வைத்த சீர்திருத்தச் சிந்தனை உருவான இடம்**
   அ) சென்னை ஆ) வடலூர் இ) கடலூர் ஈ) சிதம்பரம் **[விடை: அ]**

4. **உள்ளொன்று வைத்துப் புறம்மொன்று பேசுவார்**
   **உறவுகல வாமை வேண்டும் என்று பாடியவர்**
   அ) இராமலிங்க அடிகள் ஆ) ஞானியாரடிகள்
   இ) தாயுமானவர் ஈ) திரு.வி.க. **[விடை: அ]**

www.kalvikadal.in

5. **தெய்வமணிமாலையின் பாவகை**
   அ) கலி விருத்தம்
   ஆ) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
   இ) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
   ஈ) பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் **[விடை: ஈ]**

6. **துறவுக்கு எதிரான ஆசை என்று வள்ளலார் குறிப்பிடுவது.**
   அ) மண்ணாசை ஆ) பெண்ணாசை இ) பொன்னாசை ஈ) புகழாசை **[விடை: ஆ]**

7. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | மலரடி | - | 1. பெயரெச்சம் |
| ஆ) | மறவா | - | 2. வினையெச்சம் |
| இ) | வளர்தலம் | - | 3. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| ஈ) | நினைக்கின்ற | - | 4. வினைத்தொகை |
| உ) | வைத்து | - | 5. உவமைத்தொகை |

   அ) 5, 3, 4, 1, 2 ஆ) 4, 3, 5, 2, 1 இ) 2, 1, 3, 5, 4 ஈ) 5, 2, 1, 3, 4 **[விடை: அ]**

8. **இராமலிங்க அடிகள் இயற்றிய திருவருட்பாவில் ................ திருமுறையில் இடம்பெற்றுள்ளது தெய்வமணிமாலை.**
   அ) மூன்றாம் ஆ) நான்காம் இ) ஐந்தாம் ஈ) ஆறாம் **[விடை: இ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

9. **இராமலிங்க அடிகள் பிறந்த ஊர்**
அ) சிதம்பரத்தை அடுத்த மருதூர் ஆ) கடலூரை அடுத்த வடலூர்
இ) தஞ்சையை அடுத்த வல்லம் ஈ) மயிலாடுதுறையை அடுத்த தேரழந்தூர்
**[விடை: அ]**

10. **திருவருட்பா ................ திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.**
அ) நான்கு ஆ) ஆறு இ) பன்னிரு ஈ) பதினாறு **[விடை: இ]**

11. **மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் என்னும் உரைநடை நூல்களின் ஆசிரியர்**
அ) குமரகுருபரர் ஆ) இராமலிங்க அடிகள் இ) தாயுமானவர் ஈ) திரு.வி.க. **[விடை:ஆ]**

## குறுவினா

1. **இராமலிங்க அடிகளார் எழுதிய உரைநடை நூல்கள் யாவை?**
மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம்.

2. **இராமலிங்க அடிகளாரின் சீர்த்திருத்த சிந்தனை யாவை?**
ஆன்ம நேயம், சமய ஒருமைப்பாடு, ஒளி வழிபாடு.

3. **இராமலிங்க அடிகளார் திருவருட்பா மூலம் வெளிப்படுத்தும் செய்தி யாது?**
- வாடிய பயிரைக் கண்டபோது வாடினேன்.
- ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கும் தன்மையுடையன.

4. **வள்ளலார் தெய்வமணிமாலை எங்கு வீற்றிருக்கும் இறைவன் மீது பாடியுள்ளார்?**
சென்னை கந்தகோட்டத்து முருகப்பெருமான் மீது பாடியுள்ளார்.

5. **திருவருட்பா - குறிப்பு வரைக.**
- திருவருட்பா என்பது வள்ளலார் பாடிய பாடல்களின் தொகுப்பு.
- திருவருட்பா - 5818 பாடல்கள்.
- பா - ஆசிரியவிருத்தம்.
- தொகுப்பு - ஆறு திருமுறை.
- பாடப்பகுதி -ஐந்தாம் திருமுறை - தெய்வமணிமாலை.

## சிறுவினா

1. **வள்ளலார் - குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| பெயர் | - | இராமலிங்க அடிகளார் |
| பெற்றோர் | - | இராமையா - சின்னமை |
| உடன்பிறந்தோர் | - | சபாபதி, பரசுராமன், உண்ணாமுலை சுந்தராம்பாள் |
| பிறப்பு | - | அக்டோபர் 5, 1823 |
| ஊர் | - | மருதூர் - சிதம்பரம் |
| சிறப்பு | - | ஆன்மீகவாதி, சத்திய ஞான சபையை நிறுவியவர். |
| முழக்கம் | - | அருட்பெருஞ்ஜோதி-தனிபெருங்கருணை வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன். |
| நூல்கள் | - | மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம். |


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



## கற்பவை கற்றபின்

பக்கம்: 112

1. **தெய்வமணிமாலைப் பாடல் கருத்துகளுக்கு இணையான திருக்குறள்களைத் தொகுத்துத் தருக.**

புறம்கூறிப் பொய்த்துஉயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும் (குறள் - 183)

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் (குறள் 3)

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலின் குன்றல் இனிது (குறள் - 811)

அந்தணர் என்போர் அறவோர்மற்(று) எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான் (குறள் 30)

பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். (குறள் - 6)

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று (குறள் 297)

இனையர்இவர் எமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு. (குறள் - 790)

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு (குறள் 350)

✹✹★★★✹✹

இயல் 5 செய்யுள்

# தேவாரம்

- திருஞானசம்பந்தர்

## பாடநூல் வினாக்கள்

### குறுவினா

1. **கலிவிழா, ஒலிவிழா விளக்கம் தருக.**
   - கலிவிழா - திருமயிலையில் கொண்டாடும் எழுச்சிமிக்க விழா
   - ஒலிவிழா - கபாலீச்சரம் இறைவனுக்குப் பூசையிடும் பங்குனி உத்திர ஆரவார விழா.

### சிறுவினா

1. **பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?**
   - கோவில் திருவிழா மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளும் நாகரிகத்தின் வெளிப்பாடு.
   - ஊரின் பெருமைக்குரிய அடையாளங்களுள் ஒன்று.
   - விழாக்கள் நிறைந்த ஊர் திருமயிலை.
   - இங்கு இளம் பெண்கள் ஆரவாரத்தோடு கொண்டாடும் விழாக்கள் நிறைந்த வீதியுடைய ஊர்.
   - எழுச்சிமிக்க விழாக்கள் நிகழும்.
   - மயிலை கபாலீச்சரம் என்னும் கோவிலில் வீற்றிருக்கும் இறைவனுக்குப் மிசையிடும் பங்குனி உத்திர ஆரவார விழாவினைக் கண்டு இறைவன் அருள்பெற திருஞானசம்பந்தர் பதிவு செய்கிறார்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



## இலக்கணக் குறிப்பு

மாமயிலை - உரிச்சொற்றொடர்

## உறுப்பிலக்கணம்

| | |
|---|---|
| **கண்டான் = காண்(கண்) + ட் + ஆன்**<br>காண் - பகுதி (கண் எனக் குறுகியது விகாரம்)<br>ட் - இறந்தகால இடைநிலை<br>ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி | **அமர்ந்தான் = அமர் + த்(ந்) + த் + ஆன்**<br>அமர் - பகுதி<br>த் - சந்தி (ந் ஆனது விகாரம்)<br>த் - இறந்தகால இடைநிலை<br>ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி |

## புணர்ச்சி விதி

1. **பூம்பாவாய் = பூ + வாய்**
   பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும் என்ற விதிப்படி, பா-வுக்கு இனமான ம் தோன்றி, பூம்பாவாய் என்று புணர்ந்தது.

# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

www.kalvikadal.in

1. **மயிலாப்பூரில் இறைவனுக்குக் கொண்டாடப்படும் விழா**
   அ) பங்குனி உத்திர விழா ஆ) திருக்கார்த்திகை விழா
   இ) சித்திரா பௌர்ணமி விழா ஈ) தைப்பூச விழா **[விடை: அ]**

2. **தேவாரம் தந்த திருஞானசம்பந்தர் முத்துப்பல்லக்கில் செல்வது போன்ற காட்சி இடம்பெற்றுள்ள 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம் அமைந்துள்ள இடம்**
   அ) மயிலாப்பூர் ஆ) திருநெல்வேலி இ) திருவொற்றியூர் ஈ) வள்ளியூர் **[விடை: ஆ]**

3. **மயிலையில் வீற்றிருக்கும் இறைவன்**
   அ) கபாலீசுவரர் ஆ) தான்தோன்றிநாதர்
   இ) லிங்கேசுவரர் ஈ) பெருவுடையார் **[விடை: அ]**

4. **'மாமயிலை' என்பதன் இலக்கணக் குறிப்பு**
   அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம்
   இ) உரிச்சொற்றொடர் ஈ) உவமைத்தொடர் **[விடை: இ]**

5. **பொருத்திக் காட்டுக.**
   அ) ஐப்பசி - 1. விளக்குத் திருவிழா
   ஆ) கார்த்திகை - 2. திருவாதிரைவிழா
   இ) மார்கழி - 3. ஓணவிழா
   ஈ) மாசி - 4. கடலாட்டு விழா
   அ) 3, 1, 2, 4 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 1, 3, 4 ஈ) 1, 2, 4, 3 **[விடை: அ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

6. **பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளைப் பாடியவர்**

அ) திருநாவுக்கரசர் ஆ) திருஞானசம்பந்தர்

இ) சுந்தரர் ஈ) மாணிக்கவாசகர் **[விடை: ஆ]**

7. **திருஞானசம்பந்தரின் பாடல்களைத் தொகுத்தவர்**

அ) சேக்கிழார் ஆ) இராசராச சோழன்

இ) நம்பியாண்டார் நம்பி ஈ) இவர்களில் எவருமிலர் **[விடை: இ]**

8. **கண்டான் என்னும் சொல்லைப் பிரிக்கும் முறை**

அ) காண்(கண்) + ட் + ஆன் ஆ) கண் + ட் + ஆன்

இ) காண் + ட் + ட் + ஆன் ஈ) காண்டு + ஆன் **[விடை: அ]**

9. **சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் பாடிய பாடல்களின் தொகுப்பு பன்னிரு திருமுறைகளில் ................ என்று அழைக்கப்படுகின்றன.**

அ) தேவாரம் ஆ) திருவாசகம்

இ) திருச்சதகம் ஈ) திருத்தொண்டத்தொகை **[விடை: அ]**

## குறுவினா

1. **திருஞானசம்பந்தர் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளும் இடமாகக் குறிப்பிடுவன யாவை?**
   - கோவில் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளும் இடமாக உள்ளது.
   - ஊரின் பெருமைக்குரிய அடையாளங்களுள் ஒன்றாகவும் விளங்குகிறது.

www.kalvikadal.in

2. **திருஞானசம்பந்தர் எங்கு வீற்றிருக்கும் இறைவனுக்குப் பங்குனி உத்திர விழா கொண்டாடுகிறார்?**
   திருமயிலை என்று அழைக்கப்படும் மயிலாப்பூர் நகரில் வீற்றிருக்கும் இறைவனுக்கு விழா கொண்டாடுகிறார்.

3. **மலி விழா, கலி விழா, பலி விழா, ஒலி விழா விளக்கம் தருக.**
   - மலி விழா - விழாக்கள் நிறைந்தது
   - கலி விழா - எழுச்சி தரும் விழா
   - பலி விழா - பூசையிடும் உத்திர விழா
   - ஒலி விழா - ஆரவார விழா

4. **திருமுறைகள் எத்தனை? தொகுத்தவர் யார்?**
   திருமுறைகள் - 12, தொகுத்தவர் - நம்பியாண்டார் நம்பி.

5. **திருஞானசம்பந்தர் பாடிய தேவாரம் திருமுறையில் எந்தப் பகுதியில் வைக்கப்பட்டுள்ளன?**
   பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடியவை.

6. **சம்பந்தர் பாடலில் விரவிக் கிடக்கும் செய்திகள் சில கூறுக.**
   - சமயக் கோட்பாடுகள்.
   - இசை தத்துவம்.
   - தமிழுக்கு இருந்த உயர்நிலை.
   - சமுதாயத்தின் பொருளாதார கலை பண்பாட்டு நிலைகள்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## சிறுவினா

1. **திருஞானசம்பந்தர் - குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| பெயர் | - | சம்பந்தன் |
| பிறப்பு | - | சீர்காழி |
| பெற்றோர் | - | சிவபாதவிருதயர் - பகவதி அம்மையார் |
| காலம் | - | 7ஆம் நூற்றாண்டு |
| சிறப்பு | - | அறுபத்து மூவருள் முதலில் வைத்து எண்ணப்படும் நால்வருள் ஒருவர். முதல் மூன்று திருமுறைகள் எழுதியவர். |

2. **தேவாரம் - குறிப்பு வரைக.**
   - தேவாரம் - தே + வாரம் - பாமாலை; தே + ஆரம் - பூமாலை.
   - அப்பர், சுந்தரர், சம்பந்தர் பாடிய பாடல்களின் தொகுப்பு.
   - தேவாரம் மொத்தப் பாடல்கள் - 8227.
   - நம் பாடப்பகுதி முதல் மூன்று திருமுறையில் இரண்டாவது திருமுறை சம்பந்தர் பாடிய திருமயிலாப்பூர் பதிகம்.
   - தொகுத்தவர் - நம்பியாண்டார் நம்பி,

3. **மயிலாப்பூரின் சிறப்புகள் சிலவற்றைக் குறிப்பிடுக.**
   - மடலார்ந்த தெங்கின் மயிலை
   - இருளகற்றும் சோதித் தொன்மயிலை
   - கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரம்
   - கண்ணார் மயிலைக் கபாலீச்சரம்
   - கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம்
   - மங்குல் மதிதவழும் மாடவீதி மயிலாப்பூர்
   - ஊர்திரை வேலை உலாவும் உயர்மலை

www.kalvikadal.in

4. **மயிலைப் பதிகத்தில் காணப்பெறும் விழாக்களைக் குறிப்பிடுக.**

| மாதம் | | விழா |
|---|---|---|
| ஐப்பசி | - | ஓண விழா |
| கார்த்திகை | - | விளக்குத் திருவிழா |
| மார்கழி | - | திருவாதிரை விழா |
| தை | - | தைப்பூச விழா |
| மாசி | - | கடலாட்டு விழா |
| பங்குனி | - | பங்குனி உத்திர விழா |

## கற்பவை கற்றபின்

பக்கம்: 114

1. **உங்கள் பகுதியில் கொண்டாடப்படும் திருவிழக்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி நாளிதழ் ஒன்றின் செய்திப்பிரிவிற்கு அளிக்கும் வகையில் செய்தியாக எழுதுக.**

மேலாளர்,
தினத்தந்தி நாளிதழ் (செய்திப்பிரிவு),
கடலூர் அலுவலகம்,
கடலூர்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





வணக்கம்,

சிதம்பரம் நடராசர் கோயில் ஆருத்ரா தரிசனம் விழா மிகச் சிறப்பாக நடைபெற உள்ளது. அவ்விழாவினைப் பற்றிய தகவல்கள் நாங்கள் தருகிறோம். அதை உங்கள் நாளிதழிலில் வெளியிட்டு மக்கள் வருகைத்தந்து இறையருளை வேண்டுகிறோம்.

**செய்தி**

**ஆருத்ரா தரிசன நிகழ்ச்சி நிரல்**

***பஞ்சசபை, பொற்சபை, ஆகாய தலம் எனப் போற்றப்படும் சிதம்பரம் நடராசருக்கு ஆருத்ரா தரிசன விழா.***

உலகப்புகழ் பெற்ற நடராசர் ஆலயத்தில் ஆண்டுதோறும் இரண்டு விழாக்கள் நடைபெறும் ஆனி மாதம் திருமஞ்சன விழாவும், மார்கழி மாதம் ஆருத்ரா தரிசனமும் நடைபெறும். கொடியேற்றத்துடன் தொடங்கிய மறுநாள் காலை 4 மணிக்கு நடை திறக்கப்பட்டு சிவகாமிசுந்திரி அம்பாள் சமேத நடராஜ மூர்த்திக்குத் திருப்பள்ளி எழுச்சி, கோபூஜை, பஞ்சாங்கம் படித்தல்.

மார்கழி முதல் நாள் கொடியேற்றத்துடன் துவக்கம். தேரோட்டம் வரும் 25ஆம் தேதியும், 26ஆம் தேதி அதிகாலை 3 மணி முதல் 6 மணி வரை சிவகாமி சுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீமத் ஆனந்த நடராசமூர்த்திக்கு மகா அபிஷேகம் மற்றும் ஆருத்ரா தரிசனம் நடைபெற உள்ளது.

காலசந்தி பூஜை, ரகசிய பூஜை நடைபெறும். காலை 9.30 மணிக்கு சிறப்பு அலங்காரத்தில் நடராசர் சன்னதியின் எதிரே உள்ள கொடிமரம் முன்பு காட்சி தருவார்.

தீட்சிதர்கள் சிறப்பு பூஜைகள் செய்வர். 9.30 மணியளவில் மகாதீபாரதனை காண்பிக்கப்படும். தொடர்ந்து பஞ்சமூர்த்திகள் உட்பிரகாரம், வெளிப்பிரகாரத்தில் ஊர்வலமாகச் செல்வர்.

www.kalvikadal.in

இரவு 8 மணிக்கு கொடிமர பூஜை பிறகு பஞ்சமூர்த்திகள் தங்கம் வெள்ளி வாகனத்தில் 4 வீதிகளில் உலா,.

- ஞாயிறன்று வெள்ளி பூத வாகனத்தில் வீதி உலா
- 21ஆம் நாள் கருட வாகனத்தில் வீதி உலா
- 22ஆம் நாள் யானை வாகனத்தில் வீதி உலா
- 23ஆம் நாள் தங்ககைலாச வாகனத்தில் வீதி உலா
- 24ஆம் நாள் தங்கரதத்தின் பிஷாடனர் வெட்டுக்குதிரையில் வீதி உலா.
- 25ஆம் நாள் தேரோட்டம்.
- 26ஆம் நாள் அதிகாலை 3 மணி முதல் 6 மணி வரை ராஜசபை என்கிற ஆயிரங்கால் மண்டபத்தில் சிவகாமி சுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீமத் ஆனந்த நடராச மூர்த்திக்கு மகா அபிஷேகத்துடன் மதியம் 2மணிக்கு ஆருத்ரா தரிசனம் நடைபெற உள்ளது.

***இறையன்பர்கள் வருகை தந்து இறையருள் பெற வேண்டுகிறோம்.***

*******





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



இயல் 5

செய்யுள்

# அகநானூறு

– அம்மூவனார்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **'விளியறி ஞமலி' – இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?**

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி **[விடை: இ]**

### குறுவினா

1. **'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்' தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.**

பெருங்கடல் – சிறுகுடிப் பரதவர்.

### சிறுவினா

1. **'நெல்லின் நேரே வெண்கலம் உப்பு' – இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.**

உப்புக்குப் பதிலாக (மாற்றாக) நெல்லை விற்றனர் என்ற செய்தியின் மூலம் சங்கக் காலத்தில் பண்டமாற்று வணிகம் நிகழ்ந்தது என்பதை அறிய முடிகிறது.

**விளக்கம் :**

உமணர் ஒருவரின் மகள் அழகும் இளமையும் வாய்ந்தவள். தன் கைகளில் அணிந்திருந்த வளையல்கள் ஒலிக்க வீதிக்குச் சென்றாள். அப்போது அந்த வீதி வழியாக வந்த வணிகனை நோக்கி.

**'உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப்**
**பெற்றுக் கொள்ள வாரீரோ! என்று கூவினார்'.**

**'நெல்லின் நேரே வெண்கல் உப்பு எனச்'**
**சேரி விலைமாறு கூறலின் மனைய்'**

என்ற பாடலடிகள் மூலம் அறிய முடிகிறது.

### இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| **பெருங்கடல்** | - | பண்புத்தொகை |
| **உழாஅது** | - | செய்யுளிசை அளபெடை |
| **வெரீஇய** | - | சொல்லிசை அளபெடை |

### பகுபத உறுப்பிலக்கணம்

| | |
|---|---|
| **செய்த = செய் + த் + அ** | **சாற்றி = சாற்று + இ** |
| செய் - பகுதி | சாற்று - பகுதி |
| த் - இறந்தகால இடைநிலை | இ - வினையெச்ச விகுதி |
| அ - பெயரெச்ச விகுதி | |



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

**புணர்ச்சி விதி**

1. **பெருங்கடல் = பெருமை + கடல்**
   - 'ஈறுபோதல்' என்ற விதிப்படி, மை கெட்டு பெரு + கடல் என்றானது.
   - 'இனமிகல்' என்ற விதிப்படி, க-வுக்கு இனமான 'ங' தோன்றி, பெருங்கடல் என்று புணர்ந்தது.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **பொருத்திக் காட்டுக.**

| | | |
|---|---|---|
| அ) வேட்டம் | - | 1. கானவன் |
| ஆ) செறு | - | 2. மீன்பிடித்தல் |
| இ) உமணர் | - | 3. வயல் |
| ஈ) புனவன் | - | 4. உப்பு வணிகர் |

அ) 2, 3, 4, 1 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 4, 1, 2 ஈ) 2, 3, 1, 4 **[விடை: அ]**

2. **பொருத்திக் காட்டுக.**

| | | |
|---|---|---|
| அ) ஞமலி | - | 1. சேறு |
| ஆ) பகடு | - | 2. விலை |
| இ) அள்ளல் | - | 3. நாய் |
| ஈ) கொள்ளை | - | 4. எருது |

அ) 3, 4, 1, 2 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 1, 3, 4 ஈ) 4, 2, 1, 3 **[விடை: அ]**

www.kalvikadal.in

3. **பொருத்திக் காட்டுக.**

| | | |
|---|---|---|
| அ) என்றூழ் | - | 1. மலைவெடிப்பு |
| ஆ) விடர் | - | 2. சூரிய வெப்பம் |
| இ) கதழ் | - | 3. அஞ்சிய |
| ஈ) வெரீஇய | - | 4. விரைவு |

அ) 4, 3, 2, 1 ஆ) 2, 1, 4, 3 இ) 4, 2, 1, 3 ஈ) 1, 2, 3, 4 **[விடை: ஆ]**

4. **'மதர்கயல் மலைப்பின் அன்ன' – என்பதில் 'கயல்' என்னும் சொல்லின் பொருள்**

அ) மீன் ஆ) விழி
இ) விண்மீன் ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

5. **பெரிய கடல் பரப்பில் மீன் வேட்டையாடுபவர்**

அ) குறவர் ஆ) ஆயர் இ) எயினர் ஈ) பரதவர் **[விடை: ஈ]**

6. **'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' என்பது யாருடைய கூற்று?**

அ) பரதவரின் கூற்று ஆ) உமணர் மகள் கூவியது
இ) தலைவியின் கூற்று ஈ) தலைமகன் பாங்கற்கு உரைத்தது **[விடை: ஈ]**

7. **உப்பு ஏற்றிச்செல்லும் வண்டி சிக்கிக் கொண்ட இடம்**

அ) மணற்றிட்டு ஆ) கருஞ்சேறு
இ) வாய்க்கால் ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: ஆ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





8. ‘வெய்ய உயிர்க்கும் நோயாகின்றே’ என்று யார் யாரிடம் கூறியது?

அ) உமணர் மகள் தந்தையிடம் ஆ) தந்தை உமணர் மகளிடம்

இ) தலைமகன் பாங்கனிடம் ஈ) பாங்கன் தலைமனிடம் [விடை: இ]

9. உப்பு விளையும் களத்திற்கு ................. என்று பெயர்.

அ) அளம் ஆ) பாலம் இ) நிலம் ஈ) களி [விடை: அ]

10. பழங்காலத்தில் தமிழ்நாட்டில் சந்தைக்குரிய உற்பத்திப் பொருளாக விளங்கியது

அ) உப்பு ஆ) முத்து இ) துணி ஈ) ஏலம் [விடை: அ]

11. பொருத்திக் காட்டுக.

அ) பெருங்கடல் - 1. செய்யுளிசை அளபெடை

ஆ) உழாஅது - 2. சொல்லிசை அளபெடை

இ) வெரீஇய - 3. பண்புத்தொகை

அ) 3, 1, 2 ஆ) 3, 2, 1 இ) 1, 2, 3 ஈ) 2, 1, 3 [விடை: அ]

12. பாடல் வைப்பு முறையில் பாடல் எண்ணிற்கு ஏற்பத் திணைகள் வரிசையாக வைத்துத் தொகுக்கப்பட்ட நூல்

அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) குறுந்தாகை ஈ) நற்றிணை [விடை: அ]

13. அகநானூறு ................. நூல்களுள் ஒன்று

அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு

இ) நீதி ஈ) பதினெண்கீழ்க்கணக்கு [விடை: அ]

www.kalvikadal.in

14. அகநானூறு ................. பிரிவுகளை உடையது.

அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து ஈ) ஆறு [விடை: அ]

15. பொருத்திக் காட்டுக.

அ) களிற்றியானை நிரை - 1) 100 பாடல்கள்

ஆ) மணிமிடை பவளம் - 2) 120 பாடல்கள்

இ) நித்திலக்கோவை - 3) 180 பாடல்கள்

அ) 2, 3, 1 ஆ) 1, 2, 3 இ) 3, 2, 1 ஈ) 1, 3, 2 [விடை: அ]

16. சரியானக் கூற்றைக் கண்டறிக.

i) அகப்பாடல்கள் மட்டுமே பாடியவர்களுள் ஒருவர் அம்மூவனார்

ii) நெய்தல் திணை பாடல்களைப் பாடுவதில் வல்லவர் அம்மூவனார்.

iii) இவரது பாடல்கள் எட்டுத்தொகையில் நற்றினை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு ஆகியவற்றிலும் தொகுக்கப்பெற்றுள்ளன.

அ) i), ii), சரி ஆ) ii), iii) சரி இ) iii) மட்டும் தவறு ஈ) மூன்றும் சரி [விடை: ஈ]

## குறுவினா

1. பரதவர்கள் தொழிலான வேட்டையாடுபவை, விளைவிப்பவை எவை?

வேட்டையாடுபவன் : கடல் பரப்பில் மீன் வேட்டையாடுபவர்

விளைவிப்பன : உப்பளங்களில் உழவு செய்யாமல் உப்பு விளைவிப்பவர்

2. உமணப் பெண்ணின் தோற்றத்தை விவரி.

- அழகும் இளமையும் வாய்ந்தவள்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





- அவள் தம் கைகளில் அழகிய வளையல்கள் ஒலிக்க தெருவில் கைவீசி நடப்பவள்.
- 'உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக்கொள்ள வாரீரோ!' என்று கூவினாள்.

3. **தலைமகன் பாங்கற்கு உரைத்ததை அகநானூற்றுப் பாடல் மூலம் விளக்குக.**
   - 'வண்டியை இழுக்கும் எருதுகளின் துன்பத்தைத் தந்தை போக்கியது போல. தலைவியைக் கண்டதனால் எனக்கேற்பட்ட துன்பத்தை நீ போக்குதற்கு உரியவன் என்று தலைவன் பாங்கனிடம் கூறினான்.
   - எருதைத் தலைவனுக்கும் தந்தையைப் பாங்கனுக்கும் உப்பின் எடையால் எருது வருந்தும் நிலைய காதல் வருத்தத்திற்கும் உள்ளுறை வைத்துப் பாடப்பட்டுள்ளது.

4. **உப்பங்கழி என்றால் என்ன?**

   கடலுக்கு அருகில் மணல் திட்டுகளில் கடல்நீர் தேங்கி இருக்கும் பகுதிக்கு உப்பங்கழி என்பர்.

5. **கல் உப்பை எவ்வாறு விளைவிப்பர்?**
   - உப்பங்கழிகளில் உள்ள கடல் நீரைப் பாத்திகளில் தேக்கி வெயிலில் ஆவியாக்கி உப்புப் படிவதற்கு ஏற்ற வகையில் அமைப்பர்.
   - இவ்வாறு அமைக்கப்பட்ட பகுதி ஆடைபோல் படியும் இந்த உப்பைக் கூட்டிச் சேகரித்துப் பக்குவப்படுத்தி விற்பனை செய்வர்.

6. **உப்பளம் என்றால் என்ன?**

   கடல் நீரைப் பாத்திகளில் தேக்கி வெயிலில் ஆவியாக்கி உப்பு படிவதற்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்ட இடத்தை உப்பளம் என்பர்.

## சிறுவினா

www.kalvikadal.in

1. **அகநானூறு - குறிப்பு வரைக.**
   - அகம் + நான்கு + நூறு.
   - எட்டுத்தொகை நூல்களுள் அகம் சார்ந்த நூல்.
   - நெடுந்தொகை என்றும் அழைப்பர்.
   - 13 அடி சிற்றெல்லையும் 31 அடி பேரெல்லையும் கொண்டது.
   - மூன்று பெரும் பிரிவுகளை உடையது:

     களிற்றியானை நிரை - 120; மணிமிடைப் பவளம் - 180; நித்திலக் கோவை - 100
   - திணை அமைப்பு:

     பாலை - 1, 3, 5, 7; மருதம் - 6, 16, 26; குறிஞ்சி - 2, 8, 12, 18

     நெய்தல் - 10, 20, 30; முல்லை - 4, 14, 24

   என்ற முறையில் திணை அமைப்பு அமைந்துள்ளது.

2. **அகநானூற்றுப் பாடலில் வரும் நெய்தல் திணையின் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் விளக்குக.**

   **திணை** - நெய்தல்

   பெரும்பொழுது : ஆறு பெரும்பொழுதுகளும்; சிறுபொழுது : எற்பாடு

   முதற்பொருள் : கடலும் கடல் சார்ந்த இடமும்

   **கருப்பொருள்:**

   தெய்வம் - வருணன்

   மக்கள் - பரதன், பரத்தியர்





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





| | | |
|---|---|---|
| உணவு | - | மீன் உப்புக்குப் பெற்றபொருள் |
| விலங்கு | - | முதலை, சுறா |
| பூ | - | நெய்தல், தாலை |
| மரம் | - | புன்னை |
| பறவை | - | கடற்காகம் |
| ஊர் | - | பட்டினம், பாக்கம் |
| பறை | - | மீன் கோட்பறை |
| யாழ் | - | விளரியாழ் |
| பண் | - | செவ்வழிப்பண் |
| தொழில் | - | மீன் பிடித்தல், உப்பு விளைத்தல் |

**உரிப்பொருள் :** இரங்கலும் இரங்கல் நிமித்தமும்

**சான்று:** ‘பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்’ எனத் தொடங்கும் அகநானூற்றுப் பாடல்.

## நெடுவினா

1. **அகநானூற்றுப் பாடல் வழியாகத் தலைமகன் பாங்கற்கு உரைத்த செய்தியை விளக்குக.**

- பழந்தமிழர்களின் தொழில் நிலத்தின் இயல்பைச் சார்ந்து அமைந்திருந்தது.
- கடற்கரையில் வாழும் மக்கள் மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல் போன்ற தொழில்கள் செய்து, அப்பொருட்களை பண்டமாற்று முறையில் உப்பு வணிகத்தைச் செய்தனர்.
- பரதவர் கடலில் மீன் வேட்டையாடுவர்.
- உப்பளங்களில் உழவு செய்யாமலே உப்பு விளைவிப்பர்.
- வெண்மையான உப்பை வண்டியில் ஏற்றுவர்.
- எருதுகளை விரட்ட தாழ்கோல் வைத்திருப்பர்.
- கோடைக்காலத்தில் வெப்பத்தால் பிளவுபட்ட குன்றைக் கடந்து தொலைவில் உள்ள ஊர்களில் விற்பனைச் செய்வர்.
- அத்தகைய உமணரின் பெண் அழகும், இளமையும் வாய்ந்தவள்.
- அழகிய வளையல்கள் ஒலிக்கத் தெருவில் நடந்து சென்று உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பைப் பெற்றுக் கொள்ள வாரீரோ! என்று கூவுகிறார்.
- கூவுவதைக் கேட்டு நாய் குரைக்கிறது.
- எதிர்பாராத அப்பெண் அச்சம் கொண்டு மீன்கள் போர் செய்வதுபோல் கண்கள் மருண்டன.
- மருண்ட அப்பெண்ணின் கண்களை நான் கண்டேன்.
- தினைப்புனம் அமைக்கும் கானவர் பழைய புனத்தைத் தீயிட்டு அழிக்கும்போது உருவாகும் புகையால் பெண்ணின் தந்தையின் வண்டியானது சேற்றில் சிக்கிக் கொண்டது.
- துன்பத்தில் உள்ள எருதுக்குத் தந்தை உதவி செய்தார்.
- எருது அடைந்த துன்பம் போல் பெண்ணின் கண்களால் நான் துன்பம் அடைந்தேன்.
- வண்டியை இழுக்கும் எருதுகளின் துன்பத்தைத் தந்தை போக்கியது போல் எனக்கு ஏற்பட்ட துன்பத்தை நீ போக்க வேண்டும் என்று தலைமகன் பாங்கற்கு உரைத்தான்.

**உள்ளுறை :**

**எருதைத் தலைவனுக்கும்**
**தந்தையைப் பாங்கனுக்கும்**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







என உப்பின் எடையால் எருது வருந்தும் நிலையைக் காதல் வருத்தத்திற்கு உள்ளுறை வைத்துப் பாடப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 117

1. **தற்காலத்தில் வணிகத்தில் சிறந்து விளங்கும் மகளிர் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.**

ஒரு பெண் நம் சமூகத்தில் வெற்றி பெற வேண்டுமானால் 100 சதவீதம் வேலை செய்தால் போதாது. 200 சதவீதம் உண்மையான கடுமையான உழைப்பைக் கொடுக்க வேண்டும். அதன் அடிப்படையில் இன்றையக் காலத்தில் திருவாரூரில் பெண்கள் தங்கள் வாழ்க்கையை வணிகத்திலும் ஈடுபடுத்தி, சிறந்து விளங்குகின்றனர்.

அவ்வகையில் திருவாரூரில் பிறந்து சென்னையில் பிழைப்புத் தேடி வந்த பெண் இன்று வணிகத்தில் சிறந்து விளங்குகிறாள். அவரைப் பற்றி சில வரிகள்.

வறுமை, கல்வி, பொருளாதாரம், கவலை, சோகச்சூழல் என்று சொல்லிக் கொள்ளக்கூடிய சூழலில் சென்னை வந்த பெண் ஏதாவது செய்யத் துடிக்கிறாள்.

முன் அனுபவம் இல்லாத நிலையில் வடமாநில தோழி மூலம் பினாயில் தயாரிக்க ஆரம்பித்தார். பிறகு 500 ரூபாய் கடன் வாங்கி மூலப்பொருள் மூலம் பொருட்கள் வாயிலாக தாமே தனியாக தொழில் செய்ய ஆரம்பித்தார். தான் தயாரித்த பினாயிலை, அரசு அலுவலகங்கள், தபால் நிலையங்கள், உணவகங்களில் நேரிடையாகச் சென்று விற்க ஆரம்பித்தார். போதிய வருமானம் கிட்டியது. வியாபாரத்தை மேலும் சிறக்கச் செய்ய அதிக மூலதனம் வைத்து இரண்டு பெண்களை உதவிக்கு வைத்துக் கொண்டார்.

www.kalvikadal.in

தரம் உயர்தரம் என்ற நோக்கத்தோடு உழைத்த பெண்மணி இன்று தன்னிடம் ஐம்பதுக்கும் மேற்பட்ட பெண்களையும் வணிகத்தில் ஈடுபடச் செய்தார். தன் நிறுவனத்துக்கு நிலை ஏஜென்ஸி என்ற பெயர் வைத்து பினாயில் வணிகத்தில் சிறந்து விளங்குகிறார் என்றால் மிகையாகாது.

ஆணுக்குப் பெண் சமம் என்று மகளிர் தற்காலத்தில் வணிகத்தில் சிறந்து விளங்குகின்றனர் என்பதற்கு இதுவே சான்றாகும்.

2. **பழங்காலத் தொழில்கள் குறித்துக் கருத்தரங்க உரை உருவாக்குக.**

பழந்தமிழ் மக்கள் வாழ்வதற்காகப் பொருள் தேடுவதைக் கடமையாகக் கொண்டனர். அதற்காகப் பற்பல தொழில் வகைகளை மேற்கொண்டனர். தம் வாழிடங்களுக்கு ஏற்ப தொழில்களை தேர்ந்தெடுத்தனர். மலைநாட்டு மக்கள் தேனெடுப்பது தினை விதைப்பது, காட்டுப் பகுதியில் வாழ்பவர் நிரை மேய்ப்பது; பால் கடைவது; வயல்வெளியில் உள்ளோர் உழவு செய்து நகர் அமைத்து ஆட்சி செய்வது போன்ற பணிகளையும் செய்தனர். கடற்கரைப் பகுதியில் வாழ்வோர் உப்பு விளைத்தல்; முத்து குளித்தல்; அலை கடல் ஏறி வாணிகம் செய்தல்.

தொழில் செய்தே பொருள் தேடுவதே அவர் கொள்கை. பசுக்களுக்கு நீர் வேண்டும் என்று கருதி இரத்தல் கூட இழிவான செயலாகக் கருதினர். தாமே முயற்சி செய்து நீரைப்பெற்றுப் தர வேண்டும் என்றனர்.

தாமே முயன்று தேடும் பொருளையே தமக்குரியதாகக் கருதினர். எளிய முயற்சியில் வருவதை ஏற்க மறுத்தனர்.

முயற்சி உடையார் இகழ்ச்சியுடையார் என்பதற்கு ஏற்ப இயன்று பழந்தமிழர் தொழில்கள் செய்தனர்.

✸✸★★★✸✸





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

இயல் 5
துணைப்பாடம்

# தலைக்குளம்

- தோப்பில் முகமது மீரான்

## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

1. "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" – இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

**முன்னுரை:**

மக்கள் தொகைப் பெருக்கம், நாகரீக வளர்ச்சி, புலம்பெயர்வு, தலைமுறை மாற்றம் இதன் விளைவாக கிராமங்கள் தங்கள் முகவரியை இழக்கின்றன.

**நகரத்தை நோக்கிச் செல்ல காரணம் :**

- இயற்கையோடு இயைந்து வாழ்ந்த நம் தலைமுறையினர் காலமாற்றத்தாலும், பல்வேறு காரணங்களாலும் கிராமத்தைவிட்டு நகரத்தை நோக்கி நகர்கின்றனர்.
- பெரும்பாலும் கிராமங்களின் செயல்பாடுகள் அனைத்தும் கையேடு வாழ்க்கை போன்றது.
- அங்கு கடினமான உழைப்பும், விவசாயமும் தவிர பிற தொழில் சார்ந்த வளர்ச்சி காணப்படுவதில்லை.
- முறையான தொலைதொடர்பு, மருத்துவ வசதி சுகாதார அமைப்பு காண்பபடுவதில்லை.
- இந்தியாவில் 57 மில்லியன் குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளனர். இவர்களில் பெரும்பாலும் கிராமங்களில் வசிப்பவரே.
- இன்றும் சில கிராமங்களில் கோயில் நுழைவு தீண்டாமை, சாதி அமைப்பு, மதக்கலவரம் போன்ற சமூக விரோதச் செயல்கள் நடைபெறுகிறது.
- நகரத்திலோ எந்தவித பாகுபாடு இல்லாமல் சமவாய்ப்போடு வாழ இயலுவதால் நகரத்தை நோக்கி புலம் பெயர்கின்றனர்.
- மிகச்சரியான உள்கட்டமைப்புடன் கூடிய தரமானக் கல்வி. போதிய ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் நகர வாழ்க்கையை நோக்கி இடம் பெயர்கின்றனர்.

**அடிப்படை வசதியை நோக்கி நகர்வு :**

- வறுமை, கல்வியில் பின்னடைவு, குழந்தைத் தொழிலாளர்கள் போன்றவை இன்றும் கிராமங்களில் காண முடிகிறது.
- மின்சாரம், பேருந்து வசதி, தொழிற்சாலை போன்ற அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் நகர வாழ்க்கையை நாடுகின்றனர்.
- சாதிப் பாகுபாடு இல்லாமல் தரமான கல்வியோடு தொழிற்கல்வி, போட்டித்தேர்வை எதிர்கொள்ளும் பயிலகம், மின்னணு போன்ற நிறுவனங்கள் நகர்ப்புறத்தில் மேலோங்கி வருவதால் கிராமங்களை மக்கள் வெறுக்கின்றனர்
- இன்று நகரம் என்பது கிராமத்தைவிட பெரிய மனித குடியிருப்பு உள்ளதாக அமைகிறது. மக்கள் தொகைப் பெருக்கத்தால் வங்கிகள், வணிக நிறுவனங்கள் மேலும் வளர்ச்சியடைகிறது.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

முடிவுரை :

இத்தகைய காரணங்களால் கிராமங்களை விட்டு மக்கள் நகர்ப்புறம் நோக்கிச் செல்கின்றனர். இதனால் கிராமங்கள் தங்கள் அடையாளங்களை இழந்து முகவரியற்று கதியின்றி அமைகிறது.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **'தலைக்குளம்' என்னும் கதையின் ஆசிரியர்**
அ) பீர்முகமது ஆ) தோப்பில் முகமது மீரான்
இ) அப்துல் ரகுமான் ஈ) ஜெயகாந்தன் [விடை: ஆ]

2. **'தலைக்குளம்' என்னும் கதை இடம்பெற்றுள்ள சிறுகதைத் தொகுப்பு**
அ) துறைமுகம் ஆ) கூனன் தோப்பு
இ) சித்தன்போக்கு ஈ) ஒரு குட்டித் தீவின் வரைபடம் [விடை: ஈ]

3. **தோப்பில் முகமது மீரான் பிறந்த மாவட்டம் ............... ஊர் ............... ஆண்டு ...............**
அ) கன்னியாகுமரி, தேங்காய்ப்பட்டணம், 1944.
ஆ) தஞ்சாவூர், உத்தமதானபுரம், 1942.
இ) சென்னை, மயிலாப்பூர், 1940.
ஈ) திருவாரூர், வலங்கைமான், 1943. [விடை: அ]

4. **தோப்பில் முகமது மீரானின் படைப்புகள் வெளிவரும் மொழிகள்**
அ) தமிழ், ஆங்கிலம் ஆ) தமிழ், இந்தி
இ) தமிழ், கன்னடம் ஈ) தமிழ், மலையாளம் [விடை: அ]

www.kalvikadal.in

5. **தோப்பில் முகமது மீரான் 'சாய்வு நாற்காலி' என்னும் புதினத்திற்காகச் சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்ற ஆண்டு**
அ) 1994 ஆ) 1997 இ) 1999 ஈ) 2001 [விடை: ஆ]

6. **தமிழக அரசின் விருது பெற்ற தோப்பில் முகமது மீரான் படைப்புகள்**
அ) துறைமுகம், கூனன்தோப்பு ஆ) சாய்வு நாற்காலி, துறைமுகம்
இ) ஒரு குட்டித் தீவின் வரைபடம் ஈ) கூனன்தோப்பு, சாய்வுநாற்காலி [விடை: அ]

7. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | உம்மா | - | 1. அப்பா |
| ஆ) | வாப்பா | - | 2. அம்மா |
| இ) | ஏச்சு | - | 3. படித்துறை |
| ஈ) | கடவு | - | 4. திட்டுதல் |

அ) 2, 1, 3, 4 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 3, 1, 4 ஈ) 3, 2, 1, 4 [விடை: அ]

8. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | புதுமைப்பித்தன் | - | 1. மலைவெடிப்பு |
| ஆ) | சண்முகசுந்தரம் | - | 2. சூரிய வெப்பம் |
| இ) | ஜெயகாந்தன் | - | 3. அஞ்சிய |
| ஈ) | தி.ஜானகிராமன் | - | 4. விரைவு |
| உ) | தோப்பில் முகமது மீரான் | - | 5. நெல்லைத்தமிழ் |

அ) 4, 5, 3, 2, 1 ஆ) 5, 4, 3, 2, 1 இ) 3, 2, 1, 5, 4 ஈ) 2, 3, 4, 5, 1 [விடை: ஆ]





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



9. **சரியான கூற்றுகளைக் கண்டறிக.**

i) கி. ராஜநாராயணன் கோவில்பட்டி வட்டாரத் தமிழைப் பயன்படுத்திப் படைத்தார்.

ii) தம்முடைய வட்டார எழுத்திற்கு அவர் 'கரிசல் இலக்கியம்' என்று பெயரிட்டார்.

iii) சிறுகதைகள் வட்டாரம் சார்ந்து தொகுக்கப்பட்டுத் 'தஞ்சைக் கதைகள்' என்பது போன்று வெளியீடு பெறுகின்றன.

அ) i, ii சரி ஆ) ii, iii சரி இ) iii மட்டும் சரி ஈ) மூன்றும் சரி **[விடை: ஈ]**

10. **தலைக்குளம் கதையின் கருப்பொருள்**

அ) கிராமங்கள் மக்கள் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்ற இடமாக இருந்து பின்னர் நகரமாக மாறியதைப் பற்றிப் பேசுவது.

ஆ) தனக்கு உதவி செய்த மனிதனை தேடிக் கண்டுபிடித்து நன்றி பாராட்டுவது.

இ) பெண்களின் அவலநிலையும் ஆண்களின் அடக்குமுறையும்.

ஈ) இறந்து போன மனிதனின் சிறப்புகளைப் பேசுவது. **[விடை: அ]**

## கற்பவை கற்றபின்

பக்கம்: 121

1. **நீங்கள் இருக்கும் ஊரை வாழ ஏற்றதாய் மாற்ற மேற்கொள்ளும் வழிமுறைகளைத் தொகுக்க.**

- கழிவுநீர் வாய்க்கால் ஊரின் உள்ளே கழிவுநீர்த் தேங்காமல் செய்தல் வேண்டும்.
- உயர்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை (டுழகூ) மாதம் இருமுறை குளோரின் போட்டு சுத்தம் செய்தல் வேண்டும். காரணம் குடிக்கும் நீரால்தான் அனைத்து நோய்களும் உருவாகுவதால் கவனம் செலுத்த வேண்டும்.
- வீட்டுக் குப்பைகளை பொது இடத்தில் கொட்டாமல், துப்பரவு பணியாளர்களிடம் தரம் பிரித்து ஒப்படைக்க வேண்டும்.
- தெருவில் இடம் இருப்பின் வேப்பங்கன்று, புன்கன் கன்று இவற்றை நட்டு பராமரிக்கலாம்.
- ஆடு, மாடுகளைத் தெருவில் இரவு நேரங்களில் கட்டி அசுத்தம் செய்யக் கூடாது.
- தேவை இல்லாமல் தெருக்குழாய்களில் தண்ணீரைத் திறந்து விடுதல் கூடாது.
- தெருக்குழாய்களிலேயே குளிப்பது, துணி துவைப்பது கூடாது.
- சாலையோரங்களில், வெளியிடங்களில் மலம் கழிக்கக்கூடாது. ஏனெனில் மலம் கழிப்பதால்தான் மிகத் தொற்று நோய்கள் பரவுகிறது எனப் புரிந்து கொள்ள வேண்டும்.
- பொது நலம் காக்கும் எண்ணம் இயல்பாக இருக்க வேண்டும்.
- மேலும், தெருக்களில் எதையும் எரிப்பதைத் தவிக்க வேண்டும்.
- சுத்தம் சோறு போடு என்று எண்ண வேண்டும். - சுற்றுப்புறமே சுகாதாரம்.

2. **கடந்த முப்பது ஆண்டுகளாக உங்கள் குடும்பம் வாழ்ந்த வீட்டினைப் பற்றியும் சுற்றுச்சூழலில் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றியும் பெரியோர்களிடம் அறிந்து வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.**

*மாணவர்களே வணக்கம், வாழ்த்துக்கள்!*

நாங்கள் முப்பது ஆண்டுகளாக வாழ்ந்திருந்த வீடும் - சுற்றுச்சூழலில் ஏற்பட்ட மாறுதல்கள் பற்றி நான் கேட்டு அறிந்து கொண்டவற்றை உங்களிடம் பகிர்ந்து கொள்ளப் போகிறேன்.

- பண்புடையவர்களால்தான் இன்னும் இவ்வுலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்று சான்றோர் கூறுவர்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



- நல்லார் ஒருவர் உளறேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை - என்பது போல நல்லவர்களால் தான் மழை பொழியும்.
- உள்ளத்தால் (ஒருவன்) பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்.
- மேற்கண்ட பொன் மொழிகளுக்கு ஏற்ப என் குடும்பத்தார், என் தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா அனைவருமே நல்லொழுக்கத்துடன் வாழ்ந்தவர்கள்.
- அன்புடையவர்கள், புறம் பேசாதவர்கள், பொய் பேசாதாவர்கள், ஒப்புரவு உடையவர்கள், உண்டை விளம்பிகள் என எல்லா நற்குணங்கள் பெற்றவர்களாக வாழ்ந்திருக்கிறார்கள்.
- அவர்களின் வழித்தோன்றலாகிய எங்களை ஊதில் அனைவரும் அன்புடன் நடத்துவர்.
- உயிர்களிடத்து அன்பு வேணும் - என்னும் கொள்கையோடு வாழ்ந்ததால் ஊர் மக்களும் எங்கள் குடும்பத்தையே எடுத்துக்காட்டாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.
- வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை.

எனவே, மாணவச் செல்வங்களே நீங்கள் பிறர் விரும்புமாறு நல்லதை செய்து நலமோடு வாழுங்கள்.

✱✱★★★✱✱

இயல் 5

இலக்கணம்

# படிமம்

www.kalvikadal.in

## இலக்கணத் தேர்ச்சி கொள்

பக்கம்: 124

1. **படிமம் என்பதன் பொருள்**

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி **விடை: இ**

2. **'காலை இளம் வெயில் நன்றாக மேய தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' இக்கவிதையில் .............. பயின்று வந்துள்ளது.**

அ) பயன் படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம் **விடை: ஆ**

3. **கூற்று : உவமைஉருவகம்போலபடிமமும்வினை,பயன்,மெய்,உருஆகியவற்றின்அடிப்படையில் தோன்றும்.**

**காரணம் : எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியே கருத்தினை விளக்குவதில்லை.**

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி

இ) கூற்றும் சரி, காரணமும் சரி ஈ) கூற்றும் தவறு, காரணமும் தவறு **விடை: அ**

4. **மெய்ப்படிமத்துக்குரிய பாடலைத் தேர்வு செய்க.**

அ) நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந் தாங்கு

ஆ) கட்டில் நிணக்கும் இழிசினன் கையது

இ) சிவப்புக் கோட்டுக் கழுத்தும் பாசிமணிக் கண்ணும்

ஈ) வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப **விடை: இ**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

5. "மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது" - இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?
- இப்பாடலடிகளில் மெய் (வடிவப்) படிமம் வெளிப்படுகிறது.
- மாந்தோப்பு பருவ காலத்தின் அழகு பட்டாடையாக மரத்தைப் போர்த்தியிருப்பது பூக்களும் தளிர்களும் பட்டாடையை உடுத்திய பெண்ணின் தோற்றத்தை அல்லது பூத்திருக்கும் மரத்தின் தோற்றத்தோடு ஒப்பிட்டுள்ளது.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. "வெயில் மழைக்குச்
சொரணையற்ற எருமை
குத்திட்ட பாறையாக
நதிநீரில் கிடக்கும்" - என்று எருமையின் சுரணையைற்ற தன்மையைப் பாறையின் ஒப்பீட்டால் படிமப்படுத்துபவர்

அ) ஆ.வே.முனுசாமி ஆ) தேவதேவன் இ) ந. பிச்சமூர்த்தி ஈ) கல்யாண்ஜி **[விடை: ஆ]**

2. "கத்தல்களின் நெருக்கடியில்
தத்துவங்கள்
குழந்தைகள் போல்
அடிக்கடி தொலைந்துபோகும்" - என்று எழுதியவர்

அ) ஆ.வே.முனுசாமி ஆ) தேவதேவன் இ) ந. பிச்சமூர்த்தி ஈ) கல்யாண்ஜி **[விடை: அ]**

3. பொருத்திக் காட்டுக.

| | | | |
|---|---|---|---|
| அ) | தாழைமலர் | - | 1. பொன் |
| ஆ) | செருந்தி மலர் | - | 2. அன்னம் |
| இ) | முள்ளி மலர் | - | 3. முத்துகள் |
| ஈ) | புன்னை மலர் | - | 4. நீலமணி |

அ) 2, 1, 4, 3 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 1, 2, 4 ஈ) 2, 4, 3, 1 **[விடை: அ]**

4. எயிற்பட்டினம் உள்ள ஓய்மாநாட்டை ஆட்சி செய்தவன்

அ) அதியமான் ஆ) நல்லியகோடன் இ) பேகன் ஈ) நளங்கிள்ளி **[விடை: ஆ]**

5. 'அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவும்'- என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்

அ) பெரும்பாணாற்றுப்படை ஆ) சிறுபாணாற்றுப்படை
இ) மலைப்படுகடாம் ஈ) அகநானூறு **[விடை: ஆ]**

6. "மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கின்றது' என்ற படிமக்கவிதையின் ஆசிரியர்

அ) தேவதேவன் ஆ) ஆ.வே.முனுசாமி இ) ந. பிச்சமூர்த்தி ஈ) கல்யாண்ஜி **[விடை: இ]**

7. 'கட்டில் நிணக்கும் இழிசினன் கையது' என்னும் புறநானூற்றில் அமைந்துள்ள படிமம்

அ) வினைப்படிமம் ஆ) பயன்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம் **[விடை: அ]**

8. "காலை இளம் வெயில்
நன்றாக மேய
தும்பறுத்துத் துள்ளிவரும்
புதுவெயில்" - என்று கல்யாண்ஜி கவிதையில் படிமப்படுத்தப்படுவது

www.kalvikadal.in



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



அ) காலை இளம் வெயிலின் அழகு, கன்றின் செயலோடு ஒப்பிடுதல்

ஆ) கன்றின் செயல், காலை இளம் வெயிலின் அழகோடு ஒப்பிடுதல்

இ) கன்றின் செயல் இளைஞரோடு ஒப்பிடல்

ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

9. **'நோம்என் நெஞ்சே! நோம்என் நெஞ்சே' என்னும் குறுந்தொகை பாடலில் இடம்பெறும் படிமம்**

அ) வினைப்படிமம் ஆ) பயன்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம் **[விடை: ஆ]**

10. **"யானைதன் வாய்நிறை கொண்ட வலிதேம்பு தடக்கை**
**குன்றுபுகு பாம்பின் தோன்றும்" - என்ற அகநானூற்றுப் பாடலில் அமைந்துள்ள படிமம்**

அ) வினைப்படிமம் ஆ) பயன்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம் **[விடை: இ]**

11. **"கோவைப்பழ மூக்கும்**
**பாசிமணிக் கண்ணும்**
**சிவப்புக்கோட்டுக் கழுத்தும்**
**வேப்பிலை வாலும்" - என்னும் ந. பிச்சமூர்த்தியின் கவிதையில் அமைந்துள்ள படிமம்**

அ) வினைப்படிமம் ஆ) பயன்படிமம் இ) வடிவப்படிமம் ஈ) உருப்படிமம் **[விடை: இ]**

12. **'வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப' என்னும் அகநானூற்றுப் பாடலில் அமைந்துள்ள படிமம்**

அ) வினைப்படிமம் ஆ) பயன்படிமம் இ) வடிவப்படிமம் ஈ) உருப்படிமம் **[விடை: ஈ]**

## குறுவினா

1. **படிமம் என்றால் என்ன?**
   - படிமம் என்பது காட்சி என்பது பொருள்.
   - காட்சியையோ, கருத்தையோ காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்தி.

2. **படிமத்தின் பணிகள் யாவை?**
   - காட்சித்தன்மை கொண்டவற்றை அப்படியே காணும் வகையில் வெளிப்படுத்தி தெளிவை ஏற்படுத்தலாம்.
   - புதிய முறையில் தோற்றக் கூறுகளை எழுத்துக் காட்டலாம்.
   - கருத்துத்தன்மையுள்ள ஒன்றுக்கு ஒப்பீட்டைக் காட்டி காட்சித்தன்மை தரலாம்.
   - கருத்துக்களைப் புரிய வைக்கலாம்.
   - காட்சிக்குத் தெளிவுப்படுத்துவது, காட்சிப்படுத்துவது படிமத்தின் பணிகள் ஆகும்.

3. **காட்சிப் படிமத்தை சான்றுடன் விளக்குக.**

**"வெயில் மழைக்குச்**
**சொரணையற்ற எருமை**
**குத்திட்ட பாறையாக**
**நதி நீரில் கிடக்கும்"**

எருமையின் சுரணையற்ற தன்மையைப் பாறையின் ஒப்பீட்டால் படிமப்படுத்துகிறார் கவிஞர். இது காட்சிப் படிமம் ஆகும்.

4. **வினைப்படிவம் சான்றுடன் விளக்குக.**

கட்டிலைப் பின்னுகின்ற ஒருவனின் கை ஊசி எவ்வளவு வேகமாக வாரைச் செலுத்துமோ அவ்வளவு விரைவாக ஊரைக் கைப்பற்ற வந்த வீரனின் போர் என்று கீழ்வரும் பாடல் வினையைக் காட்சிப்படுத்துகின்றது.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

**"கட்டில் நிணக்கும் இழிசினன் கையது**
**போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று மாதோ;**
**ஊர்கொள வந்த பொருநனோடு**
**ஆர்புனை தெரியல் நெடுந்தகை போரே."**

5. **பயன் படிமம் விளக்குக.**

**"நோம்என் நெஞ்சே! நோம்என் நெஞ்சே!**
**புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்**
**கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்கு**
**இனிய செய்தநம் காதலர்**
**இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே!"**

இனிய செய்தல் இன்னா செய்தல் என்ற பயன்களை, இனிய வகையாக நெருஞ்சி பூவையும், இன்னாதவையாக நெருஞ்சி முள்ளையும் காட்சிப் பொருளால் படிமப்படுத்தியுள்ளார் கவிஞர்.

6. **யானை தன் வாய்நிறை கொண்ட வலிதேம்பு தடக்கை குன்றுபுகு பாம்பின் தோன்றும் - இப்பாடலில் பயின்று வரும் படிமத்தை விளக்குக.**

இப்பாடலில் **மெய்ப்படிமம்** பயின்று வந்துள்ளது. மதங்கொண்ட யானையானது தன் வாய்க்குள் துதிக்கையின் மூலம் உணவை வைக்கிறது. யானையின் வாய் மலைக்குகை வாயினைப் போல் உள்ளதாகவும். துதிக்கை மலைக்குகையில் நுழையும் பாம்பினைப் போல் உள்ளதாகவும் வடிவத்தைக் காட்சிப்படுத்தியுள்ளார்.

7. **புதுக்கவிதையில் கையாளும் உத்திகள் யாவை?**

உவமை, உருவகம், படிமம், குறியீடு, அங்கதம், முரண், சிலேடை, இருண்மை ஆகியன.

www.kalvikadal.in

8. **படிமத்தின் அடிப்படைக் கூறுகள் யாவை?**

வினை, பயன், மெய் (வடிவம்), உரு (நிறம்).

## சிறுவினா

1. **சங்கப் பாடலில் காணப்பெறும் உவமைகளில் படிமங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன - விளக்குக.**

**நல்லியக்கோடன் ஆட்சி செய்த ஓய்மா நாட்டின் காட்சி:**

**"அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவும்**
**தலைநாள் செருந்தி தமனியம் மருட்டவும்**
**கடுஞ்சூல் முண்டகம் கதிர்மணி கழாஅலவும்**
**நெடுங்கால் புன்னை நித்திலம் வைப்பவும்"**

எனும் பாடலில்

**"தாழை மலர் அன்னம் போலவும்**
**செருந்தி மலர் பொன்னைப் போலவும்**
**முள்ளி மலர் நீலமணியைப் போலவும்"**

புன்னை மரத்து அரும்பு முத்துப் போலவும் காட்சிப்படுத்துவதால் இப்பாடல் படிமங்களாகிறது. சங்கப்பாடலில் உவமை, உள்ளுறை மிகுதியாகக் காண முடிகிறது.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



## கற்பவை கற்றபின்

பக்கம்: 124

1. **இரவும் பகலும்**
   **எதிரெதிர் மோதிட**
   **உடைந்த பகலின் துண்டுகள் - இக்கவிதையில் படிம உத்தி பயன்படுத்தப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டுக.**

   இரவும் பகலும் மோதிக்கொள்ளும் வினையைக் காட்சிப்படுத்தியதால் இது வினைப்படிமம் ஆகும்.

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 126

### சான்றோர் சித்திரம்


சோமசுந்தர பாரதியார்
(1879-1939)

ஒருமுறை எட்டயபுரம் அரண்மனைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு புலவர் வந்திருந்தார். அரண்மனை அவையில் நடந்த புலவர் கூட்டத்தில் ஈற்றடி ஒன்றைக் கொடுத்துப் பாடல் ஒன்றை இயற்றித் தருமாறு வேண்டினார். அக்கூட்டத்திற்கு இரண்டு நண்பர்கள் சென்றிருந்தனர். பலரும் பாடல் இயற்றிக் கொடுக்க அனைத்துப் பாடல்களிலும் நண்பர்கள் இருவரின் பாடல்களே சிறந்ததெனத் தேந்தெடுத்த அப்புலவர் இருவருக்கும் 'பாரதி' என்ற பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தார். அவ்விருவரில் ஒருவர் சுப்பிரமணிய பாரதியார், மற்றொருவர் சோமசுந்தர பாரதியார்.

பேச்சாளர், சமூக சீர்திருத்தவாதி, விடுதலைப் போராட்ட வீரர், இலக்கிய ஆய்வாளர் எனப் பன்முக ஆளுமைகொண்ட நாவலர் சோமசுந்தர பாரதியார். சிறந்த வழக்கறிஞராகவும் திகழ்ந்தார். வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு வ.உ.சி.யின் அழைப்பை ஏற்று ரூ.100 சம்பளத்தில் சுதேசிக் கப்பல் நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். 'என்னிடம் இரண்டு சரக்குக் கப்பலோடு மூன்றாவதாக ஒரு தமிழ்க் கப்பலும் உள்ளது' என்று வ.உ.சி. பெருமிதத்துடன் இவரைக் குறிப்பிடுவார். இவர் தமிழ் இலக்கண, இலக்கிய ஆய்வுகளில் ஈடுபட்டவர்; அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியுள்ளார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னின்று செயலாற்றியவர். தசரதன் குறையும் கைகேயி நிறையும், திருவள்ளுவர், சேரர் தாயமுறை, தமிழும் தமிழரும் முதலிய பல நூல்களை இவர் இயற்றியுள்ளார். தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகியவற்றுக்கு உரை எழுதியுள்ளார். இவர் சமூக சீர்திருத்தங்களில் ஈடுபாடுகொண்டு சடங்குகள் இல்லாத திருமண விழாக்களை முன்னின்று நடத்தினார். வ.உ.சி. சுப்பிரமணிய சிவா ஆகியோர் மீதான வழக்குகளில் அவர்களுக்காக இவர் வாதாடியது குறிப்பிடத்தகுந்தது. அவருடைய தீந்தமிழுக்குச் சான்று.

"கட்டளை அல்லது நல்ல தமிழ் நடைக்கு, எளிதில் பொருள் விளங்கும் தெளிவு இன்றியமையாதது. இயல் வழக்கில்லா அருஞ்சொற்களும் பொருள் பல குறித்து மருளவைக்கும் பொதுச்சொற்களும் விரவும் நடையைச் செய்யுள் வழக்கில் ஒருவரும் விரும்பார். எளிமையும் தெளிவும் எழுத்திலும் பேச்சிலும் எம்மொழி நடைக்கும் இனிமையும் எழிலும் என்றும் உதவும் என்பது எல்லார்க்கும் உடன்பாடு.''.

*(நாவலர் சோமசுந்தர பாரதியின் நூற்தொகுதி 4 - 'நற்றமிழ்' என்னும் கட்டுரையிலிருந்து)*

**வினாக்கள்:**

1. **பாரதி பட்டம் பெற்ற இருவர் யார்?**
2. **பின்வரும் தொடருக்கு இலக்கணக்குறிப்பு எழுதுக: எளிமையும் தெளிவும்**
3. **புணர்ச்சி விதி தருக: வழக்கறிஞர்**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

4. சோமசுந்தர பாரதியார் எழுதிய நூல் ஒன்றினை எழுது.
5. சோமசுந்தர பாரதியார் ஈடுபட்ட போராட்டம் எது?

**விடைகள்:**

1. சுப்பிரமணிய பாரதியார், சோம சுந்தர பாரதியார்
2. எளிமையும் தெளிவும் - எண்ணும்மை
3. வழக்கறிஞர் - வழக்கு + அறிஞர்
   - உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் என்ற விதிப்படி, வழக்க் + அறிஞர் என்றானது.
   - உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி, (க் + அ= கி) வழக்கறிஞர் எனப் புணர்ந்தது.
4. தசரதனன் குறையும் - கைகேயின் நிறையும்
5. இந்தி எதிர்ப்புப் போராட்டம்

## தமிழாக்கம் தருக.

Periyar was not only a great social revolutionary; he was something more than that. He is known as a great champion of the underprivileged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deep-tooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene.

**தமிழாக்கம்:**

பெரியார் சமூக சீர்திருத்தவாதி மட்டுமல்லாமல், அதையும் தாண்டி அவரிடம் பல சிறப்புகள் உள்ளன. அவர் பிற்படுத்தப்பட்டோர்களுக்காகப் போராடி வெற்றி கண்டவர். அதுமட்டுமல்லாமல் அவருடைய செயல்கள் தொலைநோக்குப் பார்வை உடையது. எந்தப் பிரச்சினைக்கும் அவர் கூக்குரல் கொடுத்தார். அதனை ஆராய்ந்து புரிந்த பின் அதற்கான நிரந்தர தீர்வையும் கண்டுபிடித்து நிறைவேற்றினார். பெரியார் அவர்களின் வருகைக்கு முன்னர் சாதிகளுக்கு இடையே வேற்றுமை நம் சமூகத்தில் பரவி இருந்தது.

## இலக்கிய நயம் பாராட்டுதல்

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்! - *கவிமணி தேசிக விநாயகம்*

**தலைப்பு :**

தீண்டாமையை விரட்டுவோம்.

**ஆசிரியர் குறிப்பு :**

பெயர் : கவிமணி தேசிக விநாயகம்
பெற்றோர் : சிவதாணு - ஆதிலட்சுமி
பிறப்பு : 1976 - 1954





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





ஊர் : கன்னியாகுமரி - தேரூர்
நூல்கள் : ஆசிய ஜோதி, மலரும் மாலையும்

**திரண்ட கருத்து:**

மனிதனுக்கு பிறப்பால் புகழ் வராது. சிறப்பான புகழ் வரவேண்டுமெனில் நல்ல செயல்கள் செய்ய வேண்டும். நல்ல செயல்கள் செய்பவரை உலகம் நாடும். தீமை செய்பவரை ஒருவரும் தீண்டமாட்டார்.

**தொடை நயம்:**

**தொடையற்ற பாக்கள்**
**நடையற்று போகும்**

என்பதற்கு ஏற்ப மோனை, எதுகை, இயைபு அளபெடை நயங்கள் அமைந்துள்ளன.

**மோனை நயம் :**

**காட்டுக்கு யானை**
**பாட்டுக்கு மோனை**

முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை.

**சான்று :**

**ந**ன்மை
**நா**டும்
**தி**ன்மை
**தீ**ண்ட

**எதுகை நயம் :**

www.kalvikadal.in

**மதுரைக்கு வகை**
**செய்யுளுக்கு எதுகை**

முதல் எழுத்து அளவொத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றி வரத்தொடுப்பது எதுகை.

**சான்று :**

பி**ற**ப்பினால்
சி**ற**ப்பு
தி**ன்**மை
தீ**ண்**ட

**இயைபு :**

இறுதி எழுத்தோ ஓசையோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபு.

**சான்று :**

வாராத**ப்பா**
வேண்டும**ப்பா**
மேற்குலத்**தார்**
ஒண்ணா**தார்**

**அணி நயம் :**

**குளத்துக்கு தாமரை அழகு**
**கண்ணுக்கு மை அழகு**
**செய்யுளுக்கு அணி அழகு**

என்பதற்கு ஏற்ப இயல்பு நவிற்சி அணி வந்துள்ளது.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

**முடிவுரை:**

கற்றாருக்கும், கல்லாருக்கும் ஏற்ற வகையில் எதுகை, மோனை, இயைபு இயைந்தோட, கற்பனை காட்சியளிக்க, சந்தம் தாளமிட, சுவை உண்டாகி, நா ஏக்கமுற, அணியோடு அழகுபெறும் வகையில் இக்கவிதை அமைந்துள்ளது.

## மொழியோடு விளையாடு

பக்கம்: 127

### எண்ணங்களை எழுத்தாக்குக.

| | |
|---|---|
| உழைத்து உழவு செய்த<br>உப்பையெல்லாம்<br>வண்டியில் பூட்டி எருதோடு வணிகர்கள்<br>வாழ வழி கண்டு<br>உப்புக்கு மாற்றாக நெல்லைப் பெற<br>தன் மகளிரோடு உள்நாட்டுச் சந்தைக்குச்<br>செல்கின்ற காட்சி<br>வணிகர்களின் வீதிஉலாபோல்<br>காட்சி தருகிறது |  |

### பேச்சுவழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

www.kalvikadal.in

**எ.கா: இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு. நீயும் புரிஞ்சிக்கோ.**
**இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்.**

1. **நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்**
   நிலத்தை உழுதால்தான் வயிறு நிறையும்.
2. **அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.**
   அன்று அவனுக்குப் பணம் கொடுத்து உதவியிருக்க வேண்டியதுதான்.
3. **வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.**
   வீட்டுக்கு அருகில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தையை அப்பா எங்கு அழைத்துக்கொண்டு போனார்.
4. **புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது**
   பிள்ளைக்கு உடல்நிலை சரியில்லை. மூன்று நாட்களாக துன்பப்படுகிறது.
5. **ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்**
   இரவு சித்தப்பாவை காவலுக்குப் போகச் சொல்.

### வெட்டியும் ஒட்டியும் பேசுதல்

**கிராமங்கள் நகரமாவது வளர்ச்சியா?**

- கிராமங்களில் அழிவால் நகரங்கள் வளர்ச்சியடைந்தன. அதுமட்டுமல்லாமல் நவீன உலகிற்கு நம்மை அழைத்துச் செல்லக்கூடியதாக நகரங்கள் அமைகிறது.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

- நகரங்களின் வளர்ச்சியால் கிராமங்கள் அழிக்கப்படுகிறது. இயற்கைப் பாதிப்பு, தொழிற்சாலைப் பெருக்கத்தால் நீர் மாசுபாடு, மனவளம் குன்றல், (வேளாண்மை) விவசாயம் பாதிப்பு ஏற்பட்டு உணவுக்கு கையேந்தும் நிலை ஏற்படக்கூடும்.

## ஈற்றடி எழுதித் துளிப்பாவை நிறைவு செய்க.

எ.கா: பூட்டிய
வீட்டிலும்
பூத்துச் சிரிக்கிறது
முல்லை.

1. விழும்
மரங்கள்
அழியும் காடு
**வீடு**

2. அப்படியென்ன
சொல்லியது காற்று
கதித்தாடுகிறது மேகம்
**இடி**

3. பூத்த
மலரொன்று
பறக்கிறது
**தென்றல்**

4. வானம்
அழுகிறது
பூமி சிரிக்கிறது.
**மழை**

## கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.

**சங்க இலக்கியங்கள்**

**எட்டுத்தொகை**

| அகம் | புறம் | அகமும் புறமும் |
|---|---|---|
| நற்றினை | புறநானூறு | பரிபாடல் |
| குறுந்தொகை | பதிற்றுப்பத்து | |
| ஐங்குறுநூறு | | |
| அகநானூறு | | |
| கலித்தொகை | | |

**பத்துப்பாட்டு**

| அகம் | புறம் |
|---|---|
| குறிஞ்சிப்பாட்டு | மதுரைக்காஞ்சி |
| முல்லைப்பாட்டு | திருமுருகாற்றுப்படை |
| நெடுநல்வாடை | பொருநராற்றுப்படை |
| பட்டினப்பாலை | பெரும்பாணாற்றுப்படை |
| | சிறுபாணாற்றுப்படை |
| | கூத்தராற்றுப்படை |

**பத்தி அமைத்தல்:**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை சங்க இலக்கியங்கள். அவை இரண்டு வகைப்படும். ஒன்று எட்டுத்தாகை. மற்றொன்று பத்துப்பாட்டு. எட்டுத்தொகை என மூன்று வகையாகப் பிரிக்கப்படுகிறது. அகம் சார்ந்த இலக்கியங்கள் ஐந்து: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை. புறம் சார்ந்த நூல்கள்: புறநானூறு, பதிற்றுப்பத்து. அகமும் புறமும் சார்ந்த நூல் பரிபாடல் ஆகும். பத்துப்பாட்டு அகம், புறம் என இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அகம் சார்ந்த நூல்கள்: குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை. புறம் சார்ந்த நூல்கள்: மதுரைக் காஞ்சி, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை. இவற்றுள் ஆற்றுப்படை நூல்கள் ஐந்து ஆகும்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



## கீழ்க்காணும் பகுதியைப் படித்து பிறமொழிச் சொற்களைக் கண்டறிந்து தமிழ்ப்படுத்துக.

சர்க்கார் கொடுக்கும் சம்பளம் ஜீவனத்துக்குப் போதுமா? அதற்குள் ஜீவனம் நடத்த முடியுமா? என்று அவர் சிந்தித்தது கிடையாது. சிந்திக்க முயன்றதும் கிடையாது; எல்லாம் மாயை; உள்ளூர நிற்கும் ஆத்மா மாசுபடவில்லை. தான் வேறு இந்த மாயை வேறு. தான் இந்தப் பிரபஞ்சத்தை ஆட்டிவைக்கும் சக்தியின் ஒரு அம்சம் என்று திடமாக நம்பியிருந்தார். ஏனென்றால், அவரது ஆத்ம விலாசத்தைச் சோதனை போட்டுப் பார்க்க இதுவரை தெய்வத்துக்கோ மனுஷனுக்கோ அவகாசம் கிடைத்ததில்லை. மனுஷ வர்க்கம் முழுவதுமே தன்னைப் படைத்தவனுடைய தன்மையை ஸ்புடம் போட்டுப் பார்ப்பது போல தவறுக்கு மேல் தவறு செய்து கொண்டிருந்தது.

**விடை:**

அரசு கொடுக்கும் ஊதியம் **வாழ்வுக்குப்** போதுமா? அதற்குள் **வாழ்க்கை** நடத்த முடியுமா? என்று அவர் சிந்தித்தது கிடையாது. சிந்திக்க முயன்றதும் கிடையாது. எல்லாம் **பொய்த்தோற்றம்.** உள்ளூர நிற்கும் **உயிர்** மாசுபடவில்லை. தான் வேறு **தோற்றம்** வேறு. தான் இந்த **உலகத்தை** ஆட்டிவைக்கும் சக்தியின் ஒரு **வடிவம்** என்று திடமாக நம்பியிருந்தார். ஏனென்றால், அவரது **உயிர் அடையாளத்தைச்** சோதனைப் போட்டுப் பார்க்க இதுவரை தெய்வத்துக்கோ, **மனிதனுக்கோ நேரம்** கிடைத்ததில்லை. **மனித** வர்க்கம் முழுவதுமே தன்னைப் படைத்தவனுடைய தன்மையைப் **புடம்** போட்டுப் பார்ப்பது போல தவறுக்கு மேல் தவறு செய்து கொண்டிருந்தது.

## செய்து கற்போம்.

**நீங்கள் அறிந்த ஊர்களின் பெயர்க்காரணங்களைனத் தொகுத்து ஒப்படைவு உருவாக்குக.**

**சிதம்பரம்:**

இறைவன் நடராசர் அம்பலத்தில் ஆடல் புரிதலால் சிற்றம்பலம் என்றும் அதுவே சிதம்பரம் என்றாயிற்று என்பர். சித் + அம்பரம் = சிதம்பரம் என்றாயிற்று. சித் என்றால் அறிவு, அம்பரம் என்றால் ஆகாயம் அல்லது வெட்டவெளி. வெட்டவெளிக்கு எல்லைக் கிடையாது. அதுபோல எல்லையற்ற அறிவைக் கொண்டவராலும் புரிந்துகொள்ள முடியாதவர் நடராசர்.

**குற்றாலம்:**

குறு ஆல் என்பது ஒருவகை ஆலமரம். அத்தகைய மரங்கள் அதிகமாகக் காணப்படும் வனப்பகுதி என்பதால் குற்றாலம் என்று பெயர் பெற்றது. சங்ககாலத்தில் இது தேனூர் என்னும் பெயருடன் திகழ்ந்தது.

**சிவகாசி:**

தென் மதுரையை ஆண்ட ஹரிகேசரிபராக்கிரம பாண்டியன் வாரனாசியிலிருந்து (வாரனாசி என்பது காசி) ஒரு சிவலிங்கத்தைக் கொண்டுவந்து நிறுவினார். காசியிலிருந்து வந்த சிவலிங்கம் இங்கு நிறுவப்பட்டதால் காசி சிவலிங்கம் பெயராலே சிகவாசி ஆயிற்று.

**செங்கல்பட்டு:**

செங்கல்பட்டு சென்னையின் புறநகர் பகுதியாகும். சென்னையின் நுழைவாயில் என்றழைக்கப்படுகிறது. முன்பு இங்கு நீர்நிலைகளில் செங்கழுநீர் பூக்கள் நிறைந்திருந்தன என்பர். எனவே செங்கழுநீர்ப்பட்டு என்று அழைக்கப்பட்டது. அது மருவி செங்கல்பட்டு என்றானது.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





## நிற்க அதற்குத் தக

**(ஆளுமைத்திறன் என்பது ஒருவரது ஒழுங்கமைந்த இயங்கியம நடத்தை, உணர்வு, சிந்தனை ஆகியவற்றைக் குறிக்கிறது. தன்னம்பிக்கை, நேர்மறைச் சிந்தனைகள், அடிப்படை ஒழுக்கம், உடற்பயிற்சி ஆகிய அனைத்துமே ஆளுமைப் பண்புகளுள் அடங்கும்)**

- இமயா இருசக்கர வாகனம் ஓட்டப் பழகுகிறாள். ஓட்டுகையில் இடையில் தடுமாறிக் கீழே விழுகிறாள். கற்றுக்கொடுக்கும் அவளுடைய அண்ணன். 'உன்னால் இருசக்கர வாகனம் ஓட்ட இயலாது' என்கிறான். நீங்கள் இமயாவாக இருந்தால் என்ன சொல்வீர்கள்?

  **அண்ணா நீங்கள் எனக்குத் தொடர்ந்து ஒரு வாரம் பழக்கிக் கொடுங்கள். நிச்சயம் கற்றுக்கொள்வேன். முடியாது என்பது வெறும் பேச்சு, முடியும் என்பது உயிர் மூச்சு. எனவே, பயிற்சி மேற்கொண்டால் எந்த வேலையும் எளிமையாகும் அண்ணா.**

- பள்ளி ஆண்டுவிழாவிற்கு வருகை புரிந்த சிறப்பு விருந்தினருக்கு நன்றியுரை நிகழ்த்த ஆசிரியர் அழைக்கின்றார். அந்நிலையில் நீவிர் என்ன செய்வீர்?

  **நன்றியுரை ஆற்ற வருவதற்கு நிச்சயம் ஒத்துக்கொள்வேன். தலைவர், சிறப்பு விருந்தினர், ஆசிரியர், மாணவ மாணவியர், பெற்றோர் என வரிசைப்படுத்தி நன்றி என்றாலே போதுமே! மேலும், சிறப்பு விருந்தினர் கல்வியை விலைக்கு வாங்க முடியாது. கல்விக்கூடங்களில் கற்றால் மட்டுமே கல்வியைப் பெறலாம் என்று கூறியதை முன்வைத்து நன்றி சொல்வேன்.**

### படிப்போம் பயன்படுத்துவோம் (நீதி மன்றம்)

www.kalvikadal.in

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *Affidavit* | – | ஆணை உறுதி ஆவணம் | *Jurisdiction* | – | அதிகார எல்லை |
| *Allegation* | – | சாட்டுரை | *Plaintiff* | – | வாதி |
| *Conviction* | – | தண்டனை | *Sentence* | – | வாக்கியம் |

✸✸★★★✸✸



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



## இயல் 5 மாதிரி வினாத்தாள் - 5

வகுப்பு : 12

நேரம் : 2.30 மணி | மதிப்பெண் : 90

**I. பலவுள் தெரிக.** 6 × 1 = 6

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1. **சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல. அது நம்பிக்கை மையம். காரணம் -**
   அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
   ஆ) மென்பொருள், வன்பொருள் வாகன உற்பத்தியில் பங்கு
   இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை
   ஈ) அ, ஆ, இ அனைத்தும்

2. **கூற்று: இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.**
   **காரணம்: கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவோ இருந்தது.**
   அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி
   இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று சரி காரணம் சரி

3. **பொருத்துக.**
   அ) திருவல்லிக்கேணி ஆறு - 1. மாவலிபுரச் செலவு
   ஆ) பக்கிங்காம் கால்வாய் - 2. கல்கோட்டரி
   இ) பல்லாவரம் - 3. அருங்காட்சியகம்
   ஈ) எழும்பூர் - 4. கூவம்
   அ) 1, 2, 4, 3 ஆ) 4, 2, 1, 3 இ) 4, 1, 2, 3 ஈ) 2, 4, 3, 1

4. **'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' - இத்தொடர் உணர்த்தும் பண்பு**
   அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு
   இ) முரண்பண்பு ஈ) இவை அனைத்தும்

5. **'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?**
   அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

6. **படிமம் என்பதன் பொருள்.**
   அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

**II. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக** 8 × 1 = 8

7. **'காலை இளம் வெயில் நன்றாக மேய தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' இக்கவிதையில் .................. பயின்று வந்துள்ளது.**
   அ) பயன் படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

8. **கூற்று : உவமை உருவகம் போல படிமமும் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.**
   **காரணம் : எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியே கருத்தினை விளக்குவதில்லை.**
   அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ)கூற்று தவறு, காரணம் சரி
   இ) கூற்றும் சரி, காரணம் சரி ஈ)கூற்றும் தவறு, காரணமும் தவறு

9. **மெய்ப் படிமத்துக்குரிய பாடலைத் தேர்வு செய்க.**
   அ) நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந் தாங்கு
   ஆ) கட்டில் நிணக்கும் இழிசினன் கையது
   இ) சிவப்புக் கோட்டுக் கழுத்தும் பாசிமணிக் கண்ணும்
   ஈ) வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப

10. **மனுமுறை கண்ட வாசகம் என்னும் நூலின் ஆசிரியர்**
    அ) குமரகுருபரர் ஆ) இராமலிங்க அடிகள்
    இ) தாயுமானவர் ஈ) திரு.வி.க.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

11. **பொருத்துக.**
அ) சென்னைக் கோட்டைக் கல்லூரி - 1) 1914
ஆ) கிறித்தவக் கல்லூரி - 2) 1857
இ) பிரசிடென்சி கல்லூரி - 3) 1840
ஈ) சென்னைப் பல்கலைக்கழகம் - 4) 1837
உ) இராணிமேரி கல்லூரி - 5) 1912
அ) 5, 4, 3, 2, 1 ஆ) 4, 5, 2, 3, 1 இ) 2, 3, 1, 5, 4 ஈ) 2, 3, 4, 1, 5

12. **திருஞானசம்பந்தரின் பாடல்களை தொகுத்தவர்**
அ) சேக்கிழார் ஆ) இராசராசசோழன்
இ) நம்பியாண்டார் நம்பி ஈ) யாருமில்லை

13. **கண்டான் என்னும் சொல்லைப் பிரிக்கும் முறை .................**
அ) காண்(கண்) + ட் + ஆன் ஆ) கண் + ட் + ஆன்
இ) காண் + ட் + ட் + ஆன ஈ) காண்டு + ஆன

14. Plaintiff **என்பதன் தமிழ்ச் சொல்லை தேர்நதெடுக்கவும் :**
அ) சாட்டுரை ஆ) வாதி
இ) ஆணை உறுதி ஆவணம் ஈ) அதிகார எல்லை

## III. குறுவினா . 3 × 2 = 6

**அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**
15. கலிவிழா, ஒளிவிழா - விளக்கம் தருக.
16. ‘தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே’ - தொடருக்குப் பதவுரை எழுதுக.
17. ‘பெருங்கடல் வேட்டடச்சத்துச் சிறு குடிப்பரதவர்’ - தொடரில் உள்ள முரண் நயதைக் குறிப்பிடுக.
18. “மாந்தோப்பின் வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது” - இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது.

www.kalvikadal.in

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 2 = 4
19. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
20. படிமம் என்றால் என்ன?
21. மெட்ராஸ் ரெக்கார்ட் ஆபீஸ் குறிப்பு வரைக.

## IV. எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 × 2 = 14

22. **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
அ) செய்த ஆ) சாற்றி

23. **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**
அ) பெருங்கடல் ஆ) பூம்பாவாய்

24. **மரபுப்பிழையை நீக்கி எழுதுக.**
அ) எலிப்பிள்ளை ஆ) அணில் குட்டி

25. **‘நோம்என் நெஞ்சே! நோம்என் நெஞ்சே’ என்னும் குறுந்தொகை பாடலில் இடம்பெறும் படிமம்**
அ) வினைப்படிமம் ஆ) பயன்படிமம்
இ) மெய்படிமம் ஈ) உருப்படிமம்

26. **பொருத்திக் காட்டுக.**
அ) ஞமலி - 1. சேறு
ஆ) பகடு - 2. விலை
இ) அள்ளல் - 3. நாய்
ஈ) கொள்ளை - 4. எருது
அ) 3, 4, 1, 2 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 1, 3, 4 ஈ) 4, 2, 1, 3

27. **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**
அ) நிலத்தக் கௌறணும்மா அப்பதான் வகுறு நிறையும்.
ஆ) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







28. **பின்வரும் தொடரை படித்து ஏற்றாற்போல் வெட்டியும் ஒட்டியும் எழுதுக.**
கிராமங்கள் நகரமாவது வளர்ச்சியா?

29. **மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து சொற்றொடர் அமைக்கவும்.**
அ) விலை ஆ) விளை இ) விழை

30. **கலைச் சொல்லாக்கம் தருக.** Domestic Flight

**V. சிறுவினா.**

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

31. 'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' , இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.
32. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?
33. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

34. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.
35. சென்னை அறிவின் நகரம் என்பதற்கு சான்று தருக.
36. இந்தோ- சாரசனிக் கட்டடக்கலை விளக்குக.

**VI. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக :** **3 x 4 = 12**

37. அகநானூற்றுள் பாடலில் வரும் நெய்தல் திணையில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் பற்றி விளக்கு. **(அல்லது)** சொற்பொருள் பின்வரு நிலையணியை சான்றுடன் விளக்குக.

38. **கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதனை தமிழாக்கம் செய்க.**
Periyar was not only a great social revolutionary; he was something more than that. He is known as a great champion of the underprivileged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deep-tooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene.

www.kalvikadal.in

39. **பின்வரும் பாடலைப் படித்து ஏற்புடைய நயங்களை எழுதுக.**

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்! **- கவிமணி தேசிக விநாயகம**

40. **கீழ்க்காணும் பகுதியைப் படித்து பிறமொழிச் சொற்களைக் கண்டறிந்து தமிழ்ப் படுத்துக.**
சர்க்கார் கொடுக்கும் சம்பளம் ஜீவனத்துக்குப் போதுமா? அதற்குள் ஜீவனம் நடத்த முடியுமா? என்று அவர் சிந்தித்தது கிடையாது. சிந்திக்க முயன்றதும் கிடையாது; எல்லாம் மாயை; உள்ளூர் நிற்கும் ஆத்மா மாசுபடவில்லை. தான் வேறு இந்த மாயை வேறு. தான் இந்தப் பிரபஞ்சத்தை ஆட்டிவைக்கும் சக்தியின் ஒரு அம்சம் என்று திடமாக நம்பியிருந்தார். ஏனென்றால், அவரது ஆத்ம விலாசத்தைச் சோதனை போட்டுப் பார்க்க இதுவரை தெய்வத்துக்கோ மனுஷனுக்கோ அவகாசம் கிடைத்ததில்லை. மனுஷ வர்க்கம் முழுவதுமே தன்னைப் படைத்தவனுடைய தன்மையை ஸ்புடம் போட்டுப் பார்ப்பது போல தவறுக்கு மேல் தவறு செய்து கொண்டிருந்தது.

**VII. பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக :** **3 x 6 = 18**

41. சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்த கோட்டப்பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன.
42. "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" - நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரத் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.
42. "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

**VIII. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4 + 2 = 6**

44. அ) 'ஒருமையுடன்' - எனத் தொடங்கும் 'தெய்வமணிமாலை' என்ற பாடல்.
ஆ) 'சுடும்' என முடியும் குறள்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



இயல் 6

# சிறுகை அளாவிய கூழ்

கலை, அழகியல், புதுமைகள்

| | | |
|---|---|---|
| உரைநடை | திரைமொழி | |
| செய்யுள் | கவிதைகள் | நகுலன் |
| செய்யுள் | சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| செய்யுள் | மெய்ப்பாட்டியல் | தொல்காப்பியர் |
| துணைப்பாடம் | நடிகர் திலகம் | பாலச்சந்திரன் சுள்ளிக்காடு |
| இலக்கணம் | காப்பிய இலக்கணம் | |
| வாழ்வியல் | திருக்குறள் | திருவள்ளுவர் |

இயல் 6

உரைநடை உலகம்

# திரைமொழி

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **வேறுபட்டதைக் குறிப்பிடுக.**

அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு **[விடை: ஈ]**

### குறுவினா

1. **பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.**

- திரைப்படத்தின் உணர்வுகளை வெளிக்கொணர உதவுவது பின்னணி இசையே.
- பின்னணி இசைச் சேர்ப்பு, மவுனம் இவ்விரண்டும் சில வேளைகளில் திரையில் உணர்வுகளை வெளிக்கொணர உதவுகின்றன.
- இசை பாத்திரங்களின் மனக்கவலைகள் அலைக்கழிப்புகள் ஆகியவற்றை எதிரொலிப்பதாகவும் இருத்தல் அவசியமானது.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



## சிறுவினா

1. **திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.**

**காட்சியின் முக்கியத்துவம்:**

- காட்சி என்பது கதை நகர்வுக்கு உதவுவது.
- திரைப்படத்தின் காட்சிகள் சிறப்பாக அமைந்தால் வசனத்திற்கு இரண்டாம் இடம்தான்.
- திரைப்படத்தில் வசனம் இன்றிக் காட்சிகளை அடுத்தடுத்து வைப்பதன் மூலம் கதை சொல்லப்படும்.

**சான்று:**

- முதல் காட்சியில் தோழி ஒருத்தி கதாநாயகியிடம் தொடர்வண்டிப் பயணச்சீட்டைக் கொடுப்பாள்.
- அடுத்தக் காட்சியில் கதாநாயகி தொடர்வண்டியில் இருப்பாள்.
- முதல் காட்சியில் எண் 7, வீரையா தெரு... என்று ஒருவர் முகவரியைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அந்த முகவரியில் சென்று காட்சி நிற்கும்.

இவ்விரண்டு தரவுகளிலும் காட்சி அமைப்பே ஆற்றல் உள்ளதாக வரையறுக்கப்பட்டுள்ளது.

## நெடுவினா

1. **திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.**

**திரைப்படத்துறை - ஒரு கலை:**

www.kalvikadal.in

புதுமை வாழ்வில் எத்தனையோ அற்புதங்களைக் கண்டு மகிழ்கிறோம். நாடகத்தின் மறுமலர்ச்சியாக, மக்களை மயக்கும் கலையாக திரைப்படத்துறை தவிர்க்கமுடியாத ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது. இந்தத் துறை வளர்ச்சியின் பின்னால் எத்தனைத் துறைகள் அடங்கியிருப்பது பற்றி யாரும் திரும்பிப் பார்ப்பது கிடையாது.

சான்றாக, கதை, கதை-உணர்த்தும் நீதி, எண்ணத்தை ஈர்க்கும் வசனம், கதாநாயகன், நாயகிகள் தேர்வு, ஆடை அலங்காரம், இடங்கள் தேர்வு, புகைப்படக் கருவி, நடனக் குழுக்கள் என்று பட்டியல் நீண்டுகொண்டே இருக்கும். இதற்குள் எத்தனையோ நிகழ்வுகள் உள்ளன.

எல்லாக் கலைஞர்களும் அருகி வரும் நிலையில் இத்துறையின் வளர்ச்சி உயர்ந்த நிலையில் உள்ளது. ஒரு திரைப்படம் எடுக்க எத்தனை கோடிகள், எவ்வளவு செலவீனங்கள் என வளர்ந்து கொண்டே போகும். இதற்கு இடையில் குடும்பப் படங்கள், அரசியல் படங்கள், பக்திப் படங்கள் என்றும் பற்பல பிரிவுகளில் எடுக்கப்படுகின்றன.

இவற்றிற்கும் மேலாக ஒவ்வொரு பிரிவிலும் விற்பன்னர்கள் தேவைப்படுகிறார்கள். அதற்கென்று திரைப்படத்துறை சார்ந்த படிப்புகளும் உருவாகி உள்ளன. இத்துறையில் முழு ஈடுபாடு கொண்டால்தான் சிறக்கும்.

இதைப்பலகலைகளின்சங்கமம்என்றேகூறலாம்.நடிகர்களின்நடிப்புக்கலை,ஒப்பனைக்கலை, வசனம் (பேச்சுக்கலை), (கேமரா) படமெடுப்பதில் கலையம்சம், ஒலிப்பதிவுக்கலை, ஒளிப்பதிவுக் குழு நடனக் கலை என ஒட்டுமொத்த கலைஞர்களால் மட்டும்தான் இது நடந்தேறி வருகிறது.

கணினி சம்பந்தப்பட்ட ஒத்துழைப்புகளாலும் உதவியாலும் இத்துறை மெருகூட்டப்படுகிறது. கண்டுபிடிப்புகள் அதிகமானாலும் கலையம்சம் நிறைந்தது திரைப்படத்துறையே. எனவே கலைகளின் சங்கமம் என்பது பொருத்தமானதே.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

திரைப்படத்துறை ஆயிரம் பேரையல்ல, ஆயிரம் குடும்பங்களை வாழவைக்கிறது. கேளிக்கைகள் நிறைந்த இவ்வுலகில் திரைப்படத்துறைக்கு மட்டும் கலைஞர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், ஒப்பனைக்காரர்கள், ஆடை அலங்கார வல்லுநர்கள், ஆண்-பெண் நடனக் குழுக்கள், சண்டைக் காட்சிகளில் பங்குபெற எதிர்த்தலைவன் மற்றும் துணைவர்கள், உதவியாளர்கள் என எத்தனையோ ஆட்கள் இதை நம்பி இருக்கிறார்கள்.

திரைப்படத்துறையில் மட்டும் கால் வைத்து விட்டால் அவர்களுக்கு மற்ற தொழில் மறந்துவிடுகிறது. எல்லாம் இருந்தவர்கள் ஏன் இத்துறைக்கு வருகிறார்கள் என்று தெரிவதில்லை. சென்னை-கோடம்பாக்கத்தில் கலைத்துறை சார்ந்த குடும்பங்கள் ஆயிரக்கணக்கில் இதை நம்பியே வாழ்ந்து வருகின்றன.

“ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் இறைப்பணி” என்பது போல அனைத்துக் கலைஞர்களுக்கும் வாழ்க்கையும் வாய்ப்பும் கொடுக்கும் துறையாக திரைப்படத்துறை திகழ்கிறது. இந்தக் கலையைக் கற்க முடியாது. பயிற்சியால்தான் பெற முடியும். மறவோம் கலைஞர்களை! மதிப்போம் கலைஞர்களை!

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. சரியானக் கூற்றைக் கண்டறிக.**

i) 1895ஆம் ஆண்டு டிசம்பர் 28ஆம் நாள் மாலை 5 மணி, பிரான்சின் தலைநகரான பாரீசில் கிராண்ட் கபே விடுதி முன் ‘அதிசயம் பிறக்கிறது’ என்ற தலைப்பில் முதல் திரைப்படம் வெளியிடப்பட்டது.

ii) லூமியர் சகோதரர்களே இத்திரைப்படத்தை உருவாக்கினர்.

iii) இச்சகோதரர்கள் வெளியிட்ட படங்களில் ஒன்று ‘ரயிலின் வருகை’

அ) i சரி ஆ) ii சரி

இ) iii மட்டும் தவறு ஈ) மூன்றும் சரி **[விடை: ஈ]**

**2. அசையும் உருவங்களைப் படம்பிடிக்கும் கருவியைக் கண்டுபிடித்தவர்**

அ) லூமியர் சகோதரர்கள் ஆ) தாமஸ் ஆல்வா எடிசன்

இ) ஜார்ஜ் மிலி ஈ) இவர்களில் வெருமிலர் **[விடை: ஆ]**

**3. படப்பிடிப்புக் கருவியோடு திரையிடும் கருவியையும் சேர்த்து திரைப்படம் என்னும் விந்தையை உலகுக்கு அளித்தவர்கள்**

அ) லூமியர் சகோராரர்கள் ஆ) எடிசன் சகோதரர்கள்

இ) ஜார்ஜ் சகோதரர்கள் ஈ) இவர்களில் எவருமிலர் **[விடை: அ]**

**4. திரைப்படத்தில் கதையும் சொல்லலாம் எனக் கண்டுபிடித்தவர்**

அ) லூமியர் ஆ) தாமஸ் ஆல்வா எடிசன்

இ) ஜார்ஜ் மிலி ஈ) இவர்களில் எவருமிலர் **[விடை: இ]**

**5. சார்லி சாப்ளின் பிறந்த இடம்**

அ) தி ஹேக் ஆ) இலண்டன் இ) நியூயார்க் ஈ) பாரிஸ் **[விடை: ஆ]**

**6. சார்லி சாப்ளின் தாயார் ஒரு**

அ) மேடைப்பாடகர் ஆ) நடிகை இ) வழக்கறிஞர் ஈ) மருத்துவர் **[விடை: அ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

7. **சிறுவனான சாப்ளின் மேடையேறி ஆடிப்பாடிடக் காரணமாக அமைந்தது**
அ) மேடையில் பாடிப் பிழைத்த அம்மாவின் குரல் கெட்டுவிட்டதால்
ஆ) இயற்கையிலேயே மேடையில் ஆடிப்பாடிட வேண்டும் என்ற சார்லி சாப்ளின் ஆசையினால்
இ) நண்பர்கள் மேடையேறியே ஆக வேண்டும் என்று சாப்ளினை வற்புறுத்தியதால்
ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

8. **சார்லி சாப்ளினைப் பேசாப் பட நாயகனாக உருவாக்கிய தோற்றம்**
அ) லிட்டில் மாஸ்டர் ஆ) லிட்டில் டிராம்ப்
இ) லிட்டில் ஸ்டார் ஈ) மாஸ்டர் மார்ஷல் **[விடை: ஆ]**

9. **சார்லி சாப்ளின், வறுமைமிக்க தன் இளமை வாழ்வை ..................... என்ற வெற்றிப் படமாக்கினார்.**
அ) தி கிட் ஆ) சிட்டி லைட்ஸ்
இ) மார்டன் டைம்ஸ் ஈ) தி. கிரேட் டிக்டேட்டர் **[விடை: அ]**

10. **சார்லி சாப்ளின் தொடங்கிய பட நிறுவனம்**
அ) மார்டன் டைம்ஸ் ஆ) சிட்டி லைட்ஸ்
இ) யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் ஈ) யுனைடெட் மூவிஸ் **[விடை: இ]**

11. **தி கோல்டு ரஷ், தி சர்க்கஸ் போன்ற காவியப் படங்களை உருவாக்கியவர்**
அ) அர்னால்டு ஆ) ஜாக்கிஜான் இ) சார்லி சாப்ளின் ஈ) ஜார்ஜ் மீலி **[விடை: இ]**

12. **'சார்லி சாப்ளின்' எதிரிகளின் வாய்களை அடைத்து எடுத்த பேசும் திரைப்படம்**
அ) சிட்டி லைட்ஸ் ஆ) சிட்டி நைட்ஸ்
இ) வில்லேஜ் லைட்ஸ் ஈ) வில்லேஜ் நைட்ஸ் **[விடை: அ]**

www.kalvikadal.in

13. **சார்லி சாப்ளின் மூன்று ஆண்டு உழைப்பில் வெளியிட்ட திரைப்படம்**
அ) சிட்டி லைட்ஸ் ஆ) மார்டன் டைம்ஸ்
இ) தி கிட் ஈ) தி கோல்டு ரஷ் **[விடை: அ]**

14. **சார்லி சாப்ளினது சோதனைப் படமான 'தி கிரேட் டிக்டேட்டர்' வெளியான ஆண்டு.**
அ) 1932 ஆ) 1940 இ) 1936 ஈ) 1945 **[விடை: ஆ]**

15. **ஹிட்லர் புகழேணியில் ஏறிக் கொண்டிருந்த காலத்தில் அவரை விமர்சித்து வந்த முதல் படம்**
அ) தி கிட் ஆ) தி கோல்டு ரஷ்
இ) தி கிரேட் டிக்டேட்டர் ஈ) தி கிரேட் லீடர் **[விடை: இ]**

16. **'மனித குலத்திற்குத் தேவை போரல்ல; நல்லுணர்வும் அன்பும்தான்' என்பதை உணர்த்திய திரைப்படம்**
அ) தி கிட் ஆ) தி கோல்டு ரஷ்
இ) தி கிரேட் டிக்டேட்டர் ஈ) தி கிரேட் லீடர் **[விடை: இ]**

17. **சார்லி சாப்ளினது 'மார்டன் டைம்ஸ்' படம் ஏற்படுத்திய தாக்கம்**
i) அன்றைய தொழில் மய உலகின் கேடுகளை விமர்சனம் செய்வதாக இத்திரைப்படம் அமைந்தமையால் சாப்ளினுக்குப் பொதுவுடைமையாளர் என்னும் முத்திரை விழுந்தது.
ii) பல முதலாளிய நாடுகளில் படம் தடை செய்யப்பட்டது.
iii) இருந்தாலும் படம் வெற்றி பெற்றது.
அ) i), ii) சரி ஆ) ii), iii) சரி இ) iii) மட்டும் தவறு ஈ) மூன்றும் சரி **[விடை: ஈ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







18. **சார்லி சாப்ளின் இலண்டன் சென்று கொண்டிருந்தபோது பொதுவுடைமையாளரான அவரை நாடு கடத்தியதாக அமெரிக்கா அறிவித்த ஆண்டு**
அ) 1940 ஆ) 1950 இ) 1952 ஈ) 1942 **[விடை: ஆ]**

19. **சார்லி சாப்ளினுக்கு வாழ்நாள் சாதனையாளர் என்னும் வகையில் .................... விருது வழங்கப்பட்டது.**
அ) கோல்டன் குளோப் ஆ) ஆஸ்கார்
இ) பிரவு டு ஆஃப் அமெரிக்கா ஈ) கோல்டன் வேர்ல்டு **[விடை: ஆ]**

20. **பொருத்திக் காட்டுக.**
அ) LONG SHOT - 1. மீ அண்மைக் காட்சித்துணிப்பு
ஆ) MID SHOT - 2. அண்மைக் காட்சித்திணிப்பு
இ) CLOSEUP SHOT - 3. நடுக்காட்சித்துணிப்பு
ஈ) EXTREME CLOSEUP SHOT - 4. சேய்மைக்காட்சித் துணிப்பு
அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 2, 1 இ) 2, 1, 3, 4 ஈ) 3, 2, 1, 4 **[விடை: அ]**

21. **மனைவியின் வைரமாலையை விற்று, பிரெஞ்சுக்காரர் டுபான் என்பவரிடமிருந்து 2500 ரூபாய்க்கு ஒரு புரொஜக்டரையும் சில துண்டுப் படங்களையும் வாங்கியவர்**
அ) சாமிக்கண்ணு வின்சென்ட் ஆ) தியோடர் பாஸ்கரன்
இ) அஜயன் பாலா ஈ) அம்ஷன் குமார் **[விடை: அ]**

22. **சாமிக்கண்ணு வின்சென்ட் துண்டுப்படங்களைக் காட்ட ஆரம்பித்த இடம்**
அ) சென்னை ஆ) திருவனந்தபுரம் இ) திருச்சி ஈ) மதுரை **[விடை: இ]**

23. **சார்லி சாப்ளினது 'மார்டன் டைம்ஸ்' வெளியான ஆண்டு**
அ) 1932 ஆ) 1936 இ) 1940 ஈ) 1942 **[விடை: ஆ]**

www.kalvikadal.in

24. **1977ஆம் ஆண்டு வரை திரைப்படமே பார்க்காமல் வாழ்ந்த மக்களின் ஊர்**
அ) கர்நாடக மாநிலத்தில் ஹெக்கோடு ஆ) ஆந்திராவில் காக்கி நாடா
இ) கேரளத்தில் கோழிக்கோடு ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

25. **சாப்ளினுக்கு நல்ல வசனங்களுடன் படம் எடுக்கத் தெரியாது என்று கூறிவந்த விமர்சகர்களின் கூற்றைப் பொய்யாக்கும் வகையில் எடுக்கப்பட்ட படம்**
அ) தி கிட் ஆ) தி கோல்டு ரஷ்
இ) தி சர்க்கஸ் ஈ) தி கிரேட் டிக்டேட்டர் **[விடை: ஈ]**

26. **'தி கிரேட் டிக்டேட்டர்' படத்தில் ஹிட்லரை உருவகப்படுத்திட சார்லி சாப்ளினால் உருவாக்கப்பட்ட பாத்திரம்**
அ) ஹென்றி ஆ) ஹென்கோல் இ) மீலி ஈ) ஆடம்ஸ் **[விடை: ஆ]**

27. **திரைமொழி குறித்த பாடப்பகுதி .................... கட்டுரையை அடிப்படைச் சட்டமாகக் கொண்டது.**
அ) அஜயன் பாலா ஆ) சுஜாதா
இ) செழியன் ஈ) அம்ஷன்குமார் **[விடை: அ]**

## குறுவினா

1. **திரைப்படத் துறையின் தோற்றம் வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றியவர்களைக் குறிப்பிடுக.**
- தாமஸ் ஆல்வா எடிசன் (படப்பிடிப்புக்கருவி)
- பிரான்சின் லூமியர் சகோதரர்கள் (படப்பிடிப்புக்கருவி)
- ஜார்ஜ் மிலி (கதை சொல்லலாம் எனக் கண்டுபிடித்தவர்)





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





2. **திரைக்கதை - விளக்குக.**

- படத்தின் வெற்றிக்குக் காரணமாக அமைவது திரைக்கதை.
- திரைக்கதைகள் பலமுறை எழுதி, பலமுறை படித்துப் பார்த்துத் திருத்தி உருவாக்குவது.
- இத்தகைய உழைப்பு உள்ள திரைக்கதை மக்கள் மனதில் நிற்கும்.

3. **முப்பரிமாணக்கலை என்றால் என்ன?**

திரைப்படத்தில் நடிப்பவரை முன்பின் மேல் என்று பல கோணங்களில் படப்பிடிப்புக் கருவியால் இடம் மாற்றி மாற்றிப் படம் பிடிப்பது முப்பரிமாணக் கலை என்பர்.

4. **திரைப்படத்தில் மீ சேய்மைக் காட்சித்துணிப்பு என்றால் என்ன?**

கடற்கரையில் நின்று கடலைப் பார்க்கும் போது கண்கள் தாமாகவே அகண்ட கோணத்தைத் தேர்வு செய்வது மீ சேய்மை காட்சித்துணிப்பு என்கிறோம்.

5. **சேய்மைக் காட்சித் துணிப்பு என்றால் என்ன?**

பேருந்தைப் பிடிக்க சாலையைக் கடக்கும் போது சாலையின் இரு பக்கங்களைப் பார்க்கிறோம். அப்போது நம் கண்கள் இன்னும் கொஞ்சம் சுருங்கி, பொருள்கள் அசைவதைத் தொலைவில் இருந்து பதிவு செய்வது சேய்மைக் காட்சித் துணிப்பு ஆகும்.

6. **நடுக்காட்சித்துணிப்பு என்றால் என்ன?**

பேருந்தை விட்டு இறங்கி நடந்து போகும் போது எதிர்ப்படும் ஆட்களை நாம் இடுப்பளவில் மட்டும் கவனப்படுத்துகிறோம். கண், ஆளை முழுதாகப் பார்த்தாலும், நம் கவனம் இடுப்புவரை மட்டும் எடுத்துக் கொள்வது நடுக்காட்சித் துணிப்பு ஆகும்.

www.kalvikadal.in

7. **அண்மைக்காட்சித் துணிப்பு என்றால் என்ன?**

வீட்டிற்குள் நுழைந்து அம்மாவின் முகம் மட்டுமே நமக்குப் பதிவாவது அண்மைக்காட்சித் துணிப்பு ஆகும்.

8. **மீஅண்மைக்காட்சித் துணிப்பு என்றால் என்ன?**

செருப்பைக் கழற்றி வாசலில் விடும் போது கண் கீழே குனிந்து செருப்பை மட்டும் பார்ப்பது மீஅண்மைக்காட்சித் துணிப்பு.

9. **திரைப்படத்தின் காட்சிமொழி என்றால் என்ன?**

ஒரு மணி நேரப் பயணத்தை ஐந்தே காட்சித் துணிப்புகளாக இருபது நொடிகளில் பார்வையாளரிடம் உணர்த்துவது திரைப்படத்தின் காட்சிமொழி ஆகும்.

10. **திரைப்படக்கலை என்றால் என்ன?**

திரைப்படத்தில் தேவையான கோணங்களைப் பயன்படுத்தி அவற்றை வெட்டி, ஒட்டி, படத்தொகுப்புச் செய்து வெள்ளித்திரையில் ஒரு நல்ல கதையாகச் சொல்வது திரைப்படக்கலை என்பர்.

11. **படத்தொகுப்பு என்றால் என்ன?**

தேவையற்ற காட்சிகளை நீக்கி தேவையான காட்சிகளைப் பொருத்தமான வகையில் சேர்ப்பது படத்தொகுப்பு என்பர்.

12. **ஒற்றைக்கோணக் கலை என்றால் என்ன?**

ஒரு காட்சியை ஒற்றைக்கோணத்தில் மட்டும் நேரிடையாகக் காண்பது ஒற்றைக்கோணக் கலை என்பர்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

13. **நேரேட்டர் என்றால் என்ன?**

நேரேட்டர் என்பதன் பொருள் 'கதை சொல்லி' என்பதாகும். திரையரங்கில் மவுனப்படங்கள் ஓடிக் கொண்டிருக்க திரைக்கு அருகே ஒருவர் ஒலி வாங்கியைப் பிடித்துக் கதை சொல்லுபவரை நேரேட்டர் என்பர். அவர் வந்து நின்றாலே அனைவரும் கைத்தட்டுவர்.

## சிறுவினா

1. **காட்சி ஆற்றல் என்பதை விளக்குக. (அல்லது) காட்சி நகர்வு உத்தியை விளக்குக.**
   - காட்சி என்பது கதை நகர்வுக்கு உதவுவது.
   - திரைப்படத்தில் காட்சி சிறப்பானால் வசனம் இரண்டாம் இடம்தான்.
   - நாடகத்தில் விளக்கை அணைத்தும், திரையை இறக்கியும் காண்பிப்பர்.
   - முதல் காட்சி - கதாநாயகியிடம் தோழி தொடர்வண்டிப் பயணச்சீட்டைக் கொடுப்பாள்.
   - அடுத்தக்காட்சி - கதாநாயகி தொடர்வண்டியில் இருப்பாள்.
   - காட்சி மாறுவதை உணர்த்த சிறிது சிறிதாக மங்கலாகக் காட்டி இருள் ஆக்கிக்காட்டுவர். இதைக் காட்சி மறைவு என்பர்.
   - தொடங்கும் போது சிறிது சிறிதாக வெளிச்சம் கூட்டி முழுக்காட்சி வெளிப்படும் இதை காட்சி உதயம் என்பர்.
   - ஒரு காட்சி தொடங்கும் போது அடுத்தக்காட்சி தொடங்குவது கலவை / கூட்டு என்பர் (Mix).
   - பழைய காட்சியை அழித்துக் கொண்டே அடுத்தக் காட்சியை தோன்றுவதை அழிப்பு (Wipe) என்பர்.

   இவ்வாறு பல்வேறு உத்திகள் காட்சியில் கையாளப் படுகிறது.

www.kalvikadal.in

2. **குலஷோவ் விளைவு விளக்குக.**
   - மாடர்ன் டைம்ஸ் திரைப்படத்தில் முதலில் செம்மறியாடுகள் முண்டியடித்துச் செல்கின்றன.
   - அடுத்தக்காட்சியில் தொழிற்சாலைக்குள் மனிதர்கள் முண்டியடித்துக் கொண்டு நுழைகின்றனர்.
   - சமூகத்தில் மனிதர்கள் மந்தைகள் ஆவதை உணர்த்துகிறது.
   - காட்சிகளை மாற்றி மாற்றி வைப்பதன் மூலம் வெவ்வேறு காட்சிகளை உருவாக்கிக் காட்ட முடியும்.
   - இவ்வாறு காட்டுவதைக் 'குலஷோவ் விளைவு' என்பர்.

3. **நல்ல திரைப்படம் என்பது எது - விளக்குக.**
   - முறையான காட்சிமொழியுடன் நல்ல கலையாக உருவாக்கும் படத்தில் பொய்களும் இருக்க முடியாது.
   - நம் மூளையை மழுங்கச் செய்யும் கவர்ச்சிகளும் இடம் பெறாது.
   - இப்படைப்புகள் உண்மையைப் பேசும்.
   - அதன் மூலம் காண்பிக்கப்படும் வாழ்வியல், நம் அனுபவத்தை மேம்படுத்தி வாழ்க்கையை வளமாக்கும்.

4. **சாமிக்கண்ணு வின்சென்ட் சினிமாத் தொழில் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கினைக் கூறுக.**
   - பிரெஞ்சுக்காரர் டுபான் அவர்களிடம் 2500 ரூபாய்க்கு புரொஜக்டரையும், சில துண்டு படங்களையும் வாங்கினார்.
   - திருச்சி, திருவனந்தபுரம், மதுரை, மதராசு போன்ற இடங்களில் முகாமிட்டுப் படம் காட்டினார்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





- பிறகு லாகூர், பெஷாவர், லக்னோ போன்றப் பகுதியில் படம் காட்டினார்.
- 1909இல் மதராஸ் திரும்பி அங்கே எஸ்பிளனேட்டில் கூடாரம் போட்டுச் சலனப்படங்களைத் திரையிட்டார். புரொஜக்டர்கள் இறக்குமதி செய்து விற்க ஆரம்பித்தார்.

## நெடுவினா

**1. திரைப்படத் துறையில் சார்லி சாப்ளினின் பங்கினை விளக்குக.**

**இளமை :**

- இலண்டனில் பிறந்த சாப்ளின் வறுமையின் மடியில் வளர்ந்தவர்.
- இவரது தாய் வறுமையை மறக்கடிக்கக் கதைகள் சொல்வார்.
- அதன் மூலம் கலைஞனாக செதுக்கப்பட்டார்.
- மேடையில் பாடிய அம்மாவின் குரல் கெட்டுவிட இவரே மேடையில் ஆடிப்பாடி அசத்தினார்.
- நடிகராகி குடும்பத்தைக் காக்கக் கனவு கண்ட அவர் அமெரிக்கா சென்று திரை வாய்ப்பைப் பெற்றார்.

**தோற்றம் :**

- தொள தொள கால் சட்டை, இறுக்கமான கோட்டு, துண்டு மீசை, புதுவிதமான சேட்டை கொண்டவர்.
- ‘லிட்டில் டிராம்ப்’ என்று அவர் உருவாக்கிக் கொண்ட தோற்றம் அவரைப் பேசாப்பட நாயகனாக்கியது.

www.kalvikadal.in

**புகழ் :**

- அவர் ஊதியம் போல் புகழும் உயர்ந்தது.
- வறுமைமிக்க தன் இளமை வாழ்வை ‘தி கிட்’ என்ற வெற்றிப் படமாக்கினார்.
- ‘யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ்’ பட நிறுவனத்தைத் தொடங்கி வளர்ச்சி கண்டார்.
- ‘தி கோல்டு ரஷ்’, ‘தி சர்க்கஸ்’ போன்ற காவியங்கள் உருவாகின.

**வெற்றிப்பயணம் :**

- மரபான கருத்துருவாக்கங்களைத் தன் படங்களில் அடித்து நொறுக்கினார்.
- பேசாப்படங்களில் சேட்டைகள் மூலம் புகழ் பெற்ற அவர் பேசும் படங்களில் தோற்பார் என்று எதிர்பார்த்தனர்.
- எதிர்பார்ப்புகளை முறியடித்து ‘சிட்டி லைட்ஸ்’ என்ற படத்தின் வாயிலாக எதிரிகளின் வாய்களை அடைத்தார்.
- ‘மாடர்ன் டைம்ஸ்’ என்ற படத்தின் மூலம் உலகின் தொழில்மய கேடுகளை விமர்சனம் செய்தார்.
- பொதுவுடைடையாளர் என்ற முத்திரை விழுந்தது பல நாடுகளில் படம் தடை செய்யப்பட்டது, இருந்தாலும் வெற்றி பெற்றார்.
- 1940இல் ‘தி கிரேட் டிக்டேட்டர்’ என்ற திரைப்படம், மனித குலத்திற்குத் தேவை போர் அல்ல; நல்லுணர்வும் அன்பும்தான் என்று உணர்த்தியது.
- இப்படம் சாதனைப் படமாக மட்டுமல்லாமல் ஹிட்லரை விமர்சித்து உருவான முதல் படமாகவும் விளங்கியது.
- 1952இல் அவரை நாடு கடத்தியதாக அறிவித்தது. பிறகு சாப்ளின் சுவிட்சர்லாந்தில் குடியேறினார்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in





- தன் தவறை உணர்ந்து மீண்டும் சாப்ளினை அழைத்தது. அவரும் அமெரிக்கா வந்தார்.
- வாழ்நாள் சாதனையாளர் என்னும் வகையில் ஆஸ்கார் விருது வழங்கப்பட்டது.
- இன்றும் உலகின் பல பகுதிகளில் சாப்ளினின் டிராம் உருவம் குறியீடாக இடம் பெற்றிருப்பது அவரது உழைப்பும் வெற்றியுமே அடையாளம் ஆகும்.

**2. சார்லி சாப்ளியின் 'தி கிரேட் டிக்டேட்டர்' கதையைச் சுருக்கி வரைக.**

1940இல் சாப்ளினுக்கு நல்ல வசனப்படங்கள் எடுக்கத் தெரியாது என்ற காலக்கட்டத்தில் விமர்சகர்களின் கூற்றைப் பொய்யாக்கி வெற்றிக் கண்ட படம் 'தி கிரேட் டிக்டேட்டர்'.

- இப்படத்தில் ஹிட்லரை உருவகப்படுத்தி ஹென்கோல் என்ற கதாபாத்திரத்தை உருவாக்கினார்.
- அதே உருவம் கொண்ட இன்னொரு பாத்திரத்தைக் கடை நடத்தும் யூதர் இனத்தவராக அறிமுகம் செய்தார்.
- சர்வாதிகாரி ஹென்கோல் யூதர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தனர்.
- யூதரான கடைக்காரரும் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையிலிருந்து தப்பித்து ஷென்கோலின் உடையை திருடி அணிந்து கொள்கிறார்.
- தப்பித்த கைதியைத் தேடிய காவலர்கள் வழியில் வரும் ஹென்கோல் உடையணிந்த கடைக்காரருக்கு மரியாதை செய்தனர்.
- சாதாரண உடையில் வந்த ஹென்கோலை சிறையில் அடைக்கின்றனர்.
- ஒரே நாளில் இருவர் வாழ்க்கையும் தலைகீழாக மாறுகிறது.
- கடுமையான அரசியல் விமர்சனங்கள்.
- இறுதியாக, சர்வாதிகாரி வேடத்தில் இருக்கும் யூதர் கைது செய்யப்பட்டிருந்த அனைவரையும் விடுதலை செய்ய ஆணையிடுகிறார்.
- மாநாட்டில் மனிதகுல பேருரை ஆற்றுகிறார்.
- இப்பேருரைதான் இன்று வரை சிறந்த வசனமாகப் பேசப்படுகிறது.
- தாம் வாழும் காலத்தில் ஹிட்லரைக் கடுமையாக விமர்சித்த ஒரே படம் என்ற பெருமையும் உண்டு.
- இரட்டை வேடங்கள் எத்தனை வந்தாலும் அதில் மிகச் சிறந்த திரைப்படம் 'தி கிரேட் டிக்டேட்டர்'.

✸✸★★★✸✸





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

12

இயல் 6

செய்யுள்

# கவிதைகள்

– நகுலன்

6 இயல்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **ஆர்ப்பரிக்கும் கடல்**
**அதன் அடித்தளம்**
**மௌனம்; மகாமௌனம் – அடிகள் புலப்படுத்துவது**

அ) இரைச்சல் ஆ) குறைக்கும் கூத்தாடும்

இ) நிரைகுடம் நீர்தளும்பல் இல் ஈ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது.

[விடை: இ]

### குறுவினா

1. **மூச்சு நின்றுவிட்டால்**
**பேச்சும் அடங்கும் – கவிதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக.**

- "எரிவதை நிறுத்தினால் கொதிப்பது தானே அடங்கும்"
- "சான்றோர் கொள்கையும் மாண்டால் அடங்கும்"

www.kalvikadal.in

### சிறுவினா

1. **கவிதை என்பது கண்முன் நிகழ்வதையும் மனதில் நிகழ்வதையும் தொடர்புபடுத்திச் சொற்சிமிழில் அடைக்கும் முயற்சியே என்பதை நகுலன் கவிதையைக் கொண்டு நிறுவுக.**

1. நிரந்தரமாக இருக்க எண்ணினோம்.
நிரந்தரமில்லாமல் சென்றுவிடுகிறோம்.
2. உயர்ந்த கொள்கைகளும் உயிர்போனால்
உதாசினப்படுத்தப்படும்.
3. உண்மைகள் எல்லாம் சில உண்மைகளைத்
திரைமறைவு செய்வதற்கே.
4. ஆர்ப்பரிப்பில் அடங்காத மனம்
அமைதியில் அடங்கிவிடும்.
5. கடலின் உள்நிகழ்வே கடல் அலைகள்
மனதின் வெளிப்பாடே புறச்செயல்கள்

- நகுலனின் கவிதைகளே இங்கே பேசப்பட்டுள்ளன. நகுலனின் கவிதையின் முழங்கு பொருளே இவை.
- எனவே, கவிஞன் தான் நினைத்தவற்றைச் சொல்வடிவத்தில் சுருக்கிச் சொல்ல முற்படும்போது உதிர்ந்த முத்துக்களே இவை.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **நம் பாடப்பகுதியிலுள்ள 'கவிதைகள் ................ என்னும் தொகுப்பிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன.**

அ) நகுலன் கவிதைகள் ஆ) கண்ணாடியாகும் கண்கள்
இ) நாய்கள் ஈ) வாக்குமூலம் **[விடை: அ]**

2. **கவிஞர் நகுலனின் இயற்பெயர்**

அ) டி.கே. நீலமேகம் ஆ) டி.கே. துரைசாமி
இ) இராகோபாலன் ஈ) கிருஷ்ணமூர்த்தி **[விடை: ஆ]**

3. **கவிஞர் நகுலன் பிறந்த ஊர்**

அ) தஞ்சாவூர் ஆ) கும்பகோணம் இ) திருச்சி ஈ) விழுப்புரம் **[விடை: ஆ]**

4. **கவிஞர் நகுலன் வாழ்ந்த ஊர்**

அ) தஞ்சாவூர் ஆ) கர்நாடக மாநிலத்தின் மாண்டியா
இ) கேரள மாநிலத்தின் திருவனந்தபுரம் ஈ) ஆந்திர மாநிலத்தின் கடப்பா **[விடை: இ]**

5. **கவிஞர் நகுலன் தமிழிலும் ஆங்கிலத்திலும் முதுகலைப் பட்டம் பெற்ற பல்கலைக்கழகம்**

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
இ) அண்ணாமலை ஈ) திருவள்ளுவர் **[விடை: இ]**

www.kalvikadal.in

6. **கவிஞர் நகுலன் எழுதியுள்ள புதினங்கள்**

அ) ஆறு ஆ) ஏழு இ) எட்டு ஈ) ஒன்பது **[விடை: ஆ]**

7. **கவிஞர் நகுலன் யாருடைய கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்?**

அ) பாரதி ஆ) பாரதிதாசன்
இ) வாணிதாசன் ஈ) கண்ணதாசன் **[விடை: அ]**

8. **'இருப்பதற்கென்றுதான் வருகிறோம் இல்லாமல் போகிறோம்' என்று எழுதியவர்**

அ) நாகூர் ரூமி ஆ) பாரதிதான் இ) நகுலன் ஈ) ஆத்மாநாம் **[விடை: இ]**

### குறுவினா

1. **நகுலன் (டி.கே. துரைசாமி) பற்றிக் குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | நகுலன் |
| பிறப்பு | : | கும்பகோணத்தில் பிறந்து, திருவனந்தபுரத்தில் வாழ்ந்தவர் |
| கல்வி | : | அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முதுகலை பட்டம் |
| சிறப்பு | : | புதுக்கவிதை மூலம் வாழ்வியலுக்குத் தேவையான கருத்துகளை நறுக்கென்று கூறுபவர். அனைத்து சிற்றிதழ்களிலும் எழுதியவர் |
| படைப்புகள் | : | மூன்று, ஐந்து, கண்ணாடியாகும் கண்கள், நாய்கள், வாக்குமூலம், சுருதி ஆகிய புதினங்களை எழுதியுள்ளார். பாரதியார் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். |





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in



2. **புதுக்கவிதை என்றால் என்ன?**
புதிய வடிவம் கொண்ட கவிதை என்ற பொருள் மட்டுமல்ல. புதிய சிந்தனைகளையும், புதிய கருத்துகளையும், புதுமையாகச் சொல்வது புதுக்கவிதை ஆகும்.

3. **'இருப்பதற்கென்றுதான்**
**வருகிறோம்**
**இல்லாமல்**
**போகிறோம்.' இக்கவிதைக்குப் பொருத்தமான பழமொழியை எழுதுக.**
கானல் நீர் போல.

4. **'ஆர்ப்பரிக்கும் கடல்**
**அதன் அடித்தளம்**
**மௌனம்.' இக்கவிதைக்குப் பொருத்தமான பழமொழியை எழுதுக.**
குரைக்கிற நாய் வேட்டை பிடிக்காது.

## புணர்ச்சி விதி

1. **பிரயோஜனமில்லை – பிரயோஜனம் + இல்லை**
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி, (ம் + இ + மி) பிரயோஜனமில்லை என்று புணர்ந்தது.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 136

**உங்களுக்குப் பிடித்த புதுக்கவிதைகள் சிலவற்றைத் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.**

| | | |
|---|---|---|
| கடலில் புயல் சின்னம்<br>மீனவர்க்குக் கவலை<br>மாணவர்க்கு மகிழ்ச்சி | பகல் முழுவதும் கவலைகள்<br>இரவு முழுவதும் கனவுகள்<br>மனிதன் | மண்ணின் மௌனத்தைக்<br>கலைத்தது<br>மழைச்சாரலின் சத்தம். |

✹✹★★★✹✹



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

இயல் 6
செய்யுள்

# சிலப்பதிகாரம்

- இளங்கோவடிகள்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் ................ தொடர்களில் வெளிப்படும் செய்திகள்.**

1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.
2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

அ) 1-சரி, 2-தவறு ஆ) 1-தவறு, 2-சரி
இ) 1-தவறு, 2-தவறு ஈ) 1-சரி, 2-சரி **[விடை: ஈ]**

2. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | ஆமந்திரிகை | - | 1. பட்டத்து யானை |
| ஆ) | அரசு உவா | - | 2. மூங்கில் |
| இ) | கழஞ்சு | - | 3. இடக்கை வாத்தியம் |
| ஈ) | கழை | - | 4. எடை அளவு |

www.kalvikadal.in

அ) 3, 1, 4, 2 ஆ) 4, 2, 1, 3 இ) 1, 2, 3, 4 ஈ) 4, 3, 2, 1 **[விடை: அ]**

### குறுவினா

1. **ஒருமுக எழினி, பொருமுக எழினி குறிப்பு எழுதுக.**

**ஒருமுக எழினி:**

நாட்டிய மேடையின் ஒரு புறத்திலிருந்து மற்றொரு புறத்திற்குச் செல்லுமாறு அமைக்கப்படும் ஒரு முகத்திரை

**பொருமுக எழினி:**

மேடையின் இருபுறத்திலிருந்தும் நடுவில் ஒன்றோடு ஒன்று பொருந்துமாறு அமைக்கப்படும் பொருமுகத்திரை

### சிறுவினா

1. **நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தைக் கூறுக.**

**சிலம்பு காட்டும் நாட்டிய அரங்கத்திற்கான இடம் :**

**"எண்ணிய நூலோர் இயல்பினில் வழாஅது
மண்ணகம் ஒருவழி வகுத்தனர்"**

கற்றுணர்ந்த சிற்ப நூலாசிரியரால் சொல்லப்பட்ட இயல்பு மாறாத நன்னிலத்தை ஆடல் அரங்கிற்காகத் தேர்ந்தெடுத்தனர்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

**மூங்கில் கொணர்தல் :**

பொதிகைமலை போன்ற மலைகளிலே நீண்டு வளர்ந்த மூங்கில்களில், ஒரு சாண் அளவு கணுக்களைக் கொண்ட மூங்கில்களைக் கொண்டு வந்தனர்.

**ஆடல் அரங்கம் அமைத்தல் :**

**"நூல்நெறி மரபின் அரங்கம் அளக்கும்."**

நூல்களில் கூறப்பட்ட முறையில் மூங்கில் கோல் அளவுகொண்டு அரங்கம் அமைத்தல்.

**மூங்கில் அளவுகோல் :**

கைப்பெருவிரலில் இருப்பத்து நான்கு அளவு கொண்டதாக அம்மூங்கிலை வெட்டினர். அதை அரங்கம் அமைக்கும் கோலாகக் கொண்டனர். அதில் ஏழுகோல் அகலமும் எட்டுகோல் நீளமும், ஒருகோல் உயரமும் உடையதாக நாட்டிய அரங்கம் அமைக்கப்பட்டது.

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| தொல்நெறி | - | பண்புத்தொகை |
| ஆடலும் பாடலும் | - | எண்ணும்மை |
| வருகிறோம் | - | தன்மைப்பன்மை வினைமுற்று |
| நின்று | - | வினையெச்சம் |
| ஒருமுக எழினியும் பொருமுக எழினியும் | - | எண்ணும்மை |
| புரிகுழல், சூழ்சுழல் | - | வினைத்தொகைகள் |
| வழாஅ | - | செய்யுளிசை அளபெடை |
| நூல்நெறி, தூண் நிழல் | - | ஆறாம் வேற்றுமைத் தொகைகள் |
| வெண்குடை | - | பண்புத்தொகை |

www.kalvikadal.in

## உறுப்பிலக்கணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **நின்று** | – | **நில்(ன்) + ற் + உ** | **வருகிறோம்** | – | **வா(வரு) + கிறு + ஓம்** |
| நில் | - | பகுதி, (ன் ஆனது விகாரம்) | வா | – | பகுதி (வரு ஆனது விகாரம்) |
| ற் | - | இறந்தகால இடைநிலை | கிறு | – | நிகழ்கால இடைநிலை |
| உ | - | வினையெச்ச விகுதி | விகுதி | – | ஓம், தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி |
| **தொழுதனர்** | - | **தொழு + த் + அன் + அர்** | **ஏந்து** | – | **ஏந்து + இ** |
| தொழு | - | பகுதி | ஏந்து | – | பகுதி |
| த் | - | இறந்தகால இடைநிலை | இ | – | வினையெச்ச விகுதி |
| அன் | - | சாரியை | | | |
| அர் | - | படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி | | | |
| **சேர்தல்** | – | **சேர் + தல்** | | | |
| பகுதி | – | சேர் | | | |
| விகுதி | – | தல் வியங்கோள் வினைமுற்று விகுதி | | | |





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







## புணர்ச்சி விதி

1. **தலைக்கோல் = தலை + கோல்**

 இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் என்ற விதிப்படி தலைக்கோல் என்று புணர்ந்தது.

2. **மண்ணகம் = மண் + அகம்**

- தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் என்ற விதிப்படி, மண் + ண் + அகம் என்றானது.
- உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி (ண் + அ = ண) மண்ணகம் என்று புணர்ந்தது.

3. **கண்ணிடை = கண் + இடை**

- தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் என்ற விதிப்படி, கண்ண் + இடை என்றானது.
- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி, (ண் + இ = ணி) கண்ணிடை என்று புணர்ந்தது.

4. **வெண்குடை – வெண்மை + குடை**

ஈறுபோதல் என்ற விதிப்படி, மை விகுதி கெட்டு, வெண் + குடை - வெண்குடை என்று புணர்ந்தது.

5. **தொல்நெறி – தொன்மை + நெறி**

- ஈறுபோதல் என்ற விதிப்படி, மை விகுதி கெட்டு, தொன் + நெறி என்றானது.
- முன்னின்ற மெய் திரிதல் என்ற விதிப்படி,தொல்நெறி என்று புணர்ந்து.

6. **தலைக்கோல் – தலை + கோல்**

www.kalvikadal.in

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் என்ற விதிப்படி, தலைக்கோல் என்று புணர்ந்தது.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **சிலப்பதிகாரத்திலுள்ள அரங்கேற்றுக் காதை அமைந்துள்ள காண்டம்**

அ) புகார் ஆ) வஞ்சி
இ) மதுரை ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

2. **இரட்டைக் காப்பியங்கள் என அழைக்கப்படுபவை**

அ) நீலகேசி, குண்டலகேசி ஆ) உதயணகுமாரகாவியம், நாககுமார காவியம்
இ) சிந்தாமணி, சூளாமணி ஈ) சிலப்பதிகாரம், மணிமேகலை **[விடை: ஈ]**

3. **சிலப்பதிகாரத்தை இயற்றியவர்**

அ) இளங்கோவடிகள் ஆ) சீத்தலைச்சாத்தனார்
இ) திருத்தக்கத்தேவர் ஈ) நக்கீரர் **[விடை: அ]**

4. **'சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்' என்று குறிப்பிடுபவர்**

அ) திரு.வி.க. ஆ) பாரதி இ) பாரதிதாசன் ஈ) ம.பொ.சி. **[விடை: ஆ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



5. **இளங்கோவடிகள் தன்னைப் பற்றிய குறிப்பைத் தருகையில் தான் செங்குட்டுவன் தம்பி என்பதைக் குறிப்பிட்டிருக்கும் காதை**

அ) மங்கலவாழ்த்து ஆ) அரங்கேற்றுகாதை

இ) வரந்தருகாதை ஈ) ஊர்சூழ்வரி **[விடை: இ]**

6. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | கழை | - | 1. பந்தல் |
| ஆ) | விதானம் | - | 2. புதுமை |
| இ) | நித்திலம் | - | 3. மூங்கில் |
| ஈ) | விருந்து | - | 4. முத்து |

அ) 3, 1, 4, 2 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 4, 1, 2 ஈ) 2, 3, 1, 4 **[விடை: அ]**

7. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | நாவலம்பொலம் | - | 1. இசைக்கருவிகள் வாசிப்போர் |
| ஆ) | அரசு உவா | - | 2. நாடகக் கணிகையர் பெறும்பட்டம் |
| இ) | குயிலுவமாக்கள் | - | 3. பட்டத்து யானை |
| ஈ) | தலைக்கோல் | - | 4. சாம்பூநதம் என்னும் உயர்ந்த வகைப் பொன் |

அ) 4, 3, 1, 2 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 3, 1, 4 **[விடை: அ]**

8. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | புரிகுழல் | - | 1. ஒரு வகை எடை அளவு |
| ஆ) | பல்இயம் | - | 2. இடக்கை வாத்தியம் |
| இ) | வாரம் | - | 3. தெய்வப்பாடல் |
| ஈ) | ஆமந்திரிகை | - | 4. இன்னிசைக்கருவி |
| உ) | கழஞ்சு | - | 5. சுருண்ட கூந்தல் |

www.kalvikadal.in

அ) 5, 4, 3, 2, 1 ஆ) 5, 4, 3, 1, 2 இ) 3, 1, 2, 4, 5 ஈ) 5, 4, 2, 3, 1 **[விடை: அ]**

9. **மாதவி ஆடற்கலையைப் பயின்ற ஆண்டுகள்**

அ) 5 ஆ) 7 இ) 12 ஈ) 15 **[விடை: ஆ]**

10. **ஆடல் கற்பதற்கான சடங்குகளை மாதவி செய்தபோது வயது**

அ) 5 ஆ) 7 இ) 9 ஈ) 12 **[விடை: அ]**

11. **மாதவி தனது ஆடலை அரங்கேற்ற விரும்பிய வயது**

அ) 7 ஆ) 9 இ) 12 ஈ) 15 **[விடை: இ]**

12. **மேடையின் ஒரு புறத்திலிருந்து மறுபுறத்திற்குச் செல்லுமாறு அமைக்கப்படுவது**

அ) ஒரு முகத்திரை ஆ) பொருமுகத்திரை

இ) கரந்துவரல் திரை ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

13. **மேடையின் இருபுறத்திலிருந்தும் நடுவில் ஒன்றோடு ஒன்று பொருந்துமாறு அமைக்கப்படுவது**

அ) ஒரு முகத்திரை ஆ) பொருமுகத்திரை

இ) கரந்துவரல் திரை ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: ஆ]**

14. **மேடையின் மேலிருந்து வேண்டும் போது கீழே இறக்கும் வகையில் அமைக்கப்படுவது**

அ) ஒரு முகத்திரை ஆ) பொருமுகத்திரை

இ) கரந்துவரல் திரை ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: இ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

15. அரங்கேற்றத்தை வெற்றிகரமாக முடிக்கும் ஆடல்மகளுக்கு அளிக்கப்படுவது

அ) தலைக்கோல் ஆ) செங்கோல் இ) வைரமணி ஈ) அரசாட்சி [விடை: அ]

16. இந்திரனின் மகன்

அ) சனகன் ஆ) சயந்தன் இ) அபினந்தன் ஈ) மாயன் [விடை: ஆ]

17. மன்னனிடமிருந்து மாதவி பெற்ற பரிசு

அ) ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப் பொன்மாலை ஆ) நூற்றெட்டுக் கழஞ்சுப் பொன்மாலை

இ) ஆயிரத்தெட்டுக் கழஞ்சு வைரமாலை ஈ) நூற்றெட்டுக் கழஞ்சு வைரமாலை [விடை: அ]

18. பொருத்திக் காட்டுக.

| | | | |
|---|---|---|---|
| அ) | பேரியாழ் | - | 1) 7 நரம்புகளைக் கொண்டது |
| ஆ) | மகரயாழ் | - | 2) 16 நரம்புகளைக் கொண்டது |
| இ) | சகோடயாழ் | - | 3) 17 நரம்புகளைக் கொண்டது |
| ஈ) | செங்கோட்டியாழ் | - | 4) 21 நரம்புகளைக் கொண்டது. |

அ) 4, 3, 2, 1 ஆ) 4, 2, 1, 3 இ) 3, 2, 4, 1 ஈ) 2, 1, 3, 4 [விடை: அ]

19. தொல்நெறி, ஆடலும் பாடலும் - இச்சொற்களுக்குரிய இலக்கணக் குறிப்பைக் கண்டறிக.

அ) வினைத்தொகை, எண்ணும்மை ஆ) பண்புத்தொகை, எண்ணும்மை

இ) பெயரெச்சம், முற்றும்மை ஈ) உவமைத்தொகை, உம்மைத்தொகை

[விடை: ஆ]

20 இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் என்னும் விதிக்குரிய சொல்

அ) பொற்குடம் ஆ) தலைக்கோல் இ) பேரியாழ் ஈ) பூங்கோதை [விடை: ஆ]

www.kalvikadal.in

## குறுவினா

1. தலைக்கோல் பட்டம் பெற்றவள் யார்? ஏன்?
   - தலைக்கோல் பட்டம் பெற்றவள் மாதவி.
   - தன் ஆடல் அரங்கேற்றத்தை வெற்றிகரமாக முடித்ததன் காரணமாகச் சிறப்பிக்கப்பட்டது.

2. சிலப்பதிகாரம் - ஓர் புரட்சி காப்பியம் எங்ஙனம் விளக்குக.

முதன் முதலாகப் பெண்ணை முதன்மைப் பாத்திரமாகக் கொண்டு, அவள் அரசனை எதிர்த்து வழக்காடியதைப் பாடியதால் புரட்சிக் காப்பியம் எனப்படுகிறது.

3. இரட்டைக்காப்பியங்கள் யாவை? காரணம் கூறுக.
   - சிலப்பதிகாரம், மணிமேகலை
   - சிலப்பதிகாரத்தின் கதைத் தொடர்ச்சியும், மணிமேகலையில் காணப்படுவதால் இவை இரண்டும் இரட்டைக் காப்பியம் எனப்படும்.

4. பாரதியார் இளங்கோவையும், சிலம்பையும் எங்ஙனம் புகழ்கிறார்?

'சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்' என்று பாரதி இளங்கோவையும், சிலம்பையும் புகழ்கிறார்.

5. இளங்கோவடிகள் எங்கு தன்னை அறிமுகம் செய்கிறார்?

வரந்தரு காதையில் இளங்கோவடிகள் தன்னைப்பற்றி தான் செங்குட்டுவன் தம்பி என்று தன்னை அறிமுகம் செய்கிறார்.

6. மாதவியின் நாட்டியப் பயிற்சி பற்றி விளக்குக.
   - மாதவி, அழகிய தோள்களை உடையவள்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

- தேனும் தாதுவும் நிறைந்த பூக்கள் அணிந்த கூந்தலை உடையவள்.
- ஆடல், பாடல், அழகு என்னும் இம்மூன்றில் ஒன்றும் குறைபடாமல் கற்றவர்கள்.
- ஏழு ஆண்டுகள் ஆடல் கலையைப் பயின்றவள்.
- பன்னிரெண்டாவது வயதில் ஆடலை அரங்கேற்ற விரும்பினாள்.

**7. மங்கல வாழ்த்துப் பாடலில் இசைக்கருவிகள் ஒலித்த முறைகளை விளக்குக.**

- குழலின் வழியே யாழிசை நின்றது.
- யாழிசைக்கு ஏற்ப தண்ணுமையாகிய மத்தலம் ஒலித்தது.
- தண்ணுமையோடு இயைந்து முடிவு ஒலித்தது.
- முழவுடன் இடக்கை வாத்தியம் கூடிநின்று ஒலித்தது.

**8. சிலப்பதிகாரத்தின் வேறு பெயர்கள்.**

- குடிமக்கள் காப்பியம்
- மூவேந்தர் காப்பியம்
- புரட்சிக் காப்பியம்
- முத்தமிழ் காப்பியம்
- நாடகக் காப்பியம்
- இரட்டைக் காப்பியம்
- பொதுமைக் காப்பியம்
- வரலாற்றுக் காப்பியம்
- ஒற்றுமைக் காப்பியம்
- உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்.

**9. மாதவி மன்னனிடம் பரிசு பெற்றமையை விவரி.**

- பொன்னால் செய்யப்பட்ட ஒரு பூங்கொடி நடனமாடியது போல் மாதவி அரங்கில் நூலில் சொல்லப்பட்ட சரியாகக் கடைப்பிடித்து அழகுற ஆடினாள். கூத்துக்கு உரிய இயல்பினிலிருந்து வழுவாது ஆடினாள்.
- அந்த ஆடலைக் கண்டு அகமகிழ்ந்த மன்னன் ‘தலைக்கோலி’ என்னும் பட்டம் அளித்தான்.
- மேலும் அரங்கேற்றம் செய்யும் நாடகக்கணிகைக்கு ‘பரிசு இவ்வளவு’ என நூல் விதித்த முறைப்படி ‘ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப் பொன் மாலையை’ அணிவித்தான்.

www.kalvikadal.in

**10. யாழின் வகைகள் யாவை?**

- 21 நரம்புகளைக் கொண்ட பேரியாழ்.
- 17 நரம்புகளைக் கொண்ட மகரயாழ்.
- 16 நரம்புகளைக் கொண்ட சகோடயாழ்.
- 7 நரம்புகளைக் கொண்ட செங்கோட்டியாழ்.

**11. குடிமக்கள் காப்பியம் பெயர்க்காரணம் தருக.**

அரசக்குடி அல்லாதவர்களைக் காப்பியத்தின் தலைமக்களாக வைத்துப் பாடியதால் ‘குடிமக்கள் காப்பியம்’ எனப் பெயர் பெற்றது.

**12. ‘இலைப் பூங்கோதை இயல்பினில் வழாமைத்**
**தலைக்கோல் எய்தித் தலை அரங்கு ஏறி**
**விதிமுறைக் கொள்கையின் ஆயிரத்து எண் கழஞ்சு’ - இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக.**

**இடம் :**

சிலப்பதிகாரம் - புகார்க்காண்டம். அரங்கேற்ற காதையில் இடம் பெற்றுள்ளது.

**பொருள் :**

மாதவி மன்னனிடம் பரிசு பெறுதல்.


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

**விளக்கம் :**

பொன்னால் செய்யப்பட்ட பூங்கொடி போல் மாதவி நடனமாடியது கண்டு அகமகிழ்ந்த மன்னன் 'தலைக்கோலி' என்ற பட்டத்தையும் 'ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப் பொன் மாலையை' பரிசாகவும் அளித்தான்.

## சிறுவினா

**1. நாட்டிய அறங்கின் அமைப்பை விளக்குக.**

- ஏழுகோல் அகலமும் எட்டுக்கோல் நீளமும் ஒரு கோல் உயரம் உடைய நாட்டிய அரங்கம் அமைத்தனர்.
- அரங்கில் தூணிற்கு மேல் வைத்த உத்திரப் பலகைக்கும் தளத்தில் இருக்கும் பலகைக்கு இடையே இடைவெளி நான்கு கோல் அளவு வைத்தனர்.
- அரங்கு உள்ளே, வெளியே செல்ல ஏற்ற அளவுடன் இருவாயில்கள் அமைத்தனர்.
- மேல்நிலை மாடத்தில் ஐம்பூதங்களை யாவரும் புகழும்படி சித்தரித்து வைத்தனர்.
- தூணில் நிழல் விளக்குகளை நிறுத்தினர்.
- ஒரு முகத்திரை, பொருமுகத்திரை, கரந்துவரல் திரை மூன்றையும் சிறப்புடன் அமைத்தனர்.
- விதானம், முத்துமாலை அரங்கம் முழுவதும் தொங்கவிட்டனர்.
- இத்தகைய வேலைப்பாடுகளுடன் நாட்டிய அரங்கம் அமைத்தனர்.

**2. தலைக்கோல் அறிவை - விளக்குக.**

அரங்கேற்றத்தை வெற்றிகரமாக முடிக்கும் ஆடல் மங்கைக்கு அளிக்கும் பட்டம்.

www.kalvikadal.in

- இத்தலைக்கோல் புகழ் கொண்ட மன்னனுடன் போரிட்டு அவனிடமிருந்து பறிக்கப்பட்ட வெண்கொற்றக் குடையின் காம்பில் செய்யப்படுவது.
- காம்பின் கணுக்கள் முழுவதும் நவமணிகள் இருக்கும். அக்கணுக்களுக்கு சாம்பூந்தம் எனும் பொன்தகட்டை வலம்புரியாகவும், இடம்புரியாகவும் சுற்றிக் கோலாக்குவது.
- மன்னனின் அரண்மனையில் வைத்து இந்திரன் மகன் சயந்தன் என அக்கோலை நினைத்து வழிபடுவர்.
- தலைக்கோலை புண்ணிய நதி நீரைப் பொற்குடங்களில் கொண்டு வந்து நீராட்டுவர்.
- மாலைகள் அணிவித்து, முரசு முழங்க, வாத்தியங்கள் ஒலிக்க ஐம்பெருங்குழு, அரசர் சூழ்ந்துவர, பட்டத்து யானை தேரை வலம் வந்து அதன் மேல் உள்ள கவிஞனிடம் அத்தலைக்கோலைக் கொடுக்கும்.
- அனைவரும் ஊர்வலமாக வந்தபின் கவிஞன் தலைக்கோலை ஆடல் அரங்கில் வைப்பார்கள்.

**3. மாதவியின் நாட்டியத்தை மங்கல வாழ்த்துப் பாடலால் அறியலாகும் செய்தி யாது?**

- அரசன் முதலானோர் தத்தம் தகுதிக்கு ஏற்ப இருக்கையில் அமர்ந்தனர்.
- இசைக்கருவிகளை வாசிப்போர் நிற்க வேண்டிய முறைப்படி நின்றனர்.
- நாடகக் கனிகையாகிய மாதவி வலக்காலை முன் வைத்து ஏறி, பொருமுக எழினிக்கு நிலையிடனான வலத்துடன் அருகே நின்றாள்.
- ஆடலில் தேர்ச்சி பெற்ற தோரிய மகளிர் ஒருமுக எழினிக்கு இடப்பக்கத் தூணின் அருகே நின்றனர்.
- நன்மை, பெருகவும், தீமை நீல்கவும் வேண்டி

'ஓரொற்றுவாரம்', 'ஈரொற்றுவாரம்' என்னும் தெய்வப்பாடலை முறையாகப் பாடினர்.

- இசைக்கருவிகள் அனைத்தும் கூட்டாக இசைத்தன.

4. **'ஆடலும் பாடலும் அழகும் என்று இக்**
**கூறிய மூன்றின் ஒன்று குறைபடாமல்**
**ஏழு ஆண்டு இயற்றி ஓர் ஈர் ஆறு ஆண்டில்**
**சூழ்கழல் மன்னற்குக் காட்டல் வேண்டி' – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் :**

இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தின் புகார்க்காண்டத்தில் அரங்கேற்றுக் காதையில் இடம் பெற்றுள்ளது.

**பொருள் :**

மாதவியின் நாட்டியப் பயிற்சி.

**விளக்கம் :**

அழகிய தோள்களை உடைய மாதவி, தேனும், தாதுவும் நிறைந்த பூக்களை அணிந்த சுருண்ட கூந்தலை உடையவள். அவள் ஆடல், பாடல், அழகு இம்மூன்றில் என்றும் குறைபடாமல் ஏழு ஆண்டுகள் ஆடல் கலையைக் கற்று, தன் பன்னிரண்டு வயதில் அரங்கேற்றினாள்.

5. **சிலப்பதிகாரம் குறிப்பு வரைக.**

- சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம்.
- கண்ணகியின் கால் சிலம்பால் உருவான கதை.
- மூன்று காண்டங்கள் முப்பது காதைகள் கொண்டது. அவை முறையே: புகார் காண்டம் – 10; மதுரைக் காண்டம் – 13; வஞ்சிக் காண்டம் – 7 என மொத்தம் – 30
- **வேறு பெயர்கள் :** முத்தமிழ்க் காப்பியம் , இரட்டைக் காப்பியம், மூவேந்தர் காப்பியம், குடிமக்கள் காப்பியம், நாடகக் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், பொதுமைக் காப்பியம், வரலாற்றுக் காப்பியம்.
- **உண்மைகள் :** அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்; உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்; ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 140

**பள்ளி விழாக்கள், ஊர்த்திருவிழா, பட்டிமன்றம், தொலைக்காட்சி நிகழ்வுகளுக்கான அரங்கம், அரசு விழாக்களுக்கான மேடை போன்றவற்றின் அரங்க அமைப்பு, ஒலி, ஒளி அமைப்பு, திரை அலங்காரம் குறித்துக் கலந்துரையாடுக.**

**பங்கு பெறுவோர் : நேசன், வாசன், ராசன்**

**நேசன்** : நான் நேற்று எனது பள்ளியின் ஆண்டு விழாவிற்குச் சென்றிருந்தேன். அங்கு நான் கண்ட மேடை பற்றிக் கூறுகிறேன். தரையிலிருந்து பத்து அடி உயர மேடை போடப்பட்டிருந்தது. மேடையானது இருபது அடி அகலமும், 12 அடி உயரமும் கொண்டதாக இருந்தது. இருபுறத்திலிருந்து வருமாறும், மேலே ஏறுமாறும் திரைச்சீலைகள் அமைக்கப்பட்டிருந்தன. மேடையின் பின்பக்கமும் மற்ற இரண்டு பக்கங்களும் ஒரு தெருவுக்குள் நடந்து செல்வது போன்ற ஒரு (தெருக்களின்) ஓவியம் வரையப்பட்டிருந்தது. மேடையின் மேல்பக்கத்தில் வட்ட வடிவிலான ஓவியம் இருந்தது. மேடையின் முன்பக்க ஓரத்தில் இரண்டு ஒலி வாங்கிகள், மேடையின் முன் பக்கத்தில் வண்ண வண்ண ஒளிகளைப் பாய்ச்சும் சுழல்


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

விளக்குகள், மேடையை ஒட்டி, இரு பெரும் ஒலி பெருக்கிகள் என அற்புதமாக மேடை அமைக்கப்பட்டிருந்தது.

**வாசன்** : இரண்டு நாட்களுக்கு முன் எங்கள் ஊர்த்திருவிழாவிற்குச் சென்றிருந்தேன். அங்கே பரதநாட்டிய மேடை அமைத்திருந்தார்கள். நான்கு அடி உயரத்தில் ஒரு மேடை. முன் பக்கம் தவிர மற்ற மூன்று பக்கங்களும் ஓவியம் தீட்டப்பட்ட துணிகளால் மறைக்கப்பட்டிருந்தன. மேலும் வண்ண விளக்குகளால் மேடை அலங்கரிக்கப்பட்டு இருந்தது. மேடையின் மேல் இருபுறமும் நட்டு வாங்கும், வாய்பாட்டு, மிருதங்கம், மோர்சிங், வீணை வாசிப்பவர்களுக்கு எனக் கலைஞர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்தன.

**ராசன்** : எங்கள் ஊரில் பட்டிமன்ற நிகழ்வைப் பார்க்க நேற்று சென்றிருந்தேன். மிக உயரமான மேடை, கீழே தரை விரிப்பு, மேடையின் பின்பக்கம் அடைப்பில் நடுவர் மற்றும் பேச்சாளர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன. மேடையின் இருபக்கங்களிலும் ஆயத்த ஒலிவாங்கி மேடைகள், கண்ணைப் பறிக்கும் ஒளி விளக்குகள், நடுவர் அமர்வதற்கு மிகப் பெரிய அமர்வு இருக்கை என்று பார்க்க அழகாக இருந்தது.

**நேசன்** : ஆமாம் நண்பர்களே! முற்காலங்கள் போல் இல்லாமல் இன்று மேடைகள் அலங்காரமாகவும், விளக்கின் ஒளியில் பகல் போலவும், மேடையில் கண்ணைக் கவரும் சில ஓவியங்களும் தெளிவாக ஒலி வாங்கியினின்று வெளிவிடும் ஒலிப்பெருக்குப் பெட்டிகள் என இதைப் பற்றிய ஒரு பார்வை நம்மை வியக்க வைக்கிறது. அதுமட்டுமா, இத்தனையையும் அமைக்க அந்தத் துறையில் தேர்ச்சி பெற்ற கைவினைக் கலைஞர்கள், இவர்களின் ஒத்துழைப்பாலேயே இத்தகைய மேடைகள் கண்ணைக் கவருகின்றன. தெருக்கூத்தாக இருந்த மேடை இன்று திரைப்படத்தை நேரில் பார்க்கும் உளப்பாங்கினை உண்டாக்கும் அளவிற்கு மேடையில் வடிவமைக்கப்படுகின்றன.

www.kalvikadal.in

“ஆடத் தெரியாதவனுக்கு தெருக் கோணல் என்பானாம்” இந்தப் பழமொழி பொய்த்துவிட்டது இந்த நாளில்.

✸✸★★★✸✸





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





இயல் 6

செய்யுள்

# மெய்ப்பாட்டியல்

- தொல்காப்பியர்

## பாடநூல் வினாக்கள்

### குறுவினா

**1. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?**

- நகை (சிரிப்பு)
- அழுகை
- இளிவரல் (சிறுமை)
- மருட்கை (வியப்பு)
- அச்சம் (பயம்)
- பெருமிதம் (பெருமை)
- வெகுளி (சினம்)
- உவகை (மகிழ்ச்சி)

என்பன எண்வகை மெய்ப்பாடுகளாகும் - தொல்காப்பியர்.

### சிறுவினா

**1. ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.**

www.kalvikadal.in

**வியப்பு :**

நீண்ட நாளாக எனக்கு கால் முட்டியில் வலி தீரவில்லை. என் உறவுக்காரர் பக்கத்து ஊர் தர்காவில் மௌலவி ஒருவர் ஓதுகிறார். உடல் நோயெல்லாம் தீர்ந்து விடுகிறது போய் பார் என்றார். நம்பிக்கையோடு சென்றேன். வரிசையில் நின்றேன். என் முறை வந்தது. ஒரே வியப்பு! அழுகையும் வந்தது. அங்கே ஓதுகின்ற மௌலவி என் வாப்பா (தந்தை). வெட்கமும் வேதனையும் வந்தது. வாப்பாவிடம் இப்படியொரு மகத்துவமா!

**பெருமை :**

2004ஆம் ஆண்டு கடலூரில் சுனாமியால் பாதிக்கப்பட்டு தன் தாய் தந்தையரை இழந்து அனாதையாக அரசுக் காப்பகத்தில் சேர்க்கப்பட்டாள். அந்தப் பெண் குழந்தையை மாரியப்பன் என்ற உடற்கல்வி ஆசிரியர் இனங்கண்டு அரசு உதவியோடு தன் இல்லத்திற்கு அழைத்துவந்து தன் குழந்தைபோல் வளர்த்தார். கல்வியோடு சேர்ந்து கால் பந்திலும் அந்தப் பெண்ணை ஈடுபடுத்தினார். பட்டம் முடித்த அந்தப் பெண் கால் பந்தில் முழுக் கவனம் செலுத்தி ஆசிய அளவில் நடைபெற்ற கால்பந்துப் போட்டியில் இந்திய அணி சார்பில் விளையாடி வெற்றி பெற்றாள். தன் தாய் தந்தையரை இழந்தாலும் வளர்ப்புத் தந்தையால் அடையாளம் கண்டு அவருக்கும் கடலூர் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்தாள்.

### இலக்கணக்குறிப்பு

| | |
|---|---|
| நகை, அழுகை, இளிவரல், மருட்கை<br>அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை | - தொழிற்பெயர்கள் |







Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



## உறுப்பிலக்கணம்

| | |
|---|---|
| **நகை = நகு + ஐ**<br>நகு - பகுதி (நகை ஆனது விகாரம்)<br>ஐ - தொழிற்பெயர் விகுதி | **மருட்கை = மருள்(ட்) + கை**<br>மருள் - பகுதி ('ள்' 'ட்' ஆனது விகாரம்)<br>கை - தொழிற்பெயர் விகுதி |
| **வெகுளி = வெகுள் + இ**<br>வெகுள் - பகுதி<br>இ - தொழிற்பெயர் விகுதி | |

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. பொருத்திக் காட்டுக.**

அ) நகை - 1. பெருமை
ஆ) இளிவரல் - 2. வியப்பு
இ) மருட்கை - 3. சிறுமை
ஈ) பெருமிதம் - 4. சிரிப்பு

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 2, 1, 3, 4 ஈ) 4, 2, 1, 3 **[விடை: அ]**

**2. வெகுளி, உவமை - முதலிய சொற்களின் பொருள் முறையே ................ என்பதாகும்.**

அ) சினம், மகிழ்ச்சி ஆ) சிறுமை, சிரிப்பு
இ) வியப்பு, பெருமை ஈ) மகிழ்ச்சி, சினம் **[விடை: அ]**

**3. தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாடு.**

அ) ஆறு ஆ) ஏழு இ) எட்டு ஈ) ஒன்பது **[விடை: இ]**

**4. 'சொற்கேட்டார்க்குப் பொருள் கண்கூடாதல்' என்று கூறிய உரையாசிரியர்**

அ) நச்சினார்க்கினியர் ஆ) சேனாவரையர்
இ) பேராசிரியர் ஈ) அடியார்க்கு நல்லார் **[விடை: இ]**

**5. கவி கண்காட்டும் என்று கூறிய உரையாசிரியர்**

அ) நச்சினார்க்கினியர் ஆ) சேனாவரையர்
இ) பேராசிரியர் ஈ) அடியார்க்கு நல்லார் **[விடை: இ]**

**6. பேராசிரியர் என்பார் ................. உரையாசிரியர் ஆவார்.**

அ) நன்னூல் ஆ) சிலப்பதிகாரம்
இ) யாப்பருங்கல ஈ) தொல்காப்பிய **[விடை: ஈ]**

**7. நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை - இச்சொற்களுக்குரிய இலக்கணக் குறிப்பு**

அ) பண்புத்தொகைகள் ஆ) வினைத்தொகைகள்
இ) தொழிற்பெயர்கள் ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: இ]**

**8. 'ஈட்டுபுகழ் நந்தி பாணநீ' - என்னும் நந்திக்கலம்பக பாடலில் இடம்பெறும் மெய்ப்பாடு**

அ) நகை ஆ) அழுகை இ) மருட்கை ஈ) வெகுளி **[விடை: அ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

9. பாணனின் பாடலைக் கேட்டவர்களின் கூற்றாகத் தலைவி கூறுவனவற்றைப் பொருத்திக் காட்டுக.

| | | | |
|---|---|---|---|
| அ) | அன்னை | - | 1. பாணன் |
| ஆ) | தோழி | - | 2. நரி |
| இ) | பிறர் | - | 3. நாய் |
| ஈ) | தலைவி | - | 4. பேய் |

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 2, 1, 4 இ) 2, 1, 4, 3 ஈ) 1, 4, 2, 3 **[விடை: அ]**

10. 'ஐயோ எனின் யான் புலி அஞ்சுவலே' என்னும் புறநானூற்று அடிகளில் இடம்பெறும் மெய்ப்பாடு

அ) நகை ஆ) அழுகை இ) வெகுளி ஈ) இளிவரல் **[விடை: ஆ]**

11. 'தொடப்பாடு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய' என்னும் புறநானூற்று அடிகளில் இடம்பெறும் சேரன் கணைக்கால் இரும்பொறை குறித்தான மெய்ப்பாடு

அ) நகை ஆ) இளிவரல் இ) மருட்கை ஈ) சினம் **[விடை: ஆ]**

12. 'அமரர்க்கு அரசன் தமர்வந்து ஈண்டி' என்று கண்ணகி வானூர்தியில் வானுலகு சென்ற காட்சியைக் காணும் குன்றவர்களின் மெய்ப்பாடு

அ) இளிவரல் ஆ) உவகை இ) மருட்கை ஈ) அச்சம் **[விடை: இ]**

13. 'மையல் வேழமம் மடங்களின் எதிர்தர' என்னும் குறிஞ்சிப்பாட்டு அடிகளில் இடம்பெறும் மெய்ப்பாடு

அ) நகை ஆ) அழுகை இ) அச்சம் ஈ) பெருமிதம் **[விடை: இ]**

14. 'உறுசுடர் வாளோடு ஒருகால் விலங்கின்' என்னும் புறப்பொருள் வெண்பாமாலை அடிகளால் உணர்த்தப்படும் மெய்ப்பாடு

அ) அச்சம் ஆ) பெருமிதம் இ) வெகுளி ஈ) உவகை **[விடை: ஆ]**

www.kalvikadal.in

15. 'உறுதுப்பு அஞ்சாது, உடல்சினம் செருக்கி' என்னும் புறநானூற்று அடிகளால் பாண்டியர் நெடுஞ்செழியனின் அறியலாகும் மெய்ப்பாடு

அ) அச்சம் ஆ) பெருமிதம் இ) வெகுளி ஈ) உவகை **[விடை: இ]**

16. 'மண்டல மதியமன்ன மாசறு மகத்தினாளுந் ... ' என்ற அடிகளில் வெளிப்படும் குந்தியின் வெளிப்பாடு

அ) அச்சம் ஆ) பெருமிதம் இ) வெகுளி ஈ) உவகை **[விடை: ஈ]**

17. பொருத்திக் காட்டுக

| | | | |
|---|---|---|---|
| அ) | பாணன் | - | 1. உவகை |
| ஆ) | கணைக்காலிரும்பொறை | - | 2. வெகுளி |
| இ) | பாண்டியன் நெடுஞ்செழியன் | - | 3. இளிவரல் |
| ஈ) | குந்தி | - | 4. நகை |

அ) 4, 3, 2, 1 ஆ) 2, 3, 1, 4 இ) 3, 1, 4, 2 ஈ) 2, 4, 1, 3 **[விடை: அ]**

18. 'உய்ப்போன் செய்தது காண்போர்க்கு எய்துதல் மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந் தோரே' - என்று குறிப்பிடும் நூல்

அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல்
இ) நம்பிக்கைப்பொருள் ஈ) செயிற்றியம் **[விடை: ஈ]**

19. தொல்காப்பியத்தில் மெய்ப்பாட்டியல் ............... அதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது.

அ) எழுத்து ஆ) சொல் இ) பொருள் ஈ) யாப்பு **[விடை: இ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**20. தமிழில் கிடைக்கப் பெற்ற முதல் இலக்கண நூல்**

அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல்
இ) தொன்னூல் விளக்கம் ஈ) புறப்பொருள் வெண்பாமாலை **[விடை: இ]**

**21. தமிழ்மொழியின் அமைப்பை விதிகளாக்கி விளக்குவதோடு தமிழ்க் கவிதையியலின் நுட்பங்களையும் பேசும் நூல்**

அ) திருக்குறள் ஆ) நாலடியார்
இ) தொல்காப்பியம் ஈ) யாப்பருங்காலக்காரிகை **[விடை: இ]**

**22. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர்**

அ) இளம்பூரணர் ஆ) சேனாவரையர்
இ) பேராசிரியர் ஈ) நச்சினார்க்கினியர் **[விடை: அ]**

**23. தொல்காப்பியத்தினை இயற்றியவர்**

அ) அகத்தியர் ஆ) தொல்காப்பியர்
இ) சமணமுனிவர் ஈ) பவணந்தி முனிவர் **[விடை: ஆ]**

## குறுவினா

**1. மெய்ப்பாடு என்றால் என்ன?**

இலக்கியத்தைப் படிக்கின்றபோது அதன் பொருளை ஆழப்படுத்தும் வகையில் காட்டப்படும் உணர்ச்சி வெளிப்பாட்டு சுவையே மெய்ப்பாடு என்பர்.

**‘சொற்கேட்டார்க்குப் பொருள் கண் கூடாதல்**
**கவி கண் காட்டும்’** என்று உரையாசிரியர், பேராசிரியர் குறிப்பிடுகிறார்.

www.kalvikadal.in

**2. தொல்காப்பியரைத் தமிழ்ச் சான்றோர் எவ்வாறு போற்றுகிறார்?**

‘ஒல்காப் பெரும்புகழ்ந்த தொல்காப்பியன்’ என்று போற்றுகிறார்கள்.

**3. தொல்காப்பியம் முழுமைக்கும் உரையெழுதியவர் யார்?**

‘இளம்பூரணர்’ நூல் முழுமைக்கும் உரை எழுதியவர் ஆவார்.

## நெடுவினா

**1. எண்வகை மெய்ப்பாடுகளை இலக்கியச் சான்றுடன் விளக்குக.**

**நகை :**

**ஈட்டுபுகழ் நந்தி பாணநீ! எங்கையர் தம்**
**வீட்டிருந்து பாட விடிவளவும்......**

எனும் பாடல்களில் பாணனின் குரலை தலைவி எள்ளி நகையாடுகிறாள்.

நீ இரவு முழுவதும் பாடியதை என் தாய் பேய் என்றாள், பிறர் நரி என்றார், தோழி நாய் என்றாள். ஆனால் நானோ நீ என்றேன்.

**அழுகை :**

**ஐயோ எனின் யான் புலி அஞ்சுவலே**
**அணைத்தனன் கொளினே அகன் மார்பு.......**

என்ற பாடலடிகளில் காட்டில் புலியோடு போராடி இறந்த தலைவனைப் பற்றி தலைவி துயரம் கொள்வதாக உள்ளது.

தலைவன் உடலைப் பார்த்து ஐயோ என்று கதறினால், புலி வந்துவிடுமோ என்று அஞ்சுகிறாள்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



தூக்கிச் செல்லலாம் என்றால் 'உனக்கு அகன்ற மார்பு உன்னைத் தூக்க இயலாது' என்று துன்புறுகிறாள்.

**இளிவரல் (சிறுமை) :**

**தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய**

**கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்......**

என்ற பாடலில் சேரனுக்கு ஏற்பட்ட சிறுமையை எண்ணிப் பாடுவதாக அமைகிறது.

நாயைச் சங்கிலியால் கட்டி வைத்து துன்புறுத்தியது போல என்னைத் துன்புறுத்தினர். சிறையிலிட்ட உன் உதவியால் வந்த தண்ணீரை நான் இரந்து உண்ணமாட்டேன்.

**மருட்கை (வியப்பு) :**

**அமரரர்க்கு அரசன் தமர்வந்து ஈண்டி அவள்**

**காதல் கொழுநனைக் காட்டி.....**

எனும் வரும் பாடல் அடிகளில் கண்ணகி கோவலனோடு சென்ற காட்சி வியப்பை ஏற்படுத்துகிறது.

இந்திரன் கோவலனோடு வந்து பத்தினியாகிய கண்ணகியை விண்ணுக்கு அழைத்துச் சென்ற வியப்பான காட்சி.

**அச்சம் :**

**மையல் வேழம் மடங்கலின் எதிர்தர**

**உய்வு இடம் அறியேம்.....**

எனும் இப்பாடலில் அச்சம் வெளிப்படுகிறது.

மதம் பிடித்த யானை மரங்களை முறித்தது; கார்மேகம் இடிப்பது போல் முழங்கியது. உயிர் பிழைப்பதற்கு வேறு இடம் இல்லாமல் மகளிர்தம் கை வளையல் ஒலிக்க மயில் போல் நடுங்கி நின்றார்கள்.

www.kalvikadal.in

**பெருமிதம் (பெருமை) :**

**உறுசுடர் வாளோடு ஒருகால் விலங்கின**

**சிறு சுடர் முற்பேர் இருளாங் கண்டாய்.....**

இப்பாடலில் தனியொரு வீரன் பெரும் படையை எதிர்த்த பெருமையை விளக்குகிறது.

ஒளிமிக்க வேலினையும், தேன் நிறைந்த மாலையும் உடைய வேந்தனே! வாளுடன் பெரும் படையைத் தடுப்பேன். அப்பெரும்படை சிறுவிளக்கின் முன் இருள் ஓடுவது போல் ஓடும்.

**வெகுளி (சினம்) :**

**உறுதுப்பு அஞ்சாது, உடல் சினம் செருக்கிச்**

**சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை**

என்ற பாடல் அடிகளில் நெடுஞ்செழியனின் சினம் கூறப்படுகிறது.

தன்னை இளையவன் என்று எள்ளிய வேந்தர்களை சிதறி ஓடச் செய்து முரசையும் கைப்பற்றுவேன் என்று செழியன் சினங்கொள்கிறார்.

**உவகை (மகிழ்ச்சி) :**

**மண்டல மதியமன்ன மாசறு முகத்தினாளுந்**

**திண்டிறன் மருகன்.....**

இப்பாடலில் மழை மேகத்தைக் கண்ட மயில் போல மகிழ்ச்சி காணப்படுகிறது.

குந்தி தன் திறன் மிக்க மருமகன் கண்ணனைக் கண்ட காட்சி வெள்ளலைகள் நிறைந்த நீலக் கடலின் நீரை முகந்து வரும் மேகத்தைக் கண்ட தோகை மயில் போல மகிழ்ந்து வரவேற்றாள்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## கற்பவை கற்றபின்

பக்கம்: 143

1. **நீவிர் பார்த்த திரைப்படம் ஒன்றில், வெளிப்பட்ட மெய்பாடுகள் குறித்து எழுதுக.**

திரைப்பட உலகில், கலை வெளிப்பாட்டிற்காகவே தயாரிக்கப்பட்ட படங்களில் தில்லானா மோகனாம்பாள் போன்ற ஒரு படத்தைக் காவியமாகவே மக்கள் பார்க்கின்றனர். இப்படத்தில் நடிப்புக்கலையில் பிரசித்திப் பெற்ற ஜோடிகளான சிவாஜி - பத்மினி இணை நவரசத்தையும் வெளிப்படுத்தும் காட்சிகளில் நலந்தானா பாடல் காட்சி மெய் மயக்கச் செய்துவிடும்.

- நலந்தானா, நலந்தானா, உடலும் உள்ளமும் நலந்தானா என்ற பாடல் காட்சியில் பத்மினியின் கண்களில் எண்வகை மெய்ப்பாடுகளையும் தாண்டிய ஒரு வெளிப்பாடு, அவரது புருவம் தவிக்கும் பாவனை எழுத்தில் விவரிக்க இயலாது.
- இந்தப் பெண்பட்ட பாட்டை யார் அறிவார் - என்ற பாடல் காட்சியில் கண்களில் பனிக்கும் கண்ணீர் அழுகையை நமக்கிடையே வரவழைக்கும்.
- சிவாஜியின் புண்பட்ட கைகளை துண்டு மறைத்திருக்கும். தனது முந்தானையால் விசிறிவிட்டுப் பார்க்கும் பத்மினியின் பார்வையில் வெளிப்படும் அச்சவுணர்வு நம்மைச் சிலிர்க்க வைக்கும்.

**திரைப்படம் சொல்லாத கதையுமில்லை**
**கதை சொல்லாத காதலுமில்லை.**

2. **எண்வகை மெய்ப்பாடுகளுக்கு ஏற்ற திரையிசைப் பாடல்களின் தொகுப்பு ஒன்றை உருவாக்குக.**

**எண்வகை மெய்ப்பாடுகள்:**

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை

www.kalvikadal.in

| | |
|---|---|
| **நகை** | சிரிப்பு வருது சிரிப்பு வருது<br>சிரிக்க சிரிக்க சிரிப்பு வருது |
| **அழுகை** | உன்னை நினைச்சேன் பாட்டு படிச்சேன்<br>தங்கமே! ஞானத் தங்கமே! |
| **இளிவரல்** | பாட்ஷா பாரு! பாட்ஷா பாரு!<br>படை நடுங்கும் பாட்ஷா பாரு! |
| **மருட்கை** | நான் பார்த்ததிலே அவள் ஒருத்தியைத்தான்<br>நல்ல அழகி என்றேன் நல்ல அழகி என்றேன் |
| **அச்சம்** | சூரகாளி போல வாராடா<br>சுத்தி சுத்தி வாராடா |
| **பெருமிதம்** | வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும்<br>அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம் உன்னைச் சேரும் |
| **வெகுளி** | குயிலைப் புடிச்சி கூண்டில் அடைச்சி<br>பாடச் சொல்லுகிற உலகம் |
| **உவகை** | சந்தோஷம் காணாத நாள் உண்டா<br>சங்கீதம் பாடாத நாள் உண்டா |

✹✹★★★✹✹





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





இயல் 6

துணைப்பாடம்

# நடிகர் திலகம்

- பாலச்சந்திரன் சுள்ளிக்காடு

## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

1. **மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.**

சுள்ளிக்காட்டுப் பாலச்சந்திரன், முப்பது வருடங்களுக்கு முன்னால் ஒரு கூலி. திரையரங்கில் வெளியாகும் திரைப்படத்தை ஆட்டோ ரிக்சாவில் விளம்பரப்படுத்தும் பையன்.

**இருபது வருடங்களுக்குப் பின்:**

இருபது வருடங்களுக்குப் பின், கேரள வீதிகளில் அன்று குரல் விற்றுப்பிழைத்த பையன் சிவாஜிகணேசன் வீட்டில் அவரோடு உணவருந்தும் அற்புதச் சூழல் இன்று.

**சிவாஜியும் மோகன்லாலும்:**

1995இல் வி.பி.கெ.மேனன் படத்தில் சிவாஜியும் மோகன்லாலும் நடிக்க சம்மதித்தனர். அப்படத்தின் இயக்குநர் ராஜிவ் நாத். ஜான்பால் என்பவர் திரைக்கதை. படம் பற்றிப் பேச நடிகர் திலகம் வீட்டிற்குச் செல்ல நேரிட்டது.

www.kalvikadal.in

**வீட்டின் தோற்றம்:**

ஒரு நாள் சிவாஜியின் வீட்டிற்கு விருந்துக்குச் சென்றோம். சிவாஜியின் வீடல்ல அது அரண்மனை. கதவில் அழகிய வேலைப்பாடுகள்; தங்கத்தால் இழைத்த வேலைப்பாடுகள்; தங்கத்தால் இழைத்த இரண்டு பெரிய யானைத் தந்தங்கள். மாடிக்குச் சென்றோம். மாடி ஏறும்போது கட்டபொம்மனின் கம்பீரத் தோற்றத்தில் சிவாஜி. அடுத்து சத்ரபதி சிவாஜி. இன்னொரு புறத்தில் பிரஞ்சு அரசு வழங்கிய செவாலிய விருது கண்ணாடிப் பெட்டியில் இருந்தது.

**சிவாஜியின் வரவேற்பும் உபசரிப்பும்**

மாடியில் ரசித்தபடியே சென்ற எங்களை மாம்பழச் சாறு கொடுத்து வரவேற்றனர் தலைவனும், தலைவியும். அப்போது அங்கே சிங்க நடை நடந்து வரும் ராஜராஜ சோழனைப் பார்த்து அவர் கால்தொட்டு வணங்கினோம். பதிலுக்கு ஆசிர்வாதம் செய்தார். உட்காரச் சொன்னார். ராஜிவ் நாத்தும் ஜான்பாலும் சிவாஜியிடம் கதை - கதாபாத்திரம் பற்றிப் பேசினர்.

**சிவாஜியின் அங்க அசைவுகள்:**

அவர்களிடம் பேசும்போது புருவ அசைவு, கண்நோக்கு, முக அபிநயம், உதடு, கைவிரல், இவற்றின் செயல்பாடு கண்டு பாலச்சந்திரன் மெய்மறந்தார் ருத்ரன், கர்ணன், காளிதாசன், பாரதி, கட்டபொம்மன், ராஜராஜசோழன் இன்னபிற கதாபாத்திரங்களில் சிவாஜி பாலச்சந்திரனின் கண்களில் மின்னினார்.

**சிவாஜி விசாரித்தல்:**

ராஜிவ் நாத்திடம் பாலச்சந்திரனைக் காட்டி "இந்தப் பையன் யாரு என்றார் சிவாஜி. மலையாளக் கவிஞன் என்று அறிமுகப்படுத்தப்பட்டார். சுள்ளிக்காட்டுப் பாலசந்திரன் சிவாஜி பாலச்சந்திரனைப் பார்த்து வணக்கம் என்றார். எங்களை உள்ளே அழைத்தார்.







Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

**சிவாஜியின் புகைப்படங்கள்:**

எகிப்தின் முன்னாள் அதிபர் நாசர் முதல் ராஜ்நபூர் வரை உள்ள முன்னோடிகளுடன் சிவாஜி எடுத்துக்கொண்ட புகைப்படங்களையும் கண்டோம்.

**சிவாஜி-பட்டம்:**

விழுப்புரத்தில் ஏழையாகப் பிறந்த சிவாஜி ஐந்து வயதிலேயே நாடகக் கம்பெனியில் சேர்ந்து நடித்தவர். அண்ணாதுரையின் சத்ரபதி சிவாஜியாக நடித்ததன் காரணமாக சிவாஜி பட்டம் கிடைத்தது. பராசக்திக்குப் பிறகு வெற்றியாளரானார் சிவாஜி. வீரபாண்டியகட்டபொம்மனால் உலகப் பிரசித்திப் பெற்றார்.

**சிவாஜியிடம் ராஜிவ்நாத்தின் கேள்வி:**

சிவாஜியிடம் கட்டபொம்மனின் வசனம் ஞாபகம் இருக்கிறதா என்றார். ஒரு வசனம் சொல்ல முடியுமா என்றார்.

**சிவாஜியின் வசனம்:**

ஏர்பிடித்தாயா, களை வெட்டினாயா... மாமனா? மச்சானா? மானங்கெட்டவனே என்று சிங்கக் கர்ஜனை செய்தார் சிவாஜி. எல்லாம் ஒரே மூச்சில் மயங்கிப் போனோம் நாங்கள்.

**சிவாஜயின் கேள்வி:**

மலையாளத்தில் சரித்திர புராணம், நாடகங்கள் இல்லையா என்றார் சிவாஜி. இருக்கிறது என்றனர். உடனே ராஜிவ், பாலச்சந்திரனை ராவணனின் வசனத்தைச் சொல்லச் சொன்னார். சிவாஜியைவணங்கி,இராவணனாகமாறினார்பாலன்.இலங்கையின்போர்க்கொடிகள்பறக்கட்டும்.... நானே வெல்வேன் என்று முடித்தார் பாலன். கைதட்டிப் பாராட்டினார். இராவண வேடத்தில் நீங்கள் (சிவாஜி) நடித்தால் நன்றாக இருக்கும். ராஜிவ்நாத் சிவாஜியிடம் சொன்னார். என்ன பண்றது எனக்கு மலையாளம் தெரியாதே என்றார் சிவாஜி. வயசும் ஆயிடுச்சி என்றார் சிவாஜி. அதன்பிறகு அன்னை கமலாவின் கைகளால் விருந்து சாப்பிட்டோம். எல்லாம் முடிந்து புறப்பட்டோம். வாசல்வரை வந்து வழியனுப்பி வைத்தனர் சிவாஜி-கமலா தம்பதியினர். வைத்த கண் எடுக்காமல் பார்த்துக்கொண்டே திரும்பினோம்.

2. **உங்கள் ஊர்ப்பகுதியில் வாழும் கலைஞர் ஒருவரை நேரில் பார்த்த அனுபவத்தை விவரித்துக் கட்டுரையாக்குக.**

**வாழும் கலைஞர் :**

இன்றும் இசை மும்மூர்த்திகளின் ஒருவரான தியாகராஜருக்கு இசை விழா தஞ்சை மாவட்டம் திருவையாற்றில் நிகழ்ந்து வருகிறது. தஞ்சை, கும்பகோணம், மயிலாடுதுறைப் பகுதிகளில் இசையின் பற்பல துறைகளில் கலைஞர்கள் இன்றும் இருக்கிறார்கள். தஞ்சை மாவட்டம் என்றாலே நன்செய் மட்டுமல்ல. நல்லிசையிலும் கலைஞர்கள் இருப்பது சிறப்பு.

**திருவிசநல்லூர் ஜெயராமன் :**

கும்பகோணத்தின் கிழக்கே 5 கி,மீட்டர் தொலைவில் உள்ள ஊர் திருவிசநல்லூர். அவ்வூரில் எல்லாராலும் அறியப்பட்ட திரு.ஜெயராமன். நாதஸ்வரக் கலைஞரைப் பார்க்கச் சென்றேன். ஓட்டு வீடு, வீட்டின் முற்பகுதியில் இரண்டு நாற்கலிகள், ஒரு நீண்ட மேசை அவ்வளவுதான். வீட்டின் முன்புறச் சுவரில் காருக்குறிச்சி அருணாச்சலம், மதுரை M.P.M. பொன்னுச்சாமி சகோதரர்கள், ராஜரத்தினம் பிள்ளை இவர்களின் புகைப்படங்கள், பார்த்துக் கொண்டிருக்கும் போதே வணக்கம், வாங்க தம்பி என்ற குரல். நானும் எழுந்து வணங்கி நின்றேன். எழுபது வயதிருக்கும். வறுமையின் சாயல் தெரிந்தது. ஐயா, உங்களைப் பற்றிச் சொல்லுங்களேன் என்றேன். எங்கள் வீட்டில் நாதஸ்வரம் செய்வது தொழிலாக இருந்தது. எனது தாத்தா காலத்தில் இருந்தே நாதஸ்வரத்தைக் கையில் எடுத்து





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

விட்டேன். எனக்கு என் தந்தை மூச்சை அடக்கும் பயிற்சியை நீருக்குள் மூழ்கிக் கற்றுக் கொடுத்தார். பலூன்களில் காற்றை ஒரே மூச்சில் ஊதப் பயிற்சி அளித்தார். நாதஸ்வரத்தைப் பிடிக்கும் முறையைச் சொன்னார். மன ஒருமைப்பாடு பற்றிக் கூறினார். கீர்த்தனங்களில் ஏற்ற இறக்கம், ஒவ்வொன்றிற்கும் இடைவெளி நேரம் சொல்லிக் கொடுத்தார்.

எனது தந்தை சொல்லிக்கொடுத்த அடிப்படைப் பயிற்சியும், எனக்குள் இருந்த இசை அறிவும், ஆவலும் என்னை மக்களுக்குப் பரிச்சயம் ஆக்கின. வருமானம் என்பது போதுமானதாக இருந்தாலும் தேவைகளை பூர்த்திச் செய்ய பற்றாக்குறைதான். இப்பொழுது எனக்குள்ளே ஒரே ஒரு ஏக்கம்தான் என்னவென்றால் நான் கற்ற கொஞ்சம் அதாவது குறைவான கலையை யாருக்காவது சொல்லிக் கொடுக்கணும். அதுதான் என் ஜீவனுடைய ஆவல் என்றார். தில்லானா மோகனாம்பாள் படத்தின் நலம்தானா வாசித்துக்காட்டினார். அதிசயித்து விட்டோம். அப்படியொரு வாசிப்பு. எங்களாலான ஒரு அன்பளிப்பை அவருக்கு அளித்து வீடு திரும்பினோம். அந்த இசைமேதை - நாமெல்லாம் படிக்காத ஒரு மேதை.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **‘நடிகர் திலகம்’ என்னும் பாடப்பகுதி மலையாளக்கவிஞரும் நடிகருமான பாலசந்திரன் சுள்ளிக்காடு எழுதிய ................ என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.**

அ) சிதம்பரசித்த ஆ) சிதம்பர ஸ்மரண
இ) பாலச்சந்திர ஸ்மரண ஈ) சிவாஜி ஸ்மரண **[விடை: ஆ]**

www.kalvikadal.in

2. **பாலச்சந்திரன் சுள்ளிக்காடு எழுதிய நூலை ’சிதம்பர நினைவுகள்’ என்னும் தலைப்பில் மொழிபெயர்த்தவர்**

அ) கே.வி. சைலஜா ஆ) ராஜீவ்நாத் இ) ஜான்பால் ஈ) வெ.ஸ்ரீராம் **[விடை: அ]**

3. **நடிப்புலகின் சக்கரவர்த்தி எனப்படுபவர்**

அ) மார்லன் பிராண்டோ ஆ) சார்லி சாப்ளின்
இ) சிவாஜி கணேசன் ஈ) அர்னால்டு **[விடை: இ]**

4. **‘என்னைப் போல் சிவாஜி நடிப்பார். ஆனால் என்னால்தான் சிவாஜிபோல் நடிக்க முடிக்க முடியாது’ என்று குறிப்பிட்ட நடிகர்**

அ) மார்லன் பிராண்டோ ஆ) அமிதாப் பச்சன்
இ) அர்னால்டு ஈ) ஜாக்கிசான் **[விடை: ஆ]**

5. **சிவாஜி கணேசனுக்குச் செவாலியர் விருதளித்த அரசு**

அ) ஆங்கில அரசு ஆ) பிரெஞ்சு அரசு
இ) இந்திய அரசு ஈ) இலங்கை அரசு **[விடை: ஆ]**

6. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | ஊழித்தாண்டவம் | - | 1. பாரதி |
| ஆ) | கவச குண்டலம் | - | 2. காளிதாசன் |
| இ) | காளமேகம் | - | 3. கர்ணன் |
| ஈ) | உன்னதக்கவி | - | 4. ருத்ரன் |

அ) 4, 3,2 , 1 ஆ) 3, 2, 1, 4 இ) 2, 1, 4, 3 ஈ) 2, 3, 4, 1 **[விடை: அ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







7. **சிவாஜி கணேசன் பிறந்த ஊர்**
   அ) தஞ்சாவூர் ஆ) விழுப்புரம் இ) அரியலூர் ஈ) வடலூர் **[விடை: ஆ]**

8. **சிவாஜி கணேசனின் கல்வித் தகுதி**
   அ) பள்ளிக்கூடத்தில் படித்ததேயில்லை ஆ) இளங்கலை பட்டம்
   இ) முனைவர் பட்டம் ஈ) மூன்றாம் வகுப்பு **[விடை: அ]**

9. **சிவாஜி கணேசன் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக நாடகக் கமம்பெனியில் சேர்ந்த போது வயது**
   அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) எட்டு **[விடை: ஆ]**

10. **அண்ணாத்துரையின் நாடகத்தில் சத்ரபதி சிவாஜியாக வேடமேற்று நடித்தவர்**
    அ) எம்.ஜி.ஆர். ஆ) சின்னையா கணேசன்
    இ) ஜெமினி கணேசன் ஈ) எம்.ஆர்.இராதா **[விடை: ஆ]**

11. **வி.சி. கணேசனுக்கு 'சிவாஜி கணேசன்' என்று பெயரிட்டவர்**
    அ) அறிஞர் அண்ணா ஆ) கு.காமராசர்
    இ) தந்தை பெரியார் ஈ) மு. கருணாநிதி **[விடை: இ]**

12. **சிவாஜி கணேசன் நடித்த முதல் திரைப்படம்**
    அ) தங்கப்பதக்கம் ஆ) வீரபாண்டிய கட்டபொம்மன்
    இ) பராசக்தி ஈ) பாசமலர் **[விடை: இ]**

13. **சிவாஜி கணேசனை உலக பிரசித்தி பெற்ற நடிகனாய் மாற்றிய திரைப்படம்**
    அ) பராசக்தி ஆ) ஞானஒளி
    இ) ராஜபாட் ரங்கதுரை ஈ) வீரபாண்டிய கட்டபொம்மன் **[விடை: ஈ]**

www.kalvikadal.in

14. **(கெய்ரோ) ஆப்பிரிக்க-ஆசியத் திரைப்பட விழாவில் சிவாஜி கணேசனுக்கு வழங்கப்பட்ட விருது**
    அ) சிறந்த நடிகருக்கான விருது ஆ) செவாலியர்
    இ) தாதாசாகெப் ஈ) ஆஸ்கார் **[விடை: அ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## 12 கற்பவை கற்றபின்

பக்கம்: 148

1. பராசக்தி, வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன், திருவிளையாடல் போன்ற திரைப்படங்களில் இடம் பெற்ற சிவாஜிகணேசனின் வசனங்களை உரிய உச்சரிப்புடன் பேசி வகுப்பறையில் நடித்துக் காட்டுக.

| பராசக்தி - வசனம் : | வீரபாண்டிய கட்டப்பொம்மன் - வசனம் : |
|---|---|
| கோவிலிலே குழப்பம் விளைவித்தேன்<br>பூசாரியைத் தாக்கினேன்<br>குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறேன் இப்படி எல்லாம் நீங்கள் எதிர்பார்ப்பீர்கள்<br>இதையெல்லாம் மறுக்கப் போகிறேன் என்று<br>இல்லை இல்லவே இல்லை நிச்சயமாக இல்லை.<br>கோவிலில் குழப்பம் விளைவித்தேன்<br>கோவில் கூடாது என்பதற்காக அல்ல<br>கோவில் கொடியவரின் கூடாரமாக<br>இருக்கக்கூடாது என்பதற்காக. | கிஸ்தி, திறை, வரி, வட்டி<br>வானம் பொழிகிறது, பூமி விளைகிறது<br>உனக்கு ஏன் கொடுப்பது கிஸ்தி<br>எங்களோடு வயலுக்கு வந்தாயா<br>ஏற்றம் இறைத்தாயா<br>நீர்ப்பாய்ச்சினாயா<br>நாற்று நட்டாயா<br>களை பறித்தாயா<br>கழனி வாழ்உழவருக்குக்<br>கஞ்சிக்கலயம் தூக்கினாயா<br>அங்கு கொஞ்சி விளையாடும்<br>எம்குல மங்கையர்க்கு மஞ்சள் அரைத்துக் கொடுத்தாயா<br>அல்லது மாமனா மச்சானா<br>மானங்கெட்டவனே...... |

**கப்பலோட்டிய தமிழன் - வசனம் :**

www.kalvikadal.in

விஞ்சதுரை : நெருப்பைக் கக்கும் எரிமலை நீங்கள். நீங்க நடந்தா பூமியே நடக்குது. பேசினா புரட்சியே வருது. எழுதினா கலகம் வருது. மந்திரவாதிங்க மாதிரி ஜனங்கள ஆட்டிவைக்கிறீங்க. என்னாமேன் என்ன? நான்ஸென்ஸ்.

வ.உ.சி : அப்படி நான் என்னய்யா பேசினேன்? எந்நாட்டு மக்கள் சுதேசி பக்தி கொள்ளச் சொன்னேன்.

விஞ்சதுரை : சொன்னே மேன். சொன்னே. சுதேசி பொருளை வெறுக்கச் சொன்னே.

வ.உ.சி : ஆம். வியாதிக்கு மருந்தொன்று சொன்னேன்.

விஞ்சதுரை : சும்மாகிடந்த ஜனங்கள தூண்டிவிட்ட மேன். தூண்டிவிட்ட மேன்.

வ.உ.சி : இல்ல. பயமென்னும் பள்ளத்தை தாண்டச் சொன்ன.

விஞ்சதுரை : அதிகாரத்தை அவமானப்படுத்துன.

வ.உ.சி. : இல்ல. அகம்பாவத்தை அழிக்கச்சொன்ன.

**திருவிளையாடல் - வசனம்**

கூத்தன் : கேள்விகளை நீ கேட்கிறாயா......? அல்லது நான் கேட்கட்டுமா.....?

தருமி : நீ கேக்காதே. நான் கேக்கிறேன். எனக்கு கேக்கத்தான் தெரியும்.

கூத்தன் : கேளும்....

தருமி : சற்று பொறும்.

கூத்தன் : ம்ம்ம்..... கேளும்....

தருமி : பிரிக்கமுடியாதது என்னவோ...?

கூத்தன் : தமிழும் சுவையும்.

தருமி : பிரியக்கூடாதது...?



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

கூத்தன் : எதுகையும் மோனையும்.

தருமி : சேர்ந்தே இருப்பது...?

கூத்தன் : வறுமையும் புலமையும்.

**2. உங்கள் பகுதியில் வாழ்ந்து வரும் கலைஞர் ஒருவரை நேரில் கண்ட அனுபவத்தை எழுதுக.**

கலைகளை வளர்த்த பெருமைக்கு உரிய ஊர் கும்பகோணம். அவ்வூரில் பரதம், இசை, கருவி இசை முதலான கலைகள் இன்றளவும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இந்த ஊரில்தான் மாபெரும் கலைஞர்கள் கே.ஆர். இராமசாமி, எம்.ஜி.இராமச்சந்திரன், காளி.என். இரத்தினம் போன்றவர்கள் வாழ்ந்தார்கள். இது கும்பகோணத்திற்கே பெருமை தரக்கூடிய ஒன்று. கும்பகோணம் பக்தகோடித் தெருவில் வசிக்கும் பரதநாட்டிய கலைஞர் ஒருவரை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவர் பெயர் மாலா (பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது). அப்பா இல்லை; அம்மா மட்டும் உண்டு. கும்பகோணம் பள்ளிகளில் படிக்கின்ற பிள்ளைகளுக்கு பரதம் கற்றுக்கொடுத்து வருகிறார்.

எனது மகளுக்குக் பரதம் கற்றுத்தர அனுமதி கேட்டு, அவரிடம் சென்றிருந்தேன். ஒத்துக்கொண்ட அவர் தான் நாட்டியம் ஆடியபொழுது எடுத்துக்கொண்ட புகைப்படங்களை என்னிடம் காட்டினார்.

எண்வகை மெய்ப்பாடுகளையும் வெளிக்கொணர்ந்து அவர் பரதம் ஆடிய அழகு பாராட்டுதற்குரியது. அபிநயம், பாவனை, புருவ வளைவுகள், கைவிரலின் அசைவுகள் முதலானவற்றைப் பார்ப்பதற்கு அற்புதமாக இருந்தது. இப்படியொரு நல்ல கலைஞர் சாதாரண வீட்டில் வாழ்கிறாரா என்ற கேள்வி எங்களுக்குள் எழுந்தது.

தில்லானா மோகனாம்மாள் என்ற திரைப்படத்தில் கதாநாயகி பத்மினி ஆடிய 'மறைந்திருந்து பார்க்கும் மருமம் என்ன' என்ற பாடல் எங்களுக்கு மிகவும் பிடிக்கும் என்றோம். ஒரு பத்துநிமிடம் எங்களை அமரச் சொல்லிவிட்டு அந்த அறையிலேயே அபிநயம் பிடித்து அழகாக ஆடினார். அத்தகைய ஆட்டத்தை நாங்கள் இதுவரை பார்த்ததேயில்லை.

வாழும் கலைஞர் அவர். இவர் போன்ற கலைஞர்களை வாழ வைக்க நமது அரசு ஒரு அறக்கட்டளை அமைக்க வேண்டும் என்பது எனது விருப்பம். இத்தகைய கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவேண்டும் என்பது எனது வேண்டுகோளும் கூட. அரசு நாட்டியப் பள்ளிகள் தொடங்க வேண்டும். கலையையும், கலைஞரையும் போற்ற வேண்டும்.

இறுதியாக, அந்தக் கலை ஞானி கொடுத்த கும்பகோணம் டிகிரி காபியோடு வீடு திரும்பினோம்.

*******



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



# இயல் 6 இலக்கணம்

# காப்பிய இலக்கணம்

## இலக்கணத் தேர்ச்சி கொள்

பக்கம்: 151

1. **ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்**

அ) சிவஞான முனிவர் ஆ) மயிலை நாதர்

இ) ஆறுமுக நாவலர் ஈ) இளம்பூரணர் **விடை: ஆ**

2. **கூற்று 1 : காப்பியம் என்னும் சொல் காப்பு + இயம் எனப் பிரிந்து மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது, மொழியைச் சிதையாமல் காப்பது என்றெல்லாம் பொருள் தருகிறது.**

**கூற்று 2 : ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று நீலகேசி.**

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 2 சரி, கூற்று 1 தவறு

இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு **விடை: அ**

3. **சரியானவற்றைப் பொருத்தித் தேர்க :**

| | | | |
|---|---|---|---|
| அ) | காதை | - | 1. கந்தபுராணம் |
| ஆ) | சருக்கம் | - | 2. சீவகசிந்தாமணி |
| இ) | இலம்பகம் | - | 3. சூளாமணி |
| ஈ) | படலம் | - | 4. சிலப்பதிகாரம் |

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 3, 4, 2, 1 ஈ) 4, 3, 1, 2 **விடை: அ**

4. **தவறான இணையைத் தேர்க :**

| | பாவகை | | இலக்கியம் |
|---|---|---|---|
| அ) | விருத்தப்பா | - | நாலடியார் |
| ஆ) | ஆசிரியப்பா | - | அகநானூறு |
| இ) | கலிவெண்பா | - | தூது |
| ஈ) | குறள் வெண்பா | - | திருக்குறள் |

**விடை: அ**

## குறுவினா

5. **காப்பியம் எத்தனை வகைப்படும்? அவை யாவை ?**

காப்பியம் இரு வகைப்படும். அவை, ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறுகாப்பியம்.

**ஐம்பெருங்காப்பியங்கள் :**

சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி.

**ஐஞ்சிறுகாப்பியங்கள் :**

நீலகேசி, சூளாமணி, உதயணகுமார காவியம், யசோதர காவியம், நாககுமார காவியம்.

6. **காப்பியத்தைக் குறிக்கும் வேறு பெயர்கள் யாவை ?**

இதிகாசம், புராணம், இலக்கியம், சரிதம், காவியம் முதலான பெயர்கள் காப்பியத்தின் வேறு பெயர்கள்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

7. **காப்பியத்தின் சிற்றுறுப்புகள் சிலவற்றை எழுது.**

காதை, சருக்கம், இலம்பகம், படலம் முதலானவை காப்பியத்தின் சிற்றுறுப்புகள் ஆகும்.

8. **பாவகம் - விளக்குக.**

- காப்பியத்தின் பண்பாகப் பாவகம் என்பதைத் தண்டியலங்காரம் குறிக்கின்றது.
- காப்பியக் கவிஞன் வலியுறுத்த விரும்பும் அடிப்படைக் கருத்தைப் பாவகம் என்பர்.

**எ.கா:** பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப என்பது கம்பராமாயணத்தின் பாவகம்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | காதை | - | 1. சிலப்பதிகாரம், கம்பராமாயணம் |
| ஆ) | சருக்கம் | - | 2. கந்தபுராணம், கம்பராமாயணம் |
| இ) | இலம்பகம் | - | 3. சீவக சிந்தாமணி |
| ஈ) | படலம் | - | 4. சூளாமணி, பாரதம் |
| உ) | காண்டம் | - | 5. சிலப்பதிகாரம், மணிமேகலை |

அ) 5, 4, 3, 2, 1 ஆ) 2, 1, 3, 4, 5 இ) 4, 3, 2, 1, 5 ஈ) 2, 3, 4, 1, 5 **[விடை: அ]**

2. **EPOS என்னும் கிரேக்கச் சொல்லின் பொருள்**

அ) சொல் அல்லது பாடல் ஆ) எழுத்து அல்லது கவிதை
இ) வாக்கியம் அல்லது வரலாறு ஈ) பக்தி அல்லது பண்பாடு **[விடை: அ]**

www.kalvikadal.in

3. **நன்னூலுக்கு உரை எழுதியவர்**

அ) மயிலைநாதர் ஆ) சி.வை.தாமோதரனார்
இ) சேனாவரையர் ஈ) இளம்பூரணர் **[விடை: அ]**

4. **'பஞ்சகாப்பியம்' என்னும் சொற்றொடர் பயன்படுத்தப்பட்ட நூல்**

அ) நன்னூல் ஆ) தமிழ்விடுதூது
இ) பொருள்தொகை நிகண்டு ஈ) திருத்தணிகை உலா **[விடை: ஆ]**

5. **சிறுகாப்பியங்கள் ஐந்து என்று வழங்கும் வழக்கம் சி.வை.தாமோதரனார் காலத்திற்கு முன்பே இருந்துள்ளது என்பன அறிய செய்வது**

அ) மயிலைநாதரின் நன்னூல் உரை ஆ) சி.வை. தாமோதரனாரின் சூளாமணி பதிப்புரை
இ) பொருள்தொகை நிகண்டு ஈ) திருத்தணிகை உலா **[விடை: ஆ]**

6. **வடமொழியில் 'காவ்யதரிசனம்' என்ற நூலைத் தழுவித் தமிழில் எழுதப்பட்ட அணியிலக்கண நூல்**

அ) தண்டியலங்காரம் ஆ) மாறனலங்காரம்
இ) இலக்கண விளக்கம் ஈ) தொன்னூல் விளக்கம் **[விடை: அ]**

7. **தண்டியலங்காரம் காப்பிய வகை ................ பகுக்கின்றது.**

அ) இரண்டாக ஆ) மூன்றாக இ) நான்காக ஈ) ஐந்தாக **[விடை: அ]**

8. **'பாவிகம் என்பது காப்பிய பண்பே' என்று கூறும் நூல்**

அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல்
இ) தண்டியலங்காரம் ஈ) மாறனலங்காரம் **[விடை: இ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





9. **பெருங்காப்பியத்திற்குரிய நான்குவகை உறுதிப்பொருள்களும் பிற உறுப்புகளும் முழுமையாக அமையப்பெற்று விளங்கும் காப்பியம்**

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) சீவகசிந்தாமணி ஈ) வளையாபதி **[விடை: இ]**

10. **'பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப' என்பது ................ பாவிகம்.**

அ) கம்பராமயணத்தின் ஆ) சிலப்பதிகாரத்தின்
இ) சீவகசிந்தாமணியின் ஈ) குண்டலகேசியின் **[விடை: அ]**

11. **தண்டியலங்காரம் கூறும் 'தொடர்நிலை' என்னும் செய்யுள் வகை ................ குறிப்பதாகும்.**

அ) சிற்றிலக்கியத்தை ஆ) அக இலக்கத்தை
இ) காப்பியத்தை ஈ) புற இலக்கியத்தை **[விடை: இ]**

12. **பொருள்தொடர்நிலைக்கான நூல்கள்**

அ) சிலப்பதிகாரம், கம்பராமாயணம் ஆ) அந்தாதி இலக்கியங்கள்
இ) சிற்றிலக்கியங்கள் ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

13. **விருத்தம் என்னும் ஒரேவகைச் அசெய்யுளில் அமைந்தவை**

அ) சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் ஆ) சிலப்பதிகாரம், மணிமேகலை
இ) குண்டலகேசி, வளையாபதி ஈ) இராவணகாவியம் **[விடை: அ]**

14. **பாட்டும் உரைநடையும் கலந்து பல்வகைச் செய்யுள்களில் அமைந்தது**

அ) கம்பராமாயணம் ஆ) சிலப்பதிகாரம் இ) குண்டலகேசி ஈ) வளையாபதி **[விடை: ஆ]**

15. **'அந்தாதி இலக்கியங்கள்', செய்யுள் வகைகளில் ................ சான்றாக அமைகின்றன.**

www.kalvikadal.in

அ) பொருள்தொடர்நிலைக்கு ஆ) சொல்தொடர்நிலைக்கு
இ) தொகைநிலைக்கு ஈ) முத்தகத்துக்கு **[விடை: ஆ]**

16. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | பாரதியார் | - | 1. பாஞ்சாலி சபதம் |
| ஆ) | பாரதிதாசன் | - | 2. மருமக்கள் வழி மான்மியம் |
| இ) | கவிமணி | - | 3. பாண்டியன் பரிசு |
| ஈ) | கண்ணதாசன் | - | 4. மாங்கனி |

அ) 1, 3, 2, 4 ஆ) 2, 3, 4, 1 இ) 4, 3, 2, 1 ஈ) 2,1, 3, 4 **[விடை: அ]**

17. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | கவியோகி சுத்தானந்த பாரதியார் | - | 1. ஏசுகாவியம் |
| ஆ) | புலவர் குழந்தை | - | 2. பராசக்தி மகாகவியம் |
| இ) | பாரதிதாசன் | - | 3. இராவண காவியம் |
| ஈ) | கண்ணதாசன் | - | 4. இருண்டவீடு |

அ) 2, 3, 4, 1 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 3, 1, 4 ஈ) 1, 4, 2, 3 **[விடை: அ]**

18. **'ஆட்டனத்தி ஆதிமந்தி' என்னும் குறுங்காப்பியத்தை இயற்றியவர்**

அ) பாரதிதாசன் ஆ) கண்ணதாசன்
இ) கவிமணி ஈ) புலவர் குழந்தை **[விடை: ஆ]**






Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



## குறுவினா

1. **காப்பியம் – பெயர்க்காரணம் கூறுக.**

ஆங்கிலத்தில் EPIC என்பர்.

- EPOS என்ற கிரேக்கச் சொல். EPOS என்பதற்குச் சொல் அல்லது பாடல் என்பர்.
- வடமொழியில் காவியம் என்பர்.
- காப்பு & இயம் எனப் பிரித்து மரபைக் காப்பது இயம்புவது.
- மொழியைச் சிதையாது காப்பதும் என்பர்.

2. **காப்பியத்தைக் குறிக்கும் பிற பெயர்கள் யாவை?**

- பொருட்டொடர் நிலைச் செய்யுள்
- விருத்தச் செய்யுள்
- கதைச் செய்யுள்
- மகாகாவியம்
- அகலக் கவி
- உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்.
- தொடர்நடைச் செய்யுள்

3. **காப்பிய அமைப்பு முறையை விளக்கிப் பட்டியல் இடுக.**

**காப்பியத்தின் சிற்றுறுப்புகள் :**

காதை, சருக்கம், இலம்பகம், படலம் பல சிற்றுறுப்புகள் தொகுதி காண்டம் என்பர்.

- காதை – சிலப்பதிகாரம், மணிமேகலை
- சருக்கம் – சூளாமணி, பாரதம்
- இலம்பகம் – கந்தபுராணம், கம்பராமாயணம்
- காண்டம் – சிலப்பதிகாரம், கம்பராமாயணம்

www.kalvikadal.in

4. **தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணத்தை விளக்குக.**

வடமொழியில் 'காவ்யதரிசம்' என்ற நூலைத் தழுவித் தமிழில் எழுதப்பட்ட அணி இலக்கண நூல். இந்நூலில் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் எனப் பிரிக்கப்பட்டு இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

**காப்பியங்கள் :**

**'ஒரே வகைச் செய்யுளாலும்**
**பல வகைச் செய்யுளாலும்'** ஆகும்.

5. **சிறுகாப்பியத்திற்குரிய இலக்கணம் தருக.**

அறம், பொருள், இன்பம், வீடு நான்கனுள் ஒன்றோ இரண்டோ குறைந்து வருவது சிறு காப்பியம் ஆகும்.

6. **பாவிகம் என்றால் என்ன?**

காப்பியத்தில் கவிஞன் வலியுறுத்த விரும்பும் அடிப்படைக் கருத்தே பாவிகம் ஆகும்.

7. **கம்பராமாணத்தின் பாவிகம் யாது?**

'பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப' என்பதே ஆகும்.

8. **சிலப்பதிகாரத்தின் பாவிகம் கூறுக.**

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்
ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் – என்பதேயாகும்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







**9. காப்பியம் என்பது யாது?**

- ஒரு மொழியின் வளத்தைக் காப்பியங்களே புலப்படுத்தும்.
- எளிய நடை, இனிய கதை, அழகியல், கற்பனை ஆகிய ஒரு சேர அமைந்த இலக்கிய வடிவமே காப்பியமாகும்.

**10. தொடர்நிலை என்பது யாது?**

ஒரு பாடலையும் மற்றொரு பாடலையும் சொல்லாலும் பொருளாலும் தொடர்பு ஏற்படுத்தும் செய்யுள் வகை தொடர்நிலை ஆகும்.

**11. தொடர்நிலை எத்தனை வகைப்படும்? அவை யாவை? சான்றுடன் விளக்குக.**

இரண்டு வகைப்படும். அவை: பொருள் தொடர்நிலை, சொல் தொடர்நிலை.

**பொருள் தொடர்நிலை :** சிலப்பதிகாரம், கம்பராமாயணம்.

**சொல் தொடர்நிலை :** அந்தாதி, இலக்கியங்கள்.

**12. தண்டியலங்காரம் - குறிப்பு வரைக.**

- அணி இலக்கணத்தைக் கூறும் நூல். வடமொழியில் ‘காவ்யதரிசம்’ என்ற நூலைத் தழுவி எழுதப்பட்டது.
- இந்நூல் முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை என நான்கு வகைப்படும்.
- தொடர்நிலை என்னும் வகை காப்பியத்தைக் குறிக்கும்.

## சிறுவினா

**1. பெருங்காப்பியத்திற்குண்டான இலக்கணம் தருக.**

www.kalvikadal.in

- வாழ்த்துதல் தெய்வத்தை வணங்குதல், வருபொருள் உரைத்தல், மூன்றில் ஒன்றோ, இரண்டோ அல்லது மூன்றோ வருதல் வேண்டும்.
- அறம், பொருள், இன்பம், வீடு நான்கும் திரண்ட பொருளாக இருத்தல் வேண்டும்.
- தன்னிகர் இல்லாத தன்மைக் கொண்டவனாகத் தலைவன் இருத்தல் வேண்டும்.
- 18 உறுப்புகளும், இயற்கை வருணனைகள் அமைதல் வேண்டும்.
- திருமணம், மக்கட்பேறு, முடிசூடல் நிகழ்வு இருத்தல் வேண்டும்.
- அமைச்சர்களுடன் கலந்துரையாடல், தூது, போர் வெற்றி நிகழ்வுகள் இருத்தல் வேண்டும்.
- கதைப்போக்கு வரிசைப்படி அமைதல் வேண்டும்.
- உட்பிரிவு சருக்கம், இலம்பகம், காதை, பரிச்சேதம் என்ற பெயரில் அமைதல் வேண்டும்.
- எண் வகைச்சுவை மெய்ப்பாட்டுக் குறிப்புகள் அடைதல் வேண்டும்.

இவையே பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணம் ஆகும்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 151

**சிலப்பதிகாரப் பாடப்பகுதியில் அமைந்துள்ள காப்பிய இலக்கணக்கூறுகளைக் கட்டுரையாக எழுதுக.**

**வியப்பு:**

**அரங்கேற்ற காதை நிகழ்வுகளின் போக்கு:**

மாதவி அரங்கில் தோன்றி நாட்டிய நூலில் சொல்லப்பட்ட முறைமைத் தவறாது, பாவம், அபிநயம் இவற்றைச் சரியாகக் கடைபிடித்து நன்மை பெறுகவும் தீமை நீங்கவும் வேண்டி





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

‘ஓரொற்றுவாரம்’ ‘ஈரொற்று வாரம்’ என்னும் தெய்வப் பாடலை முறையாகப் பாட பாடலுக்கு ஏற்ப இசை அமைக்க மாதவி ஆடியதைக் கண்டு அனைவரும் வியந்தனர்.

**கொடை:**

**மன்னன் பட்டமும் பரிசும் மாதவிக்கு அளித்தது:**

- மாதவியின் ஆடல் கண்டு அகமகிழ்ந்தான் மன்னன்.
- மாதவிக்கு ‘தலைக்கோல் அரிவை’ என்னும் பட்டத்தை வழங்கினான்.
- ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப் பொன் மாலையை மன்னன் பரிசாக வழங்கினான்.
- பாடப்பகுதிக்கும் காப்பிய இலக்கணத்திற்கும் உள்ள பொருத்தம்

**பெருமிதம்:**

அரங்கேற்றுகாதையில் தலைமகளாக உள்ள மாதவியின் நாட்டியம், அரங்கேற்றம் போன்றவற்றைக் கண்டு பரிசு பெறுதல், இன்பம் காணுதல் ஆகியவைக் காப்பிய இலக்கணத்திற்கு பொருத்தமாக உள்ளது.

**மன்னனின் போர்:**

சோழ மன்னன் பகைமன்னனுடன் நிகழ்த்திய போரில் பறித்த வெண்கொற்றக் கொடையின் காம்பில் செய்யப்படுவது தலைக்கோல். இவ்விடத்தில் போர் வெற்றிச் செய்தி காணப்படுகிறது. இவ்வெற்றிச் செய்தி காப்பிய இலக்கணத்திற்குப் பொருத்தமானது.

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 153

### சான்றோர் சித்திரம்

www.kalvikadal.in



**வை.மு. கோதைநாயகி (1901-1960)**

ஐந்தரை வயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் ஒருவர். தன் குடும்பத்தாரிடமே கல்வி கற்றார். கதை கூறுவதில் ஆர்வம் கொண்டிருந்த அவர் தன் கற்பனை ஆற்றலால் தோழியர்களுக்கு புதிய கதைகளை உருவாக்கிக் கூறினார். அதைக் கண்ட அவரது கணர் அப்பெண்ணின் படைப்பாற்றலை ஊக்குவிக்கப் பல நாடகங்களுக்கு அழைத்துச் சென்றார். அப்பெண்ணுக்கு நாடகம் எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஆனால் ஓரளவு மட்டும் எழுதத் தெரிந்த தன்னால் நாடகம் எழுத முடியும் என்று அவர் வருந்திய போது, அவரது தோழி, நாடகத்தை அவர் சொல்லச் சொல்லத் தான் எழுதுவதாகக் கூறி ஊக்கப்படுத்தினார். இப்படித்தான் அப்பெண் தன்னுடைய முதல் நூலான ‘இந்திர மோகனா’ என்ற நாடக நூலை வெளியிட்டார். அவர்தான் ‘நாவல் ராணி’, ‘கதா மோகினி’, ‘ஏக அரசி’ என்றெல்லாம் தம் சமகால எழுத்தாளர்களால் அழைக்கப்பட்ட வை.மு.கோ. (‘வைத்தமாநிதி முடும்பை கோதைநாயகி அம்மாள்’) ஆவார்.

இவர் ‘ஜகன் மோகினி’ என்ற இதழை முப்பத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து நடத்தினார். பெண் எழுத்தாளர்களையும், வாசகர் வட்டத்தையும் உருவாக்கினார். காந்தியத்தின் மீது பற்றும் உறுதியும் கொண்டிருந்த இவர் தம் எழுத்துகளால் மட்டுமன்றி மேடைப்பேச்சின் மூலமும் காந்தியக் கொள்கைகளைப் பரப்புரை செய்ததோடு விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறைக்கும் சென்றார். தமிழகப் பெண் வரலாற்றில் தனித்து அடையாளம் காட்டப்பட வேண்டிய சிறப்புக்குரியவரான வை.மு.கோ. அவர்கள் 115 நாவல்கள் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ‘குடும்பமே உலகம்’ என்று பெண்கள் வாழ்ந்த காலகட்டத்தில், வீட்டிற்கு வெளியே உலகம் உண்டு என்பதைப் பெண்களுக்குத் தன் வாழ்வின் மூலம் இனம் காட்டிய பெருமைக்கு உரியவர் வை.மு.கோ. அம்மையார்.

**அவருடைய எழுத்தாற்றலுக்கொரு சான்று :**

"என்ன வேடிக்கை! அடிக்கடி பாட்டி 'உலகானுபவம்,,,, உலகம் பலவிதம்,,,, லோகோ பின்னருசி',,, என்றெல்லாம் சொன்னதைக் கேட்டபோது எனக்கு ஒண்ணுமே புரியாது விழித்தேனே ,,, பாட்டி சொல்லிய வசனங்களை விடக் கடிதங்கள் பலவற்றைப் படித்தால் அதுவே மகத்தான லோகானுபவங்களை உண்டாக்கிவிடும் போலிருக்கிறதே! பாவம்! பேசுவது போலவே தன்னுடைய மனத்தினுள்ளதைக் கொட்டி அளந்துவிட்டாள்,,,,, நான் கிராமத்தை வெறுத்துச் சண்டையிட்டு வீணாக அவர் மனதை நோவடிக்கிறேன். இவள் பட்டணத்தை வெறுத்துத் தன் கொச்சை பாஷையில் அதன் உண்மை ஸ்வரூபத்தை படம் பிடித்துக் காட்டி விட்டாளே! ,,, என்ன உலக விசித்திரம்!,,, என்று கட்டுமீறிய வியப்பில் சித்ரா மூழ்கினாள்."

('தபால் விநோதம்' குறுநாவலில் இருந்து)

**வினாக்கள் :**

1. **வை. மு. கோதைநாயகியின் முதல் நூல் எது?**
2. **தொடர்ந்து உறுப்பிலக்கணம் தருக: தொடர்ந்து**
3. **இப்பகுதியில் இடம்பெற்றுள்ள உவம உருபினை எடுத்து எழுதுக.**
4. **பிரித்தறிக: பங்கேற்று**
5. **புணர்ச்சி விதி கூறுக: தன்னுடைய**

**விடைகள் :**

1. இந்திர மோகனா

2.

| | | |
|---|---|---|
| **தொடர்ந்து** | - | **தொடர் + த்(ந்) + த் + உ** |
| தொடர் | - | பகுதி |
| த் | - | சந்தி (ந் ஆனது விகாரம்) |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| உ | - | வினையெச்ச விகுதி |

www.kalvikadal.in

3. போலவே (போல)

4. பங்கேற்று - பங்கு + ஏற்று

5. தன்னுடைய - தன் + உடைய
   - தனிக்குறில் முன் ஒன்று உயிர்வரின் காட்டும் என்ற விதிப்படி, தன்ன் + உடைய என்றானது.
   - உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி, (ன்+உ=னு) தன்னுடைய என்று புணர்ந்தது.

**தமிழாக்கம் தருக.**

Popular as the 'Cultural Capital' of India, Tamil Nadu is extremely well-known for its marvellous temples and other architectural gems. The state rose to prominence primarily because of its well-known and outstanding Tanjore Paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor. In this traditional art form, the paintings showcase the embellished form of the sacred deities of the region. The deities in the paintings are festooned with glass pieces, pearls, semi-precious stones, and gold and other vibrant colours. In the modern times, Tanjore paintings look up to human figures, animals, floral motifs and birds as muses.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

**தமிழாக்கம்:**

இந்தியாவில் தமிழகம் கலாச்சாரத் தலைநகரமாகத் திகழ்கிறது. தமிழ்நாடு பிரம்மாண்டமான கோவில்களுக்கும் மற்றும் கட்டடக்கலைகளுக்கும் புகழ்பெற்றது. குறிப்பாக, தஞ்சாவூர் ஓவியங்கள் சோழ வம்சத்தின் கலாச்சாரங்களையும் பண்டைய தஞ்சாவூரின் பாரம்பரிய கலை, ஓவியங்கள் மற்றும் புனித தெய்வங்கள் ஆகியவற்றுக்குப் பெயர் பெற்றது. தெய்வங்களின் உருவங்கள் கண்ணாடித் துண்டுகள் ஓவியங்கள், முத்துக்கள், விலை உயர்ந்த கற்கள் மற்றும் தங்கம் ஆகியவற்றில் பல வண்ணங்களில் பொறிக்கப்பட்டுள்ளன. நவீன காலத்தில் தஞ்சாவூர் ஓவியங்கள் மனித உருவங்கள், விலங்குகள், தாவரங்கள் மற்றும் பறவைகள் - உருவங்கள் கொண்டதாகப் புதிய பரிணாமம் பெற்றுள்ளன.

## கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச் சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுது.

**எ.கா: கபிலன் திறமையானவர் என்று .............. (குமரன்) தெரியும்.**

கபிலன் திறமையானவர் என்று <u>குமரனுக்குத்</u> தெரியும்.

1. நேற்று முதல் .............. (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. **விடை: அணையின்**
2. உங்களுக்கு .............. (யார்) நன்மை என நினைக்கிறீர்கள். **விடை: யாரால்**
3. முருகன் .............. (வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை. **விடை: வேகமாகச்**
4. நம்முடைய .............. (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும். **விடை: தேவையின்**

## பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க.

**எ.கா: களம் - கலம் :** போர்க்களத்தில் புண்பட்ட வீரர்களுக்குக் கலத்தில் நீர் தரப்பட்டது.

**வலம், வளம் :** ஆற்றின் வலப்புறம் உள்ள வயல்கள் நீர்வளத்தால் செழித்திருந்தன.

www.kalvikadal.in

**1. புல் - புள்**

புல் தரையில் புட்கள் (புள்கள்) கூட்டம் அமர்ந்து விளையாடின.

**2. உழை - உளை**

தனது முதலாளிக்காக உழைக்கும் குதிரையின் உளை (பிடரி மயிர்) மிகவும் அழகாக இருக்கிறது.

**3. கான் - காண்**

கானகத்தில் வாழும் விலங்குகளைக் காண்பது மகிழ்ச்சி தரக்கூடியது.

**4. ஊண் - ஊன்**

ஊண் (மாமிசம்) உணவை உண்டு ஊனை (உடலை) வளர்ப்பது பாவம்.

**5. தின்மை - திண்மை**

**திண்மை** (வலிமை) கொண்ட ஒருவன் எளியவருக்கு **தின்மை** (தீமை) செய்தல் மறமாகாது.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in



12

## மொழியோடு விளையாடு

பக்கம்: 154

### எண்ணங்களை எழுத்தாக்குக.

உன்னை நீயே உற்றுப்பார்
நீ ஒரு நிலா,
கூர்மையான முட்கள்
மூடியிருக்கின்றது உன்னை
அவைகளை விலக்கி விட்டுப்பார்
உன்னை சுவாசம் செய்ய
நந்தவனமாய் நான்



### இலக்கிய நயம் பாராட்டுதல்

அந்தியிருளாற் கருகும் உலகம் கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ ? **- பாரதிதாசன்**

www.kalvikadal.in

**தலைப்பு :** வெண்ணிலவு.

**ஆசிரியர் குறிப்பு :**

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாராதிதாசன் (கனகசுப்புரத்தினம்) |
| பெற்றோர் | : | கனகசபை - இலக்குமி |
| பிறப்பு | : | 29-4-1891 |
| சிறப்பு | : | புரட்சிக்கவி |
| நூல்கள் | : | குடும்பவிளக்கு, இருண்ட வீடு, பாண்டியன் பரிசு, சேரதாண்டவம், அழகின் சிரிப்பு... இன்னும் பல. |

**திரண்டக் கருத்து:**

மாலை இருளினால் கருமையாகும் உலகினைக் கண்டேன். அதுபோல வானமும் இருளாவதைக் கண்டேன். திசைகள் எட்டும் இருளில் மறைவதைக் கண்டேன். பின்னர் கருமையான இருள் சிரிப்பதில்லை. பெருஞ்சிரிப்பு ஒளியின் முத்துக்களாகிய முழு நிலவே நீதான் அழகெல்லாம் ஒன்று சேர்த்துக் காட்சி தருகிறாய். உலகிற்குக் குளிர் ஏற்றி, ஒளியும் ஊட்டுகிறாய். இயற்கையாகிய அன்னை தனது எழில்வாழ்வைச் சித்தரிக்கும் அழகோ நீ நிலவே - என்கிறார் பாரதிதாசன்.

**மோனை நயம் :**

**நாட்டுக்கு அழகு சேனை**
**பாடலுக்கு அழகு மோனை**

முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை.

**சான்று :**

அந்தியிருளால்
அவ்வாறே

6 இயல்





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

பிந்தியந்த
பெருஞ்சிரிப்பின்

**எதுகை நயம் :**

**பெண்ணுக்கு அழகு புன்னகை**
**பாடலுக்கு அழகு எதுகை**

பாடல் அடிகளின் சீர்களின் முதல் எழுத்து அளவொத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.

**சான்று :**

அந்தியிருளால்
பிந்தியந்த
சிந்தாமல்
சிந்தாவென்று

**அணி நயம் :**

இயற்கை அன்னைத் தனது எழில் வாழ்வைக் காட்டவே நிலவாகச் சித்தரித்துக் காட்டுகிறாள் என்னும் அடிகளில் இயற்கையை உயர்வாகப் பாடியிருப்பதால் உயர் வு நவிற்சி அணி இடம்பெற்றுள்ளது.

**கற்பனை நயம் :**

கவிஞர்க்குக் கற்பனை கைவந்தக் கலை. இருளால் மூழ்கும் இவ்வுலகைப் படம் பிடித்துக் காட்டுகிறார், பாரதிதாசன். வானில் தோன்றும் வெண்ணிலவை இயற்கையின் அழகு என்று வர்ணிக்கிறார் பாரதிதாசன்.

www.kalvikadal.in

**நான்கரைச் சக்கர வடிவம்**

மேனி திடமே விடுமே!
மேடு விளையா டுவமே!
மேவ டுவோட சாருமே!
மேரு சாதுதூ தினிமே!



**விளக்கம் :**

காடு மேடு என்று பாராமல் நன்றாக விளையாடுவோம். அதனால், நம் உடம்பு (மேனி) திடமாகும். மேவிவரும் நோய்களும் (வடு) ஓட, இமயமலை (மேரு) போன்ற சான்றோர் பாராட்டும்படியான செய்தியும் (தூது) இனி மேவிவரும்.

**உரிய இடத்தில் எழுதுக.**

தேடு தேனீயோ லாவதே
தேவ லாமென நாடுதே !
தேடு நாநய மாடுதே !
தேடு மாநிலை தேடுதே !



**விளக்கம் :**

பூக்கள் தோறும் தேனைத் தேடி அலைகின்ற தேனீயைப் போல, சுறு சுறுப்பாகும் நிலைதான் சிறந்ததென்று நாட வேண்டும். எவரிடமும் நயத்தோடு பேச வேண்டும். எவரிடமும் நயத்தோடு பேச வேண்டும். இவ்வாறிருந்தால் உயர்ந்தோர் நம்மைத் தேடிவருவர்.


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## கதையைத் தொடர்ந்து நிறைவு செய்க

வேப்பமரத்தால் ஆன மரப்பாச்சி பொம்மை ஒன்று என் வீட்டில் நெடுங்காலமாக இருந்தது. மிகுந்த அன்போடு அதற்கு என் பெயரை வைத்திருந்தேன். எத்தனையோ வாசனைகளை அதன் மீது பூசினேன். ஆனாலும் அந்தக் கசப்பின் வாசம் போகவில்லை. இரவில் அதன் மெல்லிய விம்மல் ஓசை கேட்கும் .....

நாம் ஒரு நாள் விம்மலோசைக் கேட்டவுடன் நான் எழுந்து பார்த்தேன் மேரியை. என் படுக்கை அறையின் ஒரு மூலையில் கிடந்தாள் மேரி. மெதுவாக மேரியின் அருகில் சென்றேன். என் வருகையைச் சற்றும் எதிர்பாராத மேரி அழுகையை நிறுத்திக் கொண்டது. முதலில் நான்தான் மேரியிடம் பேச்சுக் கொடுத்தேன். உனக்கும் பேசத் தெரியுமா, அழக்கூடத் தெரியுமா என்றேன். எனக்கும் உணர்வுகள் உண்டு. நானும் பேசுவேன் என்றது மேரி. நீ மனிதராக இருப்பதால் உனக்கு எல்லாம் கிடைக்கிறது. மரமாக நான் இருப்பதால் கேட்பாரற்றுக் கிடக்கிறேன் என்றது மேரி. உனக்கு என்ன வேண்டும்? என்னிடம் நீ என்ன எதிர்பார்க்கிறாய் என்று மேரியிடம் கேட்டேன். முதலில் எங்கள் பெற்றோரிடமிருந்து எங்களைப் பிரிக்காதீர்கள். நாங்கள் மனிதர் வாழ நல்ல காற்றினைத் தருகிறோம். எங்களிடமிருந்து கிடைக்கும் எண்ணெய் நல்ல நாட்டு மருந்து ஆகும். அப்படியிருக்க எங்களை வெட்ட மனிதருக்கு அரக்கக் குணம் எப்படி வந்தது என்று கேட்டது மேரி. இனிமேல் எங்களை வெட்டமாட்டோம் என்று உறுதி அளித்தால்தான் அழுகையை நிறுத்துவேன் என்றது மேரி. மேலும் எனது பாரம்பரிய கசப்பு வாசனையைப் போக்க என் மீது ஏதேதோ தடவுகிறாய். என்னிடமிருந்து எனது மணத்தைப் பிரிக்கமாட்டேன் என்று உத்திரவாதம் கொடு என்றது மேரி. அத்தனைக்கும் ஒப்புக் கொண்ட நான் மேரியிடம் வாக்குறுதி அளித்தேன். இதற்கிடையே என்னை யாரோ அழைப்பது போல் இருந்தது. விழித்துப் பார்த்தேன். அம்மா அழைத்திருந்தாள். கனவாக இருந்தாலும் மேரிக்கு நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவேன்.

www.kalvikadal.in

**வேம்பு தரும் நற்காற்று**
**வேம்புக்குத் தருவோம் பாதுகாப்பு.**

**அண்மையில் நீங்கள் பார்த்த சமூகக் கருத்துள்ள திரைப்படம் ஒன்றின் திரை விமர்சனத்தை அப்படத்தின் இயக்குநருக்கு கடிதமாக எழுதுக.**

20-6-2019
திருநெல்வேலி.

*உயர்திரு இயக்குநர் அவர்களுக்கு,*

வணக்கம்.

சென்ற வாரம் தாங்கள் இயக்கிய படம் பார்த்தேன். படங்களுக்கு இப்போதெல்லாம் படங்களுக்கு வசனங்களை விட விமர்சனங்களே பக்க பலமாக இருக்கிறது. இதோ எனது விமர்சனம்.

மாணவர்களுக்கு ஊக்கம் தரும் படம். அம்மா கதாபாத்திரம் - உணவகத்தில் வேலை பார்க்கும் பெண். மகளுக்குத் தெரியாது என்ன வேலை என்று. மகள் பள்ளிக்கூடத்தில் படிக்கிறாள். அனைத்துப் பாடங்களிலும் சராசரி மதிப்பெண்கள். கணிதத்தில் மிகக் குறைவு. அம்மா கேட்டாள் காரணத்தை, நீ சொல்லிக் கொடு என்றாள் மகள். மகள் வகுப்பில் அம்மா சேர்ந்து படிக்கிறாள் சலனமின்றி.

நல்லா படிக்கும் மாணவன் அம்மாவிற்குக் கணிதம் சொல்லிக் கொடுக்கிறான். கணிதத்தில் நல்ல மதிப்பெண் அம்மாவுக்கு. மகளின் வேண்டுகோள் நீ பள்ளிக்கு வரவேண்டாம். இனிமேல் நான் நன்றாகப் படிக்கிறேன் என்றாள் மகள்.

இறுதியில் மகள் (இ.ஆ.ப) மாவட்ட ஆட்சியர் ஆகிறாள். ஒரு பேட்டியில் கணிதத்தில் உச்சத்தில் இருக்கும் நீங்கள் ஆட்சியர் பணிக்கு வந்ததன் நோக்கம் பற்றிக் கேட்டதற்கு, இது என் அம்மாவின் ஆசை. நான் வேலைக்காரி ஆகக்கூடாது. இதுவே மகளின் பதில்.

மாணவர் மத்தியில் ஒரு உற்சாகம் ஊட்டும் விதமாக திரைப்படம் அமைந்துள்ளது.


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







பாராட்டுக்கள். கீதை உபதேசம் இல்லை இது. அம்மா உபதேசம். அம்மா கணக்குத் தப்பாது. அது லாப கணக்குதான். 80/100 மதிப்பெண்.

**கீழ்க்காணும் நான்கு சொற்களைச் சிறு பத்தியாக மாற்றுக.**

எ.கா: வானம் , பற, நிலவு, தொடு - வானத்தில் பறப்போம். பறந்து நிலவைத் தொடுவோம்.

1. **சருகு, விழு, மண், அலை** - காய்ந்த இலைச்சருகுகள் மண்ணில் கிடந்தன. மண்ணில் கிடந்த சருகுகள் அலைபோல அசைந்தன.
2. **விண்மீன், ஒளிர், எரி, விழு** - விண்மீன் வானத்தில் அழகாக ஒளிர்ந்தது. ஒளிர்ந்த விண்மீன் எரிந்து விழுந்தது.
3. **குதிரை, வேகம் ஓடு, தாவு** - குதிரை அதிவேகமாக ஓடியது. ஓடிய குதிரையைத் தாவிப்பிடிக்க இயலாது.
4. **குழந்தை, நட, தளிர்நடை, விழு** - குழந்தை தளிர்நடை நடந்தது. நடந்த குழந்தை தடுமாறி விழுந்தது.
5. **திரை, காண், கைதட்டல், மக்கள்** - திரை அரங்கில் திரை விலகியதைக் கண்டார்கள். திரைவிலகுவதைக் கண்ட மக்கள் கைதட்டினார்கள்.

## நிற்க அதற்குத் தக

**குறிப்பேடுகள் உருவாக்குதல், சேகரித்தல், ஏதேனும் கலை பயிலல் :**

| | |
|---|---|
| **கலைகளில் உங்களுக்குப் பிடித்த வடிவங்கள் எவை ? காரணம் என்ன ?** | சிலை வடிவம் பிடிக்கும். உயிர்ப்புள்ளதாக இருப்பதால். |
| **நீங்கள் எந்தக் கலையில் வல்லவர் ?** | பேச்சுக்கலை |
| **ஏதேனும் கலை பயில நினைத்தால் உங்கள் தேர்வு எதுவாக இருக்கும் ?** | ஹார்மோனியம் |
| **பொழுதுபோக்காகப் பொருள்களைச் சேகரிப்பதில் ஆர்வம் உண்டா ? ஆம் எனில் எவையெவை எனக் குறிப்பிடுக. (எ-கா) அஞ்சல் தலை, நாணயங்கள்** | உண்டு. உள்நாட்டு, வெளிநாட்டுப் பழைய புதிய நாணயங்கள் |
| **பொன்மொழிகள், குறிப்புகள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதிக் குறிப்பேடு தயாரிக்கும் வழக்கம் உண்டா? ஆம் எனில் அவை எத்தகையவை எனக் குறிப்பிடுக.** | பொன்மொழி குறிப்பேடு உண்டு. "இருட்டறையில் உள்ளதடா உலகம். சாதி இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே (சமூக நீதி) |
| **நாட்குறிப்பு எழுதுவீர்களா ? எனில் எத்தகை குறிப்புகளை எழுதுவீர்கள் ?** | நாட்குறிப்பு எழுதுவேன். என் நெஞ்சைத் தொட்ட நிகழ்வுகளை எழுதுவேன். |

**படிப்போம் பயன்படுத்துவோம் (திரைத்துறை)**

*Artist* – கவின் கலைஞர்
*Cinematography* – ஒளிப்பதிவு
*Animation* – இயங்குபடம்
*Sound-Effect* – ஒலி விளைவு
*Newsreel* – செய்திப்படம்
*Multiplex compled* – ஒருங்கிணைந்த திரையரங்க வளாகம்

✱✱★★★✱✱





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

12

6 இயல்

இயல் 6
வாழ்வியல்

# திருக்குறள்

- திருவள்ளுவர்

## கற்பவை கற்றபின்

பக்கம்: 160

1. **படத்திற்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**



அ) எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

இ) வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்டம்
மற்றைய எல்லாம் பிற.

**விடை : ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.**

2. **கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.**

மனமோ மாட்டுவண்டி
பாதையொழுங்கில் போக நினைக்கும் மாடு
இப்படி இருந்தால் எப்படி நகரும்
வாழ்க்கைச் சக்கரம்
ஊர் போகும் பாதையில்
சக்கரம் உருண்டால்
அதுவே அறிவு; அதுவே தெளிவு.

அ) எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

ஆ) சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

இ) அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்.

**[விடை: ஆ]**

www.kalvikadal.in

3. **பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

சீரியர் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோல் மாண்ட பயத்ததாம் - மாரி
வறந்தக்கால் போலுமே வாலருவி நாட!
சிறந்தக்கால் சீரியார் நட்பு.

அ) பழையம் எனக்கருதிப் பண்பு அல்ல செய்யும்
கெடுதகைமை கேடு தரும்.

ஆ) எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

இ) நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

**[விடை: இ]**

4. **அல்லல் படுப்பதூம் இல் - எவரோடு பழகினால்?**

அ) வான்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்
இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார் **[விடை: ஈ]**

5. **திண்ணியர் என்பதன் பொருள் தருக.**

அ) அறிவுடையார் ஆ) மன உறுதியுடையவர்
இ) தீக்காய்வார் ஈ) அறிவினார் **[விடை: ஆ]**

6. **ஆராய்ந்து சொல்கிறவர்**

அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர்
இ) தூதுவர் ஈ) உறவினர் **[விடை: இ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

7. **பொருத்துக.**

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | பாம்போடு உடன் உறைந்தற்று | - | (i) | தீக்காய்வார் |
| ஆ) | செத்தார் | - | (ii) | சீர் அழிக்கும் சூது |
| இ) | வறுமை தருவது | - | (iii) | கள் உண்பவர் |
| ஈ) | இகல் வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் | - | (iv) | உடன்பாடு இல்லாதவர் |

அ) 1, 2, 3, 4 ஆ) 2, 3, 4, 1 இ) 4, 1, 3, 2 ஈ) 4, 3, 2, 1 **[விடை: ஈ]**

8. **நடுங்கும்படியான துன்பம் யாருக்கில்லை?**

அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ள கூடியவர்

ஆ) மனத்திட்பம் உடையவர்

இ) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர்

ஈ) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர் **[விடை: அ]**

9. **எளியது, அரியது எது ?**

| | | | |
|---|---|---|---|
| அ) | தீயினத்தின் துணை | - | நல்லினத்தின் துணை |
| ஆ) | சொல்வது | - | சொல்லியபடி செய்வது |
| இ) | சிறுமை பல செய்வது | - | பகைவர் தொடர்பு |
| ஈ) | மெய்ப்பொருள் காண்பது | - | உருவுகண்டு எள்ளாதது |

**[விடை: ஆ]**

## குறுவினா

1. **மனத்தை அதன் போக்கில் செல்லவிடக்கூடாது என்று வள்ளுவம் கூறுவது ஏன்?**

- "சென்ற இடத்தால் செலவிடா தீது ஒரீஇ" ,,,,,,,,,,,,

www.kalvikadal.in

- மனத்தை, அது போகும் போக்கில் செல்லவிடக் கூடாது.
- மேலும் மனத்தினைத் தீமை வழியிலிருந்து விலக்கி நல்ல வழியில் செலுத்துவது அறிவாகும்.

2. **உருவு கண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து - இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.**

**உவமை** : ஒருவரின் எளிய தோற்றத்தைக் கண்டு இகழக் கூடாது.

**உவமேயம்** : பெரிய தேருக்குச் சிறிய அச்சாணி இன்றியமையாதது.

**பொருத்தம்** : சிறிய அச்சாணிதான் என்று எளிமையாக எண்ணக் கூடாது. அதுபோல ஒருவரின் தோற்றத்தை வைத்து எளிமையாக எண்ணக்கூடாது.

3. **மன உறுதியின் தேவை பற்றித் திருக்குறள் யாது கூறுகிறது ?**

"வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்" ,,,

- நல்ல செயல்பாட்டிற்கு மன உறுதியே வேண்டும்.
- மற்றவை எல்லாம் பயன்படாது.

4. **நஞ்சுண்பவர் என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார் ?**

"நஞ்சு உண்பார் கள் உண்பவர்"

கள் உண்பவர் நஞ்சு உண்பவரே என வள்ளுவர் கள்ளுண்பவரை இடித்துரைக்கிறார்.

5. **அரசரோடு நட்புப் பாராட்டினாலும் செய்யத்தகாதன யாவை ?**

- "பழையம் எனக் கருதி பண்பு அல்ல செய்யும்" நான் அரசருடன் பழமையான நட்பு உடைவராய் உள்ளேன்.
- இத்தகைய எண்ணத்துடன் தகுதி அல்லாதவற்றைச் செய்தால் அந்த உரிமையானது துன்பத்தைத் தரும்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





7. **அஞ்சத் தகுந்தன, அஞ்சத் தகாதன என வள்ளுவம் குறிப்பிடுவது யாது?**

**"வாள்போல் பகைவரை அஞ்சற்க"**

**அஞ்சத்தகாதன :**

வாளைப் போல வெளிப்படையாகத் துன்பம் செய்யும் பகைவருக்கு அஞ்சத் தேவையில்லை.

**அஞ்சத்தகுந்தன :**

அறிவுடையார் போல் நடித்து உட்பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும்.

8. **வறுமையும் சிறுமையும் தருவது எது ?**

ஒருவருக்கு துன்பம் பல உண்டாக்கி அவருடைய புகழையும் கெடுக்கின்ற சூதுதான் வறுமையும் சிறுமையும் ஆகும்.

9. **நீங்கள் படித்ததில் பிடித்த குறளை எழுதி, காரணத்தைக் குறிப்பிடவும்.**

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு."**

**பிடித்தற்குக் காரணம் :**

ஒருவனுக்கு மூன்று காலத்திலும் உதவக்கூடிய கல்வியினை செய்ந்நன்றி என்ற வினைத்தொகையால் குறிப்பிட்டு, மறந்தவனுக்கு தப்பிப்பிழைக்க வழியில்லை என்று வள்ளுவன் வார்த்த வடிவம் அதிசயத்தக்கது.

10. **உலகத்தில் சிறந்த துணையாகவும், பகையாகவும் வள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

- நல்ல இனத்தைவிடச் சிறந்த துணை உலகத்தில் இல்லை.
- தீய இனத்தைவிடத் துன்பத்தைத் தரும் பகையும் இல்லை.

www.kalvikadal.in

11. **இலக்கணக் குறிப்பு தருக.**

| | | |
|---|---|---|
| ஒரீஇ | - | சொல்லிசை அளபெடை |
| படுப்பதூஉம் | - | இன்னிசை அளபெடை |
| சொல்லுதல் | - | தொழிற்பெயர் |

12. **கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ யற்று - பொருள் கூறுக.**

நீரில் மூழ்கியவனைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றது.

13. **பெருந்தேர் - புணர்ச்சி விதி கூறுக**

**பெருந்தேர் - பெருமை + தேர்**

ஈறுபோதல் என்ற விதிப்படி, மை விகுதி கெட்டு பெரு + தேர் என்றானது.

இனமிகல் என்ற விதிப்படி, பெருந்தேர் எனப் புணர்ந்தது.

## சிறுவினா

1. **அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க**
**இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

**அணி விளக்கம் :**

ஒரு பொருளின் தொழில் அல்லது செயல் காரணமாக அமையும் உவமை தொழில் உவமை எனப்படும்.

**சான்று :**

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - குறட்பா.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**உவமை :** தீயில் குளிர் காய்பவர் போல.

**உவமேயம் :** அரசனைச் சார்ந்திருப்பவர் விலகாமலும் நெருங்காமலும் நடந்துகொள்ள வேண்டும்.

**அணிப்பொருத்தம்:**

அரசனைச் சார்ந்து இருப்பவர் குளிர்காய்பவர்களைப் போல தீயிலிருந்து அகலாது அணுகாது இருத்தல் வேண்டும். இதில் அகழுதல், அணுகுதல் போன்ற தொழில் ஒப்புமை எதிர்மறையில் வந்துள்ளதால் தொழில் உவமை எனப்படும்.

2. **அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள் கருதுவன யாவை?**

**"அறிவற்றம் காக்கும் கருவி செறுவாருக்கு**
**உள்அழிக்கல் ஆகா அரண்."**

- அறிவு ஒருவனுக்கு அழிவு வராமல் காக்கும் கருவி.
- மேலும் பகைவரால் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணும் ஆகும்.

**"சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு."**

- மனத்தினை, அது போகும் போக்கில் செல்ல விடாமல் தடுப்பது அறிவு.
- மேலும் தீமையிலிருந்து விலக்கி நல்வழியில் செலுத்துவதும் அறிவு.

**"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு"**

ஒரு பொருளைப் பற்றி யார் சொல்லக் கேட்டாலும் அப்பொருளின் உண்மைத் தன்மையைக் கண்டறிவதே அறிவாகும். இவையாவும் வள்ளுவன் வகுத்த அறிவின் மேன்மைகள் ஆகும்.

www.kalvikadal.in

3. **எடுத்துக்காட்டு உவமை அணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.**

துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.

**அணிவிளக்கம் :**

உவமை ஒரு வாக்கியமாகவும் உவமேயம் ஒரு வாக்கியமாகவும் உவம உருபு மறைந்து வருவதால் எடுத்துக்காட்டு உவமை அணி எனப்படும்.

**உவமை** : துஞ்சினார் செத்தாரின் வேறு
**உவமேயம்** : நஞ்சுஉண்பார் கள்உண் பவர்
**உருபு** : மறைந்துள்ளது.

**பொருத்தம்:**

உறங்கியவர், இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர். அதுபோல கள் உண்பவரும் நஞ்சு உண்பவருக்குச் சமமே என்பதை விளக்குவதால் இப்பாடல் எடுத்துக்காட்டு உவமை அணி ஆகும்.

4. **மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள்நெறி நின்று விளக்குக.**

**"வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
**மற்றைய எல்லாம் பிற."**

**மனவலிமை :**

செயலினது வலிமை என்பது அதனைச் செய்பவனின் மனவலிமையே ஆகும். ஏனைய வலிமைகள் எல்லாம் மனவலிமையிலிருந்து வேறுபட்டவை.

**"சொல்லுதல் யார்க்கும் எளிய அறியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்"**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







எளிது – அரிது : ஒரு செயலை இவ்வாறு செய்யலாம் என்று சொல்வது எளிது. ஆனால், சொல்லியபடிச் செய்து முடிப்பது அரிது.

**"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின்"**

**எண்ணத்தில் வலிமை :**

ஒரு செயலை எண்ணியவர் எண்ணத்தில் வலிமை உடையவராக இருந்தால், எண்ணியதை எண்ணியபடியே செய்து முடிப்பர்.

**"உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு**
**அச்சாணி அன்னார் உடைத்து."**

**உருவம் பொருட்டல்ல :**

ஒருவரது உருவத்தைப் பார்த்து இகழ்ந்துரைக்கக் கூடாது. உருண்டு ஓடும் பெரிய தேருக்குச் சிறிய அச்சாணி போல இன்றியமையாதவராக அவர் இருக்கலாம்.

5. **சிற்றினம் சேராமையும் நல்லினத்தின் துணையுமாக வள்ளுவர் உரைப்பன பற்றி நீவிர் அறிவனவற்றை எழுதுக.**

**"மனத்தான்ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தான்ஆம்**
**இன்னான் எனப்படும் சொல்"**

**இனத்தால்தான் தகுதி :**

மக்களுக்கு உணர்ச்சி மனத்தின் வழி உண்டாகும். இவன் இப்படிப்பட்டவன் என்று அவன் சார்ந்திருக்கும் இனத்தை வைத்தே உலகம் சொல்லும்.

**"நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை தீயினத்தின்**
**அல்லற் படுப்பதூஉம் இல்."**

www.kalvikadal.in

**நல்லவர் தீயவர் நட்பு :**

நல்லவர் நட்பு போல சிறந்த துணை இல்லை; தீயவர் நட்புபோல் துன்பம் தருவதும் இல்லை.

6. **வாளையும் பாம்பையும் எவ்வகைப் பகைமைக்குச் சான்றாக வள்ளுவர் கூறுகிறார்?**

**"வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக**
**கேள்போல் பகைவர் தொடர்பு"**

**வாள்போலும் பாம்பு போலும் பகை :**

வாளினைப் போல் வெளிப்படையாகத் துன்பம் செய்யும் பகைவரிடம் அஞ்ச வேண்டியது இல்லை. ஆனால் உறவினர் போலப் பழகும் பகைவருக்குப் பயப்பட வேண்டும்.

7. **சூதும் கள்ளும் கேடு தரும் – திருக்குறள் வழி விவரிக்க.**

**"சிறுமை பல செய்து சீரழிக்கும் சூதின்**
**வறுமை தருவதுஒன்று இல்"**

**சூதின் சிறுமை :**

இழிவைத் தந்து சிறப்பை அழிக்கும் சூது போல வறுமை தரத்தக்கது வேறு இல்லை.

**"பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்**
**கழகத்துக் காலை புகின்"**

**சூதால் செல்வம் அழியும் :**

தொடர்ந்து சூதாடும் இடத்திற்குச் சென்று வந்தால் நீண்டநாள் சம்பாதித்த செல்வமும் பண்பும் கெட்டழியும்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**கள்ளும் விஷமும் ஒன்றே :**

உறங்கினவர் இறந்தாரோடு வேறுபாடு உடையவர் அல்லர். அதுபோல எப்போதும் கள் உண் பவர் விஷம் உண்பவர் ஆவார்.

**திருத்தமுடியாது :**

கள்ளுண்டு மயங்கியவனை நல்லன சொல்லித் திருத்த முடியாது. அது நீரில் மூழ்கிய ஒருவனைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போலாகும்.

## நெடுவினா

1. **"அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும்" என்பதை வள்ளுவம் வழிநின்று நிறுவுக.**

**அறிவுடைமை வாழ்வின் உயர்விற்கு துணை நிற்கும் :**

**"அறிவுற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்**
**உள்அழிக்கல் ஆகா அரண்."**

அறிவானது உயிர்க்கு அழிவு வராமல் பாதுகாக்கும் கருவியாகும். மேலும் அறிவானது, பகைவரால் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணும் அதுவே ஆகும்.

**"சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு."**

மனத்தினை, அது போகும் போக்கில் போகவிடக் கூடாது. தீமையிலிருந்து விலக்கி நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும்.

**"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு"**

www.kalvikadal.in

எந்தப் பொருளை யார் வாயிலாகக் கேட்டாலும் அந்தப் பொருளின் உண்மைத் தன்மையைக் கண்டறிவதே அறிவு ஆகும்.

**"எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வது உறைவது அறிவு"**

உலகம் எத்தகைய உயர்ந்த நெறியில் செல்கிறதோ அந்நெறியில் தாமும் உலகத்தாடு இணைந்து செல்வதே அறிவாகும்.

**"எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை**
**அதிர வருவதோர் நோய்"**

பின்னால் வரப்போவதை முன்பே அறிந்து காத்துக் கொள்ளும் வல்லமை கொண்ட அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றில்லை.

இறுதியாக, அறிவு பாதுகாப்புத் தரும் கருவி, நல்வழியில் செலுத்தக்கூடியது அறிவு, உண் மையைக் கண்டறிய உதவும் அறிவு, வருமுன் காப்பது அறிவு என்று மனித வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் வாழ்க்கையின் உயர்வுக்குத் துணையாய் நிற்பது அறிவே என்பதை வள்ளுவன் வழியில் கண்டோம்.

2. **திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் – நிறுவுக.**

**தொடக்கமாக,**

வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை ஒருங்கே தொகுத்து மானுடத்திற்கு அளித்து மங்காப் புகழ்பெற்றவன் மாதானுபாங்கி. வள்ளுவனின் கோட்பாடுகளுள் யாதானும் ஒன்றைக் கடைப்பிடித்து ஒழுகினாலும் வையத்துள் வாழ்வாங்கு வாழலாம்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**அறிவுடைமை :**

- இந்த அதிகாரத்தில் அறிவானது ஒருவனுக்கு அழிவு வராமல் காக்கும் கருவி என்றும், பகைவராலும் அழிக்க முடியாத அரண் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.
- மனதைப் போகும் போக்கில் விடாமல், தீமையிலிருந்து நம்மை விலக்குவதும் அறிவு ஆகும்.
- ஒரு பொருளைப் பற்றி எவர் கூறக் கேட்டாலும் அப்பொருளின் உண்மைத் தன்மையை ஆராய்வதே அறிவு என்கிறார் வள்ளுவர்.

**மன உறுதி வேண்டும் :**

அதிகாரத்தில் ஒரு செயலைச் செய்ய எண்ணியவர் மனவுறுதியுடையவராக இருந்தால், எண்ணியவாறே நடக்கும் என்று மனதில் உறுதி வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

**மன்னரைச் சார்ந்து ஒழுகுதல்** என்னுமிடத்தில், நான் அரசரிடம் நட்பு கொண்டவன் என்று தகுதி அல்லாதவற்றைச் செய்தால் கேடு உண்டாகும் என்றும் நல்லது அல்லாதவற்றைச் செய்தல் துன்பம் என்று வள்ளுவர் கண்டிக்கிறார்.

**உட்பகை** என்ற நிலையில் வெளிப்படையாகத் துன்பம் செய்பவரை விட உறவு போல் நடித்து உட்பகையாடுவார் தொடர்புக்கு அஞ்ச வேண்டும் என்று தெளிவுப்படுத்துகிறார் வள்ளுவர்.

**கள்உண்ணாமை**யைக் கூறும் போது கள் உண்பவர் நஞ்சு உண்பரே என்றும் கள் உண் பவனைத் திருத்துவது என்பது நீரில் மூழ்கியவனைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றதாகும் என்கிறார் வள்ளுவர்.

இறுதியாக ஒரு மனிதன், பின்னால் வரப்போவதை முன்னால் அறியக்கூடிய அறிவுடையவனாகவும், சிற்றினம் சேராமலும் திண்ணிய மனமுடையவராகவும், தீயில் குளிர் காய்பவர் போல மன்னனோடு சார்ந்திருக்க வேண்டும் என்றும், உட்பகை இன்றி, கள்ளுண் ணாமலும் வாழ்வதே வாழ்க்கை என்று வள்ளுவர் நம்மை வழிப்படுத்துகிறார்.

www.kalvikadal.in

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| **யார் யார்** | – | அடுக்குத்தொடர் |
| **சொல்லுதல்** | – | தொழிற்பெயர் |
| **அஞ்சுக** | – | வியங்கோள் வினைமுற்று |
| **ஒரீஇ** | – | சொல்லிசை அளபெடை |
| **தீத்துரீஇ** | – | சொல்லிசை அளபெடை |
| **செல்வமும் பண்பும்** | – | எண்ணும்மை |
| **படுப்பதூஉம்** | – | இன்னிசை அளபெடை |

## பகுபத உறுப்பிலக்கணம்

| | | | |
|---|---|---|---|
| **சென்ற** | **– செல்(ன்) + ற் + அ** | **உண்பார்** | **– உண் + ப் + ஆர்** |
| செல் | – பகுதி, (ன் ஆனது விகாரம்) | உண் | – பகுதி |
| ற் | – இறந்தகால இடைநிலை | ப் | – எதிர்கால இடைநிலை |
| அ | – பெயரெச்ச விகுதி | ஆர் | – பலர்பால் வினைமுற்று விகுதி |

## புணர்ச்சி விதி

1. **துணையில்லை – துணை + இல்லை**
   - இஈஐ வழியவ்வும் என்ற விதிப்படி, துணை + ய் + இல்லை என்றானது.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in









- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி, (ய் + இ = யி) துணையில்லை என்று புணர்ந்தது.

2. **உறைந்தற்று - உறைந்து + அற்று**

- உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் என்ற விதிப்படி, உறைந்த் + அற்று என்றானது.
- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி, (த் + அ = த) உறைந்தற்று என்று புணர்ந்தது.

# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

1. **'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு' - என்னும் குறட்பாவில் இடம்பெறும் அணி**

அ) சொல்பின்வருநிலையணி ஆ) பொருள்பின்வருநிலையணி

இ) சொற்பொருள் பின்வரும்நிலையணி ஈ) உவமையணி **[விடை: இ]**

2. **'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆனப் பெறின்' - இக்குறட்பாவில் இடம்பெறும் அணி**

அ) சொல்பின்வருநிலையணி ஆ) பொருள்பின்வருநிலையணி

இ) சொற்பொருள் பின்வரும்நிலையணி ஈ) உவமையணி **[விடை: இ]**

3. **'அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்' - என்னும் குறட்பாவில் இடம்பெறும் அணி**

www.kalvikadal.in

அ) இல்பொருள் உவமையணி ஆ) தொழில் உவமை அணி

இ) எடுத்துக்காட்டு உவமையணி ஈ) உருவக அணி **[விடை: ஆ]**

4. **'உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று' - இக்குறட்பாவில் இடம்பெறும் அணி**

அ) உவமை அணி ஆ) உருவக அணி

இ) வேற்றுமை அணி ஈ) பிறிதுமொழிதல் அணி **[விடை: அ]**

5. **கள் உண்பவர் ............... உண்பவர் என்கிறார் வள்ளுவர்.**

அ) அமுது ஆ) நஞ்சு இ) பழங்கஞ்சி ஈ) ஊன் **[விடை: ஆ]**

## சிறுவினா

1. **சொற்பொருள் பின்வரு நிலையணியை சான்றுடன் விளக்குக.**

**அணி விளக்கம் :**

செய்யுளில் முன்னர் வந்தச் சொல் அதேப் பொருளில் பின்னர் பலமுறை வருவது சொற்பொருள் பின்வரு நிலையணியாகும்.

**சான்று :**

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



**விளக்கம் :**

இக்குறட்பாவில் பொருள் என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவதால் சொல்பொருள் பின்வரும் நிலையணி ஆகும். எந்த ஒரு பொருள் பற்றி எவர் கூறினாலும் அதனை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல், அந்தப் பொருளில் உள்ள உண்மையை ஆராய்ந்து எடுத்துக் கொள்வதே அறிவுடைமை ஆகும்.

2. **எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியாற்**
**திண்ணியர் ஆகப் பெறின். - இப்பாடலில் பயின்று வரும் அணியை விளக்குக.**

இக்குறட்பாவில் சொற்பொருள் பின்வரும் நிலையணி பயின்று வந்துள்ளது.

**அணி விளக்கம் :**

செய்யுளில் முன்னர் வந்த சொல் அதே பொருளில் பின்னர் பலமுறை வருவது சொற்பொருள் பின்வரு நிலையணி ஆகும்.

**விளக்கம் :**

இப்பாடலில் 'எண்ணிய' என்றச் சொல் 'நினைப்பது' என்ற பொருளில் பலமுறையில் வந்துள்ளது. எண்ணியவர் மனவுறுதியுடையவராக இருந்தால் எண்ணியதை எண்ணியவாறே அடைவர் என்று ஆகும்.

3. **உவமையணியை சான்றுடன் விளக்குக.**

**அணி இலக்கணம் :**

உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும் உரும உருபு வெளிப்படையாகவும் வந்தால் உவமையணி ஆகும்.

**சான்று :**

www.kalvikadal.in

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று

**உவமை** : உடம்பாடு இலாதவர் வாழ்க்கை
**உவமேயம்** : குடங்களுள் பாம்போடு
**உருபு** : அற்று (வெளிப்படை)

**பொருத்தம் :**

உள்ளத்தில் உடன்பாடு இல்லாதவருடன் கூடி வாழும் வாழ்க்கை ஒரு குடிசையில் பாம்புடன் வாழ்வது போன்றதாகும்.

✹✹★★★✹✹





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





# இயல் 6 மாதிரி வினாத்தாள் - 6

வகுப்பு : 12
நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

**I. பலவுள் தெரிக.** 6 × 1 = 6

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1. **படத்திற்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**



அ) எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

இ) வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்டம்
மற்றைய எல்லாம் பிற.

2. **கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.**

மனமோ மாட்டுவண்டி
பாதையொழுங்கில் போக நினைக்கும் மாடு
இப்படி இருந்தால் எப்படி நகரும்
வாழ்க்கைச் சக்கரம்
ஊர் போகும் பாதையில்
சக்கரம் உருண்டால்
அதுவே அறிவு ; அதுவே தெளிவு.

அ) எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

ஆ) சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

இ) அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்.

www.kalvikadal.in

3. **பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

சீரியர் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோல் மாண்ட பயத்ததாம் - மாரி
வறந்தக்கால் போலுமே வாலருவி நாட !
சிறந்தக்கால் சீரியார் நட்பு.

அ) பழையம் எனக்கருதிப் பண்பு அல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்.

ஆ) எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

இ) நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை;தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

4. **அல்லல் படுப்பதூம் இல் - எவரோடு பழகினால்?**

அ) வான்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்
இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்

5. **திண்ணியர் - என்பதன் பொருள் தருக.**

அ) அறிவுடையார் ஆ) மன உறுதியுடையவர் இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

6. **ஆராய்ந்து சொல்கிறவர்**

அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர் இ) தூதுவர் ஈ) உறவினர்

**II. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 8 x 1 = 8

7. **பொருத்துக :**

i) பாம்போடு உடன் உறைந்தற்று - 1. தீக்காய்வார்
ii) செத்தார் - 2. சீர் அழிக்கும் சூது
iii) வறுமை தருவது - 3. கள் உண்பவர்
iv) இகல் வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் - 4. உடம்பாடு இலாதவர்







Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

அ) 1, 2, 3, 4 ஆ) 2, 3, 4, 1 இ) 4, 1, 3, 2 ஈ) 4, 3, 2, 1

8. **நடுங்கும்படியான துன்பம் யாருக்கில்லை ?**
அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ள கூடியவர்
ஆ) மனத்திட்பம் உடையவர்
இ) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர்
ஈ) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர்

9. **எளியது, அரியது எது?**
அ) தீயினத்தின் துணை - நல்லினத்தின் துணை
ஆ) சொல்வது - சொல்லியபடி செய்வது
இ) சிறுமை பல செய்வது - பகைவர் தொடர்பு
ஈ) மெய்ப்பொருள் காண்பது - உருவு கண்டு எள்ளாதது

10. **ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் ............... தொடர்களில் வெளிப்படும் செய்திகள்.**
1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.
2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.
அ) 1-சரி, 2-தவறு ஆ) 1-தவறு, 2-சரி இ) 1-தவறு, 2- தவறு ஈ) 1-சரி, 2-சரி

11. **ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்**
அ) சிவஞான முனிவர் ஆ) மயிலை நாதர் இ) ஆறுமுக நாவலர் ஈ) இளம்பூரணர்

12. **கூற்று 1 : காப்பியம் என்னும் சொல் காப்பு + இயம் எனப் பிரிந்து மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது, மொழியைச் சிதையாமல் காப்பது என்றெல்லாம் பொருள் தருகிறது.**
**கூற்று 2 : ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று நீலகேசி.**
அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 2 சரி, கூற்று 1 தவறு
இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு

www.kalvikadal.in

13. **சரியானவற்றைப் பொருத்தித் தேர்க :**
அ) காதை - 1. கந்த புராணம்
ஆ) சருக்கம் - 2. சீவகசிந்தாமணி
இ) சிலம்பகம் - 3. சூளாமணி
ஈ) படலம் 4. சிலப்பதிகாரம்
அ) 4 3 2 1 ஆ) 3 4 1 2 இ) 3 4 2 1 ஈ) 4 3 1 2

14. **தவறான இணையைத் தேர்க :**

| பாவகை | இலக்கியம் |
|---|---|
| அ) விருத்தப்பா | நாலடியார் |
| ஆ) ஆசிரியப்பா | அகநானூறு |
| இ) கலிவெண்பா | தூது |
| ஈ) குறள் வெண்பா | திருக்குறள |

## III. குறுவினா. 3 × 2 = 6

**அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**
15. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?
16. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.
17. ‘மூச்சு நின்றுவிட்டால்
பேச்சும் அடங்கும் - கவிதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக.
18. புதுகவிதை என்றால் என்ன?

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக :** 2 × 2 = 4
19. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறுஉயிரூட்டும்? சான்று தருக.
20. அண்மைக்காட்சித் துணிப்பு என்றால் என்ன?
21. நேரேட்டர் என்றால் என்ன?


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



**IV. எவையேனும் ஏழனுக்கு விடை தருக : 7 x 2 = 14**

**22. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) தொழுதனர் ஆ) நகை

**23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) தலைகோல் ஆ) நாயென்றாள்

**24. மரபுப்பிழையை நீக்கி எழுதுக.**

அ) சோளக்காடு ஆ) பனங்கொல்லை

**25. 'சேரன் தம்பி சிலம்பை இசைத்தும்' என்று குறிப்பிடுபவர்**

அ) திரு.வி.க. ஆ) பாரதி இ) பாரதிதாசன் ஈ) ம.பொ.சி.

**26. பொருத்திக் காட்டுக.**

அ) நகை - 1. பெருமை
ஆ) இளிவரல் - 2. சிரிப்பு
இ) மருக்கை - 3. சிறுமை
ஈ) பெருமிதம் - 4. வியப்பு

அ) 3, 4, 1, 2 ஆ) 4,3,2,1 இ) 2,3,4,1 ஈ) 4,2,1,3

**27. கீழ்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.**

அ) நேற்று முதல் .................................. (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

ஆ) உங்களுக்கு ................................... (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.

**28. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.** புல் - புள்

**29. கீழ்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.**

சருகு, விழு, மண், அலை

**30. கலைச் சொல்லாக்கம் தருக.** Artist

www.kalvikadal.in

**V. சிறுவினா.**

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 × 4 = 8**

31. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

32. ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.

33. கவிதை என்பது கண்முன் நிகழ்வதையும் மனதில் நிகழ்வதையும தொடர்புபடுத்திச் சொற்சிமிழில் அடைக்கும் முயற்சியே என்பதை நகுலன் கவிதையைக் கொண்டு நிறுவுக.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 × 4 = 8**

34. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

35. நல்ல திரைப்படம் என்பது எது - விளக்குக.

36. குலஷோவ் விளைவு விளக்குக.

**VI. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக : 3 × 4 = 12**

37. தொழில் உவமை அணியை சான்றுடன் விளக்குக. அல்லது

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று.- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்கு.

**38. கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதனை தமிழாக்கம் செய்க.**

Popular as the 'Cultural Capital' of India, Tamil Nadu is extremely well-known for its marvellous temples and other architectural gems. The state rose to prominence primarily because of its well-knownand outstanding Tanjore Paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor. In this traditional art form, the paintings showcase the embellished form of the sacred deities of the region. The deities in the paintings are festooned with glass pieces, pearls, semi-precious stones, and gold and other vibrant colours. In the modern times, Tanjore paintings look up to human figures, animals, floral motifs and birds as muses.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







39. **பின்வரும் பாடலைப் படித்து ஏற்புடைய நயங்களை எழுதுக.**

அந்தியிருளாற் கருகும் உலகம் கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ ? - பாரதிதாசன்

40. **அண்மையில் நீங்கள் பார்த்த சமூகக் கருத்துள்ள திரைப்படம் ஒன்றின் திரை விமர்சனத்தை அப்படத்தின் இயக்குநருக்கு கடிதமாக எழுதுக.**

**VII. பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக : 3 x 6 = 18**

41. மகாநடிகரைக் கண்ட பாலசந்திரன் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.
42. திரைப்படைத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? பார்வையைக் கட்டுரையாக்குக.
42. உங்கள் ஊர்ப் பகுதியில் வாழும் கலைஞர் ஒருவரை நேரில் பார்த்த அனுபவத்தை விவரித்துக் கட்டுரையாக்குக..

**VIII. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4 + 2 = 6**

44. அ) ‘குழல்வழி நின்றது’ - எனத் தொடங்கும் ‘சிலப்பதிகாரம்’ என்ற பாடல்.
ஆ) ‘அரண்’ என முடியும் குறள்.

www.kalvikadal.in

✹✹★★★✹✹





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

# இயல் 7 அருமை உடைய செயல்

நாடு, அரசு, சமூகம், நிருவாகம்

| | | |
|---|---|---|
| உரைநடை | இலக்கியத்தில் மேலாண்மை | வெ. இறையன்பு இ.ஆ.ப. |
| செய்யுள் | அதிசய மலர் | தமிழ்நதி |
| செய்யுள் | தேயிலைத் தோட்டப்பாட்டு | முகம்மது இராவுத்தர் |
| செய்யுள் | புறநானூறு | பிசிராந்தையார் |
| துணைப்பாடம் | சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும் | ஐராவதம் மகாதேவன் |
| இலக்கணம் | தொன்மம் | |

# இயல் 7 இலக்கியத்தில் மேலாண்மை

உரைநடை உலகம்

- வெ. இறையன்பு இ.ஆ.ப.

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்' விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்**

அ) சோழன் நெடுங்கிள்ளியை - பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை - கோவூர் கிழார்
இ) கணைக்கால் இரும்பொறையை - கபிலர் ஈ) கரிகாலனை - உருத்திரங்கண்ணனார்

[விடை: ஆ]

### குறுவினா

1. **பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.**
   - சரியான காலத்தில் விதைப்பது தான் பட்டம் என்பதைப் பருவம் என்பர்.
   - 'பருவத்தே பயிர் செய்' என்பது அனுபவச் சொல்.
   - ஆழ்ந்து யோசித்தால் பயிருக்கு மட்டுமன்று; பயிர் செய்யும் மனிதகுலத்துக்கும் பொருந்தும்.
   - பருவத்தே செய்ய வேண்டிய செயல்களில் முக்கியமானது பள்ளிக்குச் செல்வது - கற்க வேண்டிய பருவத்தில் கற்று வாழ்க்கையைச் செம்மைப்படுத்தல் வேண்டும்.

### சிறுவினா

1. **வேளாண்மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.**

வேளாண்மைக்குள்ளும் மேலாண்மை கூறுகள் உண்டு. சரியான பயிர், உரிய நேரத்தில் விதைத்தல் நீர் மேலாண்மை, அறுவடைக்குப் பின் பாதுகாத்தல் நல்ல விலைவரும் வரை இருப்பு வைத்தல்.


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



- ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்போடும், பொறுப்போடும் செயல்பட்டால் வேளாண்மை செழிக்கும்.
- மனமே ஒரு வேளாண்மைக்குட்பட்ட மேலாண்மை.

2. **எந்தவொரு பொருளைப் பயன்படுத்தும்போதும் அதற்குப் பின்னால் உள்ள மனிதர்களின் உழைப்பை நாம் சிந்திப்பதில்லை. ஒரு தேநீரைப் பருகும்போது அதற்குப் பின்னால் உள்ள மனித உழைப்பைச் சிந்தித்து உங்கள் கருத்தை எழுதுக.**

- நாம் உழைக்கின்றபோது உழைப்பின் சுவையை 'நா' அறியாது.
- ஆனால் தேநீரைப் பருகும்போது அதன் சுவையை 'நா' உணர்வது மட்டுமல்லாமல் உடல் புத்துணர்ச்சி பெற்று நம்மனதைச் சிந்திக்கத் தூண்டுகிறது.
- அதாவது நம் தாய் நமக்கு முன்னர் காலையில் எழுந்து தேநீருக்குத் தேவையானவற்றைத் தயார் செய்து கொடுக்கும் தாயாரின் உழைப்பை நாம் சிந்திக்கிறோம்.

## நெடுவினா

1. **நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**நாலடியார் கூறும் நிருவாக மேலாண்மை:**

- உயர் பதவிகளில் இருப்பவர்கள் எல்லாவற்றிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருப்பதில்லை.
- யார் திறமைசாலிகள் என்று அறிந்து அவர்களை அருகில் வைத்துக் கொண்டால் போதும்.
- தெரிந்திருப்பது ஒரு வகை அறிவு என்றால் யாருக்குத் தெரியும் எனத் தெரிந்திருப்பது மற்றோர் அறிவு.

www.kalvikadal.in

இதையே நாலடியார்,

**"கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தாழுகின்**
**நல்லறிவு நாளுந் தலைப்படுவர் - தொல்சிறப்பின்**
**ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்ந்தலாற் புத்தோடு**
**தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு"** என்று பக்குவமாகக் கூறுகிறது.

- நிருவாகத்தில் வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும்.
- வரவைத் தாண்டி நிறையச் செலவு செய்பவன். அடுத்தவரிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்படுவான்

**ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் நிதி மேலாண்மை :**

- டைமன் என்பவன் ஏதேன்ஸ் நகரில் இருந்தன். அவன் வரவு குறைந்தாலும் செலவு அதிகம் செய்தான்.
- அவன் உதவியாளர் நிதி நிலைமையைப் பேசும் பொழுதெல்லாம் கேட்க மறுத்தான்.
- கடன் ஒரு நேரத்தில் கழுத்தை நெறித்தது. அப்போதும் அவன் வருந்தவில்லை.
- அவன் தான் அளித்த விருந்தை உண்பவர் உதவி செய்வார்கள் என்று பொய்க்கணக்குப் போட்டான்.
- சேவகர்கள் நான்கு திசைகளிலும் சென்று வெறும் கையோடும் வெளிரிய முகத்தோடும் திரும்பினார்கள்.
- டைமன் ஊருக்கு ஒதுக்குப்புறமாகச் செல்கிறான். மனித இனத்தையே வெறுக்கிறான்.

**ஔவையாரின் நிருவாக மேலாண்மை :**

தாம் ஈட்டும் பொருளினைவிட அதிகமாகச் செலவு செய்பவர்கள் பிற்காலத்தில் தங்கள்



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

மானத்தையும், அறிவினையும் உணர்வையும் இழப்பார்கள். அவர்கள் எவ்வழி நடந்தாலும் திருடர்கள் போல நடத்தப்படுவார்கள். எத்துணைப் பிறப்பு பிறந்தாலும் எவ்வித மரியாதையும் கொடுக்கப்படாமல் தீயவர் போலவே நடத்தப்படுவர்.

**"ஆன முதலில் அதிகம் செலவானால்**
**மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை**
**எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்**
**நல்லார்க்கும் பொல்லனாம் நாடு"**

என்ற பாடல் மூலம் ஔவையார் நிதி நிருவாக மேலாண்மையை விளக்குகிறார்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **ஓர் அரசன் ஒரு நாளை எவ்வாறு ஒதுக்கிப் பணியாற்ற வேண்டும் என்பதற்குத் திருவள்ளுவர் அட்டவணையைத் தருவதாக அமையும் அதிகாரம்**

அ) மடியின்மை ஆ) வெஃகாமை இ) ஊழ் ஈ) வெகுளாமை **[விடை: அ]**

2. **'பலர் துஞ்சவும் தான் துஞ்சான்**
**உலகு காக்கும் உயர் கொள்கை**
**கேட்டோன், எந்தை என் தெண்கிணைக் குரலே"**
**- என்னும் அடிகள் இடம்பெறும் நூல் ................. பாடியோன் ................. பாடப்பட்டவன் .................**

அ) புறநானூறு, கோவூர்கிழார், சோழன் நலங்கிள்ளி
ஆ) பதிற்றுப்பத்து, கபிலர், சேரன் செங்குட்டுவன்
இ) புறநானூறு, பரணர், பேகன்
ஈ) மனோன்மணியம், சுந்தரனார், ஜீவகன் **[விடை: அ]**

3. **சீனத்தில் வழங்கும் யாங்சௌ கதை ................. பற்றியது.**

அ) இவ்வுலக வாழ்வை ஆ) நேர மேலாண்மையை
இ) கொல்லாமையை ஈ) சொர்க்கத்தை **[விடை: ஆ]**

4. **வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர் செய் எனக் காத்து இனிது அரசு செய்கின்றான் - என்று தன் நாட்டை மிகவும் செப்பமாகவும் நுணுக்கமாகவும் ஆட்சி செய்த யாரைப் பற்றி யார் எந்நூலில் பாடியுள்ளார்?**

அ) தசரதனைப், கம்பர், கம்பராமாயணம் - பாலகாண்டத்தில்
ஆ) நெடுஞ்செழியனைப், இளங்கோவடிகள், சிலப்பதிகாரம் - மதுரைக்காண்டத்தில்
இ) நலங்கிள்ளியைப், கோவூர்கிழார் - புறநானூற்றில்
ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

5. **'இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக... என்று கூறுவது**

அ) மூதுரை ஆ) ஆத்திசூடி இ) அறநெறிச்சாரம் ஈ) நளவெண்பா **[விடை: இ]**

6. **உரோமபுரிச் சிப்பாய்கள் பாண்டியப் போர்ப்படையில் இடம் பெற்றிருந்தர்கள் என்ற குறிப்பினை உடைய நூல்**

அ) கம்பராமாயணம் ஆ) சிலப்பதிகாரம்
இ) மதுரைக்காஞ்சி ஈ) பட்டினப்பாலை **[விடை: ஆ]**



www.kalvikadal.in



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

7. 'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்' என்று குதிரைகள் இறக்குமதி பற்றிக் குறிப்பிடும் நூல்

அ) பரிபாடல் ஆ) பட்டினப்பாலை இ) பதிற்றுப்பத்து ஈ) புறநானூறு **[விடை: ஆ]**

8. 'வான் முகந்த நீர் மலைப் பொழியவும்...' எனக் காவிரிப்பூம்பட்டினத்தில் மாரிக்காலத்து மழைமேகம் போல, கணக்கிட இயலாத பொருள்கள் பண்டசாலை முற்றத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்ததனைக் குறிப்பிடும் நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) பட்டினப்பாலை ஈ) அகநானூறு **[விடை: இ]**

9. காவிரிப்பூம்பட்டினத்துக்கு வந்த பொருள்களுக்குச் சுங்கம் வசூலித்தபின் அவற்றின்மீது சுங்க அதிகாரிகள் பொறித்த சின்னம்

அ) வில் ஆ) மீன் இ) புலி ஈ) சிங்கம் **[விடை: இ]**

10. சங்க இலக்கியங்களின் வாயிலாக மிகப் பெரிய துறைமுகமாகவும், யவனர்களின் கப்பல்கள் நிறுத்தி வைக்கப்படும் இடமாகவும் அறியப்படுவது

அ) கொற்கை ஆ) முசிறி இ) தொண்டி ஈ) வஞ்சி **[விடை: ஆ]**

11. அகஸ்டஸ் சீசரைப் பாண்டிய நாட்டுத் தூதுக்குழு ஒன்று கி.மு. 20ஆம் ஆண்டு சந்தித்ததைப் பற்றிக் கூறுபவர்

அ) ஸ்ட்ரேபோ ஆ) யுவான்சுவாங்
இ) பாகியான் ஈ) மெகஸ்தனிஸ் **[விடை: அ]**

12. யவனரது கப்பல்கள் பற்றிய குறிப்பு இடம்பெறும் பாடல்

அ) புறநானூற்றில் 56ஆம் பாடல் ஆ) புறநானூற்றில் 86ஆம் பாடல்
இ) அகநானூற்றில் 56ஆம் பாடல் ஈ) அகநானூற்றில் 86ஆம் பாடல் **[விடை: அ]**

www.kalvikadal.in

13. யவனரை அரண்மனைத் தொழிலாளர்களாக்கிக் கட்டுப்படுத்தியவன் என்று பதிற்றுப்பத்து இரண்டாம் பத்தில் குறிக்கப்படுபவன்

அ) சேரன் செங்குட்டுவன் ஆ) உதியஞ் சேரலாதன்
இ) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஈ) இவற்றில் எவருமிலர் **[விடை: இ]**

14. 'உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்' என்ற குறட்பா உணர்த்தும் செய்தி

அ) தன்னுடைய வலிமையின் அளவை மீறிச்செயல்படுவோர் அழிவர்
ஆ) எந்தச் செயலையும் முடிக்க இயலும் என்பதை நம்ப வேண்டும்
இ) முடியாதது என்ற ஒன்று எவருக்குமே இல்லை
ஈ) தான் என்ற சர்வம் வெற்றியுடையவனாக்கும் **[விடை: அ]**

15. கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளுந் தலைப்படுவர்' – என்று கூறும் நூல்

அ) திருக்குறள் ஆ) நாலடியார் இ) நன்மணிக்கடிகை ஈ) ஏலாதி **[விடை: ஆ]**

16. 'டைமன்' பற்றிய .................. நாடகம் நிதி மேலாண்மை பற்றிய மிகச் சிறந்த வாழ்வியல் விளக்கமாக அமைகிறது.

அ) வேர்ட்ஸ்வொர்த்தின் ஆ) பெர்னாட்ஷாவின்
இ) ஷேக்ஸ்பியரின் ஈ) டெமாஸ்தனிஸின் **[விடை: இ]**

17. "ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்... "
– என நிதியைக் கண்டபடி கையாள்பவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் கவிஞர்



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

அ) கோவூர்கிழார் ஆ) ஔவையார்
இ) ஒக்கூர் மாசாத்தியார் ஈ) கபிலர் **[விடை: ஆ]**

18. **ஹிராக்ளிடஸ் என்பவர் .................. நாட்டவர் ஆவார்.**
அ) கிரேக்க ஆ) இத்தாலி இ) அமெரிக்க ஈ) ஆப்கானிய **[விடை: அ]**

19. **ஹிராக்ளிடஸ் என்பார் எழுதிய உலகப் புகழ்பெற்ற 'துளிகள்' என்னும் நூல் .................. ஒற்றை வரிகளை உடையது.**
அ) 124 ஆ) 126 இ) 154 ஈ) 224 **[விடை: ஆ]**

20. **'இரண்டு முறை ஒருவன் ஒரே நதியில் இறங்க முடியாது' என்று எழுதியவர்**
அ) ஹிராக்ளிடஸ் ஆ) ஷேக்ஸ்பியர்
இ) பெர்னாட்ஷா ஈ) அரிஸ்டாட்டில் **[விடை: அ]**

21. **'ஒவ்வொரு நாளும் சூரியன் புதிது' என்று கூறியவர்**
அ) ஹிராக்ளிடஸ் ஆ) ஷேக்ஸ்பியர்
இ) பெர்னாட்ஷா ஈ) அரிஸ்டாட்டில் **[விடை: அ]**

22. **அவ்வைக்கு நெல்லிக்கனியைத் தந்தவன்**
அ) பேகன் ஆ) அதியன் இ) பாரி ஈ) ஓரி **[விடை: ஆ]**

23. **'இலக்கியத்தில் மேலாண்மை' என்னும் நூலை எழுதியவர்**
அ) சகாயம் ஆ) வெ. இறையன்பு
இ) இந்திரா பார்த்தசாரதி ஈ) மேலாண்மை பொன்னுசாமி **[விடை: ஆ]**

www.kalvikadal.in

24. **இ.ஆ.ப. தேர்வுக்குத் தமிழை ஒரு விருப்பப் பாடமாகப் படித்து வெற்றி பெற்றவர்**
அ) இராதாகிருஷ்ணன் ஆ) வெ. இறையன்பு
இ) ரோகிணி ஈ) இவர்களில் எவருமிலர் **[விடை: ஆ]**

25. **வெ. இறையன்புவின் எந்த நூல் 1995ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கான பரிசைப் பெற்றது?**
அ) வாய்க்கால் மீன்கள் ஆ) ஏழாவது அறிவு
இ) உள்ளொளிப்பயணம் ஈ) மூளைக்குள் சுற்றுலா **[விடை: அ]**

## குறுவினா

1. **நேர மேலாண்மையை வள்ளுவர் வழி நின்று விளக்குக.**

செயல் செய்வதற்கு ஏற்ற காலத்தையும் ஏற்ற இடத்தையும் அறிந்து செயல்பட்டால் உலகத்தையே அடைய நினைத்தாலும் கைகூடும் என்பதை.

**"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தால் செயின்"** என்ற குறள் தெளிவுபடுத்துகிறது.

2. **மடியின்மை என்னும் அதிகாரத்தின் வாயிலாக ஓர் அரசன் ஒரு நாளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்கிறார்?**

**"மடிஇலா மன்னவன் அய்தும் அடிஅளந்தான்**
**தாஅயது எல்லாம் ஒருங்கு"**

என்ற குறளில் உலகம் அனைத்தையும் அளந்த இறைவன் சோம்பல் இன்றி பாதுகாப்பது போல அரசனும் சோம்பல் இல்லாமல் தன் பெரு முயற்சியால் மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்கிறார்.


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

3. **கடலைக் குறிக்கும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.**

அரலை, அலை, அழுவம், அளம், அளக்கர், ஆர்கலி, அரி, உவரி, திரை, பானல், பெருநீர், சுழி, நீராழி, புணர்ப்பு, ஆழி, ஈண்டு நீர், தென்நீர், பௌவம், முந்நீர், வரி, ஓதம், வலயம்.

4. **சங்க இலக்கியங்கள் காட்டும் மிகப்பெரிய துறைமுகம் எது? யாருடைய கப்பல்கள் அங்கு இருந்தது?**

முசிறி, யவனர்களின் கப்பல்கள்.

5. **பதிற்றுப்பத்து காட்டும் வணிக மேலாண்மை விளக்குக.**

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் யவனரை அரண்மனைத் தொழிலாளர்களாக வைத்திருந்தான். பகை நாட்டுச் செல்வங்களைத் தன் நாட்டு மக்களுக்கு வழங்கினான் என்று பதிற்றுப்பத்து இரண்டாம் பத்தின் மூலம் அறிய முடிகிறது.

6. **வணிக மேலாண்மை விதி யாது?**

- யாருடனும் போட்டி போடக்கூடாது.
- போட்டிக்கு வருபவரை அழிக்க வேண்டும் என்று எண்ணக் கூடாது.
- போட்டியாளர்கள் நமக்குள் உந்து சக்தியை உற்பத்திச் செய்கிறார்கள்.

7. **மனமே ஒரு வேளாண்மைக்குட்பட்ட மேலாண்மை விளக்குக.**

**இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக**
**வன்சொல் களைக்கட்டு வாய்மை எருவட்டி**
**அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர்.....**

என்ற பாடலடிகளில் விளை நிலமாக இன்சொல்லும், விதையாக ஈதலும், வன்மையான சொல் களையாகவும் உண்மை என்ற எருவை விட்டு அன்பு நீர் பாய்ச்சி வேளாண்மை செய்ய வேண்டும் அறநெறிச்சாரம் விளக்குகிறது.

www.kalvikadal.in

8. **மேலாண்மையில் புலி - பூனை ஒப்பிடுக.**

**பழமொழி :**

புலியைப் பூனையைப் போல தொடர்ந்து நடத்தினால் அது பூனையாகவே ஆகிவிடும். புத்திசாலிகள் பூனைகளையும் புலியாக்குவார்கள் அவசரக்காரர்கள் புலிகளையும் எலியாக்குவார்கள் என்பதே புலி - பூனை மேலாண்மைக் கருத்தாகும்.

9. **நாலடியார் கூறும் நிர்வாக மேலாண்மையை விளக்குக.**

கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளுந் தலைப்படுவர்...... என்கிறார் நாலடியார்.

10. **வெ. இறையன்புவின் படைப்புக்களம் எதனை அடிப்படையாகக் கொண்டது?**

சிறுகதை, புதினம், தன்முன்னேற்ற நூல், நம்பிக்கை நூல்.

11. **வெ. இறையன்புவின் தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசினைப் பெற்ற நூல் ஆண்டு கூறுக.**

நூல் - வாய்க்கால் மீன்கள்
ஆண்டு - 1995

12. **சங்க இலக்கியம் காட்டும் நிர்வாக மேலாண்மைக்குச் சான்றுகள் சில குறிப்பிடுக.**

அடுத்தவர் நலனுக்காக வாழ்பவரே தலைமைப்பண்பு உள்ளவர். இந்திரர்க்குரிய அமுதம் கிடைத்தாலும் தனித்து உண்ணார். அப்படித்தான் அதியன் அவ்வைக்கு நெல்லிக்கனியைத் தந்தான் என்பதை அறிய முடிகிறது.

## சிறுவினா



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

1. **சீனக்கதை வாயிலாக நேர மேலாண்மையை விளக்குக.**

- சீனத்தில் யாங்சௌ என்ற பகுதி.
- பல இளைஞர்கள் நீச்சல் வீரர்கள்.
- நீச்சல் தன்னம்பிக்கை தருவதோடு எதிர்நீச்சல் போடவும் கற்றுத் தருகிறது.
- ஒரு நாள் படகில் ஆழமான நதியில் பல இளைஞர்கள் பயணம் செய்கிறார்கள்.
- வெள்ளம் ஏற்பட்டுப் படகு கவிழ்ந்தது.
- அனைவரும் நதியில் விழுந்து நீச்சல் அடிக்க ஆரம்பித்தனர்.
- ஒருவன் மட்டும் சரியாக நீந்தாமல் தத்தளித்தான்.
- அவன் மற்ற வீரர்களைவிட சிறந்த வீரனும் கூட.
- எல்லோரும் ஏன் பின் தங்குகிறாய்? என்று கேட்கிறார்கள். நீ சிறந்த வீரனே என்கிறார்.
- அவன் என்னுடைய கச்சையில் ஆயிரம் பொற்காசுகள் உள்ளது. அதனால் என்னால் நீந்த முடியவில்லை என்றான்.
- அவன் அவற்றை விடுவதற்கு மனமில்லாமல் தன் அரிய உயிரை நீத்தான்.

எது எந்த நேரத்தில் முக்கியம் என்று சரியான முடிவெடுப்பதில்தான் வாழ்வின் வெற்றி அடங்கி உள்ளது என்பது இக்கதை மூலம் அறிய முடிகிறது.

2. **வணிக மேலாண்மையைப் பற்றி பட்டினப்பாலை கூறுவனவற்றை விளக்குக.**

- காவிரிப்பூம்பட்டினத்தில் மாரி காலத்து மழை மேகம் போல், கடல் வழியே வேற்று நாட்டு மரக்கலங்கள் வந்தன.
- மரக்கலங்களில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்தும், வேறு நாடுகளுக்கு ஏற்றுமதியாக அனுப்பவும் கணக்கிட இயலாத பொருட்கள் பண்டகசாலை முற்றத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

www.kalvikadal.in

**“வான் முகந்த நீர் மலைப் பொழியவும்**
**மலைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும்”** - பட்டினப்பாலை 126 - 132

என்ற பாடலடிகள் மூலம் அறிய முடிகிறது.

3. **காவிரிப் பூம்பட்டினத்து துறைமுகம் பற்றிக் குறிப்பு வரைக.**

- பல நாடுகளில் இருந்து மரக்கலங்கள் வந்தன.
- ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்கள் முற்றத்தில் மலைபோல் குவித்து வைக்கப்பட்டிருந்தது.
- சுங்க வரி வசூலிக்கப்பட்டன.
- வரி வசூலித்த பின் புலிச்சின்னம் பொறித்தனர்.
- வரி ஏய்ப்பவர்களை கண்காணிக்க வலிமை மிக்கவர்கள் இருந்தனர்.

4. **ஷேக்ஸ்பியரின் நாடகம் வழி ஔவையாரின் நல்வழியை ஒப்பிட்டு நிதி மேலாண்மையை விளக்குக.**

- டைமன் என்பவன் ஏதென்ஸ் நகரில் இருந்தான்.
- வரவு குறைவு செலவு அதிகம் நீடித்தது.
- உதவியாளர் எவ்வளவு சொல்லியும் கேட்க மறுத்தான்.
- கடன் கொடுத்தவர்கள் கழுத்தை நெரித்தார்கள்.
- அதற்கும் அவன் வருந்தவில்லை.
- தன்னிடம் விருந்து உண்டவர்கள் உதவுவார்கள் என்று எண்ணினான். அதுவும் பொய்யானது.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

- சேவகர்கள் நான்கு திசை சென்றும் வெறும் கையோடு திரும்பினர்.
- டைமன் ஊருக்கு ஒதுக்குப்புறமாகச் செல்கிறான்.
- மனித இனத்தையே வெறுக்கிறான்.

இதையே ஔவையார் ஆன முதலில் அதிகம் செலவானால் மானம் அழிந்து மதிகெட்டுப் - போன திசை எல்லார்க்கும் கள்ளனாய் ஏழி பிறப்புக்கும் தீயனாய் நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. வரவுக்கு அதிகம் செலவு செய்து, மானம் அழிந்து மதிக்கெட்டு, எந்தத் திசை போனோம் என்று தெரியாமல் திருடனாய், தீயவனாய் வாழும் நிலை ஏற்படும் என்று ஷேக்ஸ்பியர் நாடகத்தோடு ஒப்பிடுகிறார்.

**5. மேலான மேலாண்மை என்பது என்ன?**

- மேலாண்மை என்பது வெறும் புத்தக அறிவுடன் முடிவதன்று.
- நொடிக்கு நொடி சூழல்கள் மாறிக் கொண்டே இருப்பது.
- ஏற்கனவே தயாரித்த அறிவுரைகளை வைத்து புதிய நெருக்கடியை நேர்கொள்ள முடியாது.
- முன் அனுபவம் என்பது எதிர்மறை ஆகிவிட்டது.
- அனுபவசாலிகள் செக்குமாடாகத்தான் இருப்பார்கள்.
- நமக்குத் தேவை ஜல்லிக்கட்டுக் காளைகள்.

**6. வெ. இறையன்பு குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | வெ.இறையண்பு |
| பதவி | : | இந்தி ஆட்சிப்பணி (தமிழ்நாடு) |
| சிறப்பு | : | ஐ.ஏ.எஸ். தேர்வு தமிழில் எழுதி வெற்றிப் பெற்றவர் |
| நூல்கள் | : | வாய்க்கால் மீன்கள், ஐ.ஏ.எஸ். வெற்றிப்படிக்கட்டுகள், ஏழாவது அறிவு, உள்ளொளிப்பயணம், மூளைக்குள் சுற்றுலா |
| சிறப்புகள் | : | வாய்க்கால் மீன்கள் : 1995 – தமிழ் வளர்ச்சித்துறை பரிசு பெற்ற நூல் மற்றும் பட்டிமன்ற நடுவர். |

www.kalvikadal.in

## கற்பவை கற்றபின்

பக்கம்: 168

**புறச்சூழல்களுக்கு ஏற்ப உங்கள் நேர மேலாண்மையைப் பயன்படுத்திக் கல்வியில் கவனம் செலுத்துவதற்கான வழிமுறைகள் குறித்துக் கலந்துரையாடுக.**

(நேசனும், வாசனும் ஒரே வகுப்பில் படிக்கும் மாணவர்கள், பக்கத்து வீட்டுப் பிள்ளைகள் வாசன் வகுப்பில் நல்ல மதிப்பெண் வாங்குவான். நேசன் குறைவான மதிப்பெண்களே வாங்குவான். ஒருநாள் கல்வி பற்றி இருவரும் உரையாடுகின்றனர்)

**நேசன்** : வாசன் நீ எப்படியோ நல்ல மதிப்பெண் பெற்று விடுகிறாய். என்னால் அது முடியவில்லையே என்ன காரணம் கூற முடியுமா.

**வாசன்** : வகுப்பில் ஆசிரியர் பாடத்தை நடத்தும் போது நன்றாகப் படிப்பேன். வீட்டிற்கு வந்தபின் இரண்டு முறை படிப்பேன்.

**நேசன்** : வீட்டிற்கு வந்து இரண்டுமுறை படிப்பாயா?
எப்படி உனக்கு நேரம் கிடைக்கிறது!

**வாசன்** : ஏன் நேரம் கிடைக்காது! மாலை 5 மணிக்கு வீடு திரும்புவேன். ஒரு தேநீர் அருந்துவேன். அறை மணி ஓய்வெடுப்பேன். சரியாக 6 மணிக்கு படிக்க ஆரம்பித்துவிடுவேன்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in





**நேசன்** : அப்படியா நான் 5 - 6 பள்ளியிலேயே கிரிக்கெட் விளையாடுவேன். 6 - 8 தொலைக்காட்சி பார்ப்பேன். 9 மணிக்குச் சாப்பிடுவேன். 9 - 10 க்குள் தூங்க ஆரம்பித்து விடுவேன்.

**வாசன்** : தயவுசெய்து நான் சொல்வதைக்கேள். இனிமேல் என்னைப் பின்பற்று. என் அறிவுரைகளைக் கேள்.

**நேசன்** : சரி அப்படியே செய்கிறேன் சொல்.

**வாசன்** : காலை 5 மணிக்குள் எழுந்திரு.
முகம் கழுவி, பல் துலக்கி, 5.15க்குள் புத்தகத்தைக் கையில் எடு.
1.30 மணி நேரம் தொடர்ந்து படி.
7.30 க்குள் குளி, பள்ளிக்குத் தயாராகு.
8 மணிக்குச் சாப்பாடு
8.30 மணிக்குப் பள்ளி
5 - 6 மணிக்கு வீடு திரும்பு
6 - 8 வரை தொலைக்காட்சி, விளையாட்டுகளைத் தவிர்த்துப் படி. நிச்சயம் முன்னேற்றம் கிட்டும்.

**நேசன்** : நன்றி நண்பா, நிச்சயம் உன் பேச்சைக் கேட்பேன், வெற்றி பெறுவேன்.

✸✸★★★✸✸

www.kalvikadal.in







Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

12

இயல் 7
செய்யுள்

# அதிசய மலர்

- தமிழ்நதி

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்க சொல்வது**

அ) கடந்தகால துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை
இ) பச்சயம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும் **[விடை: ஈ]**

### சிறுவினா

1. **அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்?**

- புலம் பெயர்ந்த மக்களின் எண்ணத்தில் மீதமிருக்கும் மரங்களில், நீரில்லா பொட்டல் வெளிப் பகுதியில், போருக்குப் பின் பிறந்த குழந்தை போல முகை (மொட்டு) அவிழ்ந்து மலர்ந்து சிரிக்கிறது அதிசய மலர் ஒன்று.
- ஆள் நடமாட்டம் இல்லாத நேரத்தில், உலாவிய யானையின் எச்சத்திலிருந்து வளர்ந்திருக்கலாம் இச்செடி.
- எவரோ ஒருவருடைய கால் சப்பாத்தின் (காலுறை) பின்புறம் விதை ஒட்டிக்கொண்டு இங்கு வந்து உயிர் பெற்றிருக்கலாம் – என்று தமிழ்நதி கூறுகிறார்.

www.kalvikadal.in

2. **'எங்கிருந்தோ வருகிறது
வண்ணத்துப் பூச்சியொன்று
பறவைகளும் வரக்கூடும் நாளை' - இடம்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் :**

தமிழ்நதியின் 'அதன் பிறகு எஞ்சும்' கவிதைத் தொகுப்பில் 'அதிசய மலர்' என்ற தலைப்பில் இப்பாடல் இடம்பெற்றுள்ளன.

**பொருள் :**

மலரைத் தேடி வண்ணத்துப் பூச்சியும், பறவையும் வரக்கூடும் என்பது பொருள்.

**விளக்கம்:**

மனித நடமாட்டம் இல்லாத இடத்தில் உலவிய யானையின் எச்சத்திலோ அல்லது காலனியின் பின்புறம் ஒட்டிக்கிடந்து முளைத்தது அதிசய மலர். அப்பூச்செடியின் அடையாளத்தைக் கண்டு எங்கிருந்தோ வண்ணத்துப்பூச்சியும், பறவையும் நாளை வரக்கூடும் என்று தமிழ்நதி கூறுகிறார்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **'அதிசய மலர்' என்னும் கவிதையின் ஆசிரியர்**

அ) ஆத்மாநாம் ஆ) நாகூர்ரூமி இ) தமிழ்நதி ஈ) இரா. மீனாட்சி **[விடை: இ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

2. **‘அதிசய மலர்’ என்னும் கவிதை இடம்பெற்றுள்ள கவிதைத் தொகுப்பு**
அ) அதன் பிறகும் எஞ்சும்
ஆ) கானல்வரி
இ) சூரியன் தனித்தலையும் பகல், இரவுகளில் பொழியும் துயரப்பணி
ஈ) கைவிட்ட தேசம் [விடை: அ]

3. **கவிஞர் தமிழ்நதியின் இயற்பெயர்**
அ) கலைச்செல்வி ஆ) தமிழ்ச்செல்வி இ) கலைவாணி ஈ) வாணி [விடை: இ]

4. **கவிஞர் தமிழ்நதியின் பிறப்பிடம்**
அ) ஈழத்தின் திருகோணமலை ஆ) கேரளத்தின் திருவனந்தபுரம்
இ) கர்நாடகாவின் மாண்டியா ஈ) தமிழகத்தின் திருச்செந்தூர் [விடை: அ]

5. **கவிஞர் தமிழ்நதி கலைத்துறையில் பட்டம் பெற்ற பல்கலைக்கழகம்**
அ) சென்னை ஆ) கொலம்பியா
இ) யாழ்ப்பாணம் ஈ) அண்ணாமலை [விடை: இ]

6. **கவிஞர் தமிழ்நதி புலம்பெயர்ந்து சென்றுள்ள நாடு**
அ) சிங்கப்பூர் ஆ) மலேசியா
இ) கனடா ஈ) ஆஸ்திரேலியா [விடை: இ]

7. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ) நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதியது | - | 1. நாவல் |
| ஆ) சூரியன் தனித்தலையும் பகல், இரவுகளில் பொழியும் துயரப்பணி | - | 2. குறுநாவல் |
| இ) கானல்வரி | - | 3. கவிதைகள் |
| ஈ) பார்த்தீனியம் | - | 4. சிறுகதைகள் |

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 2, 1, 4 இ) 4, 1, 2, 3 ஈ) 2, 1, 4, 3 [விடை: அ]

8. **தமிழ்நதி எழுதிய 'ஈழம்: கைவிட்ட தேசம்' என்பது**
அ) சிறுகதைகள் ஆ) கவிதைகள் இ) குறுநாவல் ஈ) நாவல் [விடை: ஈ]

9. **பச்சையம் இழந்த சாம்பல் நிலத்தில் மலரை அடையாளம் கண்டு வருவது.**
அ) யானை ஆ) வண்ணத்துப்பூச்சி இ) எறும்பு ஈ) ஈ [விடை: ஆ]

## குறுவினா

1. **அதிசய மலர் என்ற கவிதை தமிழ்நதியின் எத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன?**
‘அதன் பிறகு எஞ்சும்’ என்னும் கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

2. **தமிழ்நதியின் மொழிநடை எதனை அடிப்படையாகக் கொண்டது?**
புலம் பெயர்ந்து வாழும் இருப்புகளையும், வலிகளையும் சொல்லும் காத்திரமான மொழி இவருடையது.

3. **அதிசிய மலரின் புன்னகை எங்கிருந்து தொடங்குகிறது?**
இதழ்களிலிருந்து தொடங்குகிறது.

4. **அதிசய மலர் எப்போது சிரித்தது?**
போருக்குப் பிறகு முகையை அவிழ்த்துச் சிரித்தது.


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



5. **‘எவருடையவோ**
**சப்பாத்தின் பின்புறம்**
**விதையாக ஒட்டிக்கிடந்து**
**உயிர் தரித்திருக்கலாம்’ - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் :**

தமிழ்நதியின் ‘அதன் பிறகு எஞ்சும்’ கவிதைத் தொகுப்பில் ‘அதிசய மலர்’ என்ற தலைப்பில் இப்பாடல் இடம் பெற்றுள்ளன.

**விளக்கம் :**

யாருடைய செருப்பின் பின்புறமாக விதையாக ஒட்டிக் கொண்டு வந்து தன் வாழ்வை உருவாக்கிக் கொண்டிருக்கலாம்.

## சிறுவினா

1. **கவிஞர் தமிழ்நதி குறிப்பு வரைக.**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | கலைவாணி | | |
| பிறப்பு | : | ஈழம், திருகோணமலை. | | |
| வசிப்பு | : | கனடா | | |
| படிப்பு | : | யாழ்ப்பாணத்தில் கலைத்துறையில் பட்டம் | | |
| நூல்கள் | : | சிறுகதை | - | நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதியது |
| | | நாவல் | - | ஈழம், கைவிட்ட தேசம், பார்த்தீனியம் |
| | | குறுநாவல் | - | சாலை வரி |
| | | கவிதை | - | சூரியன் தனித்தலையும் பகல், இரவுகளில் பொழியும் துயரப்பனி |

www.kalvikadal.in

## கற்பவை கற்றபின்

பக்கம்: 169

**போர்களுக்கு எதிரான குரல்கள் வெளிப்படும் புதுக்கவிதைகளைத் தொகுத்து வகுப்பறையில் படிக்க.**

**போருக்கு எதிராக குரல்கள்......**

இன்று காலையும் போர் விமானங்கள் எங்கள் கிராமத்தின் மேல் சுற்றின. சிலர் பதுங்கு குழிக்குள் அடைக்கலம் சிலர் வெளியே நின்று வெறுத்துப் பார்த்தனர்.

குண்டுகள் வீழ்ந்தன
கிராமத்தின் மத்தியில் புகை மண்டலம்
சிலருக்குக் காயம்; சிலர் மாயம்
எத்தனை பேர் மாண்டனர்
பலருக்கு அந்தக் கணக்குதான் தேவை
பாழும் உலகம் பரிதாபப்படவில்லை.
எங்கள் மேல் விழுமோ கிழக்கில் வெள்ளி வருமோ!

மனிதம் விற்று மதி போற்றும்
மக்கள் வேடத்தில் மாக்கள் கூட்டம்
மதம் தன்னை ஆயுதமாய் ஏந்தி
பகுத்தறியாமல் பகை கொள்வதா
படைகொண்டு தாக்கினால் பாவம்





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



நாங்கள் என்ன செய்வோம்
பாதி பேர் கைது பாதி பேர் காணோம்
பக்கத்து வீட்டில் அப்பா இல்லை
என் வீட்டில் என் அண்ணன் இல்லை
எதிர் வீட்டில் என் நண்பன் இல்லை
எங்கே போனார்கள் ஆண்டு
இரண்டாயிற்று சேதி இல்லை
இறைவனும் எங்கள் முன் வரவில்லை
ஏதேனும் கேட்கலாம் என்றால்
எதைக் கேட்பது எதை விடுவது
மீண்டு வருமா மாண்ட உயிர்கள்
மறு பிறவியிலாவது ஆண்டவா
என்னை படைப்பதை நீ மறந்து விடு.

✹✹★★★✹✹

இயல் 7

செய்யுள்

# தேயிலைத் தோட்டப் பாட்டு

- முகம்மது இராவுத்தர்

www.kalvikadal.in

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **முச்சந்தி இலக்கியம் என்பது**
**கூற்று 1: கதை வடிவிலான வடிவம் உடையது**
**கூற்று 2: பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது**

அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஆ) கூற்று 1, 2 சரி
இ) கூற்று 1, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி **[விடை: ஆ]**

2. **உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரில் பெயரெச்சம்**

அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில் **[விடை: இ]**

### குறுவினா

1. **எந்தவொரு பொருளைப் பயன்படுத்தும்போதும் அதற்குப் பின்னால் உள்ள மனிதர்களின் உழைப்பை நாம் சிந்திப்பதில்லை. ஒரு தேநீரைப் பருகும்போது அதற்குப் பின்னால் உள்ள மனித உழைப்பைச் சிந்தித்து உங்கள் கருத்தை எழுதுக.**

- நாம் உழைக்கின்றபோது உழைப்பின் சுவையை ‘நா’ அறியாது.
- ஆனால் தேநீரைப் பருகும்போது அதன் சுவையை ‘நா’ உணர்வது மட்டுமல்லாமல் உடல் புத்துணஓர்ச்சி பெற்று நம்மனதை சிந்திக்கத் தூண்டுகிறது.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

- அதாவது நம் தாய் நமக்கு முன்னர் காலையில் எழுந்து தேநீருக்குத் தேவையானவற்றைத் தயார் செய்து கொடுக்கும் தாயாரின் உழைப்பை நாம் சிந்திக்கிறோம்.

## நெடுவினா

**1. எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன - நிறுவுக.**

**முன்னுரை:**

நாட்டுப்புற இலக்கிய வடிவங்கள் கதைப் பாடல்கள் வாயிலாக விளிம்புநிலை மக்களின் வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகளை எதார்த்தமாக வடிக்கின்றனர். அந்த வகையில் 'தேயிலைத் தோட்டப் பாட்டு' என்ற பாடல்களின் பாயிலாக மக்களின் வலிகளை இங்குப் பதிவு செய்யப்படுகிறது.

**துயரங்கள்:**

- விளிம்புநிலை மக்களின் வாழ்வு துயரம் தோய்ந்தது.
- அவர்களின் விம்மி விம்மி அழுதக் குரலைக் காற்று கேட்டிருக்கலாம்.
- அவை வெகுசனங்களிடையே நாட்டுப்புற இலக்கிய வடிவில் கும்மிப்பாடலாக அவர்களின் துயரம் போக்கின. அப்பாடல்களுள் தேயிலைத் தோட்டப்பாட்டு வாயிலாக அறியலாம்.
- பழங்காலத்தில் நம் தேசத்தில் பலவிதக் கைத்தொழில்கள் சிறப்புப் பெற்று விளங்கியது.
- நாகரீகத்திலும் ராஜரீகத்திலும் நாடெங்கும் எந்நாளும் கொண்டாடினர்.
- இத்தகு சீரும் சிறப்பும் கொண்ட நம் தேசத்தில் அன்னியர்கள் புகுந்தனர்.
- நம்பண்பாட்டையும், நாகரிகத்தையும் கைத்தொழிலையும் கொஞ்சம் கொஞ்சமாகக் கொள்ளை அடித்து நம்மை அற்ப பிராணி போல் செய்தனர்.
- உண்டு பிறந்து வளர்ந்த இடங்களில் பலவேலை செய்த நாம் இன்று மனைவி குழந்தைகளோடு நாயினும் கீழாகினோம்.

**கங்கானியின் செயல்:**

- விளம்பர சுவரொட்டி ஒட்டி வேலைக்கு அழைத்தனர்.
- ஆலைக் கரும்பு போல நம் உழைப்பைப் பிழிந்தும் குரங்கைப் போல் நம்மை ஆட்டிப் படைத்தும் ஒன்றுக்குப் பத்தாகப் பொய் கணக்கெழுதினர்.
- தயவு ஏதுமில்லாமல் கூலித் தொழிலாளிகளைக் கப்பலில் ஏற்றி இலங்கை, அந்தமான் தீவுக்குக் கொண்டு சென்றனர்.
- உண்ண உணவுக்கும், கைப்பிடிச் செலவுக்கும் துன்பப்பட்டு மண்ணுளிப் பாம்புப் போல மனைவி மக்களோடு வாழ்ந்தனர்.
- சகோதர, சகோதரிகளே கண்காணிப்பவர் கூறும் பொய்யுரைகளை கண்டு மயங்காதீர்.

**முடிவுரை:**

வறுமை, பிணி, ஏமாற்றம் போன்றவை எளிய மக்களின் வாழ்க்கை வழிகளை பிரதிபலிக்கின்றன. இப்படியே இவர்கள் கூலித்தொழிலாளியாய்த் தேயிலைத் தோட்டத்தில் (இந்தியர்) நாம் துன்பப்படுவதற்குக் கல்வி, ஒழுக்கம், நாகரிகம் இல்லாத குறையே. இன்றே உணருங்கள் நம் பிள்ளைகளுக்கு நல்ல கல்வியைக் கற்றுக் கொடுத்து, குறையில்லாமல் ஒற்றுமையாய் ஊரில் கட்டுப்பாட்டோடு வாழ்வோம்.


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

1. **நம் பாடப்பகுதியின் கும்மிப்பாடல்கள் இடம்பெற்றுள்ள நூல்**
   அ) 'பாரத மக்களின் பரிதாபச் சிந்து' என்ற தேயிலைத் தோட்டப் பாட்டு
   ஆ) பாரத மக்களின் விவசாய நிலைப் பாட்டு
   இ) மலேசிய மண்ணில் தமிழ்க்கண்ணீர்
   ஈ) பால்மரக்காட்டினிலே **[விடை: அ]**

2. **ஆங்கிலேயரின் குடியேற்ற நாடுகளில் தமிழர்கள் பல்வேறு தோட்டக் கூலிகளாகப் புலம்பெயர்ந்த நூற்றாண்டு**
   அ) கி.பி. 18 ஆ) கி.பி. 19 இ) கி.பி. 17 ஈ) கி.பி. 16 **[விடை: அ]**

3. **தோட்டக் கூலிகளாகத் தமிழர்களை வெள்ளையர் சேர்க்குமிடங்கள்**
   அ) இலங்கைத் தீவு, அந்தமான் தீவு ஆ) மலேசியா, சிங்கப்பூர்
   இ) ஆஸ்திரேலியா, இங்கிலாந்து ஈ) அமெரிக்கா, கனடா **[விடை: அ]**

4. **யாருடைய பொய்யுரை கண்டு மயங்காதீர் என்று தேயிலைத் தோட்டப் பாட்டுக் கூறுகிறது?**
   அ) கங்காணி ஆ) வெள்ளையர்
   இ) நாட்டாமை ஈ) இவர்களில் எவருமிலர் **[விடை: அ]**

5. **தேயிலைத் தோட்டத்தில் இந்தியர் துன்பப்படுவதற்குக் காரணம்**
   அ) கல்வியொழுக்கம் நாகரீகம் இல்லாமை ஆ) வெள்ளையரின் ஏகாதிபத்திய உணர்வு
   இ) கங்காணிகளின் கருணையுணர்வு ஈ) உழைத்து வாழ வேண்டும் என்ற வேட்கை
   **[விடை: அ]**

6. **தோட்டக்கூலிகளை ஆலைக் கரும்பு போலாட்டிக் குரங்காட்டுபவர்கள்**
   அ) கங்காணிகள் ஆ) நாட்டாமைகள்
   இ) அரசர்கள் ஈ) இவர்களில் எவருமிலர் **[விடை: அ]**

## குறுவினா

1. **தேயிலைத் தோட்டத்தில் மக்கள் துன்பப்படுவதற்கு முகம்மது இராவுத்தர் கூறும் காரணங்கள் யாவை?**
   கல்வி, ஒழுக்கம், நாகரீகம், ஒற்றுமை இவை நான்கும் குறைவதால் தேயிலைத் தோட்டத்தில் துன்பப்படுவதற்கான காரணங்களாக முகம்மது இராவுத்தர் குறிப்பிடுகிறார்.

2. **தமிழர்கள் கூலித்தொழிலாளிகளாக எங்கு அழைத்துச் செல்லப்பட்டனர்?**
   இலங்கை மற்றும் அந்தமான் தீவு.

3. **நாட்டுப்புற இலக்கியங்களின் பாடுபொருள்கள் யாவை?**
   செவ்வியல் இலக்கிய மரபைப் பாடாத, சொல்லாத அல்லது புறக்கணித்த கருப்பொருள்களைப் பாடு பொருளாகக் கொண்டு பாடப்பட்டது நாட்டுப்புற இலக்கியங்கள்.

4. **நாட்டுப்புற இலக்கியங்கள் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?**
   - வெகுசன இலக்கியம்
   - தெருப் பாடல்கள்
   - முச்சந்தி இலக்கியம்
   - காலணா அரையணா பாட்டுப் புத்தகங்கள்





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in


- குஜிலி நூல்கள்
- பெரிய பட்டுப்புத்தகங்கள்

5. **தேயிலைத் தோட்டப்பாட்டில் காணப்படும் இலக்கிய வடிவங்கள் யாவை?**
   மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் தாக்கங்களைப் பாடல்கள், கதைப்பாடல்கள் உள்ளிட்ட இலக்கிய வடிவங்களில் வெளிப்படுகின்றன.

6. **நமது பாடப்பகுதியில் தேயிலைத் தோட்டப்பாட்டு எந்த நூலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது?**
   முகம்மது இராவுத்தர் எழுதிய கும்மி பாடல்கள் 'பாரத மக்களின் பரிதாபச் சிந்து' என்ற தேயிலைத் தோட்டப்பாட்டு நூலில் இருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.

7. **தேயிலைத் தோட்டப்பாட்டு அக்காலக்கட்டங்களில் எவ்வடிவில் வெளியாயின?**
   19ஆம் நூற்றாண்டு இறுதிலும், 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சிறு சிறு நூல்களாக மெல்லிய தாளில் பெரிய எழுத்தில் வெளியாயின.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 171

1. **உங்கள் பகுதியில் உள்ள வாய்மொழி இலக்கியங்களைத் தொகுத்து, சிறப்பு மலர் உருவாக்குக.**

**தாலாட்டு பாட்டு :**

மாமன் அடிச்சானோ மல்லிகப்பூச் செண்டால
மன்னவனே அழலாமோ தேம்பித்தேம்பி அழலாமோ
ஆராரோ ஆராரோ.....
அம்மா அடிச்சாளோ அல்லிப்பூ செண்டால
ஆனந்த பொன்மணியே தேம்பித் தேம்பி அழலாமோ
பாட்டி அடிச்சாளோ பாலூட்டும் சங்கால
பாராளும் மன்னவனே தேம்பித் தேம்பி அழலாமோ
அத்தை அடித்தாளோ அரளிப்பூ செண்டால
ஆடி வரும் மயிலழகே தேம்பித் தேம்பி அழலாமோ
ஆராரோ ஆராரோ
நீ அழுத கண்ணீரு நெல்லுக்கும் இஞ்சிக்கும்
நீராய்ப்பாயுதடா
ஆராரோ ஆராரோ.

www.kalvikadal.in





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**ஏற்றப்பாட்டு :**

மழையை நம்பி ஏலேலோ மண்
இருக்க ஐலசா
மண்ணை நம்பி ஏலேலோ
மரம் இருக்க ஐலசா
மரத்தை நம்பி ஏலேலோ
கிளை இருக்க ஐலசா
கிளையை நம்பி ஏலேலோ
இலை இருக்க ஐலசா
இலையை நம்பி ஏலேலோ
பூவிருக்க ஐலசா
பூவைநம்பி ஏலேலோ
பிஞ்சிருக்க ஐலசா
பிஞ்சை நம்பி ஏலேலோ
காயிருக்க ஐலசா
காயை நம்பி ஏலேலோ
பழம் இருக்க ஐலசா
பழ்தை நம்பி ஏலேலோ
மகன் இருக்க ஐலசா
மகனை நம்பி ஏலேலோ
நீ இருக்க ஐலசா
உன்னை நம்பி ஏலேலோ
நான் இருக்க ஐலசா
என்னை நம்பி ஏலேலோ
எமன் இருக்க ஐலசா
எமனை நம்பி ஏலேலோ
காடிருக்க ஐலசா
காட்டை நம்பி ஏலேலோ
புல்லிருக்க ஐலசா.

**ஒப்பாரிப் பாட்டு :**

ஆலமரபோல அன்னாந்து நிப்பேனு
நான் ஒய்யாரமா வந்தேனே
இப்ப நீ பட்ட மரம்போல
பட்டு போயிட்டியே.

பொட்டு இல்ல பூவில்லை
பூச மஞ்சலும் இல்ல
நான் கட்டன ராசாவே
என்ன விட்டுத்தான் போனிங்க

பட்டு இல்லை தங்கம் இல்லை
பரிமார பந்தல் இல்ல
படையெடுத்து வந்த ராசா
பாதியில போரிங்கலே

நான் முன்னே போரேன்
நீங்க பின்னே வாருங்கோ
எனச் சொல்லிட்டு
இடம் பிடிக்கப் போயிதிங்களா

www.kalvikadal.in

நான் காக்காவாட்டும கத்தரனே,
உங்க காதுக்குக் கேக்கலையா
கொண்டு வந்த ராசாவே
உங்களுக்குக் காதும் கேக்கலையா.

✸✸★★★✸✸



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





இயல் 7

செய்யுள்

# புறநானூறு

- பிசிராந்தையார்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **யானை புக்க புலம்போலத் - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்**

அ) தனக்குப் பயன்படும் பிறருக்குப் பயன்படாது
ஆ) தனக்கும் பயன்படாது பிறருக்கும் பயன்படாது
இ) பிறருக்குப் பயன்படும் தனக்குப் பயன்படாது
ஈ) தனக்கும் பயன்படும் பிறருக்கும் பயன்படும் **[விடை: அ]**

### குறுவினா

1. **அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?**

- அறிவுடை அரசன் வரிதிரட்டும் முறை அறிந்து மக்களிடம் வரி திரட்டினால், நாடு கோடிக்கணக்கில் செல்வம் பெற்று செழிப்படையும்.
- அறிவில் குறைந்து முறை தெரியாது வரி திரட்டினால் யானை புகுந்த நிலம் போல் ஆகிவிடும்.

www.kalvikadal.in

2. **செவியறிவுறூஉ துறையை விளக்குக.**

அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறை தவறாமல் செய்யுமாறு அவன் கேட்குமாறு அறிவுறுத்தல் செவியறிவுறூஉ துறையாகும்.

### சிறுவினா

1. **யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.**

**உவமை :**

சிறிய நிலத்தில் விளைந்த நெல்லை அறுத்து உணவாக்கிக் கவளமாகக் கொடுத்தால் யானைக்குப் பல நாட்கள் உணவாகும்.

**பொருள் :**

அறிவுடைய அரசன் வரி திரட்டும் முறை அறிந்து மக்களிடம் வரிதிரட்டினால் நாடு கோடிக்கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும்.

**உவமை :**

பெரிய வயலில் யானை புகுந்து உண்ணுமாயின் வாயில் புகுந்த நெல்லைவிடக் காலில் மிதிப்பட்ட நெல்தான் அளவு அதிகமாகும்.

**பொருள் :**

அறிவில்லா அரசன் முறை தெரியாமல் வரி திரட்டுவானாயின் நாடு விரைவில் கெட்டொழியும், யானை புகுந்த நிலம் போல ஆகிவிடும். அரசன் தானும் பயன்படமாட்டான் நாட்டு மக்களும் துன்புறுவர்.







Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| காய்நெல் | - | வினைத்தொகை |
| புக்க | - | பெயரெச்சம் |
| அறியா | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |

## உறுப்பிலக்கணம்

| | | | |
|---|---|---|---|
| **அறிந்து = அறி + த்(ந்) + த் + உ** | | **அறுத்து = அறு + த் + த் + உ** | |
| அறி | - பகுதி | அறு | - பகுதி |
| த் | - சந்தி (ந் ஆனது விகாரம்) | த் | - சந்தி |
| த் | - இறந்தகால இடைநிலை | த் | - இறந்தகால இடைநிலை |
| உ | - வினையெச்ச விகுதி | உ | - வினையெச்ச விகுதி |

# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

1. **'காய்நெல் அறுத்து' என வரும் புறநானூற்றுப் பாடலின் பாவகை**
அ) கலி விருத்தம் ஆ) அறுச்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
இ) நேரிசை ஆசிரியப்பா ஈ) சிந்தியல் வெண்பா **[விடை: இ]**

2. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | மா | - | 1. முறைமை |
| ஆ) | கல் | - | 2. வரி |
| இ) | பிண்டம் | - | 3. ஒலிக்குறிப்பு |
| ஈ) | வரிசை | - | 4. ஒருநில அளவு |

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 2, 1, 4 இ) 1, 4, 3, 2 ஈ) 3, 2, 4, 1 **[விடை: அ]**

www.kalvikadal.in

3. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | காய்நெல் | - | 1. வினையெச்சம் |
| ஆ) | புக்க | - | 2. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| இ) | அறியா | - | 3. பெயரெச்சம் |
| ஈ) | அறுத்து | - | 4. வினைத்தொகை |

அ) 4, 3, 2, 1 ஆ) 2, 1, 3, 4 இ) 3, 4, 2, 1 ஈ) 4, 2, 3, 1 **[விடை: அ]**

4. **'காய்நெல் அறுத்து' எனத் தொடங்கும் பாடல் புறநானூற்றில் ................ ஆவது பாடல் ஆகும்.**
அ) 154 ஆ) 184 இ) 204 ஈ) 214 **[விடை: ஆ]**

5. **புறநானூற்றை உ.வே.சா. அச்சில் பதிப்பித்த ஆண்டு**
அ) 1884 ஆ) 1894 இ) 1896 ஈ) 1910 **[விடை: ஆ]**

6. **ஜார்ஜ். எல். ஹார்ட் ................ பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார்.**
அ) கொலம்பியா ஆ) ஆக்ஸ்போர்டு இ) கலிபோர்னியா ஈ) கேம்பிரிட்ஜ் **[விடை: இ]**

7. **ஜார்ஜ். எல். ஹார்ட் புறநானூற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஆண்டு**
அ) 1988 ஆ) 1990 இ) 1999 ஈ) 2000 **[விடை: இ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

8. **‘காய்நெல் அறுத்து’ என்னும் புறநானூற்றுப் பாடலின்வழி மக்களிடம் அதிக வரியைத் திரட்டக் கூடாது என அறிவுறுத்தியவர் ................ அறிவுறுத்தப்பட்டவர் ................**

அ) பிசிராந்தையார், அறிவுடைநம்பி ஆ) கபிலர், பாரி
இ) கோவூர்கிழார், கிள்ளிவளவன் ஈ) வெள்ளக்குடி நாகனார், நலங்கிள்ளி **[விடை: அ]**

9. **பிசிர் என்பது**

அ) எஞ்சிய வாழ்க்கைஆ) பாண்டிய நாட்டில் இருந்த ஓர் ஊர்
இ) சோழநாட்டில் கிடைத்த பொருள் ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: ஆ]**

10. **ஆந்தையார் என்பது**

அ) இயற்பெயர் ஆ) காரணப்பெயர் இ) பட்டப்பெயர் ஈ) குலப்பெயர் **[விடை: அ]**

11. **அறிவுடை நம்பி ஆண்ட நாடு**

அ) சேரநாடு ஆ) சோழநாடு இ) பாண்டிய நாடு ஈ) பல்லவ நாடு **[விடை: இ]**

11. **பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | தமித்து | - | 1. கெட |
| ஆ) | புக்கு | - | 2. சேர்த்து |
| இ) | யாத்து | - | 3. புகுந்து |
| ஈ) | தப | - | 4. தனித்து |

அ) 4, 3, 2, 1 ஆ) 3. 4. 1. 2 இ) 1. 2. 3. 4 ஈ) 3. 2. 1. 4 **[விடை: அ]**

12. **‘பரிவுதப எடுக்கம் பிண்டம் நச்சின்’ என்னும் அடிகளில் வரும் ‘நச்சின்’ என்பதன் பொருள்**

அ) குலைந்தால் ஆ) இழந்தால் இ) விரும்பினால் ஈ) அலைந்தால் **[விடை: இ]**

www.kalvikadal.in

## குறுவினா

1. **பிசிராந்தையார் குறிப்பு வரைக.**

ஆசிரியர் - பிசிராந்தையார்
பிசிர் என்பது பாண்டிய நாட்டில் ஓர் ஊர்
இயற்பெயர் - ஆந்தையார்
பாண்டிய மன்னர் அறிவுடை நம்பியின் அரசவைச் சான்றோர்.

2. **சங்க காலத்தில் மன்னன் எவ்வாறு திகழ்ந்தான்?**

நல்வழிப்படுத்தும் புலவர்கள் அரசவையில் இருந்தனர். புலவர்களின் அறிவுரைகளைத் தலைமேற் கொண்டு குடிமக்களின் உளப்பாங்கை அறிந்து ஆட்சி செய்தனர்.

3. **பாடாண் திணை விளக்குக.**

ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

## சிறுவினா

1. **புறநானூறு குறிப்பு வரைக.**

- புறம் + நான்கு + நூறு = புறநானூறு.
- 400 பாடல்கள் கொண்டது.
- பண்டையத் தமிழ்களின் அரசியல் சமூக வரலாற்றின் அரியக் கருத்துக் கருவூலமாகத் திகழ்கிறது.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



- முடியுடை வேந்தர், குறுநில மன்னர், வேளிர் முதலிய சிறப்புடை மக்கள் போர்ச் செய்திகள், கையறு நிலை, நடுகல் போன்ற பல்வேறு பொருண்மைகளை வெளிப்படுத்துகிறது.
- உ.வே.சா. 1894இல் பதிப்பித்தார்.
- 1999இல் ஜார்ஜ் எல் ஹார்ட் என்ற கலிபோர்னியா பல்கலைக்கழகப் பேராசிரியர்.
- The Four hundred songs of war and wisdom. An Anthology of poems from classical Tamil, the Purananuru என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

**2. புறநானூற்றுப் பாடல் வாயிலாக மன்னனின் நிருவாக சீர்மையை விளக்குக.**

- குடிமக்களின் உளம் அறிந்து ஆட்சி செய்பவனே சிறந்த அரசன்.
- மக்களின் விருப்பத்திற்கு மாறாக அரசன் செயல்பட்டால் நாடும் மக்களும் வீழ்வர் என்பதைப் புறநானூற்று பாடல் மூலம் பிசிராந்தையார் கூறினார்.
- ஒரு ஏக்கரில் மூன்றில் ஒரு பங்கு குறைந்த நிலத்தில் விளைந்த நெல்லை அறுத்து உணவாக்கிக் கவளமாக யானைக்குப் பல நாட்கள் கொடுக்கலாம்.
- இதைவிட நூறு மடங்கு பெரிய வயலில் யானை தனித்துச் சென்று வயலில் உண்ணுமாயின் உண்ணும் அளவைவிட காலில் மிதிபட்டு அழிந்ததே அதிகம் ஆகும்.
- அறிவுடைய அரசன் வரிதிரட்டும் முறை அறிந்து வரிதிரட்டினால் நாடு கோடிக்கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும்.
- அரசன் அறிவில் குறைந்து முறை தவறி, ஆரவாரமாக மக்களின் அன்பு கெடுமாறு வரிதிரட்டினால் யானை புகுந்த நிலம் போல தானும் உண்ணாமல் பிறருக்கும் பயன்படாமல் வீணாக்குவது போன்றது ஆகும்.
- அரசன் தானும் பயன்படமாட்டான். நாட்டு மக்களையும் துன்புறுத்துவான் என்பதை என்னும் நிர்வாக சீர்மையை விளங்குகிறது.

www.kalvikadal.in

**3. பாடாண் திணையை சான்றுடன் விளக்குக.**

**திணை விளக்கம்:**

ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

**சான்று:**

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மனநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்.'' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.

**பொருத்தம்:**

சிறிய நிலத்தில் விளைந்த நெல்லை அறுத்து உணவாக்கிக் கவளமாகக் கொடுத்தால் யானைக்குப் பல நாட்கள் உணவாகும். அறிவுடைய அரசன் வரி திரட்டும் முறை அறிந்து மக்களிடம் வரிதிரட்டினால் நாடு கோடிக்கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும்.

பெரிய வயலில் யானை புகுந்து உண்ணுமாயின் வாயில் புகுந்த நெல்லைவிடக் காலில் மிதிப்பட்ட நெல்தான் அளவு அதிகமாகும். அறிவில்லா அரசன் முறை தெரியாமல் வரி திரட்டுவானாயின் நாடு விரைவில் கெட்டொழியும், யானை புகுந்த நிலம் போல ஆகிவிடும். அரசன் தானும் பயன்படமாட்டான் நாட்டு மக்களும் துன்புறுவர்.

**4. செவியறிவுறூஉ துறையைச் சான்றுடன் விளக்கு.**

**துறைவிளக்கம்:**

அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறை தவறாமல் செய்யுமாறு அவன் கேட்குமாறு அறிவுறுத்தல் செவியறிவுறூஉ துறையாகும்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**சான்று:**

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மனநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்.'' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.

**பொருத்தம்:**

சிறிய நிலத்தில் விளைந்த நெல்லை அறுத்து உணவாக்கிக் கவளமாகக் கொடுத்தால் யானைக்குப் பல நாட்கள் உணவாகும். அறிவுடைய அரசன் வரி திரட்டும் முறை அறிந்து மக்களிடம் வரிதிரட்டினால் நாடு கோடிக்கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும்.

பெரிய வயலில் யானை புகுந்து உண்ணுமாயின் வாயில் புகுந்த நெல்லைவிடக் காலில் மிதிப்பட்ட நெல்தான் அளவு அதிகமாகும். அறிவில்லா அரசன் முறை தெரியாமல் வரி திரட்டுவானாயின் நாடு விரைவில் கெட்டொழியும், யானை புகுந்த நிலம் போல ஆகிவிடும். அரசன் தானும் பயன்படமாட்டான் நாட்டு மக்களும் துன்புறுவர்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 173

1. **சிறந்த அரசு நிர்வாகத்திற்கு நீவிர் அளிக்கும் பரிந்துரைகளை நாளிதழ்த் தலையங்கமாக எழுதுக.**

**நாட்டிற்கு வேண்டிய நல்லமைச்சு :**

- நாடோறும் நாடி முறை செய்யா மன்னன் நாள்தோறும் நாடு கெடும்.
- நாள்தோறும் மக்களின் தேவையைப் புரிந்து அதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும்.
- காட்சிக்கு எளியன் கடுஞ்சொல் அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம்.
- காட்சிக்கு எளியவனாக, கடுஞ்சொல் பேசாதவனாக மன்னன் இருக்க வேண்டும்.
- அரசின் எல்லாத்துறைகளும் போர்க்கால அடிப்படையில் இயக்க வேண்டும்.
- தண்ணீர் வசதி, சாலை வசதி, மின்சார வசதி, பேருந்து வசதி போன்றவற்றில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.
- கல்வியில் காமராசராக விளங்க வேண்டும்.
- நியாய விலைக் கடைகளில் முறையான வர்த்தகம் நடைபெற வேண்டும்.
- எரிபொருட்கள் விலையைப் போல ஒரே விலை ஒரு நாளைக்கு என எல்லா பொருள்களுக்கும் நிர்ணயம் செய்ய வேண்டும்.
- விலையெல்லாம் பொருட்கள் தவிர்த்து வரி விதிப்பில் குறைவாக வசூலிக்க வேண்டும்.
- தொழில், தொழில்நுட்பக் கல்லூரிகளில் பாடத்திறனை வெளிநாட்டினர் போல் மேம்படுத்த வேண்டும்.
- விவசாயத்திற்குத் தட்டுப்பாடில்லாமல் பாசனத் தண்ணீர் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.
- சிறுபான்மையினருக்கும், மகளிருக்கும் உரிய நலன்களைப் பெற்றுத்தர வேண்டும்.
- பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்ததே என்பதை மறத்தல் கூடாது.

*******





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





இயல் 7

துணைப்பாடம்

# சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும்

- ஐராவதம் மகாதேவன்

## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

1. **சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? விளக்குக.**

**முன்னுரை :**

இலக்கியங்கள் அவை உருவான காலக்கட்டத்தில் அந்த நிலப்பகுதியில் வாழ்ந்த மனிதர்களின் வாழ்வியலையும், பண்பாட்டையும் காலம் தாண்டி நினைக்கும் வகையில் பதிவு செய்பவை கல்வெட்டுகள்.

இப்பகுதியில் புகளூர் கல்வெட்டுகள் மூலம் சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ளலாம்.

**எழுத்து வடிவம் :**

கல்வெட்டுகள் மூலம் சங்ககால வரலாற்றை அறிய முடிகிறது. பொதுவாகக் கல்வெட்டுகள் தமிழ்மொழியில் சங்ககால எழுத்து வடிவமான 'தமிழ்' பிராமி எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளன.

www.kalvikadal.in

**புகளூர் கல்வெட்டு :**

சங்ககாலத்தில் சேரர்களின் தலைநகரமான கரூரிலிருந்து 15 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஆறு நாட்டான்குன்றின் மீதுள்ள குகைகளில் காணமுடிகிறது.

**ஆறுநாட்டான் குன்று :**

ஆறுநாட்டான் குன்றின் மீதுள்ள குகைகளுள் ஒன்றில் நான்கு வரிகளில் எழுதப்பட்டுள்ள பிராமி கல்வெட்டின் வரிகள்:

**'யாற்றூர் செங்காயபன் உறைய**
**கோ ஆதன் செல்லிரும் பொறை**
**மகன் பெருங்கடுங்கோ மகன்**
**இளங்கடுங்கோ ஆக அறுத்த கல்'**

என்று பொறிக்கப்பட்டுள்ளன. 'கோ அதல் செல் இரும்பொறை' என்னும் பெயரில் உள்ள சில பெயர்ப்பகுதிகள் 'செல்வக் கடுங்கோ வாழி அதன்' என்றும் 7ஆம் பதிற்றுப்பத்துத் தலைவன் பெயரினூடே பொதிந்து கிடைப்பதைக் காணமுடிகிறது. இவர் மகன் பெயர் 'பெருங்கடுங்கோ' பாலை. பாலை பாடிய பெருங்கடுங்கோவையும், இவன் மகன் 'இளங்கடுங்கோ' என்னும் பெயர் மருதம் பாடிய இளங்கடுங்கோவையும் நினைவூட்டுகின்றன. இளங்கடுங்கோ சமணத்துறவிக்கு மலைக்குகையில் படுக்கை அமைத்துக் கொடுத்தான். அவை சிதைந்த நிலையில் உள்ளது. 'பிட்டன்' 'கொற்றன்' என்னும் பெயர்கள் படிக்கக்கூடிய நிலையில் தெளிவாக உள்ளன.

**கல்வெட்டு மூலம் அறிந்த செய்தி:**

சேரன் செங்குட்டுவனின் தமையன் நார்முடிச் சேரல் பாலை பாடிய 'பெருங்கடுங்கோ'. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் காலத்தில் வாழ்ந்த படைத்தலைவன் நன்னன். நன்னனைப் பாடிய பொறையர் 'நன்னன் நன்னாட்டு எழிற்குன்றம்' (நற்றிணை. 391) போன்றவர்களைப் பற்றி அறியமுடிகிறது. புகளூர் கல்வெட்டு மூலம் மூன்று தலைமுறை மன்னர்கள் முறையே





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

பதிற்றுப்பத்தின் 6.7.8 வது பாட்டுடைத் தலைவர்களை அறிய முடிகிறது என்று ஐராவதம் மகாதேவன் ஆய்வு மூலம் அறியமுடிகிறது.

**முடிவுரை :**

புகளூர் கல்வெட்டு மூலம் சேரமன்னர்களின் வாழ்க்கை, பாலை, மருதம் பாடியவர்கள், பதிற்றுப்பத்தில் பாடிய புலவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிய உதவுகிறது.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **'சங்ககாலக் கல்வெட்டுகளும் என் நினைவுகளும்' என்ற ஐராவதம் மகாதேவன் எழுதிய கட்டுரை வெளிவந்த இதழ்**

அ) எழுத்து ஆ) கணையாழி இ) கல்வெட்டு ஈ) தென்றல் **[விடை: ஆ]**

2. **ஐராவதம் மகாதேவன் கல்வெட்டு ஆய்வில் ஈடுபட்ட ஆண்டுகள்**

அ) 20 ஆ) 30 இ) 40 ஈ) 25 **[விடை: ஆ]**

3. **.................. எழுத்துருவை ஆய்ந்து திராவிட எழுத்து என்று ஐராவதம் மகாதேவன் கண்ட முடிவு வரலாற்றில் திருப்பத்தை ஏற்படுத்தியது.**

அ) பிராகிருத ஆ) சிந்துவெளி இ) ஒரிய ஈ) பாரசீக **[விடை: ஆ]**

4. **ஐராவதம் மகாதேவன் பெற்ற விருதுகளையும் ஆண்டுகளையும் பொருத்திக் காட்டுக.**

அ) ஜவகர்லால் நேரு ஆய்வறிஞர் விருது - 1) 2009
ஆ) இந்திய வரலாற்று ஆராய்ச்சி மைய விருது - 2) 1970
இ) தாமரைத்திரு விருது - 3) 1992

அ) 2, 1, 3 ஆ) 3, 1, 2 இ) 2, 3, 1 ஈ) 1, 2, 3 **[விடை: அ]**

5. **ஐராவதம் மகாதேவன் பணிகளில் குறிப்பிடத்தக்கன**

i) பதிற்றுப்பத்தில் இடம் பெற்ற சேர அரசர்களின் பெயர்கள் புகளூர் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளதைக் கண்டுபிடித்தது.
ii) இலக்கியத்தையும் கல்வெட்டாய்வையும் ஒருங்கிணைத்தது
iii) பாறைகளிலிருந்து பழங்கல்வெட்டுகளைப் படியெடுத்து ஆய்வு நூலாக்கியது

அ) i, ii - சரி ஆ) ii, iii - சரி
இ) iii - மட்டும் தவறு ஈ) மூன்றும் சரி **[விடை: ஈ]**

6. **மதுரைக்கு அருகில் உள்ள மாங்குளம் குகைக்கல்வெட்டுகள் யாருடையவை, எந்நூற்றாண்டைச் சார்ந்தவை என்று குறிப்பிடுகிறார் ஐராவதம் மகாதேவன்?**

அ) பாண்டியன் நெடுஞ்செழியன், 2ஆம் நூற்றாண்டு
ஆ) பாண்டியன் அறிவுடைநம்பி, 2ஆம் நூற்றாண்டு
இ) சோழன் நலங்கிள்ளி, 2ஆம் நூற்றாண்டு
ஈ) சோழன் நெடுங்கிள்ளி, முதலாம் நூற்றாண்டு **[விடை: அ]**

7. **1965 நவம்பர் 3ஆம் நாளன்று மதுரை மாங்குளம் குகைக் கல்வெட்டினை ஐராவதம் மகாதேவன் ஆய்ந்ததைப் பற்றிக் கூறும் நூல்**

அ) நூற்றாண்டு மாணிக்கம் ஆ) தமிழக கல்வெட்டியல்
இ) கல்வெட்டு ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

8. **சங்கக் காலத்தை அறிய இலக்கியங்கள் மட்டுமே துணை என்று இருந்த நிலையில் கல்வெட்டுகளும் துணையாக இருப்பதைக் கண்டறிந்த ஆய்வு முன்னோடி**

அ) தி.வை. சதாசிவ பண்டாரத்தார் ஆ) ஐராவதம் மகாதேவன்
இ) வி. கிருஷ்ணமூர்த்தி ஈ) தேனுகா **[விடை: ஆ]**

9. **தமிழ்மொழியை எழுதப் பயன்படுத்தப்பட்ட பழந்தமிழ் வரி வடிவத்தைத் தமிழ்ப் பிராம்மி என்றழைக்காமல் 'தமிழி' என்றோ அல்லது பழந்தமிழ் என்றோ அழைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தவர்**

அ) ஐராவதம் மகாதேவன் ஆ) தி.வை. சதாசிவ பண்டாரத்தார்
இ) வி. கருஷ்ணமூர்த்தி ஈ) கே.வி. சுப்பிரமணியனார் **[விடை: அ]**

10. **'எர்லி தமிழ் எபிகிராபி' என்னும் நூலின் ஆசிரியர்**

அ) ஐராவதம் மகாதேவன் ஆ) ஜி.யு. போப்
இ) ஜார்ஜ் எல். ஹார்ட் ஈ) தி.வை. சதாசிவ பண்டாரத்தார் **[விடை: அ]**

11. **ஆற்றூர் என்னும் இடத்தைச் சேர்ந்த செங்காய்பன் ................. ஆவார்.**

அ) சமணத்துறவி ஆ) பௌத்தத்துறவி இ) அமைச்சர் ஈ) புலவர் **[விடை: அ]**

12. **கரூரை அடுத்த புகளூர் ஆறு நாட்டான் குன்றின் மீது பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் குறிக்கப்பெறும் மன்னர்கள்**

i) கோ ஆதன் செல்லிரும்பொறை ii) பெருங்கடுங்கோன்
iii) இளங்கடுங்கோ iv) இளங்கோ

அ) i - சரி ஆ) ii, iii - சரி இ) i, ii, iii - சரி ஈ) நான்கும் சரி **[விடை: ஈ]**

www.kalvikadal.in

13. **பதிற்றுப்பத்தில் குறிக்கப்பெறும் மன்னர்களில் புகளூர் கல்வெட்டால் அறியப்படுபவர்கள்**

i) 6, 7, 8 ஆவது பாட்டுடைத் தலைவர்கள் என்ற ஐராவதம் மகாதேவனின் கூற்று சரியானது
ii) 7, 8, 9 ஆவது பாட்டுடைத் தலைவர்கள் என்ற ஒரு மாணவரின் கூற்று சரியானது

அ) i - சரி ஆ) ii - சரி
இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு **[விடை: ஆ]**

14. **புகளூர் கல்வெட்டின் காலம் ................. நூற்றாண்டு.**

அ) முதலாம் ஆ) இரண்டாம் இ) மூன்றாம் ஈ) நான்காம் **[விடை: ஆ]**

15. **தமிழ்நாட்டிலுள்ள பிராம்மிக் கல்வெட்டுகளின் ஆராய்ச்சிக்கு அடிகோலியவர்**

அ) கே.வி. சுப்பிரமணியனார் ஆ) ஐராவதம் மகாதேவன்
இ) தி.வை. சதாசிவ பண்டாரத்தார் ஈ) இவர்களில் எவருமில்லை **[விடை: அ]**

## கற்பவை கற்றபின்

பக்கம்: 178

**உங்கள் பகுதியில் உள்ள பழங்காலக் கல்வெட்டுகள் பற்றிய செய்திகளைத் தொகுத்து வகுப்பில் கலந்துரையாடுக.**

**ஆசிரியர்** : இன்று நான் கல்வெட்டுகள் பற்றி உங்களுக்குக் கூறப்போகிறேன்.
**மாணவர்கள்** : எந்தக் கல்வெட்டுகள் பற்றி கூறப்போகிறீர்கள் ஐயா?
**ஆசிரியர்** : கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் சந்திரசவுடேஸ்வரர் கோயில் பற்றி கூற இருக்கிறேன்.
**மாணவர்கள்** : அக்கோவிலில் எத்தனை கல்வெட்டுகள் உள்ளன ஐயா?
**ஆசிரியர்** : அக்கோவிலில் 26 கல்வெட்டுகள் உள்ளன.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

| | | |
|---|---|---|
| மாணவர்கள் | : | மன்னர்கள் பற்றி ஏதேனும் குறிப்புகள் காணப்படுகின்றதா ஐயா? |
| ஆசிரியர் | : | ஆமாம் மாணவர்களே! முதலாம் இராஜேந்திரனின் பெயர்க்குறிப்பு காணப்படுகிறது. |
| மாணவர்கள் | : | அந்தக் கல்வெட்டுகள் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவை ஐயா? |
| ஆசிரியர் | : | காலம் 12 ஆம் நூற்றாண்டு என கணிக்கப்படுகிறது மாணவர்களே! |
| மாணவர்கள் | : | அக்கல்வெட்டின் பற்றி வேறு ஏதேனும் செய்திகளைக் கூறமுடியுமா ஐயா? |
| ஆசிரியர் | : | அக்கல்வெட்டுகள் பராமரிப்பு இன்றி அழிவுப் பாதையில் செல்கிறது. |
| மாணவர்கள் | : | நன்றி ஐயா! |

*******

# இயல் 7

## இலக்கணம்

# தொன்மம்

## இலக்கணத் தேர்ச்சி கொள்

பக்கம்: 182

**1. பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தாத ஒன்றைத் தேர்க.**

அ) கர்ணன் தோற்றான் போ. ஆ) வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி

இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு ஈ) இந்தா போறான் தருமன் **[விடை: ஆ]**

www.kalvikadal.in

**2. தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க.**

அ) உருவாக்கப்பட்டு இறுகிவிட்ட வடிவங்கள்

ஆ) பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது.

இ) நம்ப முடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்.

ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழியின் மூலம் விளக்குவது. **[விடை: ஈ]**

**3. ‘சாபவிமோசனம்’ ‘அகலிகை’ கவிதைகளில் தொன்மங்களாய் பயன்படுத்தியவர்**

அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன்

இ) ஜெயமோகன் ஈ) எஸ்.இராமகிருஷ்ணன் **[விடை: ஆ]**

**4. பண்புக்குறியீடுகளைக் கதை மாந்தர்களோடு பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ) அறம் | - | 1. கர்ணன் |
| ஆ) வலிமை | - | 2. மனுநீதிச்சோழன் |
| இ) நீதி | - | 3. பீமன் |
| ஈ) வள்ளல் | - | 4. தருமன் |

அ) 3, 2, 1, 4 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 4, 3, 1 ஈ) 4, 3, 1, 2 **[விடை: ஆ]**

## குறுவினா

**5. தொன்மம் விளக்குக.**

- சமய நம்பிக்கைகளையும் சடங்குகளையும் வெளிப்படுத்துகின்றன.
- உவமைக் கதைகளாகவும், மெய்யியல் உருவங்களாகவும் நின்று சமுதாயத்திற்கு வழிகாட்டுகின்றன.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in





- அறிவியல் முறையில் ஆய்வு செய்யவோ புரிந்துகொள்ளவோ முடியாது.
- சமுதாயத்தின் ஆழ்மனத்திலிருந்து வெளிப்படுவனவாக அவற்றினால் ஏற்படும் கட்டமைப்பின் குறியீடுகளாகவும் விளங்குகின்றன.

6. **பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.**
- நம் அன்றாடப் பேச்சில் மரபுத்தொடர்களாகத் தொன்மங்கள் கலந்துள்ளன.
- "கிழித்த கோட்டைத் தாண்டமாட்டான்" – என்பதுஇராமாயணத்தில் பர்ணசாலையை விட்டு சீதை வெளியே வந்தால் தீங்கு வரும் என்பதற்காக இலக்குவன் கோடு கிழித்த நிகழ்விலிருந்து உருவான மரபுத்தொடர்.
- 'மனுநீதிச் சோழன்' – தன் தேர்ச்சக்கரத்தில் இறந்த கன்றுக்காக தன் மகனைத் தேர் ஏற்றிக் கொன்ற சோழன் நீதி தவறாத ஆட்சி.

7. **உள்மனம் ஒரு பாற்கடல்**
**அதைக் கடைந்தால்**
**அமுதம் மட்டுமல்ல**
**ஆலகாலமும் வெளிப்படும் என்பதை**
**நீ அறிவாய் அல்லவா? – இக்கவிதையில் வெளிப்படும் தொன்மம் யாது?**
- தொன்மங்கள் முரண்பட்டவை.
- ஒன்று சேர்ந்திருக்கிற சூழலை விளக்கப் பயன்படுகின்றன.
- இப்பாடலில் பாற்கடல், அமுதம், ஆலகாலம் ஆகிய தொன்மங்கள் வெளிப்படுகின்றன.

## கூடுதல் வினாக்கள்

www.kalvikadal.in

### பலவுள் தெரிக

1. **பொருத்திக் காட்டுக.**

i) பழங்கதை ii) புராணம் iii) புதுக்கதை

அ) i - சரி ஆ) ii - சரி இ) மூன்றும் சரி ஈ) i, ii - சரி **[விடை: ஈ]**

2. **கவிதையில் பழங்கதையைத் துணையாகக் கொண்டு ஒரு கருத்தை விளக்குவது**

அ) படிமம் ஆ) தொன்மம்
இ) குறியீடு ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: ஆ]**

3. **புதுமைப்பித்தன், சாபவிமோசனம், அகலிகை ஆகிய கதைகளை எழுதத் தொன்மாகப் பயன்பட்ட நூல்**

அ) இராமாயணம் ஆ) மகாபாரதம்
இ) சிலப்பதிகாரம் ஈ) மணிமேகலை **[விடை: அ]**

4. **திருவிளையாடற்புராணத்துச் சிவன், நக்கீரனைக் கொண்டு 'விட்டகுறை', 'வெந்தழலால் வேகாது' என்னும் சிறுகதைகளைப் படைத்தவர்**

அ) புதுமைப்பித்தன் ஆ) அழகிரிசாமி
இ) எஸ். ராமகிருஷ்ணன் ஈ) ஜெயகாந்தன் **[விடை: ஆ]**

5. **தொன்மங்களைக் கொண்டு படைக்கப்பட்டவைகளையும், படைப்பாளிகளையும் பொருத்திக் காட்டுக.**

i) புதுமைப்பித்தன் – அரவாணன்
ii) அழகிரிசாமி – பத்மவியூகம்
iii) ஜெயமோகன் – விட்ட குறை





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in


iv) எஸ். இராமகிருஷ்ணன் - அகலிகை

அ) 4, 3, 2, 1 ஆ) 2, 1, 3, 4 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 4, 3, 1 **[விடை: அ]**

6. **தொன்மைக்குச் சான்றாக இளம்பூரணர் உரையில் இடம் பெறுவன**

அ) இராமசரிதம், பாண்டவ சரிதம் ஆ) பெருந்தேவனார் பாரதம், தகடூர் யாத்திரை

இ) பாண்டவ சரிதம், தகடூர் யாத்திரை ஈ) இராம சரிதம், பெருந்தேவனார் பாரதம்

**[விடை: அ]**

7. **தொன்மைக்குச் சான்றாகப் பேராசிரியர் உரையில் இடம் பெறுவன**

அ) இராமசரிதம், பாண்டவ சரிதம் ஆ) பெருந்தேவனார் பாரதம், தகடூர் யாத்திரை

இ) பாண்டவ சரிதம், தகடூர் யாத்திரை ஈ) இராம சரிதம், பெருந்தேவனார் பாரதம்

**[விடை: ஆ]**

8. **'வெல்வேல் கவுரியர் தொன்முதுகோடி' என்ற அகநானூற்றுப் பாடலில் அமைந்துள்ள தொன்மம் உணர்த்துவது**

அ) காதல் வெற்றி ஆ) காதல் தோல்வி

இ) தலைவன் மரணம் ஈ) தலைவி வருத்தம் **[விடை: அ]**

9. **"முருகு உறழ் முன்பொரு**
**கடுஞ்சினம் செருக்கிப் பொருத யானை"**
**என்ற நற்றிணை பாடல்களில் வெளிப்படும் தொன்மம் உணர்த்தும் செய்தி**

அ) காதல் வெற்றி ஆ) யானையின் போர் - முருகனின் வீரம்

இ) பெண்ணியம் போற்றுவது ஈ) கொடையாற்றலின் சிறப்பு **[விடை: ஆ]**

www.kalvikadal.in

10. **மதுரை எரிக்கக் கண்ணகியாயும்**
**மீண்டும் எழுந்திடச் சீதையாயும்**
**எப்பவும் எரிதழல் மடிசுமப்பது இனி**
**எங்கள் வேலையல்ல - என்னும் கவிதையில் அமைந்துள்ள தொன்மம்**

i) இக்காலப் பெண்ணியத்திற்கான தொன்மமாகக் கண்ணகி

ii) பெண்ணியப் போராட்டத்திற்கான தொன்மமாக மதுரை

அ) i - சரி ஆ) ii - சரி

இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு **[விடை: இ]**

11. **கிரேக்கத் தொன்மங்களுக்கும் இந்தியத் தொன்மங்களுக்கும் உள்ள ஒப்புமைகளைப் பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| i) | இந்திரன் | - | சோல் |
| ii) | வருணன் | - | மார்ஸ் |
| iii) | பலராமன் | - | டயானிசிஸ் |
| iv) | கார்த்திகேயன் | - | ஊரனாஸ் |
| v) | சூரியன் | - | சீயஸ்பிடர் |

அ) 5, 4, 3, 2, 1 ஆ) 4, 3, 5, 1, 2 இ) 5, 1, 2, 3, 4 ஈ) 2, 1, 3, 4, 5 **[விடை: அ]**

12. **கிரேக்கத் தொன்மங்களுக்கும் இந்தியத் தொன்மங்களுக்கும் உள்ள ஒப்புமைகளைப் பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| i) | சந்திரன் | - | இராஸ் |
| ii) | விஸ்வகர்மன் | - | மினர்வா |
| iii) | கணேசன் | - | ஜீனோ |



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







| | | | |
|---|---|---|---|
| iv) | துர்க்கை | - | ஜோனஸ் |
| v) | சரஸ்வதி | - | வன்கண் |
| vi) | காமன் | - | லூனஸ் |

அ) 6, 5, 4, 3, 2, 1 ஆ) 5, 6, 4, 3, 2, 1 இ) 4, 3, 2, 1, 5, 6 ஈ) 3, 2, 4, 5, 6 **[விடை: அ]**

## குறுவினா

**1. தொன்மத்தை எவ்வாறு வெளிப்படுத்துகின்றனர்?**

- தொன்மத்தை வெளிபடுத்தும் முதன்மையான கருவி கவிதை.
- உலகில் பெரும்பாலான தொன்மங்கள் கவிதை மூலமே வெளிப்படுகின்றன.

**2. திரைப்படங்கள், நாடகங்கள், கதைகளில் தொன்மங்கள் கையாண்டுள்ளவற்றைச் சில சான்றுகள் தருக.**

- இராமாயணத்தின் 'அகலிகை' கதையை வைத்துப் புதுமைப்பித்தனின் சாப விமோசனம்.
- திருவிளையாடற் புராணத்துச் சிவன், நக்கீரனைக் கொண்டு அழகிரிசாமி, 'விட்டகுறை' வெந்தழலால் வேகாது என்னும் சிறுகதை.
- ஜெயமோகனின் - பத்மவியூகம், எஸ். ராமகிருஷ்ணனின் - அரவாணன் போன்ற புதினங்களில் தொன்மங்கள்.

**3. தொன்மம் பற்றி தொல்காப்பியனார் கூறுவன யாவை?**

- தொன்மை தானே சொல்லுங்காலை.
- உரையோடு புணர்ந்த பழமை மேற்றே (தொல் செய்யுளியல் - 228).
- உரையோடு சேர்ந்த பழமையே தொன்மம் என்கிறார் தொல்காப்பியர்.

www.kalvikadal.in

**4. தொன்மம் பற்றி இளம்பூரணரர் கூறுவன யாவை?**

தொன்மையாவது உரையோடு பொருந்திப் போந்த பழமைத்தாகிய பொருள் மேல் வருவன. அவை இராம சரிதமும் பாண்டவசரிதமும் மேல்வருஞ் செய்யுள் என்கிறார் இளம்பூரணர்.

**5. தொன்மம் பற்றி பேராசிரியர் கூறுவன யாது?**

தொன்மை என்பது உரை விராஅய்ப் பழமையனவாகிய கதை பொருளாகச் செய்யப்படுவது. அவை:

**"பெருந்தேவனார் பாரதம்**
**தகடூர் யாத்திரை"** போன்றன என்று உரையாசிரியர் கூறுகிறார்.

## சிறுவினா

**1. சங்க இலக்கியங்கள் காட்டும் முருகனின் தொன்மத்திணை நற்றிணை வாயிலாக விளக்குக.**

- சங்க இலக்கியங்களில் முருகன் பற்றிய கதைப்பகுதிகள் உள்ளன.
- முருகனுக்கு வெறியாடும் சடங்கு முறைகளும் தொன்மங்களாக ஆளப்பட்டுள்ளன.
- முருகனை அழகுக்கும், ஆற்றலுக்கும், வீரத்துக்கும் உவமையாக்கி உள்ளனர்.
- யானை சினங்கொண்டு போர் செய்த சிறப்பினை முருகன் வீரத்தோடு இணைத்துக் கூறியுள்ளனர்.

**"முருகு உறழ் முன்பொடு**
**கடுஞ்சினம் செருக்கிப் பொருத யானை"** (நற்றிணை 225-1-2)

**2. தொன்மங்கள் பற்றி அப்துல் ரகுமானின் கருத்து யாது?**

- தொன்மங்கள் முரண்பட்டவை.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



- ஒன்று சேர்ந்திருக்கிற சூழலை விளக்கப் பயன்படுகின்றன.

**"உன்மனம் ஒரு பாற்கடல்**
**அதைக் கடைந்தால்**
**அமுதம் மட்டுமல்ல**
**ஆலகாலமும் வெளிப்படும்"** – என்பதை நீ அறிவாய் அல்லவா!

இப்பாடலில் பாற்கடல், அமுதம், ஆலகாலம் ஆகியன தொன்மங்களாக வெளிப்படுகின்றன.

**3. பெண்ணியம் பற்றித் தொன்மம் கூறுவன யாவை?**

கண்ணகி கதை தொன்மை நோக்கிய வளர்ச்சியைப் பெற்றது. "பெண்ணியத்திற்கான தொன்மம் – கண்ணகியும், பெண்ணியப் போராட்டத்திற்கான தொன்மம் – மதுரையும்" பின்வரும் கவிதைகளில் பெண்கள் வாழ்க்கை முறை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

**"மதுரை எரிக்கக் கண்ணகியாயும்**
**மீண்டும் எழுந்திடச் சீதையாயும்".**

**4. தொன்மம் பற்றி நீவிர் அறிவன யாவை?**

- தொன்மம் எங்கும் எப்போதும் எல்லா இடத்திலும் வழக்கில் உள்ளது.
- காலத்தைக் கடந்து நிற்பது.
- இக்காலத்தோடு கடந்த காலத்தை இணைப்பது.
- சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை.
- விளக்க தொன்மம் பயன்படுகிறது.
- கருத்தினை ஆழமாக விளக்கும் உத்தியாகவே உள்ளது.

www.kalvikadal.in

## கற்பவை கற்றபின்

பக்கம்: 181

**தொன்மம் என்னும் உத்தியைப் பயன்படுத்திப் புதுக்கவிதையொன்றை எழுதுக.**

- தாண்டிக் கெட்டாள் சீதை
  தாண்டாமல் கெட்டாள் கண்ணகி.
- இரண்டு அடியாவது வாங்கினால்தான்
  திருந்துவாய்.....
  வள்ளுவர் வாக்கு

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 184

### சான்றோர் சித்திரம்

இவரின் தந்தை அரசுப் பணியாளர் என்பதால் பல ஊர்களில் பணியாற்ற வேண்டியிருந்தது. எனவே தற்போதைய ஆந்திர மாநிலம் கர்நூல், சித்தூர் முதலிய ஊர்களில் நான்காம் வகுப்புவரை தெலுங்கு மொழியையே பயின்றார். இளம்வயதில் தந்தையை இழந்து தமையனாரால் வளர்க்கப்பட்டார். பதினைந்து வயதை அடைந்த நிலையில் 'இனி இவன் எங்கே படிக்கப் போகிறான்?' என்று முடிவெடுத்து ஒரு மையல் கடையில் அவரது தமையனாரால் வேலைக்குச் சேர்க்கப்பட்டார். 'நான் பதினைந்து நாட்கள் வேலை கற்றுக்கொண்டேன்; காஜா எடுக்கக் கற்றுக்கொண்டேன். சிறிய பைகளைத் தையல் இயந்திரத்தில் தைக்கக் கற்றுக்கொண்டேன். நாள்தோறும் இரவில் வீடு திரும்புகையில் கடை உரிமையாளர் எனக்குக் காலணா



*மா.இராசமாணிக்கனார்*
*(1907–1967)*



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







கொடுப்பார்' என்று பின்னாளில் பதிவு செய்த அவரால் அத்தொழிலில் தொடர்ந்து ஈடுபட முடியவில்லை.

தஞ்சாவூர் செயின்ட் பீட்டர்ஸ் பள்ளித் தலைமையாசிரியரின் பேருதவியால் தனது பதினைந்தாவது வயதில் ஆறாம் வகுப்பில் சேர்ந்து படிப்பைத் தொடர்ந்தார். மிகுந்த பொருளாதார நெருக்கடியில் கல்வி பயின்ற அவர் தொடர்ந்து ஆறு ஆண்டுகள் பள்ளியிலேயே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றதோடு மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய பள்ளி இறுதித் தமிழ்த் தேர்விலும் முதல் மாணவராகத் தேர்ச்சியடைந்து அனைவரின் பாராட்டையும் பெற்றார். பின்பு முத்தர், பள்ளி ஆசிரியர், பல்கலைக்கழக ஆசிரியர் என வளர்ந்தார். அவர்தான் இலக்கியம், சமயம், வரலாறு, கல்வெட்டு போன்ற துறைகளில் மிளிர்ந்த தமிழறிஞர் மா.இராமாணிக்கனார்.

ஆய்வு நெறி முறைகளிலும் அணுகுமுறைகளிலும் புதிய சிந்தனைகளைக் கையாண்ட இவர், சங்ககாலம் தொடங்கிப் பிற்காலம் வரையில் ஆண்ட சோழர் வரலாற்றை முழுமையாக ஆராய்ந்தவர்; சிந்துவெளி நாகரிகம் பற்றித் தமிழில் முதன்முதலில் 'மொஹெஞ்சொ-தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்' என்ற நூலை இயற்றியவர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர்களான வே.உமாமகேசுவரன், ந.மு. வேங்கடசாமி, ஆகியோராலும் உ.வே. சாமிநாதர் போன்ற தமிழறிஞர்களாலும் நெறிப்படுத்தப்பட்ட இவர் சோழர் வரலாறு, பல்லவர் வரலாறு, பெரியபுராண ஆராய்ச்சி, தமிழ்நாட்டு வட எல்லை, பத்துப்பாட்டு ஆராய்ச்சி போன்ற நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றிய பெருமைக்கழியவராகத் திகழ்ந்தார். 2006-2007ஆம் ஆண்டு இவருடைய நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

**அவருடைய சொல்லாற்றலுக்கொரு சான்று:**

"அடுத்த ஆண்டு புதிய தமிழகம் உருவாகிச் செயலாற்றவிருக்கும் நிலையில் அப்புதிய தமிழகம் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்று எண்ணுவதும் புதிய தமிழகத்தில் செய்ய வேண்டுவன எவை என்பதைக் கூறத் தமிழன் விரும்புதலும் இயல்புதானே! முதலில் புதிய தமிழகம் எதனை வட எல்லையாகப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதைக் காய்தல் உவத்தலின்றிக் காண வேண்டும்.'' (மா.இராசமாணிக்கனார் எழுதிய புதிய தமிழகம் நூலில் இருந்து)

**வினாக்கள்**

1. **இராசமாணிக்கனாரின் பன்முகத்தன்மை பற்றிக் கூறுக.**
2. **இவருடைய நூல்கள் எந்த ஆண்டு தமிழக அரசால் நாட்டுடமையாக்கப்பட்டன?**
3. **பிரித்தறிக: பேருதவி**
4. **உறுப்பிலக்கணம் தருக : இழந்து**
5. **இலக்கணக் குறிப்பு வரைக: காய்தல்**

**விடைகள்**

1. இலக்கியம், சமயம், வரலாறு, கல்வெட்டு போன்றவை.
2. 2006 - 2007 ஆம் ஆண்டு.
3. பேருதவி - பெருமை + உதவி.
4. 

| | |
|---|---|
| இழந்து | - இழ + த்(ந்) + த் + உ |
| இழ | - பகுதி |
| த் | - சந்தி (ந் ஆனது விகாரம்) |
| த் | - இறந்தகால இடைநிலை |
| உ | - வினையெச்ச விகுதி |

5. காய்தல் - தொழிற்பெயர்





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## தமிழாக்கம் தருக.

A White woman, about 50 years old, was seated next to a black man. Obviously disturbed by this, she called the airhostess. "Madam, what is the matter?" the hostess asked. "You placed me next to a black man. Give me an alternative seat". The hostess replied. "Almost all the places on this flight are taken. I will go to see if another place is available. The hostess went away and came back a few minutes later. "Madam, just as I thought, there are no other available seats in the economy class. We still have one place in the first class".

Before the woman could say anything, the hostess continued. "It would be scandalous to make someone sit next to someone so disgusting". She turned to the black guy and said, " Sir, a seat awaits you in the first class". At the moment, the other passengers who were shocked by what they had just witnessed stood up and applauded. Take a lesson from the sun who shines his light on everyone. Or the rain that falls on every single shore. No distinction of our race or the colour of our face. Nature's gifts are there for all men rich or poor. (Courtesy: S.S.S. Bal Vikas)

**தமிழாக்கம்:**

ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு வெள்ளைக்கார பெண்மணி ஒரு கருப்பு நிற (நீக்ரோ) மனிதன் அருகே அமர்ந்திருந்தாள். இதனால் வெறுப்புற்ற அவள், விமான பணிப்பெண்ணை அழைத்து, தமக்கு வேறு இருக்கை வேண்டும் என முறையிட்டாள். ஏறக்குறைய எல்லா இருக்கைகளும் நிரம்பிவிட்டன. வேறு ஏதேனும் உள்ளனவா என பார்க்கிறேன் என்று பணிப்பெண் பதிலளித்தாள். சற்று தூரம் சென்ற பணிப்பெண் ஒருசில வினாடிகளில் திரும்பி வந்து இரண்டாம் வகுப்பில் இருக்கைகள் இல்லை. ஆனால் முதல் வகுப்பில் ஒரு இடம் உள்ளது என்றாள். அந்தப் பெண் வாய் திறக்குமுன், விமான பணிப்பெண் தொடர்ந்தாள்.

www.kalvikadal.in

"பக்கத்தில் அமர்ந்து பயணிப்பது வெறுப்பாக உள்ளது என்பதை நானும் வெறுக்கிறேன்'' என்று கூறிவிட்டு அந்தக் கருப்பின இளைஞனை நோக்கி, "ஐயா, உங்களுக்கு முதல் வகுப்பில் ஒரு இருக்கை காத்திருக்கிறது'' என்று அவனை அழைத்தாள். இதனைக் கண்ட மற்ற பயணிகள் எழுந்து நின்று அவளின் செயலைக் கண்டு கைதட்டி பாராட்டினார்கள். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்னவென்றால், சூரியன், பேதமின்றி அனைவழக்கும் ஒளி வீசுகிறது. மழை எல்லா இடங்களிலும் பொழிகிறது. இயற்கையே இவ்வாறு பேதமின்றி தனது கொடைகளை வழங்கும் போது, இனத்தையும், நிறத்தையும் மற்றும் முகத்தையும் பார்த்து சக மனிதனை நாம் வெறுக்கலாமா?

## கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து நாளிதழ்ச் செய்தியாக மாற்றுக.




### புத்தகக் கண்காட்சி

- நமது சிறப்பு நிருபர் -

42வது சென்னைப் புத்தகக் காட்சி நந்தனம் ஒய்எம்சிஏ உடற்கல்வியியல் கல்லூரி வளாகத்தில் 2019 ஜனவரி 4 முதல் நடைபெற உள்ளது. அனைத்து வயதினரும் கொண்டாடும் ஆனந்தத் திருவிழா. 800 அரங்குகள், 20,00,000. வாசகர்கள். 30,00,000, பார்வையாளர்கள் பங்குபெறும் அறிவித்திழவிழா. நுழைவுக் கட்டணம் ரூபாய் 10/- மட்டுமே. நீங்கள் வாங்கும் புத்தகத்திற்கு 10% கழிவு உண்டு. வாருங்கள் புத்தகங்களை வாசிப்போம்! வாழ்க்கையை நேசிப்போம்...!!

விழா ஏற்பாடு: தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

**ஆற அமர** : ஒரு பிரச்சினையில் தெளிவான நல்ல முடிவெடுக்க வேண்டுமென்றால் முதலில் உணர்ச்சிவசப்படாமல் 'ஆர அமர' யோசித்து முடிவெடுக்க வேண்டும்.

**ஆணி அடித்தாற் போல** : எங்கள் தமிழாசிரியை நடத்திய குறியீட்டு இலக்கணம் என் மனதில் 'ஆணி அடித்தாற் போல' பதிந்தது.

**அகலக்கால்** : பின்வரும் விளைவுகளை யோசிக்காமல் 'அகலக்கால்' வைத்தால் துன்பம் நேரிடும்.

**வழிவழியாக** : சோழமன்னர்களின் ஆட்சி வழிவழியாக அவருடைய வாரிசுகளே ஆண்டு வந்துள்ளனர்.

**கண் துடைப்பு** : எனக்கும் என் தம்பிக்கும் சண்டை வரும்போதெல்லாம் தம்பியை அரவணைத்தும், என்னை அடித்தும் ஒரு கண்துடைப்பு நடத்துவார்.

## உங்கள் கனவு ஆசிரியர் குறித்துக் கட்டுரை எழுதுக.

**"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்."**

இறைவனுக்கு வணங்காத தலையும், ஆசிரியரை வணங்காத கையும் இருந்ததென்ன பயன். அதுபோல உலக மக்கள் உய்ய வள்ளுவன் போல ஆசிரியராக விளங்கிட வேண்டும்.

**"பாதகம் செய்பவரைக் கண்டால் நீ பயம் கொள்ளல் ஆகாது பாப்பா,**
**மோதி மிதித்துவிடு பாப்பா, அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா",**

என்று பாப்பா பாட்டின் மூலம் படிப்பினைப் பதிப்பித்த பாரதி போல் ஆசானாக வேண்டும்.

**"இருட்டறையில் உள்ளதடா உலகம் ஜாதி**
**இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே",**

என்று சமூக அவலத்தைத் தோலுரித்துக் காட்டிய புரட்சிக் கவி போல ஆசானாக மிளிர வேண்டும்.

**"பெண்ணுக்கு மட்டுமல்ல ஆணுக்கும் வேண்டும் கற்பு"**

என்று அறிவுறுத்திய பெரியரைப் போல சமூக நீதி கற்பிக்கும் ஆசானாக வேண்டும்.

**"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண வேண்டும்"**

என்று முழங்கிய பேரறிஞர் போல் ஆசானாக வேண்டும்.

**"மாடா உழைச்சவன் வாழ்க்கையிலே பசி வந்திடக் காரணம் என்ன மச்சான்?**
**அவன் தேடிய செல்வம் வேறு இடத்தினில் சேர்வதினால் வரும் தொல்லையடி"**

என்று பாமர மக்களுக்குப் பாடம் புகட்டிய பட்டுக்கோட்டையார் போல் ஆசானாக வேண்டும்.

**"உங்கள் வாழ்க்கையின் கடைசித் தருணம் எப்படி இருக்க வேண்டும்? என்று கேட்டதற்கு நான் மாணவர் மத்தியில் பாடம் நடத்திக் கொண்டிக்கும் போது அத்தருணம் வாய்க்க வேண்டும்" என்றாராம் கலாம்.**

அவர்க்கு மட்டுமே அத்தருணம் வாய்த்தது. அத்தகைய ஆசான் போல் ஆக வேண்டும். மானுடன் வாழ நல்ல போதனைகளைத் தந்திட்ட இச்சான்றோர்களே என் கன(வு)வின் ஆசிரிய பிரம்மாக்கள் ஆவர்.


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in







## இலக்கிய நயம் பாராட்டுக.

பூமிச்சருகாம் பாலையை
　முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே - கோடிப்
　புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை - செலுத்தி
　இரவலரோடு பேசுவேன்!
இரவெரிக்கும் பரிதியை - ஏழை விறகெரிக்க வீசுவேன்　　- *நா. காமராசன்*

**ஆசிரியர் குறிப்பு :**

| | | |
|---|---|---|
| பெயர் | : | நா. காமராசன். |
| பிறப்பு | : | 1942 - தேனி மாவட்டம், போ. மீனாட்சிபுரம். |
| இறப்பு | : | மே 24. 2017, சென்னை. |
| பணி | : | கவிஞர், பாடலாசிரியர். |
| சிறப்பு | : | புதுக்கவிதை உலகுக்கு ஒரு புதுப்பாதை அமைத்தவர், பேராசிரியர், மொழிபெயர்ப்புத் துறை. |

**திரண்டக் கருத்து :**

பாலைவனம் போல் காட்சியளிக்கும் பூமியை முத்து பூத்த கடல் போல் ஆக்குவேன். புயலைக் கூறுபடுத்தி தென்றல் ஆக்குவேன். இரவில் விண்மீனைப் பயன்படுத்தி இல்லாதவரோடு பேசுவேன். சுட்டெரிக்கும் சூரியனை வீட்டுக்கு விறகெரிக்கப் பயன்படுத்துவேன்.

**மோனை நயம் :** www.kalvikadal.in

**காட்டுக்கு யானை**
**பாட்டுக்கு மோனை**

முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை

**சான்று:**

பூமிச்சருகாம்
புயலை
புதிய
இரவில்
இரவலரோடு
இரவெரிக்கும்

**எதுகை நயம்:**

**மதுரைக்கு வைகை**
**செய்யுளுக்கு எதுகை**

முதல் எழுத்து அளவொத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.

**சான்று:**

இரவில்
இரவலரோடு
இரவெரிக்கும்





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**இயைபு :**

இறுதி எழுத்தோ ஓசையோ ஒன்றி வருவது இயைபு.

**சான்று:**

கடல்களாக்குவேன்
தென்றலாக்குவேன்
பேசுவேன்
வீசுவேன்

**கற்பனை நயம் :**

கற்பனை விற்பனை அல்ல. கவிஞர் தம் கற்பனையை விற்பனை செய்யாமல் தம் கவிதையிலேயே பயன்படுத்தியுள்ளார்.

**புயலைக் கூறுபடுத்தியே - கோடி**
**புதிய தென்றலாக்கு வேன்.**

**அணி நயம் :**

**குளத்துக்குத் தாமரை அழகு**
**கண்ணுக்கு மை அழகு**
**செய்யுளுக்கு அணி அழகு**

அணி என்பதன் பொருள் அழகு ஆகும். இப்பாடலில் இயல்பு நவிற்சி அணி அமைந்துள்ளது.

## தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

1. **வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.**
   வாழைத்**தோப்பில்** குயில்கள் **கூவிக்**கொண்டும் காகங்கள் **கரைந்து** கொண்டும் இருந்தன.
2. **முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.**
   முருகன் சோறு **உண்டு** பால் **பருகினான்.**
3. **கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்.**
   கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை **வேய்ந்தான்**.
4. **வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக்குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.**
   வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் **குருளையும்**, யானைக் குட்டியும் கண்டேன்.
5. **ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.**
   ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் **வளைகள்** அமைத்திருந்தன.
6. **பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.**
   பனை **ஓலையால்** கூரை வேய்ந்திருந்தனர்.

## பத்தியைப் படித்து தேவையான இடங்களில் நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக.

இளங்கோ அடிகள் சாத்தனாரிடம் முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்.

"இளங்கோ அடிகள் சாத்தனாரிடம்" முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே! அவர்களுடைய முந்தைய வினை யாது? அதன் விளைவு என்ன? நிகழ்ந்த காலம் யாது? அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in



## கீழ்க்காணும் விண்ணப்பத்தை நிரப்புக.

விண்ணப்ப எண்: 004352 மைய எண்: 0 0 8

### திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

**தொலைநிலைக் கல்வி இயக்ககம்**

இளநிலை/முதுநிலை/பட்டயம்/சான்றிதழ்/முதுநிலைப்பட்டயம்/
அடிப்படைப்படிப்பு/அறிமுகநிலைப்படிப்பு/தொழில்முறை மற்றும் இதர
படிப்புக்கான விண்ணப்பம்

கடவுச்சீட்டு (PASSPORT) அளவு புகைப்படம் ஒட்டவும்

அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்.

கல்வியாண்டு 2019 2020 — க
நாள்காட்டி ஆண்டு 2019 2020 — நா

(கற்போர் தாங்களே விண்ணப்பத்தினை நிறைவு செய்தல் வேண்டும். அனைத்து விவரங்களும் கட்டாயம் அளிக்கப்பட வேண்டும்.)

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பம் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய இறுதி நாள்..............................

விண்ணப்பிக்க விரும்பும் பாடப்பிரிவு: இளநிலை | முதுநிலை | பட்டயம் | சான்றிதழ் | முதுநிலைப் பட்டயம் | அடிப்படை நிலை | அறிமுக நிலை

பாடப்பிரிவு: **இளநிலை**

கட்டணம் செலுத்திய விவரம் : வரைவோலை | வங்கிச் செலுத்துச்சீட்டு | நிதிப்பிரிவு இரசீது | கணினி இரசீது

எண்: | நாள்: | தொகை:

1. பெயர் (தமிழில்) சு ப் பு ர த் தி ன ம் . க
   (ஆங்கிலத்தில்) S U B B R A T H I N A M . K
2. முகவரி 2 / 2 2 மு த ன் மை ச் சா லை
   ப ட் டீ ஸ் வ ர ம்
   கு ம் ப கோ ண ம் வ ட் ட ம்
   த ஞ் சை மா வ ட் ட ம்
   அஞ்சல் எண் 6 1 2 1 0 0
3. தொலைபேசி எண் 0 4 3 2 5 2 4 6 1 6 0 0
   கைபேசி எண் 9 4 4 5 2 7 2 8 2 2
   மின்அஞ்சல் முகவரி
4. பிறந்த நாள் 0 8 | 0 9 | 2 0 0 0
5. பாலினம் ஆ | பெ | மூன்றாம் பாலினம்
6. தேசியம் **இந்தியா, தமிழ்நாடு**

| | | | |
|---|---|---|---|
| 1. நகர்ப்புறம் | ☐ | 2. கிராமப்புறம் | ☑ |
| 3. பணிபுரிபவர் | ☐ | 4. பணியில் இல்லாதவர் | ☑ |
| 5. திருமணமானவர் | ☐ | 6. திருமணமாகாதவர் | ☑ |
| 7. மாற்றுத்திறனாளி | ☐ | | ☐ |
| 8. அரசு ஊழியர் | ☐ | 9. முன்னாள் மாணவர் | ☐ |

7. தந்தை/காப்பாளர்/கணவர் பெயர்: க ன க ச பை
8. கல்வித் தகுதி தேர்ச்சிப் பெற்ற விவரம்:

| பத்தாம்/மேனிலைப்பள்ளி வகுப்பு | பதிவு எண் | தேர்ச்சி பெற்ற நாள் | அனைத்துப் பாடங்களிலும் பெற்ற மதிப்பெண் | | பயின்ற பள்ளி |
|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | பெற்றது | |
| பன்னிரெண்டாம் வகுப்பு | 827112 | மார்ச் 2018 | தமிழ் (100) | 067 | |
| | | | ஆங்கிலம் (100) | 052 | |
| | | | கணிதம் (200) | 111 | |
| | | | இயற்பியல் (200) | 122 | |
| | | | வேதியியல் (200) | 164 | |
| | | | கணிணியியல்(200) | 170 | |
| | | | | | |

| இளநிலைப் பாடம் | பதிவு எண் | தேர்ச்சி பெற்ற நாள் | அனைத்துப் பாடங்களிலும் பெற்ற மதிப்பெண் | | பயின்ற கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் |
|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | பெற்றது | |
| | | | | | |

**உறுதிமொழி**

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவை என்றும், ஏதேனும் தவறு இருப்பின் பல்கலைக்கழக நடவடிக்கைகளுக்கு உட்படுவேன் என்றும் இதன்வழி உறுதி கூறுகின்றேன்.

இடம்: பட்டீஸ்வரம்
நாள்: 06.06.2019

சுப்புரத்தினம். க
**கனகசுப்புரத்தினம்**
விண்ணப்பதாரரின் கையொப்பம்

குறிப்பு:
விண்ணப்பப் படிவத்துடன் கீழ்க்காணும் சான்றிதழ்களின் சான்றொப்பமிடப்பட்ட படிகள் இணைக்கப்பெற வேண்டும்.
1. மதிப்பெண் பட்டியல் (10ஆம் வகுப்பு/10+2/10+3/11+1+3/இளநிலை வரிசையில்), 2. மாற்றுச் சான்றிதழ்
3. தற்காலிகச் சான்றிதழ் (Provisional Certificate)அல்லது பட்டச் சான்றிதழ் (Degree Certificate)





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## மொழியோடு விளையாடு



| படித்துப் பார்த்துப் படைக்க | படித்துப் பார்த்துப் படைத்தது |
|---|---|
| மென்பறவைக் கூடு மின்றி<br>தின்பதற்குத் தீனியின்றி<br>தன் சிறிய குஞ்சுகளை<br>பொன் சிறகில் மூடி நின்று<br>நிற்கதியாம் நிலைதனிலே<br>நிற்க ஒரு நிழல் தேடி<br>பற்பலவாய் எண்ணமிட்டு<br>பக்கம் ஒரு மரம் கண்டு<br>தருவின் நிழல் கண்டு<br>தானியத்தின் மணி கண்டு<br>அருகில் தன் குஞ்சுகளை<br>அணைத்தங்கு சென்றதுவே<br>நெருங்கி வந்து பார்க்கையிலே<br>நிழலில்லை மணியில்லை<br>நெருஞ்சி முள்ளை நெல்மணியாய்<br>நினைத்து விட்ட பரிதாபம்<br>பச்சையற்ற மரத்தருகே<br>படர்வதுண்டோ நிழலதுவும்<br>பசையற்ற நெஞ்சினுள்ளே<br>பாசமெனும் நிழலுண்டோ? **- பூரணி** | உடலைக் கூடாக்கி<br>உள்ளத்தைக் கல்லாக்கி<br>உண்பதற்கு உணவின்றி<br>தன் சந்ததியை<br>தானே இறகில் சுமந்து<br>அமர இடமில்லாமல் அலைகிறது.<br><br>தான் நொந்து<br>தன் பிள்ளையைக் கண்டு<br>மனம் நொந்து<br>மரம்தரும் கனியைத்<br>தேடி அலைகிறது.<br><br>மரங்கண்டு மனமகிழ்ந்து<br>சென்றால் மரம்<br>கானல் நீர்போல்<br>காட்சியளிக்கிறது.<br>நெருஞ்சி முட்கள்<br>பச்சையற்ற மரத்தினருகே<br>இச்சையற்று இனிமேல்<br>உயிர்வாழ்வேன் என மாய்ந்தது. |

www.kalvikadal.in

### எண்ணங்களை எழுத்தாக்குக.



பாரதி கண்ட புதுமைப் பெண்கள் நாங்கள்
வீட்டினில் அடைத்து வைக்கும் கிளிகளல்ல நாங்கள்
பிள்ளை பெறும் இயந்திரங்கள் அல்ல நாங்கள்
விண்ணில் பயணம் செய்திடுவோம்
விந்தைகள் பல புரிந்திடுவோம்
ஆடல் மட்டும் ஆடும் பெண்களல்ல
விளையாட்டுக்களில் விவேகம் காட்டும் வீராங்கனைகள்
கணிதம் அறியா மக்குகளல்ல நாங்கள்
கணினியிலும் விற்பன்னர்கள் நாங்கள்
நிதியிலும் நீதியிலும் மேலாண்மை பெறுவோம் - நாங்கள்
வீராங்கனைகளாகப் பாதுகாப்புக்கும் வலம் வரும்
காவல் தெய்வங்கள் நாங்கள்
விமானிகளாகி விண்ணகத்தில் உலா வருவோம்
ஆட்சியராகி அகிலத்தில் நல்லாட்சி தருவோம்
ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே அல்ல
தீமைகள் அழிவதும் பெண்ணாலே என திருத்துவோம்
மாதராய்ப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டும்
என்று பாடிய கவிமணியை வணங்கி முடிக்கிறோம்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





## செய்து கற்போம்

**உங்கள் பகுதியில் உள்ள தொழிலாளர்கள் பற்றிய நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்து வகுப்பறையில் பகிர்ந்துக் கொள்க.**

மழையை நம்பி ஏலேலோ மண் இருக்க ஐலசா
மண்ணை நம்பி ஏலேலோ மரம் இருக்க ஐலசா
மரத்தை நம்பி ஏலேலோ கிளை இருக்க ஐலசா
கிளையை நம்பி ஏலேலோ இலை இருக்க ஐலசா

இலையை நம்பி ஏலேலோ பூவிருக்க ஐலசா
பூவை நம்பி ஏலேலோ பிஞ்சிருக்க ஐலசா
பிஞ்சை நம்பி ஏலேலோ காயிருக்க ஐலசா
காயை நம்பி ஏலேலோ பழம் இருக்க ஐலசா
பழத்தை நம்பி ஏலேலோ மகன் இருக்க ஐலசா

## நிற்க அதற்குத் தக

**பொதுச்சொத்துக்களைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் நீவிர் செய்ய வேண்டிய பணிகளைப் பட்டியலிடுக.**

(நம்முடைய வீட்டின்மீது நமக்கு இருக்கும் பொறுப்பினைப் போலவே பொதுச்சொத்துக்களின் மீதும் நமக்குப் பொறுப்பும் கடமையும் உண்டு. எவையெல்லாம் பொதுச்சொத்துகள் எனப் பட்டியலிட்டு அவற்றைப் பாதுகாக்கும் வழிமுறைகளைக் கூறுக.

www.kalvikadal.in

| பொதுச் சொத்துகள் | | அவற்றைப் பாதுகாக்கும் முறைகள் |
|---|---|---|
| அரசுப் பேருந்து | : | ◆ அமரும் இருக்கையை இழுத்தல் கூடாது.<br>◆ கண்ணாடி ஜன்னலை மெதுவாக ஏற்றி இறக்கவும்.<br>◆ தின்பண்டம் தின்று விட்டு உதிரிகளைக் கீழே போடக் கூடாது. |
| வழிபாட்டுத்தலங்கள் | : | ◆ கை, கால் சுத்தம் செய்த பின்னர் ஆலயத்திற்குள் நுழைதல்.<br>◆ விபூதி, குங்குமம் சுவர்களில் தடவக்கூடாது.<br>◆ விளக்கு வழிபாடு, உரிய இடத்தில் விளக்கேற்றவும்.<br>◆ காகிதம், இலை, பழத்தோல் வளாகத்தில் போடக்கூடாது. |
| பள்ளிக்கூடங்கள் | : | ◆ வகுப்பறையில் காகிதங்கள் கிழித்துப் போடக் கூடாது.<br>◆ வகுப்பறையின் உள்ளே உணவு அருந்தக் கூடாது.<br>◆ மேசைகள் மீதும், சுவர்களின் மீதும் கிறுக்க, எழுதக் கூடாது.<br>◆ கழிவறைகளிலும் தூய்மை பேண வேண்டும். |
| மருத்துவமனைகள் | : | ◆ பரிசோதனைக்காக வரிசையில் நிற்க வேண்டும்.<br>◆ பரிசோதனை, சிகிச்சையின் போது பேசுவதைத் தவிர்க்கவும்.<br>◆ மருத்துவமனை உள்ளே எச்சில் மற்றும் அசுத்தம் செய்யக் கூடாது.<br>◆ பார்வையாளராகச்சென்றுநோயாளியாரையும்தொந்தரவுசெய்யக்கூடாது. |

## படிப்போம் பயன்படுத்துவோம் (வங்கி)

| | | | |
|---|---|---|---|
| *Debit Card* | – பற்று அட்டை | *Demand Draft* | – கேட்பு வரைவோலை |
| *Withdrawal Slip* | – திரும்பப் பெறல் படிவம் | *Teller* | – விரைவுக் காசாளர் |
| *Mobile Banking* | – அலைபேசி வழி வங்கி முறை | *Internet Banking* | – இணையவங்கி முறை |





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

# இயல் 7 மாதிரி வினாத்தாள் - 7

வகுப்பு : 12
நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

**I. பலவுள் தெரிக. 6 × 1 = 6**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1. **முச்சந்தி இலக்கியம் என்பது**
கூற்று 1 : கதை வடிவிலான வடிவம் உடையது
கூற்று 2 : சிந்து, கும்மி போன்ற நாட்டுப்புற யாப்பு வடிவம் உடையது.
அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1, 2 சரி
இ) கூற்று 1, 2 தவறு ஈ) கூற்று 1, கூற்று 2 சரி

2. **'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்' - விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்**
அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்
இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

3. **அதிசிய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது**
அ) கடந்தகாலத் துயரங்களை ஆ) ஆட்கற்ற பொழுதை
இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்

4. **உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரில் பெயரெச்சம்.**
அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில்

5. **யானை புக்க புலம்போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்**
அ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது
ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது
இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது
ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

www.kalvikadal.in

6. **பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.**
அ) கர்ணன் தோற்றான் போ
ஆ) வயதில் சிறியவன், ஆனாலும் ஔவையார்
இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு
ஈ) இந்தா போறான் தருமன்

**II. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 8 × 1 = 8**

7. **தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க.**
அ) உருவாக்கப்பட்டு இறுகிவிட்ட வடிவங்கள்
ஆ) பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது
இ) நம்பமுடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்
ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழிகள் மூலம் விளக்குவது

8. **சாபவிமோசனம், அகலிகை கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்**
அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன் இ) ஜெயமோகன் ஈ) எஸ்.இராமகிருஷ்ணன்

9. **பண்புத் குறியீடுகளைக் கதைமாந்தர்களோடு பொருத்துக.**
அ) அறம் - 1. கர்ணன்
ஆ) வலிமை - 2. மனுநீதிச்சோழன்
இ) நீதி - 3. பீமன்
ஈ) வள்ளல் - 4. தருமன்
அ) 3, 2, 1, 4 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 4, 3, 1 ஈ) 4, 3, 1, 2

10. **இலக்கணக்குறிப்பு தருக:** 'புக்க'
அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம் இ) பண்புத்தொகை ஈ) உரிச்சொல்தொடர்





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



11. **அவ்வைக்கு நெல்லிக்கனியை தந்தவன்**
அ) பேகன் ஆ) அதியன் இ) வாரி ஈ) ஓரி
12. **சங்ககாலக் கல்வெட்டுகளும் என் நினைவுகளும் என்ற ஐராவதம் மகாதேவன் எழுதிய கட்டுரை வெளிவந்த இதழ்**
அ) எழுத்து ஆ) கணையாழி இ) கல்வெட்டு ஈ) தென்றல்
13. **முள்ளும் மலரும் நூலின் ஆசிரியர்**
அ) கே. பாலசந்தர் ஆ) இன்குலாப் இ) உமா சந்திரன் ஈ) செந்தீ நடராசன்
14. **Stamp pad என்பதன் தமிழ்ச்சொல்**
அ) கோப்பு ஆ) அழிப்பான் இ) மை பொதி ஈ) மடிப்புத்தாள்

**III. குறுவினா.** **3 × 2 = 6**

**அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

15. எந்தவொரு பொருளைப் பயன்படுத்தும்போதும் அதற்குப் பின்னால் உள்ள மனிதர்களின் உழைப்பை நாம் சிந்திப்பதில்லை. ஒரு தேநீரைப் பருகும்போது அதற்குப் பின்னால் உள்ள மனித உழைப்பைச் சிந்தித்து உங்கள் கருத்தை எழுதுக.
16. அறிவுடை வேந்தனின்நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?
17. செவியறிவுறூஉ துறையை விளக்குக.
18. தொன்மம் - விளக்கம் தருக.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 2 = 4**

19. பருவத்தே பயிர் செய் - நேர மேலாலண்மையோடு பொருத்தி எழுதுக.
20. பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.
21. உன்மனம் ஒரு பாற்கடல்
அதைக் கடைந்தால்
அமுதம் மட்டுமல்ல
ஆலகாலமும் வெளிப்படும் என்பதை
நீ அறிவாய் அல்லவா? - இக்கவிதையில் வெளிப்படும் தொன்மம் யாது?

www.kalvikadal.in

**IV. எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 × 2 = 14**

22. **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
அ) அறிந்து ஆ) அறுத்து
23. **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**
அ) தானும் ஆ) பெருமழை
24. **மரபுப்பிழையை நீக்கி எழுதுக.**
அ) மாம்பிஞ்சி ஆ) பலாக்காய்
25. **இலக்கணக்குறிப்பு தருக:** 'காய்நெல்'
26. **கதை மாந்தரோடு பொருத்துக.**
எர்லி தமிழ் எபிகிராமி என்னும் நூலின் ஆசிரியர்
அ) ஐராவதம் மகாதேவன் ஆ) ஜி.யு. போப்
இ) ஜார்ஜ் எல். ஹார்ட் ஈ) தி.வை. சதாசிவ பண்டாரத்தார்
27. **மரபுச்சொற்களை தொடரில் அமைத்து எழுதுக.**
அ) ஆற அமர ஆ) வழிவழியாக
28. **தேவையான இடங்களில் நிறுத்தல் குறியிட்டுகளையிட்டு எழுதுக.**
இளங்கோ அடிகள் சாத்தனாரிடம் முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்
29. **தொடரில் இடம் பெற்றுள் மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக.**
அ) முருகன் சோறு சாப்பிட்டு பால் குடித்தான்.
ஆ) பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

30. **கலைச் சொல்லாக்கம் தருக.** Cellphone

**V. சிறுவினா.**

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 4 = 8

31. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்?

32. எங்கிருந்தோ வருகிறது
வண்ணத்துப்பூச்சியொன்று
பறவைகளும் வரக் கூடும் நாளை - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கும் தருக.

33. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 4 = 8

34. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

35. சீனக்கதை வாயிலாக நேர மேலாண்மையை விளக்குக.

36. காவிரிப் பூம்பட்டினத்து துறைமுகம் பற்றிக் குறிப்பு வரைக.

**VI. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக :** 3 × 4 = 12

37. பாடாண் திணையை சான்றுடன் விளக்குக அல்லது செவியறிவுறூஉ துறையை விளக்குக.

38. **கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதனை தமிழாக்கம் செய்க.**

A White woman, about 50 years old, was seated next to a black man. Obviously disturbed by this, she called the airhostess. "Madam, what is the matter?" the hostess asked."You placed me next to a black man. Give me an alternative seat". The hostess replied. "Almost all the places on this flight are taken. I will go to see if another place is available. The hostess went away and came back a fewminutes later. "Madam, just as I thought, there are no other available seats in the economy class. We still haveone place in the first class".

www.kalvikadal.in

Before the woman could say anything, thehostess continued. "It would be scandalous to make someone sit next to someone so disgusting". She turned to the black guy and said, " Sir, a seat awaits you in the first class". At the moment, the other passengers who were shocked by what they had just witnessed stood up and applauded. Take a lesson from the sun who shines his light on everyone. Or the rain that falls on every single shore. No distinction of our race or the colour of our face. Nature's gifts are there for all men rich or poor. (Courtesy: S.S.S. Bal Vikas)

39. **பின்வரும் பாடலைப் படித்து ஏற்புடை நயங்களை எழுதுக.**

பூமிச்சருகாம் பாலையை
முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே - கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை - செலுத்தி
இரவலரோடு பேசுவேன்!
இரவெரிக்கும் பரிதியை - ஏழை
விறகெரிக்க வீசுவேன் - நா. காமராசன்

40. உங்கள் கனவு ஆசிரியர் குறித்துக் கட்டுரை எழுதுக.

**VII. பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக :** 3 × 6 = 18

41. எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன - நிறுவுக

42. சங்ககால வரலாற்றை அறிந்து கொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது - விளக்குக.

42. நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**VIII. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6

44. அ) 'காய்நெல் அறுத்துக்' - எனத் தொடங்கும் 'புறநானூற்றுப்பாடல்
ஆ) 'புகின்' என முடியும் குறள்.

✱✱★★★✱✱





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in







# இயல் 8 எல்லா உயிரும் தொழும்

மனிதம், ஆளுமை

| | | |
|---|---|---|
| உரைநடை | நமது அடையாளங்களை மீட்டவர் | மயிலை சீனி. வேங்கடசாமி |
| செய்யுள் | முகம் | சுகந்தி சுப்பிரமணியன் |
| செய்யுள் | இரட்சணிய யாத்திரிகம் | எச்.ஏ. கிருட்டிணனார் |
| செய்யுள் | சிறுபாணாற்றுப்படை | நத்தத்தனார் |
| துணைப்பாடம் | கோடை மழை | சாந்தா தத் |
| இலக்கணம் | குறியீடு | |

# இயல் 8 நமது அடையாளங்களை மீட்டவர்

உரைநடை உலகம்

மயிலை சீனி. வேங்கடசாமி

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.**

அ) தனித்தமிழ்த் தந்தை - 1. மு.வரதராசனார்
ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் - 2. மயிலை. சீனி. வேங்கடசாமி
இ) தமிழ் தென்றல் - 3. திரு.வி.க.
ஈ) மொழி ஞாயிறு - 4. தேவநேயப்பாவாணர் **[விடை: அ]**

2. **சு.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப் பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்.**

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்
இ) சமணமும் தமிழும் ஈ) கிறுத்தவமும் தமிழும் **[விடை: ஈ]**

### குறுவினா

1. **'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.**

- அழகுக் கலைகள் பற்றி தமிழில் வெளிவந்த முழுமையான நூல்.
- தமிழரது கலைத்திறனை எடுத்தோதுவதாக அமையும் நூல்.
- தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்ற நூல்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in





2. **'விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப்பணியாகக் கொண்டேன்' யார், யாரைப் பற்றி எதற்காகக் கூறுகிறார்?**

- பாவேந்தர் பாரதிதாசன் வேங்கடசாமியைப் பற்றிக் கூறுகிறார்.
- தமிழ் கெட நேர்ந்த போது தமிழ்ப்பணியை உயிர்ப் பணியாகக் கொண்டு தமிழரின் மேன்மையை ஓங்கிடச் செய்தல் வேண்டும் என்று கூறுகிறார்.

## சிறுவினா

1. **மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.**

- ஒவ்வொரு தேசிய இனமும் தன்னுடைய கடந்த கால வரலாற்றை அறிந்திருந்தால் மட்டுமே எதிர்கால இலக்கை அடைய முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டியவர் மயிலை சீனி. வேங்கடசாமி.
- இன வரலாற்றை எழுதிய ஆளுமைகளில் முக்கியமானவர்.
- இதழ் ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய இவர் எழுதிய புத்தகங்கள் தமிழரின் புதையல்களாக விளங்குகின்றன.
- சமயம், மானுடவியல், தொல்பொருள் போன்ற துறையில் மொழி ஆய்வு செய்தவர்.
- வட்டெழுத்து, கோலெழுத்து, தமிழ் பிராம்மி போன்றவற்றில் புலமை பெற்றவர்.
- தமிழில் 'தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்' குறித்து முழுமையான நூல் வெளியிட்டவர்.
- இந்நூல் தமிழக அரசின் முதற்பரிசு பெற்ற நூல் ஆகும்.

www.kalvikadal.in

## நெடுவினா

1. **மயிலையார் ஓர் "ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.**

- மயிலை சீனி. வேங்கடசாமியின் ஆய்வுகள் மொழிக்கு முதன் முதலாக வைக்கப்பட்டுள்ளன.
- இவரது ஆய்வுகள் அறிஞர்களுக்கு மட்டுமன்றி பொது மக்களுக்கும் அறிவு விருந்தாகிறது.
- பல ஆய்வுகள் கிளைவிட இவரது ஆய்வுகள் அடி மரமாக அமைந்தது.
- இவரது ஆய்வுகள் அனைத்தும் வேண்டியது, வேண்டாதது என்றோ, ஒதுக்க முடியாத வகையில் இவரது எழுத்தாளுமை திகழ்கிறது.
- தமிழக வரலாற்றுக் கழகத்திலும், தமிழகப் புலவர் குழுவிலும் உறுப்பினராக இருந்து மொழிக்குத் தொண்டாற்றியமைக்கு தமிழ் எழுத்தாளர் சங்கம் கேடயமும், மதுரைப் பல்கலைக்கழகம் தமிழ்ப் பேரவைச் செம்மல் விருதும் வழங்கியது.
- ஓயாத தேடலினாலும், கடுமையான உழைப்பாலும் அரிய ஆய்வுகள் வெளிக்கொணர்ந்த மாமனிதருக்கு சென்னை கோகலே அரங்கில் மணிவிழா எடுத்து 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்ற பட்டமும் வழங்கப்பட்டது.
- தமிழ்த் தேனீ என்றால் நம் மயிலை சீனியைத்தான் குறிக்கும்.
- எப்போதும் அவரது கால்கள் அறிவை நோக்கியே நகர்ந்தன.
- இவர் நூலகத்தைத் தன் தாயகமாகக் கொண்டு அறிவை விரிவு செய்து அல்லும் பகலும் ஆய்வில் மூழ்கினார்.
- இருண்ட பக்கங்களுக்கு ஒளியூட்டி தவறுகளை மறுத்து எடுத்துரைக்கும் ஆய்வு அணுகுமுறைக் கொண்டவர்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

- சமயம், கலை, இலக்கியம், கிறுத்துவமும் தமிழும், பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும் போன்ற ஆய்வு நூல்களை எழுதியும், வட்டெழுத்து கோலெழுத்து தமிழ் பிராம்மி போன்றவற்றில் புலமைப் பெற்று பன்முகங்கள் கொண்டு விளங்கினார்.
- இத்தகு காரணங்களைக் கொண்டு நாம் மயிலையாரை ஆய்வு செய்கின்ற போது அவர் ஓர் சிறந்த ஆராய்ச்சிப் பேரறிஞர் என்ற கூற்று சாலப் பொருந்தும்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **மயிலை சீனி. வேங்கடசாமி பிறந்த நாள் .................. பிறப்பிடம் ..................**
அ) 16.12.1900, சென்னை மயிலாப்பூர் ஆ) 14.12.1905, சென்னை வடபழனி
இ) 13.10.1902, மதுரை மாட்டுத்தாவனி ஈ) 10.12.1901 **[விடை: அ]**

2. **மயிலை சீனி. வேங்கடசாமியின் தந்தை .................. ஆவார்.**
அ) சீனிவாசன் ஆ) கோவிந்தராசன்
இ) கிருஷ்ணமூர்த்தி ஈ) வெங்கடசுப்பு **[விடை: அ]**

3. **மயிலை சீனி. வேங்கடசாமியின் தமையனார் .................. ஆவார்.**
அ) சீனிவாசன் ஆ) கோவிந்தராசன் இ) கிருஷ்ணமூர்த்தி ஈ) ராசராசன் **[விடை: ஆ]**

4. **மயிலை சீனி. வேங்கடசாமியின் தந்தையார் பணி .................. தமையனார் பணி ..................**
அ) சித்த மருத்துவர், தமிழாசிரியர் ஆ) தமிழாசிரியர், சித்த மருத்துவர்
இ) வழக்கறிஞர், கட்டிட வரைவாளர் ஈ) கட்டிட வரைவாளர், வழக்கறிஞர் **[விடை: அ]**

www.kalvikadal.in

5. **மயிலை சீனி. வேங்கடசாமி ஆசிரியப் பயிற்சி பெற்று, தொடக்கப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிய ஆண்டுகள்**
அ) 20 ஆ) 25 இ) 28 ஈ) 30 **[விடை: ஆ]**

6. **1934இல் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் சிந்தாதிரிபேட்டை உயர்நிலைப் பள்ளியில் நடத்திய தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் 'கிறித்தவமும் தமிழும்' என்ற பொருள் குறித்து உரையாற்றியவர்**
அ) கா. சுப்பிரமணியர்ஆ) விபுலானந்த அடிகள் இ) ச.த. சற்குணர் ஈ) திரு.வி.க **[விடை: இ]**

7. **மயிலை சீனி. வேங்கடசாமியின் முதல் நூல்**
அ) கிறித்துவமும் தமிழும் ஆ) பௌத்தமும் தமிழும்
இ) சமணமும் தமிழும் ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

8. **மயிலை சீனி. வேங்கடசாமி புலமை பெற்றிருந்த எழுத்துகள்**
i) வட்டெழுத்து ii) கோலெழுத்து iii) தமிழ் பிராம்மி
அ) i, ii - சரி ஆ) ii, iii - சரி
இ) மூன்றும் சரி ஈ) iii - மட்டும் தவறு **[விடை: இ]**

9. **மயிலை சீனி. வேங்கடசாமி எந்தெந்த பல்லவ மன்னர்களைப் பற்றி நூல்களை எழுதினார்?**
i) மகேந்திரவர்மன் ii) நரசிம்மவர்மன் iii) மூன்றாம் நந்திவர்மன்
அ) i, ii - சரி ஆ) ii, iii - சரி
இ) மூன்றும் சரி ஈ) iii - மட்டும் தவறு **[விடை: இ]**


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**10. 1905களில், .................. நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலங்களில் ஆட்சிபுரிந்த மன்னர்களைப் பற்றிய ஆய்வில் ஈடுபட்டவர் மயிலை சீனி. வேங்கடசாமி.**

அ) கி.பி.3 - கி.பி.9 ஆ) கி.பி.6 - கி.பி.12

இ) கி.பி.7 - கி.பி.12 ஈ) கி.பி.8 - கி.பி.13 **[விடை: அ]**

**11. கவின்கலைகள் குறித்துத் தமிழில் வெளி வந்த முழுமையான முதல் நூல் .................. ஆசிரியர் ..................**

அ) தமிழர் வளர்த்த அழகுக்கலைகள், மயிலை சீனி. வேங்கடசாமி

ஆ) நுண்கலைகள், கா. சுப்பிரமணியர்

இ) இசைவாணர் கதைகள், விபுலானந்த அடிகள்

ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

**12. தமிழக அரசின் முதல் பரிசைப் பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமியின் நூல்**

அ) நுண்கலைகள் ஆ) தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்

இ) இசைவாணர் கதைகள் ஈ) பௌத்தமும் தமிழும் **[விடை: ஆ]**

**13. மயிலை சீனி. வேங்கடசாமி நூல்களின் படங்களை வரைந்து வெளியிட்டவர்**

அ) மயிலை சீனி. வேங்கடசாமி ஆ) விபுலானந்த அடிகள்

இ) திரு.வி.க ஈ) ச.த.சற்குணர் **[விடை: அ]**

**14. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் அறக்கட்டளைச் சொற்பொழிவு ஒன்றினை வேங்கடசாமி நிகழ்த்திய ஆண்டு**

அ) 1960 ஆ) 1962 இ) 1956 ஈ) 1954 **[விடை: ஆ]**

www.kalvikadal.in

**15. தமிழக வரலாற்றினைப் பல கோணங்களில் மீட்டுருவாக்கம் செய்தற்கான சான்றாக விளங்கும் வேங்கடசாமியின் நூல்**

அ) பழங்காலத் தமிழர் வணிகம் ஆ) தமிழ்நாட்டு வரலாறு

இ) கொங்கு நாட்டு வரலாறு ஈ) களப்பிரர் ஆட்சியில் தமிழாம் **[விடை: ஆ]**

**16. தமிழ்நாட்டு வரலாறு என்னும் நூலின் சிறப்பு**

i) சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் முதலிய இலக்கியத் தரவுகளைக் கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

ii) அத்துடன் துளுமொழியையும் தமிழ்மொழியையும் ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளது.

iii) குறைந்த ஆதாரங்களைக் கொண்டு ஒரு பெரிய வரலாற்றையே உருவாக்கிய பெருமை மயிலை சீனி.வேங்கடசாமியையே சாரும்.

அ) i - சரி ஆ) ii - சரி இ) iii மட்டும் சரி ஈ) மூன்றும் சரி **[விடை: ஈ]**

**17. ஒவ்வொரு நூற்றாண்டையும் எவ்வகையில் ஆவணப்படுத்துவது என்பதற்கான முன்னோடியாக விளங்கும் மயிலை சீனி.வேங்கடசாமியின் நூல்**

அ) தமிழ்நாட்டு வரலாறு ஆ) பத்தொன்பதாம் நூற்றாண்டுத்தமிழ்

இ) களப்பிரர் ஆட்சியில் தமிழகம் ஈ) பழங்காலத் தமிழர் வணிகம் **[விடை: ஆ]**

**18. 'மறைந்துபோன தமிழ் நூல்கள்' என்னும் நூலில் வேங்கடசாமி மறைந்து போன .................. நூல்கள் தொடர்பான குறிப்புகளைக் கூறியுள்ளவர்.**

அ) 321 ஆ) 333 இ) 345 ஈ) 247 **[விடை: ஆ]**





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

19. **தாங்கெட நேர்ந்த போதும்**
**தமிழ்கெட லாற்றா அண்ணல்**
**வேங்கடசாமி என்பேன் - என்று கூறியவர்**

அ) பாரதிதாசன் ஆ) கண்ணதாசன் இ) திரு.வி.க. ஈ) ம.பொ.சி. **[விடை: அ]**

20. **வேங்கடசாமி, .................. என்னும் இதழில் எழுதிய சொல்லாய்வுக் கட்டுரைகள் 'அஞ்சிறைத் தும்பி' என்ற தொகுப்பாக வெளியிடப்பட்டது.**

அ) குடியரசு ஆ) ஊழியன்
இ) செந்தமிழ்ச்செல்வி ஈ) ஆரம்பாசிரியன் **[விடை: இ]**

21. **மத்தவிலாசம் என்ற நாடக நூலை இயற்றியவர் .................. அதனை ஆங்கிலம் வழியாகத் தமிழாக்கியவர்.**

அ) மகேந்திரவர்மன், மயிலை சீனி. வேங்கடசாமி
ஆ) நரசிம்மவர்மன், தெ.பொ.மீ
இ) மூன்றாம் நந்திவர்மன், விபுவானந்த அடிகள்
ஈ) இராசராசசோழன், கவிமணி **[விடை: அ]**

22. **மயிலை சீனி. வேங்கடசாமி பெற்றுள்ள சிறப்புகளை பொருத்திக் காட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| i) | தமிழ்ப் பேரவைச் செம்மல் | - | தமிழ் எழுத்தாளர் சங்கம் |
| ii) | ஆராய்ச்சிப் பேரறிஞர் | - | சென்னை கோகலே மண்டபம் |
| iii) | கேடயம் (1962) வழங்கல் | - | மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் |

அ) 3, 2, 1 ஆ) 2, 1, 3 இ) 1, 2, 3 ஈ) 2, 3, 1 **[விடை: அ]**

www.kalvikadal.in

23. **சங்கக்காலப் பசும்பூன் பாண்டியன் தன் கொடியில் .................. சின்னத்தைக் கொண்டிருந்தான் என்ற செய்தி அகநானூற்றில் (162) இருப்பதை முதன் முதலில் அறிந்து வெளிப்படுத்தியவர் வேங்கடசாமி.**

அ) புலி ஆ) யானை இ) கழுதை ஈ) சேவல் **[விடை: ஆ]**

## குறுவினா

1. **மயிலை சீனி. வேங்கடசாமி குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | மயிலை சீனி. வேங்கடசாமி |
| பிறப்பு | : | 16.12.1900 |
| ஊர் | : | மயிலாப்பூர் |
| பெற்றோர் | : | சீனுவாசன் - கோவிந்தம்மாள் |
| பணி | : | பள்ளி ஆசிரியர், இதழ் ஆசிரியர், ஆராய்ச்சியாளர். |

2. **மயிலை சீனி. வேங்கடசாமிக்கு கிடைத்த சீதனங்கள் யாவை?**
மகாபாரதம், இராமாயணம்.

3. **மயிலையார் எதன் அடிப்படையில் இன வரலாற்றை எழுதினார்?**
இலக்கியம், தொல்லியல், கல்வெட்டு, பண்பாடு.

4. **மயிலையாரின் ஆய்வுக்கட்டுரைகள் வெளியான இதழ்களைக் குறிப்பிடுக.**
குடியரசு, ஊழியன், செந்தமிழ்ச் செல்வி, ஆரம்பாசிரியன், லஷ்மி.

5. **மயிலையார் கிறுத்துவமும் தமிழும் எனும் நூல் எங்கு யார் உரையைக் கேட்டு எழுதினார்?**
- 1934 - தெ.பொ. மீனாட்சி சுந்தரம் உயர்நிலைப்பள்ளி.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

- தமிழ் ஆராய்ச்சி மாநாடு.
- ச.த. சற்குணர் ஆற்றிய உரை.

6. **மயிலையார் ஆய்வு செய்த துறைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலை வரலாறு, மொழி ஆய்வு.

7. **மயிலையாரின் பன்முக அறிவினைக் குறிப்பிடுக.**

- சமயம், மானுடவியல், தொல் பொருள் ஆய்வு, தமிழக வரலாறு கலை வரலாறு போன்ற துறையிலும்.
- வட்டெழுத்து, கோலெழுத்து தமிழ் பிராம்மி கல்வெட்டுப் போன்ற துறைகளில் பன்முக அறிவினைப் பெற்று விளங்கினார்.

8. **மயிலையாரின் எம்மொழிகளில் புலமையுடையவர்?**

மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம், பாலி, ஆங்கிலம்

9. **மயிலையாரின் மொழிபெயர்ப்பு பணியினைக் கூறுக.**

மகேந்திரவர்மன் இயற்றிய 'மத்த விலாசம்' என்ற நாடக நூலை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிப் பெயர்ப்பு செய்தார்.

10. **மயிலையாரின் சொல்லாய்வுப் பணியினை விளக்குக.**

மயிலையார் செய்த சொல்லாய்வினை 'செந்தமிழ்ச் செல்வி' என்ற இதழில் எழுதி 'அஞ்சிறைத் தும்பி' என்ற தொகுப்பாக வெளியிடப்பட்டது.

11. **மயிலையாரைப் பற்றி விபுலானந்தவின் கருத்து யாது?**

- மயிலை சீனி. வேங்கடசாமி ஆண்டில் இளைஞராக இருந்தாலும் ஆராய்ச்சித் துறையில் முதியவர்.
- நல்லொழுக்கம் வாய்ந்தவர்.
- நல்லோருடைய கூட்டுறவைப் பொன்னேப்போல் போற்றுபவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

## சிறுவினா

1. **மயிலை சீனி. வேங்கடசாமி பற்றி நாரண துரைக்கண்ணன் சொன்ன உருவ விவரிப்பினை விளக்குக.**

- ஐந்தடிக்கு உட்பட்ட குறள் வடிவம்.
- அகன்ற நெற்றி, வட்டமுகம், எடுப்பான மூக்கு, பேசத்துடிக்கும் உதடு, நான்கு முழ வேட்டி, காலர் இல்லா முழுக்கைச் சட்டை.
- சட்டைப் பையில் மூக்குக் கண்ணாடி பவுண்டன் பேனா, மேல் துண்டு, இடது கரத்தில் தொங்கும் புத்தகப்பை.
- இத்தோற்றத்தோடு கன்னிமாரா நூலகத்தை விட்டு வேகமாக நடந்து வருவார்.

2. **மயிலையார் எதற்காக தமிழ் வளர்த்த அழகுக் கலைகள் என்ற நூலை எழுதினார்?**

- தற்காலத்துத் தமிழ்ச்சமூகம் தனது பழைய அழகுக் கலைச் செல்வங்களை மறந்தன.
- தன்பெருமையை தான் அறியாச் சமூகமாக இருந்து வருகிறது.
- கலை என்று கூறப்படுவதெல்லாம் சினிமாக் கலை இசைக்கலை பற்றியே.
- இலக்கியக் கலை கூட அதிகமாகப் பேசப்படுவதில்லை.
- ஏனைய அழகுக்கலைகள் மறந்து விட்டன.
- இதன் காரணமாக இந்நூலை எழுதினார்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in







**3. மயிலையாரின் மீட்டுருவாக்க முயற்சியைச் சான்றுடன் விளக்குக.**

- தமிழக வரலாற்றை பல கோணங்களில் மீட்டுருவாக்கம் செய்தார்.
- ‘தமிழ் நாட்டு வரலாறு’ என்னும் நூல் இவருடைய மீட்டுருவாக்க முயற்சிக்குச் சான்று.
- இந்நூல் சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் போன்ற தரவுகளைக் கொண்டு எழுதினார்.
- துளுமொழி - தமிழ்மொழி ஒப்பீட்டு ஆராய்ந்துள்ளார்.

**4. மயிலையாரின் ஆவணப் பணியினை விளக்குக.**

- தமிழியலுக்கு தேவையான பல்வேறு ஆவணங்களைத் தொகுத்து தம் பணியை மேற்கொண்டார்.
- இதன் விளைவாக சாசனச் செய்யுள் மஞ்சரி மறைந்து போன தமிழ் நூல் தமிழ் மறுமலர்ச்சிக்குப் பெரும் விளக்கம் அளிப்பதாக அமைந்தது.
- இலக்கண, இலக்கிய பரப்பில் உறைந்திருந்த செய்திகளைத் தொகுத்து மறைந்து போன 333 நூல்கள் தொடர்பான குறிப்புகளை முன் வைத்தார்.

**5. மயிலையாரின் வாழ்க்கையைப் பற்றிச் சில தகவல்கள் திரட்டுக.**

- திருமணம் செய்து கொள்ளாமல் துறவியாக வாழ்ந்தவர்.
- தம் வாழ்வை முழுமையாகத் தமிழின் ஆய்வுக்கு ஒதுக்கியவர்.
- நாம் தாழாமல் இருக்கத் தம்மைத் தாழ்த்திக் கொண்டவர்.
- பெருமைகளை ஆய்வு நோக்கில் விரித்துரைத்தவர்.
- சுய அடையாளங்களை மீட்டுத் தந்தவர்.

**6. மயிலை சீனி. வேங்கடசாமியின் தொடக்கக்கால ஆய்வுகள் பற்றி விளக்குக.**

- 1934 தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் நடத்திய தமிழ்ஆராய்ச்சி மாநாட்டில் ச.த.சற்குணர் நிகழ்த்திய உரையைக் கேட்டு கிறித்துவமும் தமிழும் என்ற நூலை எழுதினார்.
- தமிழின் தொல் இலக்கியம், தொல் கலை, தொல்லெழுத்து ஆகியவற்றில் ஈடுபட்டு “பௌத்தமும் தமிழும்”, சமணமும் தமிழும் என்ற நூலை எழுதினார்.
- சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல் பொருள் ஆய்வு, கலை வரலாறு முதலியன பல துறைகளில் கவனம் செலுத்தினார்.
- கல்வெட்டு ஆய்வில் ஆர்வமும் பயிற்சியும் அதிகம். தமிழ் எழுத்தியலின் வளர்ச்சியை நன்குணர்ந்தவர்.
- வட்டெழுத்து, கோலெழுத்து தமிழ் பிராம்மி புலமை பெற்றதால் சாசனங்கள் அவரால் எளிதில் வாசிக்க முடிந்தது.
- வரலாறு, இலக்கியம், கலையியல், சமயம் போன்ற துறைகளிலும் நூல்களை எழுதியுள்ளார்.

**7. மயிலை சீனி. வேங்கடசாமியின் வரலாற்று ஆய்வுகள் பற்றி விளக்கம் தருக.**

- கி.பி. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9ஆம் நூற்றாண்டு வரை உள்ள இடைப்பட்ட காலங்களில் ஆட்சி செய்த மன்னர்களைப் பற்றி ஆய்வு செய்தார்.
- மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் போன்றோர் நூல்களைப் பற்றியும் எழுதியுள்ளார். மூவேந்தர்கள், கொங்கு நாட்டு மன்னர்கள் களப்பிரர் மற்றும் இலங்கை குறித்த வரலாறு ஆகியவற்றை எழுதியுள்ளார்.
- வரலாற்றை மட்டுமல்லாமல், அரசியல், பண்பாடு, கலை வரலாற்றையும் பதிவு செய்துள்ளார்.
- களப்பிரர் பற்றி ஆய்வு செய்து “களப்பிரர் ஆட்சியில் தமிழகம்’ என்னும் நூலை வெளியிட்டார்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**8. மயிலை.சீனி. வேங்கடசாமியின் கலையியல் ஆய்வுகள் பற்றி விவரி.**

- கலையியல் சார்ந்த ஆய்வுகள், நூல்கள் வெளிவர வழிகாட்டியாக விளங்கியவர் மயிலையார்.
- இதற்கு இளமைப் பருவத்தில் ஓவியக் கல்லூரியில் பயின்றது உதவியாக இருந்தன.
- கட்டடம், சிற்பம், ஓவியம் தொடர்பான ஆய்வுகள் தமிழ்ச் சமூகத்திற்கு புதிய வரவாக இருந்தன.
- தமிழரது கலைத்திறனை எடுத்தோதும் ‘தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் என்னும் நூல், கவின் கலைகள் குறித்துத் தமிழில் வெளி வந்த முழுமையான முதல் நூல் ஆகும்.
- தமிழக அரசின் முதல் பரிசுப் பெற்ற நூல் ஆகும். இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், நுண்கலைகள் இசைவாணர் கதைகள் என்பன இவருடைய நூல்கள்.
- தம் நூலில் தாமே படங்களை வரைவார். இது அவரது கலைத்திறனுக்குச் சான்றாகும்.

**9. மயிலையாரின் இலக்கிய பணியினை விளக்குக.**

- 1962இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அறக்கட்டளைச் சொற்பொழிவு.
- இதன் மூலம் ஆய்வுப்பயணம் தொல்காப்பியம், சங்க இலக்கியம், கல்வெட்டுகள் நோக்கி நகர்ந்தது.
- இதன் விளைவாக பழந்தமிழர் வணிகர் களப்பிரர் ஆட்சியில் தமிழகம், கொங்கு நாட்டு வரலாறு போன்ற நூல்களை எழுதினார்.
- தமிழக வரலாற்றினைப் பல கோணங்களில் மீட்டுருவாக்கம் செய்தார்.
- “தமிழ்நாட்டு வரலாறு” எனும் நூல் மீட்டுருவாக்க முயற்சிக்கு சான்று.
- துளுமொழி – தமிழ்மொழி ஒப்பிட்டு ஆய்ந்துள்ளார்.
- சாசனச் செய்யுள் மஞ்சரி மறைந்து போன தமிழ் நூல்கள் எழுதினார்.
- “மறைந்துப் போன தமிழ் நூல்கள்” மயிலையாரின் ஆவணப்பணிகளில் ஒன்றாகும்.
- 333 நூல்கள் தொடர்பான குறிப்புகளை முன் வைத்தார்.

www.kalvikadal.in

**10. மயிலை சீனி. வேங்கடசாமி பன்மொழிப் புலமையை விளக்குக.**

- தமிழ் ஆய்வு மரபில், சொல் ஆய்வுகளை மேற்கொள்ளாத ஆய்வாளர் இல்லை.
- மயிலையாரும் சொல்லாய்வுப் பணியை மேற்கொண்டு ‘செந்தமிழ்ச் செல்வி’ என்னும் இதழில் அவர் எழுதிய சொல்லாய்வு கட்டுரைகள் “அஞ்சிறைத்தும்பி” நூலாக வெளி வந்தது.
- மகேந்திரவர்மன் எழுதிய ‘மத்த விலாசம் எனும் நாடக நூலை ஆங்கிலம் வழியாகத் தமிழாக்கம் செய்தார்.
- மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம் பாலி, ஆங்கிலம் போன்ற மொழிகளில் புலமைக் கொண்டவர்.
- நான் கதைகளையும் நவீனங்களையும் எழுதுகிறவன் அல்லன் என்று கூறியவர்.
- வரலாற்று ஆராய்ச்சி, இலக்கிய ஆராய்ச்சி நூல்களை எழுகிறவன் என்று குறிப்பிட்டவர்.
- மயிலை. சீனி. வேங்கடசாமி இளைஞராக இருந்தாலும் ஆராய்ச்சியில் முதியவர் நல்லொழுக்கம் வாய்ந்தவர் என்று சுவாமி விபுலானந்த அடிகளார் புகழ்கிறார்.
- இக்காரணங்களைக் கொண்டு மயிலையார் பன்மொழிப் புலமை வாய்ந்தவர் என்று கூறலாம்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



12 8 இயல்

## கற்பவை கற்றபின்

பக்கம்: 194

1. **உங்கள் பகுதியைச் சேர்ந்த தமிழறிஞர் ஒருவரின் பணிகள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**குறிப்பு :**

தமிழறிஞர் சிலம்பு நா.செல்வராசு அவர்கள் புதுச்சேரி மொழியில் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் பேராசிரியராக இருபத்து ஓர் ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார். இவர் சிறந்த ஆய்வாளர், ‘தமிழறிஞர்’, நெறியாளர் என்ற வரிசையில் அடையாளப்படுத்திக் கொள்கிறார். மேலும் இவர் ஆய்வரங்கம், பதிப்புப் பணி போன்ற துறைகளிலும் பணியாற்றி வரும் இவர் கலைமாமணி, தமிழ் செம்மல் விருது தமிழறிஞர் விருதுகள் பல பெற்று ஆய்வு மாணவர்களோடு தாமும் ஆய்வாளராக வாழ்ந்து வருகிறார்.

**கலந்துரையாடல்**

சூர்யா : வள்ளி, நேற்று நம் ஆசிரியர் சிலம்பு நா. செல்வராசு அவர்களைப் பற்றி வகுப்பில் பேசினார் அல்லவா! அதில் சிலம்பு என்று ஏன் பெயர் வந்தது.

வள்ளி : அதுவா! தமிழ்நாட்ல சில பேருக்குதான் பொருந்தும் அவர்களில் ஒருவர் நா.செல்வராசு.

சூர்யா : எனக்கு கொஞ்சம் விபரமா சொல்லு.

வள்ளி : நா. செல்வராசு ஐயா சிலப்பதிகாரத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். அது மட்டுமல்லாமல் தம்மை முழுமையாக சிலப்பதிகார ஆராய்ச்சியில் ஈடுபடுத்திக் கொண்டவர். சிலம்பு என்ற பெயரை அவரின் குருநாதர் வைத்த பெயராம்.

சூர்யா : மகிழ்ச்சி! ஐயா, எப்பொழுது இருந்து ஆய்வுப் பணி செய்கிறார்.

www.kalvikadal.in

வள்ளி : 1984 முதல் இன்று வரை சங்க இலக்கியத்தில் நிறைய ஆய்வு செய்துள்ளார்.

சூர்யா : அவர் செய்த ஆய்வுகள் எனக்குச் சில சொல்ல முடியுமா.

வள்ளி : ஓ சொல்றேன். பண்டைய தமிழரின் திருமண வாழ்க்கை, கண்ணகி தொன்மம், வள்ளி முருகன் வழிபாடு.

சூர்யா : தொன்மம் என்றால் என்ன?

வள்ளி : பழங்காலத்துக் கதை, உண்மைச் சம்பவம் அல்லது வரலாற்று நிகழ்வு.

சூர்யா : இவரைப் பற்றி ஏதாவது சிறப்பு இருக்கா?

வள்ளி : நிறைய சொல்லிக் கொண்டே போகலாம். இவர் பதினெட்டு முனைவர் பட்ட ஆய்வாளர்களையும் முப்பத்தெட்டு ஆய்வியல் நிறைஞர்களையும் உருவாக்கியவர் ஆவார். இவர் முந்நூறுக்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளார்.

அறவாணன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் தலைவராகவும் தம் பணியை தொடர்ந்து செய்து வருகிறார்.

*******



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





இயல் 8

செய்யுள்

# முகம்

–சுகந்தி சுப்பிரமணியன்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **நான் வெற்றுவெளியில் அலைந்து கொண்டிருக்கிறேன் எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது.**

அ) தமது வீட்டு முகவரியை ஆ) தமது குடும்பத்தை

இ) தமது அடையாளத்தை ஈ) தமது படைப்புகை **[விடை: இ]**

### குறுவினா

1. **முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.**

என்குள்ளே என்னைத் தொலைத்தக் காரணத்தால் என் முகவரியற்று போனது என்கிறார்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **'முகம்' என்னும் கவிதை இடம் பெற்றுள்ள கவிதைத் தொகுப்பு**

அ) புதையுண்ட வாழ்க்கை ஆ) மீண்டெழுதலின் ரகசியம்

இ) சுகந்தி சுப்பிரமணியின் படைப்புகள் ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: இ]**

2. **சுகந்தி சுப்பிரமணியத்தின் ஊர்**

அ) கோவை புறநகரின் ஆலாந்துறை ஆ) ஈரோட்டு புறநகரின் சிவகிரி

இ) தஞ்சை புறநகரின் வல்லம் ஈ) இவற்றில் எதுவுமில்லை **[விடை: அ]**

3. **சுகந்தி சுப்பிரமணியனின் கல்வித்தகுதி**

அ) தொடக்கக் கல்வியை முழுமை செய்யாதவர்

ஆ) உயர்நிலைப் பள்ளிப்படிப்பை முழுமை செய்யாதவர்

இ) இளங்கலை பட்டம்

ஈ) முனைவர் பட்டம் **[விடை: ஆ]**

4. **சுகந்தி, எழுத்தாளராக நம்பிக்கை தந்தவர்**

அ) அவரது தாயார் ஆ) அவரது தந்தையார்

இ) அவரது கணவர் ஈ) அவரது மாமியார் **[விடை: இ]**

5. **சுகந்தி சுப்பிரமணியத்தின் படைப்புகளில் பாடுபொருள்**

அ) தனித்து விடப்பட்ட பெண்ணின் அனுபவங்கள்

ஆ) கூட்டுக் குடும்பத்தில் பெண்களின் சவால்கள்







Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

இ) மணமாகாத பெண்களின் அவலம்

ஈ) அறிவியல் உலகில் பெண்கள் **[விடை: அ]**

6. **நான் வெற்று வெளியில்**
   **அலைந்து கொண்டிருக்கிறேன்**
   **என் முகத்தைத் தேடியபடி - என்று பாடியவர்**

   அ) சுகந்தி சுப்பிரமணியன் ஆ) இரா. மீனாட்சி

   இ) உமா மகேஷ்வரி ஈ) சாந்தி சுப்பிரமணியன் **[விடை: அ]**

7. **சாந்தி சுப்பிரமணியன் என்பார் தமிழின் ................. பெண் கவிஞர்களில் குறிப்பிடத்தகுந்தவர்.**

   அ) மரபு ஆ) புதுக்கவிதை இ) நவீன ஈ) பின்நவீன **[விடை: இ]**

## குறுவினா

1. **சுகந்தி சுப்பிரமணியன் குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுகந்தி |
| ஊர் | : | கோவை - ஆலாந்துறை |
| படிப்பு | : | உயர்நிலைக் கல்வி |
| சிறப்பு | : | தமிழின் நவீன பெண் கவிஞர் |
| நூல்கள் | : | புதையுண்ட வாழ்க்கை, மீண்டெழுதலின் இரகசியம். |

2. **ஒவ்வொருவருக்கும் தனித்தன்மை அடையாளம் காணும் போது உருவாவது எது?**
   எழுச்சியும், ஊக்கமும் உருவாகிறது.

3. **அடையாளம் இழந்த ஒருவர் எதைக் தொலைக்கிறார்?**
   அடையாளம் இழந்த ஒருவர் தன் முகத்தை தொலைக்கிறார்.

www.kalvikadal.in

4. **சுகந்தி சுப்பிரமணியனின் இரண்டு கவிதைத் தொகுப்பு நூல்கள் குறிப்பிடுக.**
   புதையுண்ட வாழ்க்கை, மீண்டெடுதலின் ரகசியம்.

## சிறுவினா

1. **முகம் என்ற கவிதை வாயிலாக சுகந்தி சுப்பிரமணியன் கூறுவன யாவை?**
   - ஒவ்வொருவருக்கும் தனித்தன்மை உண்டு. அவற்றை நாம் அடையாளம் காண வேண்டும்.
   - அடையாளம் காணும்போது எழுச்சியும் ஊக்கமும் கிடைக்கிறது.
   - அடையாளம் இழந்த ஒரு பெண் தன் அடையாளத்தைத் தேடுகிறாள்.
   - அவள் முகமும் காணவில்லை. தேடும்போது தன்னையும் தொலைத்து விடுகிறாள்.
   - முகவரியும் தொலைந்ததால் உடலைக் கவனிக்கப் பிறரை நாடுகிறாள்.
   - மனதில் ஆசையை வளர்த்து தன்னுள்ளே வைத்துக் கொண்டு வெளியே சுற்றுகிறாள்.
   - இப்படியே மனம் இறுகி தன்னைத் தேடி ஆண்டுகள் பல ஆயின.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 195

1. **உங்களைப் பற்றிய உங்கள் கருத்து என்ன? உங்கள் வலிமையென்று நீங்கள் எவற்றைக் கருதுவீர்கள்?**

   ‘எவ்வளவு பெரிய காரியமாக இருந்தாலும் அதை என்னால் சாதிக்க முடியும்’ என்ற மன உறுதியோடு அச்செயலைச் செய்து முடிக்க வேண்டும். முதலில் என்னுடைய வலியை



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





என்னவென்று நான் அறிந்திருக்க வேண்டும். ஒரு செயல்பாடு முழுமை பெற வெற்றியடைய உடல் வலிமை மட்டுமல்ல மனத்தின் வலிமையுந்தான்.

அரிய பெரிய சாதனைகள் மனத்தின் வலிமையினாலேயே சாதிக்கப்படுகின்றன என்ற உண்மையினை மறந்து விடக்கூடாது. மனத்தை பல வழிகளில் செலவழித்து விடாமல் ஒரே நோக்கில் ஒரே குறிக்கோளில் பயன்படுத்தும் போது மனம் பொலிவு பெறும்.

மனத்தின் எண்ணங்கள் ஒருமுகப்படுத்தும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் எந்தச் செயலையும் எளிதாகச் செய்ய முடியும். நல்ல எண்ணங்கள் குவியும் போது உள்ளத்திற்கு அமைதி கிடைக்கும். இதன் மூலம் சிறந்த வலிமைப் பெற்று எதையும் சாதிக்க முடியும்.

**எண்ணிய எண்ணியாங்கு எய்துபர் எண்ணியர்**
**திண்ணியர் ஆகப் பெறின்** - என்கிறார் வள்ளுவர்.

நம் வலிமையைக் கொஞ்சம் கூட உணராதவர்கள் வாழ்க்கையில் என்ன செய்ய வேண்டும் என்பது தெரியாமல் தோற்றுப் போகிறார்கள்.

✸✸★★★✸✸

www.kalvikadal.in





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





இயல் 8

செய்யுள்

# இரட்சணிய யாத்திரிகம்

–எச்.ஏ. கிருட்டிணனார்

## பாடநூல் வினாக்கள்

### குறுவினா

1. **இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?**
   - இவ்வுலகம் பிளந்து வெடிக்கவில்லையே!
   - வானம் இடிந்து விழவில்லையே!
   - கடல் நீர் வற்றவில்லையே!
   - உலகம் அழியவில்லையே எனப் புலம்பினர்.

### சிறுவினா

1. **'ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' – இடம்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் :**

எச்.ஏ. கிருட்டிணனார் எழுதிய இரட்சணிய யாத்திரிகம் என்ற நூலில் குமாரப் பருவத்தில் சரிதப்படலத்தில் இடம் பெற்றுள்ளது.

www.kalvikadal.in

**பொருள் :**

யூதர்களின் கொடுஞ்செயலில் இருந்து விடுபட முடியாமல் ஓர் ஏழைப்போல அமைதியாய் இருந்தார் என்பது பொருள்.

**விளக்கம் :**

யூதர்கள் இறைமகனை கயிற்றால் கட்டும் போது அவர் உடன்பட்டு இருந்தார். தம் மீது பகை கொண்டு தனக்கு இழிவான செயல்களைச் செய்கின்ற போது அவர்கள் வாழுகின்ற காலத்தில் துன்பப்படாமல் வாழ வேண்டும் என்று இரக்கப்பட்டார். அன்பு என்ற கட்டிலிருந்து விடுபடாமல், எந்த உதவியும் இல்லாமல் ஏழையாய் அமைதியாய் நின்றார்.

### நெடுவினா

1. **எச்.ஏ. கிருட்டிணனார் 'கிறித்துவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.**

தமிழ் இலக்கியத்தை வளப்படுத்திய ஐரோப்பியக் கிறுத்துவ தொண்டர்களைப் போல தமிழ் சிறுத்துவ தொண்டாகளும் தம் படைப்புகளால் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தியுள்ளனா். அவா்களுள் குறிப்பிடத்தக்கவா் எச்.ஏ.கிருட்டிணனாா். இவருடைய பெற்றோரும் ஆழ்ந்த தமிழ்ப்புலமை கொண்டவர். தன் தந்தையின் கம்பராமாயணத் தொடர் சொற்பொழிவுகள் தான் கிருட்டிணனாரைக் கம்பராமாயணம் போல் தாமும் காப்பியம் எழுத வேண்டும் என்று தூண்டியது. இக்காப்பியத்தின் இடையே தேவாரம் போன்ற பாடல்கள் இடம் பெற்றுள்ளது.

- இறைமகனாரை (இயேசுவை) யூதர்கள் கயிற்றால் கட்டப்பட்டுத் துன்புறுத்தினா். அவா்களிடம் இருந்து விடுபட முடியாமலும், எந்த உதவியும் பெற இயலாது ஏழையாய் நின்றார். அவர்கள்







Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







தமக்கு இழிவான செயல்கள் செய்கிறார்கள் என்று தெரிந்தும் அவர்கள் வாழுகின்ற காலத்தில் துன்பப்படுவார் என்று அவர்களுக்காக இரங்கினார்.

- கொடியோர்கள் கூறிய இகழ்ச்சி மொழியானது தீக்கொள்ளியை தம் இதயத்தில் அழுத்தியது போல் இருந்தது. தம்மை துன்புறுத்தியவரை சினந்து கொள்ளாமல் மறுச்சொல்லும் கூறாமல் அமைதி காத்தார். இறைமகனாரைக் கொல்ல வேண்டும் என்று எண்ணம் கொண்ட போந்தியு பிலாத்து முன் நிறுத்தினர். அவருக்குத் தண்டனை பெற்றுத்தரவும் உறுதியாக இருந்தனர்.
- இறைமகனார் அணிந்திருந்த வெள்ளாடையைக் கழற்றினர். முருக்க மலர் போன்று சிவந்த ஓர் அங்கியை அவருக்குப் போர்த்தினர். கூர்மையான முள் செடியினால் பின்னப்பட்ட முடியை அவருடைய தலையில் இரத்தம் பீறிட செய்தனர். கையிலிருந்த கோலினைப் பிடுங்கி தலையில் வன்மையாக அடித்தனர். திருமுகத்தில் எச்சிலை உமிழ்ந்து பழித்தனர். இதைக் கண்ட மக்கள்

  **இவ்வுலகம் பிளந்து வெடிக்கவில்லையே!**
  **வானம் இடிந்து விழவில்லையே!**
  **கடல் நீர் வற்றவில்லையே!**
  **இன்னும் உலகம் அழியாமல் காலம் தாழ்த்தியதைக் கண்டு மக்கள் கொதித்தனர்.**

- பொல்லாத யூதர்கள் இறைமகனை இகழ்ந்து பேசிய சொல்லத்தகாத பழிமொழிகளைக் கேட்டு பொறுத்- திருந்தார்.

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| **கருத்தடம், வெங்குருதி** | - | பண்புத்தொகைகள் |
| **வெந்து, சினந்து, போந்து** | - | வினையெச்சம் |
| **உன்னலிர்** | - | முன்னிலைப்பன்மை வினைமுற்று |
| **ஓர்மின்** | - | ஏவல் பன்மை வினைமுற்று |
| **சொற்ற, திருந்திய** | - | பெயரெச்சம் |
| **பாதகர்** | - | வினையாலணையும் பெயர் |
| **ஊன்ற ஊன்ற** | - | அடுக்குத்தொடர் |

www.kalvikadal.in

## உறுப்பிலக்கணம்

**பகைத்த = பகை + த் + த் + அ**

| | |
|---|---|
| பகை | - பகுதி |
| த் | - சந்தி |
| த் | - இறந்தகால இடைநிலை |
| அ | - பெயரெச்ச விகுதி |

**பழித்தனர் = பழ + த் + த் + அன் + அர்**

| | |
|---|---|
| பழடி | - பகுதி |
| த் | - சந்தி |
| த் | - இறந்தகால இடைநிலை |
| அன் | - சாரியை |
| அர் | - பலர்பால் வினைமுற்று விகுதி |

**களைந்து = களை + த்(ந்) + த் + உ**

| | |
|---|---|
| களை | - பகுதி |
| த் | - சந்தி (ந் ஆனது விகாரம்) |
| த் | - இறந்தகால இடைநிலை |
| உ | - வினையெச்ச விகுதி |

**இடிந்து = இடி + த்(ந்) + த் + உ**

| | |
|---|---|
| இடி | - பகுதி |
| த் | - சந்தி (ந் ஆனது விகாரம்) |
| த் | - இறந்தகால இடைநிலை |
| உ | - வினையெச்ச விகுதி |



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



### புணர்ச்சி விதி

1. **முன்னுடை = முன் + உடை**
   - தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் எனும் விதிப்படி, முன்ன் + உடை என்றானது.
   - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பு எனும் விதிப்படி, (ன் + உ = னு) முன்னுடை என்று புணர்ந்தது.

2. **ஏழையென = ஏழை + என**
   - 'இ, ஈ, ஐ வழி யவ்வும் = எனும் விதிப்படி (ஐக்கு ய் தோன்றி) = ஏழை + ய் + என = என்றானது.
   - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே எனும் விதிப்படி (ய் + எ = யெ) ஏழையென என்று புணர்ந்தது.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **ஜான் பன்யன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ் என்னும் ஆங்கில நூலின் தழுவலாக அமைந்த படைப்பு**

   அ) இரட்சணிய யாத்திரிகம் ஆ) இரட்சணிய மனோகரம்
   இ) மனோன்மணியம் ஈ) போற்றித் திருஅகவல் **[விடை: அ]**

2. **இரட்சணிய யாத்திரிகத்தின் ஆசிரியர்**

   அ) வீரமாமுனிவர் ஆ) வேதநாயகம்
   இ) எச்.ஏ.கிருட்டிணனார் ஈ) ஜி.யு. போப் **[விடை: இ]**

3. **இரட்சணிய யாத்திரிகம் என்பது**

   அ) ஒரு பெரும் உருவகக் காப்பியம் ஆ) சிற்றிலக்கியம்
   இ) சிறு காப்பியம் ஈ) காப்பியம் **[விடை: அ]**

4. **இரட்சணிய யாத்திரிகத்தின் பாடல்கள்**

   அ) 3566 ஆ) 3677 இ) 3766 ஈ) 3244 **[விடை: இ]**

5. **இரட்சணிய யாத்திரிகத்தில் உள்ள பருவங்கள்**

   அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து ஈ) ஆறு **[விடை: இ]**

6. **இரட்சணிய யாத்திரிகத்தின் இரட்சணிய சரித படத்தில் இடம்பெறும் இயேசுவின் இறுதிக்கால நிகழ்ச்சிகள் அமைந்துள்ள பருவம்**

   அ) ஆதிபருவம் ஆ) குமார பருவம்
   இ) நிதான பருவம் ஈ) ஆரணிய பருவம் **[விடை: ஆ]**

7. **கிறித்துவக் கம்பர் என்று போற்றப்பட்டவர்**

   அ) வீரமாமுனிவர் ஆ) எச்.ஏ. கிருட்டிணனார்
   இ) ஜி.யு. போப் ஈ) ஈராசு பாதிரியார் **[விடை: ஆ]**

8. **திருநெல்வேலியில் இருந்து வெளிவந்த 'நற்போதகம்' என்னும் ஆன்மீக மாத இதழில் இரட்சணிய யாத்திரிகம் தொடராக வெளிவந்த ஆண்டுகள்**

   அ) 10 ஆ) 12 இ) 13 ஈ) 15 **[விடை: இ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

**9. இரட்சணிய யாத்திரிகம் முதல் பதிப்பாக வெளி வந்த நாள்**

அ) 1894 - மே ஆ) 1896 – ஏப்ரல்
இ) 1896 - மே ஈ) 1892 – ஏப்ரல் **[விடை: அ]**

**10. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| i) | பாதகர் | - | கூறவில்லை |
| ii) | மாற்றம் | - | குற்றமில்லாத |
| iii) | ஏதமில் | - | சொல் |
| iv) | நுவன்றிலர் | - | கொடியவர் |

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 2, 1, 4 இ) 1, 4, 3, 2 ஈ) 4, 1, 2, 3 **[விடை: அ]**

**11. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| i) | ஆக்கினை | - | உறுதி |
| ii) | கூவல் | - | கடல் |
| iii) | உததி | - | கிணறு |
| iv) | நிண்ணயம் | - | தண்டனை |

**12. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| i) | மேதினி | - | கெடுதல் |
| ii) | வாரிதி | - | பழி |
| iii) | நிந்தை | - | கடல் |
| iv) | பொல்லாங்கு | - | உலகம் |

அ) 4, 3, 2, 1 ஆ) 2, 1, 3, 4 இ) 3, 4, 2, 1 ஈ) 4, 2, 1, 3 **[விடை: அ]**

www.kalvikadal.in

**13. இறைமகன் இயேசுவைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் .................. ஆளுநரின் முன் கொண்டுபோய் நிறுத்தினர்.**

அ) போந்தியுராயன் ஆ) போந்தியு பிலாத்து
இ) ஏரோது ஈ) அகஸ்டஸ் சீசர் **[விடை: ஆ]**

**14. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| i) | கருந்தடம் | - | வினையெச்சம் |
| ii) | ஓர்மின் | - | பெயரெச்சம் |
| iii) | வெந்து | - | பண்புத்தொகை |
| iv) | திருந்திய | - | ஏவல் பன்மை வினைமுற்று |

அ) 3, 4, 1, 2 ஆ) 4, 1, 2, 3 இ) 3, 2, 1, 4 ஈ) 4, 1, 3, 2 **[விடை: அ]**

**15. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| i) | உன்னலிர் | - | வினையெச்சம் |
| ii) | பாதகர் | - | அடுக்குத்தொடர் |
| iii) | ஊன்ற ஊன்ற | - | வினையாலனையும் பெயர் |
| iv) | போந்து | - | முன்னிலைப் பன்மை வினைமுற்று |

அ) 4, 3, 2, 1 ஆ) 4, 1, 2, 3 இ) 2, 3, 1, 4 ஈ) 3, 4, 1, 2 **[விடை: அ]**

**16. இறைமகன் இயேசுவை இகழ்ந்து பேசியவர்கள்**

i) பொல்லாத யூதர்கள் ii) போர்ச் சேவகர் iii) போந்தியு பிலாந்து

அ) i, ii - சரி ஆ) iii - மட்டும் தவறு
இ) மூன்றும் சரி ஈ) மூன்றும் தவறு **[விடை: ஆ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

17. **இறைமகன் இயேசுவுக்கு வெள்ளாடையைக் கழற்றிவிட்டு, .................. மலர் போன்ற ஓர் சிவந்த அங்கியை அவருக்குப் போர்த்தினர்.**

அ) காந்தன் ஆ) முல்லை இ) முளரி ஈ) முருக [விடை: ஈ]

18. **பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற - இவ்வடிகளில் அமைந்துள்ள இலக்கிய நயம்**

அ) மோனை ஆ) எதுகை இ) அந்தாரி ஈ) இயைபு [விடை: ஆ]

## குறுவினா

1. **இரட்சணிய யாத்திரிகம் குறிப்பு வரைக.**
   - ஜான்பனியன் எழுதிய பில்கிரிமஸ் புரோகிரஸ் எனும் ஆங்கில நூல்.
   - எச். ஏ. கிருட்டிணனார் தமிழில் எழுதினார்.
   - 3766 பாடல்கள்.
   - ஐந்து பருவம் : ஆதி பருவம், குமார பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம்.

2. **யூதர்களின் கொடுஞ்செயலுக்கு இறைமகனார் இரங்கிய தன்மை யாது?**

இம்மனிதர்கள் தாங்கள் வாழும் காலம் முழுவதும் துன்பத்தில் இருப்பார்களோ என்று எண்ணி அவர்களுக்காக இரக்கப்பட்டார்.

3. **எச். ஏ. கிருட்டிணனார் எழுதிய இரட்சணிய யாத்திரிகம் என்ற நூல் எந்த இதழில் எத்தனை ஆண்டுகள் வெளியானது?**
   - 'நற்போதம்' எனும் ஆன்மிக மாத இதழ்.
   - பதின்மூன்று ஆண்டுகள்.
   - முதல் பதிப்பு - 1894 மே திங்கள்.

www.kalvikadal.in

4. **நம் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள இரட்சணிய யாத்திரிகம் எந்தப்பகுதியில் இடம் பெற்றுள்ளது?**

குமார பருவத்தில் இரட்சணிய சரித படலத்தில் இடம் பெற்றுள்ளது.

5. **'எண்ண மிட்டவர் பொந்தியு பிலாத்தேனும் இறை முன்' இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக.**

**இடம் :**

எச்.ஏ. கிருட்டிணனார் எழுதிய இரட்சணிய யாத்திரிகம் என்ற நூலில் இடம் பெற்றுள்ளது.

**பொருள் :**

இயேசு பெருமானுக்குத் தண்டனை பெற அழைத்துச் செல்லுதல்.

**விளக்கம்:**

இறைமகனைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்டு போந்தியு பிலாத்து என்னும் ஆளுநரின் முன் நிறுத்தினர். தண்டனை பெற்று தரவும் உறுதியாகவும் இருந்தனர்.

6. **எச்.ஏ. கிருஷ்ணனார் எழுதிய நூல்கள் யாவை?**

போற்றித்திருவகல், இரட்சணிய மனோகரம், இரட்சணிய சமய நிர்ணயம்.

7. **கிறித்துவக் கம்பர் எனப் போற்றப்படுபவர் யார்?**

எச்.ஏ. கிருட்டிணனார்.

8. **பாரி, பேகன் செயல் குறித்துப் பழமொழி நானூறு கூறுவன யாவை?**
   - முல்லைக்கொடி படரத் தேர் தந்த பாரியின் செயலும், மயிலுக்குத் தன் ஆடையைத் தந்த பேகனின் செயலும் அறியாமையால் செய்யப்பட்டவை அல்ல.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

- ஈகையால் செய்யப்பட்டவையே இது. இவர்களின் பெருமைக்குப் புகழ் சேர்ப்பது. இதையே பழமொழி நானூறு.
- 'அறிமடமும் சான்றோர்க்கு அணி' என்று கூறுகிறது.

9. **என்கொல் மேதினி கீண்டு வெடித்திலது என்பார்**
**என்கொல் வானம் இடிந்து விழுந்திவது என்பார். இடஞ்சுட்டி பொருள் விளக்கம் தருக.**

**பொருள் :**

இறைமகனாரை யூதர்கள் துன்புறுத்தும் போது மக்களின் புலம்பல்.

**விளக்கம் :**

அணிந்திருந்த ஆடையைக் கழற்றி விட்டு முருக்க மலர் போன்ற ஆடையை அணிந்தனர். தலையில் கூர்மையான முள் முடியை அழுத்தினர். இரத்தம் பீறிட்டதைக் கண்டு உலகம் வெடிக்கவில்லையே! வானம் விழவில்லையே! கடல் வற்றவில்லையே! உலகம் இன்னும் ஏன் அழியவில்லை என்று ஜெருசலேம் மக்கள் புலம்பினர்.

10. **சிறுபாணாற்றுப்படை - குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| இயற்றியவர் | : | நல்லூர் ரத்தத்தனார் |
| நூல் அமைப்பு | : | பத்துப்பாட்டுகளுள் ஒன்று |
| பாட்டுடைத்தலைவன் | : | ஒய்மாநாட்டு நல்லியக் கோடன் |
| மொத்த அடிகள் | : | 269 |
| | | ஆற்றுப்படை நூல்களுள் ஒன்று. |
| | | பரிசு பெற்ற பாணன் வழியில் கண்ட மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்தல். |

www.kalvikadal.in

## சிறுவினா

1. **எச். ஏ. கிருட்டிணனார் குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | எச்.ஏ. கிருஷ்ணப் பிள்ளை |
| பெற்றோர் | : | சங்கர நாராயணன் - தெய்வநாயகி |
| காலம் | : | ஏப்ரல், 23, 1827 (23.04.1827) |
| ஊர் | : | திருநெல்வேலி - கரையிருப்பு |
| பணி | : | 32 ஆண்டு தமிழாசிரியர் |
| நூல்கள் | : | இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய மனோகரம், இரட்சணிய நவநீதம், இரட்சணிய சமய நிர்ணயம். |
| பெருமை | : | கிறித்துவக் கம்பர் |
| | | இவருடைய நூல் 'நற்போதகம்' எனும் இதழில் வெளிவந்தது. |

2. **இறைமகனாருக்கு யூதர்கள் செய்த கொடுஞ்செயல்கள் யாவை?**
- யூதர்கள் இறைமகனாரைக் கயிற்றால் கட்டினர். ஒன்று கூடி இகழ்ந்தனர்.
- கொல்வதற்காக ஆளுநர் போந்தியு பிலாத்து முன் நிறுத்தினர்.
- அணிந்திருந்த ஆடையைக் கழற்றி முழுக்க மலர் போன்ற சிவந்த ஆடையைப் போர்த்தினர்.
- கூர்மையான முள் செடியால் ஆன முடியை தலையில் வைத்து அழுத்தி, இரத்தம் பீறிடச் செய்தனர்.
- கையில் இருந்த கோலைப் பிடுங்கி தலையில் அடித்தனர்.
- திருமுகத்தில் எச்சிலை உமிழ்ந்து பழித்தனர்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

3. **தமிழுக்குத் தலை கொடுத்த குமண வள்ளல் குறிப்பு வரைக.**

- புறநானூறு குறிப்பிடப்படும் வள்ளள் குமணன்.
- முதிர மலையை ஆட்சி செய்தவன் (பழனி மலை)
- தன் தம்பியிடம் நாட்டைக் கொடுத்துவிட்டு காட்டில் மறைந்து வாழ்ந்தான்.
- இளங்குமணன் தன் அண்ணனின் தலையைக் கொண்டு வருபவருக்கு பரிசு என்று அறிவித்தான்.
- அவ்வேளையில் குமணனை நாடி வந்த சாத்தனாருக்கு பொருள் இல்லாமையால் இடைவாளைத் தந்து 'தன் தலையை அரிந்து' சென்று இளங்குமணனிடம் பரிசு பெறுமாறு வேண்டினான்.
- இச்செய்தியைப் புறம் 158 - 164 - 165 பாடல் மூலம் அறிய முடிகிறது.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 199

1. **பொறுத்தாரை இவ்வுலகம் பொன்போல் போற்றும் - என்னும் தலைப்பில் கலந்துரையாடுக.**

**பங்கு பெறுவோர் : ராமு, கோபு மற்றும் தமிழ் ஆசிரியர்.**

**இருவரும்** : ஐயா வணக்கம்.

**தமிழ் ஐயா** : வணக்கம் வாருங்கள் என்ன வேண்டும்?

**ராமு** : ஐயா, பொறுத்தார் என்பவரைப் பற்றிக் கூறுங்கள்

**ஐயா** : பிறர் நமக்கும் செய்யும் தவறுகளை, குற்றங்களைப் பொறுத்துக் கொள்பவர் பொறுத்தார் ஏனென்றால் அவர் அறியாமையால் கூட தவறு செய்திருக்கலாம்.

www.kalvikadal.in

**கோபு** : பொறுத்தாரைப் பொன் போல் பொதிந்து - இந்தத் தொடருக்கு விளக்கம் வேண்டும் ஐயா!

**சோமு** : இதற்குச் சான்றான நடந்த நிகழ்வைக் கூறுங்கள் ஐயா.

**ஐயா** : விடுதலைப் போராட்டத்தில் அண்ணல் காந்திக்கு எவ்வளவோ துன்பங்கள் எதிர்கொண்டன. இங்கிலாந்தில் ஒரு முறை சர்ச்சில் அரையாடைப் பண்டிதர் என்ற கேலி செய்தாராம். சபர்மதி ஆசிரமத்தில் ஹரிஜன மக்கள் உறுப்பினராவதை எதிர்த்து உயர்சாதி உறுப்பினர்கள் ஆசிரமத்தை விட்டு வெளியேறினர். காந்தி இதனையும் பொறுத்தார். அண்ணல் அம்பேத்காரைச் சட்ட அமைச்சராக்கி, அரசியல் நிருணய சபையின் தலைவராக்கியதால் அதில் இருந்த உறுப்பினர்கள் ஒத்துழைக்கவில்லை. இதை அம்பேத்கர் பொறுத்துக் கொண்டார் போதுமா மாணவர்களே!

**இருவரும்** : நன்றி ஐயா! 'பொறுத்தாரைப் பொன் போல் பொதிந்து' என்பதன் விளக்கம். அற்புதமாக இருக்கிறது ஐயா.

✱✱★★★✱✱



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

இயல் 8
செய்யுள்

# சிறுபாணாற்றுப்படை

- நத்தத்தனார்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி**

அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி **[விடை: இ]**

2. **கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்**

அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக் கோடனும் குமணனும்
இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும் **[விடை: ஆ]**

### சிறுவினா

1. **கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப் படுத்துக.**

| எண் | வள்ளல்கள் | நாடு | செயல்கள் |
|---|---|---|---|
| 1. | **பேகன்** | ஆவினன்குடி | மழைப்பொழியும் மலைசாரலில் செல்லும் கருமேகங்கண்டு ஆடிய மயில் குளிரால் நடுங்குவதாக எண்ணி தன் போர்வையை தந்தவன் (மயிலுக்குப் போர்வை தந்தவன்). |
| 2. | **பாரி** | பறம்பு | நாகமலை பகுதிக்குச் செல்லும் போது படர்வதற்கு பற்று இல்லாமல் ஆடிய முல்லைக்குத் தேர் தந்தவன் |
| 3. | **காரி** | மலையமான் | இவன் வாள் செந்நிறம் கொண்டு ஒளிரும். ஆனால் தன்னைத் தேடி வந்தவருக்கு அன்புமொழி விதைத்த ஈரம் நிலம் போன்றவன் நீண்ட கைகளை உடையவன் |
| 4. | **ஆய்** | பொதியமலை | நீல நாகத்தின் உடைய ஆலின்கீழ் அமர்ந்த இறைவனுக்குக் கொடுத்தவன் |
| 5. | **நள்ளி** | நெடுங்கோடு மலைமுகடு | போர் முனையில் நீளும் கைகள் போல மக்கள் வாழ்க்கைக்கு அனைத்தும் வாரி வழங்கியவன் |
| 6. | **ஓரி** | மலைநாடு (ஊட்டி) | மணம் வீசும் மலர்கள் உடைய மலைநாட்டைக் கூத்தர்க்குத் தந்தவன் |

2. **கொடை வழங்குதலில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.**

- கொடை என்பது மடைமை குணங்களில் ஒன்றாகும்.
- மடம் என்பது அறியாமை என்ற பொருள்.
- இன்னாருக்கு இன்னது கொடுக்க வேண்டும் என்பதை எண்ணாமல் கிடைத்ததை நினைத்த போது கொடுப்பதுதான் கொடை.


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

- இது சரியா தவறா என்று ஆலோசிக்க அறிவுக்கு இடம் கொடுக்காமல் உள்ளத்துக்குக் கொடுக்கும்போது தோன்றுவது கொடை மடம்.

இதைத்தான் வள்ளுவர்

**வறியார்க்கொன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்**

**குறியெதிர்ப்பை நீர் உடைத்து** - என்கிறார். இதன்படியே நாமும் கொடை வழங்குவதைப் பின்பற்றலாம்.

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| **வாய்த்த, உவப்பு, கொடுத்த, ஈந்த** | - | பெயரெச்சங்கள் |
| **கவாஅன்** | - | செய்யுளிசையளபெடை |
| **தடக்கை** | - | உரிச்சொல் தொடர் |
| **நீலம்** | - | ஆகுபெயர் |
| **அருந்திறல், நெடுவழி, வெள்ளருவி, நன்மொழி,நெடுவேல், நன்னாடு** | - | பண்புத் தொகைகள் |
| **கடல்தானை** | - | உவமைத்தொகை |
| **அரவக்கடல்** | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |
| **மலைதல்** | - | தொழிற்பெயர் |
| **விரிகடல்** | - | வினைத்தொகை |

## உறுப்பிலக்கணம்

www.kalvikadal.in

| | |
|---|---|
| **ஈந்த = ஈ + த்(ந்) + த் + அ** | **அமர்ந்தனன் = அமர் + த்(ந்) + த் + அன் + அன்** |
| ஈ - பகுதி | அமர் - பகுதி |
| த் - சந்தி ('ந்' ஆனது விகாரம்) | த் - சந்தி (ந் ஆனது விகாரம்) |
| த் - இறந்தகால இடைநிலை | த் - இறந்தகால இடைநிலை |
| அ - பெயரெச்ச விகுதி | அன் - சாரியை |
| | அன் - ஆண்பால் வினைமுற்று விகுதி |
| **தாங்கிய = தாங்கு + இ(ன்) + ய் + அ** | |
| தாங்கு - பகுதி | |
| இ(ன்) - இடைநிலை | |
| ய் - உடம்படுமெய் | |
| அ - பெயரெச்ச விகுதி | |

## புணர்ச்சி விதி

1. **நன்மொழி = நன்மை + மொழி**
   ஈறுபோதல் என்ற விதிப்படி மை கெட்டு நன் + மொழி = நன்மொழி என்று புணர்ந்தது.
2. **உரனுடை = உரன் + உடை**
   'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி (ன் + உ = னு) 'உரனுடை' எனப் புணர்ந்தது.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. பொருத்துக :**

i) பேகன் - மலையமான் நாடு
ii) பாரி - பறம்பு மலை
iii) காரி - பொதிய மலை
iv) ஆய் - பொதினி மலை

அ) 4, 2, 3, 1 ஆ) 4, 2, 1, 3 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 2, 1, 4 **[விடை: ஆ]**

**2. பொருந்தாத இணையைத் தேர்க.**

அ) அதிகன் - கதடூர்
ஆ) நள்ளி - நளி மலை
இ) ஓரி - கொல்லி மலை
ஈ) காரி - பொதிய மலை **[விடை: ஈ]**

**3. பொருத்துக.**

i) கலிங்கம் - வண்டு
ii) சுரும்பு - சுரபுன்னை
iii) நாகம் - பாரம்
iv) நுகம் - ஆடை

அ) 4, 1, 2, 3 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 4, 3 **[விடை: அ]**

**4. பொருத்துக.**

i) போது - கூத்தர்
ii) உறழ் - வில்
iii) கோடியர் - மலர்
iv) சாவம் - செறிவு

அ) 3, 4, 1, 2 ஆ) 4, 1, 2, 3 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 2, 1, 4 **[விடை: அ]**

**5. பொருத்துக.**

i) ஆலமர் செல்வன் - போரிடல்
ii) நாகு - மலைப்பக்கம்
iii) மலைதல் - சிவபெருமான்
iv) கவாஅன் - இளமை

அ) 3, 4, 1, 2 ஆ) 4, 1, 2, 3 இ) 2, 3, 4, 1 ஈ) 3, 2, 4, 1 **[விடை: அ]**

**6. பொருத்துக.**

i) மயிலுக்குப் போர்வை - பாரி
ii) முல்லைக்குத் தேர் - பேகன்
iii) ஔவைக்கு நெல்லிக்கனி - ஆய்
iv) கூத்தர்க்கு மலைநாடு - அதிகன்
v) சிவனுக்கு நீலமணி - ஓரி

அ) 2, 1, 4, 5, 3 ஆ) 4, 5, 3, 2, 1 இ) 3, 2, 1, 4, 5 ஈ) 1, 4, 5, 3, 2 **[விடை: அ]**

www.kalvikadal.in


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

7. **ஆவியர் குலத்தில் தோன்றியவன்**
அ) பாரி ஆ) ஓரி இ) காரி ஈ) பேகன் **[விடை: ஈ]**

8. **பொருத்துக**

| | | | |
|---|---|---|---|
| i) | வீரக்கழலை உடையவன் | - | ஆய் |
| ii) | வில் ஏந்தியவன் | - | காரி |
| iii) | வேலினை உடையவன் | - | நள்ளி |
| iv) | போர்த் தொழிலில் வல்லமையுடையவன் | - | அதிகன் |

அ) 2, 1, 4, 3 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 1, 3, 4 ஈ) 3, 4, 2, 1 **[விடை: அ]**

9. **தனியொருவனாக இருந்து ஈகையின் பாரத்தைத் தாங்கி செல்பவன்**
அ) அதிகன் ஆ) பேகன்
இ) நள்ளி ஈ) நல்லியக்கோடன் **[விடை: ஈ]**

10. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| i) | வாய்த்த | - | செய்யுளிசையளபெடை |
| ii) | காவஅன் | - | பெயரெச்சம் |
| iii) | தடக்கை | - | ஆகுபெயர் |
| iv) | நீலம் | - | உரிச்சொல் தொடர் |

அ) 2, 1, 4, 3 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 4, 3, 1 ஈ) 1, 3, 4, 2 **[விடை: அ]**

11. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| i) | நெடுவேல் | - | வினைத்தொகை |
| ii) | கடல்தானை | - | தொழிற்பெயர் |
| iii) | விரிகடல் | - | உவமைத்தொகை |
| iv) | மலைதல் | - | பண்புத்தொகை |

www.kalvikadal.in

அ) 4, 3, 1, 2 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 3, 1, 4 **[விடை: அ]**

11. **சிறுபாணன் பயணம் தொடங்கிய இடம் .................. முடித்த இடம் ..................**
அ) நல்லூர், திண்டிவனம் ஆ) மரக்காணம், வேலூர்
இ) வேலூர், ஆமூர் ஈ) எயிற்பட்டினம், நல்லாமூர் **[விடை: அ]**

12. **சிறுபாணனின் பயணம் குறித்த தகவல்களைப் பத்துப்பாட்டு ஆராய்ச்சி என்னும் நூலில் குறிப்பிட்டுள்வர்**
அ) மயிலை சீனி. வேங்கடசாமி ஆ) விபுலானந்த அடிகள்
இ) மா. இராசமாணிக்கனார் ஈ) மறைமலையடிகள் **[விடை: இ]**

13. **ஆவினன்குடி 'பொதினி' என்றழைக்கப்பட்டு தற்போது .................. எனப்படுகிறது.**
அ) பழனி ஆ) பிரான் மலை இ) திருக்கோவிலூர் ஈ) தர்மபுரி **[விடை: அ]**

14. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| i) | பறம்பு மலை | - | உதகமண்டலம் (ஊட்டி) |
| ii) | மலையமான் நாடு | - | தர்மபுரி |
| iii) | பொதிய மலை | - | பிரான்மலை |
| iv) | தகடூர் | - | குற்றாலம், பாபநாசம் உள்ளிட்ட பகுதிகள் |
| v) | நளிமலை | - | திருக்கோவிலூர் |

அ) 3, 5, 4, 2, 1 ஆ) 4, 2, 1, 5, 3 இ) 1, 5, 3, 4, 2 ஈ) 4, 2, 5, 3, 1 **[விடை: அ]**


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in



15. சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் சிங்கம்புணரிக்கு அருகில் உள்ள மலை
அ) பொதிய மலை ஆ) பிரான் மலை
இ) நளி மலை ஈ) கொல்லி மலை [விடை: ஆ]

16. விழுப்புரம் மாவட்டத்தில் திருக்கோவிலூர் அமைந்துள்ள ஆற்றங்கரை
அ) காவிரி ஆ) தென்பண்ணை இ) பாலாறு ஈ) வெட்டாறு [விடை: ஆ]

17. தற்போது அகத்தியர் மலை எனப்படுவது
அ) பொதினி மலை ஆ) பொதிய மலை இ) பறம்பு மலை ஈ) நளி மலை [விடை: ஆ]

18. கொல்லி மலை அமைந்துள்ள மாவட்டம்
அ) நாமக்கல் ஆ) விழுப்புரம் இ) திருநெல்வேலி ஈ) சிவகங்கை [விடை: அ]

19. திண்டிவனத்தைச் சார்ந்தது .................. நாடு என அழைக்கப்பட்ட நிலப்பகுதி.
அ) மலையமான் ஆ) ஓய்மா இ) தகடூர் ஈ) பறம்பு [விடை: ஆ]

20. 'அறிமடமும் சான்றோர்க்கு அணி' என்று கூறும் பழமொழி நானூற்றுப் பாடலுக்குச் சான்றாக அமைபவர்கள்
அ) பாரி, பேகன் ஆ) ஓரி, காரி
இ) ஆய், அதிகன் ஈ) நல்லியக்கோடன், நள்ளி [விடை: அ]

21. வள்ளல் குமணனைப் பற்றிக் குறிப்பிடும் நூல்
அ) பதிற்றுப்பத்து ஆ) புறநானூறு
இ) பரிபாடல் ஈ) பட்டினப்பாலை [விடை: ஆ]

www.kalvikadal.in

23. குறுநில மன்னன் குமணனால் ஆளப்பட்ட மலை
அ) பொதினி மலை ஆ) முதிரமலை
இ) நளிமலை ஈ) கொல்லிமலை [விடை: ஆ]

24. 'தன் தலையை அரிந்து சென்று, இளங்குமணனிடம் கொடுத்துப் பரிசில் பெற்றுச் செல்லுமாறு' குமணனால் கேட்டுக் கொள்ளப்பட்ட புலவர்
அ) பிராந்தையார் ஆ) கபிலர்
இ) பெருந்தலைச் சாத்தனார் ஈ) பரணர் [விடை: இ]

25. சிறுபாணாற்றுப்படையை இயற்றியவர்
அ) மாங்குடி மருதனார் ஆ) நல்லூர் நத்தத்தனார்
இ) வெள்ளைக்குடி நாகனார் ஈ) பூதஞ்சேந்தனார் [விடை: ஆ]

26. சிறுபாணாற்றுப்படை .................. நூல்களுள் ஒன்று.
அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாடல்
இ) பதினெண்கீழ்க்கணக்கு ஈ) நீதி [விடை: ஆ]

27. சிறுபாணாற்றுப்படையின் பாடலடிகள்
அ) 263 ஆ) 269 இ) 220 ஈ) 210 [விடை: ஆ]

28. ஓய்மாநாட்டு மன்னனான நல்லியக்கோடனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூல்
அ) சிறுபாணாற்றுப்படை ஆ) பெரும்பாணாற்றுப்படை
இ) திருமுருகாற்றுப்படை ஈ) பொருநாற்றுப்படை [விடை: அ]





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in







## குறுவினா

1. **மனித இனத்தின் அடையாளம் எவை?**
   - ஈகைப் பண்பு
   - கொடுக்கிற பண்பு இருந்தால் எடுக்கிற நிலை இருக்காது.

2. **சிறுபாணாற்றுப்படை பாடலை பாடியவர் பாடப்பட்டோர் யார்?**
   - பாடியவர்: இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார்
   - பாடப்பட்டோன்: ஒய்மாநாட்டு மன்னன் நல்லியக் கோடன்

3. **ஆற்றுப்படை என்பது யாது?**
   - ஆறு + படை = ஆற்றுப்படை வழிபடுத்தல் என்பதன் பொருளாகும்.
   - பரிசில் பெற்ற பாணன் பரிசில் பெற போகும் பாணனைக் கண்டு வழிபடுத்தல்.

4. **இளங்குமணன் விட்ட அறிக்கை யாது?**

   காட்டில் மறைந்து வாழும் தன் அண்ணன் குமணனின் தலையை கொண்து வருவோருக்கு பரிசில் தருவதாக செய்தி அறிவித்தான்.

5. **குமணனின் கொடைத் தன்மையை விளக்குக.**

   தன்னை நாடி பரிசில் பெற வந்த பெருந்தலைச் சாத்தனார் எனும் புலவருக்குக் கொடுப்பதற்குத் தன்னிடம் பொருள் இல்லாமையால் தன் இடை வாளைத் தந்து 'தன் தலையை அறிந்து சென்று இளங்குமணனிடம் கொடுத்து பரிசில் பெற்றுச் செல்லுமாறு' கேட்டுக்கொண்டான். இதுவே குமணனின் கொடைத் தன்மையாகும்.

www.kalvikadal.in

6. **கடையெழு வள்ளல்கள் ஆண்டப் பகுதியை தற்காலப் பெயர்களோடு பட்டியலிடுக.**

| | | |
|---|---|---|
| **பேகன்** | பொதினிமலை | பழனிமலை |
| **பாரி** | பறம்பு மலை | பிரான் மலை |
| **காரி** | மலையமான் | மலாடு |
| **ஆய்** | பொதிய மலை | குற்றாலம் |
| **அதிகன்** | தகடூர் | தருமபுரி |
| **நள்ளி** | நளிமலை | ஊட்டி |
| **ஓரி** | கொல்லி மலை | கொல்லிமலை |

## கற்பவை கற்றபின்

பக்கம்: 204

1. **எதையும் எதிர்பாராமல் நீங்கள் பிறருக்கு உதவி செய்த நிகழ்வை வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.**

*மாணவச் செல்வங்களே!*

**வணக்கம்.**

எதையும் எதிர்பார்க்காமல் செய்த உதவி மண்ணையும் விண்ணையும்விட உயர்வானது. அது பற்றிய ஒரு நிகழ்வைக் கூறுகிறேன். பத்து ஆண்டுகளுக்கு முன் நமது பள்ளி வாயிலைக் கடக்கும் போது என்னை சார் என்ற குரல் அழைத்துத் திரும்பினேன். ஒரு ஐம்பது வயதுள்ள ஒரு அம்மாவும், பத்து வயது இருக்கும் ஒரு பையனும் நின்றிருந்தார்கள். என்னம்மா வேண்டும் என்றேன். சார் இவன் என் மகளுடைய பேரன். இவனுடைய அப்பா, அம்மா சுனாமி ஏற்பட்ட போது கடல் அன்னையால்





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





உள்வாங்கப்பட்டார்கள். இவன் தமிழ்வழிப் படித்தவன் உங்கள் பள்ளி ஆங்கில வழியாம் இவனால் படிக்க முடியாதாம். கட்டணமும் அதிகமாம். வேறிடம் போகச் சொல்லி விட்டார்கள் என்றாள் அந்த அம்மா.

உடனே, முதல்வர் அறைக்குச் சென்று என் செல்வாக்கைப் பயன்படுத்தி, நான் இவன் மீது கவனம் செலுத்துகிறேன் என்று உத்தரவாதம் கூறிப் பள்ளியில் சேர்த்தேன். இவ்வசமாக படிக்க பள்ளியில் அனுமதி பெற்றேன். இன்று அவன் காவல்துறை அதிகாரி. சில நாட்களுக்கு முன் அவனுடைய பாட்டி என்னைப் பார்க்க தன் பேரனோடு வந்தார்கள். ஆனந்தக் கண்ணீர் வடித்தாள் பாட்டி. அவனும் என்னைப் பார்த்து நன்றி கூறினான். எதிர்பாராமல் செய்த உதவி என்னை மகிழ்ச்சியில் உறைய வைத்தது. ஆமாம், மாணவர்களே எதையும் எதிர்பாராமல் செய்யுங்கள்.

2. **தமிழர்கள் கொடைத் தன்மையில் சிறந்து விளங்கினர் என்பதற்குச் சான்றுகள் திரட்டி ஒப்படைவு.**

உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு போன்று பண்டையத் தமிழரின் வரலாறு, வாழ்வியல், அறம், ஈதல் போன்றவற்றை அறிய புறநானூறு ஒன்றைச் சான்றாகக் காட்டலாம்.

**பாடல் உனக்கு பரிசில் எனக்கு :**

தன்னை எதிர்த்துப் போரிட்ட பகைவனின் காவல் மிக்க அரண்களை அழித்துப் போர் புரிந்த வீரத்தைப் புகழ்ந்து பாடிய பாடினிக்கு பல கழஞ்சால் செய்யப்பட்ட பொன் அணிகலன்களையும், அவளோடு வந்து இணைந்து பாடிய பாணனுக்கு வெள்ளி நாறால் கோக்கப் பெற்ற தாமரைப் பூ மாலையும் பரிசாக வழங்கினான்.

**மறம் பாடிய பாடினியும்மே**
**ஏருடைய விழக்கழஞ்சிற்**
**சீருடைய விழை பெற்றி சினே**

www.kalvikadal.in

**பொற்றாமரையும் யானையும் வழங்குதல்:**

**“பாணாட தாமரை மலையவும் புலவர்**
**பூநுதல் யானையொடு புனைதேர்.....**

பாணர்களுக்குப் பொற்றாமரை ஈதலும், புலவர்களுக்கு யானையை வழங்குதலும் கொடையாகத் தமிழர்கள் கொண்டு வாழ்ந்தனர்.

✸✸★★★✸✸





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

இயல் 8
துணைப்பாடம்

# கோடை மழை

– சாந்தா தத்

## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

1. **கோடை மழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப்பண்புகளை விளக்குக.**

**கதைமாந்தர்கள் : ஆறுமுகம் (முதியவர்), குழந்தை, பாபு (மருந்தக ஊழியர்), டாக்டர், நர்ஸ்.**

**முன்னுரை :**

சாந்தா தத்தின் 'கோடை மழை' எனும் சிறுகதையில் மனைவி இறந்த துக்கம் தாளாது கணவனும் விஷமருந்தி போனதால் பச்சிளம் குழந்தையை முதியவர் ஆறுமுகம் வளர்க்கிறார். தள்ளாத வயதில் தனக்குப் பின் இக்குழந்தையின் நிலை என்ன ஆகுமோ என்று எண்ணி தத்துக் கொடுக்க முடிவு செய்கிறார். அவ்வாறு தத்துக் கொடுக்கும்போது ஏற்படுகின்ற மனித நேயப்பண்புகளை இக்கட்டுரை வாயிலாக அறியலாம்.

**மருத்துவமனையில் குழந்தை அழுதல்:**

www.kalvikadal.in

விழிகளை அகலவிரித்து எந்தவித இலக்கும் இல்லாமல் அப்படியும் இப்படியும் பார்த்து கண்ணைச் சுழற்றி குழந்தை அழ ஆரம்பித்தது. இது போலவே அரை மணி நேரமாக அவஸ்திப்படும் குழந்தைக்குப் பசியா, காய்ச்சலா, அசதியா தெரியவில்லை என்று ஏங்குகிறார் முதியவர் ஆறுமுகம்.

**முதியவரின் புலம்பல் :**

குழந்தைக்கு ரெண்டு சொட்டு டீத்தண்ணீர் கொடுக்கனும் தானும் குடித்தால் தொண்டைக்கு இதமா இருக்கும். டீ விற்கும் பையனையும் உள்ளே விடமாட்டார்கள் வெளியே போய்விட்டு வந்தால் இடம் போய்விடும் என்ன செய்றது. பரபரத்து ஓடி வந்தும் பலன் இல்லை என்று தமக்குத் தாமே எண்ணிக் குழந்தையைத் தோளில் சரிசெய்து கொண்டு சமாதானம் ஆனார்.

**முதியவரின் பொறுமை :**

ஆஸ்பிட்டலில் வரிசை ஆமை வேகத்தில் சென்றதால் முதியவருக்கு அலுப்பு கூடியது. வீட்டுக்குப் போலாமா என்ற எரிச்சல் இரண்டு நாளா குழந்தைக்குக் கை வைத்தியம் பார்த்தும் பிடிபடல, தனியார் ஆஸ்பத்திரிக்கு போக வசதியும் இல்ல, மனுச ஆதரவும் இல்ல இன்னும் என்ன நடக்கப் போகுதோ பொறுமையாய் இருப்போம் காசா பணமா.

**முதியவரின் நிலைப்பாடு :**

அடப்பாவமே ஆண்டவன் கொடுத்த உசுரு தன்னையும் பார்த்துக் கொள்ள யாரும் இல்ல, தன்னையே தானும் பார்த்துக் கொள்ளவும் முடியல ஆயுசு பூராவும் இந்தக் குழந்தையோடு இந்தக் கிழடு அல்லாட வேண்டியது தான். உனக்கு நான் எனக்கு நீ என்றாகிவிட்ட நாதியற்ற அவஸ்தை, தகப்பனையும் பிள்ளையையும் பாதுகாக்க வேண்டிய வாரிசு நட்டாத்துல விட்டுட்டுப் போய்விட்டான். நாலு நாள் நல்ல காய்ச்சல் கட்டியவள் கண் மூடிய பின் தானும் குழந்தையை அனாதை ஆக்கிவிட்டுச் சென்றுவிட்டான்.

**முதியவரின் தனிமை :**

அனாதை ஆகிவிட்ட குழந்தையை எண்ணி முதியவரின் ஓயாத புலம்பல். ஆனால் தன் பிள்ளையைப் பிரிந்த துயரம் துளியும் இல்லை. அந்த அளவுக்கு வெறுப்பு. என்னையும் குழந்தையும் தனியாக்கிட்டு போயிட்டானே என்ற கோபம். பாசம் பாசிபோல் மூடிவிட்டது. பிஞ்சுப் பிள்ளைக்கூட நினைக்காமல் பொண்டாட்டி மேல பாசம். எத்தனையோ ஆண்கள் மனைவியை இழந்து வாழல. இவனெல்லாம் ஒரு கோழை.

**மருத்துவரிடம் செல்லுதல் :**

மீண்டும் குழந்தை சினுங்க ஆரம்பித்துவிட்டது அப்போது உள்ளேயிருந்து ஒரு தாய் உள்ளேயிருந்து தன் தோளில் கோழிக்குஞ்சு போல் தூக்கிக் கொண்டு வந்தாள். அவளைப் பார்க்கவும் நினைக்கவும் முடியாமல் மூச்சு விடுவதை தவிர ஏதும் தெரியாமல் உள்ளே சென்றார்.

**மருத்துவரின் அறிவுரை :**

பெரியவரே! நெஞ்சில் சளி கட்டி இருக்கு அதான் காய்ச்சல் பயப்பட வேண்டாம் பக்குவமாய் பார்த்துக் கொண்டால் இரண்டு நாளில் சரியாகிவிடும் என்று கூறிவிட்டு மருந்து சீட்டு எழுதிக் கொடுத்தார்.

**நர்ஸ் நலம் விசாரித்தல் :**

ஏன் பெரியவரே உங்க கை இப்படி நடுங்குது. வீட்ல வேற யாரும் இல்லையா? என்று கேட்க பதில் கூற முடியாமல் ஊசி போட்ட குழந்தை வலியால் அழுவதை அணைத்துக் கொண்டு சிரிப்பை மட்டும் பதிலாக்கி விட்டு வெளியேறினார்.

**மருந்தகம் செல்லுதல் :**

www.kalvikadal.in

வாங்கய்யா உட்காருங்க குழந்தைக்கு உடம்பு சரியில்லையா! ஆமாம் பாபு மூணு நாளா ரொம்ப கஷ்டப்படுது டாக்டர் ஊசி போட்டிருக்கார். மருந்து கொடுத்தா சரியாயிடும்னு சொன்னார். பாபு..... நான் மருந்து மட்டும் வாங்க வரல ரொம்ப நாளா சொல்லணும் நினைச்சேன். இப்பத்தான் நேரம் வந்தது. பாபு நான் ரொம்ப நாள் உசிரோட இருக்கணும்னு தான் ஆசை நெஞ்சில் உரம் இருந்தாலும் உடம்பு கேட்கனுமே? சாவோட மல்லுக்கு நிற்கிற வயசா இது முடியலப்பா. நாளைக்கு நீ அவங்கள கூட்டிட்டு வா.

**தாய் பாசம் :**

அம்மா என்கிற பாசம் தெரியாமல் இருக்க இது மட்டும் என்ன பாவம் செய்தது. பெண்ணோட பரிவும் பாசமும் ஒரு குழந்தைக்கு எவ்வளவு முக்கியம்னு இப்பதான் பாபு புரியுது. என் சுயநலத்துக்காக குழந்தையை அனாதையாக விட்டுட்டு போறது பெரிய பாவம். சரி பாபு கொஞ்சம் தாமதித்தாலும் மனசு மாறிடும் மருந்தும் குழந்தையுமாய் விடவிடுவென நடந்தார்.

**முதியவரின் குமுறல்கள் :**

பாபுவுடன் வந்தவர்களைப் பார்த்த போது பிள்ளை பாக்கியம், ஏக்கம், தவிப்பு, அத்தனையும் உணர்ந்த போது குழந்தையின் பாதுகாப்பு உறுதியானது. நெடுநாள் தயக்கத்துக்குப் பின் தன் முடிவுக்கு இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. நெருடல் எல்லாம் பிள்ளையைப் பிரிந்து இருக்க வேண்டுமே என்பதுதான் பெரியவருக்கு உறுத்தல்.

**பாபுவின் மனித நேயம் :**

ஐயா! இனிமேல் உங்களுக்குக் கவலை வேண்டாம். உங்களுடைய வேதனை எங்களால் தாங்க முடியல. நீங்க எங்க வாழ்க்கைக்குப் பெரிய நம்பிக்கை கொடுத்து இருக்கிங்க. நன்றி சொல்றதுக்கு பதிலா நான் உங்கிட்ட உதவி கேட்கிறேன் நீங்களும் குழந்தையைப் பிரிந்து இருக்காம எங்களோட வந்திருங்க தயங்காதீங்க.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

**முதியவரின் தடுமாற்றம் :**

இறைஞ்சும் பாபுவைக் கண்டு தடுமாறினார். யாருக்கு யார் உதவி? எவ்வளவு பெரிய விஷயம் பாபு இப்போதைக்கு எனக்கு சாவு வராது பாபு கூறினார்.

**முடிவுரை:**

இக்காலக்கட்டத்தில் தன்னைப் பெற்ற தாய் தந்தையரை முதியோர் இல்லத்தில் விடும் ஆண்களைப் போல் இல்லாமல் தாய் தந்தையை இழந்த பச்சிளம் குழந்தையையும், முதியவரையும் அரவணைத்துத் தம் இல்லத்திற்கு அழைத்துச் செல்லும் பாபுவின் மனிதநேயப் பண்பு, கோடை மழை – கதை வாயிலாக அறிய முடிகிறது.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 208

1. **பொது இடங்களில் நீவிர் பார்த்த மனிதநேய நிகழ்வை வகுப்பறைச் சூழலில் பகிர்ந்து கொள்க.**

எங்கள் ஊரின் பேருந்து நிறுத்தத்தில் ஒரு நாள் நின்று கொண்டிருந்தேன். அவ்விடம் அதிகமாக மக்கள் கூடுவார்கள். பேருந்து நிறுத்தத்தின் அருகில், 50 வயதுள்ள ஒருவர் கரித்துண்டால் கோவில், திருச்சபை பள்ளிவாசல் என வரைந்து கொண்டிருந்தார். ஓவியம் அற்புதம். முழுமையாக அவரைப் பார்த்தேன். கால்கள் இரண்டும் இல்லை. இறைவா இது என்ன சோதனை என்று நினைத்துக் கொண்டேன். அப்போது பத்து வயது சிறுவன் அவருக்குச் சிற்றுண்டி வாங்கி வந்து ஊட்டுவதைப் பார்த்தேன். விசாரித்ததில் அவர் நல்ல ஓவியர். விபத்தில் கால்கள் இழந்ததால் மனைவியும், உறவினரும் இவரைக் கைவிட்டுவிட்டதாகவும் கொன்னார்கள். இந்தப் பையனும் ஒரு அனாதை. ஆனால், இவருக்குக் கிடைக்கும் பணத்தில் அந்தப் பையன் தானும் சாப்பிட்டுக் கொண்டு இவரையும் கவனித்துக் கொள்கிறான் என்றார்கள். இதுதான் மனித நேயம்.

www.kalvikadal.in

ஒரு வாரம் கழித்து நானும் இவர்களை ஓர் அனாதை ஆசிரமத்தில் சேர்த்தேன். அவர்கள் சென்றுவர அரசிடம் பரிந்துரை செய்து மூன்று சக்கர வாகனம் பெற்றுக் கொடுத்தேன். ஒரு சில மாதங்களுக்குப் பிறகு அவர்கள் இருவரையும் பார்த்தேன். எவ்வளவோ மாற்றம்! நன்றி உணர்ச்சியில் அவர்கள் இருவரின் கண்களில் கண்ணீர்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **சாந்தா தத் .................. சேர்ந்த பெண் படைப்பாளர்.**

அ) சென்னையைச் ஆ) சிதம்பரத்தைச் இ) காஞ்சிபுரத்தைச் ஈ) வடலூரைச் **[விடை: இ]**

2. **'கோடை மழை' என்னும் சிறுகதை வெளியான இதழ்**

அ) கோகுலம் ஆ) அமுதசுரபி இ) கணையாழி ஈ) குங்குமம் **[விடை: ஆ]**

3. **'கோடை மழை' என்னும் சிறுகதைக்குச் சிறந்த சிறுகதைக்கான விருதையளித்த அமைப்பு**

அ) இலக்கியச் சிந்தனை ஆ) பாரதி மன்றம்
இ) முத்தமிழ் மன்றம் ஈ) தமிழ் இலக்கியப் பேரவை **[விடை: அ]**

4. **சாந்தா தத் தற்போது வசிக்குமிடம்**

அ) காஞ்சிபும் ஆ) ஹைதரபாத் இ) மைசூர் ஈ) பெங்களூர் **[விடை: ஆ]**

5. **சாந்தா தத்தின் 'நிறை' மாத இதழ் வெளியாகும் இடம்**

அ) சென்னை ஆ) மைசூர் இ) ஹைதரபாத் ஈ) மும்பை **[விடை: இ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





6. சாந்தா தத் .................... என்ற மொழிபெயர்ப்பு இதழின் ஆசிரியர் குழுவில் உள்ளார்.

அ) திசை எட்டும் ஆ) நிறை இ) நானிலம் ஈ) வானம் [விடை: அ]

7. சாந்தா தாத்தின் மொழிபெயர்ப்புகளை வெளியிட்டுள்ளது

அ) சாகித்திய அகாதெமி ஆ) நியூ புக் செஞ்சுரி

இ) கிழக்கு பதிப்பகம் ஈ) மணிவாசகம் பதிப்பகம் [விடை: அ]

8. சாந்தா தத்தின் கதைகளில் வெளிப்படும் அடிப்படைப் பண்பு

அ) பெண்ணியம் ஆ) கல்வி இ) மனிதநேயம் ஈ) அரசியல் [விடை: இ]

9. ‘கோடை மழை’ கதையின் உட்பொருள்

அ) முதியோர்களை அரவணைப்பது ஆ) இளைஞர்களின் காதல்

இ) வறண்ட நிலத்தின் நிலை ஈ) ஏழைகளின் கண்ணீர் [விடை: அ]

✹✹★★★✹✹

www.kalvikadal.in





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

# இயல் 8 குறியீடு

## இலக்கணம்

## இலக்கணத் தேர்ச்சி கொள்

பக்கம்: 211

1. **குறியீடுகளைப் பொருத்துக.**

அ) பெண் - 1. சமாதானம்
ஆ) புறா - 2. வீரம்
இ) தராசு - 3. விளக்கு
ஈ) சிங்கம் - 4. நீதி

அ) 2, 4, 1, 3 ஆ) 2, 4, 3, 1 இ) 3, 1, 4, 2 ஈ) 3, 1, 2, 4 **[விடை: இ]**

2. **கூற்று : 19 ஆம் நூற்றாண்டில் குறியீட்டியம் ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது.**
**காரணம் : பொதலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே முதலானவர்கள் குறியீட்டியத்தை வளர்த்தவர்கள்.**

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி, காரணம் சரி
இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி **[விடை: ஆ]**

3. **சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்.**

அ) உவமை ஆ) உவமேயம்
இ) உத்தி ஈ) உள்ளுறை உவமை **[விடை: ஈ]**

4. **'திட்டம்' என்னும் தலைப்பில் வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக? என்று எழுதப்பட்டுள்ள கவிதையில் 'வரம்' எதற்குக் குறியீடாகிறது?**

அ) அமுதசுரபி ஆ) ஆதிரைப் பருக்கை
இ) திட்டம் ஈ) பயனற்ற விளைவு **[விடை: இ]**

5. **மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?**

அ) குறியீடு ஆ) படிமம்
இ) அங்கதம் ஈ) தொன்மம் **[விடை: அ]**

## குறுவினா

1. **குறியீட்டு உத்தியில் ஒரு புதுக்கவிதை எழுதுக.**

எதிரே
தலைமயிர் தரித்து
கொலு வீற்றிருந்தாள்
உன் நிழல் (பிரமிள்)

2. **வியர்வை கவிதையில் வெளிப்படும் குறியீடுகளைக் குறிப்பீடுக.**

- வியர்வைக்கு - ஆதிரைப் பருக்கை
- செழிப்புக்கு - அமுத சுரபி



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





3. **குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.**

- குறிப்பாக உணர்த்தும் பொருள் அல்லது சொல் குறியீட்டு உத்தி என்பர்.
- சுட்டிய பொருளுக்கும் குறியீட்டுப் பொருளுக்கும் ஏதேனும் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும்.
- சுட்டும் பொருள் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாக இருத்தல் வேண்டும்.
- இத்தொடர்பின் வாயிலாகக் குறியீட்டுப் பொருள் நுண்ணிய முறையில் வெளிப்படுத்த வேண்டும்.

எ.கா. தராசு – நீதி.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **Symbol (சிம்பல்) என்பதன் பொருள்**

அ) ஒன்றுசேர் ஆ) பிரித்தல்
இ) காட்டல் ஈ) விட்டு விலகு **[விடை: அ]**

2. **தமிழின் செல்வாக்கினாலேயே வடமொழியில் குறிப்புப் பொருள் கோட்பாடு உருவானது என்று குறிப்பிட்டவர்**

அ) ஜார்ஜ் ஆ) ஹார்ட் இ) பிரவுன்லீ ஈ) வில்லியம் **[விடை: ஆ]**

3. **'உறுபுலி உருஏய்ப்பப் பூத்த வேங்கையை' – என்ற கபிலரின் கலித்தொகை பாடலில் வெளிப்படும் குறியீடு.**

www.kalvikadal.in

i) தலைவியுடனான திருமணத்தைத் தோழி வலியுறுத்தியதை விரும்பாத தலைவன் அக்கூற்றை மறுத்தற்கு, யானை வேங்கை மரத்தைக் குத்தியது குறியீடாகிறது.

ii) அவள் கூற்றை வேண்டாததாகக் கருதித் தலைவன் வருந்துதலுக்கு, தந்தத்தை எடுக்க இயலாது யானை தவிப்பது குறியீடாகிறது.

அ) i - சரி ஆ) ii - சரி
இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு **[விடை: இ]**

4. **"கோழிலை வாழைக் கோள்முதிர் பெருங்குலை" – என்னும் கபிலரின் அகநானூற்றுப் பாடலில் வெளிப்படும் குறியீடு**

i) ஆண் குரங்கின் செயல் தலைவனின் செயலுக்குக் குறியீடாகிறது.

ii) சுனைநீர்த் தேறல் தலைவன் கொண்டுள்ள இன்பந்தரும் மயக்கத்திற்குக் குறியீடாகிறது.

iii) சந்தன மரத்தில் ஏறுவதற்கு முடியாமல் பூக்களாகிய படுக்கையில் குரங்கு விழுந்து கிடக்கும் செயல், திருமணம் செய்து கொள்ளாமல் இன்பத்தை மட்டும் நகர நினைக்கும் தலைவனது செயலுக்குக் குறியீடாகிறது.

அ) i - சரி ஆ) ii - சரி
இ) மூன்றும் சரி ஈ) iii - மட்டும் சரி **[விடை: இ]**

5. **'வியர்வை' என்னும் தலைப்பில் 'இந்த ஆதிரைப் பருக்கைகள் வீழ்ந்ததும் பூமிப்பாத்திரம் அமுதசுரபி' என்று அப்துல்ரகுமான் எழுதியுள்ள கவிதையில் வியர்வைத்துளிக்குக் குறியீடாவது .................... செழிப்புக்குக் குறியீடாவது ....................**

அ) ஆதிரைப் பருக்கை, அமுதசுரபி ஆ) திட்டம், பயனற்ற விளைவு
இ) அமுதசுரபி, ஆதிரைப்பருக்கை ஈ) பயனற்ற விளைவு திட்டம் **[விடை: அ]**



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





6. **சங்க இலக்கியப் பாடல்களில் வரும் உள்ளுறை உவமம் என்னும் இக்காலத்தில் இலக்கிய உத்தியை '..................' எனலாம்.**

அ) தொன்மம் ஆ) படிமம் இ) குறியீடு ஈ) புதுக்கவிதை **[விடை: இ]**

## குறுவினா

1. **குறியீடு, குறியீட்டியம் சான்றுடன் விளக்குக.**
   - இரண்டு பொருள்களுக்கிடையே உறவு இருக்கும்.
   - உருவ ஒற்றுமை இருக்கலாம்.
   - அருவமான பண்பு ஒற்றுமை இருக்கலாம்.

**சான்று**

பெண்ணை - விளக்கு என்பர். குறியீட்டால் பொருளை உணர்த்துவது குறியீட்டியம் என்பர்.

2. **குறியீட்டியம் கோட்பாட்டை வளர்த்தவர்கள் யாவர்?**

   பொதலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே

3. **கபிலரின் கலித்தொகை பாடல்வழி குறியீட்டு உத்தியை விளக்குக.**
   - வேங்கை மரம் பூத்திருக்கிறது.
   - அது புலிபோல் தோற்றமளிக்கிறது.
   - சினம் கொண்ட மதயானை அடிமரத்தைத் தந்தத்தால் குத்தியது.
   - ஆழப்பதிந்த தந்தம் எடுக்க முடியாமல் முழங்கியது.
   - இப்படி யானை முழங்கும் நாட்டை உடையவன். இப்பாடலில் யானை தலைவனுக்குக் குறியீடாக இடம் பெறுகிறது.

www.kalvikadal.in

4. **குறியீடு என்பது ஒரு புதிய வடிவம் அன்று - விளக்குக.**
   - சங்க இலக்கியப் பாடல்களில் வரும் உள்ளுறை உவமம் என்றும் இலக்கிய உத்திதான் குறியீடு.
   - உள்ளுறை உவமம் அக இலக்கியங்களில் உரைக்க முடியாத, மறைக்க வேண்டுபவை. அதனால் குறிப்பாக உணர்த்தப் பயன்பட்டது.
   - குறியீடு என்பது அகம், புறம் என எல்லா வகைக் கவிதையிலும் குறிப்பாக உணர்த்தப் பயன்படும் இலக்கிய உத்தியாகும்.

5. **'வியர்வை' கவிதையின் மூலம் நாம் அறியும் குறியீட்டு செய்தி யாது?**
   - ஆதிரையிட்ட பருக்கையினால் அமுதசுரபி பாத்திரத்தில் உணவு வளர்வது போல் உழைப்பால் உலகம் செழித்து வளர்கிறது.
   - வியர்வைக்கு - பருக்கை
   - செழிப்புக்கு - அமுதசுரபி குறியீடாக அமைகிறது.

6. **'திட்டம்' கவிதையின் மூலம் நாம் அறியும் குறியீட்டுச் செய்தி யாது?**
   - திட்டங்கள் தீட்டினாலும் அவை நாட்டு நலனுக்குப் பயன்படாமல் எதிராகப் போய்விடுகிறது.
   - வரம் - திட்டத்திற்கும்.
   - சாபம் - பயனற்ற விளைவுக்கும் குறியீடாக அமைகிறது.
   - வரங்கள், சாபங்கள், ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்கே?





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





## மொழியை ஆள்வோம்

பக்கம்: 214

### சான்றோர் சித்திரம்



பர்மாவில் ரங்கூன் நகரில் உள்ளவொரு கடையில் அடிப்பையனாகப் (உதவியாள்) பணியாற்றினான் ஒரு சிறுவன். அவனிடம், கடை முதலாளி ஒரு பெயரைக் குறிப்பிட்டு, அந்த நபர் வந்து தன்னை எங்கே என்று கேட்டால். 'முதலாளி இல்லை' என்று சொல்லுமாறு வற்புறுத்தினார். அந்தச் சிறுவனோ, "நீங்கள் வெளியிலிருந்தால் அவ்வாறு கூறலாம். இல்லாதபோது எப்படிப் பொய் சொல்வது? சொல்ல மாட்டேன்'' என்று பிடிவாதமாகக் கூறினார். அவர், வ.சு.ப. மாணிக்கம்.

தமிழின் சிறப்புகளைப் பற்றி ஆய்வுகள் பல செய்தமையால் 'தமிழ் இமயம்' என்று தமிழ் அறிஞர்களால் போற்றப்பட்டவர் வ.சுப.மாணிக்கம். 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற கொள்கையைப் பறைசாற்றுவதற்காகத் 'தமிழ்வழிக் கல்வி இயக்கம்' என்ற அமைப்பை நிறுவித் தமிழ்ச்சுற்றுலா மேற்கொண்டவர். அழகப்பா கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகவும் முதல்வராகவும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றினார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தராகச் சிறப்புடன் செயலாற்றிய போது பல்கலைக்கழக நடைமுறைகள் தமிழில் இருக்க வேண்டும் என ஆணை பிறப்பித்ததுடன் அங்குத் தமிழாய்வு நடைபெறவும்வழிவகுத்தார்.திருவந்தபுரத்தின்திராவிடமொழியில்கழகத்தில்முதுபேராய்வாளராகப் பணிபுரிந்தபோது தமிழ் யாப்பியல் வரலாறும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

சங்கப் பாடல்களின் நுட்பங்களைக் கட்டுரைகளாக எழுதுவதில் ஆற்றல் மிக்கவரான இவர் தமிழ்க்காதல், வள்ளுவம், கம்பர், சங்கநெறி உள்ளிட்ட பல நூல்களை இயற்றியவர். தமிழுக்குப் புதிய சொல்லாக்கங்களையும்,உவமைகளையும் உருவாக்கித் தருவதில் தனி ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தவர். ஆராய்ச்சி, கட்டுரை, நாடகம், கவிதை, உரை, கடித இலக்கியம், பதிப்பு எனப் பல்துறை ஆளுமையான அவருக்குத் தமிழக அரசு அவருடைய மறைவிற்குப் பிறகு, திருவள்ளுவர் விருது வழங்கியதுடன் 2006ஆம் ஆண்டு அவருடைய நூல்களை நாட்டுடமையாக்கிச் சிறப்புச் செய்தது.

**அவருடைய தமிழ்த்திறத்துக்கும் ஒரு பதம்.**

"ஐந்து கோடித் தமிழர் தொகை இருந்தும், ஆயிரம் படிகள் மாமாங்கம் ஆகின்றது. வாங்காற்றல் மக்களிடம் இல்லை என்று சொல்லுதற்கில்லை. எத்துணையோ புதுக்கோலங்கட்கும் கேளிக்கைகட்கும் தலைகால் தெரியாமல் செலவு செய்து கொண்டுதான் இருக்கின்றார்கள். நூல்கள் வாங்கும் அறிவுப் பழக்கத்தை மக்களிடம் பரப்ப வேண்டும்''.

**வினாக்கள் :**

1. **தமிழின் இதயம் என அறிஞர்களால் போற்றப்பட்டவர் யார்?**
2. **வ.சு.ப. மாணிக்கத்தின் பணிகள் பற்றிக் கூறுக.**
3. **வ.சு.ப. மாணிக்கத்திற்கு என்ன விருது வழங்கப்பட்டது?**
4. **பிரித்து எழுதுக: பேராய்வாளர்**
5. **புணர்ச்சி விதி தருக: தமிழாய்வு**

**விடைகள் :**

1. தமிழின் இதயம் - வ.சு.ப. மாணிக்கம்.
2. 
   - அண்ணாமலைப் பல்கலையின் தமிழ்த்துறைத் தலைவர்.
   - அழகப்பா பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் மற்றும் முதல்வர்.
   - மதுரை, காமராசர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

3. திருவள்ளுவர் விருது
4. பேராய்வாளர் - பெருமை + ஆய்வாளர்
5. தமிழாய்வு - தமிழ் + ஆய்வு
உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே - தமிழாய்வு.

## தமிழாக்கம் தருக.

I make sure I have the basic good habits which respecting my elders, greeting people when I meet them, wishing them well when departing etc. Other than this, observing the law, serving the poor and downtrodden, helping the sick and needy, giving shelter to the homeless, assisting someone with a physically challenged etc. are also other good habits of mine. To lead on a peaceful life. I develop other good habits, writing, listening to music, dancing, singing etc. are other such habits which fulfill the needs of my soul.

நான் பெரியவர்களை மதிப்பது, பிறரைச் சந்திக்கும் போது வணக்கம் தெரிவிப்பது, அவர்கள் புறப்படும் சமயத்தில் நன்றி செலுத்துவது போன்ற நல்ல பழக்கங்கள் என்னிடம் இருப்பதை உறுதியாகச் சொல்வேன். இது தவிர, சட்டத்தைக் கவனித்தல், ஏழை மற்றும் அடித்தட்டு மக்களுக்குச் சேவை புரிதல், நோயாளிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்தல், வீடற்றவர்களுக்குத் தங்குமிடம் அமைத்துத் தருதல், மாற்றுத்திறனாளிகளுக்கு இயன்ற உதவி செய்தல் போன்ற மற்ற சில நல்ல பழக்கங்களும் என்னிடம் உள்ளது. ஒரு அமைதியான வாழ்க்கையை மேற்கொள்ள நான் மேலும் சில நல்ல பழக்கங்களை வளர்த்துக் கொள்கிறேன், பாடல் கேட்கிறேன், நடனம் ஆடுகிறேன், எழுதுகிறேன், இசையை ரசிக்கிறேன். இதுபோன்ற பழக்கங்களால் என் ஆன்மாவின் தேவைகள் பூர்த்தியாகின்றன.

## கதையைப் படித்துப் பொருளுணர்ந்து நிகழ்வை உரையாடலாக மாற்றுக.

“எனக்கு சில்க் சட்டை இருக்கே! உனக்கு இருக்கா! என்று கெட்டிக்காரத்தனமாகக் கேட்டான் ராமசாமி. செல்லையா பதில் சொல்லத் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான்; தம்பையா ஆகாயத்தைப் பார்த்து யோசனை செய்தான்; மங்கம்மாள் மூக்கின்மேல் ஆள் காட்டி விரலை வைத்துக் கொண்டும் கண்ணை இலேசாக மூடிக் கொண்டும் யோசனை செய்தாள். அந்த மூவரும் ராமசாமியின் கேள்விக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் மற்ற பிள்ளைகள். அன்று பள்ளிக்கூடத்திலிருக்கும்போது ராமசாமிக்கும் செல்லையாவுக்கும் இடையே ஒரு போட்டி நடந்தது. ராமசாமி தன் ‘ஐந்தாம் வகுப்பிற்குரிய இந்தியதேச சரித்திர’ப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டான். செல்லையா அந்த வருஷம் இந்தியதேச சரித்திரம் வாங்கவில்லை; அதனால் தன்னிடமுள்ள ஒரு சிவிக்ஸ் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டான். இருவரும் ‘படப்போட்டி’யை ஆரம்பித்து விட்டார்கள்.

- ‘ராஜா வந்திருக்கிறார்’, கு. அழகிரிசாமி

### உரையாடல்

| | | |
|---|---|---|
| **ராமசாமி** | : | என்னிடம் சில்க் சட்டை இருக்கே! உனக்கு இருக்கா? |
| **செல்லையா** | : | ... விழித்தான். |
| **ராமசாமி** | : | உன்னிடம் இருக்கா? |
| **தம்பையா** | : | ... ஆகாயத்தைப் பார்த்து யோசனை செய்தான். |
| **ராமசாமி** | : | உனக்கு இருக்கா? |
| **மங்கம்மாள்** | : | ... மூக்கின் மேல் விரல் வைத்தாள். கண்ணை லேசாக மூடிக்கொண்டாள். |
| **ராமசாமி** | : | ஏன் மூன்று பேரும் பதில் சொல்லவில்லை என் கேள்விக்கு? |
| **மூவரும்** | : | .... பதில் இல்லை. |


Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

(மற்ற பிள்ளைகள் ராமசாமியின் கேள்விக்கு மூவரும் என்ன பதில் சொல்லப் போகிறார்கள் என்று எதிர்பார்த்தனர். அன்று பள்ளிக்கூடத்தில் இருக்கும்போதே ராமசாமிக்கும் செல்லையாவுக்கும் ஒரு போட்டி வந்தது.)

**ராமசாமி** : என்னிடம் இந்திய தேசிய சரித்திரப் புத்தகம் உள்ளது, உன்னிடம் உள்ளதா?

**செல்லையா** : என்னிடம் சிவிக்ஸ் புத்தகம் உள்ளது.

**ராமசாமி** : சரி பரவாயில்லை, போட்டியை ஆரம்பிக்கலாமா?

**செல்லையா** : சரி

(இருவரும் ஒவ்வொரு பக்கமாகப் புரட்டுகிறார்கள். இடையிடையே வரைபடம் உள்ளதா, படம் உள்ளதா என்ற போட்டி விரைவாக நடந்தது. ஆளுக்கு ஒரு பக்கம் பக்கமாகப் புரட்ட போட்டித் தொடர்ந்தது)

**ராமசாமி** : கடைசிப் பக்கத்தைப் புரட்டிப் பார்த்து உன்னிடம் இன்னும் எத்தனைப் பக்கம் இருக்கிறது என்றான்.

**செல்லையா** : இன்னும் இரண்டு பக்கங்கள் இருக்கிறது. உன்னிடம் எத்தனைப் பக்கம் உள்ளது?

**ராமசாமி** : இதுதான் எனது கடைசிப் பக்கம்.

**செல்லையா** : ஓ... அப்ப நான்தான் ஜெயிச்சேன்...

## உரை எழுதுவோம்

**உங்கள் பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர் தற்பொழுது மாவட்ட ஆட்சியராகப் பணியாற்றுகிறார். நடைபெற இருக்கும் பள்ளி ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக வர இருக்கும் அவரைப் பள்ளியின் சார்பாக வரவேற்கும் விதமாக ஒரு பக்க அளவில் வரவேற்புரை ஒன்றை எழுதுக.**

www.kalvikadal.in

### வரவேற்புரை

நமது பள்ளியின் ஆண்டு விழாவிற்கு வருகை புரிந்திருக்கும் நமது மாவட்ட ஆட்சியர் அவர்களை இருகரம்கூப்பி மனமகிழ்வோடு வரவேற்கிறேன்.

முயற்சி செய்து வெற்றி கிடைத்தால் விடாமுயற்சி என்று பாராட்டுவார்கள். முயற்சி செய்து வெற்றி கிடைக்காவிட்டால் வீண்முயற்சி என்பார்கள். இதுதான் உலகம். ஆனால், நமது அழைப்பிற்கு இசைவு தந்து நம் முன்னே ஒரு வெற்றிக்கு எடுத்துக்காட்டாக அமர்ந்திருக்கும் ஆட்சியாளர் ஒரு அறிவாளர். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை துடுப்பில்லாத படகில் சவாரி செய்வது போலாகும்.

ஒவ்வொரு மாணவரும் ஏதேனும் ஒன்றைச் சாதித்தே தீர வேண்டும் என்ற குறிக்கோளோடுதான் படிக்க வேண்டும். நமது மாவட்ட ஆட்சியரும் பள்ளியிலே பயிலுகின்றபோது தான் எதிர்காலத்தில் ஆட்சியராக ஆக வேண்டும் என்று உறுதியோடிருந்தவர்.

**'முயற்சி திருவினையாக்கும்'** என்பதற்கிணங்க அவருடைய முயற்சி பலித்துவிட்டது. இன்றைய லட்சியம் நாளைய மாற்றம், இன்றைய அலட்சியம் நாளைய ஏமாற்றும் என்பார்கள். லட்சியத்தை அலட்சியப்படுத்தக்கூடாது. நேற்று செய்தித்தாளிலே நமது மாவட்ட ஆட்சியர் பேட்டிக் கொடுத்திருந்தார். அதிலே தான் படித்த பள்ளியில் நடைபெறும் ஆண்டு விழாவிற்குப் போவதாகக் கூறியிருந்தார். ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தாயென நமது பள்ளியே மகிழந்து போனது.

வெற்றி பெறுவதற்குமுன் உலகை நீ அறிவாய், வெற்றி பெற்றபிறகு உலகம் உன்னை அறியும் என்பது போல, நமது ஆட்சியரும் உலகம் அறிந்த உயர்ந்த மனிதராகக் காணப்படுகிறார். தான் படித்த பள்ளிக்கு வருகை புரிந்தும், பள்ளியால் தனக்குப் பெருமை என்று கூறும் ஆட்சியருடைய பேச்சும் நம்மையெல்லாம் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிடச் செய்கிறது.

**'ஞாலம் கருதினும் கைகூடும்'** என்னும் வள்ளுவனின் வாக்கிற்கு இலக்கணமான நமது மாவட்ட ஆட்சியர் அவர்களை மீண்டும் மீண்டும் வருக வருக என வரவேற்று மகிழ்கிறேன்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in
www.kalvikadal.in





## விடைக்கேற்ற வினா அமைத்தல்

**விடை : குடும்பம் என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.**
**வினா : குடும்பம் என்ற சொல் முதன்முதலில் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?**

1. **விடை** : நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.
   **வினா** : நடுவண் அரசு எந்த ஆண்டு தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது?
2. **விடை** : சாலைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாக பயணிக்கவும் உதவுகின்றன.
   **வினா** : சாலைகளில் போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்க உதவுவது எது?
3. **விடை** : 1865ல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.
   **வினா** : தென்னிந்தியாவில் முதல் தொடர்வண்டி நிலையம் எங்கு எப்போது அமைக்கப்பட்டது.
4. **விடை** : "யதார்த்த நிகழ்வைப் படைப்பாளுமையுட் வெளிப்படுத்துவதே ஆவணப்படம்" என்கிறார் கிரியோர் சன்
   **வினா** : ஆவணப்படம் என்று எதைச் சிரியோர்சன் குறிப்பிடுகிறார்?

## மொழியோடு விளையாடு

பக்கம்: 71

www.kalvikadal.in

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



வா வா என் தேவதையே
பொன் வாய் பேசும் தாரகையே
பொய் வாழ்வின் பூரணமே
பெண் பூவே வா......
வான் மிதக்கும்...... கண்களுக்கு......
மயில் இறகால் மையிடவா
மார் உதைக்கும்..... கால்களுக்கு......
மணி கொலுசு நான் இடவா......

## இலக்கிய நயம் பாராட்டுதல்

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
　　மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
　　கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்.
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
　　செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்.
கூனலிளம பிறைமுடித்த வேணியலங் காரர்
　　குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே. *- திரிகூட ராசப்பக் கவிராயர்*






Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**திரண்டக் கருத்து :**

ஆண்குரங்குகள் பலவகையான பழங்களைப் பறித்து பெண் குரங்குகளுக்குக் கொடுக்கின்றன. அவற்றுள் சில பழங்களைப் பெண் குரங்குகள் சிதறுகின்றன. அந்தப் பழங்களை தேவர்கள் இரந்து கேட்கின்றனர். வேடர்கள் தேவர்களைக் கண்களால் பார்த்து அழைக்கின்றனர். வானத்தில் சித்தர்கள் மூலிகைகளை வளர்க்கின்றனர். மலையிலுள்ள அருவியின் அலைகள் எழுந்து வானத்தில் வழிந்து ஓடுகின்றன. இதனால் சூரியனின் குதிரையும் தேர்ச்சக்கரமும் வழுக்கி விழுகின்றன. இத்தகைய சிறப்புகள் உடையது என்று குறத்தி தன் மலையை விளக்குகிறாள்.

**தொடை நயம் :**

**தொடையற்ற பாக்கள்**
**நடையற்று போகும்**

என்பதற்கு ஏற்ப மோனை, எதுகை, இயைபு போன்ற நயங்கள் அமைந்துள்ளன.

**மோனை நயம் :**

**காட்டுக்கு யானை**
**பாட்டுக்கு மோனை**

முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை.

**சான்று :**

**கா**னவர்கள்
**க**மன சித்தர்
**கூ**னலிளம்
**கு**ற்றாலம்

www.kalvikadal.in

**எதுகை நயம் :**

**மதுரைக்கு வைகை**
**செய்யுளுக்கு எதுகை**

முதல் எழுத்து அளவொத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது.

**சான்று :**

வா**ன**ரங்கள்
கா**ன**வர்கள்
தே**ன**ருவித்
கூ**ன**லிளம்

**இயைபு :**

இறுதி எழுத்தோ ஓசையோ ஒன்றி வருவது இயைபு.

கொஞ்ச**ும்**
யொழுக**ும்**
வழுக**ும்**

**அணி நயம் :**

அணி என்பதற்கு அழகு என்பது பொருள் செய்யுளில் அமைந்து கிடக்கும் சொல்லழகு, பொருளழகு முதலியவற்றை வரையறுத்துக் கூறுவது அணி என்பர்.

இப்பாடலில் உயர்வு நவிற்சி அணி வந்துள்ளது. பாடலின் பொருளை மிகவும் உயர்த்திக் கூறுவது உயர்வு நவிற்சி அணி ஆகும்.





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





**சான்று :**

மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்

**கற்பனை நயம் :**

**கற்பனை கவிஞனுக்கு கை வந்த கலை**

என்பதற்கு ஏற்ப கவிஞர் தன் கற்பனை ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார்.

**சான்று :**

தேனருவித் திரையெழும்பி வானின் வழியொழுகும்.

## குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 6 | | | | | |
| | | | | | | | 21 | | |
| | 7 | 14 | | | | | | 18 | 19 |
| | | | | | 4 | | 11 | | |
| 9 | | | | | | | 10 | | 17 |
| | | | 12 | | 3 | | | | |
| 16 | | | | | | | | | |
| | 15 | | | | | | | | |
| | | | | | 5 | | | | |
| 8 | | | | 13 | | 20 | | | |

www.kalvikadal.in

| | இடமிருந்து வலம் | | வலமிருந்து இடம் |
|---|---|---|---|
| 1. | மயிலையார் கட்டுரை எழுதிய இதழ்களில் ஒன்று (5) | 2. | பறம்பு மலையின் இன்றைய பெயர் (5) |
| 4. | தகடூர் மன்னர் பெயர் பின்பகுதி (3) | 4. | தகடூரை ஆட்சி செய்தவன் (4) |
| 8. | ஓய்மா நாட்டு மன்னர் பெயரின் முதல் மூன்றெழுத்து (3) | 5. | காரியின் நாடு எவ்வாறு மருவி உள்ளது (3) |
| 9. | பொதினி மலையின் வேறுபெயர் (4) | 12. | போந்தியு பிலாத்து என்பவரின் பதவி (4) |
| 16. | பொதினி மலை இவ்வாறும் அழைக்கப்படும் (4) | 21. | செய்யுளின் பெயர்களில் ஒன்று (3) |
| 14. | சாந்தா தத் கதையின் பின்பாதிப் பெயர் (2) | | |

| | மேலிருந்து கீழ் | | கீழிருந்து மேல் |
|---|---|---|---|
| 3. | வல்வில் ஓரி ஆட்சி செய்த பகுதி (5) | 7. | நல்லியின் நாட்டுக்கு இன்று வழங்கும் பெயர் (3) |
| 6. | முகம் கவிதை ஆசிரியரின் முன்பாதிப் பெயர் (4) | 8. | மயிலையார் ஆய்வு செய்த பல்லவ மன்னன் பற்றிய நூல் (7) |
| 1. | தமிழுக்குத் தலை கொடுத்தவன் (4) | 13. | முகம் கவிதையின் ஆசிரியர் பிறந்த ஊர் (5) |
| 10. | இரட்சணிய யாத்திரிகத்தின் மூலநூல் ஆசிரியர் பெயர் (6) | 11. | ஆற்றுப்படை நூல் ஒன்றின் முன்பாதிப் பெயர் (4) |
| 15. | நீர்நிலையின் பெயர் (3) | 19. | உலகம் என்பதன் வேறு பெயர் (3) |



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

| | | | |
|---|---|---|---|
| 17. | வண்டின் வேறு பெயர் (4) | 20. | நூல்களை வாங்கும் ஆற்றல் ....... இல்லை என்று சொல்வதற்கில்லை (6) |
| 18. | இயேசு பிரானை இவ்வாறும் அழைப்பர் (5) | | |

**விடை :**

| இடமிருந்து வலம் | | வலமிருந்து இடம் | | மேலிருந்து கீழ் | | கீழிருந்து மேல் | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | குடியரசு | 2. | பிரான் மலை | 3. | கொல்லி மலை | 7. | ஊட்டி |
| 4. | அஞ்சி | 4. | அதிகமான் | 6. | சுகந்தி | 8. | நந்திவர்மன் |
| 8. | நல்லி | 5. | மலாடு | 1. | குமணன் | 13. | ஆலாந்துறை |
| 9. | மலை நாடு | 12. | ஆளுநர் | 10. | ஜான் பனியன் | 11. | சிறுபாணா |
| 16. | வளமலை நாடு | 21. | பாடல் | 15. | கடல் | 19. | ஞாலம் |
| 14. | மழை | | | 17. | வாகனம் | 20. | மனிதர்க்கு |
| | | | | 18. | இறைமகன் | | |

## நிற்க அதற்குத் தக

**நீவீர் செல்லும் வழியில் விபத்தினைக் காண்கிறீர்கள். விபத்திற்கான காரணங்கள் என்ன? பட்டியலிடுக. பாதிக்கப்பட்டவர்களுக்கு நாம் எவ்விதம் உதவலாம்?**

| விபத்திற்கான காரணங்கள் | பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்விதம் உதவலாம்? |
|---|---|
| **அனுமதித்த அளவை விட வேகமாக ஓட்டுதல்.** | **முதலுதவி செய்த பின் வேகமாக ஓட்டக் கூடாது என்று அறிவுரை கூறுவேன்.** |
| தொலைபேசியில் பேசிக் கொண்டே ஓட்டுதல். | முதலுதவி செய்தபின் வாகனத்தில் செல்லும் போது, பேசக்கூடாது என்று அறிவுரை கூறுவேன். |
| இருசக்கர வாகனத்தில் மூவர் செல்லுதல். | முதலுதவி செய்தபின் இருசக்கர வாகனம் இருவருக்கே என அறிவுறுத்தல். |

## படிப்போம் பயன்படுத்துவோம் (அலுவலகப் பொருள்கள்)

*Stamp pad* – மை பொதி

*Folder* – மடிப்புத்தாள்

*Rubber Stamp* – இழுவை முத்திரை

*Stapler* – கம்பி தைப்புக் கருவி

*File* – கோப்பு

*Eraser* – அழிப்பான்

✱✱★★★✱✱



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





இயல் 8

# மாதிரி வினாத்தாள் - 8

வகுப்பு : 12

நேரம் : 2.30 மணி | மதிப்பெண் : 90

**I. பலவுள் தெரிக. 6 × 1 = 6**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1. **சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி**
அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம்
இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

2. **பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.**
அ) தனித்தமிழ்த் தந்தை - 1. மு.வரதராசனார்
ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் - 2. மயிலை சீனி. வேங்கடசாமி
இ) தமிழ்த்தென்றல் - 3. திரு.வி.க.
ஈ) மொழி ஞாயிறு - 4. தேவநேயப்பாவாணர்

3. **ச.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்**
அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்
இ) சமணமும் தமிழும் ஈ) கிறுத்தவமும் தமிழும்

4. **நான் வெற்று வெளியில் அலைந்து கொண்டிருக்கிறேன். எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாக குறிப்பிடுவது**
அ) தமது வீட்டு முகவரியை ஆ) தமது குடும்பத்தை
இ) தமது அடையாளத்தை ஈ) தமது படைப்புகளை

5. **கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்**
அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக்கோடனும் குமணனும்
இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

6. **குறியீடுகளைப் பொருத்துக.**
அ) பெண் - 1. சமாதானம்
ஆ) புறா - 2. வீரம்
இ) தராசு - 3. விளக்கு
ஈ) சிங்கம் - 4. நீதி
அ) 2, 4, 1, 3 ஆ) 2, 4, 3, 1 இ) 3, 1, 4, 2 ஈ) 3, 1, 2, 4

**II. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 8 × 1 = 8**

7. **கூற்று : 19 ஆம் நூற்றாண்டில் குறியீட்டியம் ஓர் இலக்கியத் கோட்பாடாக உருப்பெற்றது.**
**காரணம் : பொதலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே முதலானவர்கள் குறியீட்டியத்தை வளர்த்தவர்கள்.**
அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி, காரணம் சரி
இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

8. **சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்**
அ) உவமை ஆ) உவமேயம் இ) உத்தி ஈ) உள்ளுறை உவமை

9. **'திட்டம்' என்னும் தலைப்பில் வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக? என்று எழுதப்பட்டுள்ள கவிதையில் 'வரம்' எதற்குக் குறியீடாகிறது?**
அ) அமுதசுரபி ஆ) ஆதிரைப் பருக்கை இ) திட்டம் ஈ) பயனற்ற விளைவு





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

**10. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது.**
அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்

**11. மயிலை சீனி. வேங்கடசாமியின் முதல் நூல்**
அ) கிறித்துவமும், தமிழும் ஆ) பௌத்தமும், தமிழும்
இ) சமணமும், தமிழும் ஈ) எதுவுமில்லை

**12. இரட்சணிய யாத்திரிகத்தின் படலங்கள்**
அ) 3566 ஆ) 3677 இ) 3766 ஈ) 3244

**13. 'கோடை மழை' கதையின் உட்பொருள்**
அ) முதியோர்களை அறவனைப்பது ஆ) இளைஞர்களின் காதல்
இ) வரண்ட நிலத்தின் நிலை ஈ) ஏழைகளின் கண்ணீர்

**14. Eraser என்பதன் தமிழ்ச்சொல்**
அ) கோப்பு ஆ) அழிப்பான் இ) மை பொதி ஈ) மடிப்புத்தாள்

## III. குறுவினா. 3 × 2 = 6

**அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

15. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.
16. 'விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப்பணியாகக் கொண்டேன்' - யார், யாரைப் பற்றி, எதற்காகக் கூறுகிறார்?
17. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.
18. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 2 = 4

www.kalvikadal.in

19. குறியீட்டு உத்தியில் ஒரு புதுக்கவிதை எழுதுக.
20. மயிலையாரின் சொல்லாய்வு பணியினை விளக்குக.
21. குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.

## IV. எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 × 2 = 14

**22. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
அ) இனிந்த ஆ) தாங்கிய

**23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**
அ) நன்மொழிஆ) உரனுடை

**24. மரபுப்பிழையை நீக்கி எழுதுக.**
ஆ) அம்பு விட்டான்
அ) தென்றல் அடித்தது

**25. இலக்கணக்குறிப்பு தருக.** 'நீலம்'

**26. குறியீடுகளைப் பொருத்துக.**
அ) பெண் - 1. சமாதானம்
ஆ) புறா - 2. வீரம்
இ) தராசு - 3. விளக்கு
ஈ) சிங்கம் - 4. நீதி
அ) 2, 4, 1, 3 ஆ) 2, 4, 3, 1 இ) 3, 1, 4, 2 ஈ) 3, 1, 2, 4

**27. மரபுச்சொற்களை தொடரில் அமைத்து எழுதுக.**
அ) அகலக்கால் ஆ) கண் துடைப்பு

**28. தேவையான இடங்களில் நிறுத்தல் குறியீட்டுகளையிட்டு எழுதுக.**
நீங்கள் கொடுத்து வைத்தவர் என்று ஆசி கூறினார்.



Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929

www.kalvikadal.in www.kalvikadal.in





29. **தொடரில் இடம் பெற்றுள் மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக.**
அ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.
ஆ) ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.

30. **கலைச் சொல்லாக்கம் தருக.** Whatsapp

## V. சிறுவினா.

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 × 4 = 8

31. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப் படுத்துக.
32. 'ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
33. கொடை வழங்குதலில் நீங்கள் பின் பற்ற விரும்புவனவற்றை எழுதுக.

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 x 4 = 8

34. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.
35. மயிலையாரின் ஆவணப்பணியினை விளக்குக.
36. மீட்டுருவாக்க பணியில் மயிலையாரின் பங்கு யாது?

## VI. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 4 = 12

37. வாகைத் திணையை சான்றுடன் விளக்குக அல்லது நிரல்நிறை அணியை சான்றுடன் விளக்குக.

38. **கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதனை தமிழாக்கம் செய்க.**

I make sure I have the basic good habits which include respecting my elders, greeting people when I meet them, wishing them well when departing etc. Other than this, observing the law, serving the poor and downtrodden, helping the sick and needy, giving shelter to the homeless, assisting someone with a physically challenged etc. are also other good habits of mine. To lead on a peaceful life, I develop other good habits, writing, listening to music, dancing, singing etc. are other such habits which fulfill the needs of my soul.

www.kalvikadal.in

39. **கதையைப் படித்துப் பொருளுணர்ந்து நிகழ்வை உரையாடலாக மாற்றுக.**

"எனக்கு சில்க் சட்டை இருக்கே! உனக்கு இருக்கா!'' என்று கெட்டிக்காரத்தனமாகக் கேட்டான் ராமசாமி. செல்லையா பதில் சொல்லத் தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தான்; தம்பையா ஆகாயத்தைப் பார்த்து யோசனை செய்தான்.; மங்கம்மாள் முக்கின்மேல் ஆள்காட்டி விரலை வைத்துக்கொண்டும் கண்ணை இலேசாக மூடிக்கொண்டும் யோசனை செய்தாள். அந்த மூவரும் ராமசாமியின் கேள்விக்கு என்ன பதில் சொல்லப்போகிறார்கள் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் மற்ற பிள்ளைகள். அன்று பள்ளிக்கூடத்திலிருக்கும்போது ராமசாமிக்கும் செல்லையாவுக்கும் இடையே ஒரு போட்டி நடந்தது. ராமசாமி தன் 'ஐந்தாம் வகுப்பிற்குரிய இந்தியதேச சரித்திர'ப் புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டான். செல்லையா அந்த வருஷம் இந்தியதேச சரித்திரம் வாங்கவில்லை; அதனால் தன்னிடமுள்ள ஒரு சிவிக்ஸ் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டான். இருவரும் 'படப்போட்டி'யை ஆரம்பித்து விட்டார்கள்.

- 'ராஜா வந்திருக்கிறார்', கு. அழகிரிசாமி

40. கடல் அல்லது மழை என்ற தலைப்பில் கவிதை எழுதுக.

**(அல்லது)**

எறும்பு ஊரக் கல்லும் தேய்யும் அல்லது வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்ற பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு குறித்து எழுதுக.

## VII. பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக : 3 × 6 = 18

41. எச்.ஏ. கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.
42. மயிலையார் ஓர் "ஆராய்ச்சிப் பேரறிஞர்'' என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.
42. கோடை மழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக.

## VIII. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4 + 2 = 6

44. அ) 'என ஆங்கு எழுசமங் கடந்த' - எனத் தொடங்கும் 'சிறுபாணாற்றுப்படை பாடல்
ஆ) 'தொடர்பு' என முடியும் குறள்.

*******





Send Your Materials and Question Papers to kalvikadal.in@gmail.com or Whatsapp - 9385336929